
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

அருளிய

உபதேச மொழிகள்



தக்ஷிணேஸ்வர காளியம்மையின் திருக்கோயில்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

உபதேச மொழிகள்

பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

திருவாய்மலர்ந்தருளியவை

1121 உபதேசங்கள்

ஆரும் பதிப்பு

1944

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை

சாதா விலை ரூ. *2-12-0*   காலிகோ பைண்டு விலை ரூ. *3-0-0*

இஃது மயிலாப்பூர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின்
தலைவரால் பிரசுரிக்கப்பட்டது

VI—XXII—11-44

சாது அச்சுக்கூடம் - சென்னை

பொருளடக்கம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலகுக்கு அளித்துள்ள ஞானப் பொக்கிஷத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறுகின்றனர்கள். ஆனால் அவர்கள் கூறுவன வெல்லாம் ஒரு சார்புபற்றிய உண்மைகளே. ஒவ்வொருவருடைய ஆற்றலுக்குத் தக்கபடி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்துத் தாம் அறிந்துகொண்டதை அவர்கள் பேசுகின்றனர்கள். அப்படிச் செய்வதில் குற்றமொன்றும் இல்லை. ஆயினும் இந்த பக்தர்களுள் யாரேனும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றித் தாம் அறிந்துகொண்டதை முற்றான உண்மை என்று எண்ணினால் அது வீண் எண்ணமாகும். வாழ்க்கை முழுவதையும் தவத்திலே கழித்த நாங்களும்கூட அவரைப் பற்றிச் சிறிதேனும் உணர்ந்துகொள்ளாதிருக்கிறோம். ஆகவே அவரைப் பற்றிப் பேசும்பொழுது ஆலோசனையோடு பேச வேண்டி யிருக்கிறது. ஒவ்வொருவருடைய ஆற்றல் எவ்வளவாக இருக்கிறதோ அவ்வளவுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய எண்ணங்களால் அன்னவரை நிறைவிப்பார்.

—சுவாமி விவேகாநந்தர்



BHAGAVAN SRI RAMAKRISHNA

"Man is born to become perfect and realise God."

பரமஹம்ஸரின் சரித்திரச் சுருக்கம்

" ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்
வேண்டேன் மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே "

என்று திருமங்கை மன்னனோடு சேர்ந்து மனங்கசிந்து கூவி ஜகத் காரணனான ஸர்வேசுவரனை நேருக்கு நேரே தரிசிக்க விரும்புவோர் அருமையிலும் அருமை. மற்றைக் கோடானுகோடி ஜனங்கள் கேவலம் விஷய சுகத்தி லழுந்தி, ' ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை அனத் தினைத் தனத்தினை விரும்பி ' ஸர்வ ஜீவ தயாபரனும் அடியவர்க் கெளி யவனுமான ஈசுவரன்மீது கவனமில்லாதிருக்கின்றனர். இந்த துர்த் தசை இன்று அல்லது நேற்று உண்டானதன்று. உலகம் தோன்றிய கால முதற்கொண்டே, அதாவது ஈசுவரன் ஜனஸமூகத்தைச் சிருஷ் டித்தது தொடங்கியே ஏற்பட்டுள்ளது. அவ்வக் காலங்களின் உலக சரித்திரத்தை ஆராயப் புகுவோமானால் இவ்விஷயத்துக்கு ஏராளமான சாக்ஷியங்கள் கிடைக்கும். உலகத்தில் பாபம் நிறைந்ததைச் சகியாமல் பூமிதேவி ஈசுவரன் முன்னர்ச் சென்று பாபிகளைத் தன்னகத்தினின்றும் அகற்ற வேண்டுமென முறையிட்டதாக நாம் படித்துள்ள கதைகளெல் லாம் மேற்கூறிய விஷயத்தை விவரிக்க வந்தனவேயன்றி வேறல்ல. அவதார புருஷர்கள், ஆசாரியர்கள் என்று நம்மால் கொண்டாடப்படும் மஹான்கள் அனைவரும் இப்படிப்பட்ட துர்த்தசையைக் கூடுமான வரை யில் நிவர்த்திக்க வந்தவர்களே யாவர்.

புற்றீசல்கள்போல ஒன்றின்பின் னொன்றாய்த் தேவதைகள் தோன்றுகிற இக்காலத்தில் மனிதனுடைய காலம், புத்தி, முயற்சியெல் லாம் அத்தேவதைகளைப் பூர்த்தி செய்து கொள்வதிலேயே பெரும் பாலும் கழிகின்றன. ஆகவே அவனுக்கு ஈசுவரனிடத்தில் பக்தி செய் வதற்கும் ஆத்ம விசாரணை பண்ணுவதற்கும் சாவகாசம் கிடைக்கிற தில்லை. இப்படி, மானிடர்கள் தங்கள் தங்களுடைய இந்திரியங்களின் வசப்பட்டுத் துர்த்தசை அடைய வேண்டுமென்பது ஸர்வேசுவரனுடைய திருவுள்ளமேயன்று. அவர்களுடைய தீச் செய்கைகளினால் எஞ்சி நிற்கும் நற்குணமுடையவர்க்குத் தீங்குகள் நேர்வதை ஸர்வேசுவரன் சகிப்பதில்லை. ஆனதுபற்றியே,

" நல்லார்கள் தம்மை நலம் புரிந்து காத்தற்கும்
பொல்லாரைப் பொன்று நெறி போக்கற்கும்—சொல்லாரு
முந்தை யறநாட்ட முய்த்தற்கு நான்பிறப்பேன்
இந்தவுகந் தோறும் மிசைந்து "

என்று, ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத்கீதையில் சொல்லி யருளினர்.

தர்ம ஸ்தாபனத்துக்காக ஈசுவரன் அவதரிப்பதாகச் சொன்னபோதி லும், அவன் காலமல்லாத காலங்களில் தோன்றுவதில்லை. அவனுடைய தெய்வீக சக்தி உலக முழுவதும் பரவுமாதலால் அச்சக்தியைப் பொறுக்கவும் அதனுல் நன்மை யடையவும் ஜனங்களுக்கு ஏற்ற மன நிலைமை வேண்டுவது அவசியம். வியாதியிருந்தால் மட்டுமேதான் மருந்து குணம் கொடுக்கும். கற்றரையில் போட்ட வித்து எவ்விதச் சவுகரியத்தைக் கொண்டும் முளைத்தெழாததைப்போல தெய்வீக சக்தி யைப் பொறுத்து அதனுல் பயனடையக் கூடிய மன நிலைமை மானிடர்க் கில்லாத காலங்களில் ஈசுவராவதாரம் நேர்வதில்லை. இதுவேதான் ஈசு வரனும் அவனுடைய அருளைப்பெற்ற மஹான்களும் அருமையிலும் அருமையாகவே உலகத்தில் தோன்றுவதற்குக் காரணம்.

நமது பாரத தேசம் ராஜீய விஷயத்தில் சுயேச்சையை இழந்த கால முதற்கொண்டு நமது ஸனுதன தர்மத்துக்கு மலினம் நேரத் தலைப் பட்டது. முகம்மதியர்கள் நமது நாட்டின்மீது படையெடுத்ததின் காரணமாகவும் அவர்களின்கீழ் நமது நாட்டின் பெரும்பாகம் சென்ற தின் காரணமாகவும் நம்முடைய தர்ம ஸ்தாபனங்களில் பல அழிந்தன. முகம்மதிய தர்மத்தில் தீவிர புத்தியையுடைய அவுரங்கசீபு சக்கர வர்த்தி, திப்பு ஸுல்தான் போன்றவர்கள் ஹிந்துக்களைப் பலவந்தமாக முகம்மதியர்களாக்கினர். சமதர்சனக் கொள்கையைப் பின்பற்றிய அக்பர் சக்கரவர்த்தியைப் போன்றவர்களால் நமக்குண்டான நன்மை கள் அற்பமென்றே சொல்லவேண்டும். இப்படி ஸனுதன தர்மம் குறை வடைவதை நிவர்த்திப்பதற்காகவே **நானக் பாபா, கபீர்தாஸ், ராமா நந்தர், சைதன்ய ஸ்வாமி** முதலியோர் பல்வேறுபட்ட சமயக்கொள்கை களை ஸமரஸப்படுத்தி ஒருவாறு தேச க்ஷேமத்தைத் தேடினர். ஆனுல் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில் பாரத தேசத்தில் ராஜீய விஷய மாகப் பெரும் மாறுபாடு ஒன்று உண்டாயிற்று. சுமார் 350 வருஷங் களாக அரசு செலுத்திய மொகலாய வம்சம் தலைகவிழ்ந்து போயிற்று. அதன் ஸ்தானத்தில் ஆங்கிலேய ராஜ்யம் தலையெடுத்தது. ராஜ பாஷை யைக் கற்பதினுலும் ஆள்வோருடைய நடையுடைகளைப் பின்பற்றுவதி னுலும் உண்டான சௌவுகரியங்கள் காரணமாகப் பலர் அவ்வாறு செய் யத் தொடங்கினர். ஆங்கிலேயருடைய அரசாட்சியால் ஸனுதன தர்மத் துக்கு மலினம் ஏற்பட்டதென நாம் சொல்லவில்லை. உண்மையைக்கூறுங் கால் அவர்கள் இந்தியாவிலுள்ள தர்ம ஸ்தாபனங்களில் தலையிடுவதே யில்லை என்று ஸங்கல்பித்துக் கொண்டிருக்கின்றனர். இதினின்றும் அவர்கள் வழுவாதிருக்கும் வரையில் நமது தர்மத்துக்கு அவர்களால் யாதொரு மலினமும் ஏற்படாது.

தர்மத்துக்கு மலினம் ஏற்பட்டது நம்மாலேயே ; ஆங்கில பாஷை யைப் படித்துப் பரீக்ஷைகளில் தேறி உத்தியோகம் செய்து பணம் சம் பாதிக்க வேண்டுமென்ற ஆசையும், ஆங்கிலேயரைப்போல உடை உடுத்து உணவருந்தி அவர்களைப்போலாக வேண்டுமென்னும் தூபி

மானமும் நமது பிராசீன தர்மத்துக்கும், தலைமுறை தத்துவமாக வந்த பழக்கங்களுக்கும் நேர் விரோதிகளாயின. இது காரணமாக ஜனங்களிடம் தெய்வ பக்தி குறைவதாயிற்று. தர்மத்துக்கு விரோதமான குற்றங்குறைகள் காணப்பட்டன. தர்ம ஸ்தாபனத்துக்காக அவதாரம் நிகழ வேண்டிய காலம் இதுவென சிகித்ஸகனை ஈசுவரன் திருவுளத்திற் பட்டது. ஆகவே அவன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரெனப் பிற் காலத்தில் கொண்டாடப்பட்ட மஹானுகத் திருவவதாரம் செய் தருளினன்.

புண்ணிய பூமியாகிய நமது பரதகண்டத்தில் வங்க தேசத்திலே ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்த 'காமர்ப்புகூர்' என்னும் சிறு கிராமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சகாப்தம் 1756-ம் வருஷத்தில் மாசி மாதத்துப் பூர்வ பக்ஷத்துத் துவிதியையில் (கி. பி. 1836ஆ பிப்ரவரிமீ 17வ) அவதரித்தருளினர். இவரது தாய் தந்தையர்களின் பெயர் முறையே **சந்திரமணி தேவி, க்ஷுதிராம் சட்டோபாத்யாயர்** என்பன. க்ஷுதிராமின் பூர்வ கிராமம் காமர்ப்புகூருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள "டேரி" என்னும் சிற்றூர். அவ்வூர் அதிகாரி ஒரு சமயம் நமது சட்டோபாத்தியாயரைத் தனக்கு அனுகூலமாக நியாய ஸ்தலத்தில் உண்மைக்கு மாறாக சாக்ஷி சொல்ல வரவேண்டுமென நிர்ப் பந்தித்தான். அப்படி வரமுடியாதென இவர் மறுத்ததும் அதிகாரிக்குக் கோபமுண்டாகி இவரைப் பலவிதத்திலும் இம்சிக்கத் தொடங்கினன். இது காரணமாக க்ஷுதிராம் தமது ஜன்ம கிராமத்தை விட்டகன்று காமர்ப்புகூரில் குடியேறினர். குலத்தில் உயர்ந்தவராயினும் இவ்வுலகத் தவர் கொண்டாடும் பொருட் செல்வம் இவர்பால் இல்லை. என்றாலும் பக்தி பூர்வகமாய் பகவதாராதனம் செய்துவந்தாராகையால் மகா தர்மிஷ்டரெனவும் வாஸ்தவமான பக்தரெனவும் பிரசித்தி பெற்றிருந் தார். இவருக்கு வாக்கு ஸித்தி முதலிய திவ்ய சக்திகள் உண்டென்றும் இவர் ஈசுவரானுக்கிரகம் பெற்றவரென்றும் அவ்வூர் ஜனங்கள் நம்பிய படியால் இவரைக் கண்டவுடன் பயபக்தியுடன் வந்தனமளிப்பார்கள். இவரெதிரில் அற்பமான பேச்சுக்களையும் பேசமாட்டார்கள்.

இவரது பக்தியைப்பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. இவர், தமது குமாரத்தியைப் பார்ப்பதற்காகப் பன்னிரண்டு மைல் தூரத்தி லுள்ள ஒரு கிராமத்துக்கு ஒருநாள் போய்க்கொண்டிருக்கையில் பாதி வழியில் யதேஷ்டமாய்த் தளிர்த்துக் கொண்டிருந்த ஒரு வில்வ மரத் தைக் கண்டார். உடனே மரத்தின் மீதேறி, வேண்டிய வரையில் வில்வ தளங்களைக் கொய்துகொண்டு தமது உத்தேசப்படி மகளைப் பார்க்கப் போகாமல், அவற்றைக்கொண்டு சிவபூஜை செய்வதற்காகத் தம் வீட் டுக்கே திரும்பிவிட்டார். இவருக்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியே குல தெய்வம். தாம் செய்யுங் காரியங்களையெல்லாம் ரகுவீரனுக்கே அர்ப் பணம் செய்துவிடுவார். அந்தப் பக்தவத்சலனுடைய கிருபா விசேஷத் தால் சட்டோபாத்யாயருக்கு எவ்விதக் குறையும் நேராதிருந்தது. ஒரு

நாள் இவர் தீர்த்த யாத்திரையாக கயா க்ஷேத்திரத்துக்குச் சென்றிருந்தபோது அங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணு இவருடைய பக்திக்கு மெச்சி, இவர் கனவில் தோன்றி, 'நான் உனக்குக் குமாரனுக அவதரிக்கப் போகிறேன்' என்றருளி மறைந்தனர். இதன் பிரகாரமே சந்திரமணி தேவி கர்ப்பவதியாகி உரிய காலத்தில் நல்ல லக்ஷணங்கள் பொருந்திய புருஷப் பிரஜையைப் பெற்றனள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பெயர்களில் ஒன்ருன '**கதாதரர்**' என்ற நாமம் இக்குழந்தைக்கு இடப்பட்டது. இந்தக் கதாதரர்தான் பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரெனப் பிரஸித்தி வாய்ந்த பரமாசாரியராஞர். இவருக்கு ராமகுமாரர் என்ற ஜேஷ்ட சகோதரர் ஒருவரிருந்தார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது கதாதரர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகவே இருந்தது. ஸமதர்சனம், எல்லாரிடத்தும் அன்பு, அருள், சாந்தம், சீலம் முதலிய நற்குணங்கள் இவரிடம் பிற்காலத்து விளங்கினவென்பதை நாமறிவோம். அப்படிப்பட்ட குணங்கள் அதிபால்ய தசையிலும் இவரிடத்து மிக்குத் தோன்றின. கிராமத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு மாந் தோப்பில் கதாதரர் தலைமையின்கீழ் சிறுவர்களெல்லோரும் கூடி விளையாடுவதுண்டு. அங்கு கதாதரர் மற்றைய எல்லா ஜாதிப் பிள்ளைகளோடும் சேர்ந்து யாதொரு ஜாதி வித்தியாசமும் பாராட்டாமல் விளையாடிக் களிப்பார்.

வங்க தேசத்தில் கூத்தாடிகள் ஊரூராய்ச் சென்று நாடகமாடி ஜனங்களை இன்புறுத்தித் தாங்களும் பணம் பெறுவது வெகுகாலமாக நடைபெற்ற வழக்கம். இதிகாசங்களான ராமாயணம், மஹா பாரதம் இவைகளினின்றும், பதினெண் புராணங்களினின்றும், ஏதாவதொரு கதையை எடுத்துக்கொண்டு அதை நடித்துக் காட்டுவது அத்தகைய கூத்தாடிகளின் தொழில். இவர்களுடைய நாடகத்தில் சங்கீதந்தான் பிரதானம். அதைக் கேட்பதற்கு ஜனங்கள் திரள் திரளாய்க் கூடுவார்களாதலால், கேவலம எழுதப் படிக்கத் தெரியாதவனுக்கும் இக்கூத்தாடிகள் மூலமாக நமது புராணக் கதைகள் தெரிந்துவிடும். இப்படிப்பட்ட கூத்துக்கள் சுற்றுப் பக்கத்தில் சமீபத்திலுள்ள எந்தக் கிராமத்தில் நடந்தாலும் சரி, அங்கு கதாதரரை நிச்சயமாகப் பார்க்கலாம். பார்த்த நாடகத்தை அவர் தாமே திரும்பவும் நடிக்கக்கூடிய ஞாபக சக்தி வாய்ந்தவராகவிருந்தார்.

ஒருநாள் மேற்கூறிய மாஞ்சோலையில் ஊர்ச் சிறுவர்கள் விளையாடிக்கொண் டிருக்கும்போது, கதாதரர் வெகு இனிமையாகப் பாடித் தமது தோழர்களை ஆனந்தப்படுத்திக் கொண்டிருந்தனர். திடீரென்று பாட்டை நிறுத்திய கதாதரர், "தம்பிகளே ! நாம் அன்று பக்கத்துக் கிராமத்தில் பார்த்த '**ராதா சோகம்**' என்ற நாடகத்தை இப்போது நடிக்கலாமா ?" என்றனர். உடனே "நடிக்கலாம், நடிக்கலாம்" என்று அனைவரும் ஒரே குரலாய்க் கூறினர். கதாதரருக்கு ராதை

வேஷமும் மற்றவர்க்குச் சேடிகளின் வேஷமும் போடப்பட்டன. கிருஷ்ணனுடைய பிரிவாற்றுமைக்குப் பெரிதும் வருந்திய ராதைக்குப் பிராணபயம் நேரிடுமெனக் கண்டுகொண்ட சேடிகள், தங்களுள் ஒருத்தியான பிருந்தையைக் கிருஷ்ணனிடம் தூதனுப்பியதாக வரும் சந்தர்ப்பத்தை நடிக்கும்போது, பிருந்தையாக வேஷம் பூண்டவன் ராதையாக வேஷம் தரித்த கதாதரரிடம் சென்று, "கிருஷ்ணனிடம் என்ன சொல்கிறது" என்று கேட்டான். கதாதரர் யாதொரு பதிலும் சொல்லாமல், "கிருஷ்ணா! கிருஷ்ணா" என்று சொல்லிக்கொண்டே மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டனர். இதனால் நாடகம் பாதியில் நிற்க வேண்டியதாயிற்று. கதாதரர் தம்மை ஒரு வேஷதாரனாக நினையாமல் வாஸ்தவத்தில் கண்ணனைப் பிரிந்து துயரமடைந்த ராதையேயெனப் பாவித்தனர். கண்ணபிரான் உரலுடன் சேர்த்துப் பிணிக்கப் பட்டதைக் கேட்டு, "எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே" என்று ஸ்ரீ நம்மாழ்வார் சோகித்திருந்ததும், ஸ்ரீ ராமபிரான் தனிமையில் கரதூஷணுதியருடன் யுத்தஞ் செய்கிருரென்பபதைக் கேட்டதும் சதுரங்க சேனைகளையும் கூட்டிக்கொண்டு சகாயத்துக்கு ஸ்ரீ குலசேகராழ்வார் புறப்பட்டதும் இப்படிப்பட்ட மனநிலைமைக்கும் உதாரணங்களாம்.

கதாதரருக்கு உலகப்பற்று பால்ய முதற்கொண்டே அற்றிருந்தது. ஸந்யாஸிகளைக் கண்டால் அவருக்குப் பரம சந்தோஷம். அவர்களோடு பேசுவதும் அவர்களுக்குப் பணிவிடைகள் புரிவதும் கதாதரருக்கு உவப்பான காரியங்கள். ஒருநாள் சந்திரமணி தேவியார் கதாதரருக்கு ஒரு புது வஸ்திரத்தைக் கொடுத்தனர். இவர் அதை உடுத்திக்கொண்டு, ஜகந்நாதத்துக்கு யாத்திரையாகச் செல்லும் சில சாதுக்கள் தங்கியிருந்த இடத்துக்கு அவர்களைத் தரிசிக்கச் சென்றனர். அந்த ஸாதுக்கள் கௌபீனதாரிகளாக இருப்பதைப் பார்த்துத் தாமும் அவ்வாறே இருக்க எண்ணித் தமது புது வஸ்திரத்தைத் துண்டு துண்டாகக் கிழித்து, இரண்டு துண்டுகளைக் கௌபீனமாக உடுத்திக்கொண்டு, தம் தாய் முன்னர்ச் சென்று, "அம்மா! நான் ஸந்யாஸியாய்ப் போய்விட்டேன் பார்!" என்றனர்.

பால்யத்தில் கதாதரர் பார்வைக்கு வெகு அழகுள்ளவராக இருந்தார். ஆகவே ஊரார் எல்லோரும் அவரைக் கொண்டாடிக் கண்டபோதெல்லாம் அவருக்குப் பக்ஷண பலகாரங்களைக் கொடுப்பதுண்டு. வயது முதிர்ந்தோர்கூட இவரிடமிருந்த பக்தியைப் பார்த்து, இவர் தேவதாம்சரெனவே மதித்தனர். கதாதரர் பிறந்ததும் அவர் குடும்பத்தைப் பிடித்துவந்த தாரித்திரியம் ஒருவாறு நீங்கிவிட்டதாகையால், அவருடைய பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் அவரை வெகு உயர்வாகவே பாராட்டி வந்தனர். குழந்தைப் பருவத்திலேயே அவர் சித்திரங்களை எழுதுவதிலும் மண் பிரதிமைகளைச் செய்வதிலும் அபார சாமர்த்தியமுள்ளவராக இருந்தார். மண்பதுமைகள் மட்டு

மின்றி, ஊனமாய்ப்போன சிலாவிக்ரகங்களையும்கூடச் செப்பனிடத் தொடங்கினர். தக்ஷிணேசுவர ஆலயத்தில் இவரால் செப்பம் செய்யப் பட்ட கிருஷ்ண விக்ரகம் ஒன்று இன்னும் இருக்கிறது.

ஒன்பதாவது வயதில் கதாதருக்கு உபநயனமாயிற்று. அத்தரு ணத்தில் வழக்கப்படி உயர்குலத்துதித்த ஸ்திரீயிடம் பிக்ஷை யேற்க வேண்டியிருக்க இவர் அவ்வாறு செய்யாமல் ஓரே பிடிவாதமாய்த் தாழ்ந்த குல ஸ்திரீ யொருத்தியிடம் பிக்ஷையேற்றுத் தம்முடைய ஸம திருஷ்டியை வெளிப்படுத்தினர்.

பிறகு கதாதரரின் தமையனரான ராமகுமார சட்டோபாத்தியாயர் தாம் கல்கத்தாவில் ஏற்படுத்தியிருந்த கலாசாலையில் சேர்த்துப் படிக்கும் படி தூண்டினர். ஆனல் அங்கு நிகழும் வீண் வாதங்களைக் கண்டு வெறுப்புற்ற கதாதரர் தமக்கு அப்படிப்பட்ட கல்வி தேவையில்லை யென்றும், வயிற்றுப் பிழைப்புக்கான கல்வியன்றி ஈசுவரனை அடைய வேண்டிய கல்விதான் தமக்கு வேண்டுமென்றும் சொல்லிக் கலாசாலை யிற் கற்க மறுத்துவிட்டார்.

அக்காலத்தில் கல்கத்தாவுக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்தி லுள்ள தக்ஷிணேசுவரம் என்னுமிடத்தில் வெகு பொருள் செலவிட்டு ராணி ராஸமணி அம்மாள் காளிதேவிக்கு நேர்த்தியான கோயில் ஒன்று கட்டுவித்தாள். அங்கு ராமகுமாரர் அர்ச்சகராக அமர்ந்து தமது தம்பியான கதாதரரையும் உதவிக்கு அழைத்துச் சென்றார். அங்கு கதாதரர் போஜனம் செய்யாமல் கங்கைக் கரையில் சுயம்பாகம் செய்துகொண்டு சாப்பிடுவார். சில காலம் சென்றதும் ராமகுமாரர் நோயால் வருந்தி இறந்துவிட்டார். அதன் பிறகு கதாதரரே அக் கோயிலுக்கு அர்ச்சகராக நியமனம் பெற்றார்.

காளிதேவியை ஆராதனை செய்வதில் இவர் காட்டிய பக்திக்கு அளவேயில்லை. அந்த ஜகந்மாதாவைத் தமது தாயெனவே நம்பினர். தாயைப் பார்த்துக் குழந்தை கொஞ்சுவதுபோலப் பேசுவார்; பின்னும் ஸ்தோத்திரம் செய்வார். ஆடுவார்; பாடுவார்; தேவி தமக்குப் பிரத்தி யக்ஷமாகாததைக் கண்டு மனங் கசிந்து அழுவார். சில வேளைகளில் பக்தி பரவசத்தால் தேவிக்கு அர்ச்சிக்க வேண்டிய புஷ்பங்களைத் தலை யிலேயே போட்டுக்கொள்வார். ஆரத்தியெடுக்கும் காலம் கழிந்த பிற கும் கூட ஆரத்தியைச் சுற்றிக்கொண்டே யிருப்பார். இவ்விதமான விபரீதச் செய்கைகளினல் இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்ட தென்று எல்லோரும் எண்ணினர்கள். இவருக்குக் கல்யாணம் செய்து வைத்தால் சித்தப் பிரமை தீருமென்று நினைத்துத் தாயாகிய சந்திர மணி தேவியார் இவரைக் காமர்ப்புகூருக்கு அழைப்பித்து இவருக்கு ராமச்சந்திர முகோபாத்தியாயர் என்பவரின் குமாரத்தியான **சாரதா மணி தேவி**யென்னும் ஐந்து வயதுப் பெண்ணை விவாகம் செய்வித்த னர். விவாகமான பிறகு இவர் கல்கத்தாவுக்கு வந்து பழையபடியே

காளிகோயிலில் பூஜையை ஒப்புக்கொண்டார். ஆனால் 'சித்தப்பிரமை' மட்டும் முன்னிலும் பன்மடங்கு அதிகமாயிற்று. தேவியை நோக்கி, "தாயே! அடியேனுக்குப் பிரத்யக்ஷமாவது என்று? எப்பொழுது?" எனக் கதறித் துயரமுறுவர். டாக்கா நகரவாசியான வைத்தியர் ஒருவரே இவருக்குத் தெய்வப் பித்தேறி யிருக்கிறதென்று கண்டுபிடித்தாரே யொழிய மற்றையோரெல்லாரும் பைத்தியமென்றே கருதினர்.

அன்பும் பக்தியும் இப்படி நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகையில் ஒருநாள், தேவி தமக்குப் பிரத்யக்ஷமாகாததற்குக் கதாதரர் மிகவும் வருந்தித் தம்முயிரை மாய்த்துக்கொள்ள விரும்பினர். அடியவர்களுடைய துயரத்தைப் பொறுக்காத தேவி உடனே பிரத்யக்ஷமாகி, "குழந்தாய்! சமாதானமடை; நீ கூப்பிடும்போதெல்லாம் நான் வருவேன்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தாள்.

பிறகு நிர்விகல்ப சமாதியை அடைவதற்காக இவர் பன்னிரண்டு வருஷங்கள் கொடிய தவம்புரிந்தார். அக்காலத்தில் நீண்டகாலம் கண்மூடித் தூங்கினதில்லை. அவர் ஸமாதி நிஷ்டையிலிருக்கும்போதெல்லாம் அவருடைய மருகரான ஹிருதயர் அவரது சரீராராதனையின் பொருட்டுக் கொஞ்சம் கொஞ்சம் அன்னம் ஊட்டுவர். சில வேளைகளில் நமது கதாதரர் தாழ்ந்த ஜாதியர் வீடுகளில் நுழைந்து துடைப்பம் எடுத்துப் பெருக்கிக்கொண்டே "தாயே! நான் பெரியவனென்றும் பிராம்மணனென்றும், இவர்கள் ஈன ஜாதியரென்றும் எண்ணுகிற மனோபாவம் என்னிடம் இருக்கவேண்டாம்; இவர்கள் அனைவரும் பிர்ம்மஸ்வரூபம் என்னும் எண்ணம் எனக்குண்டாகும்படி அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்திப்பார்.

செல்வத்தை இவர் ஒருபோதும் மதித்ததில்லை. ஒரு கையில் மண்ணையும் மற்றொரு கையில் பணத்தையும் வைத்துக்கொண்டு, "பணம் மண், மண் பணம்" என்று கூறிக்கொண்டே மாற்றி மாற்றி, இரண்டையும் கங்கையில் எறிந்த விபரத்தையும், கோயில் அதிகாரியான மதுரநாதர் கொடுத்த விலையுயர்ந்த சால்வையை மண்ணில் போட்டு மிதித்து அப்பால் அகற்றிய சம்பவத்தையும் உதாரணமாகச் சொல்லலாம்.

இத்தருணத்தில் பிராம்மண ஸ்திரீ ஒருத்தி தோன்றி, கதாதரருக்குக் கடுந்தவத்தால் ஏற்பட்ட தேக எரிச்சலையும் தீராப் பசியையும் போக்கி யோகாப்பியாசத்தின் இரகசியங்களை யெல்லாம் அவருக்குப் போதித்தாள். பின்னர், கதாதரர் பாரமார்த்திக ஞானமனைத்தையும் உணர்ந்து ஞானியாக வேண்டுமென்று முயல்கையில், தோதாபுரி என்ற ஒரு மஹான் வந்து இவருக்குச் சகல வேதாந்த ரகசியங்களையும் உபதேசித்தார். கதாதரர் அவருடைய உபதேசப்படி மூன்று நாள் அப்பியாசம் செய்து நிர்விகல்பசமாதி சித்தியடையப்பெற்றார். தோதாபுரி நாற்பது வருஷம் சிரமப்பட்டு அடைந்த நிர்விகல்ப ஸமாதியைக் கதாதரர்

மூன்று நாளிலேயே பெற்றதற்கு முன்னவர் ஆச்சரியமடைந்து, “அப்பா! இனி எனக்கு நீ சிஷ்யனல்ல; எனக்குச் சமானன்” என்று சொல்லிச் சிலகாலம் அவருடன் தங்கி, தமக்குத் தெரிந்த விஷயங்களை யெல்லாம் கதாதாருக்குச் சொல்லித் தாமும் அவரிடமிருந்து பல கற்றுப் பின் அதைவிட்டுச் சென்றார்.

தோதாபுரி மஹான் போனபிறகு, கதாதரர் ஆறு மாதகாலம் நிர்விகல்ப ஸமாதியிலிருந்தார். அதன் பயனால் அவருக்கு ரத்தக்கடுப்பு உண்டாயிற்று. உடம்பு ஒருவாறு குணமானதும், அவருடைய பக்தி வைராக்கியம் வேறு விதத்தில் திரும்பியது. வைஷ்ணவ ஸித்தாந்தத்தை அனுசரித்துப் பக்தி யோகத்தால் ஈசுவரனை ஆராதிக்கத் தொடங்கினார். தம்மை ராதையாகப் பாவித்து, ஸ்ரீ கிருஷ்ணனைத் தமக்கு நாயகனாகக் கருதி அவரது ஸாந்நித்தியத்தை அடைந்து ஆனந்தித்தார். இதுபோலவே இன்னும் பல தெய்வீகக் காட்சிகளைக் கண்டு களித்தார். பின்னர் நமது நாட்டிலுள்ள முகமதிய மதம் முதலான இதர தர்மங்களையும் கொஞ்ச கொஞ்சகாலம் அனுசரித்து அவைகளின் மூலமாயும் தமது இஷ்டசித்தியை வெகுசீக்கிரத்தில் அடைந்தார். அப்பால் கிறிஸ்தவ மதத்தையும் அனுசரித்து ஞான நிஷ்டையில் ஏசு கிறிஸ்துவைக் கண்டு வாழ்த்தித் திருப்தியடைந்தார். இப்படிப் பல்வேறு தர்மங்களின் கோட்பாடுகளை அப்பியசித்து அவைகளின்படி பக்தி செய்து, தரிசனம் கண்ட பிறகு, எல்லா மதங்களும் உண்மையே யென்றும், சச்சிதானந்தப் பரப்பிரம்மம் ஒன்றே யென்றும், அதையே ஒவ்வொரு மதஸ்தரும் ஒவ்வொரு விதமாக ஆராதிக்கின்றனரென்றும், ஒன்றுக்கொன்று விரோதமாகக் காணப்படும் இந்தத் தர்மங்களெல்லாம் அந்தப் பரப்பிரம்மத்தை அடைவதற்கான பல்வேறு மார்க்கங்களே யென்றும் நமது கதாதரர் ஸித்தாந்தப்படுத்தினர்.

இத்தருணத்தில் கதாதரரின் மனைவியான ஸ்ரீ சாரதாமணி தேவிக்கு 18-வயது ஆகியிருந்தது. அவள் தன் புருஷனுக்குச் சித்த ஸ்வாதீனமில்லாதிருப்பதைக் கேட்டுத் துக்கித்து, அவரை நேரில் தரிசித்துச் சங்கதியைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, தன் கிராமத்தைவிட்டு, தக்ஷிணேசுவரத்துக்குக் கால் நடையாக நடந்துவந்து தன் பதியைக் கண்டாள். கதாதரர் அவளை வெகு பிரியமுடன் வரவேற்றாரென்றாலும், அவளைப் பார்த்து, “உன்னை முன் மணந்த கதாதரன் இறந்துவிட்டான்; இப்போதிருக்கும் புதிய கதாதரன் எந்த ஸ்திரீயையும் மனைவியாக ஏற்பதில்லை. உன்னிடம் ஜகன்மாதாவான காளிதேவியின் ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றையும் அவன் காணவில்லை” என்று சொன்னார். அவரது கருத்தையறிந்த சாரதாமணி தேவியும், அவருக்குப் பணிவிடை புரிந்துகொண்டு அவர் அருகிலேயே இருக்கமட்டும் அனுமதி தரவேண்டுமென்று கேட்டுப் பெற்று, அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டும் அவர் உபதேசித்தருளியபடி நடந்துகொண்டும் காலம் கழித்தனள். தமது கணவனைப்

பகவானது அவதாரமாகவே பாவித்து அவரைப் போலவே ஞானச் செல்வம் பெற்றுப் பரம பக்தையாய் வாழ்ந்துவந்த அவ்வுத்தமி 1920ஹு ஜுலை 20-ம் தேதியன்றுதான் கல்கத்தாவில் தேக வியோகமாயினள்.

அக்காலத்தில் மதுரநாதர் குடும்ப சகிதராய்த் தீர்த்த யாத்திரை சென்றபோது நமது பரமஹம்ஸரையும் அழைத்துச் சென்றனர். பிருந்தாவனம் வரையில் போய்த் திரும்பியதனுல், பரமஹம்ஸருக்கு, காசியில் பிரசித்தி பெற்றிருந்த த்ரைலிங்க சுவாமிகள் முதலிய மஹான்களுடைய பரிசயம் ஏற்பட்டது. பரமஹம்ஸருக்குப் பிருந்தாவனத்திலேயே தங்கிவிட வேண்டுமென்று அவா மிகுந்திருந்தது. ஆனல் ஜகந்மாதாவான காளிதேவியைவிட்டுப் பிரிய மனமில்லாதவராகித் திரும்பவும் தக்ஷிணேசுவரத்துக்கே வந்துவிட்டார். திரும்புங்காலையில் வைத்தியநாதம் என்ற ஊரில் உள்ள ஜனங்கள் பரம தரித்திரர்களாய் ஊண் உடையின்றித் தவிப்பதைக் கண்டு மனமிரங்கி அவர்களுடைய குறைகள் தீர்ந்தாலன்றித் தாம் தக்ஷிணேசுவரத்துக்கு வருவதில்லையென நின்றுவிட்டார். இதைக்கண்ட மதுரநாதர் அவ்வூராரெல்லாருக்கும் வேண்டிய அளவு ஆகாராதிகளும் ஆடைகளும் கொடுத்துப் பரமஹம்ஸரைத் திருப்திப்படுத்தி அவரைக் கூட அழைத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்.

அதன்பிறகு பரமஹம்ஸருடைய காலம் முழுவதும் அவரிடம் வருபவருக்கு உபதேசம் செய்வதிலேயே பெரும்பாலும் கழிந்தது. அவரைத் தரிசித்து ஞானுபதேசம் பெறவேண்டியதற்காக தக்ஷிணேசுவரத்துக்கு வந்த ஜனங்களுக்கு அளவில்லை; பிரம்ம ஸமாஜத் தலைவரான பாபு கேசவசந்திரஸேனர் இவரை ஒருதரம் வந்து பார்த்து இவருடைய மஹிமைகளை வெளியிட்ட பிறகு, பரமஹம்சரை நேரில் தரிசிக்க வந்த ஜனங்களைப் பல்லாயிரக் கணக்கில்தான் அளவிட வேண்டும். கேசவ சந்திரருக்கும் பரமஹம்ஸருக்கும் பரஸ்பர அன்பு மேலிட்டது. பிரம்ம ஸமாஜத்தார் ஈசுவரனைத் தாயாகப் பாவித்து வழிபடும் கொள்கை பரமஹம்ஸருடைய அனுக்கிரகத்தால் ஆனதாம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேற்றிசைக் கண்டங்களில் வேதாந்த தர்சனத்தைப் பரவச்செய்து புகழ்பெற்ற ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளெனப் பின்னர் கொண்டாடப்பட்ட நரேந்திரநாத தத்தர் முதலியோர் பரமஹம்ஸரிடம் உபதேசம் பெற்றுச் சிஷ்யர்களானது இக்காலத்தில் தான்.

பரமஹம்ஸர் தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் உதயம் முதல் அஸ்தமனம் வரையில் வேதாந்த விசாரம் செய்து அவர்களுடைய பக்குவ நிலைக்கு ஏற்றபடி உபதேசம் செய்து வந்தார். "யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்பதே அவரது கொள்கையாதலால் தம் சரீர சவுக்கியத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் பிறர்க்கு உபதேசம் செய்வதையே பிரதானமாகக் கொண்டிருந்தார். சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொள்ளும்படி யாரேனும் நிர்ப்பந்தித்தால், "எனது

முயற்சியினுல் ஓர் ஆத்மாவேனும் பந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமடையுமானல் அதற்காக என் சரீர வருத்தங்கள் இன்னும் நூறுயிரம் மடங்கு அதிகமானுலும் சகித்துக்கொள்வேன்" என்பார். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்பது புத்த தேவருக்கு மட்டும் பொருந்திய மொழியன்று; நமது பரமஹம்ஸருக்கும் நன்கு பொருந்தும்.

1885-ம் வருஷத்தில் பரமஹம்ஸருக்குத் தொண்டைப் புண் நோய் உண்டாகி வரவர முதிர்ந்தது. சிகித்ஸை செய்த வைத்தியர்கள் இவர் ஒன்றுமே செய்யாது படுத்த படுக்கையோடிருந்தால் குணமுண்டாகு மென்றனர். சென்ற விடமெல்லாம் கும்பல் கும்பலாகக் கூடும் ஜனங்களை வீணே போகச் சொல்வதற்கு மனமிராத பரமஹம்ஸர் அவர்களோடு ஏதாவது வார்த்தையாடிக்கொண்டே யிருப்பார். தொண்டை கட்டிப் போய்க் கஞ்சி பாயஸம் முதலிய திரவ பதார்த்தம் கூட உட்செல்லாத சமயத்திலும் அவர் ஞானேபதேசத்தை நிறுத்தவில்லை. இப்படிப் பரோபகாரத்திலேயே காலத்தைக் கழித்து 1886-ம் வருஷம் ஆகஸ்டு 16உ இரவு ஸமாதியிற் பிரவேசித்துப் பரப்பிரம்மத்தில் இரண்டறக் கலந்தனர்.

பரமஹம்ஸர் செல்வத்தைத் திரணமாக மதித்தனரென்பதை முன்னமேயே கூறியிருக்கிறோம். பொன் வெள்ளிகளை அவர் தொடுவதே யில்லை. தூக்கத்திலிருக்கும்போதுகூட அவைகள் தேகத்தில் பட்டால் அவருக்கு நடுக்கமுண்டாகும். மதுரநாதர் தக்ஷிணேசுவரம் கோயிலேயும் அதற்காக வருஷமொன்றுக்கு ரூ. 25,000 வருமானமுள்ள சொத்துக்களையும் பரமஹம்ஸரிடம் விட்டுவிடுவதாகப் பலமுறை சொன்னபோதிலும் இவர் அத்தகைய பெருங் கொடையை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்து விட்டதன்றி மறுமுறையும் அப்படி நிர்ப்பந்தப்படுத்தினுல் தாம் அவ்விடத்தையே விட்டுப் போய்விடுவதாகவும் பயமுறுத்தினர்.

பரமஹம்ஸர் உத்தம யோக சித்திகளைப் பெற்றிருந்தும் அவற்றை வெளிப்படுத்திப் புகழ்பெற வேண்டுமென்று கருதவேயில்லை. தாம் செய்த உபதேசங்களிலும், ஸித்திகளைப் பிறர்க்குக் காட்டி அவர்களுடைய புகழை நாடவேண்டாமென்றும், யோகாப்பியாசம் செய்வது பிரம்மத்தோடு இரண்டறக் கலப்பதற்கேயன்றி, பாமர ஜனங்களுக்கு விநோதம் உண்டாக்குவதற் கன்றென்றும் அடிக்கடி போதித்திருக்கின்றூர்.

அவர் ஸமாதியிலிருக்கும்போது, தமது சரீரத்தையும் உலகத்தையும் முற்றிலும் மறந்திருப்பார். ஒரு சமயம் அவர் ஸமாதியிலிருக்கையில், சமீபத்திலிருந்த அக்கினி குண்டத்தில் விழுந்து விட்டார்; என்றுலும் அதை உணரவில்லை. சிஷ்யர்கள் வந்து சிகித்ஸை செய்த போதுதான் தமது தேகம் வெந்துபோனதைத் தெரிந்துகொண்டார். மற்றொரு சமயம் அவர் கால் நழுவிக் கீழே விழுந்ததனுல் கையில்

காயமுண்டாயிற்று. தெய்வத்தைப் பற்றிய சம்பாஷணை நேரும்போது இவர் ஸமாதியில் ஆழ்ந்து விடுவாராதலால், வைத்தியன் கட்டிய கட்டு அவிழ்ந்து கை மறுபடியும் காயமுறும். இப்படியாக அந்த அற்பமான காயம் ஆறுவதற்கு ஆறு மாதங்களுக்குமேல் சென்றது.

பரமஹம்ஸர் மனித ரூபமாய் அவதரித்த ஈசுவரன்தான் என்பதற்குச் சந்தேகமேயில்லை. அவர் கல்வியில் தேர்ந்தவர் அல்லர்; ஸம்ஸ்கிருத ஞானம் கிடையாது. தாய் பாஷையாகிய வங்க பாஷையிலும் தகுந்த பாண்டித்யம் பெறவில்லை. என்றாலும் அவருடைய உபதேச மொழிகள் தபிக்கும் மனத்துக்குச் சாந்தத்தைக் கொடுக்கின்றன. அவ்வுபதேச வாக்கியங்கள் சூத்திரங்கள்போலத் திட்ப நுட்பம் செறிந்து விளங்குகின்றன. இவை வேதங்கள், உபநிஷத்துக்கள், தர்சன ஸித்தாந்தங்கள் முதலியவற்றுக் கெல்லாம் வியாக்யான வடிவமாய் நின்று அவற்றின் ஸாரங்கள் அனைத்தையும் எளிய நடையில் யாவரும் தெரிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்றன. ஷோபன்ஹாயர் என்னும் ஜர்மானிய தத்துவஞானி உபநிஷத்துக்களைப் பற்றிப் பேசுகையில், "அவை எனது வாழ்நாளுக்கோர் ஆறுதலாக இருக்கின்றன; எனது அந்திய காலத்தும் அவை எனக்கு ஆறுதலளிக்கும்" என்று சொல்லியிருக்கிறார். பரமஹம்ஸருடைய உபதேச மொழிகளுக்கும் இப்படிப்பட்ட குணம் உண்டு என்பதை நாம் தனித்துச் சொல்ல வேண்டியதில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேச மொழிகள்

முதற் பகுதி

மனிதனும் உலகமும்

எனது அம்சமே ஜீவ லோகத்தில் என்றுமுள்ள ஜீவனாகி இயற்கையிலுள்ளனவாகிய மனதுட்பட்ட ஆறு இந்திரியங்களையும், கவர்கிறது.

காமக் குரோத லோபம் ஆகிய இம்மூன்றும் ஆத்ம நாசத்துக்கேதுவாகிய நரகத்தின் மூன்று வாயில்களாகும். ஆதலால் இம்மூன்றையும் விடுக.

ஓ, அர்ஜுனா! இம்மூன்று இருள் வாயில்களினின்றும் விடுபட்டோன் தனக்குத் தானே நலந்தேடிக் கொள்கிறான்; அதனால் பரகதி அடைகின்றான்.

—பகவத்கீதை

அத்தியாயம் 1

மனிதன்

[வாழ்க்கையின் பயன்—மனிதனுடைய உண்மை நிலை—கட்டுண்ட மனிதன்—மரணமும் மறு பிறப்பும்]

வாழ்க்கையின் பயன்

1. இராத்திரியில் ஆகாயத்தில் அனேக நக்ஷத்திரங்களைக் காண்கிறாய்; ஆனால் சூரியோதயமானதும் அவைகள் தென்படுவதில்லை; ஆதலால் பகற்போதில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே! உனது அக்ஞான காலத்தில் நீ ஈசுவரனைக் காண முடியாததனால், ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே.

2. பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவன் இப்பிறவியிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனேயாவன்.

3. ஒரு மனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடி அவனுக்குச் சன்மானம் கிடைக்கின்றது. ஈசுவரன் பக்தர்கள் விரும்புவனவற்றை யெல்லாம் கொடுக்கும் கற்பக விருக்ஷம் போன்றவன். ஓர் ஏழை மனிதனுடைய மகன் சிரமப்பட்டு, உயர்ந்த நீதி ஸ்தலத்தில் நியாயாதிபதியானதும், "இப்போது நான் சந்தோஷமுள்ளவனானேன். உன்னத பதவியை அடைந்து விட்டேன். எல்லாம் ஒழுங்காகத்தா னிருக்கிறது" என்று நினைக்கிறான். அவனுக்கு ஈசுவரன், "நீ இந்த நிலைமையிலேயே இருப்பாயாக" என்று சொல்கிறான். ஆனால் அந்த நியாயாதிபதி உபகாரச் சம்பளம் பெற்று வேலையை விட்டு நீங்கும்போது, சென்றுபோன நாட்களைப்பற்றிச் சிந்தித்து, "ஐயோ! நான் சாதித்தது என்ன" என்று அரற்றித் தனது வாணாட்கள் வீணாயினதற்குத் துன்புறுகிறான். அப்போது ஈசுவரனும் "ஐயோ! நீ சாதித்தது ஒன்றுமில்லையே!" என்றுதான் சொல்கின்றான்.

4. உலகத்தில் மனிதன் பிறக்கும்போது, வித்தியாகுணம் அவித்தியா குணம் என்ற இரண்டு குணத்துடன் பிறக்கிறான். வித்தியா குணம் முக்தியை அடையச் செய்யும். அவித்தியா குணமோ மனிதனை உலகப் பற்றுக்குள்ளாக்கும். பிறக்கும்போது இவ்விரு குணங்களும் தராசின் தட்டுகளைப்போலச் சரிசமமாக இருக்கும். சீக்கிரத்தில் உலக இன்பங்கள் ஒரு தட்டிலும் ஆத்ம விஷயங்கள் மற்றொரு தட்டிலும் ஏற்றப்படுகின்றன. மனம் உலக சுகங்களை விரும்புமானால் அவை

வைக்கப்பட்டிருக்கும் தட்டு கனத்துக் கீழே செல்லும். அவ்வாறன்றி ஆத்ம விஷயத்தை மனம் பற்றுமானல் அவ்வாத்ம விஷயங்களடங்கிய தட்டு ஈசுவரனை நோக்கித் தாழும்.

5. மூலமாகிய ஒன்றைத் தெரிந்துகொள்; பிறகு உனக்கு எல்லாம் தெரியவரும். ஒன்று என்ற இலக்கத்தின் பின் பூஜ்யங்களைச் சேர்த்தால் அது நூருகவும் ஆயிரமாகவும் ஆகின்றது. ஆனல் அந்த ஒன்று என்னும் இலக்கத்தை அழித்துவிட்டால் மிகுந்திருப்பனவற்றுக்கு மதிப்பில்லை. ஒன்றினல்தான் பலவற்றுக்கு யோக்கியதை யுண்டாகின்றது. முதலில் ஒன்று, பின்னர் பல; முதலில் ஈசுவரன், பின்னர் ஜீவனும் உலகமும்.

6. முதலில் ஈசுவரனைத் தேடி, அப்பால் உலகப் பொருளைத் தேடு. இதற்கு மாருகச் செய்யாதே. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு நீ உலக வாழ்க்கையில் பிரவேசித்தால் உனக்கு மனச் சஞ்சலமே இராது.

7. சமூகச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசுகிறீரா? கடவுளைக் கண்ட பிறகு நீர் அதனைச் செய்யலாம். பழைய காலத்து ரிஷிகள் கடவுளைக் காண உலகத்தைத் துறந்தனர் என்பதை மறக்கவேண்டாம். இதுதான் அவசியம் வேண்டப்படுவது. நீர் விரும்பினல் அவைகள் எல்லாம் உம்மை வந்து அடையும். ஆகவே முதலில் கடவுளைக் காண்பீர்; பிறகு சமூகச் சீர்திருத்தம் பிரசங்கங்கள் இவைகளைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

8. பட்டணத்துக்குப் புதிதாக வருபவன், ராத்திரி வேளையில் தங்குவதற்குச் சௌகரியமான ஒரு விடுதியை முதன்முதலில் தேடி அங்குத் தனது சாமான்களை வைக்கவேண்டும். அப்பால், அவன் ஊர் சுற்றி வேடிக்கை பார்க்கப் போகலாம். இல்லாவிட்டால் இருட்டில் இடம் தேடுவதில் சிரமப்படுவான். அதுபோல, இவ்வுலகத்துக்குப் புதிதாக வருபவனும் ஈசுவரனுகிய நித்திய விடுதியைத் தேடி வைத்துவிட்டு, பயமின்றி இவ்வுலகில் திரிந்து, தான் செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்யலாம். இல்லாவிட்டால், மரணமாகிய பயங்கரமான அந்தகாரம் வரும்போது மிகுந்த துயரங்களை அவன் அனுபவிக்க நேரும்.

9. பெரிய களஞ்சியங்களின் வழிக்கதவின் முன்னல் எலிகளைப் பிடிப்பதற்காகப் பொரி யுருண்டை வைத்த யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். எலிகள், பொரியுருண்டையின் வாசனையை நுகர்ந்து, களஞ்சியத்தின் அரிசியைத் தின்று களிக்கும் சுகத்தை அனுபவிப்பதில் ஈடுபட்டு, மறந்து யந்திரத்தில் அகப்பட்டுச் சாகின்றன. ஆத்மாவும் அவ்வெலிகளைப்போலத்தான். அது திவ்யானந்தத்தின் வாசற்படியில் நிற்கிறது. அந்தத் திவ்யானந்தமோ, கோடிக்கணக்கான விஷயஸுகங்கள் ஒன்ருகத் திரண்டன போன்றுள்ளது; என்ருலும், ஆத்மாவானது அந்தப்-

பேரின்பத்தை அனுபவியாமல் உலக விஷயமாகிய சிற்றின்பத்தின் வசப்பட்டு, மாயையாகிய வலையில் வீழ்ந்து, அதிலேயே இறந்தொழி கின்றது.

10. ஒரு பண்டிதர்: 'மஹாத்மா'க்கள் இருக்கின்றனர் என்று தியாஸபி கூட்டத்தார் (Theosophists) சொல்லுகின்றனர். இன் னும், நக்ஷத்திர மண்டலம், ஸூரிய சந்திர மண்டலங்கள், தேவ மண்டலம் முதலியன இருக்கின்றனவென்றும், மனிதனுடைய ஸூக்ஷ்ம சரீரம் அவ்விடங்களுக்கெல்லாம் போகக் கூடுமென்றும், இன்னும் இவை போன்ற பல விஷயங்களை அவர்கள் சொல்லுகின்றனர். தியா ஸபியைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ஸ்ரீராமகிருஷ்ணர்:—ஈசுவரனிடம் பக்திதான் பிரதானமானது. தியாஸபிஸ்டுகளும் பக்தியைப் பிரதானமாகக் கொள்வரேல் அது நல்லதுதான். ஈசுவரானுபவமே அவர்களுடைய நோக்கமானால் அது சிலாக்யமானதே. ஆனால், நக்ஷத்திர மண்டலம் ஸூர்ய சந்திர மண்ட லங்கள் முதலிய அற்பமான விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பது ஈசுவர னைத் தேடும் முயற்சியாகாது. அவனுடைய பாதாரவிந்தங்களில் பக்தி பண்ணுவதற்கு, முழு மனதுடன் கசிந்துருகி, ஸாதன மார்க்கங் களை அனுஷ்டிக்க வேண்டும். மனதைப் பல விஷயங்களில் சிதற விடாமல் அவனிடத்திலேயே நிலைத்திருக்கும்படி செய்யவேண்டும். அவன் வேதம், வேதாந்தம் முதலிய கிரந்தங்களில் இருப்பதில்லை. மனங் கசிந்து உருகினாலொழிய அவனைக் காண முடியாது. தீவிர மான பக்தியுடன் பிரார்த்தித்து, ஸாதனைகளைச் செய்ய வேண்டியது அவசியம். ஸாதனை இல்லாவிட்டால் ஈசுவரனை எளிதில் காண முடியாது.

11. எல்லா மனிதர்களாலும் ஈசுவரனைக் காண முடியுமா? எப் போதும் பட்டினியாக ஒருவனும் இருக்கமாட்டான். சிலருக்குக் காலையில் 9 மணிக்கு ஆகாரம் கிடைக்கும். சிலருக்கு மத்தியான வேளையிலும், சிலருக்கு மாலைப்போதிலும், இன்னும் சிலருக்குச் சூரி யாஸ்தமனமான பிறகும் உணவு கிட்டும். அதுபோல் எப்போதாவது, இந்த ஜன்மத்திலோ அல்லது அநேக ஜன்மங்கள் கழிந்த பின்னரோ ஒவ்வொருவரும் நிச்சயமாக ஈசுவரனைக் காண்பார்கள். கண்டுதான் தீரவேண்டும்.

12. சிறு குழந்தைகள் மரப்பாவையை வைத்துக்கொண்டு யாதொரு கவலையுமின்றி நிர்ப்பயமாய் வெளியறையில் மனம் போனபடி யெல்லாம் விளையாடுகின்றன. ஆனால், அங்கு அவர்களுடைய தாயார் வந்தவுடன், குழந்தைகள் மரப்பாவையை அப்பால் போட்டுவிட்டு, "அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டு அவளிடம் ஓடி வருகின் றன. மனிதனே! நீயும் இந்த ஜடமாகிய உலகத்தில் கவலையும் பயமு மற்றுச் செல்வம், கவுரவம், கீர்த்தி முதலிய விளையாட்டுப் பொருள் களை வைத்துக்கொண்டு விளையாடுகிறாய். ஆயினும், ஒருதரம் நீ திவ்ய மாதாவைக் கண்டுவிட்டால், மேற்கூறிய பொருள்களிடம்

உனக்குப் பிரேமையே இராது; அவைகளை அப்பால் போட்டுவிட்டு, நீ அவளிடம் சரணமடைய ஓடுவாய்.

13. ஆழமான கடலில் முத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளை எடுப்பதற்கு ஒருவன் எல்லாவித ஆபத்துக்களுக்கும் துணிய வேண்டும். கடலில் ஒருதரம் மூழ்கியதில் உனக்கு முத்துக்கள் அகப்படாதுபோனால், அக்கடலில் முத்துக்களே இல்லையென்று தீர்மானித்து விடாதே. அடிக்கடி முழுகு; கடைசியில் உனக்குப் பலன் கிடைக்கும். உலகத்தில் ஈசுவர தரிசனமும் அப்படிப்பட்டதேயாம். அவனைக் காண வேண்டுமென்று நீ செய்யும் முதல் பிரயத்தனம் பயனற்றதாகுமானால் நீ அதைரியப்படக்கூடாது; அம்முயற்சியில் இன்னும் சிரமப்படு. கடைசியில் நீ ஈசுவரனை நிச்சயமாகக் காண்பாய்.

14. நித்தியமாயுள்ள ஞானத்தையும் ஆனந்தத்தையும் பற்றித் தியானம் செய்; அப்போது உனக்கும் ஆனந்தமுண்டாகும். ஆனந்தமோ எப்பொழுதும் சாசுவதமானது; ஆனால் அக்ஞானத்தினால் அது மூடப்பட்டு மறைந்துள்ளது. விஷய சுகங்களில் உனது ஆசை குறையுமளவுக்கு ஈசுவரனிடத்து உனக்குப் பிரேமை அதிகமாகும்.

15. பணத்தை வைத்திருப்பதாலேயே ஒருவன் பணக்காரனாகி விடமாட்டான். பணக்காரனுடைய வீட்டிற்கு அடையாளம் வீட்டின் ஒவ்வொரு அறையிலும் விளக்குகள் எரிவதாகும். ஏழைக்கு எண்ணெய் கிடைக்காதாகையால் அத்தனை விளக்குகள் ஏற்றமாட்டான்.

பகவானது ஆலயமாகிய இச்சரீரத்தை அந்தகாரத்தில் வைத்திருக்கப்படாது. அதில் ஞான விளக்கு ஏற்றப்பட வேண்டும். 'உன் ஹிருதயமாகிய அறையில் ஞான விளக்கை ஏற்றித் தேவியின் திவ்ய முகத்தைக் காண்பாய்.' ஒவ்வொருவரும் ஞானத்தை அடையமுடியும். நான் என்கிற குறுகிய ஆன்மா என்றும் விசாலமான பரமான்மாவென்றும் இரண்டுவகை உண்டு. ஒவ்வொரு சிறு ஆன்மாவும் அதாவது ஜீவான்மாவும் பரமான்மாவோடு சம்பந்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் மின்சார சக்தி இருக்கிறது. இந்த மின்சாரம் கம்பெனியிலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் செலுத்தப்படுகிறது. தகுந்த அதிகாரிகளிடம் மனுச்செய்ய வேண்டியதுதான். அப்போது உன் வீட்டில் மின்சார விளக்கைப் பெறுவாய்.

மனிதனுடைய உண்மை நிலை

16. ஜீவனானது, ஒன்றாகிற ஈசுவரனை ஒட்டிக்கொண்டிராத வரையில் மதிப்பைப் பெறுவதில்லை. ஏனெனில் இவ்வுலகத்துள்ள எல்லாப் பொருள்களும் ஈசுவர சம்பந்தத்தால்தான் மதிப்பைப் பெறுகின்றன.

ஒன்று என்ற இலக்கத்தைப் போன்ற ஈசுவரனை ஜீவன் சார்ந்து நின்று எல்லாக் காரியங்களையும் அவன் பொருட்டுச் செய்து வந்தால் மேலும் மேலும் நற்பயன் எய்துவான். அவ்விதமின்றி ஈசுவரனைப் புறக்கணித்து, தன்னுடைய திருப்திக்கென்றே செய்துகொண்ட பல

காரியங்களை ஒரு ஜீவன் சிந்தித்துப் பெருமையடைந்து கொண்டிருக்கும் பக்ஷத்தில் யாதொரு பலனும் உண்டாகாது.

17. எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது. அது போல, ஈசுவரனில்லாமற்போனால் மனிதன் ஜீவித்திருக்க முடியாது.

18. ஈசுவரனுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் காந்தத்துக்கும் இரும்புக்குமுள்ள சம்பந்தத்தைப் போன்றது. ஆயினும் மனிதர்களை ஏன் ஈசுவரன் ஆகர்ஷிப்பதில்லை? கனமாக மண் மூடிய இரும்புத் துண்டைக் காந்தம் இழுக்காது. அதுபோல, மாயையால் கனமாக மூடுண்ட ஜீவன் ஈசுவரனுடைய ஆகர்ஷணத்துக்குட்படுவதில்லை. ஜலம் விட்டு மண்ணைக் கழுவிப் போக்கிவிட்டால் இரும்பு இழுக்கப்படும். அதுபோல ஜீவனை உலகத்தில் ஆழ்த்துகின்ற மாயையாகிற மண்ணை இடைவிடாது பிரார்த்தனையாலும் வணக்கத்தாலும் கசிந்துருகும் கண்ணீராலும் போக்கினால், அந்த ஜீவன் உடனே ஈசுவரனால் ஆகர்ஷிக்கப்படும்.

19. ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டின் சேர்க்கையானது, ஒரு கடியாரத்தில் மணிக்கொருதரம், மணியைக் காட்டும் முள்ளும் நிமிஷத்தைக் காட்டும் முள்ளும் சேர்வதை ஒக்கும். அவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. ஒன்றன்மீது மற்றொன்று சார்ந்துமுள்ளது. சாதாரணமாக அவை தனித்திருப்பினும், தகுதியான சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போதெல்லாம் ஒன்று சேரும்.

20. பந்தப்பட்ட ஆத்மா மனுஷ்யனாகும்; மாயையாகிய சங்கிலியிற் கட்டுப்படாத ஆத்மா ஈசுவரனாகும்.

21. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் எப்படிப்பட்டது?

ஒரு நீரோட்டத்தில் ஓரப்பாரிசமாக ஒரு பலகையைப் பிடித்தால், அந்நீரோட்டம் இரண்டாகப் பிரிந்தது போலத் தோன்றுகிறது. அது போலவே, மாயையின் உபாதியால் பிரிவற்ற ஒரே பொருள் இரண்டாகப் பிரிந்ததுபோலத் தோன்றுகிறது.

22. நீரும் நீர்க்குமிழியும் ஒன்றேயாம்; அக்குமிழி ஜலத்திலேயே தோன்றி ஜலத்திலேயே மிதந்து, கடைசியில் ஜலத்தோடேயே இரண்டறக் கலந்து போகின்றது. அதுபோல ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றேயாம். அளவு மாத்திரத்தால்தான் அவைகளுக்குள் வித்தியாசம் ஏற்படுகின்றது; ஒன்றுக்கு அளவுண்டு; மற்றொன்றுக்கு அளவில்லை. ஒன்று பிற பொருள்மீது சார்ந்துள்ளது; மற்றொன்று சுயேச்சையையுடையது.

23. நான் தனிப்பட்ட ஜீவன் என்று கூறுவது கங்கைப் பிரவாகத்திற்குள் ஒரு சிறு பாகத்தை அணையிட்டுக் கட்டி அவ்வணைக்குள்ளிருக்கும் நீரைத் தன்னுடைய கங்கை என்று கூறுவதற்கொப்பாகும்.

24. பாதரஸம் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் போடப்பட்ட காரீயம் சீக்கிரத்தில் கரைந்து போகிறது. அதுபோல ஜீவாத்மாவானது

பிரம்மமாகிய ஸமுத்திரத்தில் மூழ்கும்போது தன்னுடைய எல்லையுட்பட்ட தனித்தன்மையை இழக்கின்றது.

25. ஈசுவரன் அனந்தன். ஜீவனோ அந்தமுள்ளது; ஆகவே அந்தமுள்ள வஸ்து அனந்தமான வஸ்துவை எவ்வாறு கிரகிக்க முடியும்? அப்படிக் கிரகிக்கப் பார்ப்பது, உப்பினால் ஆக்கப்பட்ட பிரதிமையொன்று சமுத்திரத்தின் ஆழத்தைக் காண முயல்வது போலாம். அப்படிச் செய்தால், உப்புப் பிரதிமை ஜலத்தில் கரைந்து மறைந்துவிடும். அதுபோல, ஈசுவரனை அளந்து அறிய வேண்டுமென முயல்கிற ஜீவன் தனது தனித் தன்மையை இழந்து, அவனுடன் கலந்து ஒன்றாகி விடுகின்றது.

26. மனித ரூபமாக விளையாடுபவன் ஈசுவரனே. அவன் ஒரு செப்படி வித்தைக்காரன் போல்வான். ஜீவன், ஜகத் என்ற மாயைத் தோற்றமெல்லாம் அவனுடைய பெரிய வித்தைகள். செப்படி வித்தைக்காரன் மட்டுமே உண்மை; வித்தைகள் எல்லாம் மாயை.

27. மானிட சரீரம் ஒரு பானையைப் போன்றுள்ளது. மனம், புத்தி, இந்திரியங்கள் அப்பானையில் போடப்பட்ட ஜலம், உருளைக் கிழங்கு, அரிசி இவைகளுக்குச் சமானம். இவையெல்லாம் அடங்கிய பானையொன்றை அடுப்பின்மீது வைத்தால், அடுப்பின் நெருப்பு அவைகளை வேகச் செய்யும்; அவைகளை ஒருவன் தொட்டால் அவனது விரல்களைச் சுட்டுவிடும்; என்றாலும் அவ்வுஷ்ணம் வாஸ்தவத்தில் பானையினுடையதன்று. ஜலம், அரிசி, உருளைக்கிழங்கு இவைகளினுடையதுமன்று. அதுபோலவே, மனிதனிடம் உள்ள பிரம்மத்தின் சக்தியால்தான் அவனுடைய மனம், புத்தி, இந்திரியங்கள் எல்லாம் தத்தம் வேலைகளைச் செய்கின்றன. அந்தச் சக்தி வேலை செய்யாமல் நிற்கும்போது இவைகளும் தங்கள் தொழில்களைச் செய்யாமல் நின்றொழியும்.

கட்டுண்ட மனிதன்

28. ஜீவனின் உண்மை ஸ்வபாவம் சச்சிதானந்தமே. இவ்வளவு உபாதிகள் எல்லாம் அகங்காரத்தினால் உண்டாயின. ஆதலின் ஜீவனுக்குத் தன் உண்மைச் சுபாவமே மறந்துபோய்விட்டது.

29. ஜீவனுடைய சுபாவம் ஒவ்வொரு உபாதி சேருந்தோறும் மாறுபடும். அலங்காரமான ஆடை யணிந்துகொண்ட மனிதனுக்கு காமாதுரமான பாட்டு அவனை யறியாமலே வருகிறது. காலில் பூட்ஸ் போட்டுக்கொண்டால் மனிதனுக்குச் சற்றுக் கர்வம் உண்டாகிறது; உடனே சீட்டி அடிக்கிறான். அவன் மாடிப்படி ஏறினால் ஐரோப்பியனைப்போலக் குதித்துக் குதித்து ஏறுகிறான்; கையில் பேனா இருந்தால் ஒருவன் கிடைத்த கடுதாசியிலெல்லாம் ஏதையாவது கிறுக்குவான்.

30. பாம்பும் அதன் மேற்சட்டையும் வெவ்வேறானவை; அதுபோல ஆத்மாவும் சரீரமும் வேவ்வேறானவை.

31. ஆத்மா ஒன்றினேடும் பந்தப்பட்டதன்று. இன்ப துன்பம், பாப புண்யம் முதலியன ஒருபோதும் ஒருவிதத்திலும் ஆத்மாவைச் சார்வதில்லே. ஆனல் அவைகள், சரீரமே தாங்களென்று கருதியிருப் போரைச் சார்கின்றன. புகையானது சுவரைக் கரியாக்குமே தவிர அதனல் சூழப்பட்டிருக்கும் வெளியிடத்தைக் கரியாக்காது.

32. ஆத்மா ஒன்றினேடும் பந்தப்பட்டிருப்பதில்லே யென்று வேதாந்திகள் கூறுகின்றனர். பாப புண்ணியம், சுக துக்கம் முதலியன அதை ஒருபோதும் கட்டுப்படுத்துவதில்லே. ஆனல் அவைகள் சரீரத் தின்மீது பற்று வைத்தவர்களேத் துன்பத்துக் குள்ளாக்கும். புகை யானது நாலுபக்கமும் சுவரைக் கரியாக்கும் ; ஆகாயத்தை ஒன்றும் செய்யாது.

33. ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களில் எது மேலோங்கி நிற் கிறதோ அதற்கேற்ப மனிதர்கள் வேறுபட்ட சுபாவமுள்ளவர்களாக இருக்கின்றனர்.

34. எல்லா ஆத்மாக்களும் ஒன்றே. ஆனல் தத்தம் நிலேமை களுக்கேற்ப அவைகள் நான்கு வகைப்படும் :—(1) **பந்த** ஆத்மா, அதாவது கட்டுப்பட்ட ஜீவன் ; (2) **முமுக்ஷு**, அதாவது விடுதலேயடைய முயலும் ஜீவன் ; (3) **முக்த ஆத்மா**, அதாவது விடுதலேயடைந்த ஜீவன்; (4) **நித்ய முக்தன்**, அதாவது எப்போதும் விடுதலே பெற்றுள்ள ஜீவன்.

35. ஒரு செம்படவன் ஆற்றில் வலேயை வீசி அநேக மீன்களேப் பிடித்தான். சில மீன்கள் வலேக்குள் அசைவற்றிருந்து, வெளியே போகக் கொஞ்சமேனும் பிரயத்தனப் படாமலிருந்தன ; வேறு சில மீன்கள் பிரயத்தனப்பட்டுத் துள்ளிக் குதித்தன ; ஆனல் வெளியே போக முடியவில்லே. இன்னும் சில மீன்கள் எப்படியோ வலேயைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விட்டன. உலகத்திலுள்ள மனிதர்களும் இவ்வாறு மூவகையினராக இருக்கின்றனர் :—(1) முத்தியடையப் பிரயத்தனப்படாது பந்தப்பட்டிருப்பவர்கள், (2) பிரயத்தனப்படும் முமுக்ஷுக்கள், (3) விடுதலேயடைந்த முக்தர்கள்.

36. உப்பினுலும் துணியினுலும் கல்லாலும் செய்யப்பட்ட மூன்று வகைப் பதுமைகள் இருக்கின்றன. அவைகளேத் தண்ணீரில் அமிழ்த்தினல் முதலாவது பதுமை கரைந்து தன் உருவத்தை இழந்து விடும். இரண்டாவது தன் உருவத்துடனிருந்தே நிறையத் தண்ணீ ரைத் தன்னுள் கிரகித்துக் கொள்ளும். மூன்ருவதில் தண்ணீரே நுழையாது. முதல் பதுமை பரமாத்மாவிடம் சேர்ந்து அதனேடு ஒன்றி ஐக்கியமாய்விடும் மனிதனேக் குறிக்கும். அவன் முக்த புருஷன். இரண்டாவது பதுமை திவ்யானந்தத்தையும் திவ்ய ஞானத்தையுமுடைய வாஸ்தவமான பக்தனேக் குறிக்கும். மூன்ருவதோ, ஞானமானது கொஞ்சமேனும் நுழையாத ஹிருதயத்தையுடைய உலகப் பற்றுள்ள வனேக் குறிக்கும்.

37. மனிதர்கள் தலேயணையைப் போன்றவர்கள். ஒன்று சிவப்பா யும், மற்ருென்று நீலமாயும், வேருென்று கறுப்பாயுமிருந்தபோதிலும்

அவைகளுக் குள்ளிருக்கும் பஞ்சு ஒன்றே. அதுபோலத்தான் மனிதனும். ஒருவன் பார்வைக்கு அழகாகவிருக்கிருன்; இன்னொருவன் கறுப்பாயிருக்கிருன்; மற்றொருவன் பரிசுத்தனுக விருக்கிருன்; வேறொருவன் கெட்டவனுக விருக்கிருன். என்றாலும் ஈசுவரன் அவர்கள் எல்லாருள்ளும் வாசஞ்செய்கிருன்.

38. பக்ஷணங்களின் மேல்கூடு அரிசிமாவினுல் செய்யப்பட்டிருக்கும். அவைகளின் உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் வேறு வேறு விதமானவையாக இருக்கும். உள்ளிருக்கும் பொருள்களுக்கு ஏற்பப் பக்ஷணங்கள் நல்லவையாகவோ கெட்டவையாகவோ இருக்கும். அதுபோல், மானிட சரீரங்கள் எல்லாம் ஒரேவிதமான பொருளால் ஆக்கப்பட்டிருப்பினும் ஹிருதய சுத்திக்கு ஏற்றபடி மனிதர்கள் வித்தியாசப்படுவர்.

39. ஒரு பிராம்மணனுடைய மகன் பிறவியால் பிராம்மணன் தான். ஆயினும் அப்படிப்பட்ட பிறவிப் பிராமணர்களிற் சிலர் கற்றறிந்த பண்டிதர்களாகவும், சிலர் கோவில் பூசை செய்பவர்களாகவும், பலர் சமையற்காரர்களாவும், இன்னும் பலர் வேசைகள் விட்டு வாயிலிற் புரள்பவர்களாகவும் ஆகின்றனர்.

40. புலியினிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மையே; ஆனுல் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன்னர்ப்போய் நிற்கக் கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது வாஸ்தவம். ஆயினும் நாம் அவர்களுடன் சகவாஸம் செய்வது சரியன்று.

41. எல்லா ஜலத்திலும் ஸ்ரீமந் நாராயணன் இருக்கின்றுன்; என்றாலும், எல்லாம் குடிப்பதற்கு உபயோகப்படுவதில்லை. அதுபோல எல்லா விடங்களிலும் ஈசுவரன் இருக்கிருனென்றாலும் ஒவ்வோரிடமும் மனிதன் போகக்கூடியதன்று. ஒரு ஜலத்தைக் கால்கழுவமாத்திரம் உபயோகிக்கிறோம்; இன்னொன்றை ஸ்நானம் செய்வதற்கு உபயோகிக்கிறோம்; வேறொன்றைக் குடிப்பதற்கு வைத்துக் கொள்கிறோம்; மற்றும் சில கையால் தொடக்கூடாதனவாயு மிருக்கின்றன. அதுபோலப் பல தினுசு இடங்கள் உண்டு. சில இடங்களை அணுகலாம்; சில இடங்களில் உள்ளேயும் பிரவேசிக்கலாம்; வேறு சில இடங்களைத் தூரத்திலிருந்தே விலக்கிவிட வேண்டும்.

42. கீழே சொல்லப்படும் ஐந்தையும் பற்றி ஜாக்கிரதையாகவிரு :—

(1) (பகுத்தறிவும் வாயடக்கமும் இல்லாது) சதா சர்வ காலமும் ஏதாவது பேசிக்கொண்டிருக்கும் வாயாடி.

(2) கபடமுள்ள மனிதன்.

(3) துளசி தளத்தைக் காதுகளில் சொருகிக்கொண்டு தனது பக்தியை வெளிக்குக் காட்டும் மனிதன்.

(4) நீளமாய் முக்காடு போட்டு முகத்தை மூடிக்கொண்டிருக்கும் ஸ்திரீ.

(5) புல்பூண்டுகள் வளர்ந்து மூடியிருக்கும் தேங்கிய குட்டையி லுள்ள தேகாரோக்கியத்துக்கு முற்றிலும் கெடுதலான குளிர்ந்த ஜலம்.

மரணமும் மறு பிறப்பும்

43. பந்தப்பட்ட ஜீவர்கள் மரணத் தறுவாயிலுங்கூட உலக விஷயங்களைப் பற்றியே பேசுகின்றனர். புண்ய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதிலும், கங்கா ஸ்நானம் செய்வதிலும் ஜபதபங்கள் பண்ணுவதிலும் பிரயோஜனமில்லை; மனதில் உலகப் பற்று இருக்கு மானால், அது மரணகாலத்தில் நிச்சயமாக வெளிப்படும். அப்போது அவர்கள் கண்டபடி யெல்லாம் பிதற்றுவார்கள். சாதாரணமாக, ராதா கிருஷ்ணனுடைய திவ்ய நாமத்தைப் பாடும் கிளி, பூனையால் பிடிபடும் போது "கீ, கீ" என்று தனது சுபாவமான குரலெடுத்துக் கத்தும்.

44. ஈசுவரனிடம் பக்தி இராதபடியால்தான் மனிதன் வெகு வாகத் துன்பத்துக்குள்ளாகிறான். அந்திய காலத்தில் ஈசுவரனுடைய ஞாபகம் வரும்படியான வழியை ஒவ்வொருவனும் தேடிக்கொள்ள வேண்டும். அவ்வழி யாதெனில் ஈசுவரனிடம் பக்தி பூண்டொழுகு தலாம். முன்னடியே ஒருவன் இப்படிப்பட்ட பக்தியிற் பழகுவானானால், அது அவனுடைய அந்திய காலத்திலும் நிச்சயமாக மனதிலெழும்.

45. ஜீவனானது இவ்வுலகத்தைவிட்டுப் போகும் தருணத்தில் கடைசியாக எதைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்குமோ அதற்குரிய உடலில் மறுபடியும் வந்து பிறக்கின்றது. ஆதலால் பக்தி சாதனை மிகவும் அவசியமெனத் தோன்றுகிறது. இடையறாத அனுஷ்டானத்தி னால் உலகப் பொருள்களைப் பற்றிய எண்ணம் மனத்தில் உண்டாகாமற் போவதால் ஈசுவரனைப்பற்றிய சிந்தனையே ஆத்மாவினிடம் குடிகொள் ளும். மரணத் தறுவாயிலும்கூட அந்தச் சிந்தனை நீங்குவதில்லை.

46. சூளையில் வேகாத மண் பாண்டம் உடைந்தால் அம்மண்ணை வேறு புதிய பாண்டம் உண்டாக்கக் குயவன் உபயோகிப்பான். ஆனால் சூளையில் வெந்த மண்பாண்டம் உடைந்தாலோ அதன் துண்டுகளை அப்பால் அவனால் உபயோகிக்க முடியாது. அதுபோல ஒருவன் அஞ் ஞானத்துடன் மரணமடைந்தால் மறு ஜன்மம் அடைவான். ஆனால் உண்மை ஞானமாகிய அக்கினியால் வெந்த ஒருவன் பரிபூரணனாக இறப்பானானால் அவனுக்கு மறு ஜன்மம் கிடையாது.

47. வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது மறுபடி யும் முளைக்காது. வேகவைக்காத நெல்தான் முளைவிடும். அதுபோல ஸித்தனான பிறகு ஒருவன் இறப்பானானால் அவன் மறு ஜன்மம் அடைவ தில்லை. அஸித்தனே தான் ஸித்தனாகும் வரையில் திரும்பத் திரும்பப் பிறவி யெடுக்கவேண்டும்.

அத்தியாயம் 2

மாயை

[பிரம்மத்தின் முத்தொழிலில் விளங்கும் மாயை—உலகை மயக்கும் மாயை (அவித்யை)—உலகை உய்விக்கும் மாயை (வித்யை)]

பிரம்மத்தின் முத்தொழிலில் விளங்கும் மாயை

48. மாயையும் பிரம்மமும் முறையே ஓடும் பாம்பையும் சலன மற்றுக் கிடக்கும் பாம்பையும் ஒக்கும். கிரியா சக்தி மாயையாகும்; நிஷ்கிரியா சக்தி பிரம்மம்.

49. ஸமுத்திர ஜலம் சிலவேளை அமைதியாயும், சில வேளை அலைகள் பொங்கிக் கொந்தளித்தும் இருப்பதுபோல பிரம்மமும் மாயையும் இருக்கின்றன. சலிக்கும் சமுத்திரம் மாயை; சலனமற்ற சமுத்திரம் பிரம்மம்.

50. நெருப்புக்கும் அதன் எரிக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம் போன்றது பிரம்மத்துக்கும் சக்திக்குமுள்ள சம்பந்தம்.

51. சிவம், சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்கு அத்தியாவசியமானவை. உலர்ந்துபோன களிமண்ணை வைத்துக் கொண்டு எந்தக் குயவனும் சட்டி பண்ண முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும். அதுபோல சக்தியினுடைய உதவியில்லாமல் சிவனால் மட்டும் சிருஷ்டித் தொழில் நடைபெறாது.

52. மாயையைக் காணவேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்ட நான், ஒருநாள் ஒரு காட்சியைக் கண்டேன். ஒரு சிறிய நீர்த்துளி கொஞ்சம் கொஞ்சமாகப் பரிணமித்து ஒரு சிறு பெண்ணாயிற்று. அப் பெண் ஒரு ஸ்திரீயாகி ஒரு குழந்தையைப் பெற்றாள்; பெற்றதும் அவள் அக்குழந்தையை எடுத்து வாயில்போட்டு விழுங்கிவிட்டாள். இவ்விதம் அவளுக்குப் பிறந்த எல்லாக் குழந்தைகளையும் அவள் விழுங்கினாள். அப்போது அவள் மாயை யென்பதை நானறிந்தேன்.

53. பாம்புக்குப் பல்லில் விஷமிருந்தபோதிலும், அவ்விஷத்தால் அது தீமையை அடைவதில்லை. ஆனால் அது பிறரைக் கடித்தால் அவ்விஷம் கடியுண்டவனுக்கு மரணத்தைத் தரும். இதைப்போல ஈசுவரனிடத்திலும் மாயையுள்ளது. ஆனால் அது அவரைப் பந்தப்படுத்தாமல், ஜகத் முழுவதையும் தனக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

உலகை மயக்கும் மாயை (அவித்யை)

54. மாசு மறுவற்று விளங்கிய ஆகாசத்தில் திடீரென்று மேகங்கள் தோன்றுவதையும் அடுத்த நிமிஷத்தில் அவை காற்றினால் அப்பால்

போக்கப்படுவதையும் ஒருகால் கண்ட பெரிய ஞானி ஒருவர், மிகுந்த குதூகலத்துடன் குதிக்கத் தொடங்கி, "இதைப் போன்றதுதான் மாயையும்; முதலில் அது இருந்ததில்லை. பிரம்மமாகிற நிர்மல ஆகாயத்தில் திடீரென்று தோன்றி, ஜகத் முழுவதையும் உண்டாக்கியது. பிறகு அதே பிரம்மத்தின் காற்றினால் அகற்றப்படுகிறது" என்றார்.

55. ராமன் ஸீதை, லக்ஷ்மணன் ஆகிய மூவரும் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்றனர். ராமன் முதலிலும் ஸீதை நடுவிலும் லக்ஷ்மணன் கடைசியிலுமாகப் போயினர். லக்ஷ்மணனுக்கு ராமனுடைய திவ்யரூபத்தின் முழுத்தோற்றத்தையும் காணவேண்டுமென்ற அபிலாஷை மிகுந்திருந்தது. ஆனால் ஸீதை நடுவிலிருந்தபடியால் அது முடியாத காரியமாயிற்று. அப்பால் அவர் ஸீதாபிராட்டியைச் சற்று நகர்ந்து கொள்ளும்படிப் பிரார்த்தித்தார். அவள் அப்படிச் செய்ததும் லக்ஷ்மணனுக்கு ஸ்ரீராகவனுடைய திவ்ய தரிசனம் நன்றாகக் கிடைத்தது. இவ்வுலகத்தில், பிரம்மம், மாயை, ஜீவன் என்னும் இவைகளுக்கு ஏற்பட்டுள்ள வரிசைக்கிரமமும் இப்படித்தான். மாயையின் பொய்த் தோற்றம் அப்பால் நகராதவரையில் சிருஷ்டிக்கபபட்ட ஜீவனால் ஈசுவரனைக் காணமுடியாது.

56. தொங்கும் விளக்கின் ஸ்படிகத்தை இரவும் பகலும் ஒரு ஸாது நோக்கி மந்தஹாஸ மடைவது வழக்கம். காரணமென்னவெனில், அந்த ஸ்படிக மூலமாய் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பல வர்ணங்களை அவர் காண்பார். இவ்வித வர்ணங்கள் உண்மையானவையல்ல என்பதை அவர் தெரிந்து கொண்டதும் உலகமும் அம்மாதிரியே உண்மையல்லவென்று அறிந்தார்.

57. சிங்கம்போலப் பொய்க்கோலம் பூண்டு கொண்ட ஹரி, பார்க்க வெகு பயங்கரமாகத்தானிருக்கிறான். அவன் தன்னுடைய தங்கை விளையாடுமிடத்துக்குச் சென்று பயங்கரமாகக் கூச்சலிடுகிறான். அதைக் கேட்டு நடுநடுங்கிய அவள், இந்தக் குரூரப் பிராணியிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமே யென்று துக்கத்தோடு உரக்கக் கூச்சலிட்டு அழுகிறாள். ஆனால் ஹரி, தன் வேஷத்தைக் கலைத்துவிட்டதும், பயந்துபோயிருந்த சிறுமி தனது பிரிய சகோதரனைக் கண்டு, "ஓ, அண்ணாதானா இது!" என்று சொல்லிக்கொண்டு அவனிடம் ஓடுகிறாள். மாயையைக் கண்டு மதிமயங்கிப் பயந்து, கண்ட காரியங்களையெல்லாம் செய்யும் லௌகிகர்களுடைய (உலகப் பற்றுள்ளவர்களுடைய) விஷயமும் இதைப்போன்றதுதான். மாயையாகிற பொய்க்கோலத்தில் பிரம்மம் மறைந்து கொள்கிறது. அதை அகற்றிவிட்டால், பிரம்மம் இரக்கமற்ற குரூரமாகத் தோன்றாமல் மானிடர்களுடைய அன்புருவான அந்தர்யாமியாகவே தோன்றும்.

58. ஈசுவரன் எங்கும் நிறைந்திருப்பவரானால் நம்மால் என் அவரைப் பார்க்க முடியவில்லை? பாசியும் நாணலும் மிகுந்திருக்கும் குளத்தின் கரையில் நின்றுகொண்டால் அக்குளத்தில் ஜலமே இல்லையென்றுதான் நீ சொல்வாய். ஜலத்தைக் காண வேண்டுமானால், குளத்

தின் மேற்பரப்பிலிருந்து பாசியை அகற்றவேண்டும். மாயையாகிற திரையால் மூடப்பட்ட கண்களையுடைய நீ ஈசுவரனைக் காண முடிய வில்லையென்று குறை கூறுகிருய். அவரைக்காண வேண்டுமானல் உனது கண்களினின்றும் மாயையாகிய திரையை அகற்று.

59. மேகம் சூரியனை மறைப்பதுபோல, மாயையும் ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் அப்பால் அகன்று போனதும் சூரியன் காணப்படுகிறது. அதுபோல மாயை அகன்றதும் ஈசுவரன் கண் ணுக்குத் தென்படுவர்.

60. ஜலம் கலந்த பாலிலிருந்து, ஜலம் வேறு பால் வேருகப் பிரிக்கக்கூடிய அன்னப்பறவை, பாலை மட்டும் குடித்து நீரைத் தள்ளி விடுகிறது. ஆனல் மற்றப் பறவைகளுக்கு இப்படிச் செய்யச் சக்தி யில்லை. ஈசுவரன் மாயையோடு இரண்டறக் கலந்திருக்கின்ருர். சாதாரண மனுஷ்யர்களுக்கு மாயையினின்றும் தனித்து அவரைக் காணச் சக்தியில்லை. பரமஹம்ஸர்கள் மட்டுமே மாயையை அகற்றி விட்டுச் சுத்தாத்மாவான ஈசுவரனைப் பற்றிக்கொள்ளச் சக்தியுள்ளவர் களாக இருப்பார்கள்.

61. கண்டு பிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய் விடுகிருன். அதுபோல மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆராய்ந்து கண்டு பிடித்துவிட்டால், அது உன்னிடமிருந்து ஓடிப்போய்விடும்.

உலகை உய்விக்கும் மாயை (வித்தை)

62. ஈசுவரனிடம் வித்தை அவித்தை என்ற இரண்டும் உள் ளன. வித்யா மாயையானது மனிதனை ஈசுவரனிடம் சேர்க்கும். அவித்யா மாயையோ அவனை ஈசுவரனிடமிருந்து புறம்பே போகச் செய்யும். ஞானம், பக்தி, வைராக்கியம், பூததயை இவை யெல்லாம் வித்யா மாயையின் தோற்றங்களாம். இவைகளின் உதவியைக் கொண்டுதான் ஒருவன் ஈசுவரனை அடைய முடியும்.

63. மாயைதான் பிரம்மத்தைத் தோற்றுவிக்கின்றது. மாயை யில்லாவிட்டால் பிரம்மத்தை யாரால் அறிந்திருக்கமுடியும்? ஈசுவர னுடைய சக்தியை அறிந்துகொள்ளாமல் போனல் அவனை அறியவே முடியாது.

64. பிரம்மஞானப் பிராப்தி, பரமானந்தபோகம் முதலியவைக ளெல்லாம் மாயையால்தான் நமக்குக் கிடைக்கின்றன. இல்லாவிட்டால் இவையெல்லாம் நமக்கு லபிக்குமெனக் கனவிலும் கண்டவர் எவர்? மாயையிலிருந்துதான் துவைதமும் மற்ற வியவகாரமும் உண்டாகின் றன. மாயைக்கு அப்பால் போகம், போகி என்றவை கிடையா.

65. பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும் போது அக்குட்டிகளுக்குத் தீங்குண்டாவதில்லை. ஆனல் அது ஓர் எலியை அப்படிப் பிடிக்குமானல் அவ்வெலி உடனே இறக்கின்றது. இதைப்போலவே மாயையானது மற்றவர்களை வருத்துவதாயினும் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது.

அத்தியாயம் 3

மாயை—பெண்ணாசை பொன்னாசை*

[காமம்—காமமும் ஆன்ம வாழ்க்கையும்—காமத்தை வெல்லுதல் எங்ஙனம்? செல்வமும் முமுக்ஷுவும்]

காமம்

66. மாயை என்பது என்ன? ஆத்மீய அபிவிருத்திக்கு இடையூறாக விருக்கும் காமந்தான் மாயை.

67. எல்லாவற்றையும் விழுங்கியது மாயையோ அல்லது மாதோ?

68. பெண்ணாசை பொன்னாசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் அனேகந்தரம் அவமானமடைந்தாலும், உலகப்பற்றுள்ளவர்கள் அவைகளை வெறுத்து ஈசுவரனைத் தியானம் செய்யச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்.

69. கிருகஸ்தர்களே, ஜாக்கிரதையாக இருங்கள். ஸ்திரீகளிடம் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம். அவர்கள் வெகு தந்திரமாய் உங்களை வசப்படுத்தி விடுவார்கள்.

70. புகைசூழ்ந்த அறையில் எவ்வளவு ஜாக்கிரதையுடன் நீ இருந்தாலும் உனது சரீரத்தில் கொஞ்சமாவது கரியேறத்தான் செய்யும். அதுபோல, ஒருவன் எவ்வளவு சாமர்த்தியமாயும் ஜாக்கிரதையாயும் இருந்தாலும், ஸ்திரீ சங்கத்தினால் அவனுக்குக் காம இச்சை கொஞ்சமாவது உண்டாவது நிச்சயம்.

71. தாபஜ்வரத்தினால் பிதற்றுகிறவன் சமீபத்தில், குளிர்ந்த ஜலத்தையும் இனிமையான தின்பண்டங்களையும் வைத்திருந்தால் அவன் அத்தண்ணீரை அருந்தாமலும் தின்பண்டங்களை ருசி பார்க்காமலும் இருப்பானா? அது போல, காம ஜ்வரத்தினால் வாதைப்பட்டுச் சிற்றின்

---

*பெண்ணாசையை மனிதர்கள் விட்டொழிக்க வேண்டுமென்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசிப்பதிலிருந்து, பெண்களெல்லாம் கொடியவர்களென்றாவது, அவர்களின்மேல் வெறுப்புக் கொள்ள வேண்டுமென்றாவது சொல்வதாகக் கொள்ளுதல் கூடாது. அவர் தமது வாழ்க்கையிலும், உபதேச மொழிகளிலும் பெண் மக்களை சக்தி - ஜகன்மாதாவின் அவதார ரூபங்களாகவே கருதியுள்ளார். ஆண், பெண் இருபாலரும் சிற்றின்ப விஷயங்களில் அகப்பட்டுப் பகவானை மறக்கக் கூடாதென்பதை வற்புறுத்தவே, ஆத்மலாபமடைய விரும்புவன் பெண்ணாசையை யொழித்தல் வேண்டுமெனக் கூறினார். ஆண் மக்களைப்போன்று பெண் மக்களுக்கும், இவ்வுபதேசம் இன்றியமையாததெனக் கொள்ளல்வேண்டும்.

பங்களில் ஆசைவைத்த உலகப்பற்றுள்ளவன் ரூபலாவண்யங்களின் வனப்பினிடையும் செல்வத்தின் கவர்ச்சியின் மத்தியிலும் இருந்தால் அவனால் ஆசையை அடக்க முடியாது. அவன் பக்தி மார்க்கத்தை விட்டுப் புறம்பே போவது நிச்சயம்.

72. ஒருநாள் ஒருவர் பரமஹம்ஸரிடம் வந்து, "குரு மகராஜ்! நான் எல்லாவற்றையும் தியாகம் பண்ணிவிட்டேன்; என்றாலும் ஈசுவரனைக் காணவில்லையே. அது எதனால்?" என்று கேட்டார்.

பரமஹம்ஸர்: "எண்ணெய் வைக்கும் தோல் குடத்தை நீ பார்த்திருப்பாய். அதிலிருந்து எண்ணெயை எல்லாம் ஊற்றிவிட்டாலும் அக்குடத்தின் அடியிலும் பக்கங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் எண்ணெய் ஒட்டிக்கொண்டே யிருக்கும். ஆதலால் எண்ணெய் வாசனை கடைசி வரையில் இருக்கும். அதுபோல, உன்னிடம் உலகப்பற்று இன்னும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது" என்று பதில் சொன்னார்.

73. பெண்ணாசையும் பொன்னாசையும் மனிதர்களை உலகப் பற்றில் அழுத்தி, ஈசுவரனிடமிருந்து விலகியிருக்கும்படி செய்கின்றன. தன் மனைவி நல்லவளாகவோ கெட்டவளாகவோ இருந்தாலும் அவளைப் பற்றி ஒவ்வொருவனும் புகழ்ந்தே பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது.

74. வேடன் காலடியில் குரங்கு தன் பிராணனை விடுவதுபோல, அழகிய ஸ்திரீயின் காலடியில் மனிதனும் தன் பிராணனை விடுகிறான்.

காமமும் ஆன்ம வாழ்க்கையும்

75. ஈசுவரனை அடைய விரும்புவோரும் ஸாதன மார்க்கத்தில் அபிவிருத்தியைக் கோருவோரும் பெண்ணாசை பொன்னாசையாகிய வலையில் விழாமல் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் ஒருபோதும் பரிபூர்ணர்களாகார்.

76. நித்யானந்தர் ஸ்ரீ சைதன்ய சுவாமியை நோக்கி, "சுவாமி பகவத்ப்ரேமை விஷயமாக நான் உபதேசித்தவை யெல்லாம் என் மனிதர் மனத்தில் யாதொரு பலனையும் கொடுக்கவில்லை?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சைதன்யர், "அவர்கள் ஸ்திரீகளோடு சேர்ந்திருப்பதால், உயர்ந்த உபதேசங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளச் சக்தியற்றிருக்கின்றனர். நித்யானந்தரே! உலகப்பற்றுள்ளவர்களுக்கு மோக்ஷமே கிடையாது" என்று பதில் சொன்னார்.

77. தராசுத் தட்டில் எந்தப் பக்கம் கனமாக இருக்கிறதோ அந்தப் பக்கத்தில் தராசு முள்ளானது மையத்தை விட்டுச் சாய்ந்து விலகியிருக்கும். அதுபோல, பெண்ணாசை பொன்னாசைகளால் கனத்த மனம் ஈசுவரனை விட்டு விலகித் தடுமாறுகிறது.

78. நீர்ப்பானையின் அடியில் வெகு சிறிய துவாரமொன்று இருந்தாலும் அதன் வழியாக ஜலமெல்லாம் ஒழுகிவிடும்; அதுபோல சாதகன் ஒருவனது மனத்தில் உலகப்பற்று வெகு அற்பமாக விருந்தாலும் கூட அவனது பிரயத்தனங்களெல்லாம் வீணாய் முடியும்.

79. உனது காம இச்சைகளை நன்ருய் அடக்கியாளப் பிரயத்தனப்படு. அதில் ஜயமடைந்தால் சரீரத்தில் ஒருவித மாறுபாடு உண்டாகும். அதாவது இந்திரிய சக்திகளை ஆத்ம விஷயத்தில் பிரவர்த்திப்பிக்கும் "மேதை" என்ற ஓர் நாடி வளருகிறது. இந்த 'மேதை' நாடி வளர்ச்சியடைந்த பிறகுதான் ஆத்ம விஷயமான உயர்ந்த ஞானம் உண்டாகும்.

80. பெண்ணசை பொன்னசைகளில் அழுந்திய மனம் பச்சைப் பாக்குக்குச் சமானம். அது பச்சையாக இருக்கும்வரையில் மேல் தோலோடு ஒட்டிக்கொண்டிருக்கும். உள் ஈரம் வற்றியதும் தோல் வேறு பாக்கு வேருகப் பிரிந்து விடுகிறது. ஆட்டிப் பார்த்தால் உள்ளே பாக்குக் குலுங்கும். அதுபோல, பெண்ணசையும் பொன்னசையும் உள்ளே வற்றிப்போனல் ஆத்மா வேறு, சரீரம் வேறு என்பது தெளிவாகும்.

81. விஷய சுகங்களில் சிறிதும் சம்பந்தப்படாத மனம் ஈசுவரனிடம் சென்று அவனிடம் ஒற்றுமைப்படுகின்றது.. இப்படித்தான் பந்தத்தினின்று ஆத்மாக்கள் முக்தி யடைகின்றன. ஈசுவரனிடம் போகும் பாதைக்கு எதிராகச் செல்லும் ஆத்மா பந்தப்படுவதாகும்.

82. பெண்ணசையும் பொன்னசையும் மனத்தை விட்டகலும் போது ஆத்மாவினிடம் வேறு என்ன தங்கியிருக்கும்? பிரம்மானந்தமே அங்குக் குடிகொண்டிருக்கும்.

காமத்தை வெல்வதெங்ஙனம்?

83. விஷப் பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் வெகு ஜாக்ரதையாக இருப்பதைப்போல, உலகத்தில் வாழும் மக்கள் காமத்துக்கும் காசு ஆசைக்கும் உட்படாமல் எப்போதும் ஜாக்கிரதை யுடனிருக்க வேண்டும்.

84. பாம்பைக் கண்டதும் "மானஸ தேவி! வாலைக்காட்டித் தலையை மறைத்துக்கொண்டு ஒதுங்கிப் போ" என்று ஜனங்கள் சொல்வது வழக்கம். அதுபோல இந்திரிய சுகங்களைத் தூண்டும் விஷயங்களினின்றும் விலகியிருப்பது நல்லது. அவைகளில் அழுந்தி வருந்துவதனல் உண்டாகும் அனுபவத்தைக் காட்டிலும், அவைகளுடைய ஸஹவாஸமே இல்லாது செய்துகொள்வது வெகு மேலானது.

85. ஒரு சிஷ்யன் ஒருநாள் பரமஹம்ஸரிடம் வந்து காமத்தை எப்படி ஜெயிப்பது என்று கேட்டான். தான் ஜபதபங்கள் செய்துவந்த போதிலும் தன் மனத்தில் அடிக்கடி கெட்ட சிந்தனைகள் உண்டாவதாகத் தெரிவித்தான். அதற்குப் பகவான் பதில் சொன்னதாவது:—
"ஒரு மனிதன் ஒரு நாயை வெகு பிரியமாக வளர்த்து வந்தான். அவன் அதனேடு கொஞ்சுவான்; விளையாடுவான்; அதைக் கைகளில் தூக்கிக்கொண்டு போவான்; அதை முத்தமிடுவான். இந்த முட்டாள் தனத்தைக் கவனித்த ஓர் அறிஞர், நாய்க்கு அப்படி இடம் கொடுக்கக் கூடாதென்றும், அது பகுத்தறிவற்ற பிராணியாதலால் என்றைக்காவது ஒருநாள் அவனைக் கடித்துவிடுமென்றும் கூறிப்போயினர். நாயின்

எஜமானன் இதைக் கேட்டு அதன்படி நடக்க எண்ணித் தன் மடிமீதிருந்த அந்நாயைத் தூர எறிந்துவிட்டு, அதனோடு இனிமேல் ஒரு போதும் கொஞ்சிக் குலாவுவதில்லை என்று தீர்மானம் பண்ணினன். தன் எஜமானனுடைய மாறிய சிந்தையை நாய் அறியவில்லை யாதலால் அது அடிக்கடி அவனிடம் ஓடி வந்து குலாவத் தலைப்பட்டது. நன்ருய்ப் பலதடவை அடிப்பட்ட பிறகுதான் அது தன் எஜமானனைத் தொந்தரவு செய்வதை விட்டது. உனது நிலைமையும் அப்படிப்பட்டதே. உன் மனத்தில் இதுவரையில் வைத்துப் போற்றி வந்த நாயை நீ விட வேண்டுமென்ருலும் அது உன்னை எளிதில் விடாது. இருந்தாலும் பாதகமில்லை. அந்த நாயோடு இனிமேல் கொஞ்சிக் குலாவாது, உன்னிடம் அது குலாவ வரும்போதெல்லாம் அதை நன்ருய் அடி. காலக்கிரமத்தில் அதனுடைய தொந்தரைகள் உனக்கு முற்றிலும் இல்லாமலே அகன்றொழியும்.

86. பெண்ணாசையும் பொன்னாசையும் உலக முழுவதையும் பாபத்தில் அமிழ்த்திவிட்டன. ஸ்திரீகளை லோகமாதாவின் தோற்றங்களென்று கருதுவாயானல், உனக்கு அவர்களால் துன்பமுண்டாகாது.

பெண்ணாசையும் பொன்னாசையும் நசிக்காதிருக்கும் வரையில் ஈசுவரனைக் காணமுடியாது.

87. தீவிர வைராக்கியத்தினல் ஒருவன் ஈசுவரனை அடைந்துவிட்டால் அவனிடம் உள்ள பெண்ணாசை தானே நசித்துப் போகிறது. அப்போது அவனுடைய மனைவியிடமிருந்துங்கூட ஆபத்து உண்டாவதில்லை. சிறிதும் பெரிதுமான இரண்டு காந்தத் துண்டுகள் ஓர் இரும்புக்குச் சமதூரத்திலிருந்தால் அதை எந்தக் காந்தம் அதிக பலத்துடன் இழுக்கும்? பெரிய காந்தம்தான். ஈசுவரன் பெரிய காந்தம்; அதன் முன்னர், பெண்ணாசையாகிய சிறிய காந்தம் என்ன செய்யச் சக்தியுள்ளதாகும்?

88. பாம்புகள் விஷ ஜந்துக்கள்; பிடிக்கப்போனல் அவைகள் உன்னைக் கடித்துவிடும். ஆனல் வசியப் பொடியால் பாம்பை மயக்கி அதை ஆட்டக் கற்றுக் கொண்டவனுக்கு அதைப் பிடிப்பது சிரமமன்று. ஏழு பாம்புகளை வேண்டுமானலும் அவன் பிடித்துத் தன் கழுத்தில் சுற்றிக்கொண்டு விளையாடக்கூடும். அதுபோல மனதை அடக்கக் கற்றுக் கொண்டவனுக்கு ஆபத்தில்லை.

89. ஒருநாள் ஒரு மார்வாரி கனவான், பரமஹம்ஸரிடம் வந்து, அவருக்கு நேரக்கூடிய செலவுகளுக்காகத் தான் இனமாகக் கொடுக்கும் அனேகமாயிரம் ரூபாயை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டார். அதற்குப் பரமஹம்ஸர் கூடவே கூடாதென்று மறுத்துவிட்டார். "உன் பணம் எனக்கு வேண்டாம். அதை அங்கீகரித்தால் என் மனம் எப்போதும் அதிலேயே இருக்கும்" என்ருர்.

பிறகு அந்தக் கனவான் அப்பணத்தை அதே உபயோகத்துக்காகப் பரமஹம்ஸருடைய உறவினர் ஒருவர் பேரில் வட்டிக்குப் போட்டு வைக்கலாமாவென்று கேட்டார். அதற்கும் பரமஹம்ஸர் மறுத்துவிட்-

டார். "அது இன்னும் கெட்டதாகும். என் பணத்தை இன்னாரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன் என்ற சிந்தனையே எப்போதும் என் மனத்தில் உண்டாகும்" என்றார்.

"மனம் எண்ணெயைப்போலிருந்தால் அது பெண்ணாசை பொன்னாசைகளாகிய தண்ணீரின்மீது மிதக்கும்" என்று பரமஹம்ஸர் சொல்லியிருப்பதைச் சுட்டிக் காட்டி, மறுபடியும் அக்கனவான் பணத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவரைப் பிரார்த்தித்துக் கொண்டார்.

பகவான் பதில் சொன்னதாவது :—"வாஸ்தவந்தான் ; ஆனால் எண்ணெயானது ஜலத்தின்மீது நெடுநாள் மிதக்குமானால் இரண்டும் சேர்ந்திருக்கும் பாகம் நாற்றமெடுத்து விடும். அதுபோலப் பெண்ணாசை பொன்னாசையாகிய ஜலத்தின்மீது நெடுநாள் ஏற்படும் ஸம்பந்தம் நிச்சயமாக அழுகித் துர்நாற்றத்தைக் கொடுக்கும்."

செல்வமும் முமுக்ஷுவும்

90. குருமகராஜ் ஒரு வாலிபச் சிஷ்யனை நோக்கிச் சொன்னதாவது :—"உலகத்திலுள்ள மனுஷ்யர்களைப்போல நீயும் தாஸ விருத்தியை மேற்கொண்டிருக்கிறாய். ஆனால் நீ உன் தாய்க்குத் தொண்டு செய்கிறாய். இல்லாவிட்டால், 'உனக்கு வெட்கமாக இருக்கவில்லையா ?' என்று நான் கேட்டிருப்பேன்." இப்படி அவர் நூறுதரம் சொல்லி "ஈசுவரனுக்கு மட்டும் தொண்டு செய்வாய்" என்று உபதேசித்தார்.

91. ஒரு வாலிபச் சிஷ்யனைக் குறிப்பிட்டு, பகவான் சொன்னதாவது :—"அவன் முகத்தில் மாறுதல் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. ஏதோ கறுப்பான நிழல் படர்ந்திருப்பதுபோற் காணப்படுகிறது. இதெல்லாம் உத்தியோகத்தால் நேர்ந்த விளைவு. கணக்குகளும் இன்னும் எத்தனையோ அலுவல்களும் கவனிக்கப்பட வேண்டுமல்லவா ?

92. பணம் வெகு பலம் படைத்ததோர் உபாதி. ஒருவன் செல்வத்தைப் பெற்றதும் முற்றிலும் மாறிவிடுகிறான்.

வணக்கமும் அமரிக்கையும் உள்ள பிராமணன் ஒருவன் தக்ஷிணேசுவரத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. கொஞ்ச நாட்களுக்குப்பின் அவன் வரவேயில்லை. அவனுக்கு என்ன நேர்ந்ததென்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. ஒருநாள் நாங்கள் பொன்னகருக்குப் படகு மார்க்கமாகச் சென்றோம். படகிலிருந்து கீழே இறங்கும்போது, அந்த பிராம்மணன் பிரபுக்களைப்போல கங்கைக் கரையில் உட்கார்ந்துகொண்டு காற்று வாங்குவதைக் கண்டோம். அவன் என்னைக் கண்டதும், "என்ன சுவாமி, சௌக்கியமா ?" என்று கம்பீர த்வனியுடன் கேட்டான். அவனது குரலில் இருந்த மாறுபாட்டைக் கவனித்ததும் நான் ஹிருதயனிடம் 'இவனுக்கு ஏதோ பணம் கொஞ்சம் கிடைத்திருக்கிறது போலிருக்கிறது ; என்ன மாறுதல் உண்டாகி இருக்கிறது பார்த்தாயா ? என்றேன். ஹிருதயன் விலாவலிக்கச் சிரித்தான்.

93. பணத்தினால் உணவை மட்டும்தான் பெறக்கூடும். ஆகவே அதுவே உன் புருஷார்த்தமெனக் கருதாதே.

94. தங்கள் தங்களுடைய செல்வம், செல்வாக்கு, பெயர், கீர்த்தி, அந்தஸ்து இவைகளைப்பற்றிப் பெருமை பேசிக்கொள்பவர்கள் சிலர் இருக்கின்றனர். இவைகள் எல்லாம் சில நாட்களுக்கு மட்டுந் தான். இறந்த பிறகு இவைகளில் ஒன்றுகூட அவர்களைப் பின் தொடர்ந்து வருவதில்லை.

95. ஈசுவரன் இரண்டு சமயங்களில் புன்னகை புரிகின்றனன். முதலாவது, ஒருவன் கொடும் வியாதியால் அவஸ்தைப்பட்டு மரணத் தறுவாயிலிருக்கும்போது, வைத்தியன் உள்ளே வந்து நோயாளியின் தாயைப் பார்த்து, "பயப்பட வேண்டாம், உன் மகனுடைய உயிரைக் காப் பாற்ற நான் இருக்கிறேன்" என்று சொல்லும்போது.

இரண்டாவது, இரண்டு ஸகோதரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக்கொள்ள அளவுகோலைக் கையில் எடுத்துக்கொண்டு கோடு கிழித்து, "அந்தப் பக்கம் உன்னுடையது, இந்தப் பக்கம் என்னுடை டையது" என்று சொல்லும்போது.

96. செல்வவானென்று பெருமை பேசிக்கொள்வதில் ஒரு காரி யமுமில்லை. நீ பணக்காரன் என்பாயானுல் உன்னைக் காட்டிலும் அதிக பணக்காரர்கள் இருக்கிருர்கள். அவர்களோடு உன்னை ஒப்பிடும்போது நீ கேவலம் பிச்சைக்காரனுகத்தான் தோன்றுவாய். சூரியாஸ்தமனமான தும், மின்மினிப் பூச்சிகள் கிளம்பி, 'உலகத்துக்குப் பிரகாசம் எங்க ளால்தான் உண்டாகிறது' என்று நினைத்துக்கொள்கின்றன. ஆனுல் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கியதும் மின்மினியின் கர்வம் அடங்கிவிடுகிறது. அப்போது 'உலகத்துக்கு நாங்கள்தாம் வெளிச்சத் தைக் கொடுக்கிறோம்' என்று நக்ஷத்திரங்கள் நினைக்கத் தொடங்குகின் றன. ஆனுல் சற்றுநேரம் கழித்து, சந்திரன் ஆகாயத்தில் கிளம்பிவர, அவனுடைய பால்போன்ற பிரகாசத்தில் நக்ஷத்திரங்கள் மங்கிப் போகின் றன. அப்போது தன்னுல்தான் உலகத்துக்கு வெளிச்சமும் சோபையும் சந்தோஷமும் உண்டாகின்றனவென்று சந்திரன் நினைத்துக் கர்வமடை கிருன். ஆனுல் கீழ்த்திசையில் சூரியன் உதித்ததும் சந்திரன் எங்கே போகிருன்? தாங்கள் பணக்காரர்கள் என்று நினைப்பவர்கள் இயற்கை புகட்டும் இந்த உண்மைகளைச் சிந்திப்பார்களானுல் தங்களுடைய செல் வம் செல்வாக்கைப்பற்றி ஒருபோதும் கர்வமடையமாட்டார்கள்.

97. பாலத்தின் கீழே ஜலம் தங்கி நில்லாமல் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கிறது. அதுபோல் பணமானது பற்றற்றவர்கள் கையி னின்றும் செலவாகிக்கொண்டிருக்குமே யல்லாது, அவர்களால் ஒரு போதும் அது சேமித்து வைக்கப்படுவதில்லை.

98. பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் வாஸ்தவமான மனிதன். பணத்தை எப்படி உபயோகிக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் மனிதர்கள் என்ற பெயருக்கு அருகரல்லர்.

அத்தியாயம் 4

மாயை—அகங்காரம்

[அகங்காரத்தால் விளையும் தீமைகள்—அகங்காரத்தை அடக்கும் கஷ்டம்—'பழுத்த' அகங்காரமும் 'பழுக்காத' அகங்காரமும்—அகங்காரத்தை வெல்லுதல் எங்ஙனம்?—ஞானியின் அகம்]

அகங்காரத்தால் விளையும் தீமைகள்

99. சூரியன் உலக முழுவதுக்கும் உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கக்கூடியது என்றாலும் ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்து போகும். அதுபோல மனத்தில் அகங்காரம் குடிகொண்டிருக்கும் வரையில் அதில் ஈசுவர ஜோதி பிரகாசிக்காது.

100. அகங்காரத்தை மேகத்துக்குச் சமானமாகச் சொல்லலாம். ஈசுவரனைப் பார்க்கவொட்டாமல் நம்மை மறைப்பது அதுவே. ஸத்குரு கடாக்ஷத்தால் அகங்காரம் அழியுமானால், பூர்ண ஜ்யோதியுடன் கூடிய ஈசுவரனைக் காணலாம். உதாரணமாக (ஈசுவராவதாரமான) ஸ்ரீராமசந்திரன், (ஜீவனாகிய) லக்ஷ்மணனுக்கு முன்னால் இரண்டு மூன்று தப்படி தள்ளி இருந்தாலும் இடையே வரும் (மாயையாகிய) ஸீதையால் லக்ஷ்மணனுடைய பூர்ண திருஷ்டிக்குப் புலப்படுவதில்லை யென்பதை நீ படத்தில் காணலாம்.

101. "சுவாமி! நமக்கு ஏன் பந்தம் ஏற்பட்டுள்ளது? நம்மால் ஏன் ஈசுவரனைக் காணமுடியவில்லை?" என்று ஒருவர் பரமஹம்ஸரைக் கேட்டார். அதற்குப் பகவான் பதில் சொன்னதாவது:—அகங்காரமென்பது ஜீவனுக்கேற்பட்ட மாயை. ஞானோதயம் உண்டாகாமல் தடுப்பது அவ்வகங்காரமே. 'நான்' என்பது இறந்தால் துன்பமெல்லாம் தொலையும். ஈசுவர கிருபையால், "என் செயலாலாவது யாதொன்று மில்லை" என்னும் கொள்கை மனத்தில் ஸ்திரமாக நிலைக்குமானால், மனிதனுக்கு இந்த ஜன்மத்திலேயே முக்தி யுண்டாகும். அப்பால் அவனுக்கு வேறொரு பயமுமிராது.

102. இந்தத் துணியை என் முகத்துக்கு எதிரே பிடித்துக் கொள்வேனானால், நான் முன்போலவே உன்னருகில் இருந்தாலும் என்னை நீ காணமாட்டாய். அதுபோல ஈசுவரன் மற்றெல்லாப் பொருள்களைக் காட்டிலும் உன்னிடம் நெருங்கியே இருக்கிறான். என்றாலும் உனது அகங்காரமாகிய திரை காரணமாக உன்னால் அவனைக் காணமுடியவில்லை.

103. அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடா. ஜனன மரணமும் நீங்கா.

104. அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு முதலியவற்றைக் குளிர்ந்த ஜலத்துடன் ஒரு பானையில் போட்டால் கையால் தொடலாம். நெருப்பின்மீது பானையை வைத்துச் சூடாக்கிய பிறகு அவைகளைக் கையால் தொடமுடியாது. இந்த உபமானம் ஜீவனுக்கும் பொருந்தும். சரீரம் பானையாகும். செல்வம், ஞானம், குலம், ஜாதி, அந்தஸ்து, செல்வாக்கு எல்லாம் அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு முதலியவற்றுக்குச் சமானம். அகங்காரம் நெருப்பாகும். அகங்காரத்தால் ஜீவன் அவ்வளவு உஷ்ணமுடையதாகின்றது.

105. மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல, ஈசுவர கிருபையானது தற்பெருமையும் கர்வமுமுள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கிநிற்கும்.

106. அகங்காரம் வெகு கெடுதலானது. அது அழியாமல் இருக்கும் வரையில் ஒருவனுக்கு விமோசனம் உண்டாகாது. கன்றுக் குட்டியைப் பார். பிறந்ததும் அது 'ஹம் ஹாய்'—'நான், நான்' என்று கத்துகிறது. இந்த அகங்காரத்தின் பலன் என்ன? அது ஒரு காளையாக வளர்ந்ததும் அதை நுகத்தடியில் பூட்டிக் கனமான பார வண்டிகளை இழுக்கும்படிச் செய்கிறார்கள். பசுமாட்டைத் தொழுவத்தில் கட்டிவைத்திருப்பதுமன்றி, சில சமயங்களில் கொன்றும் தின்கிறார்கள். இந்தத் தண்டனையெல்லாம் இருந்தாலும் அதன் அகங்காரம் மட்டும் அழிவதில்லை. ஏனெனில் அதன் தோலால் செய்யப்படும் முரசமும் 'ஹம்'—நான்—என்ற சப்தத்தைத் தான் கொடுக்கிறது. அதன் நரம்பைப் பருத்திச் சிக்கெடுக்கும் வில் நாணியாகச் செய்யும் வரையில் அது பவ்யதையை அடைவதில்லை. அப்போதுதான் அதன் நரம்பு 'துஹாய்'—'நீ' என்று தொனி செய்கிறது. 'நான்' என்பது அகன்று, அதன் ஸ்தானத்தில் 'நீ' என்பது வரவேண்டும். இப்படி வருவது மனிதனுக்கு ஆத்மஞானம் உண்டான பிறகுதான்.

107. அகங்காரம் மறைந்து தெய்விகத்தில் நீ ஐக்கியமானதும் முக்தியுண்டாகும்.

108. மனிதன் எப்போது விடுதலை பெறுவான்? 'நான்' என்னும் அகம் ஒழிந்த போதுதான் அவன் பிறப்பிறப்பாகிய பந்தத்திலிருந்து விடுபடுவான்.

109. நான் எப்போது முக்தியடைவேன்?—"நான்" என்பது உன்னிடமிருந்து அழியும்போது. 'நான்', 'எனது' என்பன அக்ஞானம். 'நீ', 'உனது' என்பன ஞானம். உண்மையான பக்தன் எப்போதும், "ஈசுவரா! நீதான் கர்த்தா. எல்லாவற்றையும் செய்தருள்பவன் நீயே. நான் ஒரு கருவி. நீ எதைச் செய்விக்கிறாயோ அதையேதான் நான் செய்கிறேன்; இவையெல்லாம் உனது புகழ்; இந்த வீடும் இந்தக் குடும்பமும் உன்னுடையவை; என்னுடையவையல்ல; நீ கட்

டளை யிடுகின்றபடி உழைக்க மட்டும்தான் நான் கட்டமைப்பட்டவன்" என்கிறான்.

அகங்காரத்தை அடக்கும் கஷ்டம்

110. எல்லோருடைய தற்பெருமையும் காலக்கிரமத்தில் அழிந்து போம். ஆனால் தான் ஒரு ஞானி என்று தற்பெருமை கொள்ளும் ஞானியின் ஆணவம் சுலபத்தில் அழிவதில்லை.

111. வெள்ளைப் பூண்டின் சாறு வைக்கப்பட்டிருந்த பாத்திரம் எத்தனை தரம் கழுவித் துடைக்கப்பட்ட போதிலும் நாற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். அகங்காரமானது வெகு பிடிவாதமுள்ள அக்ஞானம். எவ்வளவுதான் சிரமப்பட்ட போதிலும் அதை முற்றிலும் போக்குவது முடியாத காரியம்.

112. அஜீர்ணக்காரனுக்குப் புளிப்பான பண்டங்கள் ஒத்துக் கொள்ளாவென்பது தெரியும்; என்றாலும் அவைகளைக் கண்டதும் அவனுடைய நாக்கில் ஜலம் ஊறுகின்றது. அதுபோல 'நான்' 'எனது' என்ற மனோபாவங்களை ஒருவன் அடக்கியாள முயன்றாலும், செய்கையில் அவனுடைய முதிராத அகங்காரம் தலையெடுக்கின்றது.

113. ஸமாதியை அடைந்து அகங்காரத்தை ஒழித்துவிடக்கூடியவர்கள் சிலரே. பொதுவாக அது அழிவதில்லை. விவேகத்தோடு இடைவிடாது விசாரணை செய். அப்போதும் இவ்வகங்காரம் அடிக்கடி உன்னிடம் வரும். அரசமரத்தை இன்றைக்கு நீ வெட்டு; அது நாளைக்குத் துளிர் விட்டிருப்பதைக் காண்பாய்.

114. கீர்த்தியைத் தேடுபவர்கள் மாயைக்குட்பட்டவர்களே. ஒவ்வொரு காரியமும் ஸர்வேஸ்வரனான ஸர்வ நியந்தாவால் ஆகின்றதென்பதையும் ஸகல கீர்த்திக்கும் அவனைத் தவிர வேறொருவரும் பாத்தியப்பட்டவரல்ல ரென்பதையும் அவர்கள் மறந்து போகின்றனர். "ஈசுவரனே! எல்லாம் உனது செயல்" என்று எப்போதும் சொல்பவர்கள் ஞானிகள். அஞ்ஞானிகளோ, "நான் செய்தேன், நான் செய்தேன்" என்று மதிமயங்கிக் கூறுகின்றனர்.

'பழுத்த' அகங்காரமும் 'பழுக்காத' அகங்காரமும்

115. அகங்காரம் முற்றியதும் முற்றாததுமென இருவகைப்படும். "என்னுடையது ஒன்றுமேயில்லை. என் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும், சரீரத்தால் ஸ்பரிசிப்பதும், இந்தச் சரீரமும் என்னைச் சேர்ந்தவையல்ல. நான் எப்போதும் நித்யமுக்த சுத்தன்" என்ற மனோபாவத்தைக்கொண்ட அகங்காரம் முற்றியது; அதாவது கனிந்ததாகும். "இது என் வீடு; இவள் எனது மனைவி; இது என் சரீரம்; இது என் குழந்தை" என்று நினைக்கும் அகங்காரம் முற்றாதது; அதாவது கனியாததாகும்.

116. "நான் ஈசுவரதாஸன்" என்று சொல்லக்கூடிய அகங்காரம் அதாவது பக்தனுடைய அகங்காரமாகிய வித்யா அகங்காரம் கனிந்த அகங்காரம் என்று பேர் பெறும்.

117. "துஷ்ட அகங்காரம்" என்பது யாது?

"என்னைத் தெரியாதா?" "எனக்கு எவ்வளவு செல்வமிருக்கிறது." "என்னைப்போலப் பணம் படைத்தவர் யாவர்?" "என்னிலும் மேம்பட்டவர் யாவர்?" என்று சொல்கிற அகங்காரம்தான்.

118. மனிதனை உலகப்பற்றுக்குள்ளாக்கி, பெண்ணாசை பொன்னாசைகளை உண்டுபண்ணச் செய்யும் "நான்" என்பது கொடியது. ஜீவனுக்கும் பரம்பொருளுக்கும் நடுவே யிருந்து அவ்விரண்டையும் வேறுபடுத்துவதும் இந்த 'நான்' தான். ஜலத்தில் ஒரு கோலைப்போட்டால் அக்கோலால், ஜலம் இரண்டுபட்டதாகத் தோன்றும். இந்தக் கோல்தான் 'அகம்'; கோலை எடுத்துவிட்டால் ஜலம் ஒன்றுபட்டுவிடுகிறது.

அகங்காரத்தை வெல்லுதல் எங்ஙனம்?

119. 'நான்' என்பதைப்பற்றிச் சிந்தனை செய்து அது இன்னதென்பதைக் கண்டுபிடிக்க முயன்றால், அது அகங்காரத்தைக் குறிக்கும் வார்த்தைதான் என்பது தெரியவரும். அதை அகற்றுவது கடினம். அப்போது "ஏ! துஷ்ட 'நானே!' நீ ஒரு வழியாலும் தொலையாவிட்டால் ஈசுவரதாஸனான 'நான்' என்று இருந்து தொலை" என்று ஒருவன் சொல்கிறான். இதற்குத்தான் 'கனிந்த அகங்காரம்' என்று பெயர்.

120. ஸ்ரீ சங்கராசாரியாருக்கு வெகுகாலம் பணிவிடை செய்து வந்த சிஷ்யன் ஒருவன் இருந்தான். ஆனால் அவனுக்கு அவர் யாதொரு உபதேசமும் செய்யவில்லை. ஒருநாள் சங்கரர் தனித்து உட்கார்ந்திருக்கையில் அவருக்குப் பின்னால் யாரோ வருகிற காலடிச் சத்தம் கேட்டது. "யார் அங்கே?" என்று அவர் கேட்டார். சிஷ்யன் 'நான்தான்' என்று பதில் சொன்னான். உடனே ஆசாரியர் 'நான் என்னும் வார்த்தை உனக்கு அவ்வளவு பிரியமானதாக இருந்தால் அதை அகண்டமாக்கிக் கொள். (அதாவது அனைத்தும் நீயே எனத் தெரிந்துகொள்.) அல்லது அதை அடியோடே விட்டுவிடு' என்றார்.

121. 'நான்' என்பதை உன்னிடமிருந்து போக்க முடியாதென்று நீ கண்டால், 'தாசனான நான்' என்ற தன்மையோடு அது உன்னிடம் இருக்கட்டும். நான் 'ஈசுவர தாஸன்', நான் 'ஈசுவர பக்தன்' என்று உணர்கிற அகங்காரத்தினிடமிருந்து அதிக தீங்கு உண்டாகாது. சர்க்கரைப் பண்டங்கள் அஜீர்ணத்தைத் தரும். ஆனால் கற்கண்டுக் கட்டி இந்த விதிக்கு ஓர் விலக்காகும். அதற்கு அத்தோஷமில்லை. "தாஸனான நான்", "பக்தனான நான்", "குழந்தையான நான்" என்ற மனோபாவமெல்லாம் கோலால் ஜலத்தில் கிழிக்கப்பட்ட கோடுபோலாகும். அது நீடித்திருப்பதில்லை.

122. இனிப்புத் தின்பண்டங்களுக்கிருக்கும் கெட்ட குணம் கற்கண்டுக்கு இல்லை. அதுபோல், தாசாபிமானம், பக்தாபிமானம் இருப்பதில் தீங்கொன்றுமில்லை. அவை ஒருவனை ஈசுவர சமீபத்தில் கொண்டு சேர்க்கும். இதுதான் பக்தியோகமெனப்படும்.

123. "தாஸனான நான்" என்ற மனோபாவத்தைக் கொண்டவருடைய உணர்ச்சியும் ஊக்கமும் எப்படிப்பட்டவை?

அந்த மனோபாவம் வாஸ்தவமும் தீவிரமுமானதானால், அவனிடம் உணர்ச்சியும் ஊக்கமும் வெளித்தோற்றத்தி னளவாகவே இருக்கும். ஈசுவரப் பிராப்தியான பிறகு ஒருவனிடம் "தாஸ" அகங்காரமாவது "பக்த" அகங்காரமாவது இருக்குமானால் அவன் ஒருவருக்கும் கெடுதி செய்யமாட்டான். அகங்காரத்தின் விஷம் முழுவதும் மறைந்து போகிறது. சுவர்ணகுளிகையின் ஸ்பரிசத்தால் முழுவதும் பொன்னாக மாறிவிடுகிற கத்தியானது பழைய உருவத்தைப் பெற்றிருந்தாலும் பிறரைத் துன்புறுத்தக்கூடிய தன்மை அதற்கில்லை.

124. உனக்குக் கர்வமுண்டாகுமானால், "நான் ஈசுவரதாஸன். நான் ஈசுவரன் குமாரன்" என்ற நினைவால் கர்வமடை. மஹான்களுக்குக் குழந்தைகளின் சுபாவம் இருக்கும். அவர்கள் எப்போதும் ஈசுவர ஸந்நிதானத்தில் குழந்தைகளாகவே இருக்கின்றனர். ஆதலால் அவர்களிடம் அகங்காரமே இருப்பதில்லை. அவர்களுடைய சக்தியெல்லாம் ஈசுவரனுடையதே. அவனிடமிருந்துதான் அது அவர்களுக்கு வந்தது. சுயமாக அவர்களுக்கு ஒன்றுமே கிடையாது.

125. எல்லாம் ஈசுவரனுடைய ஆக்ஞையால் நடக்கின்றனவென்றும், தான் ஈசுவரன் கையிலகப்பட்ட கருவியென்றும் எவனுடைய மனத்தில் பதிகின்றதோ அவன் ஜீவன் முக்தனாவான். ஈசுவரா! உனது காரியத்தை நீயே செய்தருள்கிறாய். ஆனால் "நான் செய்கிறேன்" என்று ஜனங்கள் சொல்கின்றனர்!

126. "எனக்குத் தெரியும்", "எனக்குத் தெரியாது" என்று நீ சொல்லிக்கொண்டிருக்கும் வரையில் உன்னை ஒரு ஜீவனாகவே நீ மதிக்கிறாய். லோகமாதாவானவள், "உன்னிடமிருக்கும் அகங்காரத்தை முற்றிலும் நான் அழித்த பிறகுதான் ஸமாதியில் நிர்க்குணப் பிரம்மத்தை நீ காண்பாய்" என்று சொல்கிறாள். அது வரையில் "நான்" என்னும் மனோபாவம் உனக்குள்ளும் உன் முன்னும் இருக்கும்.

127. ஒருவன் தாழ்ந்த சுபாவத்தோடு நெடுங்காலம் போராடியும் ஆத்ம ஞானத்தின் பொருட்டு இடைவிடாது உழைத்தும் ஸமாதி நிலைமையை அடையும்போது அகங்காரம் அடியோடு அகலும். ஆனால் ஸமாதி நிலைமையை அடைவது மிகவும் கஷ்டம். அகங்காரமானது எளிதில் நீங்குவதில்லை. அதனால்தான் நாம் இவ்வுலகில் மறுபடியும் பிறவித் துன்பத்தை அனுபவிக்கிறோம்.

128. ஒருவனுக்கு எவ்வளவு காலம் திவ்ய சக்ஷுஸ் உண்டாகவில்லையோ, எவ்வளவு காலம் பொற்குளிகையால் பித்தளை பொன்னாக

மாறவில்லையோ அவ்வளவு காலம் வரையில் "நான்தான் கர்த்தா" என்ற மதிமயக்கம் இருக்கும்; அது வரையில் "இந்த நற்காரியத்தை நான் செய்தேன். அந்தக் கெட்ட காரியத்தை நான் செய்தேன்" என்ற வித்தியாச மனோபாவம் இருந்து தீரும். இந்த வேறுபாடுற்ற மனோபாவந்தான் சம்ஸாரம் நீடித்திருப்பதற்குக் காரணமாகிய மாயை. நல்வழியில் செலுத்துவதும், ஸத்வகுணம் மேலோங்கி நிற்பதுமாகிய 'வித்யா மாயை'யில் சரணம் புகுந்தாலோ ஒருவன் ஈசுவரனை அடைவான். ஈசுவரனை நேரில் கண்டு அவனுடைய ஸ்வரூபத்தை அறிபவன் தான் உண்மையான முக்தன்; மாயையாகிய ஸமுத்திரத்தைத் தாண்டு பவன். ஈசுவரனே கர்த்தா, தான் அல்லன் என்று உணர்பவன் சரீரத்தோடிருப்பினும் அவன் முக்தனே.

ஞானியின் அகம்

129. அகங்காரம் ஒருபோதும் முற்றிலும் நசித்துப் போகாதா? அல்லிப்பூவின் இதழ்கள் காலக்கிரமத்தில் உதிர்ந்து போனாலும் அவைகளின் வடு மட்டும் இருக்கும். அதுபோல, மனிதனுடைய அகங்காரம் முழுவதும் நசித்துப் போகுமானாலும் அதன் பூர்வ அடையாளங்கள் இருந்தே தீரும். என்றாலும் அவை கெடுதியை உண்டாக்கக்கூடியனவல்ல.

130. ஈசுவரனைக் கண்டவனே ஞானி. அவன் அப்போது குழந்தையின் சுபாவமுடையவனாகிறான். குழந்தைக்குத் தனி வியக்தித்வம் ஒன்று இருக்கிறதென்றாலும் அது வாஸ்தவமானதல்ல; வெளித்தோற்ற மட்டுமே. குழந்தையின் இயல்பு வயது வந்தவனுடையதைப் போன்றதன்று.

131. ஏழாவது பூமியை அதாவது வெகு உயர்ந்த ஸமாதி நிலைமையை அடைந்து, அப்படி அடைந்ததனால் சைதன்யத்தில் இரண்டறக் கலந்த மஹான்களில் சிலர் மனிதர்களுடைய நன்மைக்காக அந்த ஆத்மீய உயரத்திலிருந்து கீழே இறங்கி வருகின்றனர். அப்போது, அவர்கள் வித்யா அகங்காரத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். என்றாலும் இவ்வகங்காரம் வெளித்தோற்றத்தில் மட்டுமே இருக்கும். அது ஜலத்தில் கிழிக்கப்பட்ட கோடுபோலாகும்.

132. எரிந்து கருகிப்போன கயிறு, தன் பழைய உருவத்தோடிருந்தாலும், ஒன்றையும் கட்டுவதற்கு உதவாது. பிரம்மஞானத்தால் எரிக்கப்பட்ட அகங்காரமும் அப்படிப்பட்டதே.

133. யாரோ தன்னைத் துண்டு துண்டாக வெட்ட வருவதாக ஒருவன் கனவு காண்கிறான். பயந்துபோய் உளறிக்கொண்டு அவன் எழுந்திருக்கிறான். கதவைப் பார்க்கிறான். அது உள் பக்கமாகவே தாளிடப்பட்டிருப்பதையும், உள்ளே ஒருவருமில்லை யென்பதையும் தெரிந்துகொள்கிறான். என்றாலும் அவன் நெஞ்சு சற்று நேரம் வரையில் படபடவென்றடித்துக் கொண்டே யிருக்கும். அதுபோல அஹி

மானம் அழிந்துபோன பிறகும் அதன் அடையாளம் கொஞ்சகால மிருக்கும்.

134. ஸமாதி நிலைமையை அடைந்த பிறகும் சிலர் 'நான் பக்தன்' அல்லது 'நான் தாஸன்' என்ற அபிமானத்தை வைத்திருக்கின்றனர். சங்கராசாரியார், பிறருக்கு உபதேசம் செய்வதற்காக வித்யாபி மானத்தை வைத்திருந்தார்.

135. உருவமுள்ளவனும் உருவமில்லாதவனும் ஈசுவரன் ஹனுமானுக்குத் தரிசனம் தந்தருளினன். என்றாலும் ஹனுமான் தான் 'ஈசுவரதாஸன்' என்ற அகங்காரத்தைக் கொண்டவனாகவே இருந்தான். நாரதர், ஸனகர், ஸனந்தனர், ஸனத்குமாரர் ஆகியவர்களுடைய 'விஷயமும்' இப்படிப்பட்டதுதான்.

[நாரதர் முதலியோர் கேவலம் பக்தர்கள் மட்டுமோ அல்லது ஞானிகளும் கூடவா என்ற கேள்வியுண்டாயிற்று.]

அவர்கள் பிரம்ம ஞானத்தை அடைந்தவர்கள் என்றாலும், அவர்கள் ஆற்றோட்டத்தின் சப்தத்தைப்போல் ஈசுவரனைப் பற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டு சென்றனர். இதனால் அவர்களிடத்தும் சிறிது அகங்காரம் இருந்ததென்று தெரிகிறது. உலகத்தாருக்கு தர்மப்பிரசாரம் செய்வதற்குத்தான் இந்த அகங்காரம்.

136. ஒரு நாள் பரமஹம்ஸர் ஒரு சிஷ்யரைப் பார்த்து, "என்னிடம் ஏதாவது அபிமானம் இருப்பதாகத் தெரிகிறதா? எனக்கு ஏதாவது அபிமானமுண்டா?" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

சிஷ்யர்:—"ஆம் கொஞ்சம் இருக்கிறது. அது தேக ஸம்ரக்ஷணம், பக்தி, ஸாதுஸங்கம், ஸத் உபதேசம் என்ற நான்கு காரியங்களின் பொருட்டாகவே இருக்கின்றது. என்றாலும் இந்த அற்ப அபிமானமும் நெடுநாள் தாங்கள் செய்த பிரார்த்தனையின் பயனாக அது தங்களிடம் தங்கியிருக்கிறது என்றும் சொல்லவேண்டும். தாங்கள் அடைந்துள்ளது ஸமாதி நிலை என்றுதான் சொல்லக்கூடும். ஆதலால், தங்களிடம் இருக்கும் அபிமானம், வேண்டுமென்று செய்த பிரார்த்தனையின் பயனெனவே நினைக்கிறேன்."

பரமஹம்ஸர்:—"ஆமாம்; ஆனால் இந்த அபிமானத்தை நான் வேண்டுமென்று வைத்துக்கொண்டிருக்கவில்லை. திவ்விய மாதாவின் சித்தம் அது. பிரார்த்தனைக்குப் பயன் அளிப்பது அவளுடைய இஷ்டம்."

அத்தியாயம் 5

பந்தப்படுத்தும் சாஸ்திர ஞானம்

[பயனற்ற பாண்டித்யம்—வீண்வாதம்—கல்வியின் பயன்]

பயனற்ற பாண்டித்யம்

137. காலஞ்சென்ற கேசவ சந்திரஸேனர், ஒரு நாள் தக்ஷிணே சுவர ஆலயத்திலிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் வந்து, "சுவாமி பண்டிதர்கள் சாஸ்திரங்கள் பலவற்றைப் படித்தபோதிலும், உண்மையான ஆத்ம தத்துவத்தைப்பற்றி ஏன் ஒன்றுமே தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்?" என்று கேட்டார். அதற்குப் பரமஹம்ஸ தேவர், "பருந்தும் கழுகும் ஆகாயத்தில் வெகு உயரத்தில் பறக்கிறதை நீர் பார்க்கிறீர். ஆயினும் அவைகள், எந்தக் குழிகளில் அழுகிய பிணங்கள் கிடக்கின்றனவென்று கண்களைக் கீழே நோக்கிய வண்ணமாகவே இருக்கின்றன. அதுபோல, பண்டிதர்கள் எனப்படு கிறவர்கள், சாஸ்திரங்களைக் கற்றவர்களாக இருப்பினும் காமகாஞ் சனங்களாகிற (காமமும் பண ஆசையும்) உலகப்பற்றுக்களால் பந்தப் பட்ட மனமுடையவராக இருக்கின்றனர். ஆதலால்தான் அவர்கள் மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதில்லை" என்று பதில் சொன்னார்.

138. மனத்தையும் உள்ளத்தையும் பரிசுத்தமாக்கும் ஞானந் தான் உண்மையான ஞானம். மற்றவை யெல்லாம் அஞ்ஞானமாம்.

139. சாஸ்திர ஞானத்தால் மட்டும் என்ன பயன்? பண்டிதர் களுக்குக் கிரந்தங்களிலும் சுலோகங்களிலும் நல்ல பரிச்சயமிருக்க லாம். ஆனல் அவைகளைத் திருப்பித் திருப்பிச் சொல்வதில் பிரயோ சனமென்ன? கிரந்தங்களில் சொல்லியவற்றை யெல்லாம் அனுபவத் துக்குக் கொண்டுவரவேண்டும். ஒருவனுக்கு உலகப் பற்றுள்ள வரை யில், அதாவது காமமும் காசாசையும் இருக்கும் வரையில், கேவலம் படிப்பு மட்டும் ஞானத்தையாவது மோக்ஷத்தையாவது தராது.

140. நமது பண்டிதர்கள் வெகு தாட்டியாகப் பேசுவார்கள். பிரம்மம், ஞானயோகம், தத்துவம், பதார்த்த ஞானம் இன்னும் என்ன வேண்டுமானுலும் அவைகளைப்பற்றி யெல்லாம் அவர்கள் பேசுவார்கள். ஆனல் தாங்கள் அவ்விதம் உபந்யாஸம் செய்பவற்றை அநுபவித் தறிந்தவர் வெகு சிலர்தாம். அவர்கள் ஒன்றுக்கும் உதவாத சார மற்றவர்கள்.

141. 'ஸ, ரி, க, ம, ப, த, நி' என்று வாயால் சொல்வது எளிது. ஆனல் ஒரு வாத்தியத்தில் அந்த ஸ்வராவளி வரும்படி செய் வது சிரமமானது. அதுபோல, தர்மத்தைப்பற்றிப் பேசுவது எளிது; அதை வாழ்க்கையில் நடத்திக் காட்டுவது சிரமமானது.

142. "ராதாகிருஷ்ண" என்ற பகவந் நாமத்தை நெட்டுருப் போட்டு நெடுநேரம் ஒரு கிளி சொல்லும். ஆனால் அது ஒரு பூனையின் கையிலகப்படுமானால், தன் சுய பாஷையை வெளிப்படுத்தி "கீ, கீ" என்று கத்தும். உலகப் பற்றுள்ளவர்கள் லௌகிக வெகுமானங்களை எதிர்பார்த்தவர்களாய், சில வேளைகளில் ஹரிஸ்மரணை பண்ணியும் தான தர்மங்களைச் செய்தும் வருகின்றனர். ஆனால், துரதிருஷ்டம், துக்கம், தரித்திரம், மரணம் இவைகள் நெருங்கும்போது, ஈசுவர ஸ்மரணையும் தானதர்மமும் அவர்களுடைய ஞாபகத்திலிருப்பதில்லை.

143. கிரந்தங்களைப் படிப்பதினால் பகவத்ப்ரேமை உண்டாகுமா? நாட்டில் இன்னின்ன தேதிகளில் இவ்வளவு மழை பெய்யுமென்று, வருஷவாரி மழையைப்பற்றிய முன்னறிவிப்பு இந்துக்களுடைய பஞ்சாங்கங்களில் இருக்கிறது. மழையைப்பற்றி இவ்விதம் தெரிவிக்கும் அப்பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு துளி ஜலங்கூட வராது. அதைப்போல, அநேக நல் விஷயங்கள் கிரந்தங்களில் உள்ளன. ஆனால் அவைகளைப் படித்தால் மட்டும் ஒருவன் தர்மவானாகிவிடமாட்டான். ஈசுவரனுடைய ப்ரேமையைப் பெறவேண்டுமானால், அக்கிரந்தங்களில் சொல்லிய நன்னெறிகளின்படி நடக்கவேண்டும்.

144. பகவானது சந்நிதானத்தில் தர்க்கம், புத்தி, படிப்பு இவைகளில் எதுவும் பிரயோசனப்படமாட்டாது. அங்கே ஊமை பேசும், குருடு காணும், செவிடு கேட்கும்.

145. கிரந்தங்களைப் படித்துவிட்டு மட்டும், ஈசுவரனை விவரிக்க முயல்வது தேசபடத்தில் மட்டும் காசியைப் பார்த்துவிட்டு அந்நகரைப் பற்றி இன்னொருவனுக்கு விவரிக்க முயல்வதை ஒக்கும்.

146. 'கஞ்சா' என்ற வார்த்தையை ஆயிரம் தரம் உச்சரித்தாலும் கஞ்சா மயக்கம் வராது. அதைக் கொணர்ந்து கசக்கிக் குழாயிலிட்டு நெருப்பு வைத்துப் புகையை இழுத்தால்தான் மயக்கம் வரும். "ஈசுவரா, ஈசுவரா" என்று உரத்துக் கத்துவதனால் பயன் என்ன? பக்தி மார்க்கத்தில் இடைவிடாது சென்றால் ஈசுவரனை நிச்சயமாகக் காணலாம்.

147. இந்த ஈசுவர ஞானம், கல்விச் செருக்கும் செல்வச் செருக்குமுள்ளவனுக்கு வருவதில்லை. "இங்கு ஒரு மஹானிருக்கிறார். அவரைப் பார்க்க வருகிறாயா?" என்று அப்படிப்பட்ட செருக்குள்ளவனைக் கேட்டால், அவன், தான் வரமுடியாதென்பதற்கு ஏதாவது சாக்குப்போக்கைச் சொல்வான். தான் பெரிய மனிதன் என்றும், பிறரைப் பார்க்கப்போனால் அந்தஸ்துக்குக் குறைவுண்டாகும் என்றும் அவன் எண்ணிக்கொள்கிறான். அஞ்ஞானத்திலிருந்துதான் கர்வமுண்டாகிறது.

148. அரைப்படிப்புப் படித்தவர்கள் கர்வத்தில் மதிமயங்கிப் போகின்றனர். ஒரு மனிதனுடன் நான் ஈசுவரனைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவன் "ஓ அதெல்லாம் எனக்குத் தெரியும்"

என்றான். "டில்லிக்குப் போனவன் ஒருவன் தான் அங்குப் போனதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு திரிவதுண்டா? பெரிய மனிதன் ஒருவன் தான் பெரியவன் என்று சொல்லிக்கொள்வதுண்டா?" என்று நான் கேட்டேன்.

149. 'கிரந்தம்' என்ற வார்த்தைக்குச் சாஸ்திரம் என்ற அர்த்தம் எப்போதும் இல்லை. ஆனால் 'கிரந்தி' அல்லது முடிச்சு என்ற அர்த்தம் எப்போதும் உண்டு. உண்மையை அறியவேண்டுமென்ற தீவிர புத்தியுடன், அகங்காரத்தை யெல்லாம் விட்டு, கிரந்தங்களைப் படிக்கவேண்டும். வெறுமனே படித்தால் வித்யா கர்வம், மமதை, தான் மேதாவி யென்ற அபிப்பிராயம் ஆகிய முடிச்சுகள்தான் மனத்தில் உண்டாகும்.

150. தண்ணீர் விழுந்ததும் சுவறச் செய்யும் சாம்பல் குவியலுக்குத் தற்பெருமையைச் சமானமாகச் சொல்லலாம். தற்பெருமை கொண்டவன் மனத்தில் ஜபதபங்கள் யாதொரு பலனையும் தருவதில்லை.

வீண் வாதம்

151. குடத்தில் தண்ணீர் மொள்ளும்போது "பக், பக்" என்ற சப்தம் உண்டாகிறது. குடம் நிரம்பியதும், அச்சப்தம் நின்றுவிடுகிறது. அதுபோல, ஈசுவரனைக் காணாதவன், அவ்வீசுவரனைப் பற்றிய வீண் வாதங்கள் நிரம்பியவனாக விருக்கிறான். ஆனால் அவன் ஈசுவரனைக் கண்டதும், மௌனமாகி, அந்தத் திவ்யானந்தத்தையே அனுபவிக்கிறான்.

152. சாதாரண ஜனங்கள் மூட்டை மூட்டையாகத் தர்மத்தைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் எள்ளளவேனும் அதன்படி நடக்கமாட்டார்கள். ஞானியோ, தனது வாழ்நாள் முழுவதும் தர்மத்தையே கடைப்பிடித்து நடப்பினும் அதைப்பற்றிச் சிறிதும் வெளியே பேசமாட்டான்.

153. ஒரு வீட்டில் நடக்கும் விருந்துக்கு அநேகரை அழைத்தால், முதன் முதலில் அவர்கள் போடும் சப்தம் வெகு மும்முரமாகக் கேட்கும். சாப்பிட உட்காரும் வரையில் அச்சப்தம் இருக்கும். இலையில் அன்னம் பரிமாறி, விருந்தினர்கள் சாப்பிடத் தொடங்கியதும் முக்கால்வாசி சப்தம் நின்றொழியும். பக்ஷணம் வரும்போது, அது பரிமாறப்படப்பட இறைச்சல் குறையும். கடைசியாகத் தயிர் பரிமாறும் போது, அதைப் புசிக்கும் "உஸ், உஸ்" என்ற சப்தம் ஒன்றுதான் கேட்கும். விருந்து முடிந்ததும், விருந்தினர்கள் நித்திரைக்குப் போவார்கள்.

ஈசுவரனது ஸமீபத்தில் போகப்போக, விசாரணையும் கேள்வியும் குறைகின்றன. அவனை யணுகியதும், அவனை உண்மை ஸ்வரூபியென நேரில் கண்டதும், எல்லாச் சப்தமும் எல்லா விவாதமும் முற்றிலும்

நின்றொழியும். அப்போதுதான் நித்திரை செய்யும் காலம் வருகிறது. அதாவது, ஈசுவரனுடைய திவ்விய ரூபத்தில் திளைக்கக்கூடிய ஸமாதி நிலைமையில் ஆனந்தம் அனுபவிக்கும் காலம்.

154. தேனீயானது, புஷ்பத்தின் உள்ளே இருக்கும் தேனை அடையாமல் இதழ்களுக்கு வெளியே இருக்கும் வரையில் ரீங்காரம் பண்ணிக்கொண்டு பூவைச் சுற்றிச் சுற்றி வரும். ஆனால் பூவுக்குள் நுழைந்துவிட்டால், அமிருதத்தைச் சப்தம் செய்யாமல் குடிக்கிறது. கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் பற்றி ஒருவன் சண்டையிடும் வரையில் அவன் உண்மைப் பக்தியாகிய அமிருதத்தைச் சுவை பார்க்க மாட்டான். ஆனால் அவன் அதை வாஸ்தவத்தில் ருசிபார்ப்பானானால், வெகு சாந்தனாய் மனச்சமாதான முடையவனாவான்.

155. புதிதாக வேறு பாஷையைக் கற்றுக்கொள்பவன், தான் பேசும்போதெல்லாம், அப்பாஷையின் வார்த்தைகளை உபயோகித்துத் தனது விற்பத்தியை வெளியே காட்டிக்கொள்வான். அந்தப் பாஷையை நன்றாய்க் கற்றுக்கொண்டவனோ அதன் வார்த்தைகளை, தன்னுடைய தாய்ப்பாஷையில் சம்பாஷிக்கும்போது உபயோகிக்கிறதில்லை. சமய வாழ்க்கையில் வெகுதூரம் முன்னேற்றம் அடைந்தவர்களுடைய சுபாவமும் இப்படிப்பட்டதே. அவர்கள் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள்.

156. ஒரு மனிதன் சந்தைக்கடைக்கு வெகு தூரத்திலிருக்கும் போது உருத்தெரியாத "ஹோ" என்ற சப்தத்தை மட்டும் கேட்கிறான். ஆனால் அவன் சந்தைக்குள் நுழைந்தவுடன், ஒருவன் உருளைக் கிழங்குக்கும், மற்றொருவன் கத்தரிக்காய்க்கும் இம்மாதிரியாக மனிதர்கள் பேரம் பண்ணுவதை ஸ்பஷ்டமாகக் கேட்கிறான். ஒருவன் ஈசுவரனிடமிருந்து வெகு தூரத்துக்கப்பாலிருக்கும் வரையில் அவன் குழப்பத்திலும் காரண காரியவாதப் பிரதிவாத அமளியிலுமே இருப்பான். ஆனால் அவன் ஈசுவரனை நெருங்குங்கால் காரணகாரிய வாதம், வாதப் பிரதிவாதம் எல்லாம் நின்றொழிகின்றன. தெய்வீக ரகசியங்களெல்லாவற்றையும் வெகு தெளிவாயும் ஸ்பஷ்டமாயும் அறிந்துகொள்கிறான்.

157. சுடாத மாப்பலகாரம் ஒன்றைக் காய்ந்துகொண்டிருக்கும் நெய்யில் போட்டால், முதலில் படபடவென்ற சப்தமுண்டாகும். அப்பலகாரம் பொரியப் பொரிய அதன் சப்தம் குறைகின்றது. முற்றிலும் பொரிந்துவிட்டால் சப்தமெல்லாம் நின்றொழியும். ஒருவனிடம் ஞானம் அற்பமாய் இருக்கும்வரையில் அவன் வாதம் புரிந்து, பிரசங்கமும் பிரசாரமும் செய்துகொண்டு போகிறான். ஆனால் ஞானம் பூர்த்தியடைந்ததும் இவ்விதமான வீண் படாடோபங்களில் அவன் மனம் செல்வதில்லை.

158. சர்வ சக்திவாய்ந்த கடவுளுடைய அருள் வந்தடையும் போது ஒவ்வொருவனும் தன் குற்றத்தைக் காண்பான். இதனையறிந்து நீ வீணே தர்க்கம் செய்யாதே.

கல்வியின் பயன்

159. சாஸ்திரங்கள் எல்லாம் ஈசுவரனை அடையவேண்டிய வழியைத்தான் காட்டுகின்றன. ஒருதரம் வழி தெரிந்துவிட்டால் அப்பால் சாஸ்திரங்களினால் என்ன உபயோகம்? அப்போது, ஈசுவரனுடன் ஏகாந்தத்தில் லயித்து ஆத்மாபிவிருத்தியைச் செய்துகொள்ளும் காலம் வருகின்றது. ஒரு மனிதனுக்கு அவனூரிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அவன் உறவினன் ஒருவன் தனக்குச் சில சாமான்களை வாங்கியனுப்ப வேண்டுமென்று அக்கடிதத்தில் எழுதியிருந்தான். கடைக்குப் போக விருக்கையில், என்னென்ன சாமான்கள் வாங்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளக் கடிதத்தைப் பார்க்கப்போனான். ஆனால் அது காணமற் போய்விட்டது. நெடுநேரம் தேடிய பிறகு அகப்பட்டது. அதை வெகு ஆவலுடன் எடுத்துப் பார்க்கையில், "ஐந்து சேர் பக்ஷணமும், நூறு மாம்பழமும், எட்டு வேஷ்டியும் அனுப்பு" என்று எழுதப்பட்டிருந்தது. சமாசாரத்தைத் தெரிந்துகொண்டதும், கடிதத்தைத் தூரப் போட்டுவிட்டு, வேண்டிய சாமான்களை வாங்கப் புறப்பட்டான்.

அப்படிப்பட்ட கடிதத்துக்கு ஒருவன் எவ்வளவு காலம் கவலைப்படுவான்? அதன் சமாசாரம் தெரியாமலிருக்கும் வரையில்தானே. சங்கதி தெரிந்துவிட்டால், அதன்படி செய்யப் பிரயத்தனப்பட வேண்டியது தான் அடுத்த காரியம்.

இதைப் போலவே, கிரந்தங்கள் எல்லாம் ஈசுவரனிடம் போகும் வழியை, அதாவது ஈசுவரனை அறிந்து அனுபவிக்கும் மார்க்கத்தைத் தான் சொல்லுகின்றன. ஒரு தரம் மார்க்கம் தெரிந்துவிட்டால், ஈசுவரானுபவமான அந்த முடிவு ஸ்தானத்துக்குப் போகவேண்டிய முயற்சி செய்வதுதான் அடுத்துச் செய்யவேண்டிய காரியம்.

160. ஈசுவரனை அறியும் வித்தை **பர வித்தை** எனப்படும். சாஸ்திரங்கள், தத்துவம், தர்க்கம், இலக்கணம் முதலியனவெல்லாம் மனத்தில் பெருங் குழப்பத்தை யுண்டாக்கும். கிரந்தங்கள் எல்லாம் கிரந்தி (முடிச்சு)களைப் போன்றுள்ளன. பரவித்தையைக் கற்பிக்குமானால்தான் அவைகள் பயன்படுவனவாகும்.

161. ஈசுவர ஞானம் புஸ்தகங்களின் மூலமாயல்லாமல் உண்டாகாதென்று பலர் எண்ணுகின்றனர். ஆனால், சாஸ்திரங்களைப் படிப்பதைக் காட்டிலும் கேட்பது நல்லது. அவைகளைப் பார்ப்பது, அதாவது உண்மையை அனுபவித்தறிவது உத்தமமானது. படிப்பதைக் காட்டிலும் ஆசாரியன் வாயினின்றும் உண்மையைக் கேட்பதால் விஷயம் நன்றாக மனத்தில் பதியும். பார்ப்பதோ இன்னும் நன்றாக விஷயத்தை மனத்தில் பதியச் செய்யும். காசியைப்பற்றிய விவரத்தைப் படிப்பதைக் காட்டிலும் அந்நகரத்தைப் பார்த்தவன் ஒருவன் சொல்வதைக் கேட்பது நல்லது. உத்தமமானது யாதெனில் அந்நகரை நேரில் போய்ப் பார்ப்பதுதான்.

162. இரண்டுவித மனிதர்தான் ஆத்மஞானம் அடையமுடியும். எவரெனின், கல்வியறிவாற் பாதிக்கப்படாத மனதுடையவர்களும், அதாவது பிறருடைய கருத்துக்களை இரவல்பெற்று மூளையில் திணித்து வைத்திராதவரும், எல்லாவற்றையும் கசடறக் கற்ற பிறகு தமக்கு ஒன்றும் தெரியாது என்று அறியப் பெற்றவரும் ஆகிய இவ்விருவகை மனிதரே.

163. தப்பு வழியையும் மூடபக்தியையும் பற்றிப் பலர் பேசிக்கொண்டு வித்யா கர்வமடைகின்றனர். ஆனால் உண்மையான பக்தன், தனக்கு ஈசுவரன் எப்போதும் உதவி புரிவதைக் காண்பான். அவன் சில காலம் வரையில் தப்பு வழியில் போயிருந்தாலும் பாதகமில்லை. அவனுக்கு என்ன வேண்டுமென்பதை ஈசுவரன் அறிகிறான். கடைசியில் அவ்வீசுவரன் பக்தனுடைய இஷ்ட பூர்த்தியையும் செய்து வைக்கிறான்.

164. இரண்டு நண்பர்கள் ஒரு தோட்டத்திற்குள் சென்றனர். உலக விஷயங்களில் ஊன்றிய கவனம் உள்ளவனான சிநேகிதன் உடனே அங்குள்ள மாமரங்களை எண்ணி ஒவ்வொரு மரத்திலும் எத்தனை காய்கள் இருக்கின்றனவென்று பார்த்து, அந்தத் தோட்டத்தின் சுமார் மதிப்பு எவ்வளவிருக்குமென்று திட்டம்போடத் தொடங்கினான். அவனுடைய துணைவனோ, தோட்டக்காரனிடம் சிநேகிதம் செய்துகொண்டு ஒரு மரத்தடிக்குப் போய்ச் சில பழங்களைப் பறித்துத் தின்னத் தொடங்கினான். இவ்விருவரில் அதிக ஞானம் உள்ளவன் எவன்? மாம்பழங்களைச் சாப்பிடு; அதனால் உன் பசியடங்கும். மரங்களையும் இலைகளையும் எண்ணி வீண் கணக்குப் பார்ப்பதில் என்ன பிரயோஜனம்? புத்தி வன்மையால் கர்வம் அடைந்தவன் ஈசுவர சிருஷ்டி எப்படி, எங்கிருந்து உண்டாயிற்று என்பதைக் கண்டுபிடிப்பதில் வீணாய்ப் பாடுபடுகிறான். ஞானத்தினால் அடக்கமுள்ளவனோ ஈசுவரனோடு உறவு கொண்டாடி நிரதிசயாநந்தமாகிற அவனுடைய வரப்பிரஸாதத்தை அனுபவிக்கிறான்.

165. எனது திவ்ய மாதாவாகிற ஸரஸ்வதி தேவியினிடமிருந்து வரும் ஒரே ஒளிக்கிரணம் மஹா மேதாவியான பண்டிதனை நசுங்கிப்போன புழுவுக்குச் சமானமாக அடக்கிவிடும்.

166. "கீதா, கீதா, கீதா" என்று அடுத்தடுத்து அவசரமாக 'கீதா' என்ற வார்த்தையைப் பலமுறை சொன்னால், 'த்யாகம் செய்' என்று பொருள்படும். "தாகி, தாகி" என்ற சப்தம் வருவதுபோலக் கேட்கும். "உலகப் பற்றுள்ளவர்களே! துறவு கொள்ளுங்கள்; எல்லாவற்றையும் விட்டு ஈசுவரனிடம் இருதயத்தை நிலைநிறுத்துங்கள்" என்று கீதையானது ஒரே வார்த்தையில் போதிக்கின்றது.

167. ஸ்ரீ சைதன்ய சுவாமி, தக்ஷிண தேசத்தில் தீர்த்த யாத்திரை செய்தபோது, ஒரு பண்டிதர் கீதை வாசிக்கும்போதெல்லாம், அங்கிருந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த பக்தன் ஒருவனைக் கண்டார். இந்தப் பக்தனுக்கு எழுத்து வாசனையே தெரியாது. கீதையில் ஒரு சுலோகத்தின் அர்த்தத்தைக்கூட அவன் அறியமாட்டான். அப்

படியிருக்க, 'ஏன் கண்ணும் கண்ணீருமாக இருக்கிறு'யென் அவனைக் கேட்டதற்கு, அவன், "எனக்குக் கீதையில் ஒரு வார்த்தைகூடத் தெரியாது என்ருலும், அது படிக்கப்படும்போதெல்லாம், குருக்ஷேத்திர யுத்த களத்தில், ரதத்தில் அர்ஜுனனுக்கு முன்னுல் வீற்றிருந்து, கீதையென்று சொல்லப்படும் மேலான உபதேசங்களை வெளியிட்ட எனது பிரபுவான கிருஷ்ண பரமாத்மாவின் சௌந்தர்ய ரூபம் என் மனக்கண் முன்னுல் தோன்றிய வண்ணமாகவே இருக்கிறது. இதனுல் தான் என் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருகுகின்றது" என்றுன்.

எழுத்து வாஸனையே இல்லாத இவனுக்குப் பூர்ண ஞானமிருந்தது; ஏனெனில், இவனிடம் வாஸ்தவமான ஈசுவரப்ரேமை இருந்தது. அவ்வீசுவரனைத் தெரிந்துகொள்ளக் கூடியவனுக்கவுமிருந்தான்.

அத்தியாயம் 6

மத ஆசிரியர்கள்—பொய்யரும் மெய்யரும்

[பொய்யரின் படுகுழி - மெய்யரின் நெறி நிலை]

பொய்யரின் படுகுழி

168. பிரசாரகனே, உனது அதிகாரத்துக்கு ஏற்ற அடையாளம் உன்னிடமிருக்கிறதா? ஒருவன் மிகத் தாழ்ந்தவனுனாலும், ராஜனுடைய அதிகாரத்துக்குரிய அடையாளத்தை உடையவனுகவிருந்தால், அவன் வார்த்தையை ஜனங்கள் பயந்து மரியாதையுடன் கேட்பார்கள். அவன் தனது அதிகாரத்தைக் காட்டுகிற மாத்திரத்திலேயே கலகம் ஒன்றை அடக்கக்கூடும். அதைப்போல பிரசாரகனே, உனது காரியம் கைகூட வேண்டுமானல், ஈசுவரனிடமிருந்து தெய்வ சக்தியையும் அதிகாரத்தையும் முதலில் பெற்றுக்கொள். இந்தச் சக்தியை நீ பெருதவரையில் வாணுள் முழுவதும் நீ தர்மப் பிரசாரம் பண்ணினுலும் அதெல்லாம் வீணுய் முடியும்.

169. ஈசுவரப்ரேமையில் ஆழ்ந்திருக்க வேண்டுமென்ற ஆவலும் பொறுமையும் ஒருவருக்குமில்லை. விவேகத்தையும் வைராக்கியத்தையும் கவனிப்பார் எவருமில்லை; பக்தி மார்க்கங்களில் (ஸாதனையில்) ஒழுகுவாருமில்லை. ஆனல் புஸ்தகங்களிலிருந்து பெற்ற அற்ப ஞானத்தைக் கொண்டு எல்லாரும் பிரசங்கம் பண்ணவும் பிரசாரம் செய்யவும் அவசரப்பட்டு ஓடுகின்றனர். இது அதியாச்சாரியம்! பிறருக்கு உபதேசிப்பது வெகு சிரமசாத்தியமான காரியம். ஈசுவரனை அடைந்து அவனுடைய அனுமதியைப் பெற்றவனுல்தான் பிறருக்கு உபதேசம் செய்ய முடியும்.

170. ஆத்ம ஞானம் அடையப் பெருத ஒருவன் நல்ல பிரசாரகனும் பிரசங்கியாயும் இருந்தால் அவனைப்பற்றி, என்ன நினைப்பாய்? அவன், தன் பொறுப்பில் வைக்கப்பட்டிருக்கும் பிறருடைய பொருளை வீண் விரயம் பண்ணுபவன் போலாவான். அவன் பிறரிடமிருந்து கேட்டவற்றை அப்படியே மற்றவர்க்கு எளிதாய்ப் போதிப்பான். அவன் வெளியிடும் அபிப்பிராயங்க ளெல்லாம் அவனுடையனவல்ல.

171. ஒரு பேர்போன பிரசங்கி ஒரு ஸமயம் பக்திமார்க்க ஸபையில் பேசிக்கொண்டிருக்கையில், "ஈசுவரனிடம் ரஸமே (இனிமையே) இல்லை. நமது மனத்திலுள்ள ரஸத்தினுல்தான் அவனை ரஸமுள்ளவனுக்க வேண்டும்" என்றுர். ரஸம் என்ற வார்த்தையின் பொருள் ஆனந்தம் அன்பு முதலிய திவ்விய குணங்களென்று அவர் எண்ணியிருந்தார்போலும். இதை நான் கேட்டதும், தனது மாமனுடைய பசுத்தொழுவம் நிறையக் குதிரைகள் இருந்தனவென்று சொல்லிய ஒரு

சிறுவனின் கதை எனது ஞாபகத்துக்கு வந்தது. விஷயம் தெரிந்தவர்கள், குதிரைகளைக் கட்டிவைக்குமிடம்பசுத்தொழுவம் அல்லவென்பதை அறிந்துகொண்டு, சிறுவன் பொய் சொல்கிறானென்று, அதாவது அவன் மாமனிடம் குதிரைகளே இருந்ததில்லையென்று தீர்மானிப்பார்கள்.

ஈசுவரனிடம் ரஸமே இல்லையென்று சொல்வது மதியீனம். இதினின்றும், அந்தப் பிரசங்கிக்குத் தாம் சொல்வது இன்னதென்று கொஞ்சமேனும் தெரியவில்லையென்பதும், பிரேமை ஆனந்தம் ஞானம் இவைகளின் உற்பத்தி ஸ்தானமாகிற ஸர்வேசுவரனை அவர் ஒருபோதும் அறிந்ததில்லை யென்பதுமே வெளியாகின்றன.

172. இப்போதைய தர்மப் பிரசாரகர்கள் கைக்கொண்டிருக்கும் முறைகளைப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

அவர்களுடைய முறை, ஒரே ஒருவனுக்கு மட்டும் போதுமான ஆகாரத்தை வைத்துக்கொண்டு நூறுபேரைச் சாப்பாட்டுக்கு அழைப்பது போலாகும். ஆத்ம விஷயமாக அற்ப அனுபவத்தைப் பெற்று, தான் பிரபல ஆசாரியன் என்று பாசாங்கு பண்ணுவதேயாகும்.

173. முதலில் உன் உள்ளமாகிய கோவிலில் ஈசுவரனைப் பிரதிஷ்டை செய். முதன் முதலில் அவனை உள்ளபடி அறிந்துகொள். பிரசங்கம், உபதேசம் முதலியவை யெல்லாம் பிற்பாடு ஆகட்டும். அதாவது, ஈசுவரனைக் கண்ட பிறகு இவைகளை நீ கைக்கொள்ளலாம். அதற்குமுன் வேண்டாம். ஈசுவரனைப் பற்றியும், பிரம்மத்தைப்பற்றியும் ஜனங்கள் வெகு தாராளமாய்ப் பேசுகிறார்கள்; அப்படிப் பேசும்போதெல்லாம் அவர்களுடைய மனம் உலகப் பற்றுக்களிலேயே உழல்கின்றது. இது எதை ஒக்கும்? ஆராதனைக்கு விக்கிரகமே இல்லாத கோவிலில் பூஜைக்காகச் சங்க முழக்கம் செய்வதை ஒக்கும்.

174. ஒருநாள் பஞ்சவடி வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு தவளை பரிதாபகரமாகக் கத்துவதைக் கேட்டேன். அது ஒருபாம்பினால் பிடிபட்டிருக்க வேண்டுமென்று எண்ணினேன். வெகுநேரம் கழித்து அவ்வழியாகத் திரும்பிவருகையிலும் அந்தச் சப்தம் கேட்டது. புதர்களின் வழியே பார்க்கும்போது, வாயில் ஒரு தவளையைக் கௌவிக்கொண்டிருந்த தண்ணீர்ப் பாம்பு ஒன்று தென்பட்டது. பாம்புக்குத் தவளையை விழுங்க முடியவுமில்லை; வெளியில் விட்டுவிடவும் முடியவில்லை. தவளையின் வேதனையோ சொல்லி முடியாது. அது ஒரு விஷமுள்ள சர்ப்பத்தின் வாயில் அகப்பட்டிருந்தால் மூன்று கத்தலோடு உயிரிழந்திருக்கும். ஆனால் இங்கோ அத்தவளையின் வேதனையும் பாம்பின் வேதனையும் சமானமாகவே இருந்தன. அதுபோல, ஞான சூன்யனான ஒருவன் அசட்டுத் தனத்தால் வேறொருவனை உய்விக்கும் பொறுப்பான காரியத்தில் தலையிட்டுக் கொள்வானானால் இருவருடைய துன்பத்துக்கும் முடிவிராது. சிஷ்யனுடைய அகங்காரம் அகல்வதில்லை. அவனுடைய உலகப் பற்றுக்களும் அறுபடுவதில்லை. யோக்யதை யில்லாத ஆசாரியனை ஒரு சிஷ்யன் அடைந்தால் அவனுக்கு ஒரு

போதும் விடுதலை யுண்டாகாது. ஆனால் தகுந்த ஆசாரியன் கீழ், ஜீவனுடைய அகங்காரம் மூன்று கத்தல்களுடன் நசித்துப் போகும்.

175. பிரசங்கம் பண்ணும்போதெல்லாம், கேட்போருடைய மனத்தை உருக்கக்கூடிய சக்திவாய்ந்த பிரசாரகர் ஒருவர் இருந்தார். ஆனால் அவரிடம் யோக்யதை மட்டும் இல்லை. அவருடைய வாழ்க்கை நிலையைக் கண்டு இரங்கி நான் ஒருநாள் "அநேக ஜனங்களுடைய மனத்தை உருக்கக்கூடிய நீர் ஏன் இப்படித் தகாத காரியங்களைச் செய்கிறீர்?" என்று கேட்டேன். அவர் என்னை நமஸ்கரித்து, "சுவாமி! துடைப்பக்கட்டை எல்லோராலும் புறக்கணிக்கப்படுவதானாலும் தரையிலும் தெருவிலும் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டி அப்புறப்படுத்துகிறதல்லவா?" என்று சொன்னார். அவருடைய வார்த்தைக்கு என்னால் தகுந்த பதில் சொல்ல முடியவில்லை.

176. ஆத்ம ஞானமாகிய தீபத்தினால் பிரகாசிக்கப்படுபவன் எவனோ அவன் மட்டுந்தான் வாஸ்தவமான ஆசாரியன் ஆவான்.

177. பனிக்கட்டியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பவர்களில் பலர் அதைப் பார்த்திருக்கமாட்டார்கள். அதுபோல, அநேக தர்மப்பிரசாரகர்கள் ஈசுவரனுடைய குணாதிசயங்களைப்பற்றிப் புஸ்தகங்களில் படித்திருப்பார்களேயன்றி, தங்களுடைய வாழ்க்கையில் அனுபவ ரீதியாக அவ்வீசுவரனைத் தெரிந்துகொண்டிருக்கமாட்டார்கள். இன்னும் பனிக்கட்டியைக் கண்ணால் பார்த்தவர்களிற் பலர் அதை நாவால் ருசி பார்த்திருக்கமாட்டார்கள். அதுபோல தர்மப்பிரசாரகர்களில் பலர், ஈசுவரனுடைய மஹிமையில் ஒரு சிறிது மட்டும் அறிந்திருப்பரேயன்றி அதனுடைய உண்மையான ஸாரத்தை அறிந்திருக்கமாட்டார்கள். பனிக்கட்டியை ருசி பார்த்தவன் மட்டுமே அது எப்படி யிருக்கிறதென்பதைச் சொல்லக்கூடும். ஈசுவரனுக்கு ஒரு சமயம் தாஸனாயும், ஒரு சமயம் சகாவாயும், ஒரு சமயம் விரகனாயும், ஒருகால் அவனுள் ஐக்கியமானவனாயும் இப்படிப் பலவிதத்திலும் ஈசுவரனோடு எவன் கூடியிருக்கிறானோ அவனால்தான் ஈசுவரனுடைய குணங்கள் இப்படிப்பட்டவை யென்பதைச் சொல்லமுடியும்.

உண்மை ஆசிரியர் யார்?

178. தான் ஆசாரியனென்றும் தர்மஸ்தாபகனென்றும் நினைப்பவன் கனியாத அபிமானமுள்ளவன். ஆனால் ஈசுவரானுபவமடைந்து அதன்பின் அவன் அருளால் பிறருடைய நன்மைக்கு ஒருவன் உபதேசம் செய்யத் தொடங்கினால் பாதகமில்லை. பரீக்ஷித்து மகாராஜாவுக்குப் பாகவதத்தை உபதேசிப்பதற்காக அவ்வித அனுக்கிரகத்தைச் சுகதேவர் பெற்றிருந்தார்.

179. நிறைகுடம் நீர் ததும்பி ஒலிப்பதில்லை. அதுபோல், கடவுளை யறிந்தவன் அதிகம் பேசுவதில்லை. ஆனால் நாரதர் போன்ற மஹான்களுடைய விஷயம் என்ன? நாரதர், சுகதேவர் போன்ற சிலர்,

ஸமாதி நிலையை அடைந்த பிறகு அநேகம் படிகள் கீழே இறங்கி வந்தனர். ஜன ஸமூகத்தினிடம் அவர்களுக்கிருந்த கிருபையாலும் அன்பாலுமே அவர்கள் உபதேசம் செய்ய வந்தனர்.

180. இவ்வுலகத்தில் பரிபூரண மடைந்தவர்கள் இருவகையினர் ஆவர். உண்மையை அறிந்து, பின், பிறரைப்பற்றிய சிந்தனையேயில்லாமல், தாம் மட்டும் அவ்வுண்மையை அனுபவித்துக்கொண்டு மௌனமாக விருப்பவர்கள் ஒரு வகையினர். பெற்ற உண்மையைத் தாம் மட்டும் அனுபவிப்பதில் சந்தோஷமடையாமல் "எம்மோடு உண்மையை அனுபவிக்க வாருங்கள்" என்று மற்றவர்களையும் உச்சஸ்வரத்தில் கூவியழைக்கும் சுபாவமுடையவர்கள் மற்றொரு வகையினர்.

181. நன்றாய் மலர்ந்த புஷ்பத்தின் சுகந்தம் காற்றினால் அடிக்கப்பட்டு வரும்போது அப்புஷ்பத்தினிடம் தேனீ தானே வருகின்றது. சர்க்கரைப் பணியாரம் வைக்கப்பட்டிருக்குமிடத்துக்கு எறும்புகள் தாமே வருகின்றன. தேனீயையோ எறும்பையோ 'வா' என்று இரந்தழைக்கவேண்டிய சிரமம் ஒருவருக்குமில்லை. அதுபோல, ஒரு மனிதன் தூயனாய்ப் பரிபூரணமடைந்தால் அவனுடைய இனிய குணாதிசயம் எங்கும் பரவுகிறது. உண்மையை அறிய ஆவலுள்ளவர்களெல்லோரும் அவனிடம் இயற்கையாகவே வருகின்றனர். ஆகவே, தான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கக்கூடியவர்களைத் தேடிக்கொண்டு போகவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை.

182. சர்க்கரையோ, பணியாரமோ விழுந்தவிடத்துக்கு எறும்புகள் தாமாகவே வருகின்றன. ஆத்மீய இனிமையாகிய கற்கண்டாக நீ மாறினால், பக்தர்களாகிய எறும்புகள் உன்னிடம் தாமே வரும். ஈசுவரனுடைய ஆதேசம் இல்லாமல் உபதேசம் பண்ணிக்கொண்டே போவாயானால், அது பயனற்றதாக முடியும். ஒருவரும் உனது வார்த்தைகளைக் கேட்கமாட்டார்கள். பக்தி மூலமாகவோ, வேறு வழிகளாலேயோ, ஒருவன் முதலில் ஈசுவரனை அடையவேண்டும். அப்பால் அவன் ஈசுவரனுடைய ஆதேசத்தைப் பெறுவானானால் எல்லாவிடங்களிலும் தர்மப் பிரசாரம் செய்ய வல்லவனாவான். இப்படியாகத்தான் ஈசுவரனிடமிருந்து ஒருவன் அருளும் ஆற்றலும் பெறுகிறான். இதற்கு மேல்தான் அவனால், தர்மப் பிரசாரத் தொழிலை மேற்கொண்டு பொறுப்புடன் சரியாகச் செய்யமுடியும்.

183. தீ எரியும்போது, விட்டிற்பூச்சிகள் எங்கிருந்தோ வந்து விழுந்து நசித்துப் போகின்றன. விட்டில்களை அழைக்க நெருப்புப் போகிறதில்லை. பூர்ணர்களுடைய உபதேச ரீதியும் இப்படிப்பட்டதுதான். தங்களுடைய உபதேசத்தைக் கேட்க வரவேண்டுமென்று அவர்கள் பிறரைத் தேடிப்போவதில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான ஜனங்கள் இவர்களிடம் உபதேசம் பெறுவதற்காக எங்கெங்கிருந்தோ வருகின்றனர்.

184. உண்மையான உபதேசம் எப்படியிருக்கும் ?

பிறர்க்கு உபதேசம் செய்வதைவிட்டு, அப்படி உபதேசம் செய்யும் காலத்தை ஈசுவர ஆராதனையில் செலவிட்டால் அதிலேயே போதுமான உபதேசமிருக்கும். தன்னைத் தானே விடுவித்துக்கொள்ள முயல்பவன் தான் உண்மையான பிரசாரகன். இப்படி விடுதலை யடைந்தவனைத் தேடிக்கொண்டு பலவிடங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து அவனால் உபதேசம் பெறவேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். ரோஜாப் புஷ்பம் நன்றாய் மலரும்போது தேனீக்கள் அழைக்கப்படாமலேயே நாலா பக்கங்களிலிருந்தும் வருகின்றன.

185. பிரபல வர்த்தகன் ஒருவனுடைய களஞ்சியத்திலிருந்து தானியத்தை விற்பனைக்கு அளக்கும்போது, அளவுகாரன் இடைவிடாது அளக்கிறான். வர்த்தகனின் வேலைக்காரர்கள் ஓயாமல் தானியத்தை அளவுகாரன் முன்னால் குவித்துக்கொண்டே யிருக்கின்றனர். ஆனால் ஒரு சிறிய கடைக்காரனுடைய பண்டசாலையோ வெகு சீக்கிரத்தில் செலவழிந்து போகின்றது. இம்மாதிரியாகவே, பக்தர்களுடைய மனத்தில் இடையறாமல் உதிக்கும் எண்ணங்கள் ஈசுவரானுக்கிரகத்தால் உண்டாகின்றனவாதலால், அவர்கள் எப்போதும் புதிது புதிதான எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிடக் கூடியவர்களாகின்றனர். சிறிய கடைக்காரனைப் போன்ற, புஸ்தக ரூபமாக ஞானத்தைக் கிரகித்தவர்களுடைய அபிப்பிராயங்களும் எண்ணங்களும் வெகு சீக்கிரத்தில் செலவழிந்து போகும்.

186. மின்சார விளக்கானது ஓரிடத்தில் வெளிச்சமுள்ளதாயும் இன்னோரிடத்தில் மங்கலாயும் இருக்கின்றது. ஆயினும், அவ்விளக்கின் உயிர் நிலையான மின்சாரமோ ஓரே இடத்திலிருந்துதான் வருகிறது. காலங்கள் தோறும் வேறு வேறிடங்களில் தோன்றும் உண்மையான தர்மாசாரியர்களும் இப்படிப்பட்டவர்களே. அவர்கள் ஸர்வேசுரவனாகிய ஓரே இடத்திலிருந்து இடைவிடாமல் பெருகும் ஆத்மப் பிரகாசத்தை வெளிவிடும் அநேக தீபங்களைப் போன்றவராவார்கள்.

187. வீட்டுக்கூரையின் மேலிருந்து விழும் மழை ஜலம், புலித்தலைபோன்ற குழாயின் மூலமாகக் கீழே தரையில் விழும்போது, பார்வைக்குப் புலித்தலையினின்றும் விழுவதாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் ஆகாயத்திலிருந்து விழுகிறது. அதுபோல, தெய்விகம் வாய்ந்த மனிதர்கள் கூறும் உபதேச மொழிகள் பார்வைக்குக் கேவலம் மனிதர்களிடமிருந்து வருவனவாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் ஈசுவர ஸன்னிதியினின்றே வருகின்றன.

அத்தியாயம் 7

லௌகிகர்களும் அவர்கள் வழிகளும்

[லௌகிகர்களின் குணங்கள்—லௌகிக ஜனங்களின் நிலைபெரு அன்பு—லௌகிகர்களும் அவர்களுடைய போலிச்சாதனைகளும்]

லௌகிகர்களின் குணங்கள்

188. மனிதர்கள் இருவகுப்பினர்—மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகித்தவர்(மனுஷ்யர்), அறிவு விளங்கப்பெற்றவர் (மன்-ஹுஷ்யர்). ஈசுவரனை அடையவேண்டுமென்ற ஒரே நோக்கத்தையுடையவர்கள் பின்னர்ச் சொன்ன வகுப்பினர். காமமும் காசாசையும் பிடித்து அலைபவர்கள் மனிதர் என்ற பெயர் மாத்திரம் வகித்தவர்கள்.

189. ஒரு நாடகத்தில் ஒரே மனிதன் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல்வேறு வேஷங்களைப் போட்டுக் கொள்வதைப்போல், உலகத்தில் ஈசுவரனும் வேறு வேறு உருவங்களைத் தரிக்கின்றனன். ஒரே வேஷத்தை வேறு வேறு மனிதர்கள் போட்டுக்கொள்ளக் கூடியதைப்போல, வேறு வேறு ஜீவப்பிராணிகளும் மனித ரூபத்தை அடைந்திருக்கின்றன. அவையெல்லாம் பார்வைக்கு மனிதர்களாகக் காணப்பட்டாலும், சில கிழித்தெறியும் ஓநாய்களாகவும், சில குரூரமான கரடிகளாகவும், சில தந்திரமுள்ள நரிகளாகவும், இன்னும் சில விஷப் பாம்புகளாகவும் இருக்கின்றன.

190. நுண்மையான தானியத்தைத் தள்ளிவிட்டு, பருமனான குப்பை முதலியவைகளைத் தங்கச் செய்வது சல்லடையின் இயல்பு. அதுபோல, நன்மையை விட்டுவிட்டுத் தீமையை மட்டும் கைக்கொள்வது தீயோருடைய குணம். முறத்தின் சுபாவமும் நல்லோருடைய குணமும் இதற்கு முற்றிலும் மாறானவை.

191. சில மனிதர்களுக்கு இவ்வுலகில் பந்தம் ஒன்றுமே இல்லாமற் போனாலும் அவர்கள் வலுவிலேயே ஏதாவதொரு பந்தத்தை உண்டாக்கிக் கொள்கின்றனர். அவர்களுக்கு பந்தமற்ற வாழ்விலோ அல்லது முத்தியிலோ விருப்பமில்லை. தான் காப்பாற்றுவதற்கோ பரிபாலிப்பதற்கோ உற்றார் உறவினர் யாரும் இல்லாத ஒருவன், பூனையோ, நாயோ, குரங்கோ, பக்ஷியோ இவைகளில் ஏதேனுமொன்றை எடுத்துப் பிரியம் பாராட்டி வளர்க்கிறான். இதனால் ஒருவகையான திருப்தியை அடைகிறான். உலகத்தவரை மயக்குவதற்கு ஏற்பட்ட மாயையின் மஹிமை அப்படிப்பட்டது.

192. புதிதாய்ப் பிறந்த கன்றுக்குட்டி, தாயை ஊட்டும் காலத்தைத் தவிர மற்றைப்போதெல்லாம் வெகு குதூகலத்துடன் துள்ளிக்

குதிக்கின்றது. பெரிதாகி, நுகத்தடியை வைப்பதற்காகக் கழுத்தில் கயிற்றைக் கட்டினவுடன் அதன் குதூகலங்களெல்லாம் போய்விடுகின்றன. அதன் முகத்தில் துக்கக்குறி தோன்றுகிறது. உடம்பு எலும்பளவாய் மெலிகின்றது. அதுபோல, உலக விஷயங்களில் ஈடுபடாதிருக்கும் வரையில், ஒரு பையன் கவலையற்றுச் சந்தோஷ சித்தனாகவே இருப்பான். கல்யாணமாகிய உலகக்கட்டு ஒன்று ஏற்பட்டுக் குடும்பப் பொறுப்பை வகிக்கவேண்டி வந்ததும், அவனுடைய சந்தோஷங்களெல்லாம் பறந்தோடி விடுகின்றன. முகத்தில் துக்கம், துன்பம், கவலை இவைகளைக் குறிக்கும் அடையாளங்கள் தோன்றுகின்றன ; தேகாரோக்கியம் குறைகின்றது; முகத்திற்கண்ட அழகு மங்கிவிடுகிறது. நெற்றி சுருங்குகிறது ; காலையில் வீசும் காற்றைப்போலச் சுயேச்சையாகவும், அன்றலர்ந்த பூவைப்போலப் புதிதாகவும், அழகிய பனித்துளியைப் போலப் பரிசுத்தமாகவும், ஆயுளுள்ளளவும் பாலகனாகவே இருப்பவன் எவனோ அவன்தான் பாக்கியவான்.

193. விவாக வாழ்க்கையின் சுகானுபவத்தை இளஞ் சிறுவர்கள் அறியார்கள் ; அதுபோல ஈசுவரானுபவத்தால் உண்டாகும் திவ்யானந்தத்தை லௌகிகர்கள் அறியவேமாட்டார்கள்.

194. வாழ்வில் எத்தனைதான் துன்ப துயரங்களை இடைவிடாது அனுபவித்தாலும், லௌகிகனுடைய மனமானது பெண்ணாசை பொன்னாசைகளை எளிதில் வெறுத்து, ஈசுவரனிடம் திரும்பாது.

195. சமயானுஷ்டான இன்பங்களில் எதனிடத்தும் வெறுப்புக் கொள்வதிலிருந்து ஒருவனை லௌகிகனென நன்கறியலாம். பகவந் நாமத்தை உச்சரிக்கவும் திவ்ய கானத்தைக் கேட்கவும் அவனுக்குப் பிரியம் இருப்பதில்லை. பிறர் அவ்வாறு செய்வதையும் அவன் தடுப்பான். தோத்திரம் செய்வதை நிந்திப்பவனும், தர்ம ஸ்தாபனங்களையும் தர்மாத்மாக்களையும் ஏளனம் பண்ணுபவனும் சரியான லௌகிகனாவான்.

196. சில வேளைகளில் மதப்பற்றுள்ள பக்தர்களுடன் சில லௌகிகர்களும் என்னிடம் வருகின்றனர். லௌகிகர்களுக்கு மத விஷயமான சம்பாஷணையில் விருப்பங் கிடையாது. பக்தர்கள் ஆத்மா, ஈசுவரன் ஆகிய இவைகளைப்பற்றி விரிவாகப் பேசிக்கொண்டிருக்கும் போது, இந்த லௌகிகர்கள் அதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்க மனமிராதவராகி, "எப்போது திரும்பிப் போகிறது? இன்னும் எவ்வளவு நேரம் இங்கிருக்கப் போகிறீர்கள்?" என்று இரகசியமாய்க் கூடவந்தவர்களைக் கேட்கின்றனர். பக்தர்கள், "கொஞ்சம் பொறு, இதோ வந்துவிட்டோம்" என்று சில வேளைகளில் பதில் சொல்வதுண்டு. இதைக்கேட்டு வெறுப்படைந்த லௌகிகர்கள், "நல்லது, நீங்கள் பேசிக்கொண்டிருங்கள் ; உங்களுக்காக நாங்கள் படகில் காத்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து போகின்றனர்.

197. புறாவின் கழுத்தைத் தொட்டுப் பார்த்தால், அது பொறுக்கித் தின்ற தானியத்தைத் தன் இரைப்பைக்குள் நிரப்பி வைத்திருப்ப

தைக் காணலாம். அதுபோல, உலகப் பற்றுள்ளவன் உள்ளத்தில் உலக விஷயங்களே நிறைந்திருப்பதை அவனுடன் சம்பாஷணை செய்வதால் தெரிந்துகொள்ளலாம்.

198. பாபியின் ஹிருதயம் சுருட்டை மயிருக்குச் சமானம். எவ்வளவுதான் முயன்றபோதிலும் உன்னால் சுருட்டையை நேராக்க முடியாது. அதுபோல துன்மார்க்கனுடைய மனத்தைச் சுத்தமாக்கி நல்வழியில் செலுத்துவது சுலபமான காரியமன்று.

199. சந்நியாசியின் சுரைக்குடுக்கை (கமண்டலம்) திவ்விய க்ஷேத்திரங்களை யெல்லாம் தரிசித்திருக்கலாம். என்றாலும் அது பழையபடியே கசப்புள்ளதாகவே இருக்கும். அது போலத்தான் லௌகிகர்களுடைய சுபாவமும்.

200. வேகாத மண்ணைக்கொண்டு குயவன் சட்டிகளும் பானைகளும் செய்கிறான். ஒரு தரம் சுடப்பட்டுவிட்டால் அந்த மண்ணைக் கொண்டு அவனால் ஒன்றும் செய்யமுடியாது. அதுபோல, உலக இச்சைகளாகிய நெருப்பால் வெந்துபோன ஒருவனுடைய மனத்தில் உயர்ந்த மனோபாவங்கள் உண்டாகா; அதை ஓர் அழகிய உருவமாக்கவும் முடியாது.

201. கற்பாறைக்குள் ஜலம் எக்காலத்தும் நுழையாது. அதுபோல, தர்மோபதேசமானது பந்தப்பட்ட ஜீவனிடத்துச் சிறிதும் பதிவதில்லை.

202. கற்பாறைக்குள் இருப்பாணியைச் செலுத்த முடியாது. ஆனால் மண்தரையில் அது வெகு எளிதில் இறங்கிவிடுகிறது. அதுபோல, தர்மோபதேசமானது பந்தப்பட்ட ஜீவனிடத்து யாதொரு பலனையும் உண்டாக்குவதில்லை. விசுவாசமுள்ளவர்களுடைய மனத்திலோ அது வெகு எளிதில் ஆழப்பதிகின்றது.

203. மிருதுவான களிமண்ணில் எந்த உருவமும் எளிதில் பதியும். கருங்கல்லில் ஒரு உருவமும் பதியாது. அதுபோல பக்தனுடைய ஹிருதயத்தில் ஈசுவர ஞானம் தானே பதியும். பந்தப்பட்ட ஜீவனுடைய ஹிருதயத்தில் பதிவதில்லை.

204. பாலத்தின் கீழே ஜலமானது ஒரு பக்கத்தில் நுழைந்து மற்றொரு பக்கமாக ஓடிப்போவதைப்போல, தர்மோபதேசமும் லௌகிகனுடைய ஒரு காது வழியாக நுழைந்து மற்றொரு காது வழியாக வெளியே போய்விடுகின்றது. சிறிதும் அங்குப் பதிவதில்லை.

205. உலகப் பற்றுள்ளவனுடைய சுபாவம் எப்படிப்பட்டது? அவன் குடத்துக்குள்ளிருக்கும் கீரிப்பிள்ளைக்குச் சமானம். கீரியை வளர்ப்பவன், சுவரின்மேல் ஒரு பானையை வைத்து, அதில் கீரியைவிட்டு வைப்பான். மேலும் கயிற்றின் ஒரு நுனியைக் கீரியின் கழுத்தில் தளர்ச்சியாகக் கட்டி, மற்றொரு நுனியில் ஒரு கனமான கல்லைத் தொங்கவிட்டிருப்பான். குடத்தை விட்டு வெளிப்படும் கீரி தன்னிஷ்டம்

போலச் சுவர் வழியே இறங்கி அங்குமிங்கும் உலாவும். ஆனால் எதனாலாவது பயமுற்றால் உடனே அது பானைக்குள் நுழைந்துகொள்ள ஓடுகிறது. என்றாலும் கயிற்றின் நுனியில் கட்டியிருக்கும் கல் அதைக் கீழே இழுத்துத் தள்ளிவிடும். அதுபோல, உலக வாழ்க்கையில் ஏற்படும் துன்ப துயரங்களால் ஒருவன் வைராக்கிய மடைந்து ஈசுவரனுடைய திருவடிகளில் சரணமடையும்படி தூண்டப்படுவானாயினும், உலகப் பற்றும் உலக ஆசைகளுமாகிய கனமான கற்கள் அவனை அதி சீக்கிரம் கீழே இழுத்துத் துன்பத் துயரங்களினிடையே தள்ளுகின்றன.

206. வயல் வரப்புகளில் வைக்கப்படும் மூங்கிலால் பின்னிய மீன் பறியின் வழியே பளபளவென்று மின்னிக் கொண்டுபோகும் ஜலத்தைப் பார்த்து ஆனந்தப்பட்டு, சிறுமீன்கள் அதனுள் புகுகின்றன. புகுந்தபின் வெளியே வருவதற்கில்லாமல் அதனுள் அகப்பட்டு விடுகின்றன. அதுபோல், முட்டாள்கள் மாயைத் தோற்றத்தால் மதிமயங்கி உலகவலையில் புகுகின்றனர். வலையினின்று வெளிவருவதைக் காட்டிலும் அதனுள் போவது எளிதல்லவா ? சிறு மீன்களைப்போல அவர்கள் உள்ளே அகப்பட்டுக்கொண்டு விடுகின்றனர்.

207. கொடிய துன்ப துயரங்களை மிகுதியாக அனுபவித்தாலும், லௌகிகர்களுக்கு நற்புத்தி உண்டாவதில்லை. ஒட்டகங்களுக்கு முட்செடிகளில் ஆசை அதிகம். அவைகளைத் தின்னத்தின்ன ஒட்டகங்களின் வாயிலிருந்து ரத்தம் அதிகமாகப் பெருகும். என்றாலும், அவைகள் முட்செடிகளைத் தின்பதை விடுவதில்லை.

அதைப்போல அநேகரால் ஏமாற்றப்பட்டபோதும், ஆபத்துக்கள் அநேகம் வந்துற்றபோதும் கஷ்டப்படுகிறார்கள். அடுத்த கணத்தில் எல்லாவற்றையும் மறந்து உலக விஷயங்களையே தேடி அலைகின்றார்கள். தன் மனைவி இறந்து விடுகிறாள். அல்லது தன்னைவிட்டு ஓடிவிடுகின்றாள். ஆனாலும் உடனே திரும்பவும் விவாகம் செய்துகொண்டு விடுகின்றான் ! அல்லது அவனது குழந்தை இறந்து விடுகிறது ; கதறி அழுகின்றான் ! பெரிதும் துக்கசாகரத்தில் ஆழ்ந்து வருந்துகிறான். என்றாலும் மறு கணத்தில் அந்தக் குழந்தையின் நினைவே இல்லாது வாழ்க்கை நடத்துகிறான் ! குழந்தையைப் பறிகொடுத்த தாய் துக்கத்தால் சோகமாகி விடுகின்றாள். ஆனால் சற்றுப் பிறகு அவள் தன் நகைகளைச் சரிபடுத்துவதிலும், நல்ல புடவைகள் உடுத்துவதிலும், வாசனை சோப்பைத் தேடுவதிலும் ஈடுபடுகிறாள் ! பெண் குழந்தைகளின் விவாகங்களால் பெற்றோர் தரித்திர தசையை அடைந்துவிடுகிறார்கள் ; பின்னும் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்துகொண்டேதான் இருக்கின்றன ! இவர்கள் வழக்கு வியாச்சியங்களில் சகல பொருள்களையும் இழந்துவிட்டு வருந்தினாலும் மேலும் வழக்கு சம்பந்தமாக நீதி ஸ்தலத்திற்குப் போவதை நிறுத்துகிறதில்லை. குழந்தைகளைக் காப்பாற்ற வழியில்லாமற் போனாலும் ஒவ்வொரு வருஷமும் குழந்தைகளைப் பெற்றெடுக்கத் தவறுவதில்லை. என்ன ஆச்சரியம் !

சில சமயம் அந்த லௌகிகர்களுடைய ஸ்திதி, தவளையைப் பிடித்துக்கொண்டு விழுங்க முடியாமலும் வெளியே விட்டுவிட முடியாமலும் தவிக்கும் பாம்பின் நிலைமைக்குச் சமானமாக இருக்கும். சதைப்பற்றில்லாமல், மேற்றோலும் உட்கொட்டையுமே உள்ள மரிமாங்காயைப்போல உலகத்தினிடத்து உண்மையானது எதுவும் இல்லை என்பதை அவர்கள் அறிவார்கள். என்றாலும், அதைத் துறந்து ஈசுவரனிடம் மனத்தைச் செலுத்தச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர்.

அவர்களிடம் இன்னுமொரு விசேஷமுண்டு. உலக ஸஹவாஸங்களினின்றும் அவர்களைப் பிரித்து, ஸாது ஸங்கத்தினிடையே, நல்லுபதேசங்களைக் கேட்கும்படி கொண்டுவந்து விட்டால், அவர்கள் அவ்விடத்தில் எப்போதும் நிம்மதியற்ற மனமுடையவராய்க் கவலையுடன் தவிப்பார்கள். மலத்தில் உற்பத்தியாகி அங்கேயே விருத்தியாகும் புழுக்களைப் புதிதாகச் சமைத்த சுத்தமான சோறுள்ள பானையில் வைத்தால், அவை இறந்துபோம்.

208. ஒரு தரம் தயிர் தோய்த்த பானையில் ஒருவரும் பாலை வைப்பதில்லை. வைத்தால் பால் தோய்ந்துபோகும். அப்பானையைச் சமையல் பாத்திரமாகவும் உபயோகிப்பது கிடையாது. ஏனென்றால் அடுப்பில் வைத்ததும் அது வெடித்துவிடும். ஆகவே அது உபயோக மற்றதற்குச் சமானமாகும். அனுபவம் முதிர்ந்த ஸத்குருவானவர், உயர்ந்த மதசம்பந்தமான ரகஸியங்களைக் கேவலம் லௌகிகனுக்கு உபதேசிப்பதில்லை. உபதேசித்தால் அவன், அவைகளின் பொருளைச் சரியானபடி கிரகிக்காமல், தன் காரியத்துக்கு அனுகுணமாகும்படி துர்வினியோகம் செய்வது நிச்சயம். சரீர சிரமம் சிறிது உண்டாகும்படியான கைங்கரியம் ஏதேனும் செய்யும்படியும் அவர் அவனைத் தூண்டமாட்டார். ஏனெனில் குருவானவர் தன்னை வேலை வாங்குகிறார் என்று அவன் நினைப்பான்.

209. உலகத்தைத் துறக்கவேண்டுமென்று மனிதன் நினைத்தாலும் அவ்வெண்ணத்துக்கு இடையூறாக அவனது பிராரப்த கர்மம், சம்ஸ்காரங்கள் முதலியன குறுக்கே வந்து நிற்கும். ஒரு ஸமயம், யோகி ஒருவர், ஓர் அரசனைத் தம்மருகே உட்கார்ந்து ஈசுவரனைத் தியானம் செய்யும்படி சொன்னார். அதற்கு அவ்வரசன், "சுவாமி! அது என்னால் முடியாத காரியம். நான் உமது ஸமீபத்தில் இருப்பேன் என்றாலும் என் மனம் போகத்திலேயே செல்லும். நான் இந்தக் காட்டில் இருந்தால், இங்கு ஒரு ராஜ்யம் உண்டானாலும் உண்டாகலாம். ஏனெனில், நான் இன்னும் போகம் அனுபவிக்க வேண்டியவனாகவே யிருக்கிறேன்" என்று பதில் சொன்னான்.

லௌகிகர்களுடைய நிலைபேறு அன்பு

210. லௌகிகர்கள், உலக வெகுமதிகளைப் பெறும் நோக்கத்தோடு அநேக தானதர்மங்களைச் செய்கின்றனர். ஆனால் அவர்களுக்குத்

துரதிருஷ்டம், துக்கம், தரித்திரம் இவைகள் வரும்போது, அவர்களுடைய தானதர்மமும் பக்தியும் ஓடிப்போய்விடுகின்றன. நாள் முழுவதும், "ராதாகிருஷ்ண, ராதாகிருஷ்ண" என்று திவ்ய நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் கிளியானது பூனையால் பிடிபட்டதும், அந்த திவ்ய நாமத்தை மறந்து "கீ கீ" என்று கத்தும். லௌகிகர்களுடைய சுபாவம் இந்தக் கிளியின் சுபாவத்தைப் போன்றதாகும்.

ஆதலால்தான் அப்படிப்பட்டவர்களுக்குத் தர்மோபதேசம் செய்வதால் பயன் ஏற்படாது என்கிறேன். எத்தனைதான் உபதேசங்களைக் கேட்டபோதிலும் அவர்கள் முன்போலவே உலகப்பற்றுள்ளவர்களாக இருப்பார்கள்.

211. வில் மெத்தையானது, ஒருவர் உட்கார்ந்தவுடன் தாழ்ந்து எழுந்தவுடன் பூர்வ நிலைமையை அடையும் சுபாவமுள்ளது. லௌகிகர்களுடைய சுபாவமும் அப்படிப் பட்டதே. தர்மோபதேசங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் வரையில் அவர்கள் தர்ம சிந்தனையுள்ளவராக இருப்பார்கள். உலக வியவகாரங்களில் தலையிட்டுத் தங்கள் தினசரி வாழ்க்கையில் இறங்கியதும் அவர்கள் அந்த தர்மோபதேசங்களை மறந்து, பழையபடி மனத்தூய்மை யில்லாதவர்களாகி விடுகின்றனர்.

212. கொல்லன் உலையில் இரும்பானது காய்ச்சப்படும்போது அக்கினிச் சிவப்பாக இருக்கும். உலையிலிருந்து எடுத்தவுடன் கறுநிறமாகிவிடும். அதுபோலத்தான் லௌகிகர்களும். ஒரு கோவிலிலோ அல்லது ஸாதுஸங்கத்திலோ இருக்கும்வரையில் அவர்கள் தெய்வ உணர்ச்சியோடு இருப்பார்கள். அப்படிப்பட்ட விடங்களிலிருந்து வெளிவந்தவுடன், அந்த பக்திப் பெருக்கானது நழுவிவிடுகின்றது.

213. ஈயானது ஒரு சமயம் அழுகிக் கிடக்கும் புண்மீதும் இன்னொரு சமயம் ஈசுவரனுக்குப் படைப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் நைவேத்யத்தின்மீதும் உட்காரும். அதுபோல, லௌகிகனுடைய மனம் ஒரு சமயம் பக்தி விஷயத்திலும் இன்னொரு சமயம் பெண் பொன் சுகத்திலும் பதிகின்றது.

214. லௌகிகனுடைய மனம் சாணிக்குழியில் உள்ள புழுவுக்குச் சமானம். அப்புழு அங்கேயே எப்போதும் வாழ்கின்றது; அங்கேயே வாழவும் பிரியப்படுகின்றது. யாரேனும் ஒருவர் அப்புழுவை அங்கிருந்து எடுத்துப்போய் ஒரு தாமரைப் பூவின்மேல் வைப்பாரானால் அந்த நல்ல வாசனையாலே அது மரணமடையும். அதுபோல, லௌகிகனானவன் உலக விஷய இச்சைகளாகிற அசங்கியத்திலிருந்து ஒரு நிமிஷங்கூட விலகி வசிக்க இயலாதவனாவான்.

215. ஈசுவரனைப் பற்றி லௌகிகர்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர் தெரியுமா? விளையாடும்போது குழந்தைகள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் பேச்சை அது ஒக்கும். சில வேளைகளில் அவர்கள், "சாமிமேல் ஆணையாகச் சொல்லுகிறேன்" என்பார்கள். பெரியோர்கள் இவ்வாறு சத்தியம் செய்வதை இவர்கள்

கேட்டுக்கொண் டிருக்கிறார்களாதலால் இப்படிச் சொல்கின்றனர். ('சாமி' என்றால் என்னவென்று குழந்தைகளுக்குத் தெரியுமா?) இன்னும், டம்பாச்சாரி ஒருவன் பொழுது போகாதபோது, தடிக் கம்பைச் சுழற்றிக்கொண்டு தோட்டத்தில் உலாவுகையில், ஒரு புஷ்பத்தைப் பறித்து, "ஆ! என்ன அழகான புஷ்பத்தை ஈசுவரன் உண்டாக்கி யிருக்கிறான்!" என்று சிலாகிப்பதையும் அது ஒக்கும். பழுக்கக் காய்ச்சின இரும்பின்மீது ஒரு துளி தண்ணீரை விட்டால் அது உடனே சுவறிப்போவதைப்போல, இவர்களுடைய அபிப்பிராயமும் வெகு சீக்கிரத்தில் மாறிப்போகும். ஆதலால்தான் ஈசுவரனைக் காண வேண்டுமென்னும் தீவிரமான ஆசை உனக்கு இருக்கவேண்டுமென் கிறேன். கடவுளாகிய ஸமுத்திரத்தில் நன்றாய் ஆழ்ந்து முழுக வேண்டும்.

லௌகிகர்களும் அவர்களது போலிச் சாதனைகளும்

216. ஒரு குடியானவன் நாள் முழுதும் ஒரு கரும்புத் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தான். வேலை முடிந்த பிறகு பார்க்கையில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடத் தோட்டத்துக்குள் செல்லவில்லை யென்றும் ஜலமெல்லாம் அங்கிருந்த எலி வளைகளின் வழியே கீழே போய்விட்டதென்றும் தெரிந்தது. கீர்த்தி, விஷய சுகம், சௌக்கியம், ஆசை முதலியவைகளில் கருத்தூன்றிய பக்தன் செய்யும் ஈசுவராராதனையின் பலனும் இப்படித்தான் முடியும். அவன் தினந் தோறும் பிரார்த்தனை செய்தபோதிலும் கொஞ்சமும் அபிவிருத்தி யடையமாட்டான். ஏனெனில் அவனது பக்தி முழுவதும் அந்த ஆசைகளாகிய வளைகளின் வழியே வீணாகப் போகின்றது. அப்படிப் பட்டவன் ஆயுள் முழுவதும் பக்தி செய்த பின்னரும் கொஞ்சமும் அபிவிருத்தியை யடையாமல் பழைய மனிதனாகவே இருப்பான்.

217. தியானத்தில் ஆழ்ந்திருக்கும்போது ஏன் மனம் சலிக்கின்றது?

ஈயானது மிட்டாய்க் கடையில் வைக்கப்பட்டிருக்கும் பக்ஷணங்களின்மீது சில வேளைகளில் உட்காருகிறது. ஆனால் அவ்வழியே, மலத்தைக் கூடையில் எடுத்துக்கொண்டு ஒரு தோட்டி போவானானால் அந்த ஈ உடனே பக்ஷணத்தை விட்டுவிட்டு அம்மலத்தின்மேல்போய் உட்காருகிறது. தேனீயோ தேனைக் கிரகிக்கும் பொருட்டு மலர்ந்த புஷ்பங்களில் உட்காருமே தவிர அசங்கியமான பதார்த்தங்களை ஒரு போதும் அணுகுவதில்லை. உலகப் பற்றுள்ளவர்கள் முன்னே சொன்ன ஈய்க்குச் சமானம். ஏதோ சில வேளைகளில் ஈசுவரப் பிரேமையாகிய இன்பத்தை ஒரு சிறிது அனுபவித்தாலும், பழைய வாசனையால், அவர்கள் சிற்றின்ப சுகமாகிய மலக்குழியைத் தேடிப்போய் விழுகின்றனர். பரமஹம்ஸர்களான மஹான்களோவெனில் சதா சர்வகாலமும் பகவத் பிரேமையிலேயே ஆழ்ந்திருக்கின்றனர்.

218. மந்திரித்த கடுகைப் பேய்பிடித்தவன்மீது தூவினால் பேய் அகன்றுவிடும். ஆனால் பேய் கடுகுக்குள்ளேயே புகுந்துகொண்டால், அப்படிப்பட்ட கடுகு பேயை எப்படிப் போக்கும்? பகவானை எந்த மனத்தைக் கொண்டு தியானம் பண்ணவேண்டுமோ அந்த மனமே உலக விஷயங்களாகிய தீய எண்ணங்கள் செறிந்ததாகவிருந்தால், அப்படிப்பட்ட கெட்டதொரு ஸாதனத்தின் உதவியைக்கொண்டு எப்படி பக்தி மார்க்கத்தை அனுசரிக்க முடியும்?

219. ஈரமான நெருப்புக் குச்சியை எவ்வளவு பலமாகத் தேய்த்தாலும் தீ பற்றுவதில்லை; புகையும். உலர்ந்த நெருப்புக் குச்சியோ, மெதுவாகத் தேய்த்தபோதிலும் உடனே பற்றிக்கொள்கிறது. உண்மைப் பக்தனுடைய மனம் உலர்ந்த நெருப்புக் குச்சிக்குச் சமானம். பகவந் நாமத்தைக் கேட்டவுடனேயே அவன் மனத்திலுள்ள பிரேமையாகிய தீ மூண்டெழுகிறது. காமத்தாலும் காசாசையாலும் நனைந்து கிடக்கும் லௌகிகனுடைய மனமோ, ஈர நெருப்புக் குச்சியைப்போல ஒருபோதும் பற்றுவதில்லை. அநேகந்தரம் அவனுக்கு ஈசுவரனைப் பற்றி உபதேசம் செய்தபோதிலும், ஈசுவரப் பிரேமையாகிய நெருப்பு அவனிடம் மூண்டெழுவதில்லை.

220. லௌகிகன் ஒருவன் ஒரு ஞானியைப்போலவே மேலான அறிவையும் புத்திவன்மையையும் பெற்றிருக்கலாம். அவன் ஒரு யோகியைப்போல மிகவும் பரிசிரமப்படலாம்; அல்லது சந்நியாசியைப் போல அதிக தியாகம் செய்யக்கூடியவனாயும் இருக்கலாம். என்றாலும் அவனுடைய முயற்சிகளெல்லாம் பயனற்றவையே. ஏனெனில் அவனுடைய சக்திகள் வேறு மார்க்கத்தில் செலுத்தப்படுகின்றன. மேற்கூறியவைகளையெல்லாம், அவன் ஈசுவரனுக்காக அல்லாமல், கவுரவம், அந்தஸ்து, செல்வம் இவைகளைப் பெறுவதற்காகவே செய்கிறான்.

221. அழுக்கடைந்த கண்ணாடியில் சூரியக்கிரணம் பிரதிபலிப்பதில்லை. அதுபோல, மாயைக்கு உட்பட்ட அசுத்தாத்மாக்களின் இருதயத்தில் ஈசுவர தேஜஸ் தோன்றுவதில்லை. ஆனால் ஸ்பஷ்டமான கண்ணாடியில் சூரியன் பிரதிபலிப்பதைப்போல, சுத்தர்களுடைய மனத்தில் ஈசுவரன் தோன்றுகிறான். ஆதலால் சுத்தனாகவிரு.

222. ஒரு சேர் பாலுடன் இரண்டு சேர் ஜலத்தைக் கலந்துவிட்டால் அந்த ஜலம் முழுவதும் வற்றி சுயப் பாலாவதற்கு நெடுநேரமும் நீண்ட பிரயாசையும் வேண்டும். லௌகிகனுடைய மனம் தீய சிந்தனைகளும் அசுத்த எண்ணங்களுமாகிய ஜலத்தால் நன்றாய் விளாவப்பட்டுள்ளது. ஆதலால், உண்மைப் பக்தனுடைய நிலைமையை அவன் அடைவதற்கு நீண்ட பிரயாசையும் நெடுங்காலமும் வேண்டியிருக்கிறது.

223. கேள்வி:—கடவுளைக் காண்பதற்காக லௌகிகர்கள் ஏன் சகலத்தையும் விட்டொழிக்கிறதில்லை?

பதில்:—தான் ஆடவேண்டிய ஆட்டம் முடிகிற வரையில் நடிகன் தன் வேஷத்தைக் கலைக்கிறதில்லை. அதேபோல் லௌகிகர்களும் தாங்

கள் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்தபின் தகுந்த காலத்தில் தங்களுக்கு உலக விஷயங்களிலுள்ள பொய் நாட்டத்தைக் களைந்து விடுவார்கள்.

224. கேவலம் உலகப்பற்றிலேயே முற்றிலும் மூழ்கியுள்ள ஜீவனது, மலத்திலேயே பிறந்து அதிலேயே இறக்கும் புழுவுக்குச் சமானம். மேலானது ஒன்றையும் அது அறியாது. சாதாரண உலகப் பற்றுள்ளவன், ஒரு சமயம் மலத்தின்மீதும் ஒரு சமயம் பக்ஷணத்தின் மீதும் உட்காரும் ஈய்க்குச் சமானம். ஜீவன்முக்தர்களோவெனில், தேனைத் தவிர வேறொன்றையும் குடிக்காத தேனீக்குச் சமானமானவர்.

225. லௌகிகர்கள் முதலையைப் போன்றவர்கள். எத்தனை ஆயுதங்களால் அதன் முதுகின்மேல் அடித்தாலும் அதற்கு எந்த ஆபத்தும் உண்டாகாது. அடிவயிற்றில் அடிபட்டாலல்லாமல் அது சாகாது. அதேபோல லௌகிகர்களை, போகப் பொருள்களிலிருந்து வலிய அப்புறப்படுத்தினாலல்லாமல், எவ்வளவுதான் உபதேசம் செய்தாலும், உலக ஆபாசங்களைப்பற்றி அருவருப்புண்டாகும்படி எடுத்துச் சொன்னாலுங்கூடத் தங்கள் நிலைமையை உணரமாட்டார்கள்.

226. எல்லாவற்றையும் பரித்யாகம் செய்துவிட்டு, ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களில் சேரவேண்டுமென்று செய்யும் உபதேசங்களை உலகப் பற்றுள்ளவர்கள் கேட்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களை எப்படி நல்வழிக்குக் கொண்டுவரலாமென்பதை நன்றாக ஆலோசனை செய்து தெளிந்த கௌரங்க சுவாமியும் நித்யானந்த சுவாமியும், 'ஜனங்களே! வாருங்கள்; பகவந்நாமத்தை வாய்விட்டுப் பாடினால் உங்களுக்கு சுவைகளும் ரஸமும் நாரியர் போகமும் கிடைக்கும்' என்று ஆசைகாட்டி யழைத்தனர். அநேகர் அவ்வுணவையும் போகத்தையும் அடையலாம் என்ற நோக்கத்தோடு பகவந் நாமத்தைச் சொல்ல ஓடிவந்து அவர்களைத் திரளாகச் சூழ்ந்து கொண்டனர். ஆகவே அவர்கள் எல்லோரும் வலைக்குள் அகப்பட்டு விட்டனர். பகவந் நாமமாகிய அமிர்தத்தின் இன்பத்தைச் சிறிது சிறிதாகச் சுவைத்ததும் அவர்கள் நித்யானந்த சுவாமி சொன்ன வார்த்தைகளின் உட்கருத்தையறிந்துகொண்டனர். ஈசுவரனிடம் பூரண பக்தி செய்வதாலுண்டாகும் ஆனந்த பாஷ்பந்தான் சுவைகளும் ரஸமும்; பக்தி பரவசமானவன் தன்னை யறியாமல் இளநங்கையாகிய தரையைத் தழுவி புரளுவதுதான் நாரியர் போகம்.

இரண்டாம் பகுதி

மனிதனுடைய எழுச்சி

தீய நெறிகளினின்றும் விலகாது, புலன்களை அடக்காது சிந்தனையிலாது, மன அமைதி நிலவப் பெறாது இருக்கும் ஒருவன், நுண்மான் நுழை புலம் உடையவனேயாயினும், அண்ணலின் திருப்பாதப் போதினை அடையவே மாட்டான்.

சுந்தர யுவ புருஷ! சாஸ்திரக் ஞானமாகிய (நாதாந்த ஒலி வடிவமாகிய ஓங்காரத்தின் பாற்பட்ட) தநுவைக் கையிலேந்தி, பயபக்தி வழி பாட்டால் தகைமையுடையதாகப் பெற்ற சரத்தை (ஜீவனை) அதிற் தொடுத்து, அண்ணலின் சிந்தனையில் ஆழ்ந்து ஆனந்திக்கும் ஏகாக்ர சித்தத்துடன் நாணேற்றி நாசரகிதமாகிய பரம்பொருளையாயினும் குறியாக வைத்து விடுவாயாக.

பூர் புவ சுவ லோகங்களும், பிராணனுடன் கூடிய அந்தக்கரணமும் எல்லாம் ஓதப் புரோதமாக இழைக்கப்பெற்ற ஆன்மா வொன்றையே அவன் என்று அறிந்து, வீண்வாதங்களை வெறுத்து இரு. இதுவே பிறவா நெறிக்கு வழி.

—உபநிடதங்கள்

அத்தியாயம் 8

முமுக்ஷுக்களின் இலக்ஷியங்களும் பாகு பாடுகளும்

[முமுக்ஷுக்களின் வகை—மெய்யான முமுக்ஷுவின் இலக்ஷணங்கள்—ஸாது ஸங்கம்—உலகில் கட்டுண்ட முமுக்ஷுவின் இலக்ஷியம்—ஸந்நியாசியின் இலக்ஷியம்.]

முமுக்ஷுக்களின் வகை

227. ஆகாயத்தில் பறக்கவிடும் ஆயிரக்கணக்கான காற்றாடிகளில் இரண்டொன்றுதான் நூலை அறுத்துக்கொண்டு விடுதலை யடையும். அதுபோல நூற்றுக்கணக்கான ஸாதகர்களில் இரண்டொருவர் தான் உலக பந்தத்தினின்று விடுதலை யடைகின்றனர்.

228. 'ஹோமா' என்ற ஒருவகைப் பக்ஷி இருப்பதாக ஐதீகமுண்டு. அது எப்போதும் ஆகாயத்தில் வெகு உயரத்திலேயே வெகு பிரியமாக வசிப்பதாயும், தரைக்கு ஒருபோதும் வருவதில்லை யெனவும் கூறப்படுகின்றது. அது முட்டையிடுவதும் ஆகாயத்தில்தானும். பூமியின் ஆகர்ஷண சக்தியால் அம் முட்டைகள் கீழே இழுக்கப்பட்டு விழும்போது நடு வழியிலேயே அதாவது மத்திய ஆகாயத்திலேயே அவைகளினின்றும் குஞ்சுகள் வெளிப்படுகின்றனவாம். அவ்விளங் குஞ்சுகள் தாம் கீழே விழுவதைத் தெரிந்து கொண்டவுடனே, இயற்கையுணர்ச்சியினால் மார்க்கத்தை மாற்றிக்கொண்டு யதாஸ்தானமாகிய ஆகாயத்தை நோக்கி மேலே பறந்து போகின்றனவாம். சுகதேவர், நாரதர், இயேசு கிறிஸ்து, சங்கராசாரியார் முதலியோர் இப்பக்ஷிகளுக்குச் சமானம். இளம் பிராயத்திலேயே அவர்களுக்கு உலகப்பற்று விட்டுப் போயிற்று. ஆதலால், உண்மை ஞானமும் திவ்யப் பிரகாசமுமாகிய உயர்ந்த பிரதேசங்களுக்கு அவர்கள் போகின்றனர்.

229. இருவித யோகிகள் இருக்கிறார்கள்—ஒருவர் மறைந்து எவரது கண்ணுக்கும் தெரியாது தமது யோகசாதனங்களைச் செய்கிறார்; மற்றவர் யோகியின் சின்னங்களாகிய தண்ட கமண்டலங்களைத் தாங்கிச் சமய சம்பந்தமாகப் பலரோடும் பேசுகின்றார்.

230. புஷ்பம் முந்தியும் பிறகு காயும் வருவது பொதுவான விதி. என்றாலும் சில செடி வகைகளில் முந்திக் காயும் அதன்பின்னர்ப் பூவும் தென்படுகின்றன. அதேபோல, சாதாரண மக்கள் சாதனைகள் புரிந்து கடைசியில் கடவுள் தரிசனம் பெறுகின்றனர். ஆனால் சிலரோ கடவுள் தரிசனம் பெற்ற பிறகு சாதனங்களை அநுஷ்டிக்கின்றனர்.

231. சட்டியில் வறுபடும் நெல்லில் அச்சட்டியினின்றும் குதித்தெழுந்து வெளியே வெடிக்கும் நெற்கள்தான் நன்றாக வறுபட்டவை. அவைகள்மீது கருகிப்போன அடையாளங்களே இரா. சட்டியிலேயே வறுபட்ட நெற்கள் ஒவ்வொன்றுக்கும் கொஞ்சமாவது கருகிய அடையாளமிருக்கும். அதுபோல நல்ல பக்தர்களில், உலகத்தை முற்றிலும் துறந்து வெளியே போகும் சிலர்தான் மாசுமறுவற்ற பூர்ணர்களாவார்கள். உலகத்திலேயே கிடந்துழலும் பக்தர்களில் உத்தமமானவர்களிடமும் அவர்களுடைய யோக்கியதாம்சத்தில் ஏதாவது குற்றங்குறை காணப்படும்.

232. அதிகாலையில் கடைந்தெடுக்கப்படும் வெண்ணெய்தான் சிலாக்கியமானது. சூரியோதயத்துக்குப் பிறகு கடையப்படும் வெண்ணெய் அவ்வளவு சிறந்ததாகாது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது இளஞ் சந்நியாஸிச் சிஷ்யர்களை நோக்கி, " நீங்கள் அதிகாலையில் கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய்க்குச் சமானமானவர்கள். கிரகஸ்த சிஷ்யர்களோவெனில், பகலில் கடையப்படும் வெண்ணெய்க்குச் சமானம் " என்று சொல்லுவர்.

233. முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றின மூங்கிலைப் பலவந்தமாக வளைக்க முயன்றால் ஒடிந்துபோகும். அதுபோல இளமையான மனதை ஈசுவரனிடம் செல்லும்படித் திருப்புவது எளிது. வயது முதிர்ந்தவனுடைய பழக்கப்படாத மனமோ அப்படித் திருப்ப முயலும்போதெல்லாம் பிடியை மீறிச் செல்லும்.

234. நாவின் நரம்புகள் முற்றிப்போன வயது முதிர்ந்த கிளிக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்க முடியாது. அதன் கழுத்தில் கோடு உண்டாவதன் முன்னம், அதாவது அது இளமைப் பருவத்திலிருக்கும்போதே, கற்பிக்கப்பட வேண்டும். அதுபோல, வயது சென்ற பிறகு ஈசுவரனிடம் மனத்தை நிலை நிறுத்த முடியாது. இளமையிலேயே அவ்வாறு நிலை நிறுத்த எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

235. மாம்பழம் ஒன்றை ஈசுவர நிவேதனமாகவோ, வேறு நல்லுபயோகமாகவோ வினியோகிக்கலாம். ஆனால், ஒருதரமாயினும், அது காக்கையால் கொத்தப்பட்டு விட்டால், ஒன்றுக்கும் உதவாமல் போய்விடும். ஈசுவர நிவேதனத்துக்கும் ஆகாது ; பிராமணனுக்குத் தானமாகக் கொடுக்கவும் உதவாது. பரிசுத்தமானவர் எவரும் உண்பதற்கு அது உபயோகமற்றதாகிறது. அதுபோல, மனம் அசுத்தமடைவதன் முன்னம், உலக ஆசைகளாகிற அசுத்தங்கள் அவர்களைத் தீண்டுவதன் முன்னம், சிறுவர் சிறுமியர்கள் ஈசுவரஸேவைக்கு அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். உலக இச்சைகள் ஒரு தரம் அவர்களுடைய மனத்திற் புகுந்து விட்டாலும், இந்திரிய சுகங்களாகிய பேயின் தீய நிழல் அவர்கள்மீது ஒரு தரம் பட்டுவிட்டாலும் அப்பால் அவர்களை எப்போதும் தர்மவழியில் செல்லும்படி செய்வது மிகவும் கடினமாகும்.

236. சிறுவனுடைய உள்ளத்திலுள்ள பிரேமையானது பின்ன மற்றது. அவனுக்கு விவாகமாகும்போது, அப்பிரேமையில் குறைந்தது பாதியைத் தன் மனைவிக்குக் கொடுத்து விடுகிறான். குழந்தைகள் பிறக்கும்போது, இன்னொரு கால்பாகம் போய்விடுகிறது. பாக்கியிருக்கும் கால்பாகம், தாய், தகப்பன், கவுரவம், புகழ், ஆடையாபரணங்கள், டம்பம் முதலியவற்றில் செலவாகி விடுகிறது. ஆதலால் ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணுவதற்குப் பிரேமை அவனிடம் மீதி இருப்பதில்லை. ஆகவே பையனின் பின்னமடையாத மனம் இளமையிலேயே ஈசுவரனிடம் செலுத்தப்படுமாயின், அவரை எளிதில் நேசிப்பதும் காண்பதும் சாத்தியமாகும்; வயது முதிர்ந்தவர்களால் அவ்வாறு செய்வது எளிதன்று.

237. உலக வாழ்க்கையில் இருக்கும் ஞானிக்கும் உலகத்தைத் துறந்த ஞானிக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றே நான் சொல்லுவேன். இருவரிடமும் பொதுவாக இருப்பது அந்த ஞானமே. ஆனால் உலகத்தில் வாழும் ஞானிக்குப் பயம் ஏற்படக்கூடும். விஷய சுகங்களைக் கொடுக்கும் பொருள்களினிடையே இருப்பதனால் கொஞ்சமாவது பயம் ஏற்படும். புகையடைந்த அறையில் நீ வசித்தால், என்ன ஜாக்கிரதையுடன் இருந்த போதிலும் உனது சரீரத்தில் கொஞ்சமாவது கரி படிவது நிச்சயம்.

238. ஒருவரிடம் பகவான் சொன்னதாவது:—நல்லது, உனது வாழ்நாளின் சிலாக்கியமான பெரும் பாகத்தை உலக வாழ்க்கையில் கழித்துவிட்டு, இப்போது நீ ஈசுவரனைத் தேட வந்திருக்கிறாய். ஈசுவரனை அறிந்த பிறகு நீ உலக வாழ்க்கையில் புகுந்திருந்தால் எவ்வளவு ஆனந்தமும் நிம்மதியும் உனக்கு உண்டாயிருக்கும்?

239. ஸாத்விக, ராஜஸ, தாமஸ பூஜைகளின் வித்தியாஸமென்ன? வெளிப் பகட்டும் அகங்காரமும் இல்லாமல் முழுமனதோடும் பூஜை செய்பவன் ஸாத்விக பக்தன். வீடுகளை அலங்கரிப்பது, பாட்டு, கூத்து இவைகளுடன் படாடோபம் பண்ணுவது, வெகுவாகப் பணஞ் செலவிட்டுப் பஞ்ச பக்ஷிய போஜனம் செய்விப்பது ஆகிய இவைகளுடன் ஈசுவராராதனை செய்பவன் ராஜஸ பக்தன். பலிபீடத்தில் நூற்றுக் கணக்கான ஆடு கோழிகளைக் கொன்று, மதுமாமிசத்தை நிவேதனம் செய்து, ஆடிப் பாடுவதிலேயே கருத்துடையவனாக விருப்பவன் தாமஸ பக்தனாவான்.

மெய்யான முமுக்ஷுவின் இலக்ஷணங்கள்

240. சிக்கிமுக்கிக்கல் கற்பாந்தகாலம் தண்ணீரில் கிடந்தாலும் தன்னுள் இருக்கும் நெருப்பை இழப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் அதை ஓர் இரும்புத் துண்டில் தட்டினால் நெருப்புப்பொறி உடனே பறக்கும். அதுபோல, பக்தனும் தனது விசுவாசத்தில் திடசித்தனாகவே இருப்பான். உலக பாசங்கள் எல்லாவற்றின் நடுவே அவன்

இருந்தாலும் அவனது விசுவாசமும் பிரேமையும் குறைவதில்லை! பகவந் நாமத்தைக் கேட்டதும், பிரேமை மேலிட்டால் அவன் சந்தோஷ சித்தனுகிருன்.

241. பொன்னையும் பித்தளையையும் உரைக்கல்லில் தேய்த்தால் இது பொன், இது பித்தளை என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அது போல, வாஸ்தவமான ஸாதுவையும் கபட ஸாதுவையும் இம்சை அவதூறு ஆகிய உரைக்கல்லினுல் கண்டுபிடித்து விடலாம்.

242. ஒரு ரயில்வே இஞ்சின் கனமான வண்டிகள் பலவற்றை வெகு சுலபமாக இழுத்துச் செல்கின்றது. அதுபோல, ஈசுவரனிடம் அன்பு பூண்ட புதல்வர்கள் அவனிடம் வைத்திருக்கும் திட விசுவாசத்தாலும் பக்தியாலும், மிக எளிதாக உலகத் துன்ப துயரங்களைச் சகித்துக் கடக்கின்றனர் ; அன்றியும் அநேகரைத் தம்மோடு ஈசுவரனிடம் அழைத்தும் செல்கின்றனர்.

243. விஷய சுகங்களும் உலகப்பற்றும் எப்போது ஒழியும் ? நித்தியானந்த ஸாகரமாகிய ஈசுவரனிடம் எல்லாவித இன்பமும் ஆனந்தமும் பூரணமுறுகின்றன. அவ்வீசுவரனை அனுபவிப்பவர்கள் பயனற்ற உலக விஷயங்களால் கவர்ச்சியடைய மாட்டார்கள்.

244. சுத்தம் செய்யப்பட்ட கற்கண்டைத் தின்றவனுக்கு அழுக்குள்ள வெல்லக்கட்டியில் திருப்தி யிருப்பதில்லை. அரண்மனையில் படுத்துறங்கியவனுக்கு அசுத்தமான குடிசையில் படுத்துறங்குவதில் சுகமில்லை. அதுபோல, தெய்வானந்த இன்பத்தை அனுபவித்த ஆத்மாவுக்கு சாதாரணமான உலக சுகங்களில் சந்தோஷமென்பதில்லை.

245. அரசனுடைய காமக்கிழத்தி தெருப் பிச்சைக்காரனைக் கண்ணெடுத்துப் பார்க்கவுமாட்டாள். அதுபோல, ஈசுவர ஸந்நிதானத்தின் கடாக்ஷம் பெற்ற ஆத்மாவானது அற்பமாகிய உலக விஷயங்களில் ஆசைப்படுவதில்லை.

246. இலேசான உபயோகமற்றதைத் தள்ளிவிட்டு, கனமான நல்ல வஸ்துவை வைத்துக்கொள்வது புடைக்கும் முறத்தின் சுபாவம். எல்லா பக்தர்களுடைய சுபாவமும் அப்படிப்பட்டதே.

247. சர்க்கரையையும் மணலையும் கலந்து வைத்தால் எறும்பு மணலைத் தள்ளிவிட்டுச் சர்க்கரையை மட்டும் இழுத்துச் செல்கின்றது. அதுபோல பரமஹம்ஸர்களும் தீயோரைவிட்டு நல்லோரைப் பொறுக்கி எடுத்து விடுகின்றனர்.

248. வேகமாயோடும் நீரோட்டம் சிற்சில இடங்களில் சுழித்துக்கொண்டு நிற்கிறது. ஆனுல் சீக்கிரத்தில் இச்சுழல்களைக் கடந்து, வேகமாயும் நேராயும் செல்லும். அதுபோல பக்தனுடைய ஹிருதயம் சிற்சில வேளைகளில் சோகம், துயரம், அவநம்பிக்கையாகிய சுழல்களில் அகப்பட்டுக் கொள்கிறது. என்றுலும் இது ஒரு கணநேரந்தான் நிற்கும் ; நீடித்து நிற்பதில்லை.

249. பக்தனுடைய பலம் எதில் உள்ளது? அவன் ஈசுவரனுடைய குழந்தை; ஆதலால் பக்தியால் பெருகும் அவனது கண்ணீரே அவனுக்குப் பலமான ஆயுதமாம்.

250. சரீரத்தில் உள்ள சிரங்கைச் சொறியச் சொறிய அதிக நமைச்சலும், சொறிவதில் ஓர் இன்பமும் உண்டாகும். அதுபோல, ஈசுவர பக்தி பண்ணுகிறவர்கள் அவனுடைய புகழைப் பாடுவதில் ஒரு போதும் சலிப்படைவதில்லை.

251. பகவந் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் எவனுக்கு மயிர்க் கூச்செடுத்துக் கண்களில் பக்தி பாஷ்பம் பெருகுமோ அவனுக்கு அதுதான் கடைசி ஜன்மம்.

252. வேசி ஒருத்தி, பக்தனான ஒருவனை நெருங்கி அவனைத் தன் மாயைக்குள்ளாக்கிக்கொள்ள முயன்றால் என்னவாகும்?

பழுத்த மாம்பழமொன்றைக் கையில் பிடித்துப் பிழிந்தால் மேல் தோல் மட்டும் கையில் நிற்கும்; கொட்டை சதையெல்லாம் வெளியே பிதுங்கி ஓடிவிடும். அதுபோல, அப்பக்தனுடைய மனம் ஈசுவரனிடம் பாய்ந்து சென்றுவிடும். அவனது சரீரம் மட்டும் அந்த ஸ்திரீயின் வசப்பட நேரிடும்.

253. மனிதர் பார்க்காமற் போனாலும் ஈசுவரன் பார்க்கிறான் என்று நம்பி, தனியனாக விருக்கும்போது எவனொருவன் ஒரு பாபத்தையும் செய்வதில்லையோ அவன்தான் வாஸ்தவமான தர்மவானாவான். மனிதர் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தாலும் ஈசுவர திருஷ்டிக்குட் படுவோம் என்ற பயத்தினால் எவனொருவன் காட்டில் தனியாக இருக்கும்போதும் ஒரு கட்டழகியின் வலைக்குட் படாமலும், காம எண்ணத்தால் அவளைக் கண்ணெடுத்துப் பாராமலும் இருக்கிறானோ அவன்தான் வாஸ்தவமான தர்மவானாவான். ஒருவருமில்லாது தனித்துள்ள ஒரு வீட்டில் காணப்படும் பொன் முடிப்பை எவனொருவன் எடுத்துக் கொண்டு போக இச்சைப்படமாட்டானோ அவனே தர்மவான். ஊரார் வசைமொழிக்குப் பயந்து வெளி வேஷத்துக்காக எவனொருவன் தர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனைத் தர்மவான் என்று சொல்லக் கூடாது. மௌனமாயும் மறைவாயும் அனுஷ்டிக்கும் தர்மமே வாஸ்தவமான தர்மம்; வீண் பெருமையுடனும் படாடோபத்துடனும் செய்வனவெல்லாம் போலிச் செய்கைகளேயாம்.

ஸாது சங்கம்

254. ஜன ஸமூகக் கட்டுப்பாடுகளை மீறிய ஆத்மார்த்திகள் அனைவரும் ஒரு தனிக் கோஷ்டியைச் சேர்ந்தவராவார்கள்.

255. தன் புருஷனுடன் தினம் செய்யும் ஸல்லாபங்களை எல்லாரிடமும் சொல்வதற்கு ஒரு ஸ்திரீ லஜ்ஜைப்படுவது ஸஹஜம். பிறரிடம் அவள் அதைச் சொல்வதுமில்லை; சொல்லப் பிரியப்படுவதுமில்லை. எப்

படியாவது அவை வெளிப்படுமானால் அதற்காக மனம் வருந்துவாள். ஆனால் அவளே அவ்விஷயங்களைத் தனது அந்தரங்கத் தோழியிடம் வலுவிலே சொல்லுவாள். சொல்வதற்கு அவாவடைவதோடு சொல்வதில் இன்பமடைபவளாகவு மிருப்பாள். அதுபோல பக்தன் ஒருவன், ஸமாதியில் தான் அடையும் இன்பங்களைத் தன்னைப்போன்ற பக்தர்களுக்குச் சொல்வானேயன்றி, மற்றையோர்க்குச் சொல்லப் பிரியப்படமாட்டான். சில வேளைகளில் அத்தகையோரிடம் சொல்வதற்கு ஆத்திரப்படுவதன்றி, சொல்வதில் சந்தோஷமுமடைகிறான்.

256. ஒரு பசு மந்தையில் மற்ற மிருகம் ஏதேனும் நுழைந்தால் எல்லாப் பசுக்களும் ஒன்றுகூடி அதைக் கொம்புகளால் குத்திக் கால்களால் உதைத்துத் துரத்திவிடும். ஆனால் அம்மந்தையில் தம்மைப்போன்ற ஒரு பசு நுழையுமானால், மற்றப் பசுக்கள் அதனுடன் நட்புப் பாராட்டி நாவினால் நக்கிக் கொடுக்கும். அதுபோல, ஒரு பக்தன் இன்னொரு பக்தனைச் சந்தித்தால் இருவரும் அதிக ஆனந்தத்தை அடைந்து ஒருவரை யொருவர் பிரிய மனமில்லாதிருப்பர். ஆனால் ஒரு தூர்த்தன் அவர்களிடம் வந்தால் அவனை அவர்கள் வெறுத்து அப்பால் போவார்கள்.

257. பகவத் பிரேமை கொண்டவன் ஏன் தன்னந்தனியனாக வாழப் பிரியப்படுவதில்லை ? கஞ்சாக் குடிப்பவன் தோழர்கள் இல்லாமல் தன்னந்தனியனாகக் குடிப்பதில் ஆனந்தமடைவதில்லை. அவனைப்போல, பக்தனும், பக்தர்களுடைய கோஷ்டி யில்லாமல், தன்னந்தனியனாய் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்வதில் ஆனந்தமடைவதில்லை.

உலகில் கட்டுண்ட முமுக்ஷுவின் இலக்ஷியம்

258. இறந்தோரது ஆக்கையின் மூலமாகத் தேவதைகளை வரவழைக்க விரும்பும் தாந்திரிகன், புதிதாக இறந்தவர் ஒருவரது பிணத்தின்மீது உட்கார்ந்துகொண்டு அருகில் ஆகாரத்தையும் மதுவையும் தயாராக வைத்திருப்பான். மந்திரோச்சாரணத்தினால் எப்போதாவது அந்தப் பிணம் சற்றே உயிர்பெற்று வாயைத் திறக்குமானால், அவன், அப்பிண மூலமாகத் தோன்றிய பூதத்தைத் திருப்தி செய்வதற்காக, அவ்வாயில் உடனே சோற்றைக் கொட்டி மதுவை வார்க்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், இந்தப் பூதத்தினால், அவன் செய்த பிரயத்தனம் தடைப்படும். அப்போது அவன்கோரிய தேவதையின் ஆவிர்ப்பவம் நேராது. அதுபோல, உலகமாகிய பிணத்தின்மீது நின்றுகொண்டிருக்கும் நீ, பரமானந்தத்தை அடைய விரும்புவாயானால், உன்னிடமிருந்து பெறுவதற்காகச் சூழ்ந்து காத்துக்கொண்டிருக்கும் உற்றார் உலகத்தவர்களைத் திருப்தி செய்வதற்காக, நீ முன் ஜாக்கிரதையோடு பொருள்களைத் தேடி வைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் உலக சஞ்சலமும் கவலையும் உன் புத்திக்கு இடையூற்றைச் செய்யும்.

259. உலக வாழ்க்கைக்குப் பணத்தின் உதவி அவசியந்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதைப்பற்றியே வெகுவாகச் சிந்தித்

துக்கொண்டிராதே. தானே கிடைக்கக்கூடியதைக் கொண்டு திருப்தியடைவதே மேலான குணம். பணத்தைச் சேர்த்து வைக்கவேண்டுமென்ற கவலை கொள்ளாதே. ஈசுவரனுக்குத் தங்களுடைய உடல் உயிர் அனைத்தையும் அர்ப்பணம் பண்ணி, அவன்தான் தஞ்சமென்று சரணமடைந்த பக்தர்கள் இப்படிப்பட்ட பண விஷயங்களைப்பற்றிக் கவனிக்கிறதில்லை. அவர்களுடைய வரவுக்குத் தகுந்த செலவிருக்கும். ஒரு வழியிலிருந்து வரும் பணம் இன்னொரு வழியாய்ச் செலவழிந்துபோம்.

260. ஒரு கிரகஸ்த சிஷ்யர், பகவானைப் பார்த்து, நான் அதிகமாகப் பொருள் சம்பாதிக்கலாமா? என்று கேட்டார்.

பகவான் :—விவேகத்தோடு நடத்தும் குடும்ப வாழ்க்கைக்கு அவற்றைச் செலவு செய்வதானால் குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால் பணம் சம்பாதிக்கிற வழி நல்லதா என்று பார்க்கவேண்டியதவசியம். தீய வழியில் ஒருபோதும் பிரவேசிக்கலாகாது. இங்கு பணம் திரட்டுவது முக்கியமன்று; ஆனால் அது பகவானுடைய தொண்டுக்குப் பிரயோசனப்படவேண்டும் என்பதுதான் உன் குறிக்கோளாக இருக்கவேண்டும். பகவத் கைங்கர்யத்துக்குப் பணம் சம்பாதிப்பது தோஷமுள்ள காரியமன்று.

சிஷ்யர் :—எவ்வளவு காலம் வரையில் நான் குடும்பத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்?

பகவான் :—குடும்ப சம்ரக்ஷணை உன்னுடைய உதவியில்லாமலே நடப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு திரவியம் கிடைக்கிற வரையில். உன் குழந்தைகள் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டால் அதற்கப்புறம் உனக்கு எந்த கடமையும் இல்லாமற் போய்விடும்.

261. "உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், குடும்ப சம்ரக்ஷணைக்கும், பகவத் பூசைக்கும், சாதுக்கள் சேவைக்குமே பணம் வேண்டும் என்று சம்பாதித்தல் வேண்டும். சேர்த்துப் புதைத்து வைப்பது தீது. தேனீக்கள் கஷ்டப்பட்டுத் தேன் கூடு கட்டுகின்றன. அவைகளை மனிதன் திருடிக்கொண்டு போய்விடுகிறான். 'பெண்களை' நீங்கள் அறவே நீக்கிவிடவேண்டும் என்பது அவசியமில்லை. சில குழந்தைகள் பிறந்த பிறகு நீரும் மனைவியும் சகோதரனும் சகோதரியும்போல வாழவேண்டும்" என்று வேறு சில கிருகஸ்த சிஷ்யர்களைப் பார்த்துப் பகவான் சொல்லியிருக்கிறார்.

262. காலமெல்லாம் வயிற்றுக்குச் சோறு தேடுவதில் கழிகின்றது. நான் எப்படி பக்தி பண்ண முடியும்?

நீ யாருக்காக உழைக்கிறாயோ அந்த பகவானே உனக்கு வேண்டியவைகளை அளிப்பான். உன்னை இவ்வுலகத்திற்கு அனுப்புவதற்கு முன்னமேயே ஈசுவரன் உனது போஷணைக்கு வேண்டிய பொருள்களைத் தேடி வைத்திருக்கிறான்.

263. வீடு, வாசல், குழந்தை குட்டிகள், குடும்பம், இவைகள் எல்லாம் சிறிது காலம் வரைக்கும்தான் நமக்கானவை. பிறகு நம்மை

விட்டுப் பிரிந்து விடும். அவை அநித்ய வஸ்துக்களாகும். ஈசுவரன் ஒருவன்தான் நித்தியம். ஒன்றிரண்டு பழங்கள் விழுந்து விடுவதாலேயே ஒன்றும் போய்விடாது. நித்தியமான பணமரம் இருக்கிறதல்லவா? ஆகவே கவலைப்பட அவசியமில்லை.

264. பெண்ணையும் பொன்னையும் துறக்க வேண்டும் என்று சந்நியாசிகளுக்கே போதிக்கப்படுகிறது. துறவிகள் பெண்களது படத்தையும் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாது. மசாலா கலந்த ஊறுகாயைப் பற்றி நினைத்தாலே நாக்கில் ஜலம் ஊறுகின்றது—அதனைக் கண்ணால் பார்க்கும்போதும் தொடும்போதுமோ சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இந்தக் கடுமையான நிபந்தனைகள் (அங்கிருந்த கிருகஸ்தர்களைப் பார்த்துக் கூறுகிறார்) உங்களைப் போன்ற கிருகஸ்தர்களுக்கன்று; இவ்வுபதேசம் துறவிகளுக்கு மாத்திரமே. நீங்கள் மனத்தைப் பகவானிடம் செலுத்திப் பற்றுதலற்றுப் பெண்களுடன் பழகலாம். இவ்வித பற்றற்ற மனத்தைக் கடவுள்பால் திருப்பி நீங்கள் அடிக்கடி ஏகாந்தமான இடத்துக்குச் சென்று சாதனம் பழகுதல் நல்லது. நீர் பகவானை முழு மனத்துடன் பிரார்த்திக்கும்போது அங்கு எவரும் வந்து தொந்தரவு புரிதல் கூடாது. மூன்று நாட்களேனும், முடியாமற்போனால், ஒரு நாளேனும் தங்கியிருக்க ஏற்றதான தனியிடம் போய்ச் சாதனை செய்யவேண்டியது அவசியம். ஆத்மஞான வாழ்க்கை வாழ்வதற்குப் பலமும், பரிசுத்தமும், இந்திரிய நிக்ரகமும் கொடுக்கும்படி இடைவிடாது பகவானைப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

265. "பாம்புக்கு முன்னால் தவளை கூத்தாடட்டும். ஆனால் பாம்பு தவளையை விழுங்காமலிருக்கும்படி பார்த்துக்கொள்" என்ற பழமொழியைப்போல, நீ உலகத்தில் வாசம் பண்ணு; ஆனால் கேவலம் உலகப் பற்றுள்ளவனாக இராதே.

266. படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகில் இருக்கக்கூடாது. ஆத்மார்த்தி உலகத்தில் இருக்கலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக்கூடாது.

267. நீ கிருகஸ்தனாகவோ உலகப்பற்றுள்ளவனாகவோ இருப்பதனால் பாதகம் ஒன்றுமில்லை. ஆனால் உனது சித்தம் மட்டும் சதா ஈசுவரனிடம் நிலைபெற்று இருக்கவேண்டும். ஒரு கையால் உனது வேலையைச் செய்துகொண்டே மற்றொரு கையால் ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களைத் தொட்டுக்கொண்டிரு. செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இராத சமயத்தில், அவனுடைய சரணாரவிந்தங்களை இரு கைகளாலும் சேரப்பிடித்து உன் மார்போடு அணைத்துக்கொள்.

268. இவ்வுலகத்தில் இருந்தாலும் அதன் பாசங்களுள் அகப்படாத மனிதனுடைய சுபாவம் எப்படிப்பட்டது? அவன் தண்ணீரிலுள்ள தாமரை இலையைப்போலும், சேற்றில் உள்ள மீனைப்போலும் ஆகிறான். இவை யிரண்டும் அதனதன் இட விசேஷத்தால் அசுத்தமடைவதில்லை. தண்ணீரால் தாமரை இலை நனைவதில்லை; சேற்றினால் மீனினுடைய பளபளப்பான சரீரம் அழுக்காவதில்லை.

269. நீ குடும்பத்தோடு வாழ்கின்றாயா இல்லையா என்பதுபற்றிக் கவலைப்படவேண்டாம். முதுகில் பிளவைநோய் உள்ளவன் மற்றவர்களோடு பேசுகிறான்; சிற்சில சமயம் எடுத்த காரியத்தைச் செய்யவும் முயல்கிறான். இருந்தாலும் அவன் மனதெல்லாம் தன் நோவைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கும். அதேபோல் பகவானிடம் மனத்தை நிறுத்திப் பற்றுதலின்றி உன் கடமைகளைச் செய்து வந்தால் போதும்.

270. அநித்யத்திலிருந்து நித்தியத்தைப் பிரிக்கும் விவேகமும், உலக ஆசைகளில் வைராக்கியமும், இவற்றினோடு பகவானிடம் பரம பக்தியும் உடையவனாயிருந்தால் ஒருவன் குடும்பத்திலிருந்த போதிலும் யாதும் பயமில்லாமல் வாழலாம்.

271. சம்ஸார வாழ்க்கையில் இருந்தால் என்ன? அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணம் செய்து அவனிடம் சரணமடைந்துவிடு. அதன் பிறகு உனக்கு எந்தவித கஷ்டமும் இராது. யாவும் அவனது அருளாலே நடைபெறுகின்றன என்பதை யறியவருவாய்.

272. கிருகஸ்தனுக்கும் கடவுள் தரிசனத்தைப் பெறும் பாக்கியம் கிட்டலாம். ராஜரிஷியாகிய ஜனகமகாராஜா அப்படிப்பட்டவர். ஆனால் ஜனகர் அடைந்த அந்த உயர் பதவியைத் திடீரென்று ஒருவனால் அடைய முடியாது. அவர் உலகச் சந்தடியற்ற இடங்களில் தன்னந் தனியாக இருந்து அநேக வருஷங்கள் பக்திமார்க்கத்தை அப்பியசித்து வந்தார். அதுபோல, உலக வாழ்க்கையிலுள்ளவர்களும் சமயம் வாய்க்கும்போதெல்லாம், குறைந்தது மூன்று நாளாவது சேர்ந்தாற்போல் தனியிடம் சென்றிருந்து ஈசுவர தரிசனத்துக்காக முயற்சி செய்வார்களேயானால் அவர்களுக்கு அளவிறந்த நன்மை யுண்டாகும்.

273. ஒரு சமயம், பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்த சில வாலிபர்கள் என்னிடம் வந்து, தாங்கள் ஜனகரைப்போன்றிருப்பதாகச் சொன்னார்கள். அதாவது, உலகத்தில் வாழ்ந்தபோதிலும் அதில் பந்தப்பட்டிருப்பதில்லை யென்றனர். அதற்கு நான், அப்படிச் **சொல்வது** எளிது; ஜனகரைப்போல **இருப்பது** வேறு கார்யம், என்று சொன்னேன். பந்தத்துக் குள்ளாகாமல் உலக விஷயங்களின் மத்தியில் வாழ்வது வெகு கடினம். ஆரம்பத்தில் ஜனகர் எப்படிப்பட்ட கடுமையான தவங்களை யெல்லாம் அனுஷ்டித்தார்! அப்படிப்பட்ட கஷ்டமான தவங்களை யெல்லாம் நீங்கள் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. பின் செய்யவேண்டியதென்னவெனில், சாந்தமாக ஓரிடத்தில் தனிமையில் கொஞ்ச காலமாவது இருந்து பக்தியிற் பழகவேண்டும் என்பதே. ஞானத்தையும் பக்தியையும் பெற்ற பிறகு உலக வாழ்க்கையில் பிரவேசிக்கவேண்டும். ஆட்டங் கொடுக்காத இடத்தில் பாலை உறைய வைத்தால் நல்ல தயிர் கிடைக்கும். பானையை ஆட்டினாலும் அல்லது வேறு பானையில் மாற்றினாலுங்கூட தயிர் கெட்டுப்போகும். ஜனகர் உலகில் ஒட்டாதிருந்தார். அதனால்தான் அவருக்கு விதேகர் என்ற பேர் வந்தது. அவர் ஒரு ஜீவன்முக்தரைப்போல் வாழ்ந்தவர். தேக புத்தி

யைப் போக்கடிப்பது வெகு சிரமமான காரியம். உண்மையில் ஜனகர் ஒரு சுத்தவீரர். ஞானம், கர்மம் என்ற இரண்டு வாள்களையும் கையிற் பிடித்துச் சுலபமாக வீசக்கூடியவராக இருந்தார்.

274. உலக வாழ்க்கையிலிருந்தபடியே ஆத்ம ஞானத்தைப் பெற்றவர்க்கு உதாரணமாக ஜனங்கள் எப்போதும் ஜனக மகாராஜரையே எடுத்துக் காட்டுகின்றனர். ஜனசமூகத்தின் சரித்திரம் முழுவதிலும் இந்த உதாரணம் ஒன்றேதான் காணப்படுகின்றது. ஜனகருடைய விஷயம் ஒரு விதியை ரூபிப்பதன்று. அவ்விதியின் விலக்கையே ரூபிக்கிறது. பொதுவான விதியென்னவெனில், காம இச்சையையும் காசின்மேல் ஆசையையும் ஒழிக்காதுபோனால் ஒருவர்க்கு ஆத்ம ஸித்தியுண்டாகாதென்பதாம். ஜனகரைப்போல நீயும் இருப்பதாக எண்ணிக்கொள்ளாதே. அநேகமாயிரம் நூற்றாண்டுகள் கழிந்தனவென்றாலும் அப்படிப்பட்ட ஜனகர் இன்னொருவர் உற்பவிக்கவேயில்லை.

275. உலகத்தில் பற்றற்று வாழவேண்டுமென்பது உன் விருப்பமானால், முதலில் ஒரு வருஷமோ, ஆறு மாதமோ, ஒரு மாதமோ, அல்லது பன்னிரண்டு நாளோ நீ தன்னந்தனியனாக இருந்து பக்தியிற் பழகவேண்டும். அப்படித் தனித்திருக்கையில், சதா சர்வகாலமும் ஈசுவரனையே சிந்தித்துக்கொண்டு, அவனுடைய திவ்ய ப்ரேமை உனக்கு வரவேண்டுமென்று பிரார்த்தனை செய். உலகத்தில் உன்னுடையதென்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றுமே இல்லை ; உன்னைச் சேர்ந்தவர்களென்று நீ நினைக்கும் மனிதர்கள் ஒருநாள் இல்லாவிட்டால் மற்றொருநாள் இறப்பது நிச்சயம் என்ற சிந்தனை உன் மனத்தில் பூரணமாக நிறையவேண்டும். ஈசுவரன் மட்டுந்தான் உனக்குச் சொந்தம். அவன்தான் உனக்கு ஸர்வமும். அவனை எப்படி அடைவது என்ற ஒரு விஷயத்திலேயே நீ கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும்.

276. பக்தி பண்ணும்போது, அதைப் பரிகாசம் பண்ணுவோரையும், பக்தியையும் பக்தர்களையும் ஏளனம் செய்வோரையும் விட்டு விலகியிரு.

277. முதலில் உள்ளங்கைகளில் எண்ணெயைத் தடவிக்கொண்டு பலாப்பழத்தை அறுத்துச் சுளைகளை எடுப்பாயானால் பிசின் உன் கைகளில் ஒட்டிக்கொண்டு தொந்தரை செய்யாது. அதுபோல, முதலில் பரமாத்மாவைப் பற்றிய ஞானத்தால் உனக்குப் பாதுகாப்பை யுண்டாக்கிக்கொண்டு, செல்வம் முதலான உலகப் பொருள்களினிடையே நீ வசித்தால், அவைகளில் நீ எவ்வழியிலும் வசப்படமாட்டாய்.

278. காந்த ஊசி எப்போதும் வடக்குத் திசையையே காட்டுமாதலால், கடலில் செல்லும் கப்பல்கள் திசை தவறிப்போவதில்லை. அதுபோல மனிதனுடைய மனம் ஈசுவரனை நாடியிருக்கும் வரையில் அவன் உலக வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் திசைதப்பிப் போகமாட்டான்.

279. "கண்ணும்பூச்சி என்ற விளையாட்டில் ஓடுகிறவன் தாய்ச்சியைத் தொட்டுவிட்டால் அவனைப் பிறகு ஒருவரும் பிடிக்கக்கூடாது. அதுபோல, ஒருதரம் ஈசுவரனைக் கண்டுவிட்டால் அப்பால் உலக பந்தங்களால் நாம் கட்டுப்படமாட்டோம். தாய்ச்சியைத் தொட்டவன் எங்கு வேண்டுமானாலும் தாராளமாய்ப் போகலாம்; பிடிபடுகிற பயம் அவனுக்கில்லை. அதுபோல, உலகமாகிய விளையாடுமிடத்தில் ஒருதரம் ஈசுவரனுடைய சரணாரவிந்தங்களைத் தொட்டவனுக்குப் பயமே கிடையாது. உலக விசாரங்களினின்றும் அவன் விடுதலையடைகிறான். அப்பால் ஒன்றும் அவனைப் பந்தப்படுத்தாது.

280. முதலைக்கு ஜலத்தின் மேலே மிதந்து நீந்தவேண்டுமென்பது ஆசை. ஆனால் அது மேலே வந்தவுடன் வேட்டைக்காரர்கள் அதைக் குறிவைத்துச் சுடுகின்றனர். ஆதலால் அது மேலே கிளம்ப முடியாதபடி ஜலத்துக்குள்ளேயே மூழ்கியிருக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் தருந்த சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம், "விர்" என்று சத்தமிட்டுக்கொண்டு அது மேலே கிளம்பிப் பரந்த நீர்ப்பரப்பில் ஆனந்தமாக நீந்துகிறது. உலகப்பற்றில் அகப்பட்டுழலும் மனிதனே! உனக்கும் ஆனந்த ஸாகரத்தின் மேலே நீந்த வேண்டுமென்பது ஆசைதான். ஆனால் உனது குடும்பத் தொல்லைகளும் காரியங்களும் உனக்கு இடையூறுகளாக இருந்து தடுக்கின்றன. இருந்தாலும் தைரியமாக இரு. எப்பொழுது உனக்கு ஒழிவு நேரிடுகிறதோ அப்பொழுதெல்லாம் தீவிரமான பக்தியுடன் பகவானை நினை; அவனை மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்; உனது துன்ப துயரங்களையெல்லாம் அவனிடம் சொல். காலக்கிரமத்தில் அவன் உனக்கு முக்தியளித்து ஆனந்த ஸாகரத்தின் மேலே வெகு இன்பமுடன் நீந்திக் கொண்டிருக்கும்படி கிருபை செய்வான்.

281. சந்தர்ப்ப வசத்தால், போகக்கூடாத மோசமான இடத்துக்கு நீ செல்லும்படி நேர்ந்தால், அப்போது திவ்ய மாதாவின் ஞாபகத்தையும் கூடக்கொண்டு போ. உன் மனத்தில் மறைந்து இருக்கக் கூடிய தீய நினைவுகளையும் அவள் போக்கி உன்னைக் காப்பாற்றுவாள். அவளுடைய ஸாந்நித்யம், கெட்ட காரியங்களை நீ செய்யாதபடியும், அவைகளைப்பற்றி நினைக்காதபடியும் உனக்கு வெட்கத்தைத் தரும்.

282. உலகம், ஈசுவரன் இந்த இரண்டையும் ஒன்றுபடுத்துவது எப்படி? அதோ தச்சன் மனைவியைப் பார். அவள் எத்தனை காரியங்களில் கருத்தாயிருக்கிறாள்! உரலில் இருக்கும் அவலை ஒரு கையால் கிளறிவிட்டுக் கொண்டு, மற்றொரு கையால் குழந்தையை அணைத்துப் பால்கொடுத்துக் கொண்டிருக்கிறாள். அதே சமயத்தில் அவல் வாங்க வந்த ஒருவனுடன் பேரம் பேசிக்கொண்டுமிருக்கிறாள். இப்படி அவள் பல வேலைகளைக் கவனித்தாலும் அவளுடைய மனம் மட்டும், உலக்கையானது கையில் விழுந்து காயமுண்டாக்காமலிருக்கவேண்டும் என்ற ஒரு விஷயத்தில் நிலைத்திருக்கிறது. உலக வாழ்க்கையில் நீ இரு-

ஆனால் ஈசுவரனை மட்டும் எப்போதும் நினைத்துக் கொண்டிரு. ஒரு போதும் அவனுடைய மார்க்கத்தை விட்டுப் புறம்பே போகாதே.

283. தூணைப் பிடித்துக் கொண்டிருக்கும் பையன், கீழே விழுந்து விடுவோம் என்ற பயம் கொஞ்சமுமில்லாமல், கன வேகத்துடன் அதைச் சுற்றிச் சுற்றி வருகிறான். அதுபோலவே, ஈசுவரனிடம் மனத்தைத் திடமாக நிறுத்திவிட்டு, நீ உனது காரியங்களைச் செய். அப்போது உனக்கு அபாயங்களே நேரமாட்டா.

284. நமது கிராமத்துப் பெண்மணிகள், ஒன்றன்மீதொன்றாக நாலைந்து தண்ணீர்ப் பானைகளைத் தலையின்மீது வைத்துக்கொண்டு நடந்து செல்லும்போது, ஒருவரோடொருவர் தங்கள் தங்களுடைய சுகதுக்கங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு போகின்றனர். ஆயினும் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூடக் கீழே சிந்த விடாமல் செல்கின்றனர். அதுபோலவே தர்ம மார்க்கத்தில் செல்லும் மனிதனும் நடக்க வேண்டும். எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்தாலும், அவனுடைய மனம் உண்மை நெறியை விட்டுக் கொஞ்சமேனும் விலகாதபடி அவன் சதா ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும்.

285. வீட்டுக் காரியங்களைக் கருத்துடன் எப்போதும் செய்து வந்தாலும் ஒரு வியபசாரியின் மனமானது சோர நாயகனையே சதா காலமும் நினைத்துக்கொண்டிருக்கும். அதுபோல உலகத்தில் வாழும் மனிதர்கள், தங்கள் மனத்தை ஈசுவரனிடம் உறுதியாக நிறுத்திவிட்டு, தங்களுக்கேற்பட்ட காரியங்களைச் செய்யவேண்டும்.

286. செல்வவான் வீட்டுக் குழந்தையை வளர்த்துவரும் பால் தாதி அக்குழந்தையிடம் தன் சொந்தக் குழந்தைபோன்றே பிரியம் பாராட்டுகிறாள். ஆனாலும் அக்குழந்தை தனக்குச் சொந்தமல்லவென்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். அதுபோல, உனது குழந்தைகளுக்கெல்லாம் உண்மைப் பிதாவானவன் ஈசுவரனே யென்றும் நீ அவர்களுடைய கார்டியன் அல்லது போஷணைக் கர்த்தா மட்டுமே என்றும் நினைத்துக்கொள்.

287. தெருப்பாடகன் ஒரு கையால் சுருதி மீட்டிக்கொண்டும், மற்றொரு கையால் ஒருவகை மேளத்தைத் தட்டிக்கொண்டும், அதே சமயத்தில் பாடிக்கொண்டுமிருக்கிறான். அதைப்போல, உலக பந்தத்துக்குட்பட்ட மனிதன் தனக்கேற்பட்ட காரியங்களைக் கைகளால் செய்துகொண்டிருக்கையிலும், பகவந் நாமத்தை முழு மனதோடும் சொல்லி அவனது குணானுபவம் பண்ணுவதை மறக்கக்கூடாது.

288. வேலைக்காரி எஜமானனுடைய வீட்டை "எங்களுடைய வீடு" என்கிறாள். என்றாலும் அவ்வீடு அவளுடையதல்ல வென்றும், அவள் வீடு வெகு தூரத்துக்கப்பால் ஒரு குக்கிராமத்தில் இருக்கிறதென்றும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். அவளது நினைவெல்லாம் அவளுடைய சொந்த வீட்டைப்பற்றியேயுள்ளது. இன்னும், அவள் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கும் தன் எஜமானனுடைய குழந்

தையை, "என் ஹரி வரவரப் பொல்லாதவனுய் விட்டான்; என் ஹரி இதை யெல்லாம் சாப்பிடுவான்" என்கிறுள். என்ருலும் ஹரி அவளு டைய குழந்தையன்று என்பது அவளுக்குத் தெரியும். என்னிடம் வரு பவர்களை, இந்த வேலைக்காரியைப்போல பந்தமற்ற வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்கிறேன். இவ்வுலகத்தில் அவர் கள் வாழ்ந்தபோதிலும் அதனுடன் சம்பந்தப்படாமல் எல்லாருக்கும் உறைவிடமாகிய ஈசுவரனிடம் சித்தத்தைத் திருப்ப வேண்டுமென்று சொல்கிறேன். பக்தியின் பொருட்டுப் பிரார்த்தனை செய்யவேண்டு மென்று நான் அவர்களுக்குக் கூறுகிறேன்.

289. உனது குடும்ப விஷயங்களெல்லாம் உன்னுடையன அல்ல வென்றும், அவை ஈசுவரனுடையவை என்றும், நீ அவனுடைய கட்ட ளைப்படி நடக்கவேண்டிய தாஸனென்றும் எப்போதும் நினைத்துக்கொண் டிரு. இந்த எண்ணம் உன் மனத்தில் நிலைத்து விடும்போது, 'உனது' என்று சொல்லக்கூடியது ஒன்றுமே இராது.

290. அதிக பலமுள்ளவனுக விருந்தாலல்லாமல் இரண்டாள் பாரமான சுமையைத் தலையில் வைத்துக்கொண்டே வழியில் ஊர்வலம் ஒன்றை வேடிக்கை பார்க்க முடியாது. அதேபோல் கடவுளிடம் மனத்தை நிறுத்தி உலகக் கடமைகளைச் செய்து வருபவன் தீரன் ஆவான்.

291. உலக வாழ்க்கையிலேயே இருந்து முக்தியடைய முயல்ப வர்கள், கோட்டைச் சுவருக்கு உள்ளிருந்து சண்டை செய்யும் போர் வீரர்களுக்கு ஒப்பாவார்கள். கடவுளைத் தேடிக்கொண்டு உலகத்தைத் துறந்த ஸந்யாஸிகளோ, வெளியிடத்தில் நின்றுகொண்டு சண்டை செய் யும் போர்வீரர்களை ஒத்தவர்கள். வெளியிடத்திலிருந்து சத்துருவை எதிர்த்துச் சண்டை செய்வதைக் காட்டிலும் கோட்டைக்குள்ளிருந்து எதிர்ப்பது சவுகரியமும் அபாயமற்றதுமாகும்.

292. சத்துருவோடு சண்டைக்குப் போவதற்கு முன்னுல், சண்டைபோடும் வழிகளைத் தங்கள் கோட்டைக்குள்ளிருந்தே சிப்பாய் கள் பழகிக்கொள்கிறுர்கள். அப்படிச் செய்வதனுல் இரணரங்கத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் அப்போது அவர்களுக்கு இருக்கமாட்டா. அதுபோல, ஸந்யாஸத்துக்கு ஏற்ற கஷ்ட சாதனங்களை வகிக்கத் தொடங்கு முன்னுல், உனது கிருகஸ்தாசிரமத்தில் உள்ள சௌகரியங் களின் உதவியால், உனது ஆத்மீய சக்தியை விருத்தி செய்துகொள்.

293. அன்பும் அறிவும் எவனிடம் நன்ருய் முற்றி சமத்வம் அடைந்திருக்கின்றனவோ அவனே பாக்கியவான். அவன் எந்த ஸ்திதியி லிருந்தாலும் தன்னை ஸமாளித்துக்கொள்ளக் கூடியவனுவான். அவ னிடம் களங்கமில்லாத விசுவாசமும் ஈசுவர பக்தியும் மிகுந்திருக்கும். உலக விஷயங்களில் அவன் ஈடுபடும்போது, காரியங்களைத் திருந்தச் செய்தவனுக இருப்பான்; வித்வான்களுடைய ஸபையில் மேதாவி என்ற மதிப்பை ஸ்தாபித்துக்கொள்வான்; தர்க்கத்தில் தனது யுக்தி

சாமர்த்தியத்தை வெளிக்காட்டுவான். பெற்றோர்களிடம் விசுவாசத்துடன் கீழ்ப்படிந்திருப்பான். பந்துமித்திரர்களிடம் இனிமையுடன் அன்பு பாராட்டுவான். அண்டை அயலாரிடம் அனுதாபம் பாராட்டி அவர்களுக்கு எப்போதும் நன்மை செய்யச் சித்தனாகவிருப்பான். மனைவிக்குக் காமதேவனைப் போலிருப்பான். அப்படிப்பட்ட மனிதனே குறையற்றவன்.

சந்நியாசியின் இலக்ஷியம்

294. பிதாவினிடமிருந்து முதல் ஜனனத்தையும், உபநயன காலத்தில் இரண்டாவது ஜனனத்தையும் ஸந்யாஸத்தில் மூன்றாவது ஜனனத்தையும் மனிதன் பெறுகிறான்.

295. உலக விஷயங்களை நாடிச் செல்வதினால் மனம் சிதறி விரயமடைகின்றது. அதை ஈடு பண்ணவேண்டுமானால் ஸந்நியாஸ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

296. ஸந்யாஸ ஆச்ரமத்துக்கு அருகனாவோன் யாவன்? நாளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வோம், உடுத்துவதற்கு யாது செய்வோம் என்ற சிந்தனையே இராமல் எவனொருவன் உலகத்தை முற்றிலும் விட்டொழிக்கிறானோ அவன்தான் வாஸ்தவமான ஸந்யாஸி யாவதற்குரியவன். உயர்ந்த மரத்தின் உச்சியிலேறி, உயிரையோ உடலையோ காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற சிந்தனை இல்லாமல், கையை விட்டுவிட்டுக் கீழே விழுகிறவனைப் போல, ஸந்யாசியானவன் இருக்கவேண்டும்.

297. யோகிகளும் ஸந்யாஸிகளும் பாம்புகளைப் போன்றவர்கள். பாம்பு தனக்குத்தானே புற்றை உண்டாக்கிக் கொள்வதில்லை. எலி தோண்டிய வளையில் அது வாசம் செய்யும். ஒரு வளை உபயோகமில்லாது போனால் இன்னொன்றில் நுழையும். அதுபோல, யோகிகளும் ஸந்யாஸிகளும் தங்களுக்கென்று வீடுகளைக் கட்டிக்கொள்வதில்லை. இன்றைக்கு ஒருவர் வீட்டிலும் நாளைக்கு இன்னொருவர் வீட்டிலுமாக அவர்கள் பிறருடைய வீடுகளிலேயே காலங்கழிக்கின்றனர்.

298. உணவு, நீர், தனிமையான ஒதுக்கிடம் ஆகிய வசதிகள் இல்லாத ஊர்களில் சாதுக்கள் நிலைக்கமாட்டார்கள். உணவு அவர்கள் ஏற்கும் பிக்ஷையாகும். அத்தகைய இடங்களையே அவர்கள் தங்குதற்குத் தேர்ந்துகொள்வார்கள். வழி வருத்தத்தால் பிக்ஷ கிடைப்பது அரிதாகுமிடத்தில் ஒன்றிரண்டு நாட்கள் தங்கினும் தண்ணீர் வசதியும் தனியிடமும் இல்லாத ஊர்களில் தங்கவேமாட்டார்கள். மேலான சாதுக்கள் தம் காலக்கடன்களைப் பலர் கண்ணிற் படுமாறு செய்ய மாட்டார்கள். ஊர்ப்புறம்பே தனியிடங்களிலேயே அவற்றை முடித்துக் கொள்வர்.

299. வெள்ளைத் துணியில் ஒரு சிறு கறை பட்டாலும் அவ்வழுக்கு பிரபலமாய்த் தோன்றும். அதுபோல, சான்றோரிடத்தில் காணப்படும் அற்பக் குற்றமும் வெளிப்படையாகத் தோன்றும்.

300. ஒரு துறவி தன்வரைக்கும் சிறிதும் பற்றில்லாதவனாகவும், ஜிதேந்திரியனாகவும் இருக்கலாம். ஆனால் உலக மக்களுக்கு ஓர் உதாரணமாக இருப்பதற்காக அவன் காமினி காஞ்சனங்களை அறவே துறந்துவிட வேண்டும். துறவியின் முழுத்தியாகத்தையும் கண்ட பிறகுதான் மக்கள் நம்பிக்கை கொள்வார்கள். இவ்விதத் துறவிகளைக் கண்ட பிறகே காமினி காஞ்சனங்களிலுள்ள தமது ஆசையை ஒரு சிறிதாகிலும் அகற்ற முயல்வார்கள். துறவிகளையல்லாமல் வேறு யார்தாம் மக்களுக்கு இவ்வித உபதேசம் செய்யமுடியும்.

301. உண்மையான துறவிகள் என்றும், தியாகிகள் என்றும் கூறப்படுபவர்களுடைய இலக்ஷணங்கள் என்ன ? இருவரும் காம காஞ்சனங்களோடு சிறிதும் சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது. பொன் ஆசையால் அவர்கள் மனது கொஞ்சங்கூட பாதிக்கப்படக் கூடாது. பெண்ணோடு சம்பந்தம் வைத்துக் கொண்டதாகக் கனவு கண்டாலும் கூட அவர்களது சாதனைப் பலன்கள் எல்லாம் பாழ்பட்டுப் போய்விடும்.

302. ஸாதுக்களுக்குரிய காஷாய வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டால் ஒருவன் உண்மையில் ஸாதுவைப் போலவே ஒழுக வேண்டும். நாடகத்தில் ராஜா வேஷம் போட்டுக்கொள்பவன் எப்பொழுதும் ஒரு ராஜாவைப் போலவும், மந்திரி வேஷம் போட்டுக்கொள்பவன் மந்திரியைப் போலவும் நடிப்பதை நாம் பார்க்கிறோமல்லவா ? ஒரு சமயம் ஒரு கிராமத்து விதூஷகன் ஒருவன், சந்யாஸியைப் போல் காஷாயத்தைத் தரித்துக்கொண்டு, கிராமாதிகாரியிடம் போனான். கிராமாதிகாரி விதூஷகனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வந்தார். அதை அவன் வேண்டாமென்று மறுத்துவிட்டு அப்பாற் போனான். கொஞ்ச நேரம் கழித்து, அவன் ஸ்நானம் செய்து உடையை மாற்றிக் கொண்டு, அதிகாரியிடம் வந்து, அவர் கொடுப்பதாக வந்த பணத்தைத் தரவேண்டுமென்று கேட்டான். ஸாதுவைப்போல உடையுடுத்திருக்கையில் அவனால் பணத்தைத் தொடக்கூட முடியவில்லை. இப்பொழுதோ அவன் கால் ரூபாய் கொடுத்தாலும் திருப்தியடைபவனாக இருந்தான்.

303. ஒருவன் வியாதியால் அவஸ்தைப்படும் தன் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு ஸாதுவிடம் மருந்துகேட்கச் சென்றான். ஸாது அவனை மறுநாள் வரும்படி சொன்னார். அப்படியே அவன் மறுநாள் வந்தபோது, "உன் குழந்தைக்குச் சர்க்கரைப் பண்டங்களைக் கொடுக்காதே ; சீக்கிரத்தில் குணமுண்டாகும்" என்றார் ஸாது. அதைக்கேட்ட மனிதன், "சுவாமி ! இதைத் தாங்கள் நேற்றே சொல்லியிருக்கலாமே" என்றான். "அப்பா ! நான் சொல்லியிருக்கலாம். ஆனால் நேற்று என் முன்னால் சர்க்கரை வைக்கப்பட்டிருந்தது. அதை உன் குழந்தைப் பார்த்து, 'இந்த ஸாது அயோக்யன்போல இருக்கிறது. சர்க்கரையைப் பிறர் சாப்பிடக்கூடாதென்று சொல்லுகிறான். தான் மட்டும் சாப்பிடுகிறான்' என்று நினைக்கக் கூடும்" என்று ஸாது பதில் சொன்னார்.

304. வாஸ்தவமான வைராக்கியத்தாலல்லாமல், தற்காலிக வெறுப்பினால் மட்டும் உலகத்தைத் துறந்த ஸந்யாஸியின் சுபாவம் எப்படிப்பட்டது ?

பெற்றோருடனாவது மனைவியுடனாவது நேரும் மனஸ்தாபம் காரணமாக ஸந்யாஸம் பெற்றுக் கொள்பவனை "வெறுப்பு ஸந்யாஸி"யெனச் சொல்லலாம். அவனுடைய ஸந்யாஸித்வம் தற்காலிகமானதாம். செல்வவான் வீடு ஒன்றில் அந்தஸ்துள்ள உத்தியோகம் ஒன்று அவனுக்குக் கிடைத்தால் அது நீங்கிவிடும்.

305. ஒரு சிஷ்யன் :—உண்மையான ஸாதுவை எப்படித் தெரிந்துகொள்ள முடியும் ?

ஸ்ரீராமகிருஷ்ணர் :—எவனுடைய ஹிருதயமும் ஆத்மாவும் பூரணமாக ஈசுவரனுக்கே அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவன்தான் உண்மையான ஸாது. பெண்ணாசை பொன்னாசைகளை ஒழித்தவன் எவனோ அவன்தான் உண்மையான ஸாது. அப்படிப்பட்டவன், ஸ்திரீகளை உலக வாழ்க்கையினர் கருதுவதைப்போலக் கருதமாட்டான். எப்போதும் அவன் அவர்களுக்குச் சற்று தூரத்திலேயே விலகியிருப்பான். ஒருகால் அவர்களுக்குச் சமீபத்தில் வரும்படி நேர்ந்தால், அப்போது அவன் அவர்களைத் தனது தாய்மாரெனக் கருதி, வழிபாடு செய்வான். உண்மையான ஸாது, ஸதா ஸர்வ காலமும் ஈசுவரனைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பான். அவ்வீசுவரன் எல்லா ஜீவர்களிடத்தும் இருக்கிறானென்பதை அவன் அறிந்துகொண்டு எல்லோருக்கும் தொண்டு செய்வான். இவைகள்தான் உண்மையான ஸாதுவின் முக்கிய அடையாளங்கள்.

306. நெற்றியில் விபூதியும் கழுத்தில் ருத்ராக்ஷமும் தரித்துக்கொண்டு பக்தர்கள்போல் நடித்து, மருந்து மந்திரங்கள் முதலியன செய்து, ஜனங்களிடமிருந்து பணம் பெறும் சந்நியாசிகளை ஒருபோதும் நம்பக்கூடாது.

307. க்ஷமித்தல் சந்நியாசியின் உண்மைச் சுபாவம்.

அத்தியாயம் 9

சில ஞான ஸாதனங்கள்

[ஜாதியும் சடங்குகளும்—விக்ரகாராதனை—தீர்த்த யாத்திரைகளின் பயன்—ஸாது ஸங்கம்—பகவந் நாம ஜபம்.]

ஜாதியும் சடங்குகளும்

308. பிரம்மம், அதன் தோற்றம் ஆகிய இரண்டையும், அதாவது உட்பொருளாகிய சைதன்யத்தையும் வெளித்தோற்றமாகிய ரூபத்தையும் நீ பாராட்டு.

309. நெல்லினுள் இருக்கும் அரிசிதான் அதை முளைக்கச் செய்வதற்கு அவசியமானதென்பதும் அதன் மேலிருக்கும் உமி பிரயோசனமற்றதென்பதும் சாதாரண அபிப்பிராயம். என்றாலும், உமி நீங்கிய அரிசியை விதைத்தால் அது முளைத்துப் பயிராகி நெல் விளைவதில்லை. நெல் விளையவேண்டுமானால் உமியுடன் கூடிய தானியத்தை அப்படியே விதைக்கவேண்டும். சாப்பிடுவதற்கு அரிசி வேண்டும்போது நெல்லினின்றும் உமியைப் பிரித்து நீக்கவேண்டும். அதுபோல ஒரு தர்மம் நிலைத்து வளர்வதற்குக் கிரியைகளும் சடங்குகளும் அவசியம். அவை முளைக்கும் வித்தாகிய உண்மையைத் தம்முள் பொதிந்து வைத்திருக்கின்றன. ஆதலால் ஒவ்வொரு மனிதனும் அவற்றுள் அடங்கியிருக்கும் உண்மையை (தத்துவப் பொருளை) அடையும் வரையில் அவைகளைச் செய்துகொண்டு இருக்கத்தான் வேண்டும்.

310. விலையுயர்ந்த முத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் சிப்பிக்கு மதிப்பில்லையாயினும் அம்முத்தின் வளர்ச்சிக்கு அது அத்யாவசியமாகின்றது. முத்தைப் பெற்ற மனிதனுக்கு அச்சிப்பியால் யாதொரு பிரயோசனமுமிராது. அதுபோல மிகவும் உயர்ந்த உண்மைப் பொருளை (ஈச்வரனை) அடைந்தவனுக்குச் சடங்குகள், கிரியைகள் முதலியன அவசியமாக இரா.

311. ஆத்மஞான வாழ்க்கைக்கு ஆரம்ப காலத்தில் சடங்குகள் முதலியன உதவியாக இருக்கும். ஆனால் அதில் முன்னேற்றம் அடைந்ததும் அவைகளை அனுசரிக்கவேண்டிய அவசியமில்லை. அப்போது கடவுளிடம் மனம் குவிந்து விடுகின்றது. கடவுளோடு நேராக உறவு வைத்துக் கொள்ளுகின்றான்.

312. புண் ஆறியதும் மேலிருக்கும் பொருக்குத் தானே விழுந்துவிடும். தானே விழுமுன்னால் அதை பலவந்தமாய்ப் பிய்த்து எடுத்தால் புண்ணிலிருந்து இரத்தம் வரும். அதுபோல ஞானோதயமுண்டாகும்போது, ஜாதிபேதங்கள் எல்லாம் அகன்று மறைகின்றன.

ஆனால் அஞ்ஞானிகள் அப்படிப்பட்ட வித்தியாசங்களை அகற்றிவிடப் பார்ப்பது தகாது.

313. மரத்திலேயே பழுத்துத் தானே கீழே விழும் பழம் வெகு தித்திப்பாக இருக்கும் ; ஆனால் காயைப் பறித்துப் பழுக்க வைத்தால் அது அவ்வளவு தித்திக்காது. சீக்கிரத்தில் சுருங்கிவிடும். ஞான நிலையை அடைந்து எல்லாப் பொருளையும் ஒன்றாகக் காணும் ஒருவனுக்கு ஜாதிபேதமானது தானே நழுவிவிடுகின்றது. இந்த உயர்ந்த நிலைமையை அடையாதவரையில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசம் கட்டாயம் தோன்றவே செய்யும். ஆதலால் அப்படிப்பட்டவர் அனைவரும் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த அஞ்ஞான நிலைமையில் ஒருவன் ஜாதி பேதங்களைக் கவனியாது தன் னிஷ்டம்போல் நடந்து தான் பரிபூரணமடைந்து ஞானியாய்விட்டதாகப் பாசாங்கு செய்வானானால் அவன் செயற்கையால் பழுக்கவைத்த பழத்துக்குச் சமானமாவான்.

314. பிரம்மஞானத்தை அடைந்தவன் பூணூலைத் தரித்துக் கொண்டிருப்பது தகுதிதானா ? ஆத்ம ஞானம் வந்தால் எல்லா பந்தங்களும் தாமே அறுகின்றன. அப்போது பிராமணன் இவன், சூத்ரன் இவன், இவன் தாழ்ந்தவன், இவன் உயர்ந்தவன் என்ற வித்தியாசங்கள் இருப்பதில்லை. இந்த நிலைமையில் ஜாதியின் அடையாளமாகிய பூணூல் தானே நழுவி விடுகிறது. ஆனால் உயர்வு தாழ்வும் வித்தியாசமும் காணக்கூடிய மனோபாவம் இருக்கும் வரையில், பலவந்தமாய் ஒருவன் பூணூலைக் கழற்றி எறிந்துவிடக்கூடாது.

315. புயல்காற்றடிக்கும்போது அரசமரம் இன்னது, ஆலமரம் இன்னது என்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. அதுபோல, உண்மை ஞானமாகிய புயற்காற்று ஒருவனுக்குள் அடிக்கும்போது அவனிடம் ஜாதி பேதம் இருக்கமுடியாது.

316. பகவத் ப்ரேமையாகிய அமிர்தத்தை ஆழ்ந்து பருகினவனுடைய நிலையானது கட் குடியனுடைய நிலைமைக்குச் சமானமாகும். ஆதலால் அவன் இன்னாரிடம் இப்படி நடந்துகொள்ள வேண்டுமென்கிற நியதியை அனுசரிக்கக் கூடாதவனாகிறான்.

317. கிருஷ்ண கிஷோர் ஒரு சமயம், "நீர் ஏன் பூணூலைக் கழற்றிவிட்டீர் ?" என்று என்னைக் கேட்டார். என்னிடம் இந்த மாறுதல் ஏற்பட்டபோது, (அதாவது கடவுள் தரிசனமும் ஆத்ம ஞானமும் உண்டானபோது) ஆடி மாசத்துப் பெருங்காற்றிலகப்பட்ட பொருள்கள் அடித்துக்கொண்டு போகப்படுவதைப்போல எல்லாப் பொருள்களும் போய்விட்டன. நிலத்தின் எல்லையைக் காட்டும் வேலிகளெல்லாம் போய்விட்டன. அதுபோலத்தான் என்னுடைய நிலைமையும் ஆயிற்று. வெளி ஞாபகமே இல்லை ; எனது வஸ்திரத்தையும் பூணூலையும் காப்பாற்ற யார் இருந்தனர் ?

ஈசுவர ஞானத்திலேயே அழுந்திக்கிடந்த எனக்கு நாள் முழுதும் நான் ஆடையற்றவனாக விருந்தது கூடத் தெரியவில்லை. ஆகவே பூணூலை அகற்றியதற்காகக் கிருஷ்ண கிஷோர் என்னைக் கடிந்து கொண்டபோது, "இந்தக் கடவுள் பைத்தியம் ஒருதரம் உம்மைப் பிடித்தாட்டினால், அப்போது எல்லாம் நீரே அறிந்துகொள்வீர்" என்று நான் பதில் சொன்னேன்.

318. பகவந் நாமத்தைச் சொல்பவர்கள் பரிசுத்தர்கள்.

அரியாதஹை (தக்ஷிணேசுவரத்துக்கு அருகாமையிலுள்ள ஓர் ஊர்) என்னுமிடத்தில் வசித்து வந்த கிருஷ்ண கிஷோர் என்னும் ஒரு பெரியார் ஒருதரம் பிருந்தாவனத்துக்குத் தீர்த்த யாத்திரையாகச் சென்றார். அங்கு ஒருநாள் நடந்து செல்கையில் தாகமேலீட்டால் ஒரு கிணற்றண்டை நின்றுகொண்டிருந்த ஒருவனைக் கண்டு தமக்குக் கொஞ்சம் தண்ணீர் முகந்து கொடுக்கும்படி அவனைக் கேட்டார். அவன் தான் ஒரு தாழ்ந்த ஜாதியானென்றும், பிராம்மணருக்குத் தண்ணீர் முகந்து கொடுக்க அருகனல்லவென்றும் சொன்னான். "பகவந் நாமத்தைச் சொல்லிப் பரிசுத்தனாக்கிக் கொள்" என்றார் கிருஷ்ண கிஷோர். அம்மனிதன் அப்படியே செய்து, கொஞ்சம் தண்ணீர் முகந்து கொடுத்தான். பரம வைதிகப் பிராம்மணரான கிருஷ்ணகிஷோர் அந்த ஜலத்தை அருந்தினார். பகவந் நாமத்தில் அவருடைய நம்பிக்கை எவ்வளவு அதிகமாக இருந்ததென்பதைப் பாருங்கள்.

319. கட்குடியன் ஒருவன் தனது சட்டையைச் சில சமயம் தலையிலும் சில சமயம் காலிலும் மாட்டிக் கொள்வதைப்போல, பகவத் ப்ரேமையில் ஈடுபட்டவன் ஒருவன் வெளியுலக விஷயங்களில் ஞாபகமில்லாதவனாக இருக்கிறான்.

320. இக்காலத்தவர் ஒவ்வொரு பொருளினுடைய ஸாரத்தை மட்டுமே கிரகிக்கிறவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மத விஷயத்திலும் ஸாரமாயிருப்பவைகளை மட்டும் கிரகிப்பார்களேயன்றி (கிரியை, சடங்கு, கொள்கை, கோட்பாடு முதலிய) அதன் முக்கியமல்லாத விஷயங்களைக் கவனிக்கமாட்டார்கள்.

321. மீனை உண்பவர்கள் உபயோகமற்ற அதன் தலையையும் வாலையும் தள்ளிவிட்டு மிருதுவான அதன் நடுப்பாகத்தையே கொள்வார்கள். அதுபோல நமது சுருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கும் பழைய விதிவிலக்குகளில் உபயோகமில்லாதவற்றைத் தள்ளியும் சீர்திருத்தியும் தற்காலத்துக்கு அனுகுணமாகும்படி செய்துகொள்ள வேண்டும்.

6

விக்ரக ஆராதனை

322. வீடு கட்டும்போது சாரம் அவசியம் வேண்டியிருக்கிறது. அவ்வீடு கட்டி முடிந்துவிட்டால், சாரத்தைத் தேடுபவர் யாருமில்லை. அதுபோல, ஆரம்பத்தில் விக்ரகாராதனம் அவசியமாக விருக்கிறது. அப்பால் அவசியமில்லை.

323. முதன் முதலில் பெரிய எழுத்துக்களாக எழுதிக் கற்றுக் கொண்ட பிறகு சிறிய எழுத்துக்களாக எழுத ஒருவன் கற்றுக்கொள் வதைப்போல, உருவமுள்ள வஸ்துவின்மீது மனதைச் செலுத்தி ஏகாக்ர சக்தியை ஒருவன் அடையவேண்டும். அதில் அவனுக்குத் தேர்ச்சி உண்டான பிறகு உருவமற்ற வஸ்துவினிடம் மனதைச் சுலப மாகச் செலுத்தலாம்.

324. குறிபார்த்துச் சுடுபவன், முதலில் பெரிய பொருள்களைக் குறியாகக்கொண்டு சுடக் கற்றுக் கொள்ளுகிறான். அனுபவம் பெறப் பெற, சிறு குறிகளை நோக்கிச் சுடுகிறான். அதுபோல, உருவமுள்ள விக்ரகத்தினிடம் மனம் நிற்கும்படியான பயிற்சியுண்டான பிறகு உருவ மில்லாத வஸ்துவினிடம் அது நிலைத்திருப்பது சுலபமாகும்.

325. விளையாட்டுப் பழமும், விளையாட்டு யானையும் வாஸ்தவ மான பழத்தையும் யானையையும் நினைப்பூட்டுவதைப்போல ஆராதிக்கப் படும் விக்ரகங்கள், நித்யனும் அரூபியுமான ஈசுவரனை நினைப்பூட்டு கின்றன.

326. குருதேவர் ஒருநாள் சிஷ்யர் ஒருவரை நோக்கிச் சொன்ன தாவது :—“நீ மண்ணாலான விக்ரகங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந் தாய். அதற்கும்கூட அவசியம் உண்டு. ஆத்ம பரிபக்குவத்தில் வெவ்வேறு நிலையிலுள்ள மனிதர்களுக்குத் தக்கபடி, இப்படிப்பட்ட பலவிதமான ஆராதனை மார்க்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.”

327. குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கும் விஷயத்தில், ஒவ் வொரு குழந்தைக்கும் ஒத்துக்கொள்ளுகிற ஆகாரத்தையே தாய் கொடுக்கிறாள். ஒரு குழந்தைக்குக் கஞ்சி, ஒன்றுக்குச் சாதம், இன் னொன்றுக்குப் பால் இப்படியாகக் குழந்தைகளின் உடலுக்கும் ஜீரண சக்திக்கும் தக்கபடி ஆகாரம் கொடுப்பாள். அதுபோல ஜனங்களின் நிலைமைகளுக்குத் தக்கபடி பல மார்க்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

328. ஒரு சிஷ்யன் :—ஈசுவரனுக்கு உருவம் இருக்கிறதென் பதை ஒருவன் நம்பலாம். ஆனால் ஆராதிக்கப்படும் கல் அவ் ஈசுவரன் அல்லவே ?

பகவான்:—ஏன் அதைக் கல் என்கிறாய் ? திவ்விய விக்ரகம் சின்மய மானது.

329. பிரபல விக்ரக நிக்ரகரான கேசவ சந்திர ஸேனரை நோக்கி பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொன்னதாவது :— இந்த விக்ரகங்கள் ஏன் உமது மனத்தில் கேவலம் மண், கல் முதலிய

அசேதனப் பொருள்களின் நினைவை உண்டுபண்ணுகின்றன? நித்யையும், ஆனந்தமயியும், சர்வக்ஞையுமான லோக மாதா இந்த உருவங்களிலும் இருப்பதான மனோபாவனை ஏன் உமக்கு உண்டாகக்கூடாது?

330. தான் ஆராதிக்கும் தேவதைகளின் விக்ரகங்கள் வாஸ்தவத்தில் தெய்விகம் வாய்ந்தவை என்று ஒருவன் நம்புவானுனல் அவன் தெய்விகத் தன்மையை அடைவான். ஆனால் அவ்விக்ரகங்கள் கேவலம் கல்லும் செம்புமே எனக் கருதுபவனுக்கு விக்ராராதனையால் யாதொரு பயனுமுண்டாகாது.

331. விக்ராராதனையில் ஏதாவது தவறுகள் இருக்குமானாலும், அவ்வித ஆராதனையெல்லாம் தன்னைக் குறித்தே என்பது அவ்வீசுவரனுக்குத் தெரியாதா? அவைகள் தனக்கே என்பதைத் தெரிந்துகொண்ட ஈசுவரன், அவைகளை வெகு பிரியத்துடன் அங்கீகரிப்பான். ஈசுவரனை பக்தி செய். அதுதான் நீ உடனே செய்யவேண்டிய கடமை.

332. ஒருவன் ஈசுவரனைக் காணும்போது, விக்ரகம் முதலிய எல்லாப் பொருள்களும் ஆத்மாவின் தோற்றங்களென்பதைத் தெரிந்துகொள்வான். அப்படிப்பட்டவனுக்கு, விக்ரகம் கல்லால் ஆக்கப்பட்டதாகத் தோன்றுமல், சின்மயமாகவே தோன்றும்.

தீர்த்த யாத்திரைகளின் பயன்

333. பசுவினிடமுள்ள பாலானது, வாஸ்தவத்தில் அதன் சரீர முழுவதிலும் ரத்த ரூபமாய்ப் பரவியுள்ளது. என்றாலும் அப் பசுவின் காதுகளையோ கொம்புகளையோ பிசைந்தால் பால் வாராது. அதற்கு அதன் முலைக்காம்புகளைத்தான் பிடித்துக் கறக்க வேண்டும். அதுபோல, ஈசுவரன் இவ்வுலகத்தில் எல்லாவிடங்களிலும் பரவியிருக்கிறுன். ஆயினும் எல்லாவிடத்தும் அவனை உன்னால் காணமுடியாது. பூர்வ பக்தர்களுடைய குணவிசேஷம் நிரம்பிய புண்ய ஸ்தலங்களாகிய கோயில்களில் தான் அவன் சுலபமாய்த் தென்படுகிறுன்.

334. ஈசுவரனை அடைவதற்காக அநேகமாயிரம் ஜனங்கள் நெடுநாட்களாக ஜபம், தபம், தியானம், பிரார்த்தனை, வந்தனை வழிபாடுகள் செய்துவரும் இடங்களில் ஈசுவர ஸாந்நித்யம் இருக்குமென்பதைத் தெரிந்துகொள். அவர்களுடைய பக்தியினால் ஆத்மிக எண்ணங்கள் உருவடைந்துள்ளனபோல அவ்விடங்கள் இருக்கின்றன. ஆதலால் அப்படிப்பட்ட இடங்களில் ஒருவனுக்கு ஆத்மீக அறிவு எளிதில் உண்டாகி ஈசுவர தரிசனம் கிடைக்கிறது. புராதன காலந்தொடங்கி, கணக்கற்ற ஸாதுக்களும் பக்தர்களும் இத் தீர்த்தங்களுக்கு வந்து, ஈசுவர தரிசனம் வேண்டுமென்று, ஆசைகளையெல்லாம் விட்டுவிட்டு, உள்ளன்போடு கதறியிருக்கின்றனர். ஆதலால் ஈசுவரன் எங்கும் இருக்கிறுன் என்றாலும் இத்தகைய க்ஷேத்திரங்களில் விசேஷமாகத் தன்னைத் தோற்றுவிக்கிறுன். உதாரணமாக, பூமியில் தோண்டினால் எங்கேயும் ஜலம் காணப்

படும். ஆனால் குளம், கிணறு, ஏரி இவையுள்ள விடத்தில் தோண்ட வேண்டிய அவசியமில்லை. எப்போது வேண்டுமானாலும் ஜலத்தை யெடுத்துக் குடிக்கலாம்.

335. வயிறு நிறைய புல்லைத்தின்ற பசு, ஓரிடத்தில் சாந்தமாகப் படுத்துக்கொண்டு அசைபோடுவதைப்போல, தீர்த்த யாத்திரைக்கு நீ போய் வந்தால், அந்தந்த திவ்ய ஸ்தலத்தில் உன் மனத்தெழுந்த தூய எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்துத் தனியிடத்தில் உட்கார்ந்து அவற்றிலேயே ஆழ்ந்து போகவேண்டும். அவ்வாறின்றி அங்கிருந்து வந்ததும், அவ்வெண்ணங்கள் உன் மனத்தை விட்டகன்று போகும்படி, நீ உலக விவகாரங்களில் தலையிட்டுக் கொள்வது கூடாது.

336. பூமியின் நான்கு திக்குகளிலும் பிரயாணம் செய்தாலும் உண்மையான தர்மத்தை ஓரிடத்தும் நீ காணமாட்டாய். இருப்பதெல்லாம் உன் உள்ளத்திலேயே இருக்கிறது.

337. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ்வரத்தில் இருக்கையில் அவருடைய சிஷ்யர்களில் பலர் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போகவேண்டும் என்று கூறியபோது அவர் பதில் கூறியதாவது : 'எவருக்கு இங்கு பக்தி உண்டாகிறதோ அவருக்கு அங்கும் பக்தி உண்டாகும். இங்கு பக்தியில்லையானால் அங்கும் பக்தி உண்டாகாது. (தமது அருகில் இருப்பதாலேயே ஒருவர் பக்தராகக் கூடும் என்பதும், ஹ்ருதயத்தில் பக்தியரும்பினால்தான் வெளியிலும் பக்தி வரும் என்பதும் பகவான் கருத்து.) பக்தி குடிகொண்ட மனதையுடையவன் க்ஷேத்திரங்களுக்குப் போனால் அவனுடைய பக்தி அதிகமாகும். பக்தி சிறிதுமே இல்லாதவன் எங்கே போனாலும் பிரயோசனமில்லை. சில சமயம் ஒருவருடைய மகன் வைராக்கியத்தினால் காசிக்கோ பிருந்தாவனத்துக்கோ ஓடிவிட்டதாகக் கேள்விப்படுகிறோம். சில காலத்திற்குப் பிறகு அவனிடமிருந்து தன் குடும்பத்துக்குக் கடிதமும் பணமும் வந்து சேருகின்றன. அந்தக் கடிதத்தில் வெகு சிரமப்பட்டு ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டதாக எழுதுகிறான்! பலர் க்ஷேத்திரங்களுக்குப்போய் வாழ்நாள் முழுதும் அவ்விடமே தங்கி வாழப் புறப்பட்டுப் போகிறார்கள். சில நாளைக்கெல்லாம் அவர்களுள் அநேகர் கடையோ வேறெதுவோ ஒன்று துவக்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இத்தகையோர் க்ஷேத்திரங்களுக்குச் சென்று பிரயோஜனமென்ன ? நான் காசி பிருந்தாவனம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போயிருந்தேன். அங்கு நான் கண்டது என்ன? இந்த இடங்கள் போலவே அந்த இடங்களும் இருந்தன. இங்கே யிருப்பனபோன்ற மாமரங்களும், புளியமரங்களும், மூங்கிற் புதர்களும் அங்கும் இருக்கின்றன. ஆகவே ஹிருதயனைப் பார்த்து ' நாம் இங்கே எதைப் பார்க்க வந்தோம். நம்மூர்ப் பக்கம் இருப்பது போலத்தான், இங்கும் எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஒரு வித்தியாசம் மாத்திரம் காண்கிறேன். வங்காள தேசத்து ஜனங்களைக் காட்டிலும் இவர்கள் பலசாலிகளாக இருக்கின்றார்கள். அவ்வளவே ' என்றேன்.

ஸாது ஸங்கம்

338. பாலும் நீரும் சேர்க்கப்படுமானல் இரண்டும் ஒன்ருகக் கலந்துவிடும். பாலே மாத்திரம் வேருகப் பிரிக்கமுடியாது. அதேபோல ஆத்ம ஞானம் அடைய விரும்பும் சாதகன் லௌகிகர்களோடு தாரதம்யம் இல்லாமல் பழகுவானுனல் தன் இலக்ஷியத்தை யிழப்பதோடு முன்னிருந்த பக்தி, சிரத்தை, ஊக்கம் இவையெல்லாமும் இவனுக்குத் தெரியாமலேயே பாழ்பட்டுப் போய்விடும். ஆதலால் அவனுக்கு ஸாது ஸங்கம் வேண்டும்.

339. ஆத்ம சாதன அபிவிருத்திக்கு அவசியமானவைகளில் ஸத் ஸங்கம் ஒன்ருகும்,

340. ஒருவர் சிரமப்பட்டு விறகும் பிறவும் தேடி நெருப்பு உண்டாக்குகின்ருர். அதன் உதவியால் பலர் குளிர் காய்கின்றனர். அதேபோல மிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்து பகவானையடைந்த மகான்களோடு பழகுவதால் பலர் பகவானிடத்தில் சுலபமாக மனத்தை வைக்க முடிகின்றது.

341. வக்கீலைக் காணும்போது, வழக்குகளும் நியாய ஸ்தலங்களுமே ஞாபகத்துக்கு வரும். அதுபோல, பக்தனைக் காணும்போது, ஈசுவரனையும் மறுமையையும் பற்றிய ஞாபகம் வரும்.

342. ஒருவன் எப்படித் தனது வாழ்நாளைக் கழிக்கவேண்டும்? அடுப்பில் உள்ள நெருப்பு, நன்ருய் எரிவதற்கும், அணைந்து போகாமலிருப்பதற்குமாக அடிக்கடி ஓர் இரும்புக் கம்பியால் தூண்டிவிடப்படுவதைப்போல மனமும் அடிக்கடி ஸாது ஸங்கத்தினுல் தூண்டிவிடப்படவேண்டும்.

343. கொல்லன், துருத்தியால் ஊதி, தனது உலை நெருப்பு அணைந்து போகாமல் பார்த்துக் கொள்வதைப்போல, ஸத் ஸங்கத்தால் மனமானது சுத்தமாய் ஜொலிக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

344. ஸத் ஸங்கமானது, அரிசி கழுவப்பட்ட ஜலத்துக்குச் சமானம். இந்தக் கழுநீர் போதையைத் தவிர்க்கும் குணமுடையது. அதுபோல, ஸாது ஸங்கமானது வீண் ஆபாசங்களாகிற மதுவைக் குடித்துப் போதைக்குள்ளாகியவர்களுடைய மயக்கத்தைத் தவிர்க்கிறது.

345. ஒரு பணக்கார ஜமீன்தாருடைய காரியஸ்தன் கிராமங்களுக்குப் போகும்போது, குடிஜனங்களைப் பலவிதத்திலும் துன்பப்படுத்துகிருன். ஆனுல் அவன் யதாஸ்தானத்துக்குத் திரும்பி வந்து எஜமானன் கண்ணெதிரில் இருக்கும்போது, தனது குணத்தை மாற்றிக்கொண்டு, ஸாத்வீகம் உள்ளவன்போல நடித்து, குடிஜனங்களைப் பிரியத்துடன் நடத்தி, அவர்களுடைய குறைகளை யெல்லாம் தீர விசாரித்து, பாரபக்ஷமின்றி நியாயம் செலுத்துவதற்கு முயல்கிருன். எஜமானரின் முன்னிலையினுலும் அவரிடமுள்ள பயபக்தியினுலும் குரூர காரியஸ்தன் குணவானுகிருன். அதுபோல, ஸாது ஸங்கமானது, துஷ்டர்களுடைய

மனத்தில் பயபக்தியைத் தோற்றுவித்து அவர்களை நல்வழிக்குக் கொண்டு வருகிறது.

346. நெருப்பில் போடப்பட்ட ஈர விறகும் சீக்கிரத்தில் உலர்ந்து எரியத் தொடங்குகிறது. அதுபோல, ஸாது ஸங்கமானது உலகப்பற்றுள்ள ஜனங்களின் மனத்திலுள்ள காமமும் ஆசையுமாகிய ஈரப்பசையை வற்றச் செய்கிறது. அப்பால் அவர்களிடம் விவேக மாகிய நெருப்பு நன்றாக எரியும்.

347. ஜகன்மாதாவான உமாதேவி, ஹிமவானின் புத்திரியாக அவதரித்தபோது, அந்த ஹிமவானுக்கு ஸர்வேசுவரியின் திவ்ய ரூபங்களை யெல்லாம் காட்டியருளினள். ஆனால், கிரிராஜன், வேத ஸ்வரூபியான பிரம்மத்தைக் காட்டும்படி அவளைக் கேட்டபோது அவள், "பிதாவே! பிரம்மத்தைக் காணவேண்டுமானால் நீர் உலகத்தை முழுவதும் துறந்தவர்களான ஸாதுக்களுடைய ஸங்கத்தில் வாழவேண்டும்" என்று சொன்னதாகப் புராணங்கள் கூறுகின்றன.

348. ஒரு யானையை நன்றாகக் குளிப்பாட்டி, அதனிஷ்டப்படி உலாவ விட்டுவிட்டால், அது வெகு சீக்கிரத்தில் தன்னை அழுக்காக்கிக் கொள்வது நிச்சயம்; ஆனால் குளிப்பாட்டிய பிறகு அதனுடைய தொழுவத்திலேயே அதைக் கட்டிவைத்தால் அது அழுக்காக்கிக் கொள்ளாது. அதுபோல, ஸாது ஸங்கத்தால் தூயனான நீ உலகத்தாரோடு தாராளமாகப் பழகினால் உனது தூய்மையை இழப்பது நிச்சயம். ஆனால் ஈசுவரனிடம் உனது மனத்தை நிறுத்துவாயானால், ஆத்ம விஷயமாக உனக்கு ஒருபோதும் அசுத்தமுண்டாகாது.

பகவந் நாம ஜபம்

349. விஷயாதிகளில் மனம் இழுப்புண்டு கிடப்பவர்களுக்கு துவைத மார்க்கத்தைப் போதிக்கவேண்டும். பக்தி சாஸ்திரமாகிய நாரத பாஞ்சராத்ரத்தில் கூறியுள்ளபடி பகவன் நாமத்தை உரத்த குரலில் உச்சரிக்கும்படி செய்யவேண்டும்.

350. பகவான் ஒரு பக்தருக்குக் கூறியதாவது:—அடக்குதற்கரிய இந்திரியங்கள் யாவும் பக்தி மார்க்கத்தால் சுலபமாய் அடங்கிவிடும். உன் ஹிருதயத்தில் பக்தி பெருகும்போது விரக போகங்களும் துச்சமெனத் தோன்றும். தங்கள் குழந்தை மரணமடைந்த அன்று மனைவிக்கும் புருஷனுக்கும் சிற்றின்பத்தில் இச்சை செல்லுமா!

பக்தர்:—சரி, ஆனால் கடவுளிடம் பக்தி செய்ய நான் இன்னும் கற்றுக்கொள்ளவில்லையே.

பகவான்:—அவனுடைய புனிதநாமத்தைச் சதாகாலமும் உச்சரிப்பாய். இவ்விதம் செய்தால், காமம், கோபம் ஆகிய பாபங்களெல்லாம் அகன்றுவிடும். சரீர சம்பந்தமான சகல இன்பங்களும் உன்னிடமிருந்து விலகிவிடும்.

பக்தர் :—ஆனல் அவனது திருநாமத்தை உச்சரிப்பதில் மனம் இன்பம் கொள்ளவில்லையே.

பகவான் :—அவனது நாமத்தில் பிரீதியுண்டாகும்படி ஹிருதய பூர்வகமாகப் பகவானைப் பிரார்த்திப்பாய். உண்மையாக அவர் உனது பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பார். நாமத்தில் உனக்கு இச்சை யில்லை யென்று சொன்னாய்! ஜன்னி பிறந்தவனுக்கு எந்த உணவிலும் ருசியில்லை யென்றால் அது அவன் வாழ்வு ஆபத்திலுள்ளதற்கு அறிகுறி யாகும். ஆனல் கொஞ்சமாவது அவனுக்குச் சாப்பாட்டில் பிரீதி ஏற் பட்டால் அப்போது அவன் உயிர்த்தெழுவான் என்பதை நம்பலாம். ஆகவே அவனுடைய திருநாமத்தில் இச்சை கொள் என்று உன்னிடம் சொல்லுகிறேன். துர்க்கா, கிருஷ்ண, சிவா ஆகிய நாமங்களில் எதை யாவது சதா உச்சரிப்பாய். நாளுக்குநாள் அவனுடைய திருநாம உச் சாரணையால் நீ ஆனந்தங் கொள்வாயானல் உனது மாயை நீங்கிவிடும். அவனது அருள் நிச்சயமாக உன்னை வந்தடையும். அதன் பிறகு நீ மனித ஜன்மத்தை யெடுத்த பலனைப் பெற்றவனவாய்.

351. என்ன, பகவானது திருநாமம் சாமான்யமானது என்று நினைக்கின்றாயா? பகவானுக்கும் அவனது திருநாமத்துக்கும் வித்தி யாசமே கிடையாது. சத்தியபாமை பொன்னையும் ஆபரணங்களையும் வைத்து ஸ்ரீ கிருஷ்ணபகவானது எடைக்கு ஈடுகட்ட முயன்று தோல்வியுற்றாள். ஆனல் ருக்மிணியோ ஸ்ரீ கிருஷ்ணனுடைய நாமத்தை ஒரு துளசி தளத்தில் எழுதி தராசின் மற்றத் தட்டில் வைத்தாள். என்ன ஆச்சர்யம்! அது கிருஷ்ணனுடைய எடைக்குச் சமானமாக நின்றது.

352. உனக்கு ஈசுவர தரிசனத்தில் விருப்பமிருந்தால் ஹரி நாமோச்சாரண பலனில் திடமான நம்பிக்கைகொள். நித்யம் இது, அநித்யம் இது என்பதைப் பகுத்தறிய முயற்சி செய்.

353. 'பகவந்நாமம் சகல சக்தி வாய்ந்தது. அதனை உச்சரிப்ப தால் உடனே பலன் ஏற்படாமல் போகலாம். ஆனல் வீட்டின் முகப் பில் சிதறி விழுந்த விதை பல நாட்களுக்குப் பிறகு தரையில் விழுந்து முளைப்பதுபோல பகவந்நாம உச்சாரணையால் ஏற்படும் பலன் என்றாவது ஒரு நாள் வந்தே தீரும்' என்று ஸ்ரீ சைதன்யர் கூறியிருக்கின்றார்.

354. தெரிந்தோ தெரியாமலோ, தன்னறிவுடனே அறிவில்லா மலேயோ, எந்த ஸ்திதியிலாகட்டும், ஒருவன் பகவந்நாமத்தைச் சொல் வானனல் அவனுக்கு அதன் பலன் கிட்டும். தானகவே விரும்பி ஆற்றுக்குப் போய்க் குளிப்பவனுக்கும், வேறொருவனல் ஆற்றில் தள் ளப்படுபவனுக்கும், அல்லது தூங்கும்போது வேறொருவன் கொட்டிய தண்ணீரால் நனைபவனுக்கும் ஸ்நாந பலன் ஒருங்கே ஏற்படுகிறது அல்லவா?

355. அமிருத சாகரத்தில் விழுபவன் தெரிந்து விழுந்தாலும் தெரியாமல் விழுந்தாலும் விழுந்த மாத்திரத்தில் மரணமற்றவனகிறான்.

அதுபோல ஈசுவரனுடைய நாமத்தைச் சொல்பவன் அதன் பெருமையை அறிந்தோ அறியாமலோ எப்படிச் சொன்ன போதிலும் கடைசியில் மரணமற்றவனுகிறுன்.

356. ஒரு மதகுருவானவர், 'கடவுள் சாக்ஷாத்காரத்திற்கு அவனது நாமத்தை உச்சரித்தாலே போதும்' என்ருர். அவருக்குப் பகவான் கூறியதாவது: "ஆம். பகவந் நாமம் மகா சக்திவாய்ந்தது என்பது உண்மைதான். என்ருலும் அன்பில்லாமலும், பக்தியில்லாமலும் பகவந் நாமத்தை உச்சரித்தால் மாத்திரம் போதுமா? உள்ளங் கரைந்து உருக வேண்டும். பெண்ணுசையிலும் பொன்னுசையிலும் மனத்தை அலேயவிட்டு நாமத்தை மாத்திரம் நாவால் உச்சரிப்பதால் என்ன பலன்? மூணு மூணுவென்று மாய மந்திரங்களே உச்சரித்துவிட்டாலே தேள் விஷம் இறங்கிவிடாது. சாணப்புடமும் போட வேண்டும். (மந்திரிப்பதோடு சாணப்புடமும் போட்டால்தான் தேள் விஷம் நீங்கும் என்பது வங்காள தேசத்துக் கிராமவாசிகளின் நம்பிக்கை.) பகவந் நாமத்தை ஒரு முறை உச்சரிப்பதால் சகல பாபங்களும் நீங்கிவிடும் என்பது வாஸ்தவம். ஆனுல் மனிதன் மறுகணமே தீய வாழ்க்கையை ஆரம்பித்து விடுகின்ருனே! இனி யொருபோதும் தீய காரியத்தைச் செய்யவே மாட்டேன் என்று விரதம் கொள்ளும் திடச்சித்தம் அவனிடமில்லே. கங்கையில் நீராடுவதால் சகல பாபங்களும் அகன்று விடுகின்றன. என்ருலும் பிரயோஜனம் ஒன்றுமில்லே. கங்கையில் இறங்கி நீராடுவதற்குமுன், ஒருவன் செய்த பாபமெல்லாம் கரையிலுள்ள மரங்களில் போய் ஒளிந்துகொண்டிருந்து, அவன் நீரினின்றும் வெளிவந்ததும் திரும்பவும் அப்பாபங்கள் அவன் மீதேறிக் கொள்வதாகக் கூறுவதுண்டு. ஆகவே புண்ணிய கங்கையில் ஸ்நானம் செய்தாலும் மறுபடியும் அவன் பழைய மனிதனுக்கவே இருக்கிருன். அதனுல்தான் நான் சொல்கிறேன்: "பகவந் நாமத்தை சர்வதா காலமும் உச்சரிப்பதோடு, பக்தி வேண்டும்; குன்ருத அன்பு வேண்டும்; அநித்தியப் பொருள்களான, பொன்புகழ் போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகல வேண்டும்" என்று மனமுருகிப் பகவானேப் பிரார்த்தனே செய்வீராக.

357. பக்தியுடன் பகவந் நாமத்தைப் பாடு. அப்போது மலே போலக் குவிந்திருக்கும் உனது பாபங்களெல்லாம், நெருப்புப் பொறி ஒன்றிஞல் மலேபோலக் குவிந்த பஞ்சுப் பொதிகள் எரிந்து சாம்பலாவதைப்போல நசித்துப் போய்விடும்.

358. உலக வாழ்க்கையினர் செய்யும் பக்தி ஸாதனேகள் தற்காலிகமேயாம். அவைகள் நிலேயான அடையாளங்களே உண்டாக்குவதில்லே. ஆனுல் ஈசுவரனுக்கே தங்களே அர்ப்பணம் பண்ணியவர்கள் ஒவ்வொரு மூச்சிலும் பகவந் நாமத்தையே உச்சரிக்கின்றனர். சிலர் "ராம், ராம்" என்று எப்போதும் வாய்க்குள்ளேயே சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஞான மார்க்கத்தை அனுஷ்டிப்பவர்கள், "ஸோஹம்," என்று சொல்லுவார்கள். இன்னும் சிலருடைய நாக்கு

சதா சர்வமும் மந்திரோச்சாரணத்தாலேயோ பிரார்த்தனையாலேயோ அசைந்துகொண்டே யிருக்கும்.

359. சாந்தமான இடத்தில் உட்கார்ந்துகொண்டு, பகவந் நாமத்தை மௌனமாக உச்சரிப்பதுதான் ஜபம். ஏகாக்ர சித்தத்துடன் ஒருவன் ஜபம் செய்வானுனல் அவனுக்குத் திவ்ய தரிசனம் உண்டாவது நிச்சயம். அதாவது அவன் நிச்சயமாக ஈசுவரனை அடைவான். ஒரு தடாகத்தில் ஒரு பெரிய மரக்கட்டை கிடக்கிறது. அதன் ஒரு கோடியில் பிணைக்கப்பட்டிருக்கும் சங்கிலியானது கரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கிறது. சங்கிலியைப் பிடித்துக்கொண்டு கணுக்கணுவாய்த் தாண்டிச் சென்ருல் நீ அந்தக் கட்டையினிடம் போய்விடுவாய். அதுபோல, ஜபத்தின் மூலமாக ஒருவன் ஈசுவரனையேபற்றிச் சிந்தித்துத் தியானத்தில் ஆழ்ந்திருப்பானுனல், அவன் கடைசியில் அவ்வீசுவரனை அடைவது நிச்சயம்.

360. கைகளினுல் தாளம் போட்டுக்கொண்டே இனிமையான ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்; அப்போது உனக்கு ஏகாக்ரசித்த முண்டாகும். மரத்தின் அடியிலிருந்து கைதட்டினுல் அம்மரக் கிளைகளில் இருக்கும் பக்ஷிகளெல்லாம் நாலா பக்கங்களிலும் பறந்து போய்விடும். ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு கைதட்டினுல் உன் மனத்திலுள்ள தீய சிந்தனைகளெல்லாம் அகன்ருேடும்.

அத்தியாயம் 10

ஸாதன மார்க்கங்கள்

[ஆன்ம வாழ்க்கையில் தோன்றும் சில தடைகள்—பூர்வ வாஸனைகளின் வலிமை—ஸித்திகளின் சிக்கல்—தானமும் தருமமும்—உடையும் உண்டியும்—உடலைக் கருதும் முறை—துக்கத்தைக் கருதும் முறை—பொறுமை—மௌனம்—வணக்கமும் ஆன்ம உயர்வும்—எளிமை—ஆசைகளை யடக்குதல்—ஸ்திரீகளிடம் நடந்துகொள்ளும் முறை—ஸாதகனும் அவன் குடும்பமும்—பஜனையும் பக்தியும்.]

ஆன்ம வாழ்க்கையில் தோன்றும் சில தடைகள்

361. அதைரியம், துவேஷம் பயம் இவைகள் குடிகொண்டிருக்குமிடத்துக்கு ஈசுவரன் வருவதில்லை.

362. கனத்த வஸ்துவுள்ள தராசுத் தட்டுக் கீழே போகின்றது. இலேசானது மேலே உயர்கின்றது. அதேபோல, பல உலக இலேசங்களால் பாதிக்கப்படுவர் அவற்றிலேயே மூழ்கி விடுகின்றனர். அதிகம் இல்லாதவர்கள் பகவானது திருவடிக்கு உயர்த்தப்படுகின்றனர்.

363. பிறருடைய குண தோஷங்களைப்பற்றிப் பேசுவதில் காலத்தைச் செலவிடுபவன் தன் காலத்தை வீணிலே கழிப்பவனாகிறான். ஏனெனில் அப்படிச் செலவிடப்பட்ட காலம் தன்னையாவது ஈசுவரனையாவது பற்றிச் சிந்திக்கப்படாமல் பிறரைப்பற்றி யாதொரு பிரயோசனமுமில்லாமல் சிந்திக்கப்பட்ட காலமாதலால்.

364. எப்படிப்பட்ட மன நிலைமையில் ஈசுவர தரிசனம் உண்டாகும் ? மனம் அமைதியுற்றிருந்தால் ஈசுவரனைக் காணலாகும். மனமாகிய கடல் ஆசைகளாகிய காற்றால் சலனமடைந்திருந்தால், அதில் ஈசுவரனுடைய பிரதிபிம்பம் தோன்றாது. அப்போது ஈசுவர தரிசனமும் கிட்டாது.

365. வயிறு நிறைந்து அஜீரணத்தால் அவஸ்தைப்படும்போது கூட, இன்சுவைப் பண்டங்களைக் கண்டதும் நோயாளியின் நாக்கில் ஜலம் ஊறும். அதுபோல மனிதன் ஆசைகள் சிறிதேனும் இல்லாத தூயனாக விருந்தாலும் அவனுடைய மனம் செல்வத்தையும் மற்றைய சுகானுபவப் பொருள்களையும் காணும்போது தடுமாறுவது ஸகஜம்.

366. கிணற்றுத் தவளையைப் போன்றிராதே. தன் கிணற்றைக் காட்டிலும் பெரியதும் மேன்மையானதும் வேறொன்றும் இல்லையென்பதாக அது நினைக்கின்றது. அதேபோன்று பிடிவாதமும் மூட பக்தியுமுடையவர்கள் தங்கள் மதம் தவிர மற்றவையெல்லாம் பொய்யென்று கருதுகின்றனர்.

367. ஆதி சங்கராசாரியாரிடம், அவர் செய்ததையெல்லாம் தானும் செய்துவந்த அசட்டுச் சிஷ்யன் ஒருவன் இருந்தான். ஆசாரியர், "சிவோஹம்" என்றபோதெல்லாம் சிஷ்யனும் "சிவோஹம்" என்பான். இந்தச் சிஷ்யனுடைய அசட்டுத் தனத்தைத் திருத்தவேண்டி ஆசாரியர் ஒருநாள், கொல்லன் உலே வழியாகப் போகும்போது, அங்கு உருக்கப்பட்ட இரும்பை ஒரு பாத்திரத்தில் எடுத்து பானம் செய்து, சிஷ்யனையும் அவ்வாறே செய்யச் சொன்னார். ஆசாரியர் செய்த இந்தக் காரியத்தைச் சிஷ்யனும் செய்யச் சக்தியற்றிருந்தபடியால், அது முதல் அவன் "சிவோஹம்" என்று சொல்வதை விட்டுவிட்டான். ஒருவர் செய்ததைப் போலவே தானும் எல்லா விஷயங்களிலும் நடிக்க நினைப்பது எப்போதும் மதியீனம். ஆனல் பெரியோர்களுடைய நடவடிக்கைகளைப் பின்பற்றித் தன்னுடைய ஒழுக்கத்தைச் சீர்திருத்திக்கொள்ள முயல்வது எப்போதும் நல்லது.

பூர்வ வாஸனைகளின் வலிமை

368. பூர்வ கர்ம குணத்தின் (பழைய வாஸனைகளின்) சக்தி எவ்வளவு பலமானது! ஓரிடத்தில் சில ஸாதுக்கள் உட்கார்ந்திருந்தபோது ஒரு யுவதி அவ்வழியாகச் சென்றாள். எல்லாரும் எப்போதும் போல் ஈசுவரத் தியானத்திலேயே ஆழ்ந்திருக்க, ஒருவன் மட்டும் அவளைக் கடைக்கண்ணால் பார்த்தான். ஸ்திரீ லாவண்யத்தில் ஈடுபட்ட இவன், ஸாதுவாவதற்கு முன்னல் கிருகஸ்தாசிரமத்தி லிருந்து மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தவன்.

369. ஒருநாள் ஓரிடத்தில் காயடிக்கப்பட்ட காளைமாடுகள் இரண்டைக் கண்டேன். அவ்வழியாக ஒரு பசு சென்றது. அதைக் கண்டதும் ஒரு காளைக்குக் காமவிகாரம் ஏற்பட்டது. மற்றொன்றுக்கு ஏற்படவில்லை. அந்தக் காளைக்கு மட்டும் காம விகாரம் உண்டான காரணத்தையறிந்துகொள்வதற்காக அதைப் பற்றிய விவரங்களை விசாரித்தேன். அவைகளினின்றும், அக்காளை வயது முதிர்ந்து, ஒரு பசுவோடு பிணைபட்ட பிறகு காயடிக்கப்பட்டதென்றும் மற்றொன்று இளம்பருவத்திலேயே காயடிக்கப்பட்டதென்றும் தெரியவந்தது. வழக்கம் அல்லது பூர்வ கர்மத்தின் பலன் இப்படிப்பட்டது. காம சுகத்தை அனுபவிக்காமல் உலகத்தைத் துறக்கும் ஸாதுக்களுக்கு ஸ்திரீகளைக் காணும்போது காமவிகாரமே யுண்டாவதில்லை. ஸம்ஸார வாழ்க்கையின் இன்பத்தையனுபவித்த பிறகு, விருத்தாப்பியத்தில் காஷாயம் தரித்துக்கொள்பவர்க்கு, அவர்கள் நீண்ட காலமாகத் தன்னடக்கத்தைக் கைக்கொண்டிருந்தாலும்கூட பழைய வாசனைகள் ஞாபகத்துக்கு வரக்கூடும்.

370. தீயவழியில் செல்லும் மனம், நீசர்கள் மத்தியில் வசிக்கும் பிராமணனையும், பெரிய நகரத்தின் அசுசியான இடத்தில் குடியிருக்கும் கனவானையும் ஒக்கும்.

371. ஒருவர், "எனது பையன் ஹரீசன் பெரியவனானதும் அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்து, அவனிடம் குடும்பப் பொறுப்பை

ஒப்புவித்துவிட்டு, உலகத்தைத் துறந்து யோக மார்க்கத்தை அனுஷ்டிக்கப் போகிறேன்" என்றார். இதைக் கேட்ட பரமஹம்ஸர், "பக்தி பண்ணுவதற்கு உமக்கு ஒருபோதும் சாவகாசம் ஏற்படப் போவதில்லை. 'இனி, ஹரீசனும் கிரீசனும் என்னிடம் அத்யந்தம் பிரியம் பாராட்டுகிறவர்களாக இருக்கின்றனர். நான் உலகத்தைத் துறந்தேனானால் அவர்கள் எனது பிரிவாற்றாமையால் வருந்துவார்கள். ஹரீசனுக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும்; அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டுப் போகிறேன்' என்பீர். இம்மாதிரி உமது ஆசைக்கு முடிவே இராது," என்றார்.

ஸித்திகளின் சிக்கல்

372. அற்புதக் காரியங்களைச் செய்வோரிடமும் சித்திகளைக் காண்பிப்போரிடமும் போகாதே; அவர்கள் கடவுள் நெறியினின்றும் வழிதப்பித் திரிபவர்கள். அவர்களுடைய மனம் பிரம்மத்தையடையும் மார்க்கத்தில் உள்ள 'சித்திகள்' என்னும் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறது. இந்தச் சித்திகளில் அகப்படா வண்ணம் ஜாக்கிரதையாக இருங்கள். அவைகளை விரும்பவே வேண்டாம்.

373. தாழ்ந்த சுபாவமுள்ளவர்கள்தான் வியாதிகளைக் குணமாக்கல், வியாஜ்யங்களை வெல்லல், நீர்மேல் நடத்தல் முதலிய ஸித்திகளை நாடி ஓடுவார்கள். உண்மைப் பக்தர்களோவெனில் ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களைத் தவிர வேறெதையும் நாடுவதில்லை.

374. "என்னை அடைய வேண்டுமென்ற விருப்பம் உனக்கு இருக்குமானால், உன்னிடம் அஷ்ட ஸித்திகளில் ஏதேனும் ஒன்று இருந்தாலுங்கூட உன் மனோரதம் கைக்கூடாது" என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குச் சொல்லியருளினார்.

சித்திகளால் அகங்காரம் உண்டாகிறது. அவ்வகங்காரத்தால் ஒருவன் ஈசுவரனை மறந்துபோகிறான்.

375. ஒரு மனிதன் பதினான்கு வருஷங்களாகத் தனிக் காட்டில் தவஞ்செய்து, நீர்மேல் நடக்கும் சக்தியைப் பெற்றான். இதையடைந்ததற்கு வெகு சந்தோஷப்பட்டு, அவன் தன் குருவிடம் சென்று, "ஸ்வாமி! ஸ்வாமி! நான் நீர்மேல் நடக்கக்கூடிய ஸித்தியைப் பெற்றிருக்கிறேன்" என்றான். அதைக் கேட்ட குருவானவர், "சே, பதினான்கு வருஷங்களாக நீ தவம் செய்ததன் பலன் இதுதானா! உண்மையில் நீ ஒரு தம்பிடிதான் சம்பாதித்திருக்கிறாய். பதினான்கு வருஷங்களாகச் செய்த பிரயத்தனத்தால் நீ நிறைவேற்றக்கூடிய ஒரு காரியத்தைச் சாதாரண ஜனங்கள் ஓடக்காரனுக்கு ஒரு தம்பிடி கொடுத்துச் செய்து விடுகின்றனர்" என்றார்.

376. அசங்கியங்களை வெறுப்பதுபோல, ஸித்திகளையும் அற்புத சக்திகளையும் வெறுக்கவேண்டும். சமயானுஷ்டானமும் இந்திரிய நிக்கிரகமுமாகிற ஸாதனை ஸம்யமங்களால் இவை தாமே உண்டாகும். இத்தகைய

ஸித்திகளில் கருத்தைச் செலுத்துபவன் அதிலேயே நின்றுபோய், மேல்நோக்கிச் செல்லச் சக்தியற்றவனாகிறான்.

377. சந்திரன் என்ற பெயருள்ள ஒருவன் குடிகை சித்தியைப் பெற்றிருந்தான். குடிகையைக் கையில் வைத்துக்கொண்டால் அவன் பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் எங்கு வேண்டுமானாலும் தன்னிச்சைப்படி போகக்கூடியவனாக விருந்தான். முதன் முதலில் அவன் ஈசுவரனை யடையவேண்டுமென்ற தீவிர புத்தியுள்ள பக்தனாக விருந்தான். பிறகு இந்தச் சக்தியைப் பெற்றதும், அதை விஷய சுகங்களில் உபயோகப்படுத்த ஆரம்பித்தான். நான் தடுத்துச் சொன்னதையும் கேட்கவில்லை. பிறருக்குத் தெரியாமல் அவன் அடிக்கடி ஒரு கனவான் வீட்டுக்குச் சென்று, அங்குள்ள ஒரு யுவதியுடன் ரமித்துவந்தான். அதுகாரணமாக அவனுடைய சக்தியெல்லாம் அகன்றது. அவன் பதிதனானான்.

378. சிலவேளைகளில் சித்திகளைப் பெறுவது பெரிய ஆபத்தை விளைவிக்கும். "ஒரு பெரிய ஸித்தர் ஒரு சமயம் கடற்கரையில் உட்கார்ந்திருந்தபோது பெரும் புயல் அடித்தது. உபத்திரவம் அதிகமாகவிருந்தபடியால், அந்த ஸித்தர், 'புயல் நிற்கக்கடவது' என்றார். உடனே புயல் நின்றது. அப்போது சமுத்திரத்தில் பாய்விரித்து வெகு வேகத்துடன் ஒரு கப்பல் போய்க்கொண்டிருந்தது. திடீரெனப் புயல் நின்றதும் கப்பல் அதனுள்ளிருந்த சகல ஜனங்களுடனும் கடலில் மூழ்கிப்போயிற்று. இப்படி அநேகரை மரிக்கச் செய்த பாபம் ஸித்தருக்கு லபித்தபடியால், அவருடைய சக்தி அவரைவிட்டகன்றது மல்லாமல் அவருக்கு நரகப்பிராப்தியுமாயிற்று" என்று மஹான் தோதாபுரி சொல்லியிருக்கிறார்.

379. பஞ்சவடியின் கீழிருந்து நான் தீவிரமான ஸாதனைகளைச் செய்துகொண்டிருந்த காலத்தில் கிரிஜா என்ற பெயருடைய ஒருவன் அங்கு வந்தான். அவன் பெரிய யோகி. ஒருநாள் ராத்திரி, நான் இருட்டில் என் அறைக்குப்போக விரும்பியபோது, அவன் தனது கையை உயரத் தூக்கினான். அவனது அக்குளிலிருந்து வெகு பிரகாசமான வெளிச்சம் தோன்றி வழி முழுவதிலும் பரவியது. எனது உபதேசத்தால் அவன் அவ்வித சக்தியை உபயோகிப்பதைக் கைவிட்டு பிரம்மத்தை யடையும் மார்க்கத்தில் மனத்தைத் திருப்பினான். பிற்பாடு அவனுக்கு இந்த ஸித்தி போய்விட்டது; என்றாலும் ஸாதனா மார்க்கம் கைகூடியது.

380. அரண்மனையிலுள்ள அரசனிடம் சென்ற பிச்சைக்காரன் அற்பப் பொருள்களான பூசணிக்காய் சுரைக்காய் இவைகளை யாசிப்பானானால் அவன் ஒரு மூடனாவான். அதேபோல பகவானது சாந்நித்தியத்தையடையப் பெற்ற ஒரு பக்தன் விலைமதிக்க வொண்ணாத ஞானம், வைராக்யம், பக்தி இவைகளை விடுத்து சித்திகளை (விசித்திர சக்திகளை)ப் பிரார்த்திப்பானானால் அவனும் அப்பெரு மூடனுக்கு ஒப்பாவான்.

381. பரமஹம்ஸருடைய சிஷ்யர்களில் பால்யமானவன் ஒருவன் பிறருடைய மனதிலிருப்பதை யறியக்கூடிய ஸித்தியைப் பெற்றான். இதனால் அவன் ஸந்தோஷமடைந்து பரமஹம்ஸரிடம் சென்று, தான் பெற்ற சக்தியைத் தெரிவித்தான். அதைக்கேட்ட பகவான், "குழந்தாய்! உனக்கு வெட்கமாக விருக்கவில்லையா! இப்படிப்பட்ட அற்ப விஷயங்களிலெல்லாம் உனது சக்தியை வீணாய்ச் செலவழிக்காதே" என்று கண்டித்தார்.

382. ஒரு சிஷ்யன் தான் தியானத்தில் அமர்ந்திருக்கும்போது வெகு தூரத்துக்கப்பால் நடப்பவைகளும் வேறு ஜனங்கள் செய்பவைகளும் தனக்குத் தெரியவந்தன வென்றும் பிற்பாடு விசாரித்ததில் அப்படிக் கட்புலனானவை யெல்லாம் உண்மையாகவே இருந்தனவென்றும் பரமஹம்ஸரிடம் வந்து சொன்னான். ஸ்ரீராமகிருஷ்ணர் அவனைப் பார்த்து, "அப்பா! கொஞ்சகாலம் தியானம் செய்யாமலிரு. இப்படிப்பட்ட சக்திகளெல்லாம் ஈசுவர தரிசனத்துக்கு இடையூறுகளானவை" என்றார்.

தானமும் தருமமும்

383. பண்டிகை காலங்களில் ஜனங்களுக்கு ஏன் சாப்பாடு போடுகிறார்கள்? அப்படி அன்னமிடுவது ஸர்வ ஜீவர்களிடத்தும் அந்தர்யாமியாய் விளங்குகிற ஈசுவரனுக்கு நிவேதனம் செய்வதேயாம் என்று உனக்குத் தோன்றவில்லையா? ஆனால் கெட்ட நடவடிக்கை யுள்ளவர்களையும் காமுகர்களையும் அப்படிப்பட்ட பண்டிகை காலங்களில் சாப்பாட்டுக்கு அழைக்கக்கூடாது. அவர்களுடைய பாபமானது அவர்கள் உட்காரும் ஆஸனத்தின் கீழ் அநேக முழம் ஆழம் வரையில் பூமியை அசுத்தமாக்கும் கொடிய சுபாவமுள்ளதாம்.

384. ஒரு கசாப்புக்காரன் ஒரு பசுவை வதை செய்யுமிடத்துக்கு ஓட்டிக்கொண்டு போனான். அவனுடைய குரூரத்தினால் கோபங்கொண்ட அப்பசு, வழியில் அவனுக்கு அடங்காது போனதன் காரணமாக, அவன் அதை அதிக சிரமத்துடன் ஓட்டிக்கொண்டு போகவேண்டியதாயிற்று. முற்றிலும் களைத்துப்போன அவன் உச்சி வேளையில் ஒரு கிராமத்துக்கு வந்து, சிரம பரிகாரம் பண்ணிக்கொள்வதற்காக, அங்குள்ள ஒரு சத்திரத்துக்குப் போய், சாப்பாடு பெற்றுப் புசித்தான். அப்படி வயிறாறப் புசித்ததனால் திடங்கொண்ட கசாப்புக்காரன், பசுவை எளிதில் ஓட்டிக்கொண்டு போகச் சக்தியுள்ளவனானான். அப்பசுவைக்கொன்ற பாபத்தில் ஒரு பாகம் சாப்பாடு கொடுத்தவனைச் சார்ந்தது. ஆகையால் அன்னமிடுவதிலும் பிச்சை கொடுப்பதிலும், பெறுபவன் அதைக்கொண்டு தீமை செய்யக்கூடிய அயோக்யனும் பாபியாயும் இல்லாமலிருக்கும்படி பார்க்கவேண்டியது அவசியம்.

385. முன் ஜன்மத்தில் தான தர்மங்கள் அதிகம் செய்தவர்கள் இப்பிறவியில் பணக்காரர்களாகப் பிறக்கிறார்கள் என்பது இயற்கை

விதி. ஆனால் இந்த உலகம் கடவுளின் மாயா சக்தியாகும்; மனிதனால் அறிந்துகொள்ள முடியாத இந்த மாயையின் போக்கில் பல மாறுபாடுகள் இருக்கக் காண்கிறோம்.

உடையும் உண்டியும்

386. சன்யாஸிக்குரிய காஷாய வஸ்திரத்தைத் தரித்துக் கொள்வதன் நன்மை என்ன? உடையில் என்ன இருக்கிறது? காஷாய வஸ்திரத்தைத் தரிப்பதால் சுத்தமான நினைவுகள் வருகின்றன. கிழிந்த வஸ்திரங்களையும் தேய்ந்த செருப்பையும் தரிப்பதால் தாழ்மைத்தனம் மனத்தில் உதிக்கின்றது. காற்சட்டை, சட்டை, பூட்ஸ் முதலியன தரித்தால் ஒருவனுக்கு இயற்கையாகவே கர்வபுத்தி உண்டாகின்றது. கறுப்புக்கோடு போட்ட மெல்லிய அங்கவஸ்திரத்தைத் தரித்தால் சிற்றின்ப வாழ்க்கையின் ஞாபகம் உண்டாகி, காம ரஸமான பாட்டுக்களும் வாயினின்று வரும். சன்யாஸிக்குரிய காஷாயத்தைத் தரித்தால் தூய சிந்தனைகள் மனத்தில் தோன்றுகின்றன. பொதுவாக உடைக்கென்று ஒரு விசேஷமில்லை; என்றாலும், ஒவ்வொருவிதமான உடையும் ஒவ்வொரு எண்ணத்தை உண்டாக்கும்.

387. ஆடு மாடுகளாலும் சிறுவர்களுடைய சேஷ்டைகளாலும் கெடுதி உண்டாகாதபடி சிறு செடிகளுக்கு வேலியிட்டுக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அச்செடி பெரிய மரமாகிவிட்டால் அநேக ஆயிரம் ஆடுமாடுகள் அதன் கிளைகளின் நிழலில் தங்கி, இலைகளை வயிறு கொண்டமட்டும் தின்னலாம். அதுபோல உன்னிடம் ஈசுவர விசுவாசம் அற்பமாக இருக்கும்போது, துஷ்ட ஸஹவாஸத்தினாலும் உலகப்பற்றினாலும் அதற்குக் கெடுதி யுண்டாகாதபடி காப்பாற்ற வேண்டும். திடநம்பிக்கை ஏற்பட்ட பிறகு, உலகப்பற்றும் கெட்ட எண்ணமும் உன்னிடம் வரப் பயப்படும். உனது பரிசுத்த ஸஹவாஸத்தினால் அநேக கெட்டவர்கள்கூட பக்தி உடையவர்கள் ஆவார்கள்.

388. ஒரு நாள் ஒரு சிஷ்யன் பரமஹம்ஸரைப் பார்த்து "சுவாமி! எல்லாருடைய இதயத்திலும் ஒரே ஈசுவரன் இருக்கிறானென்றால், ஏன் கண்டவர் கையிலிருந்தெல்லாம் சாதம் வாங்கிச் சாப்பிடக்கூடாது?" என்று கேட்டான்.

பகவான் :—"நீ பிராம்மணன்தானா?"

சிஷ்யன் :—"ஆம்."

"அதனால்தான் நீ இந்தக் கேள்வி கேட்கிறாய். ஒரு நெருப்புக் குச்சியைக் கொளுத்தி வைத்து அதன்மீது விறகுக் கட்டைகளைக் குவித்தாயானால் நெருப்பு என்னவாகும்?"

"கட்டைக் குவியலால் நெருப்பு அவிந்துவிடும்."

"நல்லது, நன்றாக எரிந்துகொண்டிருக்கும் பெரு நெருப்பில் வாழை மரங்களைப் போட்டால் என்னவாகும்?"

"ஒரு நிமிஷத்தில் வாழை மரங்கள் கருகிச் சாம்பலாய்விடும்."

"அதுபோல உன்னிடமிருக்கும் ஆத்மீய சக்தி பலமில்லாததாக விருந்தால், கண்டவர் கையிலிருந்தெல்லாம் உணவு பெற்று உண்பதனுல் அவ்வாத்மீய சக்தி அவிந்து விடுமென்று நீ பயப்படவேண்டும். ஆனுல் அது பலமுள்ளதாக விருக்குமானுல் எவரிடமிருந்து உணவைப் பெற்றுலும் உனக்கு ஒரு தீங்கும் உண்டாகாது."

389. ஒரு முகம்மதிய குரு, எனக்கு அல்லாவின் பெயரை உபதேசித்தார். நான் முகம்மதியர்களுடைய முறைகளைக் கண்டிப்பாய் அனுசரித்து, நெடுநாள் அல்லாவின் பெயரையே ஓதிவந்தேன். அப்போதெல்லாம் என்னுல் காளி கோயிலுக்குப் போகமுடியவில்லை. ஹிந்துக்களுடைய தேவதைகளின் பெயரைச் சொல்லவும் முடியவில்லை.

390. கருமாதி காரியங்கள் செய்யப்படும் இழவு வீடுகளில் நடக்கும் விருந்துக்கும் போய்ச் சாப்பிடாதே. ஏனெனில் அவ்வுணவு பக்தியையும் அன்பையும் தொலைத்துவிடும். பிறருக்கு வைதீக கர்மங்களைச் செய்து வைப்பதனுலேயே பிழைக்கும் புரோகிதர்கள் வீட்டிலும் சாப்பிடாதே.

391. சாப்பிடும் விஷயத்தில், ஒருவன் கிடைப்பதைச் சாப்பிட வேண்டாமா?

பரமஹம்ஸர்:—"அது ஆத்மீய நிலைமையைப் பொறுத்துள்ளது. ஞான மார்க்கத்தில் அது கெடுதியைச் செய்யாது. ஞானியானவன் சாப்பிடும்போது, ஆகாரத்தைக் குண்டலினியின் அக்னிக்கு நிவேதனமாகச் சமர்ப்பிக்கின்றுன். பக்தன் விஷயம் வேறு. அவன் தனது பிரிய ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்கக்கூடிய சுத்த ஆகாரத்தைத்தான் சாப்பிடவேண்டும். மாமிசாகாரம் பக்தனுக்கு ஏற்றதன்று.

"ஆனுல் ஒருவன், பன்றி யிறைச்சியைத் தின்பவனுயினும் ஈசுவர ப்ரேமை கொண்டவனுக விருந்தால், கிருதார்த்தனுவான். பால் கலந்த அன்னம் அல்லது ஹவிஷ்யான்னம் இவைகளைச் சாப்பிட்டுக்கொண்டிருப்பவனுயினும், பெண்ணுசை பொன்னுசை கொண்டவனுகவிருந்தால், மிகவும் இழிந்தவனுகிறுன்."

392. மூர்க்கத்தைத் தராத மரக்கறி போஜனத்தை ஒருவன் உண்டபோதிலும் அவன் ஈசுவரனை யடையப் பிரியப்படாமற் போனுல் அவ்வுணவு மாமிசத்தைக் காட்டிலும் கெட்டதாகும். ஆனுல் மாமிசத்தைச் சாப்பிடுபவன் ஒருவன் ஈசுவரனை அடையப் பிரியப்படுவானுனுல் அவன் உட்கொள்ளும் உணவு தேவாமிருதத்துக்குச் சமானமாகும்.

393. பகற்பொழுதில் திருப்தியாகப் போஜனம் செய். ஆனுல் இரவில் உட்கொள்ளும் உணவு குறைவாயும் இலேசாயு மிருக்கட்டும்.

394. சரீரத்துக்கு உஷ்ணத்தையும் மனத்துக்குச் சஞ்சலத்தையும் எந்த உணவு கொடுக்காதோ அந்த உணவைத்தான் சாதகன் உட்கொள்ள வேண்டும்.

உடலைக் கருதும் முறை

395. கேள்வி :—சரீரத்தின்மேலுள்ள ஆசை எப்படி நீங்கும் ?

பதில் :—இந்த சரீரம் அழியும் வஸ்துக்களால் ஆனது. தோல், தசை, எலும்பு, நரம்பு, இரத்தம் இவைகளும், முற்றும் பழுதுபடும் அசுத்தப் பொருள்களும் சேர்ந்து ஆனது என்று சிந்தித்து வருவீராகில் நாளடைவில் அதன்மே லுள்ள பற்று நீங்கும்.

396. கிளி பறந்துபோன பிறகு கூட்டைக் கவனிப்பார் எவருமில்லை. உயிராகிய கிளி பறந்துபோன பிற்பாடு, பிணமாகிய உடலைக் கவனிப்பார் யாருமிரார்.

397. இந்த சரீரம் உபயோகமற்றதும் அழிந்து போகக்கூடியதுமானல், பக்தர்களும் ஸாதுக்களும் ஏன் அதை ஜாக்கிரதையுடன் காப்பாற்றுகிறார்கள் ? உள்ளே ஒன்றுமிராத வெறும் பெட்டியை ஒருவரும் ஜாக்கிரதையாகப் பாதுகாப்பதில்லை. விலையுயர்ந்த நகைகளும், பணமும், பொருள்களும் உள்ள பெட்டியை எல்லாரும் பத்திரமாகக் காப்பாற்றுகிறார்கள். அதுபோல, பக்தர்கள், ஈசுவரன் வாசம் செய்கின்ற இந்த சரீரத்தைக் கவலையுடன் காப்பாற்றாமலிருக்க மாட்டார்கள். நமது சரீரங்களெல்லாம் ஈசுவரனுகிய பொக்கிஷம் நிறைந்த பெட்டிகளாகும்.

துக்கத்தைக் கருதும் முறை

398. வீட்டில் குடியிருப்பவன் அவ்வீட்டின் சொந்தக்காரனுக்குக் குடிக்கூலி கொடுப்பதைப்போல, சரீரத்தை உபயோகிப்பதற்காக ஆத்மாவானது நோய்ப்படுவதன் மூலம் வரியைச் செலுத்துகின்றது.

399. இரும்பு எஃகு ஆகவேண்டுமானல் அதை நெருப்பில் நன்றாக நெடுநேரம் காய்ச்சிப் பதப்படுத்த வேண்டும். அப்போதுதான் அது எப்பக்கத்திலும் வளையக்கூடிய கூரிய கத்தியைச் செய்வதற்கு உதவும். அதுபோல, துன்பத் துயரங்கள், உலக இம்சைகள் ஆகிய நெருப்பில் பலதடவை வாட்டப்பட்ட பிறகுதான் மனிதன் ஹிருதய சுத்தனுகி ஈசுவர ஸந்நிதானத்தில் செல்வதற்கு ஏற்ற பணிவுடையவனுகிறான்.

400. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவசந்திர ஸேனரை நோக்கிச் சொன்னதாவது :—“நீர் வேதனைப்படுகிறீர். ஆனல் உமது நோயில் ஒரு விசேஷ அர்த்தம் இருக்கிறது. இந்தச் சரீரத்தோடு நீர் பற்பல ஞான சாதனைகளைச் செய்திருக்கின்றீர். இப்போது அனுபவிக்கும் வேதனை அந்த சிரமத்தின் பயனுக ஏற்பட்டதே யாகும். உள்ளே ஞான அலைகள் உண்டாகும்போது சரீர ஞாபகம் அகன்று விடுகிறது. ஆனல், முடிவில் சரீரத்தில் சுகவீனம் உண்டாகிறது. கங்கா நதியில் ஒரு பெரிய நீராவிக் கப்பல் போகுமானல், அது போன பிறகு கொஞ்ச நேரம் வரையில் கரைகளில் அலைகள் மோதிக்கொண்டிருக்கும். கப்பல் எவ்வளவுக் கெவ்வளவு பெரியதோ, அவ்வளவுக் கவ்வளவு அலைகளும்

பலமானவையாக விருக்கும். சிற்சில வேளைகளில் அவ்வலைகள் கரைகளையும் உடைத்துவிடும். ஒரு சிறிய குடிசைக்குள் யானையொன்று நுழையுமானால், அது அக்குடிசையை ஆட்டித் தவிடுபொடி யாக்கிவிடும். அதைப்போல, ஆத்மானுபவ வெள்ளமானது சிற்சில சமயங்களில் பக்தனுடைய சரீரத்தை ஆட்டி அலைக்கழித்து விடுகிறது. அப்பால் என்ன நிகழ்கிற தென்பதுதான் உமக்குத் தெரியுமே. வீட்டில் தீப்பிடித்துக் கொண்டால் அங்குள்ள பொருள்கள் எரிந்து சாம்பலாகின்றன. அதுபோல, திவ்ய ஞானமாகிய நெருப்பு காமக்குரோதாதி பாகங்களை எரித்து, கடைசியாய், 'நான்', 'எனது' என்னும் மனோபாவத்தை அடியோடொழித்து விடுகின்றது. அப்பால் சரீரம் சின்ன பின்னமாகிறது. எல்லாம் பூர்த்தியாய் விட்டதென்று நீர் நினைக்கலாம்; ஆனால் அகங்காரம் அணுவளவு இருந்தாலும்கூட, ஈசுவரன் உம்மை விடுவிக்கமாட்டான். வைத்தியசாலைக்குள் நோயாளியெனப் பதிவு செய்து கொண்டால், நீர் முற்றிலும் குணமடைவதற்கு முன்னால் உம்மால் வெளியே வரமுடியாது."

401. "ரோஜாச் செடிகளின் வேரின்மீது பனித்துளிகள் விழும் பொருட்டு சிற்சில வேளைகளில் தோட்டக்காரன் அவ்வேர் தெரியும்படி திறந்து வைக்கிறான். சிற்சில வேளைகளில், புஷ்பங்கள் பெரியனவாக ஆகும் பொருட்டு, அவ்வேர்களில் சிலவற்றை அவன் கத்தரித்து விடுகிறான். ஒருகால், இன்னும் பெரிய காரியங்களைச் செய்யவேண்டியதற்காக ஈசுவரன் உம்மைத் தயார் செய்கிறான் போலும்" என்று பரமஹம்ஸர் கேசவ சந்திரசேனரை நோக்கிச் சொன்னார்.

402. "வியாதி உடம்பைப் பீடிக்கட்டும்; ஆனால் மனமே! நீ மட்டும் எப்போதும் ஆனந்தத்திலிரு."

403. சரீரத்தினால் அநுபவிக்கும் துன்பங்களும் இன்பங்களும் எப்படிப்பட்டவை யாயினும் உண்மையான பக்தனுக்கு ஞானம், பக்தி இவைகளின் மஹிமையும் சக்தியும் ஒருபோதும் குறைவதில்லை. பாண்டவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் எவ்வளவு கொடியனவாகவிருந்தன! என்றாலும் ஒரு நிமிஷங்கூட அவர்களுடைய ஞான ஒளி மங்கினதில்லை.

பொறுமை

404. வங்காள பஷையில் ச, ஷ, ஸ என்ற மூன்று எழுத்துக்களைத் தவிர ஒரே சப்தம் கொள்ளும்படியான எழுத்துக்கள் இல்லை. இந்த மூன்றும், "பொறு" என்ற அர்த்தத்தையே கொண்டன. இதனால் நாம் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளும் சிறு வயதிலிருந்தே பொறுமையையும் கற்றுக்கொள்ளக் கற்பிக்கப்படுகிறோம். பொறுமை யென்பது ஒவ்வொரு மனிதனுக்கும் வெகு முக்கியமான குணமாகும்.

405. கருமானின் பட்டடையைப் பார். எவ்வளவு பலமாக அடிபட்டபோதிலும் அது தன் இடம் விட்டு நகருவதில்லை. அதைப் பார்த்

துப் பொறுமையையும் உறுதியையும் மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

மௌனம்

406. உனது மனப்பான்மைகளையும் கொள்கைகளையும் உன்னுள்ளேயே வைத்துக்கொண்டிரு. அவைகளைப்பற்றி வாய்விட்டுப் பேசாதே. பேசினால் உனக்குத்தான் நஷ்டம் உண்டாகும்.

407. பக்தன் தான் செய்யும் பக்தி ஸாதனைகளை எவ்வளவுக்கெவ்வளவு பிறர் அறியாமல் செய்துகொள்ளக் கூடுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

வணக்கமும் ஆன்ம உயர்வும்

408. கர்வியாக இருப்பது கேவலம் தாழ்ந்த சுபாவம். காக்கையைப் பார். தான் சாமர்த்தியமுள்ள பக்ஷியென அது நினைத்துக் கொண்டிருக்கிறது. ஒருபோதும் அது வலையில் அகப்படுவதில்லை. ஆபத்து வருமென்பதைச் சற்றுத் தெரிந்து கொண்டதும் பறந்தோடி விடுகிறது. வெகு தந்திரமாக ஆகாரத்தைத் திருடுகிறது. என்றாலும் மலம் தின்பதில் மட்டும் அதற்கு அருவருப்பில்லை. அதிகச் சமர்த்தாக இருப்பதின் பலன் இதுதான்.

409. ஒருவன் உயர்கதியடைய விரும்புவானானால் அடக்கமுடையவனாய் இருக்கவேண்டும். எவ்வாறென்றால் வானம்பாடிப் பறவையைப் போலவும், பள்ளமான கழனியைப் போலவும் இருக்கவேண்டும். வானம்பாடி வெகு உயரப் பறந்தாலும் அது தரையின் அடியில் கூடுகட்டும். மேடான நிலத்தில் நீர் நில்லாததலால் அது சாகுபடிக்குதவாது.

410. பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும் ; நீ பெருமை அடையவேண்டுமானால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு.

411. மற்றவர்கள் தலை வணங்கினால் நாம் அடிபணிந்து வணங்குவது நமது கடமை.

412. "நான் பிரசங்கம் செய்கிறேன் ; அனைவரும் கேளுங்கள்" என்பது போன்ற கர்வம் கொள்ளலாகாது. அகங்காரம் அறியாமையால் எழுகின்றது; ஞானம் உள்ளவிடத்து அகங்காரம் இல்லை. மமதை அகன்றவன் உண்மையைக் காண்கிறான். மழைத் தண்ணீர் மேடான நிலங்களிலிருந்து ஓடிவிடுகின்றது; தாழ்ந்த நிலத்தில் தேங்கி நிற்கின்றது.

413. கனமான தராசுத் தட்டு கீழே போகிறது. இலேசான தட்டோ மேலே செல்கின்றது. அதுபோல, உயர்குணமும் சாமர்த்தியமும் உள்ள மனிதன் எப்போதும் பணிவாயும் பவ்யமாயும் இருக்கிறான். முட்டாளோ வீண் அகம்பாவத்தால் கர்வம் படைத்தவனாக இருக்கிறான்.

414. காற்றில் பறந்தோடும் காய்ந்த சருகுபோல் நீ வீண் கர்வம் இல்லாதவனாக இரு.

415. ஊசியில் நூலைக்கோக்க வேண்டுமானால், நூல் முனையைக் கூராக்கி, நீட்டிக்கொண்டிருக்கும் பஞ்சுத் துணுக்குகளை எடுத்தெறிய வேண்டும். அப்பால் ஊசியின் காது வழியாக நூல் எளிதாகப் போகும். அதுபோல, ஈசுவரனிடம் உனது மனத்தையும் இருதயத்தையும் ஒருமிக்கப் பண்ணவேண்டுமானால், அடக்கத்தோடும் பணிவோடும் வீண் கர்வமில்லாதவனாய் இருந்து ஆசைகளாகிய பரந்து நிற்கும் துரும்புகளைக் களைந்தெறிய வேண்டும்.

416. அதிக வணக்கமுள்ளவர்களைப் போலக் காட்டிக் கொள்ளும் அநேகர் "நான் மண்ணில் புரளும் புழுவைப் போன்றவன்" என்று சொல்லுகின்றனர். தங்களைப் புழுவெனவே நினைத்துக் கொள்வதினால் அவர்கள் நாளடைவில் புழுவைப்போல திடசித்தமில்லாதவர்களாகி விடுகின்றனர்.

417. உண்மை ஞானம் எவனிடம் உதயமாகி யிருக்கிறதோ அவன்தான் வாஸ்தவமான மனிதனாவான். மற்றவர்கள் எல்லாரும் பெயரளவில் மாத்திரம் மனிதர்களாவர்.

418. ஆத்மாவின் மஹிமையை வெளிப்படுத்தும் கர்வம் கர்வமன்று; தன்னைத்தானே சிறுமைப் படுத்திக்கொள்ளும் அடக்கம் அடக்கமன்று.

எளிமை

419. குழந்தையைப்போன்ற ஸாது குணம் ஒருவனுக்கு இல்லாத வரையில் திவ்ய தரிசனம் உண்டாகாது. நீ கற்ற உலக ஞானத்தையெல்லாம் மறந்துவிட்டு, குழந்தையைப்போலக் களங்கமற்றவனாக இரு. அப்போது உனக்கு உண்மை ஞானம் உண்டாகும்.

420. கள்ளங் கபடமற்ற மனமிருந்தால் ஈசுவரனை எளிதில் அடையலாம். கற்கள் இல்லாமல் உழுது பண்படுத்தப்பட்ட மிருதுவான பூமியில் நடப்படும் வித்து எளிதில் முளைத்துக் கிளம்பி, சீக்கிரத்தில் பயன் அளிப்பதைப்போல, கள்ளங் கபடமற்ற மனத்தில் ஆத்மீய உபதேசங்கள் எளிதில் பயன் அளிக்கின்றன.

421. மிகுந்த தபசுக்குப் பிறகுதான் மனிதர்கள் கபடமற்றவராகவும், தயாளகுணம் வாய்ந்தவராகவும் ஆகின்றார்கள். கள்ளங் கபடமற்ற மனதை யுடையவராயிருந்தால் கடவுட்காட்சி கிடைக்கும். அவ்வித எளிய மனதையுடையவர்க்கே கடவுள் தம்மைக் காட்டுவிப்பார் என்று பகவான் கூறுவது வழக்கம். ஆனால் எளிமை உண்மை இவற்றின்பேரால் ஒருவன் ஏமாந்தவனாகிவிடக் கூடாதென்று அஞ்சிப் பின்வருமாறு குறிப்பிப்பதும் உண்டு. "பக்தனாக விருக்கவேண்டும்; ஆனால் அதன் பேரில் மூடனாக இருக்கக்கூடாது. எப்போதும் மெய்ப்பொருளிலிருந்து பொய்ப் பொருளையும் நித்தியத்திலிருந்து அநித்தியத்தையும்

அகற்றுவதற்காக மனதிலே விசாரணை செய்து பார்க்கவேண்டும். பிறகு அநித்தியத்தை அகற்றிவிட்டு நித்திய வஸ்துவின்மீது மனத்தை நிறுத்தவேண்டும்.

ஆசைகளை அடக்குதல்

422. உயிர் வாழும்போதே எவன் ஆசையால் இறந்தவனைப் போல இருக்கிறானோ, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தினிடத்திற்போல முற்றிலும் நசித்துப்போ யிருக்கின்றனவோ, அவன் தான் உண்மையான மனிதன்.

423. ஆசைகளாகிய பெருங் காற்றினால் சித்தமாகிய ஆகாசம் அலைக்கடிக்கப்படும் வரையில், ஈசுவரனாகிய ஒளியை அங்கு காண்பது துர்லபமாகும். ஈசுவரனுடன் ஐக்கியமாகி சாந்தமாக இருக்கும் மனத்தில்தான் அந்தத் திவ்ய தரிசனம் தோன்றும்.

424. இச்சையானது கடுகளவு இருந்தாலும் ஈசுவரனைக் காண முடியாது. ஆதலால், உனது சிறிய இச்சைகளைத் திருப்தி செய்து கொண்டு, விஷயாதிகளிலுள்ள பெரிய இச்சைகளை விவேகத்தாலும் விசாரத்தாலும் ஒழித்துவிடு.

425. ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன் அதனுள் விழுந்துவிடாமல் எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பதைப்போல உலகத்தில் வாழ்பவன் ஒருவன் அதனுடைய ஆசாபாசங்களுக்கு உட்படாவண்ணம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவ்வாசாபாசங்கள் நிரம்பிய கிணற்றில் ஒருதரம் விழுந்துவிட்டால் காயம்படாமலும் அழுக்குப் படாமலும் வெளிவருவது அசாத்தியம்.

426. காமம், குரோதம் முதலிய சத்துருக்களை எப்போது நாசம் செய்ய முடியுமெனக் கேட்டதற்கு, பரமஹம்ஸர் சொன்னதாவது: ‘இவ்வித ஆசாபாசங்கள் உலகத்தையும் உலக விஷயங்களையும் பற்றியனவாக இருக்கிற வரையில் சத்துருக்களாகத்தானிருக்கும். அவைகள் ஈசுவர விஷயமாக மாறினால், மனிதனுக்கு நற்றுணைகளாகும். ஏனெனில் அவைகள் அவனை ஈசுவரனிடம் அழைத்துச் செல்கின்றன. உலக விஷயங்களிலுள்ள ஆசையைக் கடவுளிடத்து ஆசையாக மாற்ற வேண்டும். சகோதர ஜனங்களிடம் உண்டாகும் கோபத்தை, கடவுள் தரிசனம் கிட்டவில்லையேயென்று அவரிடம் காட்டவேண்டும். இம் மாதிரி எல்லா ஆசாபாசங்களையும் மாற்றவேண்டும். அவைகளை அழிக்க முடியாது; ஆனால் நல்வழியில் திருப்ப முடியும்.’

427. “ஸீதையைத் தங்கள் நாயகியாக்கிக்கொள்வது கருத்தானால், தங்களுடைய மாயா சக்தியால் ராமனுடைய உருவத்தை எடுத்துக்கொண்டு அந்த ஸீதையைத் தாங்கள் ஏன் ஏமாற்றிவிடக்கூடாது?” என்று மண்டோதரி தன் கணவனான ராவணனைக் கேட்டாள்.

அதற்கு ராவணன், “சீ! போ; ராமனை நினைத்த மாத்திரத்திலே எனக்குச் சொல்ல வொண்ணாத ஆனந்தமும் இன்பமும் உண்டாகின்

றன. பரமபதமான சொர்க்கங்கூட வெறுப்பாகிவிடும் போலத் தோன்றுகிறது. அப்படியிருக்க அவனுடைய திவ்ய உருவத்தை எடுத்துக் கொண்டால் எனக்குச் சிற்றின்பத்தில் எப்படி மனம் செல்லும் ?'' என்று பதில் சொன்னான்.

428. அவிழ்த்து விடப்பட்ட யானையானது மரங்களையும் செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தினதும் அது சாந்தமாகி விடுகிறது. அதுபோல, அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகின்றது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது சாந்தமாக அமைகின்றது.

429. உலகப்பற்று அதிகமுள்ள மனிதனுக்கு ஞானம் உதிக்காது. எவ்வளவுக்கு உலகப்பற்று குறைந்து இருக்கிறதோ அதற்கேற்றபடி ஞானமும் வளர ஆரம்பிக்கும்.

430. தயிரைக் கடைந்து வெண்ணெயை எடுத்தபின் அவ்வெண்ணெயை அதே பாத்திரத்தில் மோருடன் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அதன் ருசி குறைவதுடன் கரைந்தும் போகும். அதை வேறு பாத்திரத்தில் சுத்த ஜலத்தில் போட்டு வைக்கவேண்டும். அது போல, உலக வாழ்க்கையில் இருக்கும்போது ஒருவாறு பக்குவம் அடைந்த ஒருவன், மேலும் உலக ஜனங்களுடன் கலந்து உலகப் பாசங்களினிடையே இருந்தால், மாசுமறுவுக்கு உள்ளாகக்கூடும். உலகத்தைத் துறந்து விட்டால் மட்டுமே அவன் சுத்தனாகக்கூடும்.

431. நமது தெய்வீகத்தை எப்படித் திரும்பப் பெறமுடியும்? புஷ்பத்திலிருந்து காய் உண்டானதும் அப்புஷ்பத்தின் இதழ்கள் தாமாகவே உதிர்கின்றன. அதுபோல, உன்னுள்ளிருக்கும் தெய்வீகம் அதிகரித்ததும் உனது மானிட சுபாவத்தின் குற்றங் குறைகளெல்லாம் தாமாகவே மறைந்துவிடும்.

432. தீவிர வைராக்கியத்தால் கடவுள் தரிசனம் அடையப் பெற்ற ஒருவன் தன்னுடைய மனைவியிடமிருந்தும் ஓடவேண்டியதில்லை. காமகாஞ்சனங்களிலுள்ள மயக்கமெல்லாம் மாயையாய்ப் பறந்தோடிவிடும்.

இரண்டு காந்தத்துக்கு இடையில் ஓர் இரும்பாணி யிருந்தால் பெரிய காந்தத்தின் பக்கமாகத்தானே அந்த ஆணி இழுக்கப்படும்? அதேபோல பெரிய சக்தி வாய்ந்த கடவுட் காட்சிக்கு முன் இந்த அற்ப உலகப் பொருள்களின்மேலுள்ள கவர்ச்சி எம்மாத்திரம் ?

433. கேள்வி :—சிற்றின்ப இச்சைகள் எவ்வாறு நாசமாகும் ?

விடை :—எல்லாச் சுகங்களும் இன்பங்களும் தன் சொரூபமாக விளங்கும் பகவானிடத்திலேயே அவைகள் ஒதுங்கிவிடும். அவரை அடைந்தவர்களுக்குத் துச்சமும் பயனற்றதுமான உலகபோகங்கள் யாவும் சத்தில்லாச் சக்கையைப்போலிருக்கும்.

434. அகத்திக்கீரையும் தண்டுக்கீரையும் ஒன்ருகா. கற்கண்டுக் கட்டியும் சாதாரண பக்ஷணமும் ஒன்றேயாகா. முன்னவை தேகாரோக்கியத்திற்கு ஏற்றவை. பின்னவை கெடுதலானவை. வியாதியஸ்தன்கூட முன்னவையை உட்கொள்ளலாம். மஹாமந்திரமாகிய பிரணவம், வெறும் வார்த்தையன்று. அது ஈசுவர ஸ்வரூபத்தின் ஒலி வடிவம். அதுபோல, தூய்மையில் ஆசை, பக்தி இவை சாமான்ய லௌகிக ஆசைக்குச் சமானமெனக் கருதக்கூடாது.

ஸ்திரீகளுடன் நடந்துகொள்ளும் முறை

435. எல்லா ஸ்திரீகளும் பகவதிதேவியின் அம்சங்களேயாவர். ஆதலால் அனைவரும் அவர்களைத் தாய்மாரெனக் கருதவேண்டும்.

436. ஸ்திரீகள் நற்குணங்களுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் கற்புடையவராகவோ வியபசாரிகளாகவோ இருந்தாலும், அனைவரும் ஆனந்தமயியாகிய மாதாவின் வடிவங்களென்றே கருதப்படவேண்டும்.

437. ஒரு சிஷ்யன் :—'ஸ்திரீகளை நாம் எவ்விதம் பாராட்ட வேண்டும் ?'

பரமஹம்ஸர் :—'உண்மையை யறிந்தவனும், ஈசுவர தரிசனம் பெற்றவனும் ஸ்திரீகளைக் கண்டு பயப்படவேண்டுவதில்லை. அந்த ஸ்திரீகள், ஜகதீசுவரியான திவ்ய மாதாவின் அம்சங்களேயாவரென்பதை அவன் காண்கிருன். ஆதலால், அவன் அவர்களை மரியாதையுடன் கவுரவப்படுத்துவதுமட்டுமன்றி, தாயை மகன் வணங்குவதைப் போல, அவர்களுக்கு வந்தனை வழிபாடுகளும் செய்வான்.

438. காம இச்சையை வெல்வதெங்ஙனம் ? எல்லா ஸ்திரீகளையும் உன்னை யீன்ற தாயாகக் காண முயல்வாய். ஒருபோதும் பெண்கள் முகத்தைக் கண்ணெடுத்துப் பாராதே. அப்போது காம இச்சையெல்லாம் மறைந்து விடுவதை உணர்வாய்.

439. கணவனுடன் வாழுங் காலத்திலேயே காமத்தை அடக்கிய ஸ்திரீ திவ்யமாதாவேயாகிருள்.

440. நரேந்திரர் :—சுவாமி ! தந்திர சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்திரீ ஸங்கத்தோடு செய்யும் பக்தி மார்க்கத்தைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் யாது ?

பரமஹம்ஸர் :—அவையெல்லாம் ஆபத்துக்கிடமான மார்க்கங்கள். அவை சிரம சாத்தியமானவை ; பின்னும் இடைவழியில் தவறச் செய்யும் தன்மையுடையவை. தந்திர சாஸ்திரத்தின்படி மூன்று விதத்தில்—அதாவது, வீரனைப்போலவும், பணிப்பெண் போலவும், தாய்க்கு மகனைப் போலவும்—பக்தி பண்ணலாம். எனது மார்க்கம்,

ஈசுவரனைத் தாயாகக் கருதுவதாகும். திவ்விய மாதாவின் பணிப் பெண்ணாக ஒருவன் தன்னைக் கருதுவதும் நல்லதே. ஆனால், "வீரா சார*" மார்க்கம் அபாயகரமானது. தான் திவ்விய மாதாவின் குமாரன் என்று கருதி பக்தி பண்ணுவது மிகப் பரிசுத்தமானது.

441. உனக்கு தெய்வானுக்ரகம் வேண்டுமானால் அகிலாண் டேஸ்வரி, பிரம்மாண்டநாயகியான எனதன்னை ஜகதம்பிகையைப் பிரார்த்தனை செய்வாயாக. ஆம், அவள் மஹாமாயை; அவளேதான் அறியாமை என்னும் வலையை அனைவர்மீதும் வீசி இவ்வுலக முழுவதை யும் மயக்கி ஆட்டிவைக்கிறாள். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முக்காரியங்களையும் புரிந்து விளையாடுபவளும் அவளே. அவள் விருப் பப்பட்டுத் திறந்தாலல்லாமல் பரலோக ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது. அவள் கிருபா கடாக்ஷம் இல்லையானால் நித்தியமான சச்சிதா னந்தப் பொருள் நமக்குப் புலனாகாது; வெளித்தோற்றமான அநித்தி யப் பொருள்களே புலப்படும்.

வித்யை அவித்யை என திவ்விய சக்தி இருவகைப்படும். பெண் ணாசை பொன்னாசைகளுக்குப் பிறப்பிடமாகிய அவித்யை மனிதனை மயக்கிப் பந்தப்படுத்திவிடுகிறது. ஆனால் வித்யை, பகவானிடம் அழைத்துச் செல்லும் பக்தி, அன்பு, அறிவு, கருணை முதலியனவாக விளங்குகின்றது.

இந்த அவித்யையை சாந்தப்படுத்தவேண்டும். அதற்காகவே சக்தி பூசை ஏற்பட்டது. அவளுடைய தாதியாகவோ அல்லது, வீர னாகவோ, அல்லது குழந்தையாகவோ பாவித்து எந்த விதமாகவும் வணங்கலாம். அவளை வணங்க மார்க்கங்கள் பல இருக்கின்றன. மிகவும் கடினமும் அபாயகரமுமான சாதனைகள் பல இருக்கின்றன. சக்தி பூசை யென்பது விளையாட்டன்று. நான் தேவியின் தோழியாக வும், தாதியாகவும் பாவித்து இரண்டாண்டுகள் சாதனைகள் செய்தேன். நான் என்னைக் குழந்தையாகவும் பாவித்துக்கொண்டேன். ஒவ்வொரு பெண்ணினுடைய மார்பும் என் தாய் முலைபோன்றே தோன்றிற்று.

பெண்கள் தேவியின் சொரூபங்களாவார்கள். வங்காளத்தின் மேற்குப் பக்கத்து ஊர்களில் விவாக காலத்திலே மணமகன் கையில் ஒரு கத்தியும், வங்காள தேசத்திலே அவன் கையில் ஒரு பாக்கு வெட் டியும் வைத்திருப்பது வழக்கம். சக்தி வடிவமாக இலங்கும் மணமகள் உதவியால் மணமகன் மாயையை அறுப்பான் என்பதற்கு அறிகுறியாக இக்கருவிகள் ஏந்தப்படுகின்றன. இது வீரபாவமெனப்படுவது. நான் அனுசரித்தது வாத்சல்ய பாவமாகும்.

---

* ஒரு பெண்மணியைத் தனது தெய்வீகத் துணைவியாகக் கொண்டு தேவி வழிபாடு செய்யும் ஒரு தந்திர சாதனை முறைக்கு வீராசார மார்க்கம் என்று பெயர்.

ஸாதகனும் அவன் குடும்பமும்

442. ஒரு பக்தன் :—சமயானுஷ்டானங்களிலேயே ஈடுபட்டு வரும் ஒரு புருஷனிடம் அவன் மனைவி, "நீர் என்னைச் சரியான படி பராமரிக்காமல் போனால் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்று சொன்னால், அந்த சந்தர்ப்பத்தில் அவன் செய்யவேண்டியது என்ன ?

பரமஹம்ஸர் :—கடவுள் தரிசனத்தை அடைவதற்குத் தடையாக நிற்கிற அப்படிப்பட்ட மனைவியைவிட்டு விலகிவிடவேண்டும். அவள் தற்கொலைதான் செய்துகொள்ளட்டும், செய்யாமல்தான் போகட்டும். ஈசுவரனை அடையும் மார்க்கத்தில் இடையூறு செய்பவள் அவித்யா மனைவியாவாள். ஆயினும் உண்மைப் பக்தனுக்கு அரசன், தீயோர், மனைவி முதலிய அனைவரும் அனுகூலிகளாகவே ஆவார்கள். ஒருவனுக்கு வாஸ்தவமான பக்தி இருக்குமானால், அவனுடைய மனைவியும் காலக்கிரமத்தில் ஈசுவர பக்தி உள்ளவளாவாள். ஒருவன் நல்லவனாக இருந்தால், ஈசுவர கிருபையால் அவனுடைய மனைவியும் நல்லவள் ஆகலாம்.

443. மனிதனுக்குத் தாய் தந்தையர் எல்லாரிலும் முக்கியமானவர். அவர்களைத் திருப்திபடுத்தினலொழிய பக்தி ஸாதனைகள் பயனைத் தரமாட்டா. ஆதலால்தான் ஈசுவர பிரேமையால் பித்தேறிய சைதன்ய சுவாமிகூட தாம் ஸந்யாஸம் பெற்றுக்கொள்வதற்கு முன்னால் தமது தாயைச் சமாதானப் படுத்துவதற்கு வெகு சிரமப்பட்டனர். "தாயே! வருந்தவேண்டாம்! நான் அடிக்கடித் தங்களைப் பார்க்க வருவேன்" என்று அவர் வாக்களித்தார். தேவர்களின் கடன், ரிஷிகளின் கடன், பெற்றோர்களின் கடன், மனைவியின் கடன் முதலிய பல கடன்களை மனிதன் தீர்க்கவேண்டி யிருக்கிறது. பெற்றோர்களின் கடனைத் தீர்த்தாலொழிய சத்கருமங்கள் பலிக்கமாட்டா. மனைவிக்கும் கொடுத்துத் தீரவேண்டிய கடன் உண்டு.

444. ஆனால் இங்கு ஒரு விஷயம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. தெய்வப் பைத்தியம் பிடித்தவனுக்குத் தாயார் யார் ? தகப்பனர் யார் ? மனைவி யார்? கடவுளிடத்திருக்கும் அபார அன்பினால் அவன் பைத்தியம் கொள்கிறான். அவனுக்கு எந்தக் கடமையுமில்லை. அவன் நித்திய, நைமித்திக கடன்கள் யாவும் அகலப் பெறுகிறான். அந்நிலைமையை யடைந்த மனிதன் உலகத்தையே மறந்து விடுகின்றான். சகல ஜீவப் பிராணிகளுக்கும் பிரீதியாக இருக்கும் உடம்பையும் அவன் மறந்து விடுகிறான்.

445. பெற்றோர் மனிதனுக்குக் கண்கண்ட தெய்வம். அவர்கள் உயிரோடு இருக்கும்வரையில் ஒவ்வொருவனும் தன்னாலான அளவு அவர்களுக்குச் சேவை செய்யவேண்டும். அவர்கள் இறந்தபின் உரிய கர்மங்கள் செய்யவேண்டும். இறந்துபோன பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யமுடியாத பரம ஏழையாக ஒருவன்

இருப்பானானால் அவன் காட்டிற்குச் சென்று தனியிடத்தில் தன்னுடைய சக்தியற்ற நிலையை நினைத்துக் கண்ணீருகுக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குச் செய்யவேண்டிய அவனுடைய கடன் நீங்கும். பகவத் பக்திக்காக மாத்திரம், வேண்டுமானால் ஒருவன் பெற்றோரையும் நிராகரித்துவிடலாம். உதாரணமாகப் பிரஹ்லாதனையும், துருவனையும் கூறலாம். தன் தகப்பன் எவ்வளவு தடுத்தும் கேளாது பிரஹ்லாதன் ஹரிநாமத்தை உச்சரித்து வந்தான். தாய் சொல்லையும் மீறிக் காட்டுக்குத் தவம் செய்யச் சென்றான் துருவன். இவர்கள் பிழை செய்தவர்களல்லர்.

பஜனையும் பக்தியும்

446. வாய்விட்டு உரக்கத்தான் ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டுமோ? உனக்கு எப்படி இஷ்டமோ அப்படிப் பிரார்த்தனை செய்யலாம். அவன் எப்போதும் உன் பிரார்த்தனையை நிச்சயமாகக் கேட்பான். எறும்பின் காலடி சப்தம்கூட அவனுடைய காதுகளில் கேட்கும்.

447. பிரார்த்தனையால் வாஸ்தவமான பலன் உண்டா? உண்டு; மனமும் வாக்கும் ஒன்று சேர்ந்து ஊக்கத்தோடு ஏதேனும் ஒரு பொருளைப் பிரார்த்தித்துக் கேட்குமானால் அந்தப் பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்கும். "ஈசுவரா? இவையெல்லாம் உன்னுடையவை" என்று வாயால் மட்டும் சொல்லி, அவையெல்லாம் தன்னுடையவை யென்று மனத்தில் நினைக்கிறவனுடைய பிரார்த்தனைக்குப் பலன் உண்டாகாது.

448. உனது நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே, மனச் சாக்ஷியின்படி நட. நிச்சயமாக உனக்கு ஜயம் உண்டாகும். கள்ளம் கபடம் அற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய். ஈசுவரன் கேட்பான்.

449. நெஞ்சில் உள்ளதையே வாயால் சொல்லு. உனது சொல்லுக்கும் நினைவுக்கும் அத்தியந்த ஒற்றுமை இருக்கட்டும். உன் மனம் உலகத்திலேயே உழன்றுகொண் டிருக்கும்போது, எல்லாம் ஈசுவரனே என்று வாயால் மாத்திரம் சொல்லிக்கொண்டிருந்தால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.

450. ஒரு பெரிய சக்கரவர்த்தியிடம் போகவேண்டுமானால் வாசல் காப்போனையும், ஏனைய அதிகாரிகளையும் நயந்துகொள்ளவேண்டும். ஸர்வேசுவரனுடைய ஸந்நிதானத்தை அடையவேண்டுமானால் வெகுவாகப் பக்தி செய்து, அநேக பக்தர்களுக்குத் தொண்டுபூண்டு, நெடுநாள் ஸாது ஸஹவாஸம் செய்யவேண்டும்.

451. உலகத்தைப் பற்றிய எண்ணங்களும் கவலைகளும் உன் மனத்தைச் சஞ்சலப் படுத்தும்படி செய்துகொள்ளாதே. செய்ய வேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செய். ஆயினும் உன் மனம் எப்போதும் ஈசுவரனிடம் நிலைத்திருக்கட்டும்.

452. திசையறி கருவியின் நுனி எப்போதும் வடதிசையையே காட்டும் வரையில் கப்பலானது தனது மார்க்கத்தைவிட்டு விலகிப்போய்

ஆபத்துக்குள்ளாவதில்லை. வாழ்க்கையாகிய கப்பலின் திசையறி கருவியாகிய மனிதனுடைய மனமானது பரப்பிரம்மத்தையே எப்போதும் நோக்கி அசைவற்றிருக்குமாகில் அது ஒவ்வொரு ஆபத்தையும் தாண்டிப்போகும்.

453. எவ்விதம் பகவத் பிரார்த்தனை செய்யவேண்டும்? நாரத மகரிஷியைப்போல் பிரார்த்திக்கவேண்டும். உலகப் பொருள்களை நாம் பகவானிடம் யாசிக்கலாகாது. "ஓ ராமா, எனக்கு பக்தியும் உனது பாதாரவிந்தங்களில் சரணமடையும் மனோ பாவமும் தந்தருள்வாய்" என்று வேண்டிக்கொண்டார் அம்முனிவர். "நாரத ரிஷி, அவ்விதமே உண்டாகட்டும். நாரதரே, வேறு ஒன்றும் உமக்கு வேண்டாமோ?" என்றார் ஸ்ரீ ராமச்சந்திர பிரபு.

"ஜகத்தையெல்லாம் மயக்கிவரும் மாயையின் வலையில் நான் சிக்குண்டுழலாது காப்பாற்றப்படவேண்டும்" என்று மறுவரம் வேண்டினார் நாரதர். "அங்ஙனமே ஆகுக; வேறு ஏதேனும் கேட்கமாட்டீரா?" என்றார் மேலும் ஸ்ரீராமபிரான். அதற்கு நாரதமகரிஷி "அதுவே போதும்; வேறொன்றும் நான் வேண்டேன்"—என்று கூறிவிட்டார்.

454. "ஏ பகவான்! நீ ரூபத்தோடு இருக்கின்றாயா, அல்லது நீ ரூபமற்றவனா என்பது எனக்குத் தெரியாது. நீ எப்படி யிருந்த போதிலும் என்மீதுள்ள உன் கருணையால் என்னைக் கடாக்ஷித் தருள்வாய். எனக்கு உன் தரிசனம் கிடைக்கும்படி அநுக்ரகம் செய்வாய்" என்று பிரார்த்திப்பாயாக.

455. பகவானைப்பற்றி மனத்தில் சிந்தனை செய்வதற்கு ஹேதுவாயிருக்கும்படி பல ரூபங்களும் குணங்களும் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அவைகள் ஒவ்வொன்றின்மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லாமல் போனாலும் உலகத்தைப் படைத்து நடத்துகிற ஒரு தெய்வீக சக்தி யிருப்பதாக நம்பி, கசிந்துருகிய மனதுடன் ஒருவன், "பகவானே, நான் உமது உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்தவனல்லேன். உமது உண்மை ஸ்வரூபத்தை நீரே எனக்குக் காட்டியருளவேண்டும்" என்று அவரைப் பிரார்த்தித்தால் பகவான் தம் கருணைப் பிரவாகத்தை அவன்மீது பொழிவார்.

456. கடவுள் எல்லாவற்றையும் அறியவல்லவர். சிறுதுரும்பு விழும் சத்தத்தையும் அவர் அறிவார். ஆகையால் எனது குழந்தைகளே! உங்கள் பிரார்த்தனை ஒவ்வொன்றும் அவர் செவியிற்படும். என்றைக்காவது ஒருநாள் சாகுந்தருவாயிலேனும் அவர்களுக்குத் தம் கருணா ரூபத்தைக் கடாக்ஷித்தருளுவார்.

அத்தியாயம் 11

முமுக்ஷுக்களும் மத பேதங்களும்

[எம்மதத்திலும் கடவுள் ஒன்றே—வெவ்வேறு மதங்களும் கடவுளிடம் செல்ல வெவ்வேறு வழிகளே—மதப்பித்தின் காரணமும் பரிகாரமும்—மத வேற்றுமைகளைக் கருத வேண்டிய முறை—ரகஸ்ய மார்க்கங்களைக் கருதவேண்டிய முறை.]

எம்மதத்திலும் கடவுள் ஒன்றே

457. ஒரே வஸ்துவான தண்ணீரை, சிலர் ஜலம் என்றும், சிலர் வாரி என்றும், சிலர் அக்வா என்றும், சிலர் பானி என்றும் வேறு வேறு வார்த்தைகளால் அழைக்கின்றனர். அதுபோல, ஒரே ஸச்சிதானந்தப் பொருளை, சிலர் கடவுளென்றும் சிலர் அல்லாவென்றும், சிலர் ஹரி என்றும், சிலர் பிரம்மம் என்றும் வேறு வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

458. குயவன் வேலை செய்யுமிடத்தில் குடம், ஜாடி, தட்டு, சட்டி, பானை முதலிய வேறு வேறு உருவமுள்ள பாத்திரங்கள் இருக்கின்றன. ஆனால் அவை யெல்லாம் ஒரே களிமண்ணினால்தான் செய்யப்பட்டவை. அதுபோல ஈசுவரன் ஒருவனே ; ஆனால் அவன் வேறு வேறு நாமரூபங்கள் மூலமாக ஆராதிக்கப்படுகிறான்.

459. ஒரே வஸ்துவான சர்க்கரையினால் பக்ஷி போலவும் மிருகம் போலவும் வேறு வேறு உருவங்களைக்கொண்ட மிட்டாய் செய்யக்கூடும். அதுபோல, இன்ப வடிவினளான ஒரே திவ்விய மாதாவானவள், பலவித நாம ரூபங்களால் பலவித கால தேசங்களில் ஆராதிக்கப்படுகிறாள்.

460. ஒரே வஸ்துவான தங்கத்தினால் வெவ்வேறு பெயரும் உருவமும் கொண்ட பல நகைகளைச் செய்கின்றனர். அதுபோல ஒரே ஈசுவரன் வேறு வேறு நாம ரூபங்களால் வேறு வேறு கால தேசங்களில் ஆராதிக்கப்படுகிறான். அப்படி ஆராதிக்கையில் சிலர் அவனைப் பிதாவாகவும், சிலர் மாதாவாகவும், சிலர் தோழனாகவும், சிலர் நாயகனாகவும், சிலர் அந்தர்யாமியாகவும், சிலர் இனிய பாலகனாகவும் இவ்வாறு வேறு வேறு மனோபாவத்துடன் கொண்டாடுகின்றனர். என்றாலும் இப்படிப் பல்வேறு விதமாக ஆராதிக்கப்படுபவன் ஒருவனேதான்.

461. விஷ்ணு, சிவன், இவர்களில் யார் பெரியவர் என்ற வாக்குவாதம் ஒருசமயத்தில் பரத்துவான் மகாராஜாவின் சபையிலிருந்த பண்டிதர்களுக்குள் நிகழ்ந்தது. சிலர் சிவன் பெரியவர் என்றனர். வேறு சிலர் விஷ்ணுவே பெரியவர் என்று சாதித்தனர். வாக்குவாதம் வலுத்துவிட்டது. அப்போது அங்கிருந்த அறிவிற் சிறந்த பண்டிதர் ஒருவர், "கனவான்களே ! நான் விஷ்ணுவையும் கண்டதில்லை ; சிவனையும் கண்டதில்லை. அப்படியிருக்க அவர்களில் பெரியவர் யார் என்

பதை எப்படி என்னல் சொல்ல முடியும் ?" என்றார். அதுபோல, ஒரு தேவதையோடு மற்றொரு தேவதையை ஒப்பிட்டுப் பார்க்க முயலாதே. ஏதேனும் ஒரு மூர்த்தியை நீ காணக் கூடுமானல் அப்போது எல்லா மூர்த்திகளும் ஒரே பிரம்மத்தின் ஸ்வரூபங்களே என்பதைத் தெரிந்து கொள்வாய்.

வெவ்வேறு மதங்களும் கடவுளிடம் செல்லும் வெவ்வேறு வழிகளே

462. ஒரு பெரிய தடாகத்தில் குளிக்கும் துறைகள் அநேகம் இருக்கின்றன. ஸ்நாநம் செய்யவோ ஜலம் மொள்ளவோ யாராயிருந்தாலும், எந்தத் துறை வழியாக இறங்கின போதிலும், நீர் மட்டத்துக்குப் போகக்கூடும். ஒருவனுடைய துறை நல்லது; மற்றவனுடைய துறை கெட்டது என்று சண்டை போடுவது வீண். அதுபோல, நித்தியானந்தமாகிய நீர்த் தடத்துக்குப் போகும் துறைகளும் பல. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒவ்வொன்றாகும். இந்தத் துறைகளில் ஏதாவதொன்றின் வழியே நேராகத் திடபக்தியுடன் சென்றால், நீ நித்தியானந்த நீர்த்தடத்தை யடைவது நிச்சயம். ஆனல் உனது மதந்தான் உயர்ந்தது, மற்றவை தாழ்ந்தவை என்று மட்டும் சொல்லாதே.

463. ஈசுவரனுடைய நாமங்கள் அநந்தம். அவனை அடைவதற்குச் சாதகமாக ஏற்பட்ட ரூபங்களும் அநந்தம். நீ எந்த நாம ரூபத்துடன் அவனைப் பூஜிக்கின்றாயோ அந்த நாம ரூபத்துடன் அவனுடைய காட்சியை நீ பெறுவாய்.

464. வேறு வேறான மதங்களெல்லாம் ஒரே ஈசுவரனை யடைவதற்கு வேண்டிய வேறு வேறு வழிகளேயாம். கல்கத்தாவிலுள்ள காளி கோயிலுக்குப் போகப் பல்வேறு வழிகள் உள்ளன. அதுபோல ஈசுவரனுடைய ஸந்நிதானத்துக்குச் செல்லும் மார்க்கங்களும் பலவுள்ளன. ஒவ்வொரு மதமும் மனிதனை ஈசுவரனிடம் கொண்டு சேர்ப்பிக்கும் அத்தகைய மார்க்கமேயன்றி வேறன்று.

465. சில வருஷங்களுக்கு முன்னல், ஹிந்துக்களும் பிரம ஸமாஜத்தவர்களும் தங்கள் தங்களுடைய மதத்தைப்பற்றி மிகுந்த சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் பிரசாரம் பண்ணி வந்தபோது, ஒருவர் பரமஹம்ஸரைப் பார்த்து அவ்விரு கக்ஷியாரையும் பற்றி அவர் கொண்ட அபிப்பிராயம் யாதெனக் கேட்டனர். அதற்குப் பகவான், "எனது திவ்விய மாதா இந்த இரண்டு கக்ஷிகள் மூலமாயும் தனது காரியத்தைச் செய்துகொள்கின்றதைக் காண்கிறேன்" என்று பதில் சொன்னர்.

466. ஹிந்து மதத்துக்கும் பிரம்ம ஸமாஜத்துக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று ஒரு பிரம்மஸமாஜி பரமஹம்ஸரைக் கேட்டார். அதற்குப் பரமஹம்ஸர், "இவ்விரண்டுக்கு முள்ளபேதம், ஒற்றை ஸ்வரத்துக்கும் ஸ்வரங்களெல்லாம் பொருந்திய ஸங்கீதத்துக்குமுள்ள

பேதத்தைப்போன்றது" என்றார். பிரம்ம ஸமாஜம் 'பிரம்மம்' என்ற ஒற்றை ஸ்வரத்துடன் திருப்தி யடைகிறது. ஹிந்து மதமோ, ஒன்று சேர்ந்து செவிக்கினிய சங்கீதத்தை யுண்டாக்கும் பற்பல ஸ்வரங்களின் சேர்க்கை போன்றது.

467. வீட்டின் உச்சி முகட்டுக்குப் போக, ஏணி, மூங்கில், மாடிப் படி, கயிறு இவைகளில் ஏதேனுமொன்றின் உதவியைக்கொண்டு ஏற லாம். அதுபோல, ஈசுவரனை அடைவதற்கு வேறு வேறு வழிகளும் சாதனங்களும் ஏற்பட்டுள்ளன. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட வழிகளுள் ஒன்றைத்தான் காட்டுகிறது.

468. மின்சார விளக்கின் ஒளி மங்கலாகவோ பிரகாசமாகவோ வெவ்வேறிடங்களில் வெவ்வேறு படித்தாகத் தோன்றுமாயினும், அந்தப் பிரகாசம் உண்டாவதற்கு மூலகாரணமான மின்சாரம் ஒரே ஒரு பொது விடத்திலிருந்துதான் வருகிறது. அதுபோல, வெவ்வேறு காலத்தில் தேசங்கள் தோறும் தோன்றிய மதாசாரியர்கள் அனைவரும் சர்வ சக்தி யுள்ள ஒரே ஒரு மூலப் பொருளிடத்திலிருந்து இடைவிடாது பெருகிக் கொண்டிருக்கும் சைதன்யச் சுடரை வெளியிடும் தீபஸ்தம்பங்களைப் போன்றவராவார்கள்.

469. எல்லா நரிகளின் ஊளையும் ஒரே மாதிரியாகத்தான் இருக் கிறது. அதுபோலவே எல்லா ஞானிகளின் உபதேச சாரமும் ஒன்று கவே இருக்கின்றது.

மதப் பித்தின் காரணமும் பரிகாரமும்

470. சாதாரண மனிதன் தன் அறியாமையால் தன் மதமே பெரிதென்றெண்ணி ஆரவாரம் செய்கின்றான். உண்மை ஞானம் உதித்தவுடன் சமயப் பூசல்கள் எல்லாம் ஒழிந்து விடுகின்றன.

471. பச்சோந்தியின் நிறத்தைப்பற்றி இருவருக்குள் வெகு மும் மரமான விவாதம் உண்டாயிற்று. "அந்தப் பனை மரத்தின் மீதுள்ள ஓந்தி அழகிய சிவப்பு நிறமுள்ளது" என்றான் ஒருவன். மற்றொருவன், "சே, நீ சொல்வது தப்பு. அது சிவப்பு நிறமுள்ளதன்று, நீலநிறமா னது" என்று தடுத்துச் சொன்னான். இவர்களுக்குள் வாக்குவாதம் தீரவில்லை யாதலால், இருவரும் அம்மரத்தின் கீழேயே எப்போதும் வசித்து, ஓந்தியின் நிறங்களையெல்லாம் கண்டறிந்த மனிதன் ஒருவ னிடம் சென்றனர். சென்றதும் ஒருவன், "ஐயா! இந்த மரத்திலுள்ள ஓந்தி சிவப்புநிறமுள்ள தல்லவா?" என்று கேட்டான். அம்மனிதன் "ஆமாம்" என்றான். உடனே மற்றவன், "அதென்ன, நீர் அப்படிச் சொல்கிறீர்! அது சிவப்பு நிறமுள்ளதன்று, நீலநிறமுள்ளதுதானே" என்றான். இதற்கும் அம்மனிதன் பணிவுடன், "ஆமாம்" என்றான். ஓந்தியானது அடிக்கடி நிறம் மாறும் சுபாவமுள்ள தென்பதை அம்மனி தன் தெரிந்து கொண்டவனாதலால், இரண்டு பேர் வார்த்தைக்கும், "ஆமாம்" என்று பதில் சொன்னான். அம்மாதிரியே சச்சிதானந்தமும்

அநேக உருவமுள்ளது. ஒரே ஒரு உருவத்தில் ஈசுவரனைக் கண்ட பக்தன் ஈசுவரனுக்கு அவ்வொரு உருவந்தான் உண்டு என்று நினைக்கிறான். ஈசுவரனை அவனது பல்வேறு உருவங்களில் கண்டவன் மட்டுமே, 'இவ்வுருவங்களெல்லாம் ஒரே ஈசுவரனுடையவை; ஈஸ்வரனின் ரூபங்கள் அனந்தம்' என்று சொல்லக் கூடியவனாவான். ஈசுவரன் உருவமுள்ளவனும் உருவ மற்றவனுமாகிறான். ஒருவருங் காணாத அவனுடைய ரூபங்கள் அநேகம் உள்ளன.

472. சுத்த ஜலம் நிரம்பிய பெரிய தடாகங்களில் பாசி யுண்டாவதில்லை. தேங்கிக் கிடக்கும் அசுத்தத் தண்ணீர் உள்ள குட்டைகளில் தான் அது படரும். அதுபோல, சுயநலம் கருதாத தன்மையையும் தாராள சிந்தனையையும் கைக்கொண்டிருக்கும் சமூகத்தாரிடம் மதக் கக்ஷி ஏற்படுவதில்லை. தன்னயம், கபடம், மதத் துவேஷம் இவைகளை அவலம்பிக்கிற சமூகத்தாரிடமே கக்ஷி உண்டாகின்றது.

473. டோல்கள் (மதக் கக்ஷிகள்) உண்டாக்குவது நல்லதா? டோல் என்னும் பதம் இங்கு இரண்டு பொருள்பட உபயோகிக்கப்பட்டிருக்கிறது. (டோல் என்பதற்கு, வங்காள பாஷையில், கக்ஷி அல்லது வகுப்பு என்றும், தேங்கிய தண்ணீரின்மீது படரும் பாசி என்றும் இரண்டு அர்த்தம் உண்டு.) ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்தில் டோல் பாசி படராது. தேங்கிக் கிடக்கும் குட்டைகளில்தான் அது வளரும். ஈசுவரனை நாடி சதா சர்வகாலமும் ஓடிக்கொண்டிருக்கும் மனத்தையுடையவனுக்கு வேறு விஷயங்களைப்பற்றிச் சிந்திக்க அவகாசம் இருப்பதில்லை. கவுரவம், கீர்த்தி இவைகளைப் பெற விரும்புகிறவன் கக்ஷிகளை உண்டாக்கிக்கொண்டிருப்பவனாவான்.

474. ஜனங்கள் தங்களுடைய நிலத்தை அளவுகோல்கொண்டு அளந்து வரப்புப் போட்டுப் பிரித்துப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். ஆனால் தலைக்குமேலே எங்கும் வியாபித்திருக்கும் ஆகாயத்தை அவ்விதம் பங்கிட்டுக் கொள்ள முடியாது. பகுக்க வொண்ணாத அவ்விசும்பு எல்லாவற்றையும் சூழ்ந்து தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. அதுபோல, ஞானமில்லாதவனே தனது மதந்தான் உண்மையானதென்றும் உயர்ந்ததென்றும் சொல்லுவான். ஆனால் உண்மையான ஞானம் அவன் மனத்தில் உதயமாகும்போது இந்த மதச் சண்டைகளையெல்லாம் கடந்த அகண்ட சச்சிதானந்தப் பொருள் ஒன்று இருக்கிறதென்பதை தெரிந்துகொள்வான்.

மத வேற்றுமைகளைக் கருதவேண்டிய முறை

475. பகவான் எந்நிறத்தன் எவ்வண்ணத்தன் என்று ஆராய்வது பெரிதல்ல; எந்த வழியாக அவனை உபாசிப்பதென்பதும் இங்கு அவசியமன்று; ஆனால் ஒப்பற்ற ஓர் இறைவன் இருக்கின்றான் என்று முழு மனதுடன் நம்பி அவனை யடையச் சாதனை செய்தால் கடைசியில் மனிதன் அவனை அவசியம் அடைந்தே தீருவான்.

476. கற்கண்டு சேர்த்துச் செய்யப்பட்ட தின்பண்டத்தை நேராகவோ அல்லது குறுக்காகவோ அல்லது வேறு எந்தவிதமாகவோ பிடித்துக்கொண்டு தின்றாலும் அது இனிப்பாகவே இருக்கும். அது போல ஒருவன் எந்தவிதமாகக் கடவுளைத் தியானம் செய்தாலும், எந்த விதமாக அவனது நாமத்தை ஜபம் செய்தாலும் அவன் ஆத்மஞான வாழ்க்கையில் முன்னேறுவான்.

477. எல்லா மதங்களாலும் போற்றப்படும் ஈசுவரன் ஒருவனாகவே இருந்தால் ஏன் அவனைப் பல மதஸ்தர்கள் பலவிதமாக வர்ணிக்கின்றனர்?

ஈஸ்வரன் ஒருவனே. ஆனால் அவனுடைய நிலைகளோ பல. ஒரு வீட்டின் எஜமானன், ஒருவனுக்குப் பிதாவாயும் இன்னொருவனுக்குச் சகோதரனும் ஒருத்திக்கு நாயகனாகவும் இருக்கிறான். பலரால் அவன் இவ்வாறு வேறு வேறு உறவு முறை பாராட்டி அழைக்கப்படுகிறான். அதுபோல ஒரே ஈசுவரன், பக்தர்களில் யார் யாருக்கு எந்தெந்தத் தோற்றத்துடன் காட்சி கொடுக்கிறானோ அந்தந்தத் தோற்றத்துக்கு அனுகுணமான வகையில் வர்ணிக்கப்படுகிறான்.

478. நோய் வாய்ப்பட்ட குழந்தைகளுக்குப் போஷணை செய்யும் தாய், ஒன்றுக்குச் சோறும் கறியும், மற்றொன்றுக்குச் சவ்வரிசிக் கஞ்சியும், வேறொன்றுக்கு வெண்ணெயும் ரொட்டியும் கொடுக்கிறாள். அது போல வேறு வேறான மனிதர்களுடைய மன நிலைமைக்கு ஏற்றபடி ஈசுவரன் வேறு வேறான மார்க்கங்களை நியமித்தருளி யிருக்கின்றார்.

479. சங்கராசாரியருடைய அத்வைத ஸித்தாந்தம் உண்மையானது. ராமானுஜருடைய விசிஷ்டாத்வைதமும் உண்மையானதே.

480. மனிதன் தயையில் கிருஸ்தவனைப்போலவும், அனுஷ்டானத்தைத் தவறாமல் கடைப்பிடிப்பதில் மகம்மதியனைப்போலவும், ஸர்வ ஜீவராசியினிடத்தும் அன்பு பாராட்டும் விஷயத்தில் ஹிந்துவாகவும் இருக்கட்டும்.

481. ஜனங்களுடன் கலந்து சஹவாசம் செய்யவேண்டுமானால் உனக்கு எல்லாரிடத்தும் அன்பிருக்கவேண்டும். அவர்களுடன் தாராளமாகக்கூடி அவர்களில் ஒருவனாக நீ ஆகவேண்டும். "ஓ! அவர்கள் உருவக் கடவுளை வழிபடுபவர், அருவக் கடவுளைக் கொண்டாடுவதில்லை" என்றோ, அல்லது, "அவர்கள் அருவக் கடவுளைக் கொண்டாடுபவர், உருவக் கடவுளை வழிபடுவதில்லை. அவன் கிருஸ்தவன், இவன் மகம்மதியன், இவன் ஹிந்து" என்றோ சொல்லிக்கொண்டு முகத்தைக் கோணிப் பிறரைத் துவேஷிக்கக்கூடாது. ஈசுவரன் தன்னைப்பற்றி எவ்வளவு தெரிவிக்கிறானோ அதற்குமேல் மனிதன் தெரிந்துகொள்வதில்லை.

இன்னும் மனிதர்கள் வேறு வேறு சுபாவமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, நீ உன்னால் கூடுமான வரையில் அவர்களுடன் சேர்ந்து பழகவேண்டும். ஆனால் எல்லாரிடத்தும் உனக்கு அன்பு இருக்கவேண்டும்.

அப்பால், உன் உள்ளத்தினுள்ளே சாந்தியையும் ஆனந்தத்தையும் அடைவாய். அங்கு உன்னுடைய உண்மை சொரூபத்தை நீ காண்பாய்.

482. ஒவ்வொருவனும் தன்னுடைய மதத்தையே பின்பற்ற வேண்டும். கிறிஸ்தவன் கிறிஸ்து மார்க்கத்தையும், மகம்மதியன் மகம்மதிய மார்க்கத்தையும் பின்பற்ற வேண்டும். ஹிந்துக்களுக்கோ ஆரிய ரிஷிகள் ஏற்படுத்திய புராதன மார்க்கந்தான் உத்தமமானது.

483. உண்மையான சமயப்பற்றுள்ள ஒருவன் தன்னுடைய மதமேயன்றி மற்றைய மதங்களும் உண்மையை நாடி யடைவதற்கேற்ற மார்க்கங்களென்றே கருதவேண்டும். இதர மதங்களுக்கு நாம் எப்போதும் மரியாதை பாராட்டுபவர்களாகவே இருக்க வேண்டும்.

484. வாக்குவாதம் செய்யாதே. உனது மதத்தினிடத்தும் கொள்கையினிடத்தும் உனக்கு எப்படிப்பற்று இருக்கிறதோ, அப்படியே மற்றவர்களுடைய மதங்களிலும் கொள்கைகளிலும் அவரவர்களும் பற்றுவைக்கும்படியான உரிமையை அவர்களுக்குக் கொடு. வாக்கு வாதத்தினால் மட்டும், மற்றொருவனுடைய பிழையை அவனுக்கு எடுத்துக் காட்ட முடியாது. ஈசுவரனுடைய கிருபை வருமாகில், ஒவ்வொருவனும் தன்னுடைய பிழைகளைத் தெரிந்து கொள்வான்.

485. பாவ சமாதி நிலையில் ஒருநாள் பகவான் இங்ஙனம் ஜகதம்பிகையுடன் பேசிக் கொண்டிருக்கக் காணப்பட்டார்: "அம்பிகே, ஒவ்வொருவரும் 'என் கடிகாரம் சரியான மணி காட்டுகின்றது' என்கின்றனர். ஹிந்து, கிறிஸ்தவர், மகம்மதியர் ஆகிய ஒவ்வொருவரும் 'எம்மதமே உண்மையான மதம்' என்று கூறுகின்றனர். ஆனால், அன்னாய், ஒருவரது கடிகாரமும் சரியான காலத்தைக் குறிப்பிடாது. உன்னை முழுதும் உணர யாரால் முடியும்? ஆனால் ஒருவன் மனமுருகி உன்னைப் பிரார்த்தனை செய்தால் உன்னுடைய கிருபையால் எந்த மார்க்கத்தின் மூலமாகவேனும் உன்னை வந்து அடைந்து விடுவான்."

இரகஸ்ய மார்க்கங்களைக் கருதவேண்டிய முறை

486. சதாசாரப் பற்று மிகுந்த பகவானது பக்தர்களிற் சிலர், அதியாத்மிக உயர் நிலையில், உயர்ந்த சில குறிப்பிட்ட பெரியார்கள் சாக்த, வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்த சில இரகசிய மார்க்கங்களைப் பின் பற்றியதால் அவர்களைப்பற்றி வெகுவாகக் குறைகூறத் தலைப்பட்டார்கள். அவர்களுக்கு அம்மார்க்கங்கள் சாதாரண ஒழுக்கமுறையை மீறிச் செல்வதாகத் தோன்றின. அவர்களைப் பார்த்துப் பகவான் கூறியதாவது: "அப்பெரியார்களை அதற்காகக் குறைகூற வேண்டியதில்லை. அவர்கள் தாம் அனுசரித்த சாதனை உண்மையில் பகவானிடம்கொண்டு சேர்க்கும் என்ற திட நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். ஒருவர் ஒன்றைத் திடமாக நம்பி அது கடவுளிடம்கொண்டு சேர்க்கும் என்ற உறுதியுடன் அனுஷ்டிப்பாரானால் அதனிடம் நாம் குறை காணுதல் கூடாது. எந்த சாதனையும் உண்மை உள்ளத்துடன் அனுஷ்டிக்கப்

படுமானல், எல்லா சாதனைகளுக்கும் முடிவிடமான பகவானிடம் நிச்சயமாக அது அழைத்துச்செல்லும். ஆகையால் சாதனையைக் குறை கூற வேண்டா. ஒவ்வொருவனும் தன் தன் வழியைப் பின்பற்றட்டும். அதனைக் குறை கூருதீர்கள். அதனை உமதென்று அனுசரிக்காதீர்கள்."

487. இவ்வித இரகசிய மார்க்கங்களிலும் தமது பக்தர்களுக்கிருந்த அருவருப்பை அகற்றுவதற்காகச் சில சமயம் பகவான் இவ்விதம் தமது அபிப்பிராயத்தைக் கூறுவர்: "ஏன் அவைகளிடம் நீங்கள் பகைமை பாராட்டவேண்டும்? எவ்வளவு ஆபாசமாயிருப்பினும் அவைகளும் மார்க்கங்களே என்பதை அறிந்து கொள்வீராக. தெருவாசல், புறக்கடை, தோட்டிகள் அசுத்தத்தை அகற்றிச் செல்லும் சந்து என வீட்டுக்குள் நுழைய எத்தனையோ வழிகள் உள்ளன. இறுதியில் கூறப்பட்ட தோட்டிகள் செல்வதற்கான வழியைப் போன்றவை இக்கொள்கைகள். எவ்வழியாக வீட்டிற்குள் நுழைவது என்பதுபற்றிக் கவலையில்லை. ஒருமுறை நுழைந்ததும் எல்லோரும் வீட்டிற்குள் ஓரிடத்தில் தானே சேர்கின்றார்கள். ஆனல் நீங்களும் அவர்களைப்போல் நடக்க வேண்டுமென்றும் அவர்களோடு பழக வேண்டுமென்றும் கூறவில்லை. அவர்களை எந்த எந்த விதத்திலும் நீங்கள் பகைக்கலாகாது."

அத்தியாயம் 12

ஆன்ம வாழ்க்கைக்கு அவசியமான நெறிகள்

[மனத்தைத் தெளிவுறுத்தும் சில நெறிகள்—நந்நம்பிக்கை—ஈசுவரார்ப்பணம் — இஷ்டதெய்வம்—உண்மை — பிரம்மசரியம் — விவேகம்—வைராக்கியம் — விடாமுயற்சி — அனுஷ்டானம் — தியானமும் தாரணையும்]

மனத்தைத் தெளிவுறுத்தும் நெறிகள்

488. பேய் பிடித்திருக்கும் ஒருவனுக்குத் தனக்குப் பேய் பிடித்திருக்கின்றதென்ற உணர்ச்சி வருமானல், உடனே அப்பேய் அவனை விட்டகலுகின்றது. அதுபோல, மாயையால் பந்தப்பட்ட ஜீவன், தான் அப்படிப் பந்தப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டவுடனே மாயையினின்றும் விடுபடும்.

489. தன் மனத்தை ஏமாற்ருத ஒருவனே பகவானது சந்நிதானத்தை அடையப் பெறுவான். அதாவது கள்ளங்கபடமற்ற தன்மையும் உண்மை அன்பும் பரலோக ராஜ்யத்திற்குப் பாதைகளாகும்.

490. ஒருவன், ஒரு வஸ்துவின் சுபாவம் ஒரு போதும் மாருது என்ருன். அதற்கு மற்றெருவன், "நெருப்பானது கரியைப் பற்றிக் கொண்டால் அக்கரியின் கறுநிறத்தைப் போக்கி விடுகிறது" என்று தடுத்துரைத்தான். அதுபோல, ஞானமாகிய நெருப்பால் மனம்பற்றியெரியும் போது அதன் சுபாவ குணமும் அழிந்து போம். அப்போது பந்தம் உண்டாகச் செய்யும் தன்னுடைய தன்மையை இழந்துவிடுகிறது.

491. மனந்தான் எல்லாம். அது தனது சுயேச்சையை இழக்குமானல் நீயும் உனது சுயேச்சையை இழப்பாய். மனம் சுயேச்சையோடு இருக்குமானல் நீயும் சுயேச்சையோடு இருப்பாய். மனத்தை, வண்ணனிடமிருந்துவந்த வெளுப்பு வஸ்திரத்தைப்போல, எந்த சாயத்திலும் தோய்த்தெடுக்கலாம். ஆங்கில பாஷையைப் படித்தால் உனது சம்பாஷணையில், நீ தடுக்க முயன்ருலும், ஆங்கிலச் சொற்கள் கலந்துவிடும். சமஸ்கிருதம் படித்த பண்டிதன் நிச்சயம் சுலோகங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவான். துர்ச்சனரோடு சகவாசம் செய்தால் மனமும் வாக்கும் கெட்டுப் போம். பக்தர்களின் மத்தியிலிருந்தால் மனம் ஈசுவரனைப்பற்றிச் சிந்திப்பது நிச்சயம். சகவாசத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி மனத்தின் சுபாவம் மாறுபடும்.

492. மனந்தான் எல்லாம். மனைவியிடத்துள்ள பிரியம் ஒரு வகையானது; குழந்தையிடத்துள்ள வாத்ஸல்யம் வேறொரு வகையானது. ஒரு பக்கத்தில் மனைவியும் மற்றொரு பக்கத்தில் குழந்தையும் இருக்கின்றனர். ஒருவன் அவ்விருவரையும் பாராட்டுகிறான்; ஆனால், வேறு வேறு உணர்ச்சியுடன்.

493. பந்தம் மனத்தை யொட்டியது? முக்தியும் அவ்வாறே. "நான் ஒரு முக்தாத்மா; நான் ஈசுவரனுடைய புத்திரன்; என்னை யாரால் பந்தப்படுத்த முடியும்?" என்று நீ சொல்வாயானால் நீ முக்தனாக ஆவது நிச்சயம். பாம்பினால் கடிக்கப்பட்டவன் "விஷமில்லை, விஷமில்லை" என்று முழு நம்பிக்கையுடனும் மனோதிடத்துடனும் சொல்லக் கூடுமானால் அவனுக்கு விஷ உபத்திரவமே இராது.

494. வினா:—நான் எப்போது முக்தனாவேன்?

விடை:—"நான்" என்பது இறந்த பின்பு.

"நான்" "எனது" என்பன அஞ்ஞானம்; "நீ" "உனது" என்பன ஞானமாகும்.

நன்னம்பிக்கை

495. சிலரது பக்தியைக் 'குருட்டு' நம்பிக்கை என்று ஏளனம் செய்த ஒரு சிஷ்யரைப் பார்த்துப் பகவான் கூறியதாவது: "நல்லது; 'குருட்டு நம்பிக்கை' என்கிறாயே, அதன் பொருள் என்ன? சொல் பார்ப்போம். நம்பிக்கையென்பதே குருட்டுக்குச் சமானமல்லவா? அதற்கான கண்கள் எவை? ஞானம் அல்லது நம்பிக்கை—பக்தி என்று கூறுவாயாக. அப்படியல்லாமல் 'குருட்டு நம்பிக்கை', 'கண்களுடைய நம்பிக்கை' என்று நம்பிக்கையைப்பற்றிப் பேசுதலில் பொருள் ஒன்றுமில்லை.

496. ஈசுவரனிடம் விசுவாச மில்லாததுதான் மனிதன் படும் துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணம்.

497. எவரிடம் விசுவாசம் இருக்கும், எவரிடம் இராது என்பதற்குச் சிற்சில சரீர அடையாளங்கள் உள்ளன. எலும்பளவாய் மெலிந்தவர்கள், கண் கூடு பாய்ந்தவர்கள், வக்கிரக்கண்ணுடையவர்கள் ஆகிய இவர்களுக்கு விசுவாசம் எளிதில் உண்டாவ தில்லை.

498. பிறரைக் கொல்வதற்குக் கத்தி முதலிய ஆயுதங்கள்வேண்டும். ஆனால் தன்னைத் தானே கொல்வதற்கு ஓர் ஊசி கூடப் போதுமானதாக விருக்கும். பிறருக்கு உபதேசம் செய்ய வேண்டுமானால் அநேகம் கிரந்தங்களையும் சாஸ்திரங்களையும் படிக்கவேண்டும். ஆனால் ஆத்ம ஞான மடைய வேண்டுமானால், ஒரே ஒரு உபதேசத்தில் திடமான நம்பிக்கை யிருந்தால் போதுமானது.

499. ஹிந்துக்களுள் பலவிதமான சமயப் பிரிவினைகளும் சம்பிரதாயங்களும் உள்ளன. நாம் அவற்றில் எதைப் பின் பற்றுவது!

ஒரு நாள் பார்வதிதேவி பரமேசுவரனை நோக்கி, "பிரபுவே! நித்தியானந்தத்துக்கு மூலகாரணமாயிருப்பது எது?" என்று கேட்டனள். அதற்கு மகா தேவர், "விசுவாசம்தான்" என்று விடையளித்தார். ஆதலால் சமய வேறுபாடுகளைப்பற்றிக் கருத வேண்டிய தில்லை, ஒவ்வொருவனும் தனது சம்பிரதாயத்துக்கு ஏற்பட்ட கடமையையும் பக்தி மார்க்கத்தையும் சிரத்தையோடு செய்யட்டும்.

500. விசுவாசம் அதிகரிக்க அதிகரிக்க ஈசுவர ஞானமும் அதிகரிக்கும். விசுவாசம் அற்பமாக இருக்குமிடத்தில் ஞானம் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்ப்பது வீண்.

501. சிரத்தை உள்ளவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் இல்லை.

502. ஈசுவரனைக் காணவேண்டுமானால் பகவந் நாமோச்சாரண மஹிமையில் திடமான விசுவாசம் வைத்திரு. மாயை இது, உண்மை இது என்ற விவேகத்தைப் பெற முயல்.

503. நம்பிக்கையில் குழந்தையைப் போல ஆனாலொழிய ஈசுவரனைக் காண்பது துர்லபம். யாரேனும் ஒருவனைச் சுட்டிக் காட்டி, 'அவன் உன் சகோதரன்' என்று தாயார் ஒரு குழந்தையிடம் சொன்னால், அக் குழந்தை அவள் சொல்வதை உண்மை யெனவே நம்பும். 'அங்கே போகாதே, பிசாசு இருக்கிறது' என்று தாயார் சொன்னால், அவ்விடத்தில் பிசாசு இருப்பதாகவே குழந்தை கருதும். இப்படிப்பட்ட குழந்தை போன்ற விசுவாசம் எவனிடமிருக்கிறதோ அவனிடந்தான் ஈசுவரனுக்குத் தயை பிறக்கிறது. எல்லாவற்றிலும் கணக்குப் பார்க்கும் சுபாவத்துடனிருந்தால் ஈசுவரனைக் காணவே முடியாது.

504. ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ண பகவான், அர்ஜுனனுடன் தேர் மீது போய்க்கொண்டிருக்கும்போது ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து "அர்ஜுனா, அதோ பார்! என்ன அழகான புறாக் கூட்டம் ஒன்று பறந்து செல்லுகின்றது!" என்றார். அர்ஜுனன் உடனே அத்திக்கு நோக்கி "உண்மைதான், ஆ! எவ்வளவு அழகான புறாக்கள்!" என்று கூறினான். ஆனால் மறு கணமே ஸ்ரீ கிருஷ்ண பகவான் தாம் முன் கூறியதை மறுத்து "அல்ல அர்ஜுனா! அவை புறாக்கள் அல்ல வென்று தோன்றுகின்றன" என்றார். அர்ஜுனனும் பார்த்து உடனே சொன்னதாவது "ஆம், உண்மையிலே அவைகள் புறாக்கள் அல்ல." இவர்கள் சம்பாஷணையின் போக்கின் உட்பொருளைத் தெரிந்துகொள்ள முயல்வாய். எப்போதும் உண்மையையே பேசும் அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானை முகஸ்துதி செய்வதற்காகவே அவர் கூறியவற்றிற் கெல்லாம் சரி யென்று ஒப்புக் கொண்டதாக நினைக்க வேண்டாம். ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் அவனுக்கு அபரிமிதமான நம்பிக்கை யிருந்தது. ஆகவே ஸ்ரீ கிருஷ்ண பகவான் என்ன சொன்னாரோ அவைகளை அர்ஜுனன் உண்மையாகக் கண்டான்.

505. நன்றாய் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் சர்க்கரையைக் காய்ச்ச வேண்டும். அதில் மண்ணும் அழுக்கும் இருக்கும்

வரையில், பாகு புகைந்து சப்தமிட்டுப் பொங்கும். அழுக்கை யெல்லாம் எடுத்தெறிந்த பிறகு, புகையும் சப்தமும் இரா; பாகு வெகு சுத்தமாக மேலே வரும். பிறகு அது உறைந்து கட்டியானாலும் அல்லது உறையாமலே இருந்தாலும் அது மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் இனிய உணவாகும். தீயைப் போன்று விசுவாசம் மனிதனைத் தூய்மைப் படுத்துகிறது.

506. ஒரு மனிதன் ஓர் ஆற்றைக் கடக்க எண்ணினான். ஒரு ரிஷி அவனுக்கு ஒரு ரக்ஷாபந்தனத்தைக் கொடுத்து "இது உன்னை அக்கரை கொண்டு சேர்க்கும்" என்று சொன்னார். அம்மனிதன் அதை எடுத்துக்கொண்டு நீர் மேல் நடக்கத் தொடங்கினான். பாதி ஆறு போனதும் அந்த ரக்ஷாபந்தனத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆவல் கொண்டு அதைப் பிரித்துப் பார்த்தான். ஒரு துண்டு நறுக்கில் ஈசுவரனுடைய நாமம் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு, "இரகசியம் எல்லாம் இதுதானா?" என்று ஏளனமாய்ச் சொல்லிக் கொண்டான். அப்படிச் சொன்னவுடன் அவன் தண்ணீருக்குள் அமிழ்ந்து மூழ்கிவிட்டான். அற்புத காரியங்களைச் செய்வதெல்லாம் ஈசுவர நாமத்திலுள்ள நம்பிக்கையே. ஏனெனில் நம்பிக்கையே உயிர், சந்தேகமே மரணம்.

507. குருவின் சக்தியில் திடமான நம்பிக்கை கொண்ட சிஷ்யனொருவன், அந்தக் குருவின் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்த மாத்திரத்தினாலேயே ஓர் ஆற்றின்மீது நடந்து தாண்டிப் போனான். இதைக் கண்ட குரு, "என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருக்கிறதா? எனது சக்தி இவ்வளவு அபாரம் என்பதை நான் இதுவரையில் தெரிந்துகொள்ளவில்லையே?" என்று நினைத்தார். மறுநாள், குருவானவர் "நான், நான், நான்" என்று சொல்லிக்கொண்டு ஆற்றின்மீது நடக்கப் பார்த்தார். ஆனால் தண்ணீரில் கால் வைத்தவுடன் அமிழ்ந்து மூழ்கிப் போய்விட்டார். அவருக்கு நீந்தத் தெரியாததாகையால் இறந்து போனார். சிரத்தையால் அபூர்வமான செய்கைகளைச் சாதிக்கலாம்; ஆனால் தற்புகழ்ச்சியோ மரணத்தைத் தான் தரும்.

508. ஸ்ரீராமபிரான், இலங்கைக்குப் போய்ச் சேருவதற்கு முன்னால் சமுத்திரத்தில் அணைபோட வேண்டியிருந்தது. ஆனால் அவருடைய பரம பக்தனான ஹனுமான், ராமபிரானிடம் வைத்திருந்த திட பக்தியினால் சமுத்திரத்தை ஒரே தாண்டாய்த் தாண்டி விட்டான். இங்கு எஜமானனைக் காட்டிலும் சேவகனே அதிகமான காரியத்தைச் சாதித்தான். காரணம் விசுவாசம்.

509. தான் செய்த பிரம்மஹத்திக்குப் பிராயச்சித்தம் எது என்று கேட்கும் பொருட்டு ஓர் அரசன் ரிஷியாசிரமத்துக்குச் சென்றான். ரிஷி எங்கேயோ வெளியில் போயிருந்தார். ஆனால் அவருடைய குமாரர் அங்கிருந்தார். அரசனுடைய விஷயங்களைத் தெரிந்துகொண்ட அவர் "பகவந் நாமத்தை மூன்று தரம் சொல்லும். உமது பாபம் போய்விடும்" என்று சொன்னார். ரிஷி திரும்பி வந்து, தம் குமாரனால் அரசனுக்கு விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைக் கேட்டதும், "ஒரே

ஒருதரம் பகவந் நாமத்தைச் சொன்ன மாத்திரத்தில் ஜன்மாந்தரங்கள் தோறும் செய்த பாபங்களெல்லாம் நசித்து விடுமே. அப்படி யிருக்க அந்த நாமத்தை மூன்று தரம் சொல்லும்படி நீ விதித்தபடியால் உனக்கு அதில் நம்பிக்கை இல்லை என்று தோன்றுகிறது. இதனால் நீ சண்டாளனாகக் கடவாய்" என்றனர். அந்தக் குமாரன் ஸ்ரீமத் ராமாயணத்தில் பிரஸ்தாபிக்கப்படும் குஹனானன்.

510. கல்லானது தண்ணீருக்குள் அநேக வருஷங்கள் கிடந்தாலும் அத்தண்ணீர் அதனுள் நுழையாது. ஆனால் களிமண்ணோ ஜல சம்பந்தத்தால் வெகு சீக்கிரத்தில் மிருதுவாகி விடுகிறது. அதுபோல, பக்தனுடைய திடமான மனம் இம்சையாலும் சோதனையாலும் தடுமாற்ற மடைவதில்லை. திடபக்தி யில்லாதவனுடைய மனமோ வெகு அற்பமான காரணத்தைக் கொண்டும் சலன மடையும்.

511. சிக்கிமுக்கிக் கல், கற்ப கோடி காலம் தண்ணீரில் கிடந்தாலும் தன் உள் நெருப்பை ஒரு போதும் இழப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் சரி, அதை இரும்பால் தட்டினால், நெருப்புப் பொறி பறக்கும். அதுபோலத்தான் திடசித்தமுள்ள பக்தனும் ; அவன் உலக பாசங்களினிடையே கலந்திருந்தாலும், அவனுடைய பக்தியும் பிரேமையும் குறைவுபடா. ஈசுவரனுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே அவன் தன்னை மறந்தவனாய் விடுகிறான்.

512. எதனை மனிதன் அதிகமாகச் சிந்திக்கிறானோ அதன் தன்மையை அடையப் பெறுகிறான். கூட்டிலிருக்கும் புழு குளவியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதால் குளவியாகவே ஆய்விடுகிறதாம். அதேபோல சச்சிதாநந்தமயமான பிரம்மனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவன் சச்சிதாநந்த மயமாகவே ஆய்விடுகின்றான்.

513. ஏன் உன் ஆயுட் காலமெல்லாம் பாபத்தைப்பற்றியும் நரக வேதனையைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறாய்? அவைகளை விட்டு விட்டு பகவந்நாம சங்கீர்த்தனம் பண்ணு. "ஈசுவரா! செய்யத் தகாத காரியங்களை நான் செய்துள்ளேன் ; செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் விட்டுவிட்டேன். சுவாமி! என்னை க்ஷமித்தருள வேண்டும்" என்று ஒருதரம் சொல்லு. சொல்வதுடன் நிற்காமல் அவனிடம் பூரண நம்பிக்கை கொண்டவனாயிரு. அப்போது உன் பாபங்களெல்லாம் அகன்று போம்.

514. இந்தியாவிலுள்ள "நம்பிக்கை" வைத்தியர்கள் நோயாளிகளிடம் 'எனக்கு வியாதியே இல்லை' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும்படி கட்டளை யிடுகின்றனர். நோயாளிகள் அப்படிச் சொல்வதனால் வியாதி அகல்வதற்குச் சாதகமுண்டாகிறது. அதுபோல, சன்மார்க்கத்தில் நீ தாழ்ந்தவன் என்று நினைத்துக்கொண்டால் சீக்கிரத்தில் தாழ்ந்தவனாகவே ஆய்விடுவாய். உன்னிடம் அளவிடப்படாத மஹிமை இருப்பதாக நினைத்துக்கொள். அந்த மஹிமை கடைசியில் உனக்கு வந்தே தீரும்.

515. தன்னை ஜீவனென்று நினைத்துக்கொள்பவன் ஜீவனாகவே இருந்துவிடுகிறான். தான் ஈசுவரன் என நினைத்துக்கொள்பவன் ஈசுவரனாக ஆவான். ஒருவன் தான் நினைக்கிறபடியே ஆவான்.

ஈசுவரார்ப்பணம்

516. கள்ளங் கபடமற்ற பிரேமையோடும் சிரத்தையோடும் எவனொருவன் ஈசுவர இச்சைக்குத் தன்னை அர்ப்பணம் பண்ணுகிறானோ அவன் சீக்கிரத்தில் ஈசுவர சன்னிதானத்தை யடைவான்.

517. இவ்வுலக வாழ்க்கையில் இருப்பதும் அதனைத் துறப்பதும் ஈசுவர இச்சையைப் பொருத்திருக்கின்றன. ஆதலால் எல்லாவற்றையும் ஈசுவரனுடம் ஒப்புவித்துவிட்டு உன் வேலையைச் செய். அதைத் தவிர உன்னால் வேறு என்ன செய்ய முடியும்?

518. மைதானத்தில் உள்ள ஆழமில்லாத குட்டையின் ஜலத்தை ஒருவரும் உபயோகிக்காத போதிலும், அது சிக்கிரம் வற்றிப்போகும். அதுபோல ஈசுவரனுடைய கிருபையும் அனுக்ரகமுமே கதியென்று பரிபூரணமாகச் சரணமடைகிற பாபியும் சில வேளைகளில் கிருதார்த்தனுவான்.

519. இவ்வுலகத்தி லிருக்கையில் நீ என்ன செய்யவேண்டும்? எல்லாவற்றையும் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துவிடு. நீயும் அவனைச் சரணமடை; அப்பால் உனக்குத் துன்பமே இராது. எல்லாக் காரியங்களும் அவனுடைய ஆக்ஞைப் பிரகாரமே நடக்கின்றன வென்பதை நீ தெரிந்து கொள்வாய்.

520. "வகாலமா" என்ற மார்க்கத்தைக் காட்டிலும் சுலபமானதும் சௌகரியமானதும் வேறொன்றில்லை. 'வகாலமா' என்றால், இங்கே ஸர்வேசுவரனுடைய இச்சைக்குப் பரிபூரணமாக அவனைச் சரணமடைந்து, 'எனது' என்ற அபிமானமே இல்லாதிருத்தலாம்.

521. குரங்குக்குட்டி அங்குமிங்கும் அலையும் தன் தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறது. பூனைக்குட்டியோ அப்படிச் செய்வதில்லை; பரிதாபகரமாய்க் கத்துகிறது. அதன் தாய் அதன் கழுத்தைக் கவ்வித் தூக்கிக்கொண்டு போகிறது. குரங்குக் குட்டி, தன்னுடைய பிடிப்பை விடுமானால் கீழே விழுந்து காயமடையும். ஏனெனில் அது தன் பலத்தையே நம்பியிருக்கிறது. பூனைக்குட்டியோ அப்படிப்பட்ட ஆபத்துக்குள்ளாவதில்லை. ஏனென்றால், ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அதன் தாயே அதைத் தூக்கிக்கொண்டு போகிறது. தன் பலத்தையே நம்பி யிருப்பதற்கும் ஈசுவரனைச் சரணமடைவதற்கும் உள்ள வித்தியாசமும் இப்படிப்பட்டதுதான்.

522. ஒரு மனிதன் தன் இரு மக்களை அழைத்துக்கொண்டு வயல் வழியாகச் சென்றான். ஒரு மகனைக் கையில் எடுத்துக்கொண்டிருந்தான். இன்னொரு மகன் பிதாவினுடைய கையைப் பிடித்துக்

கொண்டு பக்கத்தில் நடந்து வந்தான். அங்கு ஒரு பருந்து பறந்தது. அப்போது கீழே நடந்துவந்த பையன் சந்தோஷத்தால் கைகளைக் கொட்டி, "அப்பா அதோ பாரும், ஒரு பருந்து பறக்கிறது" என்றான். ஆனால் அவன் பிதாவின் கையை விட்டவுடன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான். தகப்பனால் தூக்கிச் செல்லப்பட்ட பையனும் கையைக் கொட்டிச் சந்தோஷப்பட்டானென்றாலும், அவன் கீழே விழவில்லை. ஏனெனில், அவனை அவன் பிதா தூக்கிக்கொண்டிருந்தான். ஆத்மீக விஷயத்தில் முதல் பையன் தன்னம்பிக்கையையும் இரண்டாவது பையன் சரணாகதியையும் ரூபிக்கின்றவராவார்கள்.

523. ஸ்ரீராதை, தன் பாதிவிரத்யத்தை நிரூபிப்பதற்கு ஆயிரம் துவாரங்கள் உள்ள ஒரு பாத்திரத்தில் ஜலம் கொண்டு வரும்படி கட்டளையிடப்பட்டாள். ஒரு துளி ஜலம் கூடக் கீழே விழாமல் அவள் கொண்டுவந்தவுடன், அங்கிருந்தவர்கள் எல்லாரும் 'இவளைப்போல் கற்புடைய ஸ்திரீ ஒருத்தி இதுவரையில் இருந்ததுமில்லை; இனி இருக்கப்போவதுமில்லை' என்று வெகுவாகச் சிலாகித்தனர். அப்போது ராதை "ஏன் என்னைச் சிலாகிக்கின்றீர்கள்? 'கீர்த்தி யெல்லாம் கிருஷ்ணனுடையதே' என்று சொல்லுங்கள். நான் கேவலம் அவருடைய பணிப்பெண்" என்றாள்.

524. பரிபூரண சரணாகதியின் தன்மை எப்படிப்பட்டது? களைப்படைந்தவன், அன்றைய வேலை முடிந்த பிறகு, தலையணையின்மீது சாய்ந்துகொண்டு, நிம்மதியாய்ப் புகைச் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருக்கும் ஆனந்த நிலைமையைப் போன்றது. துயரமும் துன்பமும் இல்லாத நிலைமையாகும் அது.

525. எச்சில் இலையைப்போல இவ்வுலகத்தில் வாழ். அது காற்றின் வசப்பட்டுள்ளது. சில வேளைகளில் வீட்டுக்குள்ளேயும் வரும். சில வேளைகளில் அசுத்தமான இடங்களுக்கும் போகும். இப்போது நீ இங்கிருக்கும்படி ஏற்பட்டிருக்கிறது. சரி என்று திருப்தியோடு இரு. ஈசுவரன் உன்னை இதைக் காட்டிலும் நல்லதான வேறிடத்தில் கொண்டுபோய் வைத்தால், அப்போது, "சித்தம்" என்று அங்குமிருக்கவேண்டும். கொஞ்சங்கூடப் பந்தப்படாமல் அவனுடைய இச்சைப் பிரகாரமே நடக்க உட்படு. எல்லாக் காரியங்களும் யதாக்ரமமாக நிகழட்டும்.

இஷ்ட தெய்வம்

526. ஒரு குடும்பத்திலுள்ள சிறு நாட்டுப்பெண் (மருமகள்) தனது மாமன் மாமிக்கு மரியாதையுடன் பணி செய்து அவர்களை இகழாது கீழ்ப்படிந்து வந்தாலும், தனது புருஷனையே வெகு பிரியமாகக் கொண்டாடுவாள். அதுபோல உனது இஷ்டதேவதையிடம் பூரண பக்தியோடிருந்தாலும் மற்ற தேவதைகளை இகழாதே. அவர்களைக் கவுரவமாகக் கொண்டாடு. அவர்கள் அனைவரும் ஒரே சக்தியையும் ஒரே அன்பையுமே தெரிவிக்கின்றனர்.

பிரம்மசரியம்

536. பாதரஸம் தடவின கண்ணாடியில் ஒருவனுடைய முகம் பிரதிபலிக்கும். அதுபோல, சக்தியையும் தூய்மையையும் பிரம்மசரியத்தால் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவனுடைய ஹிருதயத்தில் ஸர்வேசுவரனுடைய திவ்யரூபம் பிரதிபலிக்கும்.

537. முற்றிலும் இந்திரிய நிக்ரகம் செய்தாலொழிய சூக்ஷ்மமான ஆத்மீய உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடியாது.

538. சுகதேவர் பிரம்மசர்ய வடிவாக விளங்கினார். கனவிலும் கூட காம எண்ணங்கள் அவர் மனத்தில் உதித்ததில்லை. இத்தகையோர் ஊர்த்தவரேதஸ் எனப்படுவர். தைர்யரேதஸ் என்ற இன்னொரு வகுப்பார் இருக்கின்றார்கள். இவர்கள், முன்பு காம எண்ணங்களால் பாதிக்கப்பட்டுப் பிரம்மசரியமிழந்தவர்களானாலும் பின்பு சிறிதும் வழுவாத பிரம்மசர்யம் அநுஷ்டிப்பவர்கள். ஒருவன் பன்னிரண்டு வருஷங்கள் தைர்யரேதஸ் ஆக இருப்பானானால் அவன் அமானுஷ்ய சக்தி ஒன்றைப் பெறுவான். மேதநாடி (புத்திநாடி) என்ற ஒரு புதிய நரம்பு அவனிடம் உண்டாகிறது. அதனால் அவன் எதனையும் ஞாபகம் வைத்துக்கொள்ளவும் எதனையும் அறியவும் முடியும்.

539. ஒருவன் பன்னிரண்டு வருஷங்கள் வழுவாத பிரம்மசரியம் அநுசரித்தால் அவனிடம் மேதநாடி தோன்றுகிறது. அதாவது எதனையும் அறிந்துகொள்ளும் சக்தி மலர்கின்றது. வெகு சூக்ஷ்மமான விஷயங்களையும் அவன் சுலபமாக அறிந்து கொள்வான். அவ்வித அறிவால் ஒருவன் ஈசுவர தரிசனத்தையும் அடையக்கூடும். இவ்வித பரிசுத்த, தெளிந்த அறிவுள்ளவர்களாலேயே கடவுளையடைய முடியும்.

540. விந்துவிரயம் செய்யப்பட்டால் சக்திக்கும் நாசமுண்டாகிறது. ஆனால் தானே விந்து வெளிப்படுவதைப்பற்றிக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அது ஆகாரத்தினால் ஏற்படுகிறது. ஆனாலும் உண்மையான சாதகன் ஒருவன் ஸ்திரீகளை அறியாதிருக்க வேண்டும்.

541. பெண்ணாசையை ஒழித்தவன் உலகத்தையே துறந்தவனாவான். அவனுக்கு ஈசுவரன் வெகு சமீபத்திலிருக்கிறான்.

விவேகம்

542. "பெண்ணும் பொன்னும் அநித்தியமானவைகள். பகவான் ஒருவனே உண்மையானவன். பணத்தினால் என்ன பிரயோஜனம்? அது நமக்கு உணவும், உடையும், இருக்க இடமும் தரலாம்; அவ்வளவுதான்; அதற்குமேல் அதனால் பிரயோஜனமில்லை. பணத்தின் உதவியால் பகவானைக் காணுவது முடியவே முடியாது. பணம் நமது வாழ்க்கையின் லக்ஷியமன்று" என்று இவ்விதம் தனக்குள்ளே ஒருவன் விசாரணை செய்யவேண்டும். பணத்திலும் பெண்ணழகிலும் என்ன

இருக்கிறது? உன் விவேக புத்தியால் பெண் சரீரம் எதனால் ஆனது என்பதைப் பரிசிலனை செய்து பார். எலும்பும், தோலும், சீழும், ரத்தமும் சேர்ந்து ஆனது. மிருகங்களுக் கிருப்பதுபோலவே மலஜல துவாரங்களும், சளியும் பீளையும் இருக்கின்றன. என்றாலும் என்ன ஆச்சரியம்! மனிதன் கடவுளை மறந்து இவ்வித ஆபாசங்களிலேயே மனத்தைச் செலுத்துகின்றான்.

543. அநித்தியத்திலிருந்து நித்தியத்தைப் பிரிப்பதும், உலகப் பொருள்களை வெறுத்தலும் விவேக வைராக்யங்கள் எனப்படும். இவை ஒரே நாளில் கைகூடுவதில்லை. ஒவ்வொரு நாளும் இவற்றை அநுசரிக்க வேண்டும். முதலில் பெண் பொன் ஆசைகளை மனத்துக்குள் இல்லாமல் அகற்றிவிட வேண்டும். பகவத் சங்கல்பமிருந்தால் உள்ளும் புறமும் அவற்றைத் துறந்துவிட முயல்வாயாக. அப்பியாச யோகத்தால் அதாவது இடைவிடாத தியானத்தால் காம காஞ்சனங்களில் வெறுப்பு மிகுகின்றது என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. இடைவிடாத தியானத்தால் மனத்திற்கு ஒரு சக்தி பிறக்கிறது. இச்சக்தியின் உதவியால் காம காஞ்சனங்களை வெல்வதும், இந்திரியங்களை அடக்குவதும் சுலபமாகி விடுகின்றது. ஆமை, ஆபத்து வரும்போது தனது தலை, கால்கள், வால் முதலிய சகல அங்கங்களையும் உள்ளிழுத்துக் கொள்ளும். அதனை நீ அடித்து நூறு சுக்கல்களாக்கினாலும் அது தன் அவயவங்களை வெளிக்காட்டாது. அதேபோல, அப்பியாசத்தால் அடங்கிய மனத்தை உலகப் பொருள்கள் எவ்வளவு இழுத்தாலும் அது வரவே வராது.

544. இவ்வுலகம் அநித்தியமா? நீ ஈசுவரனை அறியாமலிருக்கும் வரையில் அது அநித்தியந்தான். ஏனெனில், நீ ஒவ்வொரு பொருளிலுமுள்ள ஈசுவரனைக் காண்பதில்லை. ஆகவே, "நான், எனது" என்ற மனோபாவம் உன்னிடம் ஆழ்ந்துகிடக்க, நீ உலக வசத்தனாகிறாய். இவ்விதம் அஞ்ஞானத்தினால் மதிமயங்கிய நீ, விஷயப் பொருள்களையே கருதுபவனாகி, மாயையாகிய ஸமுத்திரத்தில் மேலும் மேலும் ஆழமாக மூழ்கிக்கொண்டே யிருக்கிறாய். வழி நேராக இருப்பினும், ஸம்ஸாரத்தினின்று கரையேற வொண்ணாதபடி, மாயையானது மனிதர்களுடைய கண்களை முற்றிலும் குருடாக்கி விடுகின்றது. ஸம்ஸாரம் எவ்வளவு அநித்தியமென்பது உனக்கே தெரியும். நாம் வசிக்கிற வீட்டைப் பற்றிச் சற்று யோசனை செய்வோம். எத்தனை பேர்கள் அதில் பிறந்து இறந்து போயிருக்கின்றனர்! உலகப்பொருள்கள் ஒரு நிமிஷத்தில் நம் முன்னர் தோன்றி, அடுத்த நிமிஷத்தில் மறைந்து போகின்றன. பந்துக்கள் என யாரை நீ கருதுகிறாயோ அவர்கள் நீ கண்மூடிய பிறகு உனக்குப் பந்துக்கள் ஆகிறதில்லை. அப்படியிருந்தும், லௌகிகனுடைய பற்று எவ்வளவு பலமானது! குடும்பத்தில் அவனுடைய பராமரிப்பை எதிர்பார்ப்பவர் ஒருவருமில்லாத காலத்தில்கூட அவனுக்குக் காசிக்குப் (பக்தி சாதனை செய்ய) போய்வரச் சந்தர்ப்பப் படுவதில்லை. "பேரன் ஹரிசன் என்ன செய்வான்?" என்ற விசாரம் அவனை உலகத்தோடு

பிணிக்கின்றது. மீன் பறியின் வாய் எப்போதும் திறந்திருக்கிறது; என்றாலும் மீன்கள் வெளியே ஓடிப்போவதில்லை. வண்ணாத்திப் புழு தான் இழைத்த கூண்டிலேயே கிடந்து சாகின்றது. அப்படிப்பட்ட ஸம்ஸாரம் அநித்தியமென்றும் அழிந்துபோகக்கூடியதென்றும் ஏற்பட வில்லையா?

545. அகங்காரத்தை எப்படி அழிப்பதென்பது உனக்குத் தெரியுமா? நெல்லைக் குத்துகையில், அப்போதப்போது குத்துவதை நிறுத்திவிட்டு, உமி போய்விட்டதா என்பதையறிய, நெல்லைக் கையில் எடுத்துப் பார்ப்பார்கள். ஸங்கமான வஸ்துக்களை லேசான தராசில் நிறுக்கும்போது, அடிக்கடி நிறுத்தி இடை சரியாக இருக்கிறதா என்று பார்க்கக் கையை நகர்த்தித் தராசு முள்ளை அசைத்துப் பார்ப்பார்கள். அதைப்போல, எனது அகங்காரம் இன்னும் தலையெடுக்கிறதா என்று பார்க்க, நான் அடிக்கடி என்னைத் தூஷித்துக்கொள்வது வழக்கம். சில சமயம் நான் இந்த சரீரத்தைப்பற்றிச் சிந்தித்து, “இது எலும்பாலும் தசையாலும் ஆக்கப்பட்ட கூட்டைத் தவிர வேறென்ன? ரத்தம், சீழ் முதலிய அசுத்தங்களைத் தவிர வேறு நல்ல பொருள் ஒன்றும் இதில் இல்லையே; இந்த அற்பப் பொருளைக் குறித்து இவ்வளவு பெருமை அடைவதுதான் ஆச்சரியம்” என்று சொல்லிக்கொள்வேன்.

546. உலையில் கொதிக்கும் ஒரு பானை அரிசி வெந்துவிட்டதா என்று பதம்பார்க்க ஓர் அரிசி போதும்; ஒவ்வொரு அரிசியையும் பதம் பார்க்க அவசியம் இல்லை. முடியவும் முடியாது. அதேபோல உலகம் நித்தியமானதா அல்லது அநித்தியமானதா, சத்துப்பொருளா அல்லது அசத்துப்பொருளா, சுத்தியமா அல்லது அசுத்தியமா என்று பார்க்க உலகப்பொருள்கள் இரண்டொன்றினை ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டால் தெரிந்துவிடும். மனிதன் பிறந்து சிலநாள் வாழ்ந்து பிறகு மரண மடைகின்றான். அதேபோலவே மிருகங்களும் மரங்களும் நாசமடைகின்றன. இவ்விதம் விசாரணை செய்தால், நாம ரூபத்தோடுள்ள சகலமும் பூமியும் சூரிய சந்திராதிகளும்கூட இந்தக் கதியைத்தான் அடையும் என்பதை அறிய வருவாய். இதன் மூலமாக ஜகத்திலுள்ள எல்லாப் பொருள்களின் தன்மைகளையும் அறிந்துகொள்ளுகின்றாயல்லவா? இவ்விதம் உலகம் அநித்தியமானது, தோன்றி மறைவது என்பதை உணரப் பெறும்போது அதனிடம் உனக்கு மேலும் விருப்பம் எழாது. மனத்தினால் அதனை நீக்கி எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபடுவாய். இத் தியாக புத்தியை அடையப்பெற்றால் ஜகத்காரணனான கடவுளைப் பற்றித் தெரிந்துகொள்வாய்.

வைராக்கியம்

547. நமது உலக ஆசைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டு அவற்றில் முழுகி அந்தகாரத்தில் கஷ்டப்பட்டாலும், ‘நாம் யார்? இவற்றை யனுபவிப்பது யார்?’ என்ற கேள்வி எப்போதாவது ஒரு

சமயம் நம் மனத்தில் எழும். இக்காலந்தான் இரகசியப் பொருளை விளக்கும் புனித நேரமாகும்.

548. முள்ளும் புதரும் நிரம்பிய காட்டில் வெறுங்காலோடு நடப்பது முடியாத காரியம். ஆனால் காடு முழுவதையும் தோலால் மூடினாலாவது, தன் காலுக்குச் செருப்புப் போட்டுக்கொண்டாலாவது ஒருவன் நடக்கலாம். காடு முழுவதையும் தோலால் மூடுவது முடியாத காரியம். ஆதலால், தன் காலுக்குச் செருப்புப் போட்டுக்கொள்வதே நியாயமானது. அதுபோல, இவ்வுலகத்தில் மனிதனுக்கு அளவற்ற தேவைகளும் ஆசைகளும் உண்டாகித் துன்பத்தைக் கொடுக்கின்றன. அவைகளினின்றும் தப்பித்துக்கொள்ள இரண்டே மார்க்கங்கள்தான் உள்ளன. அவ்விதத் தேவைகளைப் பெற்றுத் திருப்தியடைதல், அல்லது அவைகளை வேண்டாதிருத்தல். ஆனால் மனிதனுக்கு உண்டாகும் இச்சைகளையெல்லாம் திருப்தி படுத்துவது முடியாத காரியம். ஏனெனில் ஒன்று திருப்தியானதும் இன்னொன்று தோன்றும். ஆதலால் கிடைத்தவற்றால் திருப்தியடைதல், உண்மை ஞானத்தைப் பெறுதல் ஆகிய இவ்விரண்டினாலும் மனிதன் தனது இச்சைகளையும் தேவைகளையும் குறைக்கவேண்டியதுதான் நியாயமான காரியம்.

549. தினவெடுக்கும் கடியைச் சொறிந்து கொடுக்கும்போது வெகு இன்பமாகத்தா னிருக்கிறது. ஆனால் அப்பால் உண்டாகும் எரிச்சலோ வெகு துன்பத்தைத் தருவதாயும் பொறுக்கக் கூடாததாயும் இருக்கும். அதுபோல உலக விஷயங்கள் முதலில் வெகு மனோகரமாகத்தானிருக்கும். ஆனால் பிற்பட்டு உண்டாகும் பலனோ நினைப்பதற்கும் அனுபவிப்பதற்கும் பயங்கரமானதாக இருக்கும்.

550. ஒரு பருந்து, மூக்கில் ஒரு மீனைக் கௌவிக்கொண்டிருந்தது. அதைப் பிடுங்கிக் கொள்வதற்காகச் சில காக்கைகளும் பருந்துகளும் அப்பருந்தைப் பின் தொடர்ந்து கொத்தி ஆரவாரித்தன. அது எந்தத் திக்கில் சென்றாலும் காகங்களும் பருந்துகளும் கூடவே வந்தன. இந்தத் தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் அந்தப் பருந்து மீனை அப்பால் போட்டுவிட்டது. உடனே அதை வேறொரு பருந்து கௌவிக்கொள்ள, காகங்களும் மற்றப் பருந்துகளும் இந்தப் புதிய பருந்தைத் தொந்தரவு செய்யத் தொடங்கின. தொந்தரவினின்றும் நீங்கிய முதல் பருந்து சாந்தமாய் ஒரு மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. இப்படிச் சாந்தமாக இருக்கும் பக்ஷியைப் பார்த்து வணங்கி, ஓர் அவதூதர், "பருந்தே! நீ எனக்குக் குருவாகிறாய். உலகப்பற்றுக்களாகிய சுமையை மனிதன் கீழே போடாதவரையில் அவனால் உலகச் சஞ்சலங்களினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாதென்றும், அவனுக்கு மனச்சமாதானமே இராதென்றும் நீ எனக்குக் கற்பித்தாய்" என்றார்.

551. வெருளுகிற குதிரைக்குக் கண்மூடி போடாவிட்டால் அது நேரான வழியில் போகாது. அதுபோல, விவேக வைராக்கியங்களாகிற தடைகளால் மறைக்கப்பட்ட லௌகிகனுடைய மனம் தீய வழியில் செல்லாது.

552. எண்ணெய் ஊறிய காகிதத்தில் ஒன்றும் எழுத முடியாது. அதுபோல, துன்மார்க்கமும் பெருமித வாழ்க்கையுமாகிற எண்ணெய்ப் பசையால் கெட்டுப்போன ஆத்மாவானது பக்திக்கு உதவாது. எண்ணெய்க் காகிதத்தின்மீது சுண்ணும்புப் பொடியைப் பரப்பினுல் எழுதுவதற்கு உபயோகப்படும். அதுபோல வைராக்கியமென்னும் சுண்ணும்புப் பொடியை அந்த ஆத்மாவின்மீது பரப்பினுல், அது மறுபடியும் பக்திக்கு உரியதாகும்.

553. விஷமுள்ள ஒருவகைச் சிலந்திப் பூச்சி யிருக்கிறது. அதனுல் உண்டாகும் கடி எந்த மருந்தினுலும் எளிதில் குணமடைவதில்லை. மஞ்சள் வேரினுல் கடியின்மீது குழையடித்த பிறகுதான், எந்த மருந்தும் குணங்கொடுக்க ஆரம்பிக்கும். அதுபோலப் பெண்ணுசையும் பொன்னுசையுமாகிய சிலந்திப்பூச்சி ஒருவனைக் கடித்துவிட்டால், வைராக்கியமென்னும் மனேசக்தி அவனிடம் முதன்முதலில் உதிக்க வேண்டும். அப்பால்தான் அவன் ஆத்மாபிவிருத்திக்கு அருகனுவான்.

554. சேற்று நீர் நிறைந்துள்ள குடம் ஒன்றில் படிகாரமாகிய மாற்று வஸ்துவைப் போடுவோமானுல் தண்ணீர் தெளிந்துவிடும்; அழுக்கெல்லாம் அடியில் தங்கிவிடும். அதேபோல விவேக வைராக்யங்களாகிற மாற்றினுல் லௌகிகன் உலகப் பற்றுக்கள் அகலப்பெற்றுப் பரிசுத்த மடைந்துவிடுகின்றுன்.

555. வண்ணுத்திப் புழு, தான் கட்டும் கூட்டுக்குள்ளேயே சிக்கிக்கொள்கிறது. அதுபோல, உலகப்பற்றுள்ள ஆத்மா அதனுடைய ஆசைகளாகிய வலையில் சிக்கிக்கொள்கிறது. ஆனுல் அந்தப் புழு ஓர் அழகிய வண்ணுத்திப் பூச்சியாகப் பரிணமிக்கும்போது, கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே வந்து வெளிச்சத்தையும் காற்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறது. அதுபோல விவேகம், வைராக்கியம் என்ற இரண்டு சிறகுகளால், உலகப் பற்றில் உழலும் ஆத்மாவானது, மாயையாகிய வலையைக் கிழித்துக்கொண்டு வெளிப்படக்கூடும்.

556. ஈசுவரன் வசிக்கிற அறையின் திறவுகோல் எதிர்ப்புறமாகத் திரும்பும் சுபாவமுள்ளது. அவனை அடைவதற்கு உலகத்தையும் மற்றுமுள்ள எல்லாவற்றையும் தியஜிக்கவேண்டும்.

557. விவேகமும் வைராக்யமும் இல்லாமல் கிரந்தங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் படிப்பதில் பிரயோஜனமில்லை. விவேகமும் வைராக்யமும் இல்லாவிட்டால் ஆத்மாபிவிருத்தி உண்டாகாது.

558. ஈசுவரனை எப்படி அடையலாம்? அவனைக் காண்பதற்கு உனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் நீ தியஜிக்கவேண்டும்.

559. முக்தி பெறுவதற்கு ஆசைகொள்ளும் பந்தத்திலுள்ள மனிதனது மனது எந்த நிலைமையில் இருக்கவேண்டும்! ஈசுவர அநுக்ரஹத்தால் உலக விஷயங்களில் மிகுந்த அருவருப்பு ஏற்பட்டால்தான் பெண் பொன் இவைகளில் உள்ள ஆசை நீங்கும். இக்கடின வைராக்கியம்—ஆசை அறுத்தல்—என்பதன் பொருள் என்ன? 'சிறிது சிறி

தாக, அநுஷ்டித்து நாளடைவில் நான் கடவுள் தரிசனம் பெறுகிறேன்' என்று நினைப்பது திட வைராக்யமாகாது. ஆனால், சேயை நாடும் தாயின் மனம்போலக் கடவுளை நாடித் துடித்துக் கதறுபவனே தீவிர வைராக்கியமுடையவன். கடவுளைத் தவிர்த்து வேறொன்றையும் அவன் கருதான். தன்னை மூழ்கடித்துக் கொல்லத்தக்க ஒரு கிணறுபோல் இவ்வுலகம் அவனுக்குப் பயங்கரமாகத் தோன்றுகின்றது. உறவினரை விட்டு ஓடிவிட விரும்புகிறான். அவனுக்கு அவர்கள் கொடிய விஷ சர்ப்பம்போல் தென்படுகின்றனர். ஈசுவர தரிசனம் பெற்றால் அல்லாமல் மற்றெந்தக் குடும்பக் காரியங்களையும் கவனிக்கப்போகிறதில்லை யென்ற வெகு தீவிர வைராக்கியம் கொள்கின்றான்.

560. ஈசுவரப் பிரேமையுள்ளவன், தான் அன்பு செலுத்தும் ஈசுவரன் பொருட்டுத் தனக்குள்ள எல்லாவற்றையும் ஏன் தியஜிக்கிறான்? விளக்கு வெளிச்சத்தைப் பார்த்த விட்டில் பூச்சி, மறுபடியும் இருட்டான இடத்துக்குப் போகப் பிரியப்படுவதில்லை. எறும்பு சர்க்கரைக் குவியலில் புகுந்து இறக்குமே தவிர அதைப் புறக்கணிக்கவோ, அப்பால் போகவோ செய்யாது. அதுபோல ஈசுவர பிரேமையுள்ளவன் திவ்யானந்தத்தை அடைவதற்காகத் தனது வாழ்நாளைத் தியஜிக்கிறான். வேறொன்றையும் அவன் கவனிப்பதில்லை.

561. தோட்டி முதல் தொண்டைமான் வரையிலுள்ள எல்லோர் வாழ்க்கையின் நிலைமையைப்பற்றியும் கூடுமானவரையில் கூர்ந்து கவனித்தோ, அல்லது பிறர் அநுபவத்தைக் கேட்டோ, அன்றி நேரே அனுபவித்தோ அறிந்து, உலகச் சிற்றின்பங்களெல்லாம் அநித்தியமானவை, வெகு அற்பமானவை என்று பூரணமாக உணர்ந்த பிறகுதான் ஒருவன் ஞானியாகவோ அல்லது பரமஹம்ஸனாகவோ ஆக முடியும்.

562. காமமும் பொருளாசையும் துறப்பதற்கு முன் ஞானம் உதிக்கவே உதிக்காது. துறவு, தியாகம் ஏற்பட்டதும் எல்லா அறியாமையும், எல்லா அவித்யையும் நாசமாகிவிடும். பூதக்கண்ணாடி வழியாக சூரியக்கிரணங்களைச் செலுத்தி எதனையும் எரித்துவிடலாம். ஆனால் சூரியக்கிரணம் செல்லாத இருட்டறையில் அது பிரயோஜனப்படமாட்டாது. மனதும் அப்படிப்பட்டதே. உலகமாகிய இருட்டறையிலிருந்து அதனை வெளியில் கொண்டுவந்து சுயம்பிரகாசமான திவ்விய ஒளியை அதனுள் புகுத்தவேண்டும். அப்போது தியாக புத்தியுண்டாகி சகல அறியாமையும் நாசமுறும்.

563. நினைத்தவுடனே ஒருவனுக்கு ஞானத்தை அளித்துவிட முடியாது. அதைப் பெறுவது காலத்தைப் பொறுத்திருக்கின்றது. ஒருவனுக்குக் கடுமையான ஜுரம் அடிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது கொயினவைக் கொடுப்பதில் குணமிராதென்பது வைத்தியனுக்குத் தெரியுமாதலால் அவன் அதைக் கொடுக்கிறதில்லை. காலக்கிரமத்தில் ஜுரம் தணிய வேண்டும்; அப்பால்தான் கொயினவையோ வேறு மருந்தையோ கொடுக்கலாகும். ஞானத்தைப் பெற விரும்பும்

மனிதனுடைய விஷயமும் இதைப் போன்றதுதான். உலகப்பற்றில் ஆழ்ந்திருக்கும் வரையில் ஒருவனுக்குப் பெரும்பாலும் மதத்தைப் பற்றிய உபதேசங்கள் பயன்படுவதில்லை. கொஞ்ச காலம் வரையில் அவன் உலக சுகங்களை அனுபவிக்கும்படி விட்டுவிட வேண்டும். உலகப்பற்றுச் சிறிது தளர்ந்ததும் உபதேசம் பயன் கொடுக்கக்கூடிய காலம் அவனுக்கு வரும். அதற்கு முன்னால் செய்யும் உபதேசமெல்லாம், அவனுக்கு யாதொரு பயனையும் தராது வீணாய்ப்போகும்.

564. குழந்தைகள், தனித்து, மரப்பாவைகளை வைத்துக் கொண்டு மனம் போனபடி யெல்லாம் விளையாடும்போது, தாயை நினைப்பதில்லை. ஆனால் அவ்விடத்துக்குத் தாய் வந்துவிட்டால், குழந்தைகள் மரப்பாவைகளை அப்பால் போட்டுவிட்டு "அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டு அவளிடம் ஓடும். அக்குழந்தைகளைப் போலத்தான் நீங்களும் இவ்வுலகத்தில் செல்வம் கௌரவம் கீர்த்தி முதலிய மரப்பாவைகளில் கருத்தூன்றியவர்களாய் வேறொன்றையும் கவனிக்காமல் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒருதரம் உங்களுக்குள்ளே இருக்கும் திவ்விய மாதாவை நீங்கள் காண்பீர்களே யானால் செல்வம் கௌரவம் புகழ் முதலியவைகளில் உங்களுக்கு அப்பால் ஒருபோதும் இச்சை யுண்டாகாது. அவைகளையெல்லாம் எட்ட எறிந்துவிட்டு நீங்கள் அவளை நாடி ஓடுவீர்கள்.

565. வைராக்கியம் பல திறப்பட்டது. பொறுக்க முடியாத உலக கஷ்டங்களால் ஒருவித வைராக்கியம் உண்டாகும். ஆனால் உலக சம்பத்துக்கள் எல்லாம் எவ்வளவு சுலபமாக அடையக்கூடியவை எனினும் அவையனைத்தும் நிலையற்றவை, நிலையான இன்பமடைய ஏற்றவை யல்ல என்று அறியப்பெற்று, வைராக்கியம் கொள்வதே சாலச் சிறந்ததாகும். இவ்வித உண்மை யறிவைப்பெற்றவனுக்குச் சகலமும் இருந்தும் இல்லாதவைபோல் தோன்றுகின்றன.

566. வைராக்கியத்தில் எத்தனை வகைகள் உள்ளன? பொதுப் படக் கூறுமிடத்து, அது தீவிரமெனவும் மிதமெனவும் இருவகைப் படும். தீவிர வைராக்கியமென்பது ஓரே ராத்திரியில் ஒரு பெரிய குளத்தை வெட்டி உடனே அதில் தண்ணீரை நிரப்புவதற்குச் சமானமாம். மிதவைராக்கியமோ, மெதுவாயும் காலம் நீடித்தும் வளரும் சுபாவமுடையது. அது எப்போது பூர்த்தியாகுமென்பதைச் சொல்ல முடியாது.

567. ஒருவன் ஸ்நானம் செய்ய ஆற்றுக்குப் போய்க் கொண்டிருக்கையில், சில நாட்களாக வேறொருவர், உலகத்தைத் துறந்து சந்யாஸியாவதற்குப் பிரயத்தனப்படுகிறாரென்பதைக் கேட்டான். இவ்விஷயம், சந்யாஸந்தான் உத்தமமான வாழ்க்கையென்னும் மனோபாவத்தை எப்படியோ இவனுக்குத் தந்தது. உடனே தான் சந்யாஸியாகி, உடுத்திருந்த பாதி வஸ்திரத்துடனேயே போய்விட்டான். அப்பால் அவன் திரும்பி வீட்டுக்கு வரவேயில்லை. இதுதான் தீவிர வைராக்கியத்துக்குத் திருஷ்டாந்தம்.

568. சச்சிதாநந்தக் கடலில் ஆழ மூழ்குவாயாக. சமுத்திரத்தின் அடியிலிருக்கும் கோர மிருகங்களான கோபம், பேராசை இவைகளைப்பற்றிக் கவலைப்படாதே. விவேக வைராக்கியங்களாகிற மஞ்சளை உடல் முழுதும் பூசிக்கொள். முதலைகளாகிய அவை உன்னை அண்டிவராமல் நிற்கும். இவ்வாசனையை அவற்றால் சகிக்கமுடியாது.

விடா முயற்சி

569. குடியானவர்கள் உழவு மாடுகளை வாங்கும் வகை இன்னதென்பது உனக்குத் தெரியுமா? இந்த விஷயத்தில் அவர்கள் கை தேர்ந்தவர்கள். நல்ல மாடுகளை எப்படித் தெரிந்தெடுப்பதென்பதை அவர்கள் நன்கறிவார்கள். ஒரு மாட்டின் சுபாவம் எப்படிப் பட்டதென்பதை அவர்களுக்குக் கண்டுபிடிக்கத் தெரியும். வாலைத் தொட்டால் போதும். உடனே எல்லாம் தெரிந்துவிடும். ஜோடிகை இல்லாத மாடு திமிரால் தூங்கப் போவதுபோல் தரையில் படுத்துக் கொள்ளும். ஜோடிகையுள்ள மாடோ தன்னை இவ்விதஞ் செய்ததை ஆக்ஷேபிப்பதைப்போல், திமிறிக்கொண்டு துள்ளிக் குதிக்கும். குடியானவர்கள் இப்படிப்பட்ட மாடுகளையே வாங்குவார்கள். வாழ்நாளில் ஜயமடைய வேண்டுமானால், மனிதனிடம் உண்மையான புருஷத்வம் (ஜோடிகை) இருக்கவேண்டும். ஆனால் அநேகரிடம் தைரியமென்பதே கிடையாது. அவர்கள் பாலில் ஊற வைத்த பொரி போன்றவராகி, கோழை நெஞ்சும் வழவழத்த சுபாவமும் உள்ளவராக இருக்கின்றனர்; மனோபலம், தேகதிடன், புத்திவன்மை அற்றவர்களாகி, தங்கள் வாழ்நாளில் ஜெயமடையாது போகின்றனர்.

570. பெரிய மீனைப் பிடிக்க வேண்டுமென்ற ஆவலுடைய தூண்டிற்காரன் இரையை முள்ளில் கோர்த்துத் தண்ணீரில் போட்டுவிட்டு, அவ்விரையை மீன் கவ்வும்வரையில் வெகு பொறுமையுடன் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அதுபோல பொறுமையுடன் ஸாதன மார்க்கங்களை அனுஷ்டிக்கும் பக்தன் கடைசியில் ஈசுவரனைக் காண்பது நிச்சயம்.

571. பன்னிரண்டு வருஷங்களாக மழை பெய்யாதுபோனாலும் பரம்பரைக் குடியானவன் நிலத்தைச் சாகுபடி செய்யாமல் தவிர்த்திருப்பதில்லை. ஆனால் கிருஷித் தொழிலைப் புதிதாகக் கைக்கொண்ட வாணியனை அதைரியப்படுத்துவதற்கு ஒரே வருஷம் மழை இல்லாவிட்டாலும் போதும். ஆயுளளவும் பக்திசெய்தும் ஈசுவர தரிசனத்தைப் பெறாதிருந்தாலும், உண்மையான பக்தி உள்ளவனுக்கு ஒருபோதும் மனத்தளர்ச்சி உண்டாவதில்லை.

572. நீந்தக் கற்றுக்கொள்ள விரும்புகிறவன், கொஞ்சநாட்கள் நீந்துதலை அப்பியசிக்கவேண்டும். ஒரே ஒருநாள் அப்பியசித்தவுடன் கடலில் நீந்துவதற்கு ஒருவனும் துணியமாட்டான். அதுபோல, பிரம்மமாகிய கடலில் நீந்தப் பிரியப்பட்டால் முதலில் அநேக தரம் பயன்

படாத பிரயத்தனங்கள் செய்து தீரவேண்டும். அப்போதுதான் அங்கு நீந்தக்கூடிய சக்தி உனக்கு உண்டாகும்.

573. புதிதாகப் பிறந்த கன்றுக்குட்டி, நிற்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னல், தட்டித் தள்ளாடிப் பலதடவை கீழே விழுகின்றது. அதுபோல ஸாதன மார்க்கத்தில் கடைசியாக ஜயம் பெறுவதற்கு முன்னல் அநேக தவறுகள் அடிக்கடி நேரிடும்.

574. காளிதேவியைப் பிரத்யக்ஷமாகக் காணவேண்டிய இருவர் ஓர் அமாவாசை இருட்டில் சுடுகாட்டுக்குச் சென்று "ஸவஸாதனம்" என்ற ஒரு பயங்கரமான கிரியைத் தொடங்கினராம். இராத்திரியின் பூர்வ பாகத்தில் உண்டான பயங்கரக் காட்சிகளைக்கண்டு ஒருவன் பயந்து பித்துக் கொண்டவனுகிவிட்டான். இராத்திரியின் முடிவில், மற்றவனுக்குத் தேவி தரிசனம் கொடுத்தருளினள். அவன் அப்போது தேவியை நோக்கி "தாயே! ஏன் மற்றவன் பித்துக் கொண்டவனுனன்!" என்று கேட்டான். அதற்கு தேவி "குழந்தாய்! நீயும் இதற்கு முன் பல பிறவிகளில் பல தடவை இப்படிப் பித்துக் கொண்டவனுனய். இப்போதுதான் கடைசியாக என்னைத் தரிசித்தாய்" என்று பதில் சொல்லியருளினுள்.

575. நமது உள்ளத்தில் சிற்சில வேளைகளில்தான் சாந்தி உண்டாகிறது. ஆனல் ஏன் அது நிலைத்திருப்பதில்லை! மூங்கிலைப் போட்டு எரிக்கும் நெருப்பு, இடைவிடாது தூண்டப்படாதுபோனல் சீக்கிரத்தில் அணைந்துபோம். ஆத்மீய நெருப்பு எப்போதும் ஜ்வலித்துக் கொண்டிருக்க வேண்டுமானல் இடையருத பக்தி அவசியம்.

576. மண் பாத்திரமொன்றில் ஜலத்தை நிரப்பி, அதை வெளியே ஓரிடத்தில் வைத்திருந்தால் சில நாளில் அந்த ஜலமெல்லாம் வற்றிப் போய்விடும். ஆனல் அப்பாத்திரத்தை ஜலத்துக்குள்ளேயே அமிழ்த்தி வைத்தால், அது அங்கிருக்கும்வரையில் ஜலமும் அதில் இருக்கும். ஈசுவரனிடம் உனக்கிருக்கும் ப்ரேமையும் அப்படிப்பட்டதுதான். கொஞ்ச காலத்துக்கு உன் மனத்தை ஈசுவர ப்ரேமையால் நிரப்பிவிட்டு, பின் உலக விஷயங்களில் பிரவிர்த்தித்து அவனை முழுவதும் மறந்திருந்தால் உன் மனம் பழையபடி பக்தியற்றுச் சூன்யமாவது நிச்சயம். ஆனல் திவ்விய ப்ரேமையிலும் விசுவாசத்திலும் உன் மனம் எப்போதும் அமிழ்ந்திருக்குமானல், அது ஸதா ஸர்வகாலமும் அந்த சிலாக்யமான பிரேமையால் பொங்கிக் கொண்டேயிருக்கும்.

577. பாத்திரத்தின் அடியில் நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் வரையில், அதிலுள்ள பால் கொதித்துப் பொங்கும். நெருப்பை எடுத்து விட்டாலோ, பொங்குதல் நின்றுவிடும். அதுபோல ஸாதன மார்க்கத்தில் இருக்கும்வரையில்தான் புதிய ஆத்மார்த்தியின் மனம் குதூஹலத்தால் பொங்கும்.

578. எதுவரையில் மனிதனிடம் தெய்விகம் இருக்கும்? நெருப்பில் இருக்கும்வரையில்தான் இரும்பு செந்நிறமுள்ளதாகவிருக்கும்.

நெருப்பைவிட்டு அகற்றியதும் அது கறுநிறமடைந்துவிடும். அது போல ஈசுவரனுடன் உறவு கொண்டாடும் வரையில்தான் மனிதன் ஈசுவரத்தன்மை பொருந்தியவனாக இருப்பான்.

579. மனம் நீக்ரோவின் தலையிலுள்ள சுருட்டை மயிருக்குச் சமானம். அதை இழுத்துப் பிடித்திருக்கும் வரையில் நீளமாயிருக்கும். ஆனால் பிடிப்பைவிட்டதும், பழையபடி அது சுருண்டுவிடுகிறது. அது போல, மனம் பலவந்தமாக அடக்கி நிறுத்தப்பட்டிருக்கும்வரையில் நன்றாய் வேலைசெய்து நற்பயன் விளைவிக்கும். ஆனால் சற்று ஜாக்கிரதைக் குறைவு ஏற்படுமானால், உடனே அது ஸன்மார்க்கத்தைவிட்டு விலகி விடும்.

580. "பித்தளைப் பாத்திரத்தைத் தினந்தோறும் தேய்க்காமற் போனால் களிம்பு ஏறிவிடும். அதுபோலத் தினமும் தேவதா உபாஸனை செய்யாத மனிதனுடைய மனம் மாசடையும்" என்று தோதாபுரி சொல்வதுண்டு. இதற்குப் பதிலாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சமயம் சொன்னதாவது:— "அப்பாத்திரம் பொற் பாத்திரமாகவிருந்தால் தினந்தோறும் சுத்தம் பண்ணவேண்டிய அவசியமிராது. ஈசுவரனை யடைந்த மனிதனுக்குப் பிரார்த்தனையும் தபசும் வேண்டியதில்லை."

அனுஷ்டானம்

581. ஆழமில்லாத குளத்தில் தேங்கியிருக்கும் ஜலத்தைக் குடிக்கவேண்டுமானால், அதைக் கலக்காமல் மெதுவாக மேல் ஜலத்தை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். கலக்கி விட்டால், அடியி லுள்ள சேறு மேலே கிளம்பித் தண்ணீர் முழுவதையும் அசுத்த மாக்கிவிடும். அதுபோல, நீ பரிசுத்தனாக இருக்கவேண்டுமானால் திட மான நம்பிக்கையுடன் அமைதியாக பக்தி மார்க்கத்தில் இடைவிடாது ஒழுகவேண்டும். சாஸ்திரங்களைப்பற்றிப் பயன்படாத தர்க்கங்கள் செய்துகொண்டு சக்தியை வீண் ஆக்காதே. அப்படிச் செய்தால் உனது சிறிய மூளை கலங்கிவிடும்.

582. கோடீசுவரரான யதுநாத மல்லிக் பிரபுவைப் போன்ற செல்வவான் கிருகம் எதுவென்றும் அவருடைய ஆஸ்தி எவ்வளவின தென்றும் விசாரிப்பவர் பலராயினும் அவரிடம் நேரில் சென்று அவ ருடைய பரிசயத்தைப் பெறுபவர் வெகு சிலரே. அதுபோல, மதக் கிரந்தங்களைப் படிப்பவர்களும், மதத்தைப்பற்றிப் பேசுபவர்களும் பல ராயினும், ஈசுவரனைக் காணவோ அவனை அடையவோ முயற்சி செய் பவர் அருமையாகவே இருக்கின்றனர்.

583. நீ அடைய விரும்பும் லக்ஷியத்துக்குத் தகுந்த ஸாதனங் களைக் கைக்கொள். "பாலில் வெண்ணெய் இருக்கிறது" என்று தொண்டை கம்மிப்போகும்படி கத்தினால் மட்டும் வெண்ணெய் கிடைக் காது. வெண்ணெயைப் பெறவேண்டுமானால், பாலைத் தயிராக்கிக் கடையவேண்டும். அதுபோல, ஈசுவரனைக் காண விரும்புவாயானால்,

அதற்கேற்ற ஸாதனங்களைக் கைப்பற்று. "ஈசுவரா! ஈசுவரா" என்று சொல்வதினால் மட்டும் என்ன பிரயோஜனம்!

584. அரசனை அவனுடைய அரண்மனையில் காண விரும்புகிற ஒருவன், அரண்மனைக்குப் போய் அங்குள்ள வாசல்களையெல்லாம் தாண்டவேண்டும். வெளி வாசலைக் கடந்ததும், "அரசன் எங்கே?" என்று கேட்டால் காணமுடியாது. ஏழு வாசல்களையும் தாண்டிச் சென்றால்தான் ராஜாவைக் காணமுடியும்.

585. அனுபூதி அடைவதற்கு முயற்சி வெகு அவசியம். ஒரு நாள் பாவஸமாதியில் நான் *ஹலதார் குளத்தைக் கண்டேன். அங்கு ஒரு நாட்டுப்புறத்தான், பாசியை ஒதுக்கிவிட்டு ஜலம் மொண்டுகொண்டிருந்தான். அவன் இடை இடையே ஜலத்தைக் கையிற் எடுத்துப் பரிசோதித்துக் கொண்டுமிருந்தான். அக்காட்சியானது, பாசியை ஒதுக்கினலொழிய ஜலத்தைக் காணமுடியாததுபோல, ஒருவன் சிரமப்பட்டாலொழிய பக்தியை, அதாவது ஈசுவர தரிசனத்தைப் பெறமாட்டான் என்று எனக்குத் தெரிவிப்பது போன்றிருந்தது. தியானம், ஈசுவர நாம ஸ்மரணம், நாம ஸங்கீர்த்தனம், தானம், தவம் முதலியனவெல்லாம் ஈசுவரனிடம் கொண்டு சேர்க்கும் சத் கருமங்களாம்.

586. கிருஷ்ண பரமாத்மாகூட ராதா யந்திரத்தைக் கொண்டு வெகு கடுமையாகச் சாதனை புரிந்தார். யந்திரமாவது பிரம்மயோனி. அதைத் தியானித்து வழிபாடு செய்வது ஸாதனை. இந்தப் பிரம்ம யோனியிலிருந்து கோடிக்கணக்கான உலகங்கள் உண்டாகின்றன.

587. ஸாதன மார்க்கங்கள் மூன்று வகைப்படும்; பக்ஷி ரீதி, மர்க்கட ரீதி, பிபீலிகா ரீதி என.

(1) பக்ஷி பறந்து வந்து பழத்தை மூக்கினல் கொத்துகிறது. அப்படிக் கொத்துகையில் பழம் ஒருவேளை விழுந்துவிடுமாதலால் அதற்கு இரையாகாமல் போய்விடும். (அது போல, முயற்சிகள் வீணாகக்கூடிய முரட்டுமார்க்கத்தால் ஸாதனைகளில் ஈடுபடும் பக்தர்கள் இருக்கின்றனர்.)

(2) வாயில் பழத்தைக் கவ்விக்கொண்டு மரத்தின் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாண்டுவது மர்க்கடத்தின் (குரங்கின்) சுபாவம். அப்படித் தாண்டுகையில் பெரும்பாலும் வாய்ப்பழம் கீழே விழுந்துவிடும். (அதுபோல, பக்தர்களின் பிடிப்பு பலமாக இராவிட்டால், மாறிவரும் வாழ்க்கைச் சம்பவங்களில், அவர்கள் ஸாதன மார்க்கத்தினின்றும் நழுவ நேரிடும்.)

(3) பிபீலிகா (எறும்பு) மெதுவாகவும் விடாமுயற்சியோடும், இரை இருக்குமிடத்தை அடைந்து, பின்னர் அவ்விரையைக் கவ்விக்கொண்டு, தனது வளைக்குக் கொணர்ந்து, சவுகரியமாய்த் தின்கிறது.

*காமார்ப்புகூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்த வீட்டுக்கு எதிரிலே உள்ளதொரு பெரிய குளம்.

எறும்பின் ரீதியைப்போன்ற ஸாதன மார்க்கம் மிகச் சிறந்தது. அதில், பலனை அடைவதிலும் அதை அனுபவிப்பதிலும் ஒரு நிச்சயம் உண்டு.

588. மீன் பிடிப்பதில் ஆசை கொண்டவன், ஒரு குளத்தில் நல்ல மீன் அகப்படுமா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, அதில் ஏற்கனவே மீன் பிடித்தவர்களிடம் போய் "இந்தக் குளத்தில் பெரிய மீன்கள் இருப்பது வாஸ்தவந்தானா? மீனைப் பிடிப்பதற்கு என்ன இரை போடுகிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்கிறான். விஷயங்களைத் தெரிந்து கொண்டதும், அவன் தூண்டிற்கோலுடன் அக்குளத்துக்குச் சென்று, தூண்டிலைச் சாமர்த்தியமாகப் போட்டு, பொறுமையுடன் காத்திருக்கையில் அழகிய பெரிய மீனைப் பிடித்துவிடுகிறான். அதைப் போல, ஞானிகளும் ரிஷிகளும் சொல்லும் வார்த்தையில் முழு நம்பிக்கையுடன், பக்தியாகிய இரையினாலும் மனமாகிய தூண்டிற்கோலாலும் ஈசுவரனைப் பிடித்து மனத்தில் இருத்தல் வேண்டும். மிக்க பொறுமையுடன் நெடுநாள் காத்திருக்கவேண்டும். அப்போதுதான் அந்தத் தெய்வமாகிய மீனைப் பிடிக்க முடியும்.

589. "நான் இடும் கட்டளைகளை யெல்லாம் முற்றிலும் உன்னால் நிறைவேற்ற முடியுமா? உண்மையாகவே, நான் சொல்வதில் வீசம் பங்கு காரியத்தையேனும் நீ நிறைவேற்றுவாயானால் உனக்கு மோக்ஷம் நிச்சயம்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

590. ஆத்ம ஞானம் அடைய வேண்டுமானால் அத்யாத்மிக சாதனைகள் அவசியம் வேண்டும். பரிபூரண நம்பிக்கை இருக்குமானால் அவ்வளவு சாதனைகளுக் கவசியமில்லை.

591. பகவானது புனித நாமத்திலுள்ள மகிமையைத் திடமாக நம்பிய ஒருவன் அதனை ஸர்வகாலமும் உச்சரிப்பதிலேயே பிரீதி கொள்வானானால் அவனுக்கு விசாரணையும் மற்ற இதர பக்தி சாதனைகளும் வேண்டுவதில்லை. பகவந் நாம ஜபத்தினாலேயே சகல சந்தேகங்களும் அகன்று விடுகின்றன; மனம் பரிசுத்தமடைகின்றது; பகவத் தரிசனமும் கிட்டிவிடுகின்றது.

592. வேதங்களையும் புராணங்களையும் படிக்கவும் கேட்கவும் வேண்டும். அந்த சாஸ்திரங்களில் சொல்லியபடி நடந்தொழுகவும் வேண்டும். ஹரியின் நாமத்தை வாயால் உச்சரிக்கவும் காதால் கேட்கவும் வேண்டும். சில வியாதிகளுக்கு வெளியே மருந்து தடவுவதோடு உள்ளுக்கும் மருந்து கொடுப்பது அவசியம்.

593. ஸாதன ஸித்தர்கள், கிருபா ஸித்தர்கள் என ஸித்தர்கள் இருவகைப்படுவர். நல்ல மகசூலைப் பெறுவதற்குச் சிலர் வெகுவாகச் சிரமப்பட்டு வாய்க்கால்களை வெட்டித் தங்கள் நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சுகின்றனர். அதிர்ஷ்டசாலிகளான சிலர்க்கோ இவ்விதச் சிரமமே இல்லாதபடி மழை பெய்து நிலங்களில் ஜலம் நிரம்பி விடுகின்றது. ஆதலால், மாயையினின்றும் விடுபடுவதற்காக எல்லோரும் பக்தி மார்க்கத்தை இடைவிடாது அநுஷ்டிக்க வேண்டியதுதான். ஆனால்

கிருபாஸித்தர்களுக்கு இந்தக் கஷ்டங்கள் இல்லை. ஈசுவர கிருபையால் அவர்கள் பரிபூரணமடைகிறார்கள்; என்றாலும் அப்படிப்பட்டவர்கள் அருமையிலும் அருமையாகவே இருப்பார்கள்.

தியானமும் தாரணையும்

594. தியானமும் சிந்தனையும் சதாகாலமும் செய்ய வேண்டும்.

595. எல்லா வேலைகளையும் அப்பால் போட்டுவிட்டு, ஸாயங்கால வேளைகளில் நீ பகவத்தியானம் செய்ய வேண்டும். அஸ்தமனகாலந்தான் ஈசுவர ஞாபகம் தானாகவே வரும் தருணம். சற்று முன்னால் உலகப்பொருள்கள் எல்லாம் கட்புலனாயின. இப்போது அவைகள் அந்தகாரத்தில் மறைந்து கிடக்கின்றன. இப்படிச் செய்தவன் யாவன்? என்ற இவை போன்ற சிந்தனைகள் அப்போது உண்டாகின்றன. முகம்மதியர்கள், எல்லா வேலைகளையும் புறக்கணித்துவிட்டு, சாயந்திர வேளைகளில் தொழுவதற்கு உட்காருவதை நீ கவனித்ததில்லையா?

596. கிழிந்த மூட்டையிலிருந்து சிதறி நாலா பக்கங்களிலும் ஓடிய கடுகைப் பொறுக்கி யெடுப்பது சிரம சாத்தியம். அதுபோல, பல திசைகளிலும் ஓடி உலக விஷயங்கள் பலவற்றிலும் உழலும் மனத்தைக் குவியச்செய்து ஒருமைப்படுத்துவது சுலப சாத்தியமன்று.

597. ஒருவரும் வாராத மூலையிலோ, காட்டில் தன்னந்தனியனாகவோ, உனது உள்ளமாகிய நிச்சப்தமான கோவிலிலோ ஈசுவரனைப் பற்றிச் சிந்தனை செய்.

598. ஆரம்பத்தில் ஒருவன் தன்னந்தனியனாக உட்கார்ந்து கொண்டு மனதை ஒருமுகப்படுத்த, அதாவது ஏகாக்ரசித்தத்தையடைய முயலவேண்டும். இல்லாவிட்டால் மனம் பற்பல விஷயங்களில் ஓடிச் சஞ்சலத்துக்குள்ளாகும். பாலையும் ஜலத்தையும் ஒன்றாக்கி வைத்தால் இரண்டும் நன்றாகக் கலந்து விடுவது நிச்சயம். ஆனால், பாலைக் கடைந்து வெண்ணெயை எடுத்து ஜலத்தில் போட்டு வைத்தால் அவ்வெண்ணெய் ஜலத்துடன் கலக்காமல் அதன் மேலே மிதக்கும். அதுபோல இடைவிடாத பழக்கத்தினால் ஒருவனுக்கு ஏகாக்ரசித்தம் நிலைக்குமானால், அவன் எங்கிருந்தபோதிலும் சரியே, அவனுடைய மனம் சுற்றிலுமுள்ள பொருள்களின்மீது செல்லாமல் ஈசுவரனிடத்திலேயே செல்லும்.

599. சில சமயங்களில் பகவான் தமது சிஷ்யர்களுக்கு இவ்விதம் உபதேசிப்பார். "தியானம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் (தம்மைச் சுட்டிக்காட்டி) இதனைப்பற்றிச் சிறிது நேரம் நினைத்துக்கொள்ளுங்கள். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு என்னிடத்தில் இருக்கும் உங்களது நம்பிக்கையினால், உங்கள் எண்ணம் என்மீது திருப்பப்படும்போது உடனே மனம் கடவுள் பக்கம் செல்லும். பசு மந்தையைக் கண்டதும் இடையனும், குமாரனைக்

கண்டதும் தகப்பனும், வக்கீலைக் கண்டதும் நியாயஸ்தலமும் ஞாபகம் வருகின்றன. ஆயிரக் கணக்கான விஷயங்களில் சிதறுண்டு கிடக்கும் உங்கள் மனம் என்னை நினைத்ததும் ஒருங்கு குவியும். இவ்விதம் குவிந்த மனதைப் பகவானிடம் திருப்பித் தியானம் செய்வீர்களானால் உண்மையான தியானம் சித்திக்கும்".

600. விளக்கின் ஒளிப்பிழம்பைப்பற்றி ஒரே மனதாய்ச் சிந்திப்பதுதான் ஏகாக்கிர சித்தனாவதற்குச் சுலபமான மார்க்கம். அம்பிழம்பின் உள்ளே நீல வர்ணமாகத் தோன்றும் பாகம் நமது காரண சரீரத்திற்குச் சமானம். மனதை அதனிடம் நிலை நிறுத்துவதால் ஏகாக்கிர சித்த சக்தி சீக்கிரம் உண்டாகிறது. இந்த நீலமான பாகத்தைச் சுற்றியிருக்கும் பிரகாசமான பாகம் நமது சூக்ஷ்ம சரீரத்துக்குச் சமானம். இதற்கு வெளியே ஸ்தூல சரீரத்தைத் தெரிவிக்கும் பாகமுள்ளது.

601. "என் குழந்தைகளே! நான் அக்காலங்களில் தியானம் செய்வதற்கு முன்னால் என் மனத்திலுள்ள கெட்ட எண்ணங்கள், ஆசைகள் முதலான சகல கல்மஷங்களையும் அலம்பிச் சுத்தப்படுத்தி விட்டதாகப் பாவனை செய்துகொண்டு அதன் பிறகு பகவானை அவ்விடத்தில் எழுந்தருளப் பண்ணுவேன். நீங்களும் அவ்வாறு செய்யுங்கள்" என்று பகவான் தமது சாதன நாட்களைப் பற்றிச் சிஷ்யர்களிடம் கூறுவார்.

602. தியான காலங்களில் உன் மனது அங்குமிங்கும் ஓடாமலிருக்கும்படி, பகவானது பாதாரவிந்தங்களோடு பட்டுக் கயிற்றால் கட்டப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள். ஏன் பட்டுக் கயிற்றால் கட்டப்பட வேண்டும் என்ற சந்தேகம் எழலாம். பகவானது பாதாரவிந்தங்கள் வெகு மிருதுவானவை; மற்றக் கயிற்றால் கட்டினால் புண்ணுண்டாகிவிடும்.

603. தியானக்ரமத்தில் புதிதாக முயலுபவனுக்குச் சிற்சில வேளைகளில் 'யோக நித்திரை' எனப்படும் ஒருவிதத் தூக்கம் உண்டாகும். அப்போது அவனுக்கு ஏதாவதொரு திவ்விய தரிசனம் உண்டாகும்.

604. ஸத்வகுணமுடையவன் எவ்விதம் தியானம் செய்வானென்பது உனக்குத் தெரியுமா? பிறரால் பார்க்கப்படாமல் நடு ராத்திரியில் படுக்கையின்மீது உட்கார்ந்து தியானம் செய்வான்.

605. திராவகத்தில் மருந்து கலந்து வைக்கப்பட்டிருப்பதைப் போல, நீயும் ஈசுவரனிடம் கலந்திரு.

606. மனத்தின் ஆட்டங்களெல்லாம் அடங்கிய பிறகு கும்பகம் உண்டாகிறது. அதாவது சுவாச பந்தனம் ஏற்படுகிறது. பக்தி யோகத்தின் மூலமாயும் கும்பகம் உண்டாகும்? அதாவது தீவிர பக்தியாலும் சுவாச பந்தனம் ஏற்படும்.

607. ஆழ்ந்து தியானம் செய்வதனால், தியான மூர்த்தியின் உண்மைச் சுபாவம் வெளியாகும். அது பக்தனுடைய உள்ளத்தில் நன்றாய்ப் பதியும்.

608. மேள தாளம் முதலிய படாடோபங்களோடு, மைதானத்தின் வழியே கல்யாண ஊர்வலம் போவதை அவதூதர் ஒருநாள் கண்டார். இவ்வூர்வலம் போகும் பாதைக்குச் சமீபத்தில், இந்தப் படாடோபத்தைக் கண்ணெடுத்துக்கூடப் பாராமலும், அதன் சப்தத்தினால் கொஞ்சங்கூடத் தன் கவனம் குறையாமலும், ஒரு பக்ஷியைக் குறி வைப்பதிலேயே கருத்தாயிருந்த வேடன் ஒருவனையும் அவர் பார்த்தார். அவதூதர் வேடனை வணங்கி, "சுவாமி! நீர்தாம் எனக்குக் குரு. பக்ஷியின்மீது கவனமாக இருக்கையில் உமது மனம் ஒருமித்திருந்ததைப்போல நான் தியானத்தில் உட்காரும்போது என் மனமும் ஏகாக்கிரமாய் ஒருமித்து அமரட்டும்" என்றார்.

609. ஒரு தூண்டிற்காரன் ஒரு குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவதூதர் அவனிடம் போய் "தம்பீ! காசிக்குப் போகும் வழியெது?" என்று கேட்டார். தூண்டிலில் உள்ள இரையை மீன் கவர வந்ததென்பதை ஜலத்தின்மேல் மிதக்கும் நெட்டி அப்போதுதான் குறிப்பித்தது. ஆதலால் அவன் யாதொரு பதிலும் சொல்லாமல் மிதப்பின் மேலேயே கண்ணாக இருந்தான். தூண்டிலில் மீன் சிக்கிக் கொண்டதும் அவன் திரும்பிப் பார்த்து, "என்ன சொன்னீர், ஐயா?" என்றான். அவதூதர் அவனை வணங்கி, "சுவாமி எனக்கு நீர் குரு. பரமாத்மாவை தியானிக்கும்போது நான் உமது திருஷ்டாந்தத்தைப் பின்பற்றுவேனாக. தியானம் முடியும் வரையில் நான் வேறொன்றையும் கவனியாம லிருப்பேனாக" என்றார்.

610. ஒரு கொக்கு, மீன் ஒன்றைப் பிடிப்பதற்கு ஒரு குளக் கரையை நோக்கி மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தது. அதன் பின்னால் அப்பறவையை அம்பெய்வதற்கு ஒரு வேடன் குறி பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்தப் பக்ஷி இதைக் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை. அவதூதர் அக்கொக்கை வணங்கி, "நான் தியானத்தில் அமரும்போது உனது திருஷ்டாந்தத்தைப் பின்பற்றுவேனாக; என் பின்னால் என்ன இருக்கிறது, அல்லது, யாரிருக்கின்றனர் என்று பார்க்க நான் ஒருபோதும் திரும்பாமலிருப்பேனாக" என்றார்.

611. "தியானத்தில் முதிர்ந்தவனுக்கு முக்தி வெகு சமீபம்" என்பது ஒரு பழமொழி. தியானத்தில் ஒரு மனிதனுக்கு எப்போது முதிர்ச்சி உண்டாகிறது தெரியுமா? அவன் தியானத்துக்கு உட்கார்ந்தவுடன், திவ்விய தேஜஸ் அவனைச் சுற்றிக் கொள்கிறது. அவனுடைய ஆத்மா, ஈசுவரனுடன் கலந்துகொள்கிறது.

612. தியானத்தில் தீவிரமான ஏகாக்ரம் உண்டாகிறது; அப்போது வேறொன்றும் கண்ணுக்குப் புலப்படாது; காதுகளிலும் விழாது. ஸ்பரிச உணர்ச்சியும் அகன்றொழிகின்றது. அப்போது பாம்பு ஒன்று

சரீரத்தின்மீது ஊர்ந்து போனாலும் ஒன்றும் தெரிவதில்லை. தியானிப்பவர்க்கும் உணர்ச்சி யிருப்பதில்லை; பாம்புக்கும் கிடையாது.

613. தன் தலைமயிரில் குருவிகள் கூடு கட்டினாலும், அதைக் கூடத் தெரிந்து கொள்ளாதபடி தனக்குப் புறம்பான எல்லாவற்றையும் மறந்து ஸமாதியில் இருப்பவன் எவனோ அவன்தான் உண்மையான தியான பூர்த்தியைப் பெற்றவனாவான்.

614. ஆழ்ந்த தியானத்தில் இருக்கும்போது இந்திரியங்கள் எல்லாம் சக்தியற்றுக் கிடக்கின்றன. வெளிக்கதவு பூட்டப்பட்டாற்போல, மனம் உள்ளேயே அடங்கிவிடுகின்றது. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் ஆகிய பஞ்சேந்திரியங்களின் விவகாரங்கள் தெரியாமல் வெளியே மறைகின்றன. முதலில், அதாவது தியானத் தொடக்கத்தில், கட்புலனாகக்கூடிய பொருள்கள் மனத்தின் முன்னர் எழுகின்றன. ஆனால் ஆழ்ந்த தியானத்தில் அப்பொருள்கள் தோன்றுவதில்லை. தள்ளிக் கதவு மூடப்பட்டாற்போலப் புறம்பே கிடக்கின்றன.

615. சுவானுபவத்தை அடைய நீ கடைப்பிடிக்கும் மார்க்கம் எதுவாக விருந்தாலும், மனம் முற்றிலும் சாந்தியை அடைந்தாலொழிய, யோகமானது ஸித்திக்காது. மனம் எப்போதும் யோகியின் வசப்பட்டிருக்கும்; யோகி ஒருபோதும் மனத்தின் வசப்பட்டிருக்க மாட்டான்.

அத்தியாயம் 13

ஆண்டவனைக்காண அவாவுதல்

[ஆண்டவனைக் காணப் பைத்தியங்கொள்—உண்மை அவா—ஆண்டவனை அனுபவிக்க ஒரேவழி]

ஆண்டவனைக் காணப் பைத்தியங்கொள்

616. உனக்குப் பைத்தியம் பிடிக்குமானால் அது பகவத் பிரேமையால் உண்டாகட்டும்; உலகப் பொருள்கட்காகப் பைத்தியம் கொள்ளாதே.

617. புத்திர ஸந்தானம் கிடைக்கவில்லையென்று கண்ணீர் ஆறாகப் பெருகவிடும் மாந்தர் பலர்; செல்வத்தைப் பெறவில்லை யென்று மனம் புழுங்குபவர் பலர்; ஆனால் ஈசுவரனைக் காணவில்லையென்று துக்கித்து அழுபவர் எத்தனைபேர்? வெகு சிலரே! தேடுகிறவனுக்குத்தான் பொருள் கிடைக்கும். ஈசுவரனுக்காக அழுபவன்தான் அவனைக் காண்பான்.

618 ஈசுவரனைப் பற்றி ஸதா ஆவலுடன் சிந்தித்திருப்பவனுக்கு, அன்னபானம் முதலிய சில்லரை விஷயங்களில் மனம் செல்வதில்லை.

619. தண்ணீர்த் தாகமுள்ளவன், ஆற்று நீர் வண்டலாக இருக்கிறதென்று அதைத் தள்ளிவிடுவதில்லை. தெளிந்த ஜலத்துக்காகக் கிணறு வெட்டத் தொடங்குவதுமில்லை. அதுபோல மத விஷயத்தில் வாஸ்தவமான தாகமுள்ளவன் தனக்கு வாய்த்த மதம் இந்து மதமாகவோ வேறு எந்த மதமாகவோ இருந்தாலும் அதைப் புறக்கணிப்பதில்லை ; தனக்கென்று புதிதாக ஒரு மதத்தை ஏற்படுத்திக் கொள்வதுமில்லை. உண்மையிலேயே தாகமுள்ளவனுக்கு இப்படியெல்லாம் சிந்திப்பதற்கு நேரம் கிடையாது.

உண்மை அவா

620. பண ஆசை பிடித்து அலையும் உலோபியைப்போல, உன் மனம் ஈசுவரன் மீது ஆசைகொண்டு அலையட்டும்.

621. தண்ணீரில் மூழ்கிவிட்டவன், மூச்சு விடுவதற்கு மிகவும் தவிப்பதைப்போல, ஈசுவரனைக் காண்பதற்கு முன்னால், ஒருவருடைய மனம் அதற்காக மிகவும் ஆசைகொள்ள வேண்டும்.

622. கடவுளையடைய எத்தகைய அன்பு வேண்டும் என்பது உனக்குத் தெரியுமா ? தலையிலடிபட்ட நாய் கலக்கமுற்று ஓடுவதுபோல அவனில்லாமல் ஒருவன் சஞ்சலப்பட்டு அலையவேண்டும்.

623. மனமே! ஸர்வேச்வரியாகிய ஜகன்மாதாவைப் பரிவோடு அழை. அப்போது அவள் எவ்வளவு சீக்கிரமாக உன்னிடம் ஓடி வருகிறு ளென்பதைத் தெரிந்துகொள்வாய். முழுமனதோடும் ஒருவன் ஈசுவரனை அழைப்பானுனல், அவ்வீசுவரன் ஏனென்று கேளாமலிருக்க மாட்டான்.

624. ஈசுவரனிடம் நமக்கு எவ்வளவு தீவிரமான பக்தி இருக்க வேண்டுமென்பதை நீ அறிவாயா ? தனது கணவனிடம் ஒரு கற்புடைய ஸ்திரீக்கு இருக்கும் அன்பு, தான் புதைத்து வைத்த பணத்தினிடம் ஒரு லோபிக்கு இருக்கும் ஆசை, உலகப் பொருள்களைப் பெறவேண்டுமென்று பற்றுள்ளவர்கள் கொள்ளும் ஆவல், இந்த மூன்றும் ஒன்று கூடினுற்போன்ற தீவிர பக்தியானது ஈசுவரனைக் காணவேண்டியதற்காக உன் மனத்தில் உதிக்குமானுல் அப்போது அவனை நீ நிச்சயமாக அடைவாய்.

625. இயேசுகிறிஸ்து, ஒருநாள் கடற்கரை யோரமாய் உலாவிக் கொண்டிருந்தபோது, ஒரு பக்தன் அவரிடம் வந்து "கர்த்தரே ! கடவுளை ஒருவன் எப்படி அடையக்கூடும் ?" என்று கேட்டான். இயேசு கிறிஸ்து, அப்படிக் கேட்டவனோடு சமுத்திரத்தில் இரங்கி, அவனைத் தண்ணீரில் அமிழ்த்தினுர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனை விடுவித்து, கைகளைப் பிடித்துத் தூக்கி, "உனக்கு எப்படியிருந்தது ?" என்றுர். பக்தன், "எனது ஸ்திதி வெகு பரிதாபகரமாக விருந்தது ; எனக்கு அந்திய காலமே வந்துவிட்டது போலத் தோன்றியது " என்று பதில் சொன்னுன். இதைக் கேட்ட இயேசுகிறிஸ்து, " சற்றுமுன்

தண்ணீருக்குள் இருக்கும்போது மூச்சு விடுவதற்கு உனக்கு இருந்தது போன்ற ஆவல் கடவுளைக் காண்பதற்கு இருக்குமானால் நீ அவரை நிச்சயமாகத் தரிசிப்பாய்" என்றார்.

626. 'இந்த ஜன்மத்திலேயே நான் ஈசுவரனை அடையவேண்டும்; அல்ல, மூன்று நாட்களில் நான் அவனைக் காணவேண்டும்; அப்படியும் அன்று; ஒரே ஒருதரம் அவனுடைய திவ்விய நாமத்தைச் சொன்ன மாத்திரத்திலேயே அவன் என்னிடம் வருவான்' என்று கூறும், இவ்விதத் தீவிர பக்தி யாரிடம் இருக்குமோ அவருக்கு வெகு சீக்கிரத்தில் ஈசுவர தரிசனமும் ஈசுவரானுபவமும் உண்டாகின்றன. ஆனால், சிரத்தையற்ற பக்தியுடையவர்கள் ஈசுவரனைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டாலும், எளிதில் காண்பதில்லை.

627. இந்த ஜன்மத்தில் இல்லாமற்போனால் அடுத்த ஜன்மத்தில் சாக்ஷாத்காரம் கிடைக்கும் என்று ஏன் சோம்பி இருக்கவேண்டும்? அவ்வளவு மந்த பக்தி கூடாது. இந்த ஜன்மத்திலேயே—அன்று, இந்த நேரத்திலேயே நான் கடவுளை யடையவேண்டும் என்ற உறுதி உள்ளமும் திடசங்கல்பமும் இருந்தாலொழிய கடவுட் காட்சி கிட்டாது. கிராமாந்தரங்களில் எருது வாங்கப்போகும் உழவர்கள் எருது சுறு சுறுப்பாகவிருக்கிறதா என்று பார்க்க அதன் வாலைத் தொடுகிறார்கள். சில எருதுகள் தொடும்போது ஒன்றும் செய்கிறதில்லை. சிற்சில சமயம் மந்த புத்தியுள்ள அம்மாடுகள் படுத்துக் கொள்ளுகின்றன. அவைகள் பிரயோசன மற்றவை என ஒதுக்கிவிடுகிறார்கள் உழவர்கள். ஆனால் சில எருதுகளோ தொட்ட மாத்திரத்தில் துள்ளிக் குதிக்கின்றன. அவைகள் பிரயோசனப்படும் என்று தீர்மானித்து அத்தகைய எருது களில் ஒன்றை வாங்கிச் செல்கின்றார்கள். ஆகையால் மந்த புத்தி விரும்பத்தக்கது அன்று. மனோபலமும் உறுதியான நம்பிக்கையும் பெற்று இந்த க்ஷணத்திலேயே கடவுளைக் காண்பேன் என்று கூறுவாயாக. அப்போதே உன் முயற்சியில் வெற்றி பெறுவாய்.

ஆண்டவனை அனுபவிக்க ஒரே வழி

628. மாயையின் கட்டுகளினின்றும் விடுபடுவதற்கு நாம் செய்ய வேண்டி உபாயங்கள் எவை? அதன் கட்டுகளினின்றும் விடுபட வேண்டுமென்ற ஆவலுள்ளவனுக்கு ஈசுவரனே வழியைக் காட்டி யருள்கிறான். இடைவிடாத ஆவல்தான் அவசியமானது.

629. எந்த வழியாக நமக்கு அவன் தரிசனம் கிடைக்கும்!

உருகிய உள்ளத்துடன் அவனுக்காக உன்னால் கதறியழ முடியுமா? மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் உகுக்கிறார்கள்; ஆனால் அவன் வேண்டும் என்று அழுபவர் யார்? குழந்தை, விளையாட்டுப் பொருள்களோடு ஈடுபட்டிருக்கும் வரையில் தாய் தன் சமையல் வேலைகளையும் இதர அலுவல்களையும் கவனிக்கின்றாள். விளையாட்டுக் கருவிகள் பசி நீக்குகின்றதில்லை;

எனவே குழந்தை அவைகளை வீசி எறிந்துவிட்டுத் தாயை வேண்டிக் கோவென்று கத்தி அழுகின்றது. உடனே தாய் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும்—சாதம் பாதி வடித்துக்கொண்டிருந்தாலும்கூட—எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்து குழந்தையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொள்கின்றாள்.

630. எவனிடம் அருட் தாகமும் தியானமும் அதிகமாக இருக்கின்றனவோ அவன் ஈசுவரனை வெகு சீக்கிரத்தில் காண்பான்.

631. இந்தக் கலியுகத்தில் ஈசுவரனுடைய கிருபையைப் பெறுவதற்கு மூன்றுநாள் தீவிரமான பக்தி செய்தால் போதுமானது.

632. சந்திரன் எல்லாக் குழந்தைகளுக்கும் சந்தமாமாவாக விளங்குகிறான். அதேபோலக் கடவுளும் அனைவர்க்கும் சொந்தம். எவரும் அவனை வணங்கி அழைக்கலாம். எவனொருவன் விரும்பி அவனை வேண்டுகின்றானோ, அவன், அவனை யடைந்து கிருதார்த்தனாகின்றான். நீயும் வேண்டி யழைத்தால் அவனை யடைவது நிச்சயம்.

633. உண்மையாகவே சொல்கிறேன், ஈசுவரனை யடையவேண்டுமென்னும் ஆவல் எவனுக்கு இருக்கிறதோ அவன் அவ்வீசுவரனைக் காண்பான். இதை உனது வாழ்க்கையிலேயே கண்டு தெரிந்துகொள். வாஸ்தவமான பக்தியுடன் மூன்றுநாள் முயற்சி செய். நிச்சயமாக நீ வெற்றி பெறுவாய்.

634. மாறுத அன்பையும், கொஞ்சமேனும் சலிக்காத திடபக்தியையும் தந்தருள வேண்டுமென்று தேவியைப் பிரார்த்தித்துக் கேள்.

635. சாதகனுக்குப் பலம் எது! அவன் ஈசுவரனுடைய குழந்தையாகையால், கண்ணீர்தான் அவனுக்குப் பிரதானமான பலம். அழும் குழந்தையின் மனோரதத்தை அதன் தாய் பூர்த்தி பண்ணிவைப்பதைப் போல, அழுதுகொண்டிருக்கும் குமாரன் கேட்பவற்றையெல்லாம் ஈசுவரன் கொடுத்தருள்கிறான்.

636. "ஈசுவரனை நான் பதினைந்து வருஷங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொருவர் சொன்ன புத்திமதிகளையும் கேட்டு அவைகளின்படி நடந்திருக்கிறேன். புண்ணிய க்ஷேத்திரங்கள் எல்லாவற்றுக்கும் போய் வந்திருக்கிறேன். அநேக ஸாதுக்களையும் மஹாத்மாக்களையும் தரிசித்திருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பத்தைந்து வயது ஆகிவிட்டது; என்றாலும் நான் இன்னும் ஒன்றையும் பெறவில்லை" என்றான் ஒருவன். இதைக்கேட்ட பரமஹம்ஸர், "உண்மையாகவே ஈசுவரனிடம் தீவிரமான அன்புடையவன் அவனைக் காண்பான் என்று உறுதி கூறுகிறேன். என்னைப் பார்த்து மனத்தேறுதலடை" என்று பதில் சொல்லியருளினர்.

637. "அம்மா! எனக்குப் பசிக்கும்போது என்னை எழுப்பு" என்று குழந்தை சொல்லிற்று. அதற்கு, "குழந்தாய்! உனது பசியே உன்னை யெழுப்பிவிடும்" என்று அதன் தாய் சொன்னாள்.

638. விளையாட்டுப் பொருள்களையும் காசுகளையும் வேண்டும் குழந்தை, அழுது தொந்தரை பண்ணித் தன் தாயாரை வருந்திக் கேட்பதுபோல, தனக்குச் சமீபமாயும் பிரியமாயும் ஈசுவரன் இருப்பதாகத் தெரிந்து கொண்டவனும் அவ்வீசுவரனைக் காண வேண்டுமென்று உள்ளன்புடன் மனங்கசிந்து உருகுவதும் கடைசியில் திவ்விய தரிசனத்தைப் பெறுவதும் நிச்சயம். தன்னை அவ்விதம் அன்போடும் திட பக்தியோடும் தேடுபவனுடைய திருஷ்டிக்குப் புலப்படாமல் ஈசுவரன் மறைந்திருப்பதில்லை.

639. கண்ணபிரானுடைய சரித்திரத்தையும் திருவிளையாடல்களையும் நடித்துக் காட்டும் நாடகசாலைகளில், நாடகம் ஆரம்பமாகும் போது, மேளத்தைக் கொட்டி "ஏ, கிருஷ்ணா! பிரியா, ஓடிவா" என்ற பாட்டை வாய்விட்டு உரத்துச் சொல்லுகிறார்கள். கிருஷ்ண வேஷத்தைப் போட்டுக்கொண்ட மனிதன் இந்தச் சப்தத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காதவனாய், திரைக்குள்ளே வம்பளந்து கொண்டும் சுருட்டுப் பிடித்துக்கொண்டு மிருப்பான். ஆனால், இந்தச் சப்தம் நின்றுபோய், இனிமையான மிருது கானத்துடன் நாரதபகவான் நாடகமேடையில் பிரவேசித்து, பக்திப் பரவசராய் கிருஷ்ணனை அழைக்கும்போது, கிருஷ்ண வேஷதாரி, இனிமேல் அசட்டையாக இருக்கக்கூடாதென்று உணர்ந்து அவசரமாக நாடகமேடையில் பிரவேசிக்கிறான். 'ஈசுவரா! ஈசுவரா!!' என்று வாயால் மட்டும் கூவும் பக்தர்களிடம் அவன் வருவதில்லை. அவன் வரும்போது பக்தனுடைய இதயம் திவ்விய பிரேமையினால் இளகிப்போகும்; பேச்சு அடங்கிவிடும். மிகுந்த பக்தியோடும் உள்ளன்போடும் அழைக்கும் பக்தர்களிடம் வருவதற்கு ஈசுவரன் ஒருபோதும் காலதாமதம் செய்வதில்லை.

மூன்றும் பகுதி

மனிதனும் தெய்வமும்

பிரபஞ்சத்திற்கு மூலமும் முடிவும் அவனே என்பதை அறியப் பெறுவோம். குணக்குன்றும், பாபநாசனும், தர்மத்திற்குத் தாயகமும் அவனேயாம். நித்தியனும், ஜகத்தின் ஆதார புருஷனும் அவனே யாவான். மாயாதீதனும், காலம் கடந்தவனும், நாமரூப ரஹிதனுமாகப் போற்றப்படும் அப்புராண புருஷன், நமது உள்ளத்தினையே உறைவிடமாகக் கொண்டுள்ளான்.

தேவதேவன், ஆதிநாயகன், முழுமுதற் பொருள், பிரபஞ்சாதீதன் என்று புகழப்படும் புண்ணிய மூர்த்தியை நாம் எய்துவோமாக.

வேண்டுதலற்று, கருவிகரணமற்று, ஒப்பாரும் மிக்காருமற்று ஒரு தனி முதல்வனான அவன், அறிவையும் ஆற்றலையும் உருவமாகக் கொண்டுள்ளான். அவனது ஆற்றலின் பெருமையையே வேதம் விளம்புகின்றது.

—உபநிடதங்கள்

அத்தியாயம் 14

பகவானும் பக்தர்களும்

[கடவுள் ஏன் காணப்படுவதில்லை—பகவானும் பக்தர்களும்—பக்தர்களின் உலக வாழ்வு—கடவுள் எப்படித் தம்மைக் காணும்படிக் காட்டுகிறார்—பகவானுக்குப் பணம் பொருட்டல்ல—நமது முயற்சியும் திருவருளும்.]

கடவுள் ஏன் காணப்படுவதில்லை

640. சூரியன் பூமியைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாயினும், வெகு தூரத்துக்கப்பா லிருப்பதால் ஒரு சிறிய தட்டைப்போலக் காணப்படுகின்றது. அதுபோலவே, ஈசுவரன் அளவற்ற மகத்துவமுடையவனாயிருந்தும், நமக்கும் அவனுக்கு மிடையே உள்ள தூரத்தினால் நாம் அவனுடைய உண்மையான மகத்துவத்தை அறியச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.

641. நாணலும் பாசியும் மூடிய குளத்தில் துள்ளியோடும் மீன்களை வெளியிலிருந்து காண முடியாது; அதுபோல மனிதனுடைய ஹிருதயத்தில் விளையாடும் ஈசுவரனைக் காணவொட்டாதபடி மாயை மறைக்கின்றது.

642. திவ்விய மாதாவை நம்மால் ஏன் காண முடியவில்லை? அவள், திரைக்குப் பின்னால் இருந்து, எல்லாக் காரியங்களையும் நடத்தி, பிறர் கண்ணிற் படாமல் தான்மட்டும் எல்லாவற்றையும் பார்க்கும் உயர் குலத்துதித்த ஸ்திரீ போன்றவளாவாள். அவளுடைய உண்மையான பக்தர்கள் மட்டும், மாயையாகிய திரையைத் தாண்டி, சமீபத்தில் சென்று, அவளைத் தரிசிக்கின்றனர்.

643. தாணுக்காரன், தனது விளக்கின் வெளிச்சம் எவர்மீது படும்படி திருப்புகிறானோ அவரைப் பார்க்கக்கூடும். ஆனால் அந்த விளக்கைத் தன்மீது திருப்பாதிருக்கும் வரையில் அவனை ஒருவராலும் பார்க்க முடியாது. அதுபோல, ஈசுவரன் எல்லோரையும் பார்க்கிறான். ஆனால் தனது கிருபை மூலமாக அவன் தன்னைத் தோற்றுவிக்கும் வரையில் ஒருவராலும் அவனைக் காண முடியாது.

பகவானும் பக்தர்களும்

644. ஜமீன்தார் ஒருவர் மிகப் பணக்காரராக இருக்கலாம். என்றாலும் ஏழைக் குடியானவன் ஒருவன் ஏதேனும் அற்பமானதொரு

காணிக்கைப் பொருளைப் பிரியத்துடன் கொண்டுவந்தால், அவர் மிகுந்த சந்தோஷத்துடன் அதனை ஏற்றுக்கொள்கிறார். அதுபோல, ஸர்வேசுவரன் மிகப் பெரியவனும் சக்திமானு மானபோதிலும் பக்தியோடு ஸமர்ப்பிக்கப்படும் அற்ப நிவேதனத்தையும் அத்தியந்த சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் அங்கீகரிக்கிறான்.

645. அவனை அறிந்தால் அதுவே எனக்குப் போதுமானது. எனக்கு, ஸம்ஸ்கிருதபாஷை தெரியாமற்போனால் என்ன? பண்டிதன் பாமரன் எவராயிருந்தாலும், உள்ளமுருகி பகவானை வேண்டுவார்களானால் பகவானுடைய குழந்தைகளாகிய அவர்கள் ஒவ்வொருவர்மீதும் அவர் கருணை மழையைப் பொழிகின்றார். ஒருவனுக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. சில அப்பாவென் றழைக்கின்றன; சில முழுதும் உச்சரிக்க முடியாது, 'அப்' என்று அறை குறையாக உச்சரித்து அழைக்கின்றன. தன்னைச் சரியாகக் கூப்பிடவில்லை யென்று எண்ணி தகப்பன் இளங் குழந்தைகளிடம் பாரபக்ஷமான அன்பு காட்டுவானா? அவைகள் சிறு குழந்தைகள்; ஆகையால் சரிவர அவைகளால் பேச முடியாது என்று அவனுக்கு நன்கு தெரியும். எனவே எல்லாக் குழந்தைகளையும் ஒரேவிதமாகவே அவன் விரும்புகிறான்.

646. மண்ணாலும் புழுதியாலும் தன்னை அழுக்காக்கிக்கொள்வது குழந்தையின் சுபாவம். என்றாலும், அதன் தாயார் அதை எப்போதும் அழுக்குடம்பாகவே இருக்கும்படி விடுவதில்லை. அடிக்கடி அவள் அக் குழந்தையைக் குளிப்பாட்டுகிறாள். அதுபோல பாவம் செய்வது மனிதனுடைய சுபாவம். மனிதன் பாபம் செய்யும் சுபாவமுடையவன் என்பது வாஸ்தவமானால், அவனுடைய கதி மோக்ஷத்துக்கு ஈசுவரன் ஒரு வழிவிடுகிறான் என்பது அதைவிடப் பன்மடங்கு வாஸ்தவமாகும்.

647. ஒரே மீன் பல்வேறு விதமாகச் சமைக்கப்பட்டு ஒவ்வொருவனுடைய ருசிக்குத் தகுந்த உணவாவதைப்போல, ஒரே மூர்த்தியான ஸர்வேசுவரன் பக்தர்களுடைய பல்வேறு விருப்பப் பிரகாரம் வேறு வேறு உருவங்களில் தோன்றுகிறான். ஒவ்வொரு பக்தனும் தான் விசேஷித்துக் கொண்டாடும் மூர்த்தியைத்தான் தரிசிக்கிறான். ஈசுவரன் சிலர்க்குத் தயாளுவான எஜமானனாயும், சிலர்க்குப் பிரிய பிதாவாயும் சிலர்க்குப் புன்னகை புரியும் மாதாவாயும், சிலர்க்கு அன்பு மிகுந்த துணைவனாயும், சிலர்க்கு அந்தரங்கக் கணவனாயும், சிலர்க்குக் கீழ்ப்படியும் புத்திரனாயும் இருக்கிறான்.

648. குளத்தில் மீன்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் ஓர் இரையைப் போட்டதும் நாலா பக்கங்களிலிருந்தும் அதனிடம் ஓடி வருகின்றன. அதுபோல பக்தியும் சிரத்தையும் நிரம்பிய ஹிருதயத்தையுடைய பக்தனிடம் ஈசுவரன் வெகு வேகமாக வருகின்றான்.

649. தெய்விகம் வாய்ந்த ரிஷிகள், ஈசுவரனுடைய நெருங்கிய உறவினரைப் போன்றவர்கள். அவர்கள் அவனுடைய நண்பர்கள் போலவும், ஸஹாக்கள் போலவும், உறவினர்கள் போலவும் இருக்கின்ற

னர். சாதாரண மனிதர்கள் எல்லோரும் எட்டிய உறவினர் போன்ற வர்கள். அவர்கள் கேவலம் ஈசுவர சிருஷ்டிகள் மாத்திரமே.

650. சூரிய வெளிச்சம் எங்கும் சமமாய் வீழ்கிறது. ஆனல், ஜலம், கண்ணுடி, மெருகிட்ட உலோகம் இவைபோன்ற வஸ்துக்களில் அவ்வெளிச்சம் நன்ருகப் பிரதிபலிக்கின்றது. அதுபோலத்தான் தெய்விக ஒளியும். அது எல்லாரிடத்தும் சமமாயும் பாரபக்ஷ மின்றியும் வருகின்றது. என்ருலும் நல்லாருடைய தூயமனமும், ஸாதுக்களுடைய இருதயமுமே அவ்வொளியை நன்ருய்ப் பிரதிபலிக்கச் செய்கின்றன.

651. வெளிச்சத்தைத் தருவது தீபத்தின் சுபாவம். அதன் உதவியால் சிலர் சமையல் செய்துகொள்ளக்கூடும். சிலர் பொய்ப் பத்திரம் தயார் செய்யலாம்; வேறு சிலர் பாகவத பாராயணம் பண்ணலாம். அதுபோல ஈசுவரனுடைய நாமத்தின் உதவியால் சிலர் மோக்ஷமடையப் பார்க்கின்றனர்; வேறு சிலர் தங்களுடைய தீய எண்ணங்களைச் சாதித்துக் கொள்ள முயல்கின்றனர். என்ருலும் பகவந்நாமம் ஒருபோதும் அசுத்தமடையாமல் எப்போதும் தூயதாகவே இருக்கிறது.

652. பகவான், பாகவதம் (சாஸ்திரங்கள்), பக்தர்கள் இவை யாவும் ஒன்றேயாம்.

653. உண்மையான பக்தன் ஒருவன், ஈசுவரனை எவ்விதம் காண்கிருன்? பிருந்தாவனத்துள்ள கோபஸ்த்ரீகள், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை ஜகந்நாதனுகக் காணுமல் அவர்களுடைய பிரிய கோபிநாதனுகவே கண்டதைப்போல, பக்தனும் ஈசுவரனைத் தனது நெருங்கிய பிரிய பந்துவாகவே காண்கிருன்.

654. பக்தனுக்கு ஈசுவரனைத் "தாயே!" என்று அழைப்பதில் உண்டாகும் பேரானந்தத்துக்குக் காரணமென்ன? குழந்தையானது தனது தாயிடத்தில் அத்தியந்த பிரியத்துடன் கொஞ்சிக் குலாவுவதைப் போல மற்றையோரிடத்தில் குலாவுவதில்லை.

655. கடுமையான ஜுரத்தில், தாகமெடுக்கும்போது, கடலளவு தண்ணீர் இருந்தபோதிலும் அவ்வளவையும் குடித்து விடலாமென்று நோயாளிக்குத் தோன்றும். ஜுரம் நின்று தாகம் தணிந்துவிட்டால் ஒரு குவளை ஜலத்துக்குமேல் அவனல் குடிக்க முடியாது. கொஞ்சம் தண்ணீராலேயே அவனுடைய தாகமெல்லாம் தீர்ந்து விடுகிறது. அதுபோல, மாயையாகிய ஜுரதாபத்தில் தனது சிறுமையை மறந்திருப்பவன், தன்னுடைய ஹிருதயத்தில் ஈசுவரனை அப்படியே எழுந்தருளப் பண்ணிக்கொள்ளலாமென்று நினைக்கிருன். ஆனல் மாயை அகன்றதும், அவனுக்குத் திவ்வியானந்தத்தைக் கொடுக்க ஈசுவரனுடைய திவ்விய தேஜஸின் ஒரே ஒரு கிரணம் போதுமானதாகவிருக்கும்.

656. கொஞ்சம் சாராயத்தைக் குடித்ததும் சிலருக்குப் போதை உண்டாகிறது. இன்னும் சிலருக்குப் போதையுண்டாக இரண்டு மூன்று புட்டிகள் வேண்டியிருக்கிறது. ஆயினும் இருவகையினரும் அடையும்

ஆனந்தம் ஒன்றுதான். அதுபோல, ஈசுவர மகிமையில் தினையளவைக் கண்டதும் சிலருக்கு ஆனந்தமுண்டாகிறது. வேறு சிலருக்கு ஈசுவர ஸந்நிதானத்தில் நேருக்கு நேராக வந்த பிறகுதான் ஆனந்தமுண்டாகிறது. ஆயினும் இருவரடையும் ஆனந்தமும் ஒன்றே.

657. ஈசுவரன் ஒரு சர்க்கரைக் குன்றுக்குச் சமானம். அக்குன்றிலிருந்து ஒரு சிறிய எறும்பு வெகு அற்பமான அளவு சர்க்கரையைக் கொண்டு வருகிறது. இன்னும் கொஞ்சம் பெரிய எறும்பு சற்றுப் பெரியதான அளவு சர்க்கரையைக் கொணருகிறது. ஆனால் சர்க்கரைக் குன்றோ முன் போலவே அளவு குறையாமலிருக்கிறது. ஈசுவரப்ரேமை கொண்டவர்களும் அப்படிப்பட்டவர்களே. திவ்யானந்தத்தில் ஒரு சிறிது அநுபவித்தும் அவர்கள் உன்மத்தர்களாகின்றனர். ஈசுவரனுடைய கல்யாண குணங்கள் எல்லாவற்றையும் அநுபவிப்பது ஒருவராலும் முடியாத காரியம்.

658. பிரம்மமாகிற சமுத்திரத்திலிருந்து வீசும் காற்று, அது மோதும் ஒவ்வொரு ஹிருதயத்தையும் விகஸிக்கச் செய்கின்றது. ஸநகர், ஸநந்தனர் முதலிய பூர்வரிஷிகள் இந்தக் காற்றினால் பக்குவமாயினர். ஈசுவரப்ரேமையால் பைத்தியங்கொண்ட நாரதர் கொஞ்ச தூரத்திலிருந்து அந்த ஸமுத்திரத்தைத் தரிசித்தனர் போலும்! அது காரணமாக அவர் தம்மையே மறந்து சதா சர்வகாலமும் ஸ்ரீஹரியின் புகழைப் பாடிக்கொண்டு, பித்தரைப்போல உலகமெங்கும் திரிகின்றார். பிறவித் துறவியான சுகதேவர், அந்த மஹாஸமுத்திர ஜலத்தை மூன்று தரம் கையினால் தொட்ட மாத்திரத்தில் பரிபூரண ஆனந்தத்தினால் குழந்தையைப்போல் அங்குமிங்கும் ஓடியாடிக் கொண்டிருக்கிறார். லோக குருவாகிய மஹாதேவர், அந்த ஸமுத்திர ஜலத்தில் மூன்று கை அள்ளிக் குடித்ததனால், திவ்யானந்தப் பித்தேறி, பிணம்போல அசைவற்றுக் கிடக்கிறார். இந்த மஹா சமுத்திரத்தின் ஆழத்தையோ அல்லது அபூர்வ சக்தியையோ எவரால் கண்டுபிடிக்க முடியும்?

659. பரமஹம்ஸர், கேசவசந்திரஸேனரை நோக்கி, பிரம்ம ஸமாஜத்தவரெல்லாரும் ஈசுவர சிருஷ்டியின் மகிமையைப்பற்றிமட்டும் ஏன் அதிகமாகச் சிலாகித்துக் கொண்டாடுகின்றனர் என்று கேட்டார். "ஈசுவரனே! சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவற்றை நீர் படைத்தருளி யிருக்கின்றீர்!" என்று மட்டும் சொல்வானேன்? அழகும் வாஸனையுமுள்ள புஷ்பங்கள் நிரம்பிய தோட்டத்தின் சோபையைக் கண்டு களிப்படைபவர் பலர். ஆனால் அந்தத் தோட்டத்தின் அதிபதியைத் தேடித் தெரிந்துகொள்பவர் வெகு சிலரே! தோட்டம் பெரியதா, அதை உண்டாக்கியவன் பெரியவனா? கம்மிடையே எமன் நடமாடும் வரையில் தோட்டம் அநித்தியம் என்பது நிச்சயம். அத்தோட்டத்தின் அதிபதியாகிய ஒருவனே நித்தியன்.

கள்ளுக்கடையில் ஒருவன் சில கலயங்களை வாங்கிக் குடித்துவிட்டால், அப்பால் விற்பனைக்கு வைத்திருக்கும் பீப்பாய்களில் எவ்

வளவு கள் இருக்கிறதென்பதை விசாரிக்கப் போவதுண்டா? அளக்க வேண்டியது அவசியமா? ஒருவனுக்கு ஒரு மொந்தையே போதும்.

நரேந்திரனைக் கண்டதும் ஆனந்தத்தில் மூழ்கிவிடுகிறேன். "உன் பிதா யார்? அவருக்கு வீடு வாசல்கள் எத்தனையுண்டு?" என்று ஒரு போதும் நான் அவனைக் கேட்டதில்லை. மனிதர்கள் தங்களிடம் இருக்கும் பொருள்களை அதிகமாய் மதிப்பது வழக்கம். பணம், வீடு, வாசல், தட்டுமுட்டு சாமான் இவைகளை அவர்கள் மிகுதியும் பெருமையாக மதிப்பார்கள். ஆதலால், ஈசுவரனும் தன்னுடைய சிருஷ்டிப்பொருள்களாகிய சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் முதலானவைகளை அம்மாதிரியே மதிப்பவர் என்று ஜனங்கள் நினைக்கின்றனர். ஆகவே அவனுடைய சிருஷ்டிப் பொருள்களைச் சிலாகித்துப் பேசினால் ஈசுவரனுக்குச் சந்தோஷமுண்டாகுமென்று எண்ணுகின்றனர்!

660. குழந்தையின் ஸரளம் எவ்வளவு இனிமையானது! உலக ஐசுவரியங்கள் எல்லாவற்றையும் திரஸ்கரித்துவிட்டு அது ஒரு மரப் பாவையை வைத்துக்கொண்டு கொஞ்சும். பொய்யற்ற பக்தனுடைய சுபாவமும் அப்படிப்பட்டதே. செல்வம் கௌரவம் எல்லாவற்றையும், திரஸ்கரித்துவிட்டு, ஈசுவரன் ஒருவனையே சரணமடைபவன் அப் பக்தனே.

661. உண்மைப் பக்தனுடைய மனத்தில் முக்கால் பாகம் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. உலக விஷயங்களைக் கவனிப்பதற்குப் பாக்கிக் கால்பங்கு மனமே அவனிடமுள்ளது. ஆதலால்தான் பக்தன் ஈசுவர ஸம்பந்தமான விஷயங்களைக் கேட்பதற்கு அத்யந்த ஜாக்கிரதையுள்ளவனாக இருக்கிறான். பாம்பின் வாலை மிதித்தால் வாலில் மட்டுமே உயிர் இருப்பதைப்போல அது சீறிவரும்.

662. பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்த பிரபல பிரசாரகர் ஒருவர் பரமஹம்ஸர் ஒரு பைத்தியக்காரர் எனவும், ஒரே விஷயத்தைப்பற்றிச் சதா சிந்தித்ததன் பயனாய், அனேகம் ஐரோப்பிய ஞானிகளுக்கு நேர்ந்ததைப்போல, அவருக்கும் மன நிலை தடுமாறிவிட்டதெனவும் சொன்னார். பரமஹம்ஸர் அந்தப் பிரசாரகரை நோக்கி 'ஐரோப்பாவில்கூட ஒரே விஷயத்தைப்பற்றிச் சிந்திப்பதால் ஜனங்களுக்குப் பைத்தியம் பிடிக்கிறதென்று சொன்னீர். அப்படி அவர்கள் சிந்தித்த விஷயம் ஜடத்தைப் பற்றியதா? சைதன்யத்தைப் பற்றியதா? ஜடமானால், ஸதா ஜடத்தைப் பற்றியே சிந்திப்பதால் ஒருவனுக்குப் பைத்தியம் பிடிப்பதில் ஆச்சரியமென்ன? ஆனால் உலக முழுவதையும் விளக்கும் ஜோதியையுடைய சின்மயத்தைப்பற்றிச் சிந்திப்பதனால் ஒருவன் எப்படி அறிவை இழக்கக்கூடும்? உமது சாஸ்திரங்கள் இப்படித்தான் உமக்குப் போதிக்கின்றனவோ?' என்றார்.

663. பக்தி ஸாகரத்தில் ஆழ்ந்து முழுகு. பயப்படாதே. அது மரணத்தைப் போக்குவது. நான் நரேந்திரனிடம், "குழந்தாய்! ஈசுவரன் ஓர் அமிர்த ஸாகரம். அச்சாகரத்தில் நீ ஆழ்ந்து முழுக

மாட்டாயா? சர்க்கரைப்பாகு வைக்கப்பட்ட வாயகன்ற பாத்திரம் ஒன்றிருப்பதாயும் நீ அதைப் பருக ஆசைப்படும் ஈயாகவும் நினைத்துக் கொள். எங்கே உட்கார்ந்துகொண்டு நீ பருகுவாய்?" என்று கேட்டேன். "அதற்குள் விழுந்தால் முழுகி இறந்து போவேனாதலால், பாத்திரத்தின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு குடிப்பேன்" என்று நரேந்திரன் பதில் சொன்னான். அதன்மேல், "குழந்தாய்! திவ்விய ஸாகரத்தில் ஆழ்ந்து மூழ்கினால் ஆபத்தாவது மரணமாவது நேருமென்று நீ பயப்படவேண்டியதில்லை. சச்சிதானந்தக் கடல் சிரஞ்சீவித்வத்தைக் கொடுக்கும் கடல் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். ஈசுவரப்ரேமையில் அளவுக்கு மிஞ்சிப் போய்விடுவோம் என்று அஞ்சும் சில முட்டாள்களைப்போல் நீயும் பயப்படாதே" என்றேன்.

பக்தர்களின் உலக வாழ்வு

664. கிருஷ்ண பரமாத்மாவினுடைய திவ்விய வடிவத்தைத் தேவகி சிறைச்சாலையில் கண்டு களித்தனளென்றாலும் அதனால் அவளுடைய சிறைத்துன்பம் நீங்கவில்லை.

665. ஒரு குருடன் கங்கையில் ஸ்நானம் செய்து தன் பாபங்களையெல்லாம் போக்கடித்துக் கொண்டான். என்றாலும் அவனது குருட்டுத்தனம் போகவில்லை.

666. பக்தி நிரம்பிய விறகு வெட்டி ஒருவனுக்குத் திவ்விய மாதாவின் தரிசனமும் அவளது அருளும் கிடைத்தன. என்றாலும் அவனுடைய விறகு வெட்டும் பிழைப்புமட்டும் நீங்கவில்லை. மேலும் கஷ்டப்பட்டு விறகு வெட்டியே அவன் தனது அற்ப காலக்ஷேபத்தைச் செய்யவேண்டியதாக இருந்தது.

667. பாண்டவரும் ஸ்ரீ கிருஷ்ணபகவானும், அம்புப் படுக்கையின்மேல் மரணத்தருவாயில் படுத்திருந்த பீஷ்மர், கண்ணீர் உகுக்கக் கண்டனர். உடனே அர்ஜுனன் 'என்ன ஆச்சர்யம்! சத்தியசீலர், ஆத்மஞானி, ஜிதேந்திரியர், எட்டு வசுக்களில் ஒருவரான நமது பிதாமகர் பீஷ்மர்கூட மாயையால் பாதிக்கப்பட்டு, தமது அந்தியகாலத்தை நினைத்துக் கண்ணீர் சொட்டுகின்றாரே!' என்றான். அர்ஜுனனது நோக்கம் பீஷ்மருக்குத் தெரிந்ததும் பீஷ்மர் கூறியதாவது: "ஓ, கிருஷ்ணா நான் மரணத்தைக் குறித்து அழவில்லையென்பது உமக்கு நன்றாகத் தெரியும். தேர்ப்பாகனாக இருந்து பகவானே பாண்டவர்களுக்கு உதவி செய்து வருகின்றான். என்றாலும் அவர்கள் எல்லையற்ற கஷ்டங்களுக்கும் அல்லல்களுக்கும் ஆளாகி வருகின்றார்கள். இவைகளை யெல்லாம் காணும்போது பகவானது போக்கைப்பற்றி ஒன்றுமே தெரிந்துகொள்ள முடியவில்லையே என்ற எண்ணம் மிகப் பெற்றவனாய் என்னையும் மீறி என் கண்களினின்றும் நீர் வடிகின்றது; வேறொன்றுக்கும் இல்லை."

கடவுள் எப்படித் தம்மைக் காணும்படிக் காட்டுகின்றார்

668. ஒரு சிறு துவாரத்தின் வழியாக ஓர் இருட்டறைக்குள் ஒரு கிரண வெளிச்சம் வருகிறது. அவ்வறைக்குள்ளிருப்பவனுக்கு, வெளிச்சத்தைப்பற்றி யிருக்கும் அபிப்பிராயமானது அந்தக் கிரணத்தின் அளவுக்குத் தகுந்தபடிதானிருக்கும். கதவுகளிலும் ஜன்னல்களிலும் துவாரங்கள் அதிகமாக இருந்தால் இன்னும் அதிகமாக வெளிச்சத்தையும், அக்கதவுகளையும் சாளரங்களையும் நன்ருகத் திறந்துவிட்டால் வெளிச்ச மயமாக இருப்பதையும் அவன் காண்பான். ஆனல் வெளியிடத்தில் நிற்பவனே வெளிச்சத்திலேயே இருக்கிருன். அதுபோல, பக்தர்களுடைய சுபாவத்துக்கும் சக்திக்கும் தகுந்தபடி ஈசுவரன் தன்னைத் தோற்றுவித்தருள்கின்ருன்.

669. கடவுளை ஒருவன் அணுக அணுக, அக்கடவுளினுடைய அளவுகடந்த தன்மைகளின் புதியனவும் மஹத்தானவையுமான விசேஷங்களைத் தெரிந்து கொள்கின்ருன். கடைசியில் ஞானமுதிர்ச்சியினல் அவன் அக்கடவுளினிடமே லயித்து விடுகிருன்.

பகவானுக்குப் பணம் பொருட்டன்று

670. மனிதன் ஸமர்ப்பிக்கும் சொத்துக்களை யெல்லாம் ஈசுவரன் மதிக்கிருனு? இல்லவே இல்லை. பக்தியையும் பிரேமையையும் எவனொருவன் ஸமர்ப்பிக்கிருனே அவனுக்கு மட்டுந்தான் ஈசுவரனுடைய கிருபை உண்டாகும். தன்பொருட்டு உண்டாகும் பக்திப்ப்ரேமைகளையும் விவேக வைராக்கியங்களையுமே ஈசுவரன் சிலாகித்துக் கொண்டாடுகிருன்.

671. சம்புநாத மல்லிக் ஒரு சமயம் என்னிடம் வந்து, "சுவாமி! எனது செல்வம் முழுவதையும் ஜகதீசுவரியின் திவ்விய சரணுரவிந்தங்களில் சமர்ப்பித்துவிட்டு நான் மரணமடையும்படி என்னை ஆசிர்வதிக்க வேண்டும்" என்ருர். அதற்கு நான், "என்ன சொல்லுகிறீர்! அவையெல்லாம் உமக்குத்தான் செல்வம். திவ்விய மாதாவுக்கோ, அவை உமது காலின் கீழே மிதிபடும் புழுதியைப் போன்றவையாகும்" என்றேன்.

672. ஒரு சமயம் தக்ஷிணேசுவரத்தில் ராணி ராஷ்மணியின் தோட்டத்தில் களவு போயிற்று. விஷ்ணுவாலயத்தில் விக்கிரகங்களின் மீது அணியப்பட்டிருந்த ஆபரணங்கள் காணுமற் போயின. (ராஷ்மணியின் மருமகனும் கோவில் அதிகாரியுமான) மதுரபாபுவும் நானும் சங்கதி என்னவென்பதை அறிய அங்கே சென்ருேம். சென்றதும், "தெய்வமே! நீர் ஒன்றுக்கும் உதவாதவர்! உமது ஆபரணங்களைக் களவாடினுர்கள்; அதைத் தடுக்க உமக்குச் சக்தியில்லை!" யென்று மதுர பாபு கூச்சலிட்டார். இதைக் கேட்டதும் நான் சட்டெனத் திரும்பி "என்ன, நீரும் இப்படி மதியீனமாகப் பேசுகிறீர்! இதோ

விக்கிரகமாக எழுந்தருளி உம்மால் வணங்கப்படும் ஜகதீசுவரனுக்கு நீர் சிலாகித்துப் பேசும் நகைகள் எல்லாம் களிமண்ணுக்குச் சமானம். ஐசுவரியங்களுக்கு அதிதேவதையான மஹாலக்ஷ்மி, இவரிடமிருந்தே தான் தனது மஹிமையைப் பெறுகிறுளென்பதையும் நீர் ஞாபகப் படுத்திக் கொள்ளும்" என்றேன்.

நமது முயற்சியும் திருவருளும்

673. நமக்கெல்லாம் உணவளிப்பதனல் மட்டும் ஈசுவரன் நம் மிடம் கிருபையுள்ளவன் என்று சொல்லிவிடக் கூடாது. ஏனெனில் ஒவ்வொரு பிதாவும் தனது குழந்தைகளுக்கு உணவளிக்கக் கடமைப் பட்டவனுகவே இருக்கிறுன். ஆனல் அவ்வீசுவரன் நம்மைக் கெட்ட வழிகளில் போகவிடாமலும் நாம் ஆசாபாசங்களுக்கு உள்ளாகாமலும் பார்த்துக்கொள்ளும்போதுதான், வாஸ்தவமான கிருபையுள்ளவனு கிறுன்.

674. எப்படிப்பட்ட கைங்கரியத்தால் ஈசுவரனை அடையலாம்?

கைங்கரியத்தில் பேதமே கிடையாது. இந்தக் கைங்கரியந்தான் ஈசுவரனிடம் கொண்டுபோய்ச் சேர்க்குமென்றும், அது அப்படிச் சேர்க்காது என்றும் நினைக்காதே.

எல்லாம் ஈசுவரனுடைய கிருபையைப் பொறுத்துள்ளது. அந்தக் கிருபையைப் பெறவேண்டுமானல், நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும் சரியே; அதை முழுமனதோடும் அத்தியந்த விருப்பத்தோடும் செய். ஈசுவர கடாக்ஷத்தால் உனக்கு அனுகூலமான சந்தர்ப்பங்கள் உண்டா கும். உனது எண்ணம் பூர்த்தியாவதற்கு வேண்டிய அம்சங்கள் கைகூடும். உதாரணமாக, உலகத்தைத் துறக்க வேண்டுமென்று உனக்கு விருப்பமுண்டாகி, அதற்கு உனது குடும்ப பாரம் இடையூறுக இருக்குமானல், உனக்காக உன் சகோதரன் அக்குடும்ப பாரத்தை ஏற்றுக்கொள்ள முன் வருவான். ஒருவேளை உனது மனைவியே உன் ஆத்ம வாழ்க்கைக்கு இடையூறுக நிற்காமல் உதவியும் செய்யலாம்; அல்லது நீ கல்யாணம் செய்துகொள்ளாமலேயே இருந்துவிடவும், எவ்விதத்திலும் உனக்கு உலக பந்தம் நேரிடாமலும் ஆய்விடக்கூடும்.

675. ஓர் அறையில் அனேக ஆயிரம் வருஷங்களாக இருந்த இருட்டானது ஒரு தீபம் கொணரப்பட்டதும் உடனே அகன்று போகின்றது. அதுபோல, அளவில்லாத ஜன்மாந்தரங்கள் தோறும் செய்த பாபத்தொகுதிகள் ஒருதரம் உண்டாகும் ஈசுவரனுடைய கிருபா நோக்கத்தினலேயே மறைந்துபோகின்றன.

676. ஒருவகை மீன்களுக்கு அனேக வரிசை முட்களும் இன் னெருவகை மீன்களுக்கு ஒரே வரிசை முட்களும் இருக்கின்றன. சாப்பிடுபவர்கள் எல்லா முட்களையும் நீக்கிவிட்டு மீனை உண்கின்றனர். அதுபோல, சில மனிதர் அதிகமாகவும், சிலர் கொஞ்சமாகவும் பாபங்

களை உடையவர்களாய் இருக்கின்றனர். ஆயினும் ரக்ஷிக்கவல்ல ஈசுவரக் கடாக்ஷமோ இவ்விருவகையினரையும் ஒரேமாதிரியாகத் தக்க காலத்தில் பரிசுத்த மாக்குகின்றது.

677. மலய மாருதம் வீசும்போது, வைரமுள்ள மரங்களெல்லாம் சந்தன மரங்களாக மாறுகின்றனவாம். பப்பாளி, மூங்கில், வாழை முதலிய வைரமில்லாத மரங்களோ அப்படி மாறுவதில்லை. அதுபோல, பகவத் கடாக்ஷம் பொங்கி வரும்போது பக்தியும் நற்குணமும் எவரிடமுள்ளனவோ, அவர் உடனே பரிசுத்தராகி தெய்விகம் நிரம்பியவராகின்றார். உலகப் பற்றுள்ள உபயோகமற்றவர்களோ, எப்பொழுதும் போலவே இருப்பார்கள்.

678. ஒரு பக்தன் பகவந்நாமத்தை மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு இடைவிடாது ஜபமாலை வைத்து ஜபம்செய்து வந்தான். பரமஹம்ஸர் அவனை நோக்கி, "ஏன் நீ ஓரிடத்திலேயே நிலைத்திருக்கிறாய்! முன்னோக்கிப் போ" என்றார். பக்தன், "அது ஈசுவர கிருபையாலன்றி முடியாதே" என்றான். அதற்குப் பரமஹம்ஸர், "அப்பா! ஈசுவரனுடைய கிருபா கடாக்ஷமாகிய காற்று உன் தலைமீது இரவும் பகலும் அடித்துக்கொண்டே யிருக்கிறது. வாழ்க்கைச் சமுத்திரத்தில் நீ வேகமாகப் போக விரும்புவாயானால் உன் மனமாகிய படகின் பாயைப் பிரித்துவிடு" என்றார்.

679. ஈசுவரனுடைய அருட்காற்று எப்போதும் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஸம்ஸார ஸாகரத்திலுள்ள சோம்பேறி மானுமிகள் அதனால் பலனடையப் பார்ப்பதில்லை. சுறுசுறுப்பும் பலமுமுள்ளவர்கள் அந்த நற்காற்றைக் கிரகிக்க எப்போதும் மனத்தை விரித்து வைத்துக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு அவர்கள் சீக்கிரம் செல்கின்றனர்.

680. திடீரென்று ஒன்றும் சம்பவிப்பதில்லையா?

பொதுப்படக் கூறுமிடத்து, பரிபூரணநிலை அடைவதன் முன்னம் ஒருவன் நெடுங்காலம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். பாபு துவாரகாநாத மித்திரர் திடீரென்று ஒரே நாளில் ஹைகோர்ட் ஜட்ஜாக ஆய்விடவில்லை. அந்த ஸ்தானத்தை யடைவதற்கு முன்னால் அவர் அனேக வருஷங்கள் கஷ்டப்பட்டு உழைக்கவும் படிக்கவும் வேண்டியிருந்தது. அப்படி அதிக சிரமப்பட இஷ்டமில்லாதவர்கள் வரும்படியற்ற சாதாரண வக்கீல்களாகவே இருக்கத் தயாராக இருக்கவேண்டும். என்றாலும், பகவத் கடாக்ஷத்தினால் ஒவ்வொரு சமயம் திடீரென்று உயர்ந்த ஸ்தானம் லபிக்கலாம். கேவலம் எழுத்து வாசனையே தெரியாத இடையனாக இருந்த காளிதாசன், ஸரஸ்வதி தேவியின் கிருபையால் ஒருக் கணத்தில் கவி சிரேஷ்டனாக மாறியது இதற்கு உதாரணமாகும்.

681. ஒரு கிருஹஸ்த சிஷ்யர்:—"பகவானே! தேவரீர் ஈசுவரனைக் கண்டிருக்கிறதாகக் கேட்டிருக்கிறோம். நாங்களும் அவ்வாறு

ஈசுவரனைக் காணுமாறு கிருபை புரியவேண்டும். ஈசுவரனோடு உறவு கொண்டாடுவது எப்படி?"

பரமஹம்ஸர் :—" ஒவ்வொன்றும் ஈசுவரனுடைய இச்சையைப் பொறுத்துள்ளது. ஈசுவர தரிசனத்துக்குப் பாடுபட வேண்டியது அவசியம். ஏரிக்கரையில் உட்கார்ந்துகொண்டு, 'இந்த ஏரியில் மீன் இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டுமட்டு மிருந்தால் உன் கையில் மீன் வந்து விடுமா? மீன் பிடிப்பதற்கு வேண்டிய சாமக்கிரியைகளான தூண்டிற்கோல், கயிறு, முள், பசை இவைகளைக் கொண்டுவா. தண்ணீரில் சிறிது சோற்றுப் பசையைப் போடு; அப்போது ஆழத்திலிருந்து மீன் மேலே கிளம்பி உன்னருகில் வரும். நீ அதைப் பார்த்துப் பிடிக்கலாம். நீ ஒரு பிரயத்தனமும் செய்யாமல் சாந்தமாக உட்கார்ந்துகொண்டிருப்பாய்; உனக்கு ஈசுவரனை நான் காட்டவேண்டும்! நன்றாக இருக்கிறது! தயிரைத் தோய்த்து வெண்ணெயைக் கடைந்து உன் வாய்க்கு முன்னால் கொண்டுவந்து பிடித்துக்கொள்ள வேண்டுமாக்கும்! நான் மீனைப் பிடித்து உன் கைகளில் வைக்கவேண்டுமென்று கேட்கிறாய். உனது வேண்டுகோள் எவ்வளவு நியாயமில்லாதது என்பதைப் பார்."

682. நடுக்கடலில் செல்லும் கப்பலின் பாய்மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருக்கும் பக்ஷி, அலுத்துப்போய், வேறோரிடம் தேடுவதற்காகத் தனது ஸ்தானத்திலிருந்து நெடுந்தூரம் பறந்து சென்று பார்த்து, ஓரிடமும் காணாமல் களைத்துத் திரும்பவும் யதாஸ்தானத்துக்கே வருகின்றது. அதுபோல, சாதாரண பக்தன் ஒருவன், அனுபவம் முதிர்ந்த தன்னுடைய சற்குருவினுடைய உபதேசங்களின்படி நடப்பதில் அலுப்படைந்தவனாய், நம்பிக்கையும் குருவினிடம் பக்தியும் இழந்து, தன்னுடைய முயற்சியினாலேயே ஈசுவரனை அடையலாம் என்று வெளிப்புறப்பட்டுப் போவானாயின், பிரயத்தனம் முற்றுப்பெறாமல், திரும்பவும் அவன் தன் குருவினுடைய அருளையும் ஆசீர்வாதத்தையும் எதிர்பார்த்து அவரிடமே வருவது நிச்சயம்.

683. காற்றடிக்காமலிருக்கும் வரையில், உஷ்ணத்தைத் தணிக்க நாம் விசிறியைக் கொண்டு வீசிக்கொள்கிறோம். ஆனால் ஏழை பணக்காரர் என்ற பேதமில்லாது காற்றானது அடிக்கத் தொடங்கியதும் அனைவரும் விசிறியைக்கொண்டு வீசுவதை நிறுத்திவிடுகின்றனர். பகவானிடமிருந்து உதவி கிடைக்காதிருக்கும் வரையில் நாமே முக்தி அடையவேண்டிய முயற்சியில் இடைவிடாது பாடுபடவேண்டும். ஆனால் அதிருஷ்டவசத்தால் அந்த உதவி எவனுக்காவது கிட்டுமானால், அவன் தன் பிரயத்தனத்தை நிறுத்தி விடட்டும். இல்லையேல், நிறுத்தக் கூடாது.

684. காற்றடிக்கும்போது விசிறியை எறிந்து விடலாம். அதுபோல, பகவத் கடாக்ஷம் வரும்போது ஜப தபங்களை நிறுத்தி விடலாம்.

685. ஈசுவரன், குரு, பக்தர் இவர்களுடைய அருள் இருந்தாலுங்கூட இன்னொரு அருள் இல்லையாகில் ஜீவன் நாசமடையும். மேற்

கூறிய மூவகை அருளையும் ஒருவன் பெற்றபோதிலும், தனது மனத்தின் அருளைப் பெறுவிட்டால், அதாவது தான் முத்தி யடையவேண்டுமென்ற ஆசை அதற்கு இல்லாவிட்டால் அவை பயனைத் தரமாட்டா.

686. என்னதான் முயன்றாலும், ஈசுவரனுடைய கிருபைமட்டும் இல்லாது போனால் உனக்கு ஒன்றும் லபிக்காது. நீ ஈசுவரனை அடையமாட்டாய். ஆனால் அந்தக் கிருபை எளிதில் கிடைத்துவிடும் என்று நம்பாதே. உனது ஹிருதயத்திலிருந்து அகங்காரம் முழுவதும் நீங்க வேண்டும். "நான் கர்த்தா" என்ற எண்ணம் உன் மனத்திலிருந்தால் நீ ஒருபோதும் ஈசுவரனைக் காணமாட்டாய். பண்டக சாலையில் ஒரு காரியஸ்தன் இருக்கிறான். அப்பண்டக சாலையிலிருந்து ஏதாவது ஒரு பொருளைக் கொண்டுவந்து தரும்படி விட்டு எஜமானனிடம் சொன்னால், அவன், "பண்டக சாலையில் முகுந்தன் இருக்கிறான். அவனைக்கொண்டு வரச் சொல்லு; நான் போகவேண்டிய அவசியமில்லை" என்றே பதில் சொல்லுவான். "தானே கர்த்தா" என்று எவன் நினைக்கிறானோ அவன் உள்ளத்தில் ஈசுவரன் ஒருபோதும் தோன்றுவதில்லை.

687. ஈசுவரன் தனது கிருபையாலேயே தன்னைத் தோற்றுவிக்கிறான். அவன் ஞான ஸூர்யன். அவனுடைய ஒற்றைக் கிரணமே இவ்வுலகம் முழுமைக்கும் அறிவைக் கொடுத்துள்ளது. அதனால்தான் நாம் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளவும் பலவிதமான ஞானங்களைப் பெறவும் வல்லவர்களாய் இருக்கிறோம். அவன் தனது ஒளியைத் தனது திருமுகத்திலே திருப்பிக்கொண்டால் மட்டுந்தான் நம்மால் அவனைக் காணமுடியும்.

அத்தியாயம் 15

ஞானமார்க்கத்தின் துணைகள்

[க. குரு :—குரு யார்?—குரு ஏன்? குரு சிஷ்ய பாவம்.]

[உ. அவதார புருஷர் :—அவதார புருஷர் யார்?—அவரைக் காணும் அருமை—அவதார புருஷர் கடவுளே—அவதார புருஷர்களுக்கும் ஸித்த புருஷர்களுக்கும் உள்ள வேற்றுமை.]

க. குரு

குரு யார்?

688. யாருக்கு யார் குரு? ஈசுவரன் ஒருவனே ஜகத்குருவும் வழிகாட்டியுமாவான்.

689. தனது குருவைக் கேவலம் மனுஷ்யனுகக் கருதுபவனுக்குப் பிரார்த்தனையாலும் பக்தியாலும் என்ன பலனுண்டாகக் கூடும்? நமது குருவைக் கேவலம் மனுஷ்யரெனக் கருதக்கூடாது. ஈசுவரனைக் காண்பதற்கு முன்னுல், அத்திவ்ய தரிசனத்தின் முதல் அங்கமாகக் குருவைத்தான் சிஷ்யன் காண்கிறுன். பிறகு அந்தக் குருவே ஈசுவரனுக மாறி, ஈசுவர சொரூபத்தைக் காட்டுகிறுர். அப்பால் ஈசுவரனும் குருவும் ஒருவரேயென்று சிஷ்யன் தெரிந்து கொள்கிறுன். அவன் விரும்பும் வரங்களையெல்லாம் திவ்விய குரு அருளுவார். இம்மட்டோ! அவனை நிர்வாணமாகிய பரமானந்த சுகத்துக்கும் அழைத்துச் செல்வர். அன்றி, பக்தன் ஈசுவரன் என்ற சம்பந்தமுள்ள துவைத நிலைமையில் அவன் இருக்கவேண்டினும் அங்ஙனமே இருக்கலாம். சிஷ்யன் எதைக் கேட்டாலும் குரு அதை நிச்சயமாகத் தருகிறுர்.

690. மனுஷ்ய குருவானவர் மஹா மந்திரத்தை உனது காதில் மட்டும் உபதேசிக்கிறுர். தெய்வ குருவோ, ஆத்மாவுக்குள் சைதன்யத்தைச் செலுத்துகிறுர்.

691. குருவை ஒரு மத்தியஸ்தராகச் சொல்லலாம். நாயகி நாயகர்களைக் கடகன் சேர்த்து வைப்பதுபோல, ஈசுவரனையும் மனிதனையும் குரு சேர்த்து வைக்கிறுர்.

692. குருவானவர் மஹிமை வாய்ந்த கங்காநதிக்குச் சமானமாகிறுர். அந்நதியில் ஜனங்கள் குப்பைக் கூளங்களையும் அசங்கியங்களையும் எறிந்தபோதிலும் அதன் பவித்ரம் ஒருபோதும் குறைவதில்லை. அதுபோல நிந்தனைகளாலும் வசைகளாலும் குரு பாதிக்கப்படுவதில்லை.

693. வைத்தியர்களில் மூன்று வகையினர் இருப்பதைப்போல ஆசாரியர்களிலும் மூன்று வகையினர் இருக்கின்றனர். கூப்பிட்டபோது வந்து நோயாளியைக் கண்டு, நாடியைப் பார்த்து மருந்தைச் சொல்லிச் சாப்பிடும்படி கட்டளையிட்டுப் போகும் வைத்தியர்கள் ஒரு வகையினர். நோயாளி அம்மருந்தைச் சாப்பிட மறுத்தால், அவ்வைத்தியர்கள் அவன் விஷயமாக யாதொரு சிரமமும் எடுத்துக்கொள்வதில்லை. இவர்கள் அதம வைத்தியர்கள். இவர்களைப்போல சில ஆசாரியர்கள் தங்களுடைய உபதேச மொழிகளைக் கேட்டு அவைகளின்படி ஜனங்கள் நடந்தாலும் நடக்காவிட்டாலும் தாங்கள் யாதொரு கவலையு மற்றிருப்பார்கள்.

இரண்டாவது வகை வைத்தியர்கள், மருந்தைச் சாப்பிடும்படி நோயாளிக்குச் சொல்வதோடு நிற்காமல், அவன் சாப்பிட மறுத்தால், அவனோடு வார்த்தையாடி, அவனைத் தம் வழிக்குக்கொண்டுவரப் பார்ப்பார்கள். இவர்களைப்போல ஜனங்கள் நல்வழியிலும், பகவத் ப்ரேமையிலும், சத்தியத்திலும் நடந்தொழுக வேண்டுமென்பதற்காக நயமான வார்த்தைகளால் அவர்களைப் பலவிதத்திலும் திருத்த முயலும் ஆசாரியர்கள் இரண்டாவது வகையினர்.

உத்தமர்களும் மூன்றுவது வகையினருமான வைத்தியர்கள், நோயாளி தங்களுடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்காவிட்டால் பலவந்தமாயாவது அவனைத் தம் வழிக்குக் கொண்டுவருவார்கள். அவர்கள் நோயாளியின் மார்மீது மண்டி போட்டு உட்கார்ந்துகொண்டாயினும், அவன் தொண்டை வழியாக மருந்தைச் செலுத்துவார்கள். இதைப்போல, வேண்டுமானால் பலாத்காரத்தாலும் தமது சிஷ்யர்களைச் சன்மார்க்கத்தில் நடக்கச் செய்யும் ஆசாரியர்கள் சிலர் இருக்கின்றனர். இவர்கள்தாம் உத்தம ஆசாரியர்கள்.

குரு ஏன்?

694. நமக்குக் கொஞ்சம் கொஞ்சம் விஷயங்களைக் கற்பிக்கும் ஒவ்வொருவரையும் குருவென்று சொல்லாமல், ஒரே ஒருவரை மட்டும் குருவென்று சொல்லவேண்டிய அவசியமென்ன? முன்பின்னறியாத தேசத்திற்கு நீ போனால் அவ்விடங்களில் பரிசயமுள்ள ஒரு வழிகாட்டி சொல்கிறபடி நீ கேட்டு நடக்கவேண்டும். அப்படியில்லாமல் அங்கு பலபேர் சொல்கிறபடி கேட்கிறதாயிருந்தால் நிச்சயமாக நீ தடுமாறிப் போவாய். அதுபோல ஈசுவரனை அடையவேண்டிய முயற்சியில், அவரிடம் போகும் வழியைத் தெரிந்துகொண்ட ஒரு குருவினுடைய புத்திமதியைக் கடைப்பிடித்தொழுகவேண்டும்.

695. சதுரங்க விளையாட்டில் ஆடிக்கொண்டிருப்பவர்களைவிட ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எந்தக் காயை நகர்த்துவது சரியான ஆட்டமாகு மென்பதை நன்கு சொல்லக்கூடும். உலகத்திலுள்ள மனிதர்கள் தாங்கள் வெகு சமர்த்தர்கள் என்று எண்ணு

கின்றனர். ஆனால், பண ஆசை, கௌரவ ஆசை, விஷய சுகங்கள் இவைபோன்ற உலகப்பற்றுக்கள் அவர்களை விட்டபாடில்லை. விளையாட்டில் கலந்திருப்பதனால் சதுரங்கக் காயைச் சரியானபடி நகர்த்துவதற்குச் சாத்தியமில்லாது போகின்றது. உலகத்தைத் துறந்த பவித்ர புருஷர்கள் அதனுள் சம்பந்தப்பட்டிருப்பதில்லை. அவர்கள் சதுரங்க ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் போல்பவர்; விஷயங்களின் உண்மைச் சுபாவம் அவர்களுக்குத் தெரிகின்றது. உலகத்தில் உழலும் மனிதர்களைக் காட்டிலும் அவர்களே நன்றாக விஷயங்களைத் தீர்மானிக்கக்கூடும். ஆதலால் நல்வாழ்க்கையை விரும்புகிறவர்கள் ஈசுவரனைத் தியானித்து அவனை நேரில் கண்டவர்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஒரு விவகார விஷயமாக ஆலோசனை கேட்கவேண்டுமானால் நீ அந்தத் தொழிலைக்கைப்பற்றும் வக்கீல்களிடம் போவாயல்லவா? தெருவில் போகிறவன் சொல்லும் வார்த்தையை நீ கேட்கமாட்டாய் என்பது நிச்சயமன்றோ?

696. ஈசுவரனுடைய ரகஸ்யங்களை அறியவேண்டுமென்ற தீவிர புத்தி உனக்கு இருக்குமானால், அவ்வீசுவரனே, ஸத்குரு ஒருவரை உன்னிடம் அனுப்புவார். பக்தனே குருவைத் தேட வேண்டிய விஷயத்தில் உனக்குக் கவலையே வேண்டாம்.

697. மனங்கசிந்த பிரார்த்தனை, ஆழ்ந்த பக்தி, தீவிரமான மனம் இவைகளோடு எவன் ஈசுவரனிடம் போகமுடியுமோ அவனுக்குக் குரு வேண்டியதில்லை. ஆனால் இவ்வித அருள் தாகம் உடையவர் அருமையிலும் அருமை. ஆதலால்தான் குரு அவசியம் வேண்டியிருக்கிறது. குரு ஒருவராக இருப்பினும் உப குருக்கள் பலர் இருக்கலாம். கண்ட விஷயங்களை யெல்லாம் கற்பிப்பவர் உபகுருக்களாவர். மஹானான அவதூதருக்கு அப்படிப்பட்ட உபகுருக்கள் இருபத்து நான்குபேரிருந்தனர்.

குரு சிஷ்ய பாவம்

698. சமுத்திரத்தின் அடித்தரையில் கிடக்கும் முத்துச் சிப்பி, தனது இடத்தை விட்டு மேலே கிளம்பி ஸ்வாதி நக்ஷத்திரம் உச்சமாகும் ஸமயத்தில் பெய்யும் மழைத் தண்ணீரைக் கிரஹிக்க வருகிறது. அதியாச்சரியமான ஸ்வாதி மழையின் ஒரு துளியானது தன்மீது விழும் வரையில், அது தனது வாயை நன்றாய்த் திறந்துகொண்டு ஜலத்தின் மீது மிதக்கிறது. அப்பால் அது சமுத்திரத்தின் அடித்தரைக்கு மூழ்கிப்போய், அம்மழைத்துளி ஓர் அழகிய முத்தாகப் பரிணமிக்கும் வரையில் அங்கேயே கிடக்கின்றது. அதைப்போல உண்மையான சிரத்தையுடைய சிலர் நித்யானந்தமாகிய கதவைத் திறக்கக்கூடிய மூல மந்திரத்தை ஸத்குருவினிடமிருந்து கிரஹிக்க வேண்டுமென்று ஊரூராய்ப் போய்க்கொண்டிருக்கின்றனர். இப்படிப் போகும் ஒருவனுக்கு அதிர்ஷ்டவசத்தில் குரு எதிர்ப்பட்டு, அவர் மூலமாகப் பந்தங்களை யறுக்கக்கூடிய மூலமந்திரப் பிராப்தியானால், உடனே அவன் ஜன

ஸமூகத்தைத் துறந்து, தன் மனமாகிய குகைக்குள் நுழைந்து, நித்ய சாந்தத்தைப் பெறும்வரையில் அங்கேயே இருப்பான்.

699. அப்படிப்பட்ட குருவுக்கு சாஸ்திர ஞானம் இல்லாததாகத் தோன்றினாலும் பயப்படவேண்டாம். அவர் பண்டிதர் அல்லரென வும் அவன் கிலேசிக்கவேண்டாம். ஆத்ம ஞானத்தில் அவருக்கு ஒரு போதும் தாழ்ச்சியிராது. ஏட்டுக் கல்வியை யெல்லாம்விட மிக மேம் பட்ட திவ்ய ஞானத்தில் அவருக்குப் பூர்ணமான பாண்டித்யமிருக்கும்.

700. தனது குருவின் குணதோஷங்களைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்த ஒருவனை நோக்கிப் பகவான் சொன்னதாவது :—“ஏன் இந்தப் பிரயோசனமற்ற வாக்குவாதத்தில் காலத்தை வீணாகக் கழிக் கிறாய்? முத்தை எடுத்துக்கொண்டு சிப்பியை அப்பால் எறிந்து விடு. குரு உனக்கு உபதேசித்த மந்திரத்தைமட்டும் தியானம் பண்ணு. அவருடைய குற்றங் குறைகளைப்பற்றிச் சிந்தியாதே” என்பதாம்.

701. உனது குருவைப்பற்றிய நிந்தனை மொழியை நீ கேட்டுக் கொண்டிராதே. அவர் உனது தாய் தந்தையருக்கும் மேற்பட்டவர். உன் எதிரிலேயே உனது தாய் தந்தையரை யாரேனும் நிந்தித்தால் நீ பொறுத்துக்கொண்டிருப்பாயா? அவசியமானால், சண்டை போட்டாயி னும் உனது குருவின் புகழைக் காப்பாற்று.

702. சிஷ்யனானவன் தனது குருவின் குணதோஷங்களைப் பரிசீலனை செய்யக்கூடாது. குருவின் வார்த்தையின்படி அவன் நடக்க வேண்டும். “எனது குரு கள்ளுக்கடைக்குப் போகிறவரானாலும் அவர் எனக்குப் பவித்ரரான நித்யானந்தரே ; எனது குரு குடிகாரரும் பாபிகளும் கூடுமிடங்களுக்குப் போகிறவரானாலும் அவர் எனக்குக் குற்றமற்ற பவித்ர குருவாகவே இருக்கிறார்” என்பது வங்கதேசத்தில் வழங்கும் ஒரு பழமொழி.

703. உண்மையான பக்தனுக்கு, சாதாரணப் பொருள்களும் பகவானை நினைப்பூட்டி மெய்ம்மறக்கச் செய்யும். ஒரு நாள் ஸ்ரீ சைதன்ய தேவர், மண்ணால் ஒருவகை மிருதங்கம் செய்து பிழைத்து வந்த ஜனங் கள் வாழும் ஊர்வழியாகச் சென்றார். “இவ்வூர் மண்ணு, மிருதங்கம் செய்ய உபயோகப்படுகிறது?” என்று கூறிக்கொண்டு மெய்ம்மறந்து சமாதியில் நின்றுவிட்டார். அந்த மண்மிருதங்கம் பஜனைக் காலங்களில் வாசிக்கப்படுகின்றது. பஜனையோ பகவானது புகழைப் பாட ஏற்பட் டது. பகவான் அழகுக்கெல்லாம் அழகானவர் ; ஆத்மாக்களுக்கெல் லாம் அந்தராத்மா என்ற எண்ணங்கள் மனத்தில் எழுந்து, பகவானது நினைப்பிலே ஈடுபட்டுவிட்டார். குருவினிடம் பக்தி பூண்டவர்கள் குருவின் உறவினரைக் கண்டதும் குருவின் ஞாபகம் கொள்கின்றனர். அதுமாத்திரமன்று ; குருவின் கிராமத்து மக்களைக் காணும்போது குருவின் எண்ணம் சீடன் மனத்தில் எழுகின்றது. அவர்களை அடி பணிந்து வணங்குகிறான்; பாததூளியைத் தலைமேல் தரிக்கிறான் ; வேண் டிய சேவையனைத்தும் செய்கிறான். இந்த நிலைமையை யடையும் சீடன்

குருவினிடம் குறைகள் ஒன்றும் காணமுடிகின்றதில்லை. 'என் குருநாதன் செல்லத்தகாத விபசாரிகள் வீடு சென்றாலும் என் குருநாதனே. அவனே எனது உயிரும் உடலும்' என்கிறான். மனிதன் நன்மையும் தீமையும் கலந்தவனுவான் என்றாலும் மஞ்சட்காமாலே பிடித்தவன் எல்லாவற்றையும் மஞ்சளாகக் காண்பதுபோல, சிஷ்யன் தன் பக்திப் பெருக்கால் தனது குருநாதனே மனிதனுகக் காணுமல் கடவுளாகக் காண்கிறான். பக்தியின் மிகுதியால் எல்லாமும் கடவுளே என்று அறியப் பெறுகிறான். அவனே குருவாகவும், தகப்பனுகவும் தாயாகவும், மனிதனுகவும் மிருகமாகவும், சத்தாகவும் அசத்தாகவும் தோன்றியிருப்பதாக உணருகிறான்.

உ. அவதார புருஷர்

அவதார புருஷர் யார்?

704. அவதார புருஷர் ஈசுவரனுல் அனுப்பப்படும் மனுஷ்ய தூதர் ஆவர். அவர் ஒரு பெரிய சக்ரவர்த்தியின் பிரதிநிதி போன்றவர். நெடுந்தூரத்திற்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் கலகம் நிகழும்போது அதை அடக்குவதற்கு அரசன் தனது பிரதிநிதியை அனுப்புவதுபோல, உலகத்தில் எங்கேயாவது தர்மம் மலினமடையும்போது அங்கு தர்மத்தைப் பாதுகாத்து அபிவிருத்திக்குக் கொண்டுவருவதற்காக ஈசுவரன் தனது அவதார புருஷனே அனுப்புகிறான்.

705. இராமபிரான், ஸீதாதேவி, கிருஷ்ணன், ராதை இவர்கள் சரித்திர பூர்வமானவர்க ளல்லரென்றும்,சும்மா உருவகப்படுத்திக் கூறப்பட்டவர்களே யென்றும், சாஸ்திரங்கள் வெறும் அத்யாத்மிக அர்த்தங்களே மட்டுமே உடையன என்றும் நினைக்காதே. அவர்கள், உன்னைப் போலவே, ஊனும் உதிரமும் பெற்ற சரீரத்தை யுடையவர்களாக இருந்தனர். ஆனல் அவர்கள் தெய்விகம் வாய்ந்தவர்களாதலால் அவர்களுடை வாழ்க்கைகளேச் சரித்திர பூர்வமாகவும் ஆத்மீய உண்மைகளே விளக்குவனவாகவும் கொள்ளலாம். ஸமுத்திரமும் அதன் அலேகளும் போல, பிரம்மமும் அவதாரங்களுமாகும்.

706. உலகில் தோன்றிய அவதாரங்களெல்லாம் ஒரே ஈசுவரனே. ஈசுவரன் பிரம்மமாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்து ஓரிடத்தில் கிளம்பும் போது கிருஷ்ணன் எனவும், இன்னெருதரம் மூழ்கி வேறிடத்தில் கிளம்பும்போது கிருஸ்து எனவும் அழைக்கப்படுகிறான்.

707. சச்சிதானந்தமாகிற விருக்ஷத்தில், ராமர்கள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், கிருஸ்துக்கள் முதலோராகிய பூங்கொத்துக்கள் கணக்கற்றுத் தொங்குகின்றன. அவர்களுள் அவ்வப்போது இரண்டொருவர் பூமியில் அவதரித்துப் பிரம்மாண்டமான மாறுதல்களேயும் வேறுபாடுகளேயும் உண்டாக்குகின்றனர்.

708. திவ்விய குணங்களுடனும் திவ்விய சக்திகளுடனும் அவதார புருஷர்கள் மண்ணில் அவதரிக்கின்றார்கள். அவர்கள் தாழ்ந்த நிலையிலிருந்து மிகவுயர்ந்த எந்தச் சமாதி நிலையிலும் எளிதில் புகுவார்கள்; திரும்புவார்கள். அரசன் அரண்மனையில் அந்நியர் ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்குந்தான் போகமுடியும். அரசனுடைய குழந்தையோ, (இளவரசன்) வீட்டின் எந்த மூலைக்கும் போய்வரலாம்.

709. அவதார புருஷர்களிடம் இருக்கும் அகங்காரம் பெயரளவினதே. இவ்வித மெல்லிய தூய அகங்காரத்தின் மூலமாக பகவான் வெளிப்படையாகத் தம்மைத் தோற்றுவிக்கின்றார். உதாரணமாக, ஒருவன் ஒரு சுவரின் ஒரு பக்கம் நிற்கிறதாகவும் மற்றப் பக்கம் எல்லையற்ற சமவெளி யிருப்பதாகவும் நினைத்துக்கொள். அந்தச் சுவரில் சிறு துவாரம் இருக்குமானால் அதன் மூலமாக அந்தச் சமவெளியைக் காணமுடியும். துவாரம் பெரிதாகவிருந்தால் அவ்வழியாகவே அந்த எல்லையற்ற சமவெளிக்கு நுழைந்து போய்விடலாம். அவதார புருஷர்களுடைய அகங்காரம் துவாரமுள்ள சுவரை ஒத்திருக்கின்றது. சுவருக்கு இப்பக்கம் இருந்தாலும் அவர்கள் மறுபுறமிருக்கும் எல்லையற்ற பிரதேசத்தைக் காண்கின்றார்கள். அதாவது அவர்கள் எப்போதும் யோகத்திலேயே இருப்பதால் உடம்பைப் பெற்றிருந்தாலும் சரீரத்திற்கு அதீதமான பரவெளியையும் சமாதியாகிய துவாரத்தின் மூலமாகப் பார்த்த வண்ணமாகவே இருக்கின்றனர். துவாரம் பெரிதாயிருந்தால், அதாவது உயர்ந்த சமாதிகளில், வேண்டுமானால் அவ்விடம் செல்லவும் மறுபடியும் திரும்பி வரவும் அவர்களால் முடிகின்றது.

அவதார புருஷரை அறியும் அருமை

710. அவதார புருஷர்களை அறிந்துகொள்வது அரிதான காரியமாகும். எல்லையற்ற அகண்ட வஸ்து எல்லைக்குட்பட்ட கண்டத்துள் அடங்கி இருப்பதற்கு ஒப்பாகும் அவர்களது வாழ்க்கை.

711. ஸ்ரீராமபிரான் இவ்வுலகில் அவதரித்தபோது, ஏழு ரிஷிகள் மாத்திரமே, அவர் ஈசுவராவதாரமென்பதைத் தெரிந்துகொண்டிருந்தனர். எனவே இவ்வுலகில் எப்போது ஈசுவரன் வந்தபோதிலும் சரியே, சிலர் மட்டுமே அவனுடைய தெய்விக சுபாவத்தைத் தெரிந்துகொள்வர்.

712. அவதார புருஷர் ஒருவரை அவருடைய உற்றார் உறவினர் கண்ணியப்படுத்தாததற்குக் காரணம் என்ன? செப்பிடுவித்தைக்காரனுடைய ஜாலவேடிக்கைகளைக் காண அவனுடைய உற்றார் உறவினர் வந்து கூடுவதில்லை. அவனுடைய விநோதங்களைக் கண்டு அதிசயித்து நிற்பவர்கள் அந்நியர்களேயாவர்.

713. வஜ்ரவாதூல விருக்ஷத்தின் விதைகள் அம்மரத்தின் அடியிலேயே விழுவதில்லை. அவைகள் காற்றினால் வெகுதூரத்துக்கு அப்பால் கொண்டுபோகப்பட்டு, அங்கே முளைக்கின்றன. அதுபோல ஓர்

அவதார புருஷரின் உபதேசங்கள் அவருடைய ஜனனஸ்தானத்துக்குச் சற்றுத் தூரத்தில் உள்ளவர்களால்தான் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அங்குள்ளவரே அவரைப் பாராட்டுகின்றனர்.

714. தீபம் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை விளக்கிக் காட்டுமாயினும், அதனடியில் எப்போதும் இருட்டாகத்தான் இருக்கும். அதுபோல, அவதார புருஷருக்கு வெகு சமீபத்தில் இருப்பவர்கள் அவரைத் தெரிந்துகொள்வதில்லை. தூரத்திலுள்ளவர்கள் அவ்வவதார புருஷருடைய ஆத்ம ஜோதியாலும் அஸாதாரணமான சக்தியாலும் மனங் கனிந்து இன்பமுறுகின்றனர்.

715. யானைக்கு வெளியே தோன்றும் தந்தமும் உள்ளே இருக்கும் பற்களுமாக இரண்டுவகைப் பற்களிருக்கின்றன. அவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா போன்ற அவதார புருஷர்கள் சாதாரணமான வெளித்தோற்றம் உள்ளவர்களாய், எல்லாருடைய பார்வைக்கும் மனுஷ்யரீதியை உடையவர்களாகப் புலப்படுகின்றனர். ஆயினும் அவர்கள் கர்ம வசத்துக்கு வெகுதூரம் அப்பாற்பட்டவர்களாகிப் பரம சாந்தியில் நிலைத்திருக்கின்றனர்.

அவதார புருஷர் கடவுளே

716. ஈசுவரன் அனந்தன்; ஸர்வசக்திமான். அவன் அருள் மயமான தனது தெய்விக சக்தியை மானிட சரீரத்தில் தோற்றுவித்து, நம்மிடையே ஓர் அவதார புருஷனாகத் தோன்றத் திருவுளங் கொள்ளலாம். ஈசுவராவதாரத்தினின்றும் அருள் வெள்ளம் பெருகிப் பக்தர்களை இன்புறுத்துகின்றது.

வார்த்தைகளால் இவ்விஷயத்தை விளக்கமுடியாது. ஞானக் கண்ணால்தான் இந்த உண்மையைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இதை நம்பவேண்டுமானால், ஈசுவரனை நேரில் காண வேண்டும்.

ஆயினும் உவமை மூலமாக இவ்விஷயத்தை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். ஒருவன் ஒரு பசுவின் கொம்பு, கால், வால், மடி இவைகளில் ஒன்றைத் தொடுவதாக வைத்துக்கொள்வோம். இப்படித் தொடுவது அந்தப் பசுவைத் தொடுவதாகாதா? மானிடர்களான நமக்குப் பசுவினிடத்து முக்கியமானது அதன் மடியிலிருந்துவரும் பாலே. திவ்விய பிரேமையாகிற பாலானது நமக்கு ஈசுவராவதாரத்தினிடமிருந்து பெருகுகின்றது.

717. ஈசுவரனை யாரால் முற்றிலும் அறியக்கூடும்? அந்த பாக்கியம் நமக்கு இல்லை; நாம் அவனைப் பூர்ணமாக அறியவேண்டுமென்பதுமில்லை. அவனைக் கண்டு, அவன் ஒருவனே உண்மைப் பொருள் என்று உணர்ந்தால் போதுமானது. ஒருவன் புண்ணியநதியான கங்கைக்கு வந்து அதன் ஜலத்தைத் தொடுவதாக வைத்துக்கொள்வோம். அப்

போது அவன் "கோமுதியிலிருந்து கங்காசாகரம் வரையிலுள்ள (அதாவது உற்பத்தி முதல் சங்கமம் வரையிலுள்ள) புண்ணிய நதியின் தர்சனத்தாலும் ஸ்பர்சத்தாலும் கிருதார்த்தனுனேன்" என்று சொல்வான்.

718. நீ ஈசுவரனைத் தேடுகிருயா? அப்படியானுல் அவனை மனிதனிடம் தேடு. அவனுடைய தெய்விகம் மற்றைப் பொருள்களிடத்துக் காட்டிலும் மனிதனிடமே விசேஷித்துள்ளது. ஈசுவரப் பிரேமையால் கரைகடந்தோடும் உள்ளத்தையுடைய மனிதனைத் தேடிப்பார்; ஈசுவரனிடத்திலேயே வாழ்ந்து உழன்று நிலைபெறும் மனிதனை, அதாவது ஈசுவரப் பிரேமையால் பித்தேறிய ஒருவனைத் தேடு. அப்படிப்பட்டவனிடத்தில் ஈசுவரன் தோன்றுவான்.

719. ஈசுவரன் அகண்டாகாரன்; லீலையும் அவனுடையதே. லீலையானது ஈசுவரலீலை, தேவலீலை, ஜகத்லீலை, நரலீலை என நால் வகைப்படும்.

ஈசுவராவதாரம் நரலீலையில் சாத்யமாகிறது. இந்த நரலீலையின் சுபாவத்தை நீ அறிவாயா? அது, விசாலமான உயர்விடத்திலிருந்து பெருகும் ஜலமானது அகன்ற கால்வாய் மூலம் வெள்ளமாக ஓடுவதற்குச் சமானமாகும். சச்சிதானந்தத்தின் சக்தியானது மனித ரூபத்தில் வெளிப்பட்டுத் தோன்றுவது நரலீலை. அவதார புருஷர்களை அனைவரும் அறிந்து கொள்ளமாட்டார்கள். ஸ்ரீராமபிரான் அவதார புருஷரென்பதைப் பரத்வாஜர் போன்ற ஏழு ரிஷிகள் மட்டுமே தெரிந்துகொண்டனர். மனிதனுக்கு உண்மை ஞானத்தையும் பக்தியையும் போதிப்பதற்காக ஈசுவரன் மனுஷ்ய ரூபனுக அவதாரம் செய்தருளுகிருன்.

அவதார புருஷர்களுக்கும் ஸித்த புருஷர்களுக்கும் உள்ள வேற்றுமை

720. அனேக காலமாக உபயோகத்திலிராததினுல் தூர்ந்து போன கிணற்றின் மேற்பரப்பிலிருந்து மண்ணையும் குப்பையையும் எடுத்துவிட்டு அக்கிணற்றை வெளிப்படுத்தும் சிற்பியைப் போன்றவர் ஸித்தபுருஷர். அவதார புருஷரோவெனில், முன்னுல் ஜலமே இராத இடத்தில் புதிதாகக் கிணற்றை வெட்டும் இன்ஜினீயர் போல்வர்; முன்னவர், உஜ்ஜீவன ஜலத்தைச் சமீபத்தில் உடையவர்களை மட்டுமே பந்தங்களினின்றும் விடுவிப்பார்கள். அவதார புருஷர்கள், பாலைவனம் போல மிகவும் வறண்டு, பக்தி லவலேசமுமில்லாத மனத்தை யுடையவனையும் விடுவிப்பார்கள்.

721. கடல் பொங்கும்போது, ஆறுகளும் ஓடைகளும் நிறைந்து அருகிலுள்ள பூமியெல்லாம் ஜலமயமாகின்றது. ஆனுல் மழை ஜலமோ வழக்கமான வாய்க்கால்கள் வழியே ஓடிப்போய் விடுகின்றது. லோக ஸம்ரக்ஷகர் அவதரிக்கும்போது அவருடைய அருளால் அனைவரும்

கிருதார்த்தராகின்றனர். ஸித்தபுருஷர்களோவெனில், தங்களைமட்டுமே சிரமத்தாலும் தவத்தாலும் காப்பாற்றிக்கொள்ளக்கூடும்.

722. பெரிய மரமொன்று ஆற்றில் மிதந்து போகும்போது அதன்மீது அநேகமாயிரம் பக்ஷிகள் இருந்தபோதிலும், அது தண்ணீரில் அமிழ்ந்துபோவதில்லை. ஆனால், மிதந்து செல்லும் நாணல் ஒன்று ஒரே ஒரு காக்கையின் கனத்தாலும் அமிழ்ந்துபோம். அதுபோல, லோக ஸம்ரக்ஷகர் அவதரிக்கும்போது அவரைச் சரணமடைந்து கடைத்தேறுபவர் கணக்கற்றவர். ஸித்தரோவெனில் தம்மை மட்டும் வெகு சிரமப்பட்டு உய்வித்துக்கொள்வர்.

723. கங்கையில் ஓடும் பெரிதும் வலிதுமான நீராவிக் கப்பலொன்று, அதன் பின்னே இணைக்கப்பட்டுள்ள சிறு படகுகளையும் தோணிகளையும் இழுத்துக்கொண்டு ஜலத்தின்மீது வெகு வேகமாகப் போவதுபோல, லோக ஸம்ரக்ஷகர் அவதரிக்கும்போது, ஆயிரக்கணக்கான ஜனங்களை,மாயையாகிற ஸமுத்திரத்தைத் தாண்டுவித்து முக்தியாம் கரையைச் சேர்ப்பிக்கிறார்.

724. ஒரு ரயில்வே இன்ஜின் தான் நகர்ந்துபோய்ச் சேரவேண்டிய இடத்தை யடைகின்றதல்லாமல், தன் பின்னால் நீளமாய் இணைக்கப்பட்டிருக்கும் சுமையேற்றிய அநேக வண்டிகளையும் இழுத்துச் செல்கின்றது. அவதார புருஷர்களும் அப்படியேதான். பாபமூட்டைகளைச் சுமக்கும் மனிதர்கள் ஆயிரக் கணக்கானவர்களை ஸர்வேசுவரனுடைய ஸந்நிதானத்தில் கொண்டு சேர்க்கின்றனர்.

725. சாதாரண காலங்களில் கிணறுகளில் அதிக ஆழத்திலிருந்து வெகு பிரயாசையுடன் ஜலம் கிடைக்கின்றது. ஆனால் மழைக்காலத்தில் நாடெங்கும் தண்ணீர் நிறைந்திருக்கும்போது எளிதில் கிடைக்கும். அதுபோல சாதாரண காலங்களில், ஈசுவரனைக் காண்பதற்குப் பிரார்த்தனை தவம் முதலியவைகளைச் செய்து வெகுவாகச் சிரமப்படவேண்டியிருக்கிறது. ஆனால் பூமியில் ஈசுவரன் அவதரிக்கும்போது எங்கும் அவனைக் காணலாம்.

726. ஓர் இடத்தைச்சுற்றி உயர்ந்த சுவர் எழுப்பப்பட்டிருந்தது. வெளியிலிருந்த ஜனங்களுக்கு அது எப்படிப்பட்ட இடமென்று தெரிந்துகொள்ள வழியில்லை. ஒரு சமயம் ஏணியை வைத்துச் சுவரேறி உள்ளே என்ன இருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டுமென நால்வர் நிச்சயித்தனர். முதல் மனிதன் சுவரின்மேல் ஏறி நின்றதும், "ஹா ஹா ஹா" என்று சிரித்துவிட்டு உள்ளே குதித்தான். இரண்டாமவனும், மூன்றுமவனும் அப்படியே உரக்கச் சிரித்துவிட்டு உள்ளே குதித்துவிட்டனர். கடைசியாக நான்காமவன் சுவரின்மேல் ஏறியதும், ருசியுள்ள பழங்கள் நிறைந்த மனோஹரமான தருக்கள் அடங்கிய அழகிய பெரிய தோட்டம் ஒன்று தன்முன்னிருப்பதைக் கண்டான். உள்ளே குதித்து இன்பம் அனுபவிக்க வேண்டுமென்ற விருப்பம் அவனுக்கு வெகுவாக இருந்தும் அதை அவன் அடக்கிக்கொண்டு, ஏணியின் வழியாகக் கீழே இறங்கி

அந்த மகிமை வாய்ந்த தோட்டத்தைப்பற்றிய சந்தோஷ சமாசாரத்தை வெளியிலுள்ளவர் எல்லாருக்கும் தெரியப்படுத்தினன். பிரம்மம்என்பது அந்தச் சுவரெழுப்பிய தோட்டத்துக்குச் சமானம். பிரம்மத்தைக் காண்பவன் தன்னை மறந்து அதனுடன் கலந்து கொள்வதற்காகத் தலை கால் தெரியாமல் மூழ்கிவிடுகிறான். இத்தகையோர் பரிசுத்தர்களும் உலக பந்தங்களினின்று விடுபட்ட மஹான்களுமாவர். ஆனால், லோக ஸம்ரக்ஷகர்கள் யாவரெனில், ஈசுவரனைத் தரிசித்து, அப்படிப்பட்ட தெய்விக தரிசன இன்பத்தைத் தம்மோடு மற்றவர்களும் பெற்று அனுபவிக்க வேண்டுமென்னும் கருத்துடையவர்களாய், தாங்கள் மோக்ஷம் அடைய நினையாது, தவிக்கும் ஜன ஸமூகத்துக்கு உபதேசம் செய்து, அவர்கள் அடையவேண்டிய பதவியின் மார்க்கத்தைக் காட்டுவதற்காகப் பிறவித்துன்பங்களை வேண்டுமென்றே மறுபடியும் மறுபடியும் அனுபவிப்பவர்களாவர்.

727. வாணவேடிக்கையில் ஒருவிதமான சட்டியிலிருந்து முதலில் ஒருவகைப் புஷ்பமும், பின்னர் அடுத்தடுத்து வேறு வேறு வகைப் புஷ்பங்களும் வெளிவருவதனால் அச்சட்டியில் கணக்கற்ற வகைப் புஷ்பங்கள் உள்ளனபோலத் தோன்றுகிறது. அதுபோல அவதார புருஷர்களும் பல மகிமைகளை உடையவர்கள். நிற்க, கொளுத்தினவுடன் சற்று நேரம் எரிந்து பின்னர் அவிந்துவிடுகிற இன்னொரு வகைப் புஷ்பச் சட்டியுமுண்டு. இதைப்போல, ஸாதாரண ஜீவர்கள் நெடுநாள் தவத்தின் பயனாய்ச் சமாதியை அடைந்து, அதினின்றும் திரும்பி வராமலிருப்பதும் உண்டு.

728. கடவுள் ஏன் மனித வடிவுடன் அவதாரம் செய்கின்றார்? பூரண தெய்வத்தன்மையை மனிதனுக்குக் காண்பிக்கவே பகவான் அவதாரம் செய்கின்றார். இப்பகவத் அவதாரங்கள் மூலமாக மனிதன் கடவுளோடு பேசுகின்றான்; கடவுளின் திருவிளையாடல்களை அவனால் காணவும் முடிகின்றது. பகவான் தமது ஒப்பற்ற திவ்யாநந்தத்தைத் தாமே முழுதும் அனுபவிப்பதுபோலுள்ளது இப்படி அவதாரங்கள் எடுப்பது. புஷ்பத்தின் ஒரு பாகத்தில்தான் சிறிது தேன் உள்ளது. அதேபோல பகவானது அற்ப பாகந்தான் பக்தர் மூலமாகவும் மகான்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது. புஷ்பத்தை உறிஞ்சினால் ஒரு சிறிது தேன்தான் கிடைக்கும். ஆனால் அவதார புருஷர்களிடத்திலோ 'எல்லாம் தேனே'; அவர்கள் ஆநந்த வடிவினரே; இன்ப சொரூபமே.

729. அவதார புருஷரால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை. ஜீவனையும் ஆத்மாவையும் பற்றின சூக்ஷ்மமான பிரச்னைகளையெல்லாம் அவர் வெகு சுலபமாகத் தீர்த்துவிடுகிறார். அவருடைய போதனைகளை ஒரு சிறு குழந்தைகூடத் தெரிந்து கொள்ளும். அவர், கற்பகோடி காலங்களாகச் சேர்ந்துள்ள அக்ஞானத்தை அகற்றும் ஒளியையுடைய திவ்விய ஞானஸூர்யராவார்.

730. சிற்சில வேளைகளில் "சந்திர சூரிய ஜோதி" யென்று சொல்லக்கூடிய ஒருவகைக் கலவை வெளிச்சம் தோன்றுகிறது. சுத்த பக்தியும் சுத்த ஞானமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற சைதன்ய சுவாமியைப்போன்ற அபூர்வமான அவதார புருஷர்களை இந்த வெளிச்சத்துக்குச் சமானமாகச் சொல்லலாம். இது சூரியனும் சந்திரனும் ஒரே சமயத்தில் ஆகாயத்தில் தோன்றுவது போலாகும். ஒரே மனிதனிடத்தில் ஞானமும் பக்தியும் கூடியிருப்பது, மேற் கூறிய உதாரணத்தை முற்றிலும் ஒத்திருக்கும்.

731. பகவத் பக்திகொண்ட பரிசுத்த பக்தர்களுக்காகவே பகவான் உலகத்தில் அவதாரம் செய்கின்றார்.

732. அவதார புருஷரோடு வருபவர்கள் நித்தியமுக்தர்களாயாவது, கடைசி ஜன்மம் எடுத்தவர்களாயாவது இருப்பார்கள்.

அத்தியாயம் 16

ஞானமும் பக்தியும் கருமமும் கடவுளும், கடவுளைக் காணலும்

[க. ஞானமார்க்கம் : ஞானயோகம் என்றால் என்ன ?—ஞான யோகத்தின் நெறி—ஞானயோகத்தின் கடினம்.

உ. பக்திமார்க்கம் : பக்தியும் அது வளரும் வழியும்—பக்தியும் உலக அன்பும்—பக்தியின் அடையாளங்கள்—பக்தியின் படிகளும் நிலைகளும்—பராபக்தி அல்லது பிரேமை—கோபிகளின்பக்தி—விராஹமும் மஹாபாவமும்.

ங. பக்தியும் ஞானமும் : பக்தியும் ஞானமும் முடிவில் ஒன்றே —பக்தியே ஞானத்துக்கு வழிகாட்டும்—ஞானியின் மனோ நிலைக்கும் பக்தனின் மனோ நிலைக்கும் வேறுபாடு உண்டு.

ச. கருமமார்க்கம் : கருமயோகம் என்றால் என்ன ?—கரும யோகத்துக்குக் காப்பாக அமையும் பக்தி—அன்புடன் செய்யப்படும் பணி ஆராதனையாகும்—கருமம் ஒரு சாதனமேயன்றி முடிவில் எய்த வேண்டிய நிலையன்று—கருமமும் கருமமின்மையும்]

க. ஞான மார்க்கம்

ஞானயோகம் என்றால் என்ன ?

733. ஞானயோகம் என்பது ஞானத்தின் உதவியால் ஈசுவரனுடன் கலத்தலாம். விசுத்த ஸ்வரூபியாகிய பிரம்மத்தை அடைவது தான் ஞானியின் நோக்கம். அவன் மாயைப் பொருள்களை யெல்லாம், “இதல்ல இதல்ல” என்று சொல்லிப் புறக்கணித்து, கடைசியாய் மாயை இது, உண்மை இது என்ற விசாரம் அடியோடு அகன்றொழியும் பதவியைப் பெறுகிறான். அப்போதுதான் அவனுக்கு ஸமாதி நிலையில் பிரம்ம தரிசனம் உண்டாகிறது.

734. இருட்டறையில் ஒரு திருடன் புகுந்து அங்குள்ள பொருள்களையெல்லாம் தடவிப் பார்க்கிறான். ஒரு மேஜையைத் தொட்டதும், ‘இதன்று’ என்று சொல்லிக்கொண்டு அப்பால் போகிறான். அடுத்து, வேறொரு பொருள்—அதாவது ஒரு நாற்காலி என்று வைத்துக்கொள்வோம்—எதிர்ப்படுமானால், ‘இதன்று’ என்று மறுபடியும் சொல்லிக் கொண்டு, இப்படியே ஒவ்வொரு வஸ்துவாகத் தள்ளிவிட்டு, தான் தேடி வந்த பொருள்மீது கவனமாகப் போகிறான். கடைசியாகப் பணப் பெட்டியின்மீது கையை வைத்ததும், ‘இதோ அகப்பட்டுவிட்டது’

என்று சொல்லிக்கொள்கிறான். அப்பால் அவன் மறுபடியும் தேடப் போவதில்லை. அதுபோலவேதான் பிரம்மத்தைத் தேடும் முயற்சியும்.

735. யுத்தியினால் பெறப்படும் ஞானம் ஒருவகையானது என்பதையும், தியானத்தினால் வரும் ஞானம் முற்றிலும் வேறான தென்பதையும், ஈசுவர தரிசனத்தால் அதைவிட முற்றிலும் வேறான ஞானம் உதயமாகிற தென்பதையும் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

736. குணத்தாலும் அளவாலும் ஞானம் வேறுபடும். முதலாவது சாதாரண ஜனங்களுடைய—அதாவது உலகவாழ்க்கையிலிருக்கும் மனிதர்களுடைய—ஞானம். இது அவ்வளவாகச் சக்தியையுடையதன்று. ஓர் அறையின் உட்புறத்தைமட்டும் பிரகாசிப்பிக்கும் தீபச் சுடரை இந்த ஞானத்துக்கு உவமை கூறலாம். பக்தனுடைய ஞானம் இன்னும் அதிகமாகப் பிரகாசிக்கும் தீபமாகும். அறையின் உள்ளும் வெளியிலும் இருக்கும் பொருள்களைக் கட்புலனாக்குகிற சந்திரனுடைய வெளிச்சத்தை இதற்குச் சமானமாகச் சொல்லலாம். அவதார புருஷருடைய ஞானமோ இன்னும் பன்மடங்கு சக்தியை யுடையதாகும். அதற்குச் சூரியனைத்தான் இணையாக்கலாம். அவ்வவதார புருஷர் கற்பகோடி காலமாகச்சேர்ந்துள்ள அஞ்ஞான இருளை அகற்றக்கூடிய பிரகாசத்தையுடைய தெய்விக ஞான சூரியராவர்.

ஞானயோகத்தின் வழி

737. முதலில் உன்னையே அறிந்துகொள். அப்பால் உனது அனாத்மத் தன்மையையும் உனக்கும் உன் அனாத்மாவுக்கும் அதிபதியான ஈசுவரனையும் நீ தெரிந்துகொள்வாய். 'நான்' என்பது என்ன! அது என்னுடைய கையா, காலா, தசையா, அல்லது தசைநாரா ?—ஆழ்ந்து யோசித்துப்பார். அப்போது 'நான்' என்ற வஸ்துவே இல்லையென்பதை அறிவாய். வெங்காயத்தின் மேல்தோலை எவ்வளவு உரித்தாலும் பருப்புத் தென்படாமல் தோல்களே தென்படுகின்றன. அது போல, அகங்காரத்தைப் பகுத்துப்பார்த்தால் 'நான்' என்று சொல்லக்கூடிய வஸ்துவே இல்லையென்பது விளங்கும். இப்படிப்பட்ட ஆலோசனையின் முடிவெல்லாம் ஈசுவரனிடம் சேரும். அகங்காரம் அகலும் போது, தெய்விகம் தானே தோன்றும்.

738. ஈசுவரன், வெளியிலும் வெகு தூரத்துக்கப்பாலுமே இருப்பதாகத்தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால் உள்ளே ஈசுவரனிருப்பதாக உணர்ந்து கொண்டதும் உண்மையான ஞானம் உண்டாகிறது.

739. உள்ளே (ஹிருதயத்தில்) ஈசுவரனையுணர்பவன் புறம்பேயும் அவனைக் காண்பான். தன்னுள்ளே ஈசுவரனைக் காணாதவன் தனக்கு வெளியேயும் அவனைக் காணமாட்டான். ஆகவே, தேகாலயத்தில் தெய்வத்தைக் காண்பவன் அகிலாண்டத்திலேயும் அதனைக் காண்பான்.

740. ஒரு மனிதன் பாதி யிராத்திரியில் விழித்துக்கொண்டு புகைச் சுருட்டுப் பிடிக்க எண்ணினன். அவனுக்கு விளக்கு வேண்டியிருந்தபடியால் அண்டை வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினன். உள்ளிருந்த ஒருவர் கதவைத் திறந்து வந்து, "உனக்கு என்ன வேண்டும் ?" என்று கேட்டார். எனக்குச் சுருட்டுப் பிடிக்கவேண்டும். ஒரு விளக்குக் கொடுக்கிருயா !" என்று அம்மனிதன் கேட்டான். "அடே ! என்னடா சங்கதி ! உன் கையிலேயே கொளுத்தின தீபம் ஒன்றை வைத்துக்கொண்டு, இந்த நேரத்தில் இவ்வளவு சிரமப்பட்டு வந்து எங்களை எழுப்பினயே !" என்று அவர் சொன்னர். மனிதன் அடைய விரும்பும் பொருள் அவனுள்ளேயே இருக்கிறது ; ஆயினும் அதைத் தேடிக்கொண்டு அவன் அங்குமிங்கும் அலைகிருன்.

741. அநுலோமம், விலோமம் என யுக்திவாதம் இருவகைப் பட்டது. அநுலோமக்கிரமத்தால், சிருஷ்டிப் பொருள்களிலிருந்து சிருஷ்டி கர்த்தாவை நோக்கி, அதாவது காரியத்திலிருந்து மூலகாரணத்துக்குப் போகலாம். அப்பால் விலோமக்கிரமம் ஆரம்பிக்கின்றது. மனிதன், ஈசுவரனை அடைந்த பின்னர், அவ்வீசுவரனுடைய தோற்றத்தைச் சிருஷ்டியின் ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளிலும் காண விரும்புகிருன். ஒரு கிரமம் பகுத்துப் பார்த்தால், மற்றென்று தொகுத்துப் பார்த்தலாம். முன்னது (அநுலோமக் கிரமம்) வாழை மட்டைகளை ஒவ்வொன்ருய்ப் பிரித்து, உள்ளிருக்கும் தண்டை எடுப்பது போலாம். பின்னது (விலோமக் கிரமம்) அந்த உள் தண்டின்மேல் வாழை மட்டைகளை ஒன்றின்மேலொன்ருய் அடுக்குவது போலாம்.

742. ஒன்றென உணர்வது ஞானம் ; பலவாகக் காண்பது அஞ்ஞானம்.

743. வேதாந்த புத்தகங்களை வாசிப்பதிலேயே தனதுகாலத்தைக் கழித்து வந்த சிஷ்யன் ஒருவனைப் பார்த்து பகவான் கூறியதாவது : "குழந்தாய் ! இப்போது வேதாந்தத்திலுள்ள இரகசியங்களை அறிந்து கொள்வதிலேயே உன் கவனத்தை யெல்லாம் செலுத்தி வருகின்ருயல்லவா ? அது நல்லதுதான். 'பிரம்மமே சத்தியம், ஜகத்மித்யை.' இதுதானே வேதாந்தத்தின் உட்பொருள் ? இதனைவிட வேறு ஏதாவது உண்டா ?" பகவான் கூறியதை அவன் சரியென்று ஒத்துக்கொண்டான். பகவானது இவ்வார்த்தைகள் அவனுக்கு ஒரு புதிய விளக்கம் தந்தன. அவனுக்கு அவ்வார்த்தைகள் ஆச்சரியம் விளைவித்தன. இவ்வுண்மைகளில் பூரண நம்பிக்கை ஏற்படுமாகில் வேதாந்தத்தின் உட்பொருள் எளிதில் விளங்கும் என்று உணர்ந்தான். மேலும் பகவான் எடுத்துச் சொன்னதாவது :—'சிரவணம், மனனம், தியானம். பிரம்மனைப்பற்றி முதலில் செவிகள் மூலமாகக் கேட்டறிய வேண்டும். அதாவது பிரம்மமே நித்தியம், மற்றவை அநித்தியம் என்று கேட்டல். பிறகு விசாரணை மூலமாக நீங்கள் கேட்ட வுண்மைகளை மனத்திலே ஸ்திரப்படுத்த வேண்டும். அதன் பிறகே தியானம் ; அதாவது அநித்தியமான உலகத்தினின்றும் மனத்தை விடுவித்து நித்தியமாகிய

பிரம்மத்தினிடத்து நிலைநிறுத்த வேண்டும். இதுதான் வேதாந்தத்தின் வழிமுறை. ஆனால் உண்மையைக் கேட்டு, புத்தி பூர்வமாக அறிந்து கொண்டு அநித்தியமாகிய உலகபந்தங்களை அகற்றவில்லையானால் அவ்வறிவால் என்ன பிரயோசனம்? அவ்வறிவு பயனற்றதாகும். அந்த அறிவு மாத்திரம் ஒருவனை உண்மையை அடையச் செய்யாது. உறுதியான நம்பிக்கையும் பரித்தியாகமும் அத்தியாவசியம். இவைகள் மூலமாகத்தான் உண்மையைச் சாக்ஷாத்கரிக்க முடியும். உலகமே பொய் யென்பவன், முள்ளும் பொய்யென்று சொல்லி முட்புதரைக் கையால் அடித்தால் என்னவாகும்? கைகளில் இரத்தம் பீறிட்டுக் கோவென்று கதறுவான். அதுபோல, 'பிரம்மம் சத்தியம், ஜகத்மித்யா' என்று வாய் வேதாந்தம் பேசும் ஒருவன், போகப் பொருள்களைக் கண்டதும் மனத்தைச் செலுத்தி அவைகளில் சிக்குண்டு உழல்கின்றான். வாய் வேதாந்தம் அவ்வளவினதே. தக்ஷிணேசுவரத்திலுள்ள பஞ்சவடிக்கு ஒரு சாது வந்து எப்போதும் வேதாந்த விஷயங்களையே பேசிக் கொண்டிருந்தான். அவன் ஒரு பெண்ணினிடம் முறைகேடான உறவு வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு, அவனிடம் சென்று 'வேதாந்த விஷயமாக நீ பெரிய பிரசங்கங்கள் செய்கின்றாய்? ஆனால் இந்த ஜனங்கள் உன்னைப்பற்றி ஏதேதோ சொல்கின்றார்கள்; அது சரிப்பட்டதா?' என்றேன். 'அதனால் என்ன? அதில் ஒன்றும் குற்றமில்லை யென்பதை நான் காண்பிப்பேன். உலகமே எப்போதும் அநித்யம், பொய்யாக இருக்கும்போது, எனது இந்த வாழ்க்கை மாத்திரம் உண்மையாகுமா? அதுவும் பொய்தான்' என்றான். நான் மிகவும் அருவருப்புக்கொண்டு 'அவ்வித வேதாந்த அறிவின்மீது காறித்துப்புகிறேன். உலகப் பற்று மிகுந்த போலிகளும் வஞ்சகர்களும் பேசும் வேதாந்தம், வெறும் வார்த்தைகளே யல்லாமல் உண்மை யறிவாகாது' என்றேன்.

ஞானயோகத்தின் கடுமை

744. இந்தக் கலியுகத்தில் ஞானயோகம் வெகு சிரம சாத்தியமானது. முதலாவதாக, இந்த யுகத்தில் நமது வாழ்க்கை உணவைப் பொறுத்துள்ளது. இரண்டாவது, இந்த யுகத்தில் மனிதர்களுடைய ஆயுள் பிரமாணம் வெகு குறைவாக இருக்கின்றது. மூன்றாவது, நம்மை விடாது பற்றிக்கொண்டிருக்கும் தேக புத்தியை நீக்குவது இந்த யுகத்தில் பெரும்பாலும் முடியாததாக இருக்கிறது. ஆனால் ஞானியானவன், "நான் சரீரமல்ல; நான் முக்த, நிர்க்குணனை பரமாத்மனுடன் ஒன்றானவன். நான் சரீரனல்லனாகையால், அச்சரீரத்துக்கு நிச்சயமாக நேரும் உபாதிகளாகிற, பசி, தாகம், ஜனன மரணம், வியாதி முதலியன என்னைக் கட்டுப்படுத்தமாட்டா" என்ற தீர்மானத்துக்கு வரவேண்டும். இப்படியின்றி, சரீராவசியங்களுக்குக் கட்டுப்பட்ட ஒருவன், தான் ஞானியென்று சொல்லிக் கொள்வானானால், அவன் செயல், ரத்தம் வரும்படி முள்செடி யொன்று கையில் கீறிக் கிழித்ததனால் அதிகமாக வாதைப்படும் ஒருவன் "என்ன! என் கை கீறு

படவுமில்லை கிழிபடவுமில்லை ; அது சரியாகத்தானிருக்கிறது, ” என்று சொல்வதைப் போன்றதாகும். இப்படிப்பட்ட வீண் வார்த்தைபோதாது. முதன் முதலில் ஞானமாகிய நெருப்பினுல் இந்த ‘ முட்கள் ’ சாம்பலாக எரிக்கப்பட வேண்டியது அவசியம்.

745. ஞானத்தை அடையக் கூடியவர்கள் வெகுசிலரே. ஆயிரம் பேர்களில் ஒருவரே ஈசுவரனை அறிய விரும்புகின்றனர் என்றும் அவ்விதம் விரும்பும் ஆயிரம் பேர்களில் ஒருவரேதான் அவனை அறிகின்றுர் என்றும் கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. காமமும் காசாசையுமாகிய உலக விஷயங்களில் விருப்பம் குறையும் அளவுக்கு ஏற்ப ஞானம் அதிகரிக்கும்.

746. ஞானயோகி ‘நானே பிரம்மன் ’ என்கின்றுன். ஆனுல் சரீரத்தை ஆத்மன் என்று கருதும் வரையில் அவ்விதபாவனை கெடுதியை உண்டு பண்ணும். அவனை அத்யாத்மிக வாழ்க்கையில் முன்னேறச் செய்யாமல் நாசப்படுத்திவிடும். அவன் மற்றவர்களை ஏமாற்றுகிறதோடு தன்னையும் ஏமாற்றிக் கொள்கின்றுன்.

747. தபசிகளைப்போல நீண்ட சடை வைத்திருந்த ராமச்சந்திர பிரம்மசாரி என்பவர் ஒருவர், தக்ஷிணேசுவரம் ஆலயத்துக்கு வந்திருந்தார். அவர் ஆசனமிட்டு அமர்ந்து கொண்டு “ சிவோஹம் சிவோஹம் ” என்று அடிக்கடி உச்சரிப்பார். சில சமயங்களில் பேசாது வீற்றிருப்பார். அவரது போக்கைக் கவனித்து வந்த ஸ்ரீ ராம கிருஷ்ணர் ஒரு நாள் அவரிடம் சென்று, “ ‘ சிவோஹம் ’ என்று வாயினுல்மாத்திரம் உச்சரிப்பதிலே என்ன இருக்கிறது. ஹிருதயமாகிய கோயிலிலே பகவானை ஆழ்ந்து தியானம் செய்து, தற்போதமிழந்து, சிவபோதம் எழப்பெற்ற ஒருவனே இந்த உயர்ந்த மந்திரத்தைக் கூறுவதற்கு அருகனுவான். அனுபவத்தில் அடையாமல் வெறுமனே வாயினுல் உச்சரிப்பதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது? ஆத்ம சாக்ஷாத்காரமாகிய நிலையை அடையாத வரையில் பகவானை ஆண்டானுகவும் நம்மை அவனது அடிமையாகவும் கருதிக்கொள்வது நல்லது ” என்று கூறினுர். உண்மையை உணர்வதில் உண்மையான ஆர்வமுள்ள அந்த பிரம்மசாரியான சாதகர், தம் குறைகளையுணர்ந்து பகவானது வார்த்தைகளால் புத்திவரப் பெற்றுர். தக்ஷிணேசுவரத்தை விட்டுப் போவதற்குமுன் அவர், பரமஹம்ஸரால் உபதேசிக்கப்பட்டபடி, இனி பகவானை ஆண்டானுகவும் தன்னை அவனது அடிமையாகவும் பாவித்துக் கொள்ளுகின்றுர் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்ந்து வந்த அறையின் சுவரில் எழுதிவிட்டுப் போனுர்.

உ. பக்தி மார்க்கம்

பக்தியும் அது வளரும் வழியும்

748. வெறுங் கண்ணுடியில் யாதொரு உருவமும் பதிவதில்லை. ஆனுல் தகுந்த ரசாயனப் பொருளை அக்கண்ணுடியின்மேல் பூசிய பிறகு

படங்களை எழுதலாம். அதுபோல பக்தியாகிய ரசாயனப் பொருளை ஹிருதயத்தின்மீது தடவினால் அங்கு ஈசுவரனுடைய ரூபத்தைப் பதியச் செய்யலாம்.

749. பகவத் பக்தி அபூர்வமானது. புருஷனிடம் கற்புடைய மனைவிக்கு இருக்கும் அத்யந்த ஆசையைப்போல, ஈசுவரனிடம் முழுமனதுடன் ஆசையுண்டாகும்போதுதான் பக்தியும் தோன்றும். உண்மையான பக்தியைப்பெறுவது சிரம சாத்தியம். பக்தியோகத்தில் மனமும் ஆத்மாவும் ஈசுவரனிடம் லயிக்கவேண்டும். அப்போது பக்திமார்க்கத்தில் இன்னும் உயர்ந்ததான "பாவ" நிலைமைவரும். குறிபார்த்து அம்பெய்பவனுக்குப் பேச்சடங்கி மூச்சு நிற்பதைப்போல, பாவ நிலைமையிலும் ஒருவனுக்குப் பேச்சு அடங்கிவிடுகிறது; மூச்சு நின்றுவிடுகிறது. கும்பகம் தானே உண்டாகிறது..

750. இந்திரிய விஷயங்களின் மீதுள்ள பற்று எவ்வளவுக்குக் குறைந்து வருமோ அவ்வளவுக்குக் கடவுளிடத்து பக்தி அதிகரித்து வரும்.

751. உலகப்பற்றுள்ளவர்கள் உபயோகமற்ற பொருள்களைத் தேடுகின்றவராவர். உலகப் பற்றற்ற சுத்தாத்மாக்கள் ஈசுவரனை விசுவாசித்து அவனையே சதா சர்வ காலமும் சிந்தித்திருப்பார்கள்.

752. கண்களை மூடினாலொழிய, பழகாத குதிரைகள் ஓரடிகூட எடுத்து வையா. ஆசைகளை அடக்காவிட்டால் ஈசுவரனைக் காண முடியாது.

ஆனால் ஞான மார்க்கத்திற் செல்பவர் தம் ஆசைகளை அடக்கப் பிரயத்தனப் படுவார். ஞானியானவன், "ஈசுவரனைக் காணவேண்டுமானால், முதலில் ஒருவன் சுத்தனாக இருக்கவேண்டும். ஆசைகளை அடக்கவேண்டும்" என்கிறான். முதலில் பொறியடக்கம் அப்பால் ஈசுவர ஞானம்.

ஈசுவரனை யடைவதற்குப் பக்தியோகம் என்ற இன்னொரு மார்க்கமும் உண்டு. மனிதனுக்கு ஈசுவர பக்தி ஒருதரம் வருமானால்,—ஒரு தரம் பகவந் நாமத்தைக் கேட்டதும் அத்தியந்த ஆனந்த முண்டாகுமானால்,—அப்பால் ஆசைகளை யடக்குவதற்குப் பெருமுயற்சிகள் தேவையில்லை. அவ்வடக்கம் தானே வந்துவிடும்.

மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் ஒருவன் சண்டைக்குப் போகவாவது, விருந்து சாப்பிடவாவது, சிற்றின்ப சுகத்தில் இச்சை வைக்கவாவது மனங் கொள்வானா? அதுபோல ஈசுவர பக்தியில் ஆழ்ந்த ஒருவன் இந்திரிய சுகங்களைப்பற்றிச் சிந்திக்கவேமாட்டான்.

753. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினிடம் அணுகும்போதெல்லாம் ஸ்ரீமதி ராதைக்கு அவருடைய திவ்ய மங்கள சரீரத்தினின்றும் மனோஹரமான வாஸனை வந்தது. ஈசுவரனிடம் ஒருவன் நெருங்கு

ளவுக்கு ஏற்ப, அவனுக்கு அவரிடமுள்ள பிரேமை அதிகரிக்கும். சமுத்திரத்தை அணுக அணுக, நதியானது மேன்மேலும் பொங்கி வழியும் சுபாவத்தை அடையும்.

754. ஒருமுறை பகவான் கேசவசந்திரசேனரிடம் வழிபாடு விஷயமாக இவ்விதம் கூறினார் :—“ பகவானது கீர்த்திகளையும் சக்திகளையும் பற்றி ஏன் இவ்வளவாக நீங்கள் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் ? தகப்பன் எதிரில் உட்கார்ந்துகொண்டு குமாரன், ‘ என் தகப்பனுக்கு இத்தனை வீடுகளிருக்கின்றன. இத்தனை மாடுகள், ஆடுகள் இருக்கின்றன ; இத்தனை தோப்புகளும் துரவுகளும் இருக்கின்றன ’ என்று சிந்திக்கின்றானா ? அல்லது தன் தகப்பனார் எவ்வளவு அன்புள்ளவர், தன்னிடம் எவ்வளவு பிரேமை காட்டுகின்றார் என்று அவரைப்பற்றி அன்பாகப் பேசுவானா ? தகப்பன் தன் குழந்தைகளுக்கு உணவு உடை தந்து பேணி வளர்ப்பது அதிசயமான காரியமா ? நாம் அனைவரும் பகவானது குழந்தைகள். நம்மைக் காப்பாற்றிச் சந்தோஷப்படுத்துவது அவர் கடமையாகையால் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது ? உண்மையான பக்தன் இவ்விதமாகப் பகவானைப் பிரார்த்திக்கமாட்டான். இத்தகைய எண்ணங்கள் அவனது உள்ளத்தில் எழா. பகவானோடு அவன் நெருங்கிய சொந்தம் கொண்டாடி அவருடன் அளவளாவ விரும்புகின்றான். அவர் தனக்குச் சொந்தம் என்பதில் பெருமைகொண்டு அவரருகிலிருப்பதற்கு அவாவுகின்றான். அவருடைய பெருமையினைப்பற்றியே நீ சிந்தித்துக்கொண்டிருந்தால் அவரை உனக்குச் சொந்தமாகப் பாவிக்கவோ, அவரை நெருங்கி உறவாடவோ முடியாது. நீ வேண்டுவதை வற்புறுத்திக் கேட்பதற்கும் உன்னால் முடியாது. எவ்வளவுக்கு அவரது மகத்துவத்தைப்பற்றிச் சிந்திக்கிறாயோ அவ்வளவுக்கு அவரை விட்டு எட்டியிருப்பாய். உன்னை அவருக்குச் சொந்தப்படுத்தும் அளவுக்கு நீ அவரைக் காணமுடியும்.”

755. குறிப்பிட்ட ஒரு ஸ்திரமான பாவனையுடன் நீ பகவானிடம் உறவுகொள்ளவேண்டும். அப்போதே பகவான் உன் பிரார்த்தனைக்குக் கட்டுப்பட்டவனாவான். நெருங்கிப்பழகாத இரண்டுபேர் பேசும்போது உபசாரப்படியே பேசுகின்றனர். ஆனால் பழக்கம் அதிகமாகும்போது உபசார வார்த்தைகள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. அன்பு ததும்பப் பேசுகின்றனர். அதேபோல நாமும் பகவானிடம் நெருங்கிய உறவு கொண்டாடவேண்டும். பிறனிடம் இச்சை கொள்ளும் ஒரு பெண் ஆரம்பத்தில் தன் காதல் விஷயமாக வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகின்றாள். தன் காதலை ரகசியமாகவே வைத்துக்கொள்கிறாள். காதல் வளரவளர இவ்வித உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக அவளை விட்டு நீங்குகின்றது. பிறகு தைரியமாகத் தன் வீடுவாசல்களையும் விட்டு நடுத்தெருவில் அவனோடு நடந்து செல்லவும் துணிந்து விடுகிறாள். இதன் பிறகு காதலனுக்குத் தன்மேலுள்ள அன்பு குறைந்து புறக்கணிக்க முயன்றால், ‘ உனக்காக நான் என் வீட்டைவிட்டு வெளிவந்தேன் ; இப்போது என்னை நீ புறக்கணிக்கப்பார்க்கிறாயா ? என் ஜீவ

னுக்கு ஏதாவது வழி செய்து வைக்கிருயா? இல்லையா' என்று அவன் கழுத்தைப்பிடித்துக்கொண்டு அதிகாரத்துடன் கேட்கின்ருள்.

பக்தியும் உலக அன்பும்

756. ஒரு பக்தருடைய வயதான தாயார், தன் அந்திய நாட்களைப் பிருந்தாவனத்தில் கழிக்கவிருக்கும் தன் விருப்பத்தைப் பகவானிடம் குறிப்பிட்டார். அம்மாதைப்பற்றி முற்றும் அறிந்திருந்த பகவான் அவளது விருப்பத்தை ஆதரியாமல் இவ்விதம் கூறினர்: 'உம்முடைய குமாரனது மகளின்மேல் நீர் அளவற்ற ஆசைவைத்துக் கொண்டிருக்கின்றீர். நீர் எங்கே போனுலும் அவள் ஞாபகம் வந்து உம்மைச் சஞ்சலப்படுத்தி வாட்டும். நீர் பிருந்தாவனத்திலிருந்தாலும் உமது மனம் மாத்திரம் இங்குள்ள உம் வீட்டருகிலேயே சுற்றிக் கொண்டிருக்கும். இங்கிருந்து கொண்டே நீர் கொஞ்சிக்குலாவும் பேத்தி, ஸ்ரீ ராதையின் வடிவம் என்று பாவித்து அவளிடம் அன்பு செலுத்துவீரானல் நீர் பிருந்தாவனத்துக்குப் போவதன் பலனைப் பெறுவீர். அவளை உம் மனமார நேசியும். அவளுக்கு உண்டி உடைகள் கொடுத்துப் போஷியும். ஆனல் உம்மனத்துக்குள்ளே நீர் இச்சிறுமிக்குச் செய்யும் ஒவ்வொரு காரியமும் பிருந்தாவனத்து ஸ்ரீ ராதைப் பிராட்டிக்கே செய்யும் பூசையாக நினைத்துக்கொள்ளும்.

757. தன் உறவினர் ஒருவர்மேல் அபரிமிதமான பாசம் வைத்திருந்ததால் பகவானிடம் மனம் குவியப் பெருத ஒரு பக்தரிடம் பகவான், அவர் நேசிக்கும் உறவினரைக் கடவுள் சொரூபமாகப் பாவித்து அன்பு வைக்கும்படி உபதேசித்தார். இவ்விஷயமாக உபதேசிக்கும்போது பகவான் கூறுவதாவது:—'உன் ஆசைக்குப் பாத்திரமானவரிடம் உன் இஷ்ட தெய்வத்தைக் காண்பாயாகில், சுலபமாக மனம் பகவானை நாடிச்செல்வதை உணர்வாய்.

பக்தியின் அடையாளங்கள்

758. ஒரு பக்தன்:—ஒருவன் தனது இந்திரியங்களை விசாரணையினல் (பகுத்தறிவினல்) முதன் முதலில் அடக்கியாளவேண்டியது அவசியந்தானு?

பரமஹம்ஸர்:—விவேக விசாரணையென்பது வேருெரு வழி. பக்தி மார்க்கத்தில் இந்திரிய நிக்கிரகம் தானே எளிதில் வரும். குழந்தை இறந்த தினத்தில் பெற்ருேர்கள் தங்களுடைய தேக சுகத்தை நினைப்பதில்லை. அதுபோல, ஒருவனுக்கு ஈசுவரனிடம் பக்தி அதிகமாகும் அளவுக்கு ஏற்ப, இந்திரிய சுகங்கள் அவனுக்கு இன்பந் தராது போகும்.

759. பகவந் நாமத்தைக் கேட்டதும் ஆனந்த பாஷ்பம் உண்டாகாதிருக்கும் வரையில், பக்தி மார்க்கத்தை அவசியம் கைக்கொள்ள

வேண்டும். பகவந் நாமத்தைக் கேட்டவுடன் கண்ணீர்விட்டு உருகு பவனுக்குப் பக்தி சாதனை அவசியமில்லை.

760. பகவத் பக்தியைப் புலிக்கு ஒப்பிட்டிருக்கிறார் ஒரு கவி. புலியானது மிருகங்களை விழுங்குவதுபோல, பக்தியானது காமாதி களான பெரும்பகைவர்களை விழுங்குகிறது. பகவத் பக்தி ஒருதரம் நன்றாக உண்டாகிவிட்டால், காமம், குரோதம் முதலிய கெட்ட பாசங் கள் முற்றிலும் நசித்து விடும். பிருந்தாவனத்துக் கோப ஸ்திரீகள் கிருஷ்ணனிடம் வைத்த தீவிர பக்தியால் இப்படிப்பட்ட நிலைமையை அடைந்திருந்தனர்.

761. பக்தியைக் கண்களில் தீட்டும் மைக்கும் ஒப்பிட்டிருக்கின் றனர். ஸ்ரீமதி ராதை ஒரு சமயம், "ஸகிகாள்! நான் எனது கிருஷ் ணனை எல்லாவிடங்களிலும் காண்கின்றேன்" என்றாள். அதற்குக் கோபஸ்திரீகள், "தோழி! நீ பக்தியாகிய அஞ்சனத்தைக் கண்ணில் இட்டுக் கொண்டிருக்கிறாய். ஆதலால்தான் அப்படித் தெரிகின்றது" என்றார்கள்.

762. ஈசுவரனுக்காகப் பக்தர்கள் தங்களுடைய செல்வமெல்லா வற்றையும் ஏன் தியஜிக்கின்றனர்?

தீபத்தைக் கண்டதும் பூச்சி இருட்டிலிருந்து ஓடி வருகின்றது. சர்க்கரைப்பாகிலேயே எறும்பு பிராணனை விடுமென்றி அதினின்றும் திரும்பிப் போகிறதில்லை. அதுபோல, பக்தனும் ஈசுவரனையே எப்போ தும் பற்றி நிற்பானுகையால் மற்றப் பொருள்களையெல்லாம் கைவிட்டு விடுகிறான்.

763. வெளிச்சத்தைப் பார்த்துவிட்ட விட்டில் பூச்சி மறுபடியும் இருட்டைத் தேடிப் போகுமா? போகாது. அது ஒளிச்சுடரில் விழுந்து இறந்தாலும் இறக்குமே தவிர இருட்டைத் தேடிப் போகாது. உண் மைப் பக்தன் விஷயம் அப்படிப்பட்டதன்று. அவனை இழுக்கும் திவ்வி யச் சுடர் அவனைக் கொளுத்திக் கொல்வதில்லை. அது ஒரு மணி யின் ஒளியைப்போல பிரகாசம் பொருந்தியதும், குளிர்ச்சியானதும், சாந்தியை அளிப்பதும், இனியதுமாம். அது தகிக்காது. ஹிருதயத்தை சாந்தி, ஆனந்தம் இவைகளால் பிரகாசிப்பிக்கும்.

764. சரியான மார்க்கந் தெரியாத ஒருவனுக்கு ஈசுவர பக்தியும் அவ்வீசுவரனைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் இருக்க லாம். அப்படிப்பட்டவன் கேவலம் பக்தியினாலேயே ஈசுவரனையடை வான். ஜகந்நாத க்ஷேத்திரத்தைத் தரிசிக்கவேண்டுமென்று விரும்பிய பக்தன் ஒருவன், அந்த நகரத்துக்கு எந்த வழியாகப் போகிறதென் பதைத் தெரியாதவனானபடியால் அதற்கு எதிர்ப்புறமான வழியில் புறப் பட்டுப் போனான். கொஞ்சதூரம் சென்றதும் வழியில் போவாரை நோக்கி 'இதுதானா ஜகந்நாதத்துக்குப் போகும் வழி?' என்று ஆவ லோடு கேட்டான். அவர்கள் "இது வழியன்று, அது வழி" என்று

காட்டிப் போயினர். கடைசியில் பக்தன் பூரி க்ஷேத்திரத்தை அடைந்து இஷ்டபூர்த்தி செய்து கொண்டான். அதுபோல, ஒருவனுக்கு வழி தெரியாமலிருந்தாலும், மனம் மட்டும் இருக்குமானால், வழியைக் காட்டக் கூடியவர் நிச்சயமாக வருவார். முதலில் அவனுக்குத் தவறுதல் ஏற்படக்கூடும். ஆனால் கடைசியில் சரியான பாதைக்கு வந்துவிடுவான்.

765. விவேகம், வைராக்கியம், பூத தயை, ஸாது ஸேவை, ஸாது ஸங்கம், ஈசுவர நாம ஸங்கீர்த்தனம், ஸத்யம் முதலிய நற்குணங்களின் மூலமாக பக்தி பொங்கித் ததும்பும்.

766. ஈசுவரானுபவத்துக்கும் அடையாளங்கள் உள்ளன. பக்தி எவனிடம் பொங்கித் ததும்புகின்றதோ அவனுக்கு வெகு சீக்கிரத்தில் ஈசுவர தரிசனம் கிடைக்குமென்று தெரிந்துகொள்.

767. சமுத்திரத்தின் கீழுள்ள காந்தக்கல் மலை, தண்ணீரின்மீது போகும் கப்பலை இழுத்து, அதனுள்ளிருக்கும் இரும்பு ஆணிகளையெல்லாம் பிடுங்கி, பலகைகளை வெவ்வேறாக்கி, கப்பலைத் தண்ணீரில் மூழ்கச் செய்கின்றது. அதுபோல, ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய தெய்விகக் காந்தத்தால் இழுக்கப்படும்போது அந்தக் காந்த சக்தியானது மனிதனுடைய சுயநலம் கருதும் தன்மையையும் ஜீவபோதத்தையும் ஒரு நொடிப்போதில் மாய்த்து, ஆத்மாவைக் கடவுளினுடைய எல்லையில்லாத பிரேமையாகிய ஸாகரத்தில் ஆழ்த்துகின்றது.

பக்தியின் படிகளும் நிலைகளும்

768. ஸமர்த்தம் (சுயநலம் கருதாதது), ஸமஞ்ஜஸம் (பரஸ்பரமானது), ஸாதாரணம் (சுயநலம் கருதுவது) எனப் பிரேமை மூவகைப்படும். சுயநலம் கருதாத பிரேமைதான் மகாமேலானது. இதில், பிரேமை கொண்டவன் தனது சுகதுக்கங்களைக் கவனியாமல், தனது அன்புக்குரியவனுடைய க்ஷேமலாபங்களையே கருதுபவனாகிறான். பரஸ்பர பிரேமையாகிய இரண்டாவதில், பிரேமை கொண்டவன் தனது அன்பனுடைய சுகத்தோடு தனது க்ஷேமத்தையும் தேடுகிறான். சுயநலம் கருதும் பிரேமையோ அதமமானது. இதில், பிரேமை கொண்டவன், தனது அன்பனுடைய சுகதுக்கங்களைக் கவனிக்காமல் தனது க்ஷேமலாபங்களையே கவனிக்கிறான்.

769. உலக விஷயங்களில் ஸத்வ, ரஜோ, தமோ குணங்களின் சாயைகள் இருப்பதுபோல பக்தியிலும் அக்குணங்களின் சாயைகள் இருக்கின்றன. ஸத்வகுணத்தினதான அடக்கமும், ரஜோகுணத்தினதான ஆரவாரமும், தமோகுணத்தினதான மூர்க்கமும் பக்தியில் உண்டு.

ஸாத்வீக பக்தன் பிறர் அறியாதபடி பக்தி பண்ணிக்கொண்டிருப்பான். இராத்திரியில் கொசுவலைக்குள் படுக்கையின்மீது உட்கார்ந்து தியானம் பண்ணுவான். ஆதலால் காலையில் படுக்கையைவிட்டு எழுந்து வருவதற்கு அவனுக்குக் காலதாமதம் ஆகும். இதையறியாத ஜனங்கள்

அவனுக்கு நல்ல தூக்கம் வராததனுல் அப்படி நேரங்கழித்து எழுந் திருக்கிறுன் என்று நினைக்கின்றனர். சரீர சம்ரக்ஷணை விஷயத்திலும், அவன் ஏதோ கிடைத்த வரையில் கொஞ்சம் சோற்றையும் காய்கறியை யும் தின்று திருப்தியடைகிறுன். சாப்பாட்டிலாகட்டும், ஆடையிலாகட் டும் அவனிடம் பெருமித வாழ்க்கையே கிடையாது. அவனுடைய வீட் டில் ஆடம்பரத்தைக் காட்டக்கூடிய சாமான்கள் இரா. பிறரால் முகஸ் துதி செய்யப்பட்டு அதனுல் தான் மேன்மை அடைய வேண்டுமென்ற எண்ணம் அவனிடம் ஒருபோதும் உண்டாவதில்லை.

ரஜோகுண பக்தனே, துவாதச நாமம் அல்லது விபூதி ருத்ராக்ஷம் முதலான புண்டரங்களைத் தரித்துக் கொண்டும், ஒருவேளை இடை யிடையே பொன்மணிகள் கோர்க்கப்பட்ட ஜபமாலைகளைக் கழுத்தில் போட்டுக் கொண்டவனுகவும் விளங்குவான். பூஜா காலங்களில் பட் டுடை (மடி) கட்டிக்கொள்வது, அதிகமான படாடோபத்துடன் பூஜை செய்வது முதலிய ஆடம்பரங்களில் அவன் கருத்துள்ளவனுக இருப் பான்.

தாமஸ பக்தன் மூர்க்கத்தன்மையுள்ள சிரத்தை கொண்டவனுக இருப்பான். கொள்ளைக்காரர்கள் பலவந்தப்படுத்திப் பொருள்களைக் கவர் வதுபோல இவனும் ஈசுவரனைப் பலவந்தப்படுத்துகிறுன். "என்ன ! நான் தான் பகவந் நாம ஸங்கீர்த்தனம் செய்கிறேனே. என்னிடம் பாவம் எப் படி நிலைத்திருக்கும் ? நான் ஈசுவரனுடைய குமாரனல்லவா ? அவனு டைய ஐசுவரியத்துக்கு நான் பாத்தியப் பட்டவனல்லவா ?" என்று சொல்லுவது அவனுடைய மூர்க்க பக்தியின் திறன்.

770. பக்தியின் உக்கிரமான சொரூபம் யாது ?

"ஜெயகாளி !" என்று எப்போதும் ஓலமிட்டுக்கொண்டு உன்மத்த னுவதும், ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு உயரத்தூக்கிய கைகளோடு பித்தனைப்போலக் குதிப்பதும் அதன் ஸ்வரூபமாம். இந்த கலியுகத்தில், தியானம் முதலான அமைதியான வழிகளைக் காட்டிலும் உக்கிர பக்திதான் சிறந்ததும் சீக்கிரத்தில் பலன் அளிக்கக் கூடியது மாகும். ஈசுவரனுடைய கோட்டையைப் பிடிப்பதற்கு அதனை முற் றுகை போட்டுத் தாக்கவேண்டும்.

771. ஆத்ம சுத்திக்காக ஏற்பட்ட ஸாதனங்களின் படிகளா வன :—

1. ஸாது சங்கம். 2. சிரத்தை. 3. நிஷ்டை. 4. பாவம் (ஈசுவர சிந்தனையில் மூழ்கியிருக்கும் மௌன நிலை.) 5. மஹாபாவம். பாவம் முதிர்ந்தால் மஹாபாவ நிலைமை வரும். அப்போது பக்தன் பித் தனைப்போலச் சில வேளைகளில் சிரிப்பான் ; சில வேளைகளில் அழுவான். அவன் சரீரத்தை முற்றிலும் வசப்படுத்தி விட்டவனுதலால், அவனுக் குச் சரீர ஸ்மரணையே இராது. இந்த நிலைமை, ஸாதாரணமாக ஜீவர் களுக்கு வராது. மஹாபுருஷர்களுக்கு, அதாவது, ஈசுவராவதார மஹான்களுக்கு மட்டுமே இது ஸித்தியாகும். 6. 'பிரேமை' அதா

வது ஈசுவரனிடம் அதிதீவிர அன்பு. இது மஹாபாவத்துடன் சேர்ந்தே இருக்கும். இந்த நிலைமையின் இரண்டு அடையாளங்களாவன:—1. உலகத்தைப்பற்றிய ஞாபகம் இல்லாதிருத்தல். இது, பக்தனையும் ஈசுவரனையும் நேருக்கு நேரே கொண்டு சேர்க்குமாதலால், பக்தன் தனது வாழ்க்கையின் இலக்ஷியத்தை அடைகிறான்.

772. 'இந்தக் காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று வேதங்கள் சொல்கின்றன. ஆதலால் நான் செய்கிறேன்' என்று நினைப்பது 'வைதி பக்தி' யாகும். ஈசுவரனிடத்தில் அளவுகடந்த பிரேமையினால் உண்டாகும் இன்னொருவித பக்திக்கு 'ராக பக்தி' என்று பெயர். இது பிரஹ்லாதனிடம் தென்பட்டது. அந்த ராகபக்தி உண்டாகும்போது 'வைதிக கர்மங்களை' அதாவது சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டிய அவசியமே இருப்பதில்லை.

773. பக்தியில் 'வைதி பக்தி' என்பது ஒன்று. அதாவது சாஸ்திரங்கள் விதிக்கிறபடி பக்தி பண்ணுதல். பகவந் நாமத்தைப் பல தடவை உச்சாரணம் பண்ணுதல். உபவாசமிருத்தல், தீர்த்த யாத்திரை போதல், வேண்டிய ஸாமக்கிரியைகளைக்கொண்டு பூஜை செய்தல் முதலியன வைதி பக்தியின்பாற்படும். இப்படி நெடுங்காலம் பக்தி செய்தால் ஈசுவர பக்தியில் இன்னும் உயர்ந்த நிலைமையான, 'ராக பக்தி'யைப் பெறக்கூடும். எல்லாவற்றிற்கும் பிரேமைதான் முக்கியம். உலகப்பற்று முற்றிலும் அகலவேண்டும். முழு மனதும் ஈசுவரனிடம் பொருந்த வேண்டும். அப்போதுதான் அவனை அடையமுடியும். ராக பக்தியில்லாமல் அவனை அடையமுடியாது.

774. ஈசுவரபக்தி இருவகைப்படும். முதலாவது சாஸ்திரங்கள் விதிக்கும் பக்தி; இன்னவிதமாகப் பூஜை செய்யவேண்டும், பகவந் நாமத்தை இத்தனை தரம் ஜபிக்கவேண்டும் என்று ஏற்பட்டுள்ள விதிகளின்படி செய்யும் இந்த பக்தி 'வைதிபக்தி' எனப்படும். இதனால் பிரம்மக் ஞானத்தையடையலாம். இப்படி ஸமாதியில் லயித்த ஆத்மா மறுபடியும் திரும்பி வருகிறதில்லை. இது சாதாரண பக்தர் விஷயத்தில் மட்டும்தான் ஏற்படும்.

அவதார புருஷர்கள், ஈசுவராம்சமுடையவர்கள் முதலிய மஹான்களுடைய விஷயம் முற்றிலும் வேறுபட்டது. அவர்களுக்கு ஈசுவரனிடமிருக்கும் பக்தி கேவலம் விதிகளால் உண்டானதன்று; உள்ளிருந்தே ஊற்றெடுத்துப் பெருகுகின்ற தென்னலாம். சைதன்யர் போன்ற அவதார புருஷர்களும், ஈசுவராக்ஞையைப் பெற்றவர்களும் ஸமாதியில் அடையக்கூடிய பிரம்ம ஞானத்தை எளிதில் அடைவார்கள். அவர்களுக்கு அந்த உன்னத பதவியிலிருந்து கீழே இறங்கி வரவும் கூடும். அப்போது அவர்களுடைய வியக்தித்வம் போவதில்லை. ஈசுவரனைத் தாயெனவும் தந்தையெனவும் நேசிப்பார்கள். 'இதன்று, இதன்று' என்று சொல்லிக்கொண்டு அவர்கள் ஒவ்வொரு படியாக ஏறி உச்சிக்குச் செல்லுகின்றனர். அங்கே போனதும் 'இதுதான்' என்கின்றனர். ஆனால் சீக்கிரத்தில் படிக்கட்டுகளும், உச்சியைப்போலவே கல் சுண்

ணும்பு மண் முதலிய பொருள்களால்தான் ஆனவை யென்பதைக் கண்டு கொள்கின்றனர். ஆகவே அவர்கள் சிலவேளை உச்சியில் தங்கியும் சில சமயம் படிக்கட்டுகளில் இறங்கியும் இவ்வாறு மேலும் கீழுமாகப் போய்க்கொண்டிருக்கின்றனர்.

இந்திரிய உணர்ச்சி முற்றிலும் அழிந்துபோகும் தன்மையுடைய ஸமாதியில் அடையக்கூடிய பிரம்மஸ்வரூபந்தான் அந்த உச்சி ஸ்தானம். படிக்கட்டோ பௌதிக உலகம். உச்சியை அடைந்த பிறகு, நாமரூபங் களைப் பெற்ற இவ்வுலகம் மானிட அறிவுக்குப் புலப்படும் பிரம்ம ஸ்வரூபமாகத் தோன்றும்.

பரா பக்தி அல்லது பிரேமை

775. ஈசுவர தரிசனத்துக்கு முன்னுல் உண்மையான பிரேமை உதிப்பதில்லை.

776. சதையின் பின்னுல் எலும்பும், எலும்பின் பின்னுல் அதன் ஸத்தும் என்று இப்படியே நெடுகப் பாரஸீக கிரந்தங்கள் பலவற்றைப் பற்றிக் கூறுகின்றன. இவை யெல்லாவற்றுக்கும் பின்னுல் பிரேமை யுள்ளது.

777. பிரேமை யென்பது ஸச்சிதானந்தமாகிய ஈசுவரனைக் கட் டக்கூடிய பக்தன் கையிலுள்ள கயிறுகும். பக்தன் ஈசுவரனைத் தன் கையில் அடக்கிக்கொண்டிருக்கிறுன் என்று சொல்லலாம். அவன் கூப்பிடும்போதெல்லாம் ஈசுவரன் அவனிடம் வருகிறுன்.

778. பக்தியில் பாவம் என்னும் நிலை மாங்காய்க்குச் சமானம். பிரேமையோ மாம்பழத்துக்குச் சமானமானது.

779. நரகப் பிராப்திக்குப் பயந்து பக்தி பண்ணுவது ஆரம்ப நிலையைக்காட்டுவது. பாபத்தைப் பற்றிய உணர்ச்சியே சமயமென சில ஜனங்கள் கருதுகின்றனர். சமய ஒழுக்கத்தில் அது தாழ்ந்ததும் ஆரம்பப் படியுமென்பதை அவர்கள் மறந்து போகின்றனர். இதைக் காட்டிலும் உயர்ந்த பதவியும் மனோபாவமும் இருக்கிறது. அதுதான் ஈசுவரனைத் தாயாகவும் தந்தையாகவும் கருதும் பக்தி.

780. பராபக்தி என்பது என்ன?

பராபக்தியில், பக்தன் ஈசுவரனைத் தனக்கு அத்யந்தம் நெருங்கிய அன்பனுகக் கருதுகிறுன். அது கிருஷ்ண பரமாத்மாவிடம் கோப ஸ்திரீகளுக்கு இருந்த பக்திபோன்றது. அவர்கள் அவரை எப்போதும் கோபிகாநாதன் என்று கருதி யழைத்தனரே தவிர ஜகந்நாதன் என்று கருதி அழைத்ததில்லை.

781. காரணமின்றியும் ஈசுவரனிடம் பக்தி கொள்வதென்ப தொன்றுண்டு. இந்த நிலையை அடைந்துவிட்டால், அப்பால் வேண்டப் படுவது ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட பக்தியை யுடையவன், "பகவானே! எனக்குச் செல்வம் வேண்டாம்; புகழ் வேண்டாம்;

சுகம், சந்தோஷம் முதலிய மற்றெவையும் வேண்டாம். உனது, பாதார விந்தங்களில் கலப்பற்ற பக்திமட்டும் இருக்கும்படி கிருபை புரிய வேண்டும்'' என்பான்.

782. பிரேமையின் இரு குணங்களாவன :—முதலாவது வெளிப் பிரக்ஞையில்லாதிருத்தல். இரண்டாவது, தேக புத்தி இல்லாதிருத்தல்.

783. பிரேம பக்தியில் 'நான்,' 'எனது' என்னும் இரண்டு அம்சங்கள் உள்ளன. (அதாவது 'நான் பக்தன்; ஈசுவரன் எனக்கே உரியவன்' என்ற மனோபாவம்.) தன்னைத்தவிர வேறெவரும் குழந்தை கோபாலனைப் பராமரிக்க முடியாதெனவும், தானில்லாவிட்டால் கோபாலனுக்கு உடம்பு சரிப்படாமல் போய்விடுமெனவும் யசோதை நினைப்பாள். அவளுடைய கோபாலனை ஸர்வேசுவரனுகக் கருத அவளுக்குப் பிரியமிருந்ததில்லை. பக்தனுடைய 'எனது' என்ற மனோபாவம், 'அவன் எனது நாதன், எனது கோபாலன்' என்று கருதும்படிச் செய்கின்றது. உத்தவர் யசோதையைப் பார்த்து, 'தாயே! உனது கிருஷ்ணன் ஸர்வேசுவரனே; அவன் ஸர்வ லோக சிந்தாமணி; அவன் சாதாரண மனிதன் அல்லன்' என்றார். அதைக் கேட்ட யசோதை, 'நான் உமது சிந்தாமணியைப் பற்றிக் கேட்கவில்லை. எனது கோபாலன் எப்படி இருக்கிறான் என்பதைத்தான் கேட்கிறேன். சிந்தாமணி இல்லை! எனது கோபாலன்!' என்று பதில் சொன்னாள்.

784. பிரேமையை வெகு சிலரால்தான் பெறமுடியும். அவர்கள் அபாரசக்தியையுடையவர்களும் ஈசுவராக்ஞையை நிறைவேற்றுகிறவர்களுமாவர். அவர்கள், திவ்விய தேஜஸுக்கும் சக்திக்கும் பாத்திராதலால், ஒரு தனிக் கோஷ்டியினராகவே இருக்கின்றனர். சைதன்ய தேவர் போன்ற ஈசுவராவதார புருஷர்களும், ஈசுவராம்சர்களான அவர்களுடைய பக்தர்களில் உயர்ந்தோரும் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவராவர்.

785. சிலருக்குச் சுபாவத்திலேயே பால்ய முதற்கொண்டு இந்த ராகபக்தியிருக்கிறது. அவர்கள், பிரஹ்லாதரைப்போல, குழந்தைப் பிராய முதற்கொண்டே ஈசுவரனைக் காணவேண்டுமென்று கதறுகின்றனர். அவர்கள் 'பிறவிப் பூரணர்' என்னும் நித்யஸித்தர் வகுப்பைச் சேர்ந்தவராவார்கள்.

கோபிகளின் பக்தி

786. ராதையும் கிருஷ்ணனும் ஈசுவரவதாரர்களென்று நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் பாதகமில்லை. ஈசுவரவதாரத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயினும் இல்லாதவர்களாயினும் கடவுளின் அன்பைப் பெற வேண்டுமென்ற அனுராகத்தை மாத்திரம் கைக்கொள்ளட்டும். இது ஒன்றுதான் அவசியமானது.

787. பரமஹம்ஸர் ஒரு சிஷ்யரைப் பார்த்து, "கோபஸ்திரீகளுடைய அனுராகம் எவ்வளவு ஆச்சரியமானது! புன்னை மரத்தைக் கண்டமாத்திரத்தில் அவர்கள் பிரேமோன்மத்தர்களாயினர்'' என்றார்.

சிஷ்யர் :—கௌரங்கர் விஷயமும் அப்படிப்பட்டதுதான். தம் முன்தோன்றிய ஒரு காட்டை அவர் பிருந்தாவனமென்று கருதினர்.

பரமஹம்ஸர் :—ஆஹா! இந்தப் பிரேமையில் ஓர் அணுவளவாவது ஒருவருக்குக் கிடைக்குமா! என்ன பக்தி! இப்படிப்பட்ட பக்தி அவர்களிடம் நிரம்ப இருந்ததென்று மட்டும் சொல்வது போதாது. அது மிதமிஞ்சி ஓடி வழிந்ததென்றே சொல்லவேண்டும்.

788. கோபஸ்திரீகளின் நிஷ்டை (தீவிர பக்தி) வெகு ஆச்சரியமானது! கிருஷ்ணன் மதுரையில் இருந்தபோது, கோப ஸ்திரீகள், வாசல் காவலாளிகளை நயந்துகொண்டு ஸபாமண்டபத்தை அடைந்தனர். ராஜ வேஷத்துடன் கிரீடமணிந்து வீற்றிருந்த கிருஷ்ணனைப் பார்த்ததும் அவர்கள் நாணத்தால் தலைகுனிந்தவர்களாகி, "இந்தக் கிரீடதாரி யாவன்? நாம் இவனோடு பேசினால் நமது கிருஷ்ண பக்திக்குப் பங்கம் வாராதா? பீதாம்பரதாரியும், மயிலிறகு அணிந்தவனுமான நமது நாதன் எங்கேயோ?" என்று ஒருத்தியோ டொருத்தியாய் மெதுவாகப் பேசத்தொடங்கினர்கள். கோபஸ்திரீகளின் ஏகாக்ர பக்தியைப் பாருங்கள்?

789. கோபிகளின் பக்தியானது 'பிரேம பக்தி'யாகும். அதைக் 'கலப்பற்ற தீவிர பக்தி' எனவும் சொல்வார்கள். கலப்புள்ள பக்தி இன்னதென்பது உனக்குத் தெரியுமா? ஞானத்துடன் கலந்த பக்தி கலப்புள்ள பக்தி எனப்படும். "கிருஷ்ணனே எல்லாமும் ஆனான்; பரப்பிரம்மம் அவனே. ராமன் அவன்; சிவபிரான் அவன்; திவ்ய சக்தி அவன்" என்ற உணர்ச்சியைப் போலாகும் அது. ஆனால் அது போன்ற ஞானம் பிரேம பக்தியுடன் கலந்திராது. ஹனுமார் ஒரு சமயம் துவாரகைக்கு வந்தபோது, தாம் ராமனையும் ஸீதையையுமே தரிசிக்கப் போவதாகச் சொன்னர். ஆதலால் ஹனுமாரைத் திருப்தி செய்வதற்காக ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, ருக்மணி தேவியைப் பார்த்து ஸீதையின் உருவத்தை எடுத்துக் கொள்ளச் சொன்னர். பாண்டவர்கள் ராஜஸூய யாகத்தைச் செய்தபோது, யுதிஷ்டிரர் சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர். மற்றைய அரசரெல்லோரும் அவரது அடியை வணங்கினர். அங்கு அப்போது வந்திருந்த விபீஷணர், தாம் கிருஷ்ண பரமாத்மாவைத் தவிர வேறொருவரையும் வணங்குவதில்லை யென்றனர். ஆகவே, கிருஷ்ண பரமாத்மாவே யுதிஷ்டிரருக்கு நமஸ்காரம் செய்யத் தொடங்கினர். உடனே விபீஷணரும் யுதிஷ்டிரர் முன்னர் தமது திருமுடி நிலத்தில் படும்படி சாஷ்டாங்கமாக வணங்கினர்.

விரஹமும் மஹா பாவமும்

790. ஈசுவர விரஹத்தால் (ஈசுவரனை விட்டுப் பிரிந்திருக்கிறோம் என்ற மனோபாவத்தால்) உண்டாகும் துயரம் அளவற்றது. கௌரங்க சுவாமியின் சிஷ்யர்களான ரூப ஸநாதனர்கள் இந்த நிலையில் எந்த மரத்தின்கீழ் உட்கார்ந்திருந்தார்களோ அந்த மரத்தின் இலைகள்கூடக்

கருகிப் போயிற்றும்! இந்த நிலைமையில் நான் மூன்று நாள் அசைவற்றுக் கிடந்து, பெரும்பாலும் பிரக்ஞையற்றவனாக இருந்தேன். எனக்குக் கொஞ்சம் ஞாபகம் வந்ததும், (தாந்த்ரீக ஸாதனைகளை உபதேசித்த) பிராம்மணி, என்னை ஸ்நானத்துக்கு அழைத்துச் செல்வாள். ஆனால், அவள் எனது சரீரத்தைத் தொடமுடியவில்லையாகையால், ஒரு கனத்த துப்பட்டியை என்மீது போர்த்தி, போர்த்திய துணியின்மீது தன் கையை வைத்து என்னை அவள் பிடித்துக்கொண்டு செல்வாள். சரீரத்தின்மீது பூசிய மண்ணும் கருகிப் போயிற்று! அந்த நிலை வரும்போது, என் முதுகெலும்பின் வழியே ஒரு பெரிய ஈட்டியைச் சொருகினாற்போல உணர்வேன். சிற்சில வேளைகளில் நான் இறந்து போகிறேனென்றும் அழுதிருக்கிறேன். ஆனால், அதன் பிறகெல்லாம் அளவுக் கடங்காத ஆனந்தம் எனக்கு உண்டாகும்.

791. 'மஹாபாவம்' என்பது ஈசுவர தியானத்தின் மேலான நிலையாகும். அது உண்டாகும்போது, ஒரு யானையானது ஒரு குடிசையில் புகுந்து அதைக் குலுக்கிச் சின்னாபின்னமாக்குவதைப் போலச் சரீரமும் மனமும் பயங்கரமாக அலைக்கழிக்கப்படுகின்றன. ஆயினும் அந்த நிலையில் முன்னால் எவ்வளவு துன்பம் இருக்கிறதோ அவ்வளவு இன்பம் அப்பால் உண்டாகின்றது.

ரு. பக்தியும் ஞானமும்

பக்தியும் ஞானமும் முடிவில் ஒன்றே

792. தூய பக்தியும் தூய ஞானமும் ஒன்றேயாம்.

793. பிரம்மம் என்று வேதாந்திகள் கூறும் பொருளைத்தான், ஆத்மன் என்று யோகிகளும், பகவான் என்று பக்தர்களும் சொல்லுகின்றனர். பூஜை செய்யும்போது அர்ச்சகன் என்று சொல்லப்படும் பிராம்மணனே, மடைப்பள்ளியில் வேலை செய்யும்போது சமையல்காரன் எனப்படுகிறான்.

794. ஞானம் அல்லது அறிவு என்பதின் உண்மைப் பொருள் என்ன? "ஈசுவரா! இவ்வுலகமாகிய நாடகசாலையில் நீர் ஒருவரே எல்லாரையும் ஆட்டிவைக்கிறீர். நான் உமது கைகளில் அகப்பட்ட ஒரு சிறு கருவியாவேன். என்னுடையது என்று பாத்தியம் கொண்டாடக்கூடிய பொருள் ஒன்றுமே எனக்கில்லை. எல்லாப் பொருள்களும் உம்முடையனவே. நான், எனது குடும்பம், செல்வம், புண்ணியம் எல்லாம் உம்முடையனவே" என்று ஞானி சொல்லுகிறான்.

795. ஒரு பக்தன்:—ஸம்ஸார வாழ்க்கையில் இருக்கும்போதே ஒருவனுக்கு ஞானோதயமா யிருக்கிறது என்பதை எப்படி அறிய முடியும்?

பரமஹம்ஸர்:—பகவந் நாமத்தைக் கேட்டவுடன் எவனுக்கு மயிர்க் கூச்சலும் ஆனந்த பாஷ்பமும் உண்டாகின்றனவோ அவனுக்கு வாஸ்தவமான ஞானோதய மாயிருக்கிறது என்று தெரிந்துகொள்.

796. ஞானம் பக்தி இரண்டினையும் ஒற்றுமைப் படுத்தும் புராணக் கதை யொன்றுண்டு. ஸ்ரீராமசந்திரமூர்த்தி பக்தியிற் சிறந்த ஹனுமானைப் பார்த்து, "என் குழந்தாய்! எந்தப் பாவனையோடு என்னைக் காண்கின்றாய்; எவ்விதம் என்னைத் தியானம் செய்கின்றாய்?" என்று கேட்டார்.

"சில சமயம் பின்னப்படாத பூரணனான உன்னைக் காண்கிறேன். அப்போது பூரணமான உன்னிடத்து ஓர் அம்ஸம்—ஓர் திவலையாக என்னைப் பாவித்துக் கொள்கிறேன். உன்னை ஆதிநாயகனாகக் காணும் போது என்னை உன் அடித்தொண்டனாகக் கருதித் தியானம் செய்கிறேன். ஆனால் தத்துவஞானமாகிய உண்மை ஞானத்தையடையும் பாக்கியம் பெறும்போது நானே நீயாக—நீயே நானாகக் காண்கிறேன்" என்று ஹனுமான் பதில் கூறினார்.

797. குளத்தின் ஜலத்திலுள்ள பாசியைக் கொஞ்சம் ஒதுக்கினால், மறுபடியும் அது பரவி ஜலத்தை மறைத்துவிடும். ஆனால் மூங்கில் தட்டியால் தடுத்துவிட்டால் பாசி மறுபடியும் வந்து மூடாது. அது போல, ஏதோ ஒரு வேளை மாயையை அப்புறப்படுத்தினால், அது மறுபடியும் வந்து நம்மைத் துன்பப் படுத்தும். ஆனால் பக்தியாலும் ஞானத்தாலும் மனதுக்கு வேலி கட்டினால் மாயை மறுபடியும் திரும்பி வராமல் நின்றொழியும். வாஸ்தவமாக இப்படிச் செய்வதால்தான் ஈசுவரன் மானிட திருஷ்டிக்குப் புலப்படுவான்.

பக்தியே ஞானத்துக்கு வழிகாட்டும்

798. அத்வைத ஞானம் முடிவானது. ஆயினும் சேவகன் எஜமானனைப் பூஜிப்பதுபோலவும், பக்தன் பூஜ்யனை வணங்குவதுபோலவும் ஈசுவரனை முதலில் ஆராதிக்கவேண்டும். இதுதான் வெகு சுலபமான வழி. இவ்வழியே சென்றால் சீக்கிரத்தில் உயர்ந்த அத்வைத ஞானத்தைப் பெறலாம்.

799. அத்வைத ஞானமே மிகச் சிறந்ததாயினும், முதன் முதலில் "ஈசுவரன் வழிபடத் தகுந்தவன்; நான் வழிபாடு செய்யவேண்டியவன்" என்ற மனோபாவத்துடன் நீ பக்திபண்ண ஆரம்பிக்க வேண்டும். அப்பால் உனக்கு அந்த அத்வைத ஞானம் எளிதில் வரும்.

800. பிரம்மமும் பஞ்சபூதங்களின் வலையில் சிக்குண்டு கண்ணீர் சொட்டுகின்றது. கண்ணை மூடிக்கொண்டு 'முள்ளில்லை முள்ளில்லை' யென்று திரும்பத் திரும்பச் சொல்லலாம். ஆனால் தொட்டதும் நோய் உண்டாகிறது; கையை எடுத்துக் கொள்ளுகிறாய். அதேபோல, நீ பிறப்பு இறப்பு, நன்மை தீமை, சுகம் துக்கம், பசி தாகம் இவைகளுக்கு அப்பாற்பட்டவனென்றும், சுத்த புத்த முக்தன் என்றும் எவ்வளவு தான் விசாரணையின் மூலமாக அறிந்திருந்தாலும், சரீரம் நோய்வாய்ப் படும்போதோ அல்லது மனம் பல உலக ஆசாபாசங்களால் இழுப்புண்டு தகாத காரியங்கள் செய்யும்போதோ நீ மயக்குண்டு, துன்பப்பட்டு

பகுத்தறிவும் ஒழுக்கமும் இழந்து பரிதவிப்பாய். ஆகையால் பகவானது கிருபாகடாக்ஷத்தினுல் அல்லாமல், மாயை தான் வீசிய மோக வலையை அகற்றினுலல்லாமல் எவராலும் ஆத்மசாக்ஷாத்காரம் அடைய முடியாது. “வரப்ரசாதமளிக்கும் பராசக்தியே, மக்கள் பந்தத்தையும் அகற்று கின்ருள்” என்று தேவி மஹாத்மியத்தில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா? ஜகன்மாதா, வழியிலுள்ள தடங்கல்களை அகற்றினுலல்லாமல் ஒன்றும் கைகூடிவராது. மாயையாகிய பராசக்தி, சாதகன் மீது இரக்கங் கொண்டு சிறிது விலகிநின்ரு லல்லாமல் எவராலும் பகவானை அறிய முடியாது. பராசக்தி சாதகனிடம் தன் கருணையைக் காட்டும் அப்போதே அவன் பகவத் காக்ஷி அடையப்பெற்று சகல துன்பங்களி லிருந்தும் விடுபடுகிருன். எவ்வளவுக்கு ஓமம் அதிகம் சேர்க்கப்படு கிறதோ அவ்வளவுக்கு ஜீரண சக்தி ஏற்படும் என்று கூறுவர். ஆனுல் ஜீரணக் கருவியே கெட்டுப்போய் விடுமானுல் எவ்வளவு ஓமம் சாப்பிட் டாலும் ஜீரணமாகாது. அதேபோல் தேவியின் அநுக்ரகம் இருந்தா லல்லாமல் எவ்வளவுதான் நீ விசாரணையும் சாதனமும் செய்தாலும் ஒன்றும் பிரயோஜனமில்லாமற் போய்விடும்.

801. ஞான மார்க்கத்தைப் பின்பற்றுவோன் குணங்குறியற்ற எல்லைகடந்த, அகண்ட சச்சிதானந்த, பிரம்மத்தை சாக்ஷாத்கரிக்க அபேக்ஷை கொள்ளுகிருன். ஆனுல் இந்தக் கலிகாலத்தில் இவ்வித மக்கள் பகவானிடத்தில் பக்தி செலுத்திப் பிரார்த்தனை புரிந்து ஆத்ம சமர்ப்பணம் செய்வதுதான் சிறந்ததாகும். பக்தன் பிரம்ம ஞானமும் வேண்டி வேட்கை கொள்வானுனல் பகவான் அதனையும் தந்து ஆசிர் வதிப்பார். இவ்விதம் அந்த ஞானி பக்தி, ஞானம் ஆகிய இரண்டினையும் அடையப் பெறுகின்ருன். அவன் நிர்க்குணப் பிரம்மத்தை சாக்ஷாத் கரிப்பதோடு பகவத் கடாக்ஷம் இருந்தால் அவன் பக்தர்கள் உபாசிக்கும் குணங்களோடு கூடிய ஈசுவரனையும் தரிசிக்கின்ருன். சாதாரணமாக பக்தன் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள சகுணக் கடவுளின் தரிசனத் தோடு திருப்தி யடைந்துவிடுகிருன். ஆனுல் பகவானே அப்பக்தனைத் தன்னுடைய சகல ஐசுவரியங்கட்கும் உரிமையாளனுக ஆக்குவதோடு, சகுணம் நிர்க்குணம் ஆகிய தனது இரண்டு தன்மைகளையும் அவன் காணுமாறு அருள் பாலிக்கிருன். ஒருவன் எப்படியாவது கல்கத்தா நகரத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டால் அங்குள்ள பொருட்காட்சிச் சாலைகள், பெரிய கடைத் தெருக்கள், மைதானங்கள் இவைகளைக் காண் பது கஷ்டமான காரியமாகத் தோன்றுமா?

802. ஜீவாத்மாவால் பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்க முடியும். அப்போதுதான் ஒருவன் “அவனே நான்” என்று உணர்ந்து சொல்லக்கூடும். ஒரு வீட்டில் நெடுநாளாக வேலை செய்து வந்த வேலைக்காரன் ஒருவன், காலக்கிரமத்தில் அவ்வீட்டார்களுள் ஒருவ னுகவே பாவிக்கப்படலாம். வீட்டு எஜமானன் இவனுடைய வேலைத் திறமையைக் கண்டு மகிழ்ந்து, ஒருநாள் அவனைத் தன்னுடைய ஆஸனத் தில் உட்காரச் செய்து தன்னைச் சுற்றியுள்ளவர்களை நோக்கி, “இந்த

க்ஷணமுதல் எனக்கும் இவனுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை. நானும் இவனும் ஒன்று. எனது கட்டளைக்குக் கீழ்ப்படிவதைப்போல இவனுடைய கட்டளைக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். இல்லா விட்டால் தண்டிப்பேன்" என்று சொல்லலாம். அப்போது அந்த வேலைக்காரன் ஸங்கோசத்தினால் இந்தப் புதிய கௌரவத்தைக் காட்டிக் கொள்ளத் தயங்கலாமானாலும், எஜமானன் அவனைக் கட்டாயப்படுத்தி கௌரவ ஸ்தானத்தில் வைப்பான். ஈசுவரனை நெடுங்காலம் வழிபட்டு அவனுடன் ஐக்கியமான தன்மையை உணர்ந்த ஜீவர்களுடைய நிலைமை யும் இப்படிப்பட்டதுதான். ஈசுவரன், தன் மஹிமையையும் குணங் களையும் இவர்களுக்கு அருளி, இவர்களைத் தனது ஒப்பற்ற ஸ்தானத் துக்கு உயர்த்துகிறான்.

803. பக்தன் பொதுப்பட பிரம்ம ஞானம் வேண்டுகிறதில்லை; நிர்க்குணப் பிரம்மத்தை உபாசிக்கிறதில்லை; சகுணக் கடவுளான ஈசு வரனை உபாசிப்பதிலேயே திருப்தி கொள்ளுகிறான். ஸ்ரீ கிருஷ் ணனாகவோ, ஜகன்மாதாவாகவோ, ஸ்ரீ சைதன்யர் அல்லது வேறு எந்த அவதார புருஷராகவோ அவனைத் தரிசிக்க ஆவல் கொள்கின்றான். அவன் சர்க்கரையாக மாறிவிட விரும்புகிறதில்லை; சர்க்கரையை ருசி பார்க்க ஆசைப்படுகின்றான். பிரம்மத்துடன் ஒன்றாகக் கலந்துவிட விரும்புகிறதில்லை; ஈசுவரனது ஆநந்தத்தை அநுபவிக்க சமாதியில் தன் அகங்காரத்தை இழக்காமல் அதை வைத்துக்கொண்டிருக்கிறான்.

804. (சகுணப் பிரம்மமாகிய) எனது ஜகதம்பிகை, தானே வேதாந்திகளது நிர்க்குணப் பிரம்மமாக இருப்பதாகவும் கூறி யிருக்கிறாள். ஜீவனைச்சார்ந்த ஆசாபாசத்தை அகற்றி, பிரம்ம ஞானத் தைக் கொடுக்கும் ஆற்றல் அவளிடம் இருக்கிறது. ஆகையால் எனது அம்பிகை விரும்பினால்தான் நீ உண்மையான விசாரணையின் மூலமாகப் பரப்பிரம்மத்தை அடையமுடியும். பக்தியின் மூலமாகவும் நீ அதை யடையப்பெறலாம். அறிவும், அன்பும், அவளிடத்துச் சரணாகதியும் வேண்டும் என்று இடைவிடாமல் பிரார்த்திப்பதுதான் பக்தியின் சார மாகும். முதலில் (சகுணக் கடவுளான) என் அம்பிகையை இவற்றின் மூலமாக அடைய முயல்வாய். உன் பிரார்த்தனை உள்ளத்தின் அடியி லிருந்து எழுமானால், கொஞ்சம் காலதாமதமானாலும், தேவி நிச்சயம் அருள் பாலிப்பாள் என்று நான் உறுதிகூறுகிறேன். அவளை நிர்க்குண மாகக் காணவேண்டுமானால் மேலும் அவளையே பிரார்த்தனை செய்வாய். பராசக்தியாகிய அவள் உன் பிரார்த்தனைக்கு இணங்கினால், சமாதியில் நிர்க்குணமான தனது மற்ற நிலையையும் உனக்கு அனுக்கிரகம் செய் வாள். பிரம்ம ஞானம் என்பது இதுதான்.

ஞானியின் மனோ நிலைக்கும் பக்தனின் மனோ நிலைக்கும் வேறுபாடு உண்டு

805. சாதகர்கள் குரங்குக் குட்டிகளைப் போன்றவரும் பூனைக் குட்டிகளைப் போன்றவருமென இருவகைப் படுவார்கள். குரங்குக்குட்டி-

தன் தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறது. பூனைக் குட்டியோ, தாயைப்பிடித்துக்கொள்ளச் சக்தியற்றதாய், பரிதாபகர மாகக் கத்திக்கொண்டு விட்ட இடத்திலேயே கிடக்கிறது. குரங்குக் குட்டி, தன் பிடியை விடுமானால் கீழே விழுந்து காயமுறும். தன்னு டைய சொந்தச் சக்தியில் நம்பிக்கை கொண்டிருப்பதே இதற்குக் காரணம். பூனைக்குட்டியோ இவ்வித அபாயத்துக்கு ஆளாவதில்லை. ஏனெனில், அதன் தாயே அதை ஓரிடம் விட்டு மற்றோரிடத்துக்குத் தூக்கிச் செல்கின்றது. இதைப்போல, ஞானமார்க்கத்தைக் கைப்பற்றிய ஆத்மார்த்தி, மோக்ஷமடைவதற்குச் சுயப் பிரயத்தனத்தையே நம்பி யிருக்கிறான். பக்திமார்க்கத்தைக் கைப்பற்றிய ஆத்மார்த்தியோ எல்லாம் ஈசுவரனுடைய இச்சைப் பிரகாரம் நடக்குமென்பதைத் தெரிந்து கொள்கிறான். ஆகவே அவனுடைய கிருபைக்குப் பாத்திரனாக வேண்டுமென்று சரணாகதி பண்ணுகிறான். முன்னவன் குரங்குக் குட்டியைப் போன்றவனும், பின்னவன் பூனைக்குட்டியைப் போன்ற வனுமாகிறார்கள்.

806. "நானே அவன், நான் அந்த சுத்த ஆத்மன்" என்று ஞானி சொல்கிறான். பக்தனோவெனில், "இவை யெல்லாம் ஈசுவரனு டைய மஹிமையே!" என்கிறான்.

807. "இஃதெல்லாம் நானே", "இவையெல்லாம் நீயே", "நீ எஜமானன், நான் தாஸன்" என்ற இந்த மூன்றில் எதையேனும் ஒன்றைச் சொல்லக்கூடிய மனநிலைமை எப்போது பக்குவமாகுமோ, அப்போதுதான் மனிதன் ஈசுவரனை அடைவான்.

808. பரமசிவனுடைய அம்சத்துடன் பிறப்பவன் ஞானியாகி றான். பிரம்மம் மட்டும் உண்மை, இவ்வுலகம் மாயை என்பதையே அவன் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பான். ஆனால், விஷ்ணு வின் அம்சத்துடன் பிறப்பவனிடத்து பக்தியும் சிரத்தையும் ஒரு போதும் குறைவதில்லை. பலமான யுக்திவாதத்தினால் அவை ஒரு சிறிது குறைவுபட்டாலும், காலக்கிரமத்தில், யாதவ குலத்தை அழிக்கவந்த உலக்கையைப்போல, வரவரப் பெருகும்.

809. ஞானியின் ஹிருதயத்தில் பிரவாகமாகும் அறிவாகிய கங்கை ஒரே ஒரு திக்கை நோக்கித்தான் ஓடுகின்றது. அவனுக்கு இந்த உலகம் முழுவதும் ஒரு கனவு. அவன் எப்போதும் தனது ஆத்ம ஸ்வரூபத்திலேயே லயித்திருக்கிறான். ஆனால் ஒரு பக்தனுடைய ஹிரு தயத்திலுள்ள பிரேமையாகிய கங்கையோ ஒரே திசையில் எப்பொழு தும் ஓடிக்கொண்டிருப்பதில்லை. சில சமயம் அது பெருக்கெடுத் தோடும்; சில சமயம் வடியும். பக்தன் சில வேளைகளில் சிரிப்பான், சில வேளைகளில் அழுவான்; ஆடுவான், பாடுவான். அவன் கடவு ளுடைய சந்நிதானத்தில் இருக்கவும் இன்புறவும் விரும்புகிறான். தண்ணீரில் மிதக்கும் பனிக்கட்டியைப்போல அவன் பரமானந்த சாக ரத்தில் சில சமயம் நீந்தியும் சில சமயம் மூழ்கியும் சில சமயம் மிதந்தும் கிடக்க விரும்புகிறான்.

810. பக்தன் ஈசுவரனிலிருந்து வேறுபட்டவன் என்று புராணங்கள் கூறுகின்றன. உயிர் ஒன்று; இறைவன் வேறு, என்று பக்தன் கூறுகின்றான். மேலும் அவன், இந்த சரீரம் ஒரு பாத்திரத்துக்குச் சமானம். மனம், புத்தி, அஹங்காரம் என்பன அப்பாத்திரத்தில் இருக்கும் ஜலத்துக்குச் சமானமாகும் என்கிறான். ஆனால் வேதாந்தமோ, பிரம்மம்மட்டும் உண்மை, அதாவது நித்யமென்றும், மற்றவையெல்லாம் மாயை, அதாவது கனவைப்போல அநித்யமென்றும் கூறுகின்றது. பிரம்மமாகிய ஸமுத்திரத்தில் 'நான்' என்ற கோல் கிடக்கிறது. அக்கோலை எடுத்துவிட்டால் ஜலப் பரப்பில் பிரிவு ஏற்படுவதில்லை. கோல் அங்கிருக்கும்போது ஜலமானது கோலுக்கு இருபுறத்திலும் பிரிவுபட்டதுபோலத் தோன்றுகிறது; ஸமாதி நிலையில் ஒருவனுக்குப் பிரம்மஞானம் உண்டாகிறது; அப்போது அஹங்காரம் அழிகின்றது.

811. நாரதரும் மற்றைய ஆசார்யர்களும் ஞானமடைந்த பின்னரும் மனித கோடிகளின் உஜ்ஜீவனார்த்தமாகப் பக்தியைக் கைக்கொண்டிருந்தனர்.

812. பக்தி சந்திரனுக்கும் ஞானம் சூரியனுக்கும் சமானம். வடக்கிலும் தெற்கிலும் நெடுந்தூரத்துக்கப்பால் ஸமுத்திரங்கள் இருக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே குளிர் வெகு அதிகமாதலால், சமுத்திரஜலம் ஆங்காங்கு உறைந்து பெரும் பெரும் பனிப்பாறைகள் ஆகின்றதென்றும், அப்பாறைகளின் இடையில் கப்பல்கள் அகப்பட்டுக்கொண்டு வெளியே போக முடியாமல் நின்றுவிடும் என்றும் கேள்வி. அதுபோல, பக்தி மார்க்கத்தின் இடைவழியில் மனிதர்களும் இம்மாதிரி அகப்பட்டுக்கொண்டு திகைப்பார்களா ?

ஆமாம்; அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால், அதனால் பாதகம் ஒன்றுமில்லை. ஏனெனில் இந்தப் பனிக்கட்டி சச்சிதானந்த ஸாகரத்தின் ஜலஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றுமில்லை. "பிரம்மம் மட்டும் வாஸ்தவம், உலகம் மாயை" என்று நீ நினைப்பாயானால் இந்தப் பனிக்கட்டியானது ஞானமாகிய சூரியனால் உருகிக் கரைந்துபோம். அப்பால் என்ன எஞ்சி நிற்கும்? சச்சிதானந்த ஸாகரத்தின் ஜலந்தான்.

813. ஞானம் புருஷனுக்கும், பக்தி ஸ்திரீக்கும் சமானமாகும். ஞானமோ ஈசுவர மாளிகையின் முன்மண்டபம் வரையில்தான் செல்லும்; பக்தி அவரது அந்தப்புரத்தினுள்ளும் போகும்.

814. ஒரு ஞானியும் ஒரு பக்தனும் ஒரு காட்டுவழியே போய்க்கொண்டிருந்தனர். வழியில் ஒரு புலி வந்தது. "நாம் ஓடவேண்டிய அவசியம் இல்லை; ஈசுவரன் நம்மை நிச்சயமாகக் காப்பாற்றுவான்" என்றான் ஞானி. அதற்குப் பக்தன், "தம்பி, அப்படியல்ல! நாம் ஓடிப்போவோம். நம்மால் சாத்தியமாகக் கூடிய காரியத்துக்கு நாம் ஏன் ஈசுவரனுடைய உதவியை விரும்பி அவனைச் சிரமப்படுத்த வேண்டும்?" என்றான்.

௪. கருமமார்க்கம்

கருமயோகம் என்றால் என்ன?

815. கருமத்தின் மூலமாகக் கடவுளை யடைவது கருமயோகம் எனப்படும். அஷ்டாங்க யோகம் என்று சொல்லப்படும் ராஜயோகமும் பலன் கருதாமல் செய்யப்படுமானால் கருமயோகமே யாகும். அது தியானம் தாரணை இவைகளால் பகவானை அடையச் செய்கிறது. கிருகஸ்தனால் செய்யப்படும் கருமங்கள் (பரோபகார கருமங்களும் தேசிய, சமூக சம்பந்தப்பட்ட கருமங்களும்) கடைசி வரையில் பற்றுதலற்றுப் பகவானைப் போற்றுவதற்காகவே செய்யப்படுமானால் அவையும் கருமயோகமெனப்படும். அவனைப் போற்றும் பொருட்டே சாஸ்திர விதிப்படி பூசைகள் செய்வதும், பகவன் நாமத்தை மனத்திலே உச்சரிப்பதும் பிற பக்திமார்க்கங்களை அநுசரிப்பதும் கருமயோகமாகும். கரும யோகமானது கடைசியில் மற்ற யோகங்களைப்போல சகுணம் அல்லது நிர்க்குணம் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையுமோ சாக்ஷாத்கரிப்பதில் கொண்டுபோய்விடும்.

816. சத்வகுணமுள்ளவர்களுக்குக் கருமங்கள் செய்யவேண்டிய அவசியமில்லை. கருமங்கள் தாமாகவே அவர்களை விட்டு விலகி விடுகின்றன. வலிய முயன்றாலும் அவர்களால் கருமஞ் செய்ய முடியாது. கடவுள் அவர்களைக் கருமஞ் செய்யவிடமாட்டார். கர்ப்பமாயிருக்கும் மருமகப்பெண், வீட்டு வேலைகளிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக விடுவிக்கப்படுகிறாள்! குழந்தை பிறந்த பிறகு அவள் முழுக் கவனத்தையும் குழந்தையைப் பராமரிப்பதிலேயே செலுத்தும்படி விடப்படுகிறாள். அதேபோல, சத்வகுணமுள்ளவர்களது கருமங்களையும் பகவான் அகற்றிவிடுகின்றார். ஆனால் சத்வ குணம் வாய்க்கப் பெறாத மக்கள், எல்லா உலகக் கடமைகளையும் கவனிக்கவேண்டும். ஒரு பணக்காரனுடைய வேலையாள்போலத் தன்னை பாவித்துக்கொண்டு, வீட்டு அலுவல்களை யெல்லாம் கவனிக்கவேண்டும். இதுவே கருமயோகமெனப்படும். இவ்வித பரித்யாக புத்தியோடு சகல கருமங்களையும் புரிந்துகொண்டு, பகவன் நாமத்தை உச்சரித்து அவனைத் தியானம் செய்வதிலேயே கருமயோகத்தின் சாரமெல்லாம் அடங்கும்.

817. நீ ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள் எல்லாம் ஆயிரமடங்காக உனக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ஆதலால், நீ செய்யும் சத்கருமங்களின் பலன் எல்லாம் "கிருஷ்ணார்ப்பணமாகட்டும்" என்று கருதி, ஒரு கை ஜலம் அள்ளிவிடவேண்டும்.

818. யுதிஷ்டிரர் தம்முடைய பாபங்களைக்கூட கிருஷ்ண பரமாத்மாவுக்கு அர்ப்பணம் பண்ணப்போகையில், "அப்படிச் செய்யாதீர்கள்; கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் பண்ணும் பொருள்கள் எல்லாம் ஆயிரம் மடங்காகி உம்மிடம் திரும்பிவரும்" என்று பீமசேனன் சொல்லித் தடுத்தான்.

கருமயோகத்துக்குக் காப்பாக அமையும் பக்தி

819. இக்காலத்தில் பற்றுதலற்றுக் கருமம் செய்வதென்பது சிரம சாத்தியமான காரியமாகும். ஞானம், கருமம் இவைகளைக் காட்டிலும் பக்தி பிரார்த்தனை இவைகள் மூலம் பகவானை அடைதல் இக்காலத்துக்கு ஏற்ற மார்க்கமாகக் கருதப்படுகிறது. எவராலும் கருமத்தை விடமுடியாது என்பது உண்மையே. "நான் நினைக்கிறேன்; நான் உண்கிறேன்" என்று சொல்லப்படும் மனத்தின் செயல்கள் ஒவ்வொன்றும் கருமமே. பக்தி மார்க்கத்தின் மூலமாகச் செய்யப்படும் கருமங்கள் சுலபமாக்கப்படுகின்றன. எப்படியெனில் பற்றுதலற்ற கருமம் செய்ய வேண்டும் என்னும் நியதியைக்காட்டிலும் இது சுலபமானதாகிறது. முதலாவது, மனத்தை ஈடுபடுத்தி இஷ்டத்தில் நிலைநிறுத்துவதால் கருமத்தின் அளவு குறைந்து விடுகின்றது. இரண்டாவது, செய்யப்படும் கருமங்கள் பகவத் பிரீதியாகச் செய்யப்படுவதால் பற்றுதலற்றவையாகின்றன. ஒரே சமயத்தில் பகவானிடத்தும், உலக சம்பத்துக்களான புகழ், பொருள், செல்வம், கீர்த்தி இவைகளிடத்தும் அன்பு செலுத்த முடியாது. சீனு கற்கண்டால் செய்யப்பட்ட பானகம் சாப்பிட்ட ஒருவன் வெல்லத் தண்ணீரை அருந்த விரும்புவானு?

820. இக்காலத்தில் பகவானிடம் பக்தியில்லாமல் செய்யப்படும் கருமங்கள் போதிய அஸ்திவாரமில்லாமல் மணல்மேல் கட்டப்பட்ட கட்டடத்துக்கு ஒப்பாவன. ஆகவே முதலில் பக்தியைத் தேடிக்கொள். பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் இவைகள் எல்லாம் வேண்டுமானுல் பின்னர் உன்னை வந்தடையும். முதலில் பக்தி; அதன் பிறகே கருமம். பகவத் பக்தியில்லாமல் இயற்றப்படும் கருமங்கள் பிரயோஜனமற்றவை; ஒன்றுக்கும் பயன்படமாட்டா.

821. கலியுகத்துக்கு நாரதீயபக்தி விதிக்கப்பட்டிருக்கிறது. (அதாவது நாரத ரிஷி அனுஷ்டித்ததுபோல பக்தி, அன்பு, சரணுகதி இவைகளால் ஈசுவரனை அடைவது). கருமயோகத்திற்கு, அதாவது மனிதனுல் செய்யப்பட வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதிக்கும் பல விதமான கருமாக்களைச் செய்வதற்கு, சாவகாசம் போதாது.

தற்காலத்தில் உண்டாகும் ஜுரங்களுக்குப் பழையகாலத்து முறையான 'தசமூல கஷாயம்' என்ற மருந்து ஆவதில்லை யென்பதை நீ காணவில்லையா? மருந்தின் குணம் தெரியுமுன் நோயாளியின் உயிர் போய்விடும் ஸ்திதி வந்துவிடுகின்றது. ஆதலால் 'பீவர்மிக்ஸர்' என்னும் ஜுரமருந்துதான் இக்காலத்துக்கு ஏற்ற ஔஷதம்.

822. ஒரு சிஷ்யர் "கருமத்தில் மும்மரமாக ஈடுபடும்போது மனம் பகவானிடம் செல்லாமல் தடுக்கப்படுமல்லவா?" என்று கேட்டதற்குப் பகவான் மறுமொழி கூறியதாவது: "ஆம், உண்மைதான். ஆனுல், ஞானி பற்றுதலற்றுக் கருமம் செய்கின்றுன்; அதனுல் அவனுக்கு ஒரு தீங்கும் உண்டாகிறதில்லை. நீயும் மனப் பூர்வமாக விரும்புவாயானுல் உனது கரும பந்தங்களைப் படிப்படியாக அகற்றி விடுவதற்குப் பகவான் உதவி செய்வார்."

823. இந்தியாவின் பரோபகாரிகளில் ஒருவரான ஈசுவர சந்திர வித்யாசாகரரைப் பார்த்து பகவான் கூறியதாவது: "உங்கள் ஸ்வபாவம் பிரம்ம ஞானத்திற்குக் காரணமாகிய ஸத்வகுணம் பொருந்தியது. அந்த ஸத்வகுணம்தான் தங்களை ஸத்கருமம் செய்யத் தூண்டுகின்றது. தானம், தயை, பிறர்க்கு நன்மை செய்தல் முதலியவைகளைப் பக்தியோடு பற்றுதலின்றிச் செய்தால் அவை உம்மை பகவானிடத்திற் சேர்ப்பிக்கும்."

824. தியான காலத்தில் மாத்திரம் பகவானை நினைத்துக் கொண்டு மற்றக்காலங்களில் பகவானை மறந்து விடவேண்டுமா? துர்க்கா பூஜா காலங்களில் பிரதிமைக்கருகில் சதா விளக்கெரிந்து கொண்டிருப்பதைக் காணவில்லையா? அவ்விளக்கு எப்போதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும். அது ஒரு முறை அணைந்து விடுமானால் அவ்வீட்டுக்காரனுக்கு ஏதாவது ஓர் இடையூறு ஏற்படும். அதேபோல உனது ஹ்ருதய கமலத்தில் பகவானை ஸ்தாபனம் செய்துவிட்டபிறகு எண்ணமாகிய விளக்கு எப்போதும் அங்கு எரிந்து கொண்டே இருக்கவேண்டும். லௌகிக கருமங்களில் ஈடுபட்டிருக்கும்போதும் அடிக்கடி உள்நாட்டம் கொண்டு அவ்விளக்கு எரிகின்றதா என்பதைப் பார்ப்பாயாக.

அன்புடன் செய்யப்படும் பணி ஆராதனையாகும்

825. ஸ்ரீ கௌரங்க தேவருடைய கொள்கைகளைப் பற்றிப் பகவான் ஒரு நாள் இவ்விதம் விளக்கிக் கொண்டிருந்தார்:—"பகவன் நாமத்தில் பிரீதி கொள்வது, சகல ஜீவராசிகளிடத்தும் இரக்கம் காட்டுவது, பகவானது அடியார்களாகிய பாகவதர்களுக்குச் சேவை செய்வது ஆகிய இம்மூன்றையும் ஒருவன் எப்போதும் விருத்தி செய்யவேண்டும் என்பது அவர்கள் கொள்கை. கடவுளும் அவனது திருநாமமும் அநந்யமானவைகள். அவ்விரண்டிற்கும் வித்தியாசமில்லை. இதனையறிந்து பயபக்தியுடனும் உற்சாகத்துடனும் பகவந் நாமத்தைப் பஜிக்க வேண்டும். பகவானுக்கும் பாகவதர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் வைஷ்ணவர்களுக்கும் வித்தியாசமில்லையென்பதை உணர்ந்து அடியார்களான பாகவதர்களுக்குச் சிரத்தா பக்தியுடன் சேவை செய்யவேண்டும். ஜகத்முழுதும் பகவானது குடும்பமாதலால் அதிலுள்ள சகல ஜீவராசிகளிடத்தும் இரக்கம் காட்டவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே போகும்போது கடைசி வாக்கியத்தில் கூறப்பட்ட 'இரக்கம்' என்ற பதத்தை அரைகுறையாக உச்சரித்தவண்ணம் பகவான் சமாதியில் ஆழ்ந்துவிட்டார். சிறிது நேரம் பொறுத்து சமாதி கலைந்து, உடலுணர்ச்சி வரப்பெற்று, பகவான் மேலும் கூறியதாவது: "ஜீவராசிகளிடம் இரக்கமா! ஜீவராசிகளிடம் இரக்கமா! சீ, புழுவுக்கும் அற்பனான நீயா மற்றப் பிராணிகளிடம் இரக்கம் காண்பிக்கப் போகின்றாய்! என்ன கர்வம்! நீ யார் அவைகளிடம் இரக்கங் காண்பிக்க! இல்லை, இல்லை; ஜீவராசிகளிடம் இரக்கமில்லை சேவை; அவைகளெல்லாம் பகவத் சொரூபமென்று கருதிச் சேவை செய்வாய்."

கருமம் ஒரு சாதனமேயன்றி முடிவில் எய்தவேண்டிய நிலையன்று

826. சமூகச் சீர்திருத்த வேலைகளில் ஆர்வங்கொண்ட, சில வாலிபர்களைப் பார்த்து பகவான் கூறியதாவது : "உலகத்துக்கு நன்மை செய்ய வேண்டுமென்று உளறுகின்றீர்கள்! நீங்கள் உதவ விரும்பும் உலகம் அற்பமானது என்று கருதுகின்றீர்களா ? உலகத்துக்கு உதவி செய்ய நீங்கள் யார்! முதலில் பக்திபண்ணிப் பகவானைக் காண முயல்வீர். அதன் மூலமாக சக்தியும் பகவத் கடாக்ஷமும் பெறுவீர். நன்மை செய்வது என்பதைப்பற்றிப் பின்னர் பேசிக்கொள்ளலாம்; அதற்குமுன் வேண்டாம்."

"அப்படியானால் கடவுளைக் காண்கிறவரை நாங்கள் எல்லா கருமங்களையும் விட்டுவிட வேண்டுமென்கின்றீர்களா ?" என்று ஒருவர் வினவினர்.

பகவான் : "அப்படியன்று ; நீர் ஏன் கருமங்களை எல்லாம் விட வேண்டும்? தியானம், ஜபம், பகவத் சங்கீர்த்தனம் முதலிய பக்தி சாதனங்களுக்கு அநுசரணையான கருமங்களை நீர் செய்தே ஆகவேண்டும்."

பக்தர் : லௌகிக சம்பந்தமான கருமங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றேன். அவைகள் எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமோ ?"

பகவான் : "வாழ்க்கை நடத்த எவ்வளவு அவசியம் வேண்டுமோ அவ்வளவு அத்தகைய கருமங்களைச் செய்யலாம். அதே சமயத்தில் இகபர தண்டனைக்குப் பயப்படாமலும், சுவர்க்க ஆசைகளில் ஈடுபடாமலும் இருப்பதற்கான மனோதிடமும் சக்தியும் தந்து கருமம் இயற்ற அநுக்ரகிக்கும்படி மனமுருகிக் கண்ணீர் சொரிந்து அழுது பகவானைப் பிரார்த்திப்பீராக."

827. உன்னால் கருமம் செய்யாமல் இருக்க முடியாது. ஸ்வபாவம் ஒவ்வொருவனையும் கருமம் செய்யும்படி ஏவுகின்றது. ஆகையால் கருமங்கள் செய்யப்படும் வகையிலே செய்யப்படட்டும். கருமம் பற்றுதலின்றிச் செய்யப்படுமானால் அது பகவானிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும். இகபரங்களில் உண்டாகும் பாவ புண்ணியங்களில் வெறுப்பு விருப்புக்கொள்ளாமல் செய்யப்படும் கருமம் பற்றுதலற்றதாகும். இவ்வித மனோபாவத்துடன் செய்யப்படும் கருமம் முடிவாகிய கடவுளிடம் கொண்டுபோகும் மார்க்கமாக அமைகின்றது.

828. கருமம் செய்தலே வாழ்க்கையின் முடிவன்று ; அது மார்க்கமே. பற்றுதலற்றுச் செய்யப்படுமானால் அது வாழ்க்கையின் முடிவாகிய இறைவனிடம் அழைத்துச் செல்லுகிறது. மார்க்கத்தை முடிவென்று மருள்கொள்ள வேண்டாம். ஓர் ஊருக்குச் செல்லும் மார்க்கம் ஊராகிவிடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படிச் சொல்லுகிறேன். கருமம் செய்தலே மனிதவாழ்க்கையின் இலக்ஷியம் என்று கருதாதே. பகவானிடம் பக்தி வேண்டும் என்று பிரார்த்

தனே செய்வாய். பகவானைக் காணும் பாக்யம் உனக்குக் கிடைத்தால், நீ அவரிடம் என்ன கேட்பாய்? வைத்தியசாலைகள், குளங்கள், பாடசாலைகள், அன்ன சத்திரங்கள் இவைகள் வேண்டும் என்று இறைஞ்சுவாயா? இவைகளெல்லாம் நாம் கடவுளைக் காணும் வரையில் நமக்கு உண்மையாகத் தோன்றும். ஆனால் கடவுளை நேருக்கு நேர் கண்டதும் இவையனைத்தும் நிலையில்லாதனவாகக் கனவில் காணப்படுவன போலத் தோன்றும். ஆகையால் அவனிடம் அன்பு வேண்டியும், அறிவு வேண்டியும் பிரார்த்திப்போம். அவனிடம் அன்பு செலுத்துவதால் மனிதத் தன்மையிலிருந்து நாம் தெய்வத் தன்மைக்கு உயர்த்தப்படுவோம். அவ்வன்பு, பராபரவஸ்துவும், அறிவு ஆனந்தத்திற்கு உறைவிடமுமான பகவானது உரிமைப் புதல்வர்கள் என்ற நம்பிக்கையை நம்மிடம் எழச் செய்கிறது.

829. சம்புமல்லிக் ஒருமுறை என்னிடம் வந்து பிறர் நன்மைக்காக வைத்தியசாலைகள், கலாசாலைகள், கல்லூரிகள் திறக்கவேண்டும், கிணறுகள் குளங்கள் வெட்டவேண்டும், வழிச்சாலைகள் போடவேண்டும் என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு இருந்தார். அப்போது நான், 'ஆனால் பிறர்க்கு நன்மை விளைக்கும் அவ்வித காரியங்கள் செய்யும்போது பற்றுதலற்று இருக்கவேண்டும். நீரே வலியத்தேடாமல் உம்மை வந்து அடைபவைகளில் மிக அவசியமான கருமங்களை மாத்திரம் நீர் செய்யவேண்டும். எப்போதும் கருமங்களை வலியத் தேடித் திரியவேண்டாம்; உம்மால் சரிவர இயற்ற முடியாத கருமங்களை ஏற்கவேண்டாம். இப்படிச் செய்யவில்லையாகில் நீர் கடவுளை மறக்கநேரிடும்' என்று கூறினேன்.

830. சுத்த ஸத்வம் மனிதனிடம் ஓங்கும்போது, அவன் ஈசுவரனைப் பற்றி மட்டுமே தியானிப்பான். மற்றக் காரியங்களில் அவனுக்கு இன்ப முண்டாவதில்லை. பிராரப்தத்தின் பயனாகச் சிலர் இந்த ஸத்வகுணத்துடனேயே பிறக்கின்றனர். ஆயினும் (பயன் கருதாமல் செய்தல்) நிஷ்காம கருமத்தைச் செய்துகொண்டே இருப்பவர்க்கும் இந்தச் சுத்த ஸத்வ குணம் உண்டாகும். ஸத்வ குணத்தோடு ரஜோகுணம் சேர்ந்திருந்தால் மனமானது பல வழிகளில் ஓடும். அப்போது, 'நான் உலகத்துக்கு நன்மை செய்வேன்' என்னும் அகங்காரம் உண்டாகிறது. உலகத்துக்கு நன்மை செய்ய முயல்வது சாதாரண ஜீவர்களுக்கு மிகவும் அபாயத்தைத் தரக்கூடியதாம். ஆனால், பயன் கருதாது பிறர்க்கு நன்மை உண்டாக உழைப்பது நல்லது. அதில் அபாயம் ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட கருமத்துக்கு 'நிஷ்காம கருமம்' என்று பெயர். அவ்விதமான கருமங்களைச் செய்வது நல்லதே. ஆனால், எல்லாராலும் அவ்வாறு செய்யமுடியாது. அவை அவ்வளவு கடினமானவை!

831. எல்லோரும் வேலை செய்யவேண்டி யிருக்கிறது. வெகு சிலர்தான் வேலையைத் துறந்திருக்க முடியும். அப்படிப்பட்ட சுத்த ஸத்வ குணம் வெகு சிலரிடத்துத்தான் காணப்படுகிறது. நிஷ்காம கருமங்களை ஒருவன் செய்துகொண்டே வந்தால், அவனது ஸத்வ

குணத்தில் கலந்திருக்கும் ரஜோ குணம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று போய், கடைசியில் சுத்த ஸத்வ குணம் மட்டுமே நிலைநிற்கும். இப்படிச் சுத்த ஸத்வ குணம் உண்டானால் ஈசுவர தரிசனம் லபிக்கும். சாதாரண மனிதர்களுக்கு இந்தச் சுத்த ஸத்வத்தின் தன்மை தெரியாது.

832. மனத்தில் ஈசுவர பக்தி பெருகிவரும்போது கருமத்தியாகமும் தானே வரும். இறைவனால் வேலை செய்விக்கப் படுபவர்கள்மட்டும் அவ்வாறு வேலை செய்யட்டும். தகுந்த காலம் வந்ததும் ஒருவன் எல்லாவற்றையும் தியஜித்துவிட்டு "மனமே, வா! ஹிருதயத்தில் உறையும் ஈசுவரனை நாம் இருவருமாகக் கண்டு களிப்போம்" என்று சொல்லவேண்டும்.

ஈசுவரனைச் சரணமடை. சங்கோசம், பயம் என்பவைகளை யெல்லாம் உதறிவிடு. "பகவந் நாமத்தைச் சொல்லிக்கொண்டு நான் கூத்தாடினால் ஊரார் என்ன நினைப்பார்களோ?" என்ற எண்ணத்தைத் தூர அகற்றிவிடு.

833. ஸந்தியாவந்தனம் காயத்ரியில் அடங்கிவிடுகிறது; காயத்ரி பிரணவத்தில் அடக்கம்; பிரணவமோ, முடிவில் ஸமாதியில் அடங்குகிறது. ஆகவே, ஸந்தியாவந்தனம் முதலிய கருமாக்கள் எல்லாம் முடிவில் ஸமாதியில் அடங்கிவிடுகின்றன.

834. மனம் சச்சிதாநந்தத்தில் லயமாகிறவரையில் ஒருவன் பகவன் நாமத்தை உச்சரிப்பதும் உலக காரியங்களைக் கவனிப்பதும் ஆகிய இரண்டினையும் செய்து வரவேண்டும். அவனிடத்தில் மனம் ஐக்யமானதும்,அவன் எந்தக் கருமமும் செய்யவேண்டிய அவசியமில்லை. உதாரணமாக சங்கீர்த்தனம் நடக்கும்போது ஆரம்பத்தில் ஒருவன் பாட்டு, தாளம், காலம் முதலிய எல்லாவற்றையும் கவனித்துப் பாடுகிறான். ஆனால் பாட்டின் பொருளில் ஈடுபட ஈடுபட அவன் வார்த்தைகள் குருகிவிடுகின்றன. பாட்டின் பொருளிலே அவன் முழு மனதும் செலுத்தப்படும்போது எல்லாவற்றையும் மறந்து பாட்டின் முதல் அடியை மாத்திரம் உச்சரித்துக்கொண்டிருக்கக் காணப்படவில்லையா?

835. ஆரம்பத்தில் கருமத்தைப்பற்றி அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் கடவுளை அணுகும் அளவுக்கு அவைகள் குறைந்துவருகின்றன. கடைசியில் ஸமாதிநிலை யடையப்பெற்றுச் சகல கருமங்களும் தியஜிக்கப் படுகின்றன. ஸமாதியடைந்த பிறகு சாதாரணமாகச் சரீரம் நெடுநாள் இருப்பதில்லை. நாரதர் போன்ற ரிஷிகள் விஷயத்திலும், ஸ்ரீசைதன்யர் போன்ற அவதார புருஷர்கள் விஷயத்திலும் வேறுவிதம். மனித வர்க்கத்திற்கு உபதேசம் செய்வதற்காக அவர்கள் சரீரம் அழிகிறதில்லை. சிலர் கிணறு வெட்டினதும் மண்வெட்டி, கூடைகள், கடப்பாறை இவைகளை எறிந்துவிடுகின்றனர். மற்றும் சிலர் பிறருக்கு உபயோகப்படும் என்று கருதிப் பத்திரப்படுத்தி வைக்கின்றார்கள். அத்தகைய உதார புருஷர்கள் உலகக் கஷ்டங்களைக் கண்டு பரிதாபம் கொள்கின்றனர். தங்களுக்கு மாத்திரம் ஞானத்தைத் தேடிக்கொள்ளும் சுயநலமுடையவர்களல்லர் அவர்கள்.

அத்தியாயம் 17

கடவுள்

[கடவுள் அருவுருவுக்கப்பாற்பட்ட பரம்பொருள்—கடவுளும் உலகின் உண்மையும்—ஈசுவரன், மாயை, சக்தி—எங்கும் கடவுள்—உருவமும் அருவமும்—கடவுளின் உருவங்களிற் சில—அவனன்றி ஓரணுவும் அசையாது—இறைவனருளும் கரும பலனும்]

கடவுள் அருவுருவுக்கப்பாற்பட்ட பரம்பொருள்

836. பிரம்மம் எப்படிப்பட்டது? அது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. சமுத்திரத்தைப் பார்த்திராத ஒருவனுக்கு அது இப்படிப் பட்டதென்று சொல்லும்படி வேறொருவனை நியமித்தால், அவன், "அது ஒரு பெரிய நீர்ப்பரப்பு; எங்குப் பார்த்தாலும் ஜலந்தான்" என்று மட்டுமே சொல்லக்கூடும்.

837. வேதங்கள், தந்திரசாஸ்திரங்கள், புராணங்கள் ஆகிய உலகிலுள்ள எல்லாக் கிரந்தங்களும் வாயினின்றும் கக்கிய சோற்றைப் போல, எச்சலாகிவிட்டன என்று சொல்லலாம். ஏனெனில் அவைகள் அடிக்கடி மனிதர்களுடைய வாயினால் உச்சரிக்கப்படுகின்றன. அகண்ட ஸ்வரூபமான பிரம்மமோ அப்படி ஒருபோதும் எச்சிலானதில்லை. ஏனென்றால், இதுவரையில் வார்த்தைகளால் அதை விவரித்துச்சொல்ல ஒருவராலும் முடியவில்லை.

838. பிரம்மத்தின் சுபாவம் என்ன? பிரம்மத்துக்குக் குணங்கள் இல்லை; சலனமில்லை. அது போக்குவரவற்றது; மகாமேரு பர்வதத்தைப்போல நிலைத்திருப்பது.

839. நன்மை தீமைகளோடு பிரம்மம் சம்பந்தப்படுகிறதில்லை. அது விளக்கின் ஒளிப் பிழம்பைப் போன்றது. ஆனால், விளக்கின் வெளிச்சத்தில் நீ பாகவதத்தைப் படித்தாலும் படிக்கலாம்; அவ்வெளிச்சத்தின் உதவியைக் கொண்டே பிறரைக் கெடுக்கவேண்டி ஒரு பொய்ப் பத்திரத்தையும் எழுதலாம்.

இன்னும், பிரம்மம் சர்ப்பத்தைப் போன்றது. பாம்பின் பல்லில் விஷமிருப்பதால் அப்பாம்புக்கு என்ன கெடுதி? அவ்விஷத்தால் அது சாவதில்லை. அப்பாம்பினால் கடிக்கப்படும் மற்றைய ஜீவப்பிராணிகளுக்குத்தான் அவ்விஷம் கெடுதி செய்கிறது.

அதைப்போலவே, இவ்வுலகத்தில் நாம் காண்கிற துன்பம் பாவம் முதலிய தீமைகள் எல்லாம் நமக்கு மட்டுமே தீமைகளாகவுள்ளன. பிரம்மமோ இவையனைத்துக்கும் அப்பாலும் புறம்பேயும் உள்ளது.

ஜகத் சிருஷ்டியிலுள்ள நன்மை தீமைகள் பிரம்மத்துக்கு நன்மை தீமைகள் ஆகா. மனிதர் நன்மை தீமைகளால் கட்டுப்பட்டிருப்பது போல் பிரம்மமும் கட்டுப்பட்டதென்று நினைத்தல்கூடாது.

840. ஞானம், அஞ்ஞானம் ; நன்மை, தீமை ; தர்மம், அதர்மம் ; இப்படிப்பட்ட துவந்தங்களுக்கு அப்பாலும் மேற்பட்டும் பிரம்மம் இருக்கிறது.

841. பிரம்மம் மனோ வாக்குக்கு அதீதமானது ; தாரணை தியானங்களுக்கும், அறிவான் அறிபடுபொருள் அறிவு இவைகளுக்கும் அதீதமானது; நித்யம் அநித்யம் என்ற பாகுபாட்டிற்கும் அதீதமானது; சுருங்கச் சொல்லில் சகலவித வியவகார நிலைக்கும் அப்பாற்பட்டதாக அது விளங்குகின்றது.

842. காற்று நல்ல வாசனையையும் கெட்ட வாசனையையும் கொண்டு வீசுமாயினும் அவைகளால் விகாரப்படுவதில்லை. பரம் பொருளும் அந்தக் காற்றைப் போன்றது.

843. பிரம்மம் குணங்களுக்கு அப்பாற்பட்டது ; மாயையோடு சம்பந்தப்பட்டிருப்பனவற்றுக் கெல்லாம் புறம்பேயிருப்பது.

கடவுளும் உலகின் உண்மையும்

844. கடவுள் ஒருவரே உண்மையானவர். அவரது தோற்றங்களாகிற ஜீவர்களும் ஜகத்தும் அநித்யமானவைகளாகும். அதாவது நிலைத்திராதனவாகும்.

845. உலகம் மாயையென்று சொல்வது எளிது. ஆனால் அதன் பொருள் இன்னதென்று உனக்குத் தெரியுமா? அது, மிகுதியொன்றையும் வைக்காத கற்பூரத்தைக் கொளுத்துவதுபோலாம். சாம்பலை மிகுதியாக்கும் கட்டைகளைக்கொளுத்துவது போன்றதன்று. விசாரணை முடியும் நிலையில், உயர்ந்த ஸமாதிநிலை கிட்டும். அப்போது, நான், நீ, உலகம் என்ற உணர்ச்சி கொஞ்சமேனும் இராது.

846. சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும்போது குருவானவர், பிரம்மம் மாயை என்பன இரண்டென்பதைச் சுட்டிக்காட்டத் தமது இரண்டு விரல்களை முதலில் நீட்டினார்; பின்னர் ஒரு விரலை மடக்கிக் கொண்டு, மாயை மறைந்ததும் பரப்பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் நிலைத்திருப்பதில்லை யென்பதைக் கற்பித்தார்.

847. அகண்ட பிரம்மத்தைச் சமாதியில் மட்டுந்தான் அறியலாகும்; அப்பால் ஒரே மௌனம்; ஜீவன், ஜகத் இவைகளைப்பற்றிய உண்மை அல்லது மாயை, ஞானம் அல்லது அஞ்ஞானம் என்ற விவாதங்களெல்லாம் அடங்கிவிடுகின்றன. ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றும் அங்கிருப்பதில்லை. உண்மையில், உப்புப் பிரதிமை பிரம்மாண்ட சமுத்திரத்தில் மூழ்கிய பிறகு தன்னுடைய கதையைச் சொல்ல வெளி வருவதில்லை. இதுதான் பிரம்ம ஞானம்.

848. வினா:—வேறுபடுத்த முடியாத பரமாத்மாவும் தனித் தனி ஜீவாத்மாவும் வெவ்வேறானவை யென்று கொண்ட மதி மயக்கம் எப்படியுண்டாயிற்று?

விடை :—கேவலம் புத்தியை மட்டும் உபயோகிக்கும் தத்துவ சாஸ்திரியான அத்வைதி, "எனக்குத் தெரியாது" என்று அக்கேள்விக்குப் பதில் சொல்லுவான். சுவானுபூதியில் அறியப்படுவதே தீர்மானம். "எனக்குத் தெரியும்" அல்லது, "எனக்குத் தெரியாது" என்று சொல்லுகிறவரையில் நீ உன்னை ஜீவனாகவே பாவித்துக்கொள்கிறாய். அப்போது, இவ்வித பல்வேறு தோற்றங்களை நீ மாயையென்று கொள்ளாமல் உண்மையென்றே கொள்ளவேண்டும். வியக்தித்வம் (ஜீவபேதம் என நினைக்கும் சுபாவம்) முற்றிலும் அகலும்போது, சமாதியில் விசுத்த ஸ்வரூபியின் ஞானம் உண்டாகும். அப்போதுதான் மாயை, உண்மை என்ற சர்ச்சைகள் யாவும் நின்றொழியும்.

849. நீ ஜீவனாக இருக்கும்வரையில் அதாவது கர்ம ஞானேந்திரிய அனுபவனாய் இருக்கும்வரையில் நீ ஞானமுள்ளவனாயினும் உனது 'விமுக்தி' ஒரு சம்பந்தத்தைக் குறிக்கும்; உனது நித்யம் ஒரு லீலையைக் குறிக்கும்; உனது ஜடவஸ்து குணசம்பந்தமுள்ளதாக இருக்கும். உனது காணமுடியாத தெய்வம் பிரத்தியக்ஷத் தெய்வத்தைக் குறிக்கும். உனது ஏகத்வம் வெகு பொருளைக் குறிக்கும்.

850. நீ வியக்தி ஸ்வரூபனாக இருக்கும்வரையில், அதாவது ஜீவனாகவே இருக்கும்வரையில் வெண்ணெய், மோர் என்ற இரண்டையும் அங்கிகரிக்கவேண்டும்; அதாவது ஈசுவரன், ஜகத் என்ற இரண்டையும் அங்கிகரிக்கவேண்டும். உவமையை விளக்கிச் சொல்வோமானால் முதன் முதலில் இருந்த பாலானது சமாதி மூலமாய் அறியப்படும் பிரம்மமாகும்; வெண்ணெய் ஈசுவரனாகும்; மோர், இருபத்து நான்கு தத்துவங்களாலான உலகமாகும்.

851. "என்னுடைய கொள்கைதான் சரியானது; யுக்திக்கு ஒத்தது; உறுதியானது; உருவக்கடவுள் உண்டென்று நம்புகிறவர்களுடைய கொள்கை பிழையானது" என்று அத்வைதி சொல்லாமலிருக்கட்டும். ஈசுவரனுடைய பிரத்யக்ஷத் தோற்றங்களெல்லாம் மானிட சரீரத்தைக் காட்டிலும் பன்மடங்கு உண்மையானவை. சரீரம், மனம், உலகம் ஆகிய இவைகளைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு உண்மையானவை.

852. அத்வைதத்தைப் பற்றிப் பேசத் தொடங்கும்போதே, துவைத முண்டென்பதை ஸ்தாபித்துக்கொள்கிறாய். பாரமார்த்திகத்தைப் பற்றிப் பேசும்போது வியவகாரிக நிலையும் இருப்பதாகவே கொள்கிறாய். ஏனென்றால் சமாதி மூலமாக அறியும்வரையில் உனது அத்வைதம் பேச்சளவே; துவைதத்தோடு சம்பந்தப்பட்டதே. கேவலம் சம்பந்த குணத்தின் கூட்டாளிதான். அதை எடுத்துரைக்க முடியாது. ஏனெனில், அப்படி உரைக்கும்போது உன்னுடைய அகங்காரமும் அதனோடு சேர்கிறது.

853. அகங்காரம் என்னிடம் இருக்கும்வரையில், ஜீவனாயும் ஜகத்தாயும் வேறு வேறு ஐசுவரியங்களுடன் தம்மைத் தோற்றுவிக்கும் ஈசுவரன் என் முன்னால் இருக்கின்றார்.

ஈசுவரன், மாயை, சக்தி

854. பரம்பொருளை சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்யாத நிஷ்கிரியர் என்ற பாவனையில் பிரம்மம் அல்லது புருஷன் என்று சொல்லுகிறேன். ஆனால் அத்தொழில்களைச் செய்தருளுகின்றார் என்ற பாவனையில், சக்தி, மாயை, பிரகிருதி என்ற பெயர்களுள் ஒன்றால் அழைக்கிறேன்.

855. புருஷப் பிரகிருதியின்மூலமாகவே உலகம் உண்டாயிற்று என்று கூறும் சாங்கிய வாதத்தைப்பற்றிப் பேச்செழுந்தபோது பகவான் இங்ஙனம் பகர்ந்தார்: 'புருஷன் யாதொரு காரியத்தினையும் செய்யாது சலனமற்றுக் கிடக்கிறான் என்றும், பிரகிருதியே சகலத்தையும் செய்து வருகின்றதென்றும், புருஷன் வெறும் சாக்ஷிமாத்திரமாகத்தா னிருக்கிறானென்றும் சாங்கியவாதம் கூறுகின்றது; மேலும், பிரகிருதியும் புருஷனில்லாது எதனையும் செய்யவியலாது என்றும் கூறுகின்றது. விவாக காலங்களில் வீடுகளில் எவ்விதம் அலுவல்கள் நடைபெறுகின்றனவென்பது உனக்குத் தெரியுமா? வீட்டு எஜமானன் ஓரிடத்தில் புகைக்குழாயினை வாயில் வைத்தபடி உட்கார்ந்துகொண்டு அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறான். வீட்டு எஜமானி மஞ்சள் தடவிய புடவையை உடுத்திக்கொண்டு வீட்டின் இப்பக்கமும் அப்பக்கமும் ஓடி அலைந்துகொண்டிருக்கிறாள். அலுவல்களைக் கண்காணித்துக்கொண்டும், விவாகத்துக்கு வரும் குழந்தைகளையும், பெண் மக்களையும் வரவேற்றுக் கொண்டும் மிகவும் சுறுசுறுப்பாக வேலைசெய்துகொண்டிருக்கிறாள். அடிக்கடி வீட்டு எஜமானனாகிய தன் கணவனிடம் சென்று சைகைகள் மூலமாக அலுவல்கள் எவ்வாறு நடந்து வருகின்றனவென்பதை அறிவிப்பதோடு ஆலோசனைகளையும் கேட்டுவருகிறாள். தலைவனும் அவளது சைகைகளை அறிந்துகொண்டவனாய்த் தனது சம்மதத்தைத் தலையசைப்பின் மூலமாக அறிவிக்கிறான். பிரகிருதி புருஷன் இவர்களது காரியமும் இப்படித்தான் நடைபெற்று வருகின்றது.'

856. இயங்காப் பரப்பிரம்மமும் இயங்கும் சக்தியும் உண்மையில் ஒன்றேயாம். அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபி எவனோ, அவனே ஸர்வ சக்தி, ஸர்வ ஞானம், ஸர்வானந்தம் இவைகளையுடைய ஜகன் மாதாவாகவு மாகிறான். சுயம்பிரகாசமுள்ள மணியும் அதன் ஒளியும் ஒன்றானவை; ஏனெனில் ஒளியின்றி மணியையும் மணியின்றி ஒளியையும் மனத்தினால் சிந்திக்க முடியாது.

857. ரூபியும் அரூபியுமான கடவுள் ஒன்றேதான். ஒன்றை நம்பினால் இன்னொன்றையும் நம்பினதாகும். எரிக்கக்கூடிய சக்தியைத் தவிர்த்து நெருப்பையும் நெருப்பைத் தவிர்த்து எரிக்கிற சக்தியையும் சிந்திக்க வொண்ணாது. இன்னும் சூரிய கிரணங்களைத் தவிர்த்துச் சூரியனையும், சூரியனைத் தவிர்த்துச் சூரிய கிரணங்களையும் நினைக்க முடியாது; பாலைத் தவிர்த்து அதன் வெண்மையையும், வெண்மையைத் தவிர்த்துப் பாலையும் கருதவொண்ணாது. அதுபோல குணஸ்வரூப

ஞன ஈசுவரனைத் தவிர்த்து நிர்க்குணஸ்வரூபனையும், நிர்க்குணஸ்வரூபனைத் தவிர்த்து குணஸ்வரூபனையும் சிந்திக்கமுடியாது.

858. பிரம்மத்துக்கும் சக்திக்கும் உள்ள வேறுபாடு சொல்லளவிலேயே ஒழிய உண்மையில் இல்லை. நெருப்பும் அதன் உஷ்ணமும், பாலும் அதன் வெண்மையும், மணியும் அதன் ஒளியும் ஒன்றுனவைபோல, பிரம்மமும் சக்தியும் ஒன்றுனவையாம். ஒன்றில்லாமல் மற்றென்றை நினைக்கமுடியாது; அல்லது அவையிரண்டையும் வேறுபடுத்தவும் முடியாது.

859. சிருஷ்டி, திதி, ஸம்ஹாரம் என்ற காரியங்கள் எங்கெங்கே நிகழ்கின்றனவோ அங்கங்கெல்லாம் சக்தி இருக்கின்றது. அசைவற்றிருந்தாலும் கொந்தளித்துக்கொண்டிருந்தாலும் ஜலம் ஜலந்தான். தலைவர்*, சில வேளைகளில் ஒன்றும் செய்யாமலிருக்கிறர்; சில வேளைகளில் பூஜை செய்கிறர்; சில சமயம் ராஜப்பிரதிநிதியிடம் போகிறர். இப்படிப்பட்ட காரியங்களிலெல்லாம் அவருடைய வேறு வேறு நிலைமைகள் தெரிகின்றன. ஆயினும் அவர் எப்போதும் தலைவராகவே இருக்கிறர். அதுபோல சச்சிதானந்த ஸ்வரூபியான ஒருவரே உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் நித்ய சக்தியுமாகிறர்.

860. நான் சில சமயம் உடை தரித்தும் சில சமயம் உடை தரியாமலும் இருப்பதுபோல, பிரம்மம் சில வேளை குணத்தோடு கூடியதாயும் சில வேளை குணமில்லாததாயும் இருக்கும். ஸகுணப்பிரம்மம் என்பது சக்தியோடு கூடிய பிரம்மமாகும். அது அப்போது ஈசுவரன் எனப்படும்.

861. எனது திவ்யமாதா ஒன்றுய்ப் பலவாய், அவற்றிற்கப்பாலாய் இருக்கின்றனள்.

862. ஏகமாய் இருக்கும் என் தாய் பராசக்தி பல்வேறு தோற்றத்துடன் விளங்குகிறுள். அளவில்லாத சக்தியையுடைய அவள் ஜீவனுகவும் ஜகத்தாகவும் பேதப்பட்டு, சரீரம் புத்தி சன்மார்க்கம் ஆத்மார்த்தம் முதலிய வேறுபட்ட சக்திகளை யுடையவளாய்க் காணப்படுகிறுள். சக்தி, வேதாந்தத்தில் கூறப்படும் பிரம்மமே தவிர வேறல்ல. கட்புலனுகாத பிரம்மத்தின் பிரத்யக்ஷஸ்வரூபமே அவள்.

எங்கும் கடவுள்

863. 'நேதி நேதி' (இதுவன்று இதுவன்று), 'இதி இதி' (இது இது) என விவேக விசாரணை இருவகைப்படும். முதலாவது, பிரகிருதித் தோற்றங்களிலிருந்து பிரம்மத்தை யடையும் வழியைக் காட்டும். இரண்டாவதோ, பிரம்மம் எப்படிப் பிரகிருதி ஸ்வரூபமாகத் தோன்றுகிறது என்பதைக் காட்டும்.

---

*நேபாள ராஜ்யத்தின் பிரதிநிதியான விச்வநாத உபாத்யாயரை 'தலைவர்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் அழைப்பர். அவர் கல்கத்தாவில் இருந்தார்.

864. சமாதி நிலைமையில் நிர்க்குணப் பிரம்மத்தை அறிந்தவர்களுங்கூட சரீரப்பிரக்ஞையை அடையும்போது, ஈசுவரனோடு அந்யோன்யம் கொண்டாடுவதற்கு வேண்டிய சிறிதளவு அகங்காரத்தைப் பெற்றிருக்கின்றனர். ஆதலால்தான் சகுணப் பிரம்மம் அவசியமாக இருக்கிறது. ஸாளியில் "நீ" என்ற உச்ச ஸ்வரத்திலேயே இடைவிடாது குரலையுயர்த்திப் பிடிப்பது வெகு சிரமமல்லவா ?

865. சமாதி நிலைமையிலிருந்து இந்திரிய நிலைமைக்கு வருபவனுக்கு மட்டும் தன் திவ்விய சக்ஷுஸை (ஞானக்கண்ணைக்) கைவிடாதிருப்பதற்கு வேண்டிய அளவுள்ள (ஒரு ரேகைபோன்ற அற்ப அளவு) அகங்காரம் இருக்கும். இதனுல் அவன் ஒரே கடவுளின் பல்வேறு தோற்றங்களாகத் தன்னையும் ஜீவன்களையும் ஜகத்தையும் காண்கிறான். ஜடசமாதி அல்லது நிர்விகல்ப சமாதியில் நிராகார நிர்க்குணப் பிரம்மத்தையும், சேதன சமாதி அல்லது சவிகல்ப சமாதியில் சாகார சகுணப் பிரம்மத்தையும் அறிந்துகொண்ட விக்ஞானிக்கே இந்தத் திவ்ய தரிசனம் கிடைக்கும். உனக்கென்று தனி வியக்தி இருக்கும்வரையில், அதாவது உன்னிடம் அகங்காரம் இருக்கும்வரையில் ஈசுவரன் உருவமுள்ளவன் என்பதைத்தவிர வேறு விதத்தில் அவனை உன்னுல் தியானிக்கவோ, நினைக்கவோ, காணவோ முடியாது. அதுவரையில் அகண்ட நிர்க்குணப் பிரம்மத்தை நீ உள்ளும் புறமும் சகுணக் கடவுளாகத்தான் காணுவாய். சகுணக் கடவுளின் இந்தத் தோற்றங்கள் பொய்யானவையல்ல. சரீரம், மனம், உலகம் இவைகளைக் காட்டிலும் பன்மடங்கு மெய்யானவை.

866. இது அநுலோம விலோம விஷயமாகும். ஸர்வேசுவரனிடம் நீ திரும்பிப்போகிறாய். அப்போது உன்னுடைய வியக்தித்வம் ஈசுவரனோடு கலக்கின்றது. இதற்கு 'சமாதி' என்று பெயர். பின் இந்த உயர்ந்த நிலையிலிருந்து நீ முதன் முதலில் எங்கிருந்து புறப்பட்டாயோ அதே இடத்துக்குத் திரும்பி வருகிறாய். அப்போது ஜகத்தும் உனது அகங்காரமும் ஒரே ஈசுவரனிடமிருந்து பரிணமித்தனவென்றும் ஈசுவரன், மனிதன், பிரகிருதி இவைகள் எல்லாம் கேவலம் அபின்னமென்றும் தெரிந்துகொள்வாய். இவைகளில் ஏதேனுமொன்றை நீ அறிந்தால் மற்றவைகளைத் தெரிந்துகொள்வாய்.

867. அநித்யமாகிய இந்த ஜகத் சிருஷ்டியெனும் லீலை எவருடையதோ அவருடையதுதான் நித்யமாகிய நிலையும். அந்த நித்ய நிலையில் எவர் இருக்கிறாரோ அவருடையதுதான் இந்த லீலையும்.

லீலையின் வழியாகத்தான் நித்யத்தை யடைய முயலவேண்டும். மறுபடியும் நித்யத்திலிருந்துதான் லீலைக்குத் திரும்பி வரவேண்டும். இப்படித் திரும்பி வரும்போது லீலை மாயையன்று; அது இந்திரிய மூலமாய்ப் பார்க்கப்படுகிற நித்ய நிலையின் தோற்றமாகும்.

868. பழத்தின் மேற்றோல், சதை, கொட்டை எல்லாம் மரத்தின் ஒரே மூல விதையினின்றும் உண்டாகின்றன. அதுபோல, ஒரே

ஈசுவரனிடமிருந்து, ஜீவ ஜட, சித்து அசித்து ஆகிய ஸர்வ சிருஷ்டிப் பொருள்களும் தோன்றுகின்றன.

869. "கடவுளினுடைய பல்வேறு தோற்றங்களாகிற துரியாவஸ்தை, ஜாக்ரதாவஸ்தை, சுவப்னுவஸ்தை, சுஷுப்தியவஸ்தை, பிரம்மம், ஜீவன் ஆகிய இவை யெல்லாவற்றையும் நான் ஒப்புக்கொள்கிறேன். இல்லாவிட்டால் முழுகனம் குறைய நேரிடும். ஆதலால் நான் பரம்பொருள், அதன் தோற்றங்கள் ஆகிய இரண்டையும் ஒப்புக்கொள்கிறேன்" என்று பரமஹம்ஸர் சொல்வதுண்டு.

870. இருப்பது கடவுள் மாத்திரமானுல் ஜீவர்களால் ஏற்படும் மாறுபாடுகளும் தாரதம்மியங்களும் இந்த உலகத்தில் என் உண்டாகின்றன? இந்த இரகசியத்தைக் குறித்துப் பகவான் கூறியதாவது: "இது அவனது லீலை, அவனது விளையாட்டு! அரசன் ஒருவனுக்கு நான்கு பிள்ளைகள். அவர்கள் விளையாடும்போது ஒருவன் அமைச்சனுகவும், இன்னொருவன் போலீஸ்காரனுகவும், மற்ருெருவன் வேறு ஒரு வேஷம்போட்டும் நடிக்கிருர்கள். அரசகுமாரன் போலீஸ்கார வேஷம் தரிச்கிறது எதனைக் காண்பிக்கிறது? விளையாட்டைக் காண்பிக்கிறதல்லவா?"

உருவமும் அருவமும்

871. 'சாகாரமா அல்லது நிராகாரமா,—அதாவது ரூபத்தோடு கூடிய கடவுளா அல்லது அரூபியான கடவுளா—எந்த நிலைமை விசேஷமானது?' என்று ஒருவர் பகவானைக் கேட்டார். அதற்குப் பகவான், 'முதிர்ந்தது முதிராதது என நிராகாரநிலை இருவகைப்படும். முதிர்ந்த நிராகாரம் மிக வுயர்ந்தநிலை. சாகாரக் கடவுளின் மூலமாகத்தான் அந்த நிலையை அடைய முடியும். முதிராத நிராகார நிலை, பிரம்ம சமாஜத்தார் கூறுகிறபடி கண்களை இறுக மூடிக்கொண்டால் தென்படும் இருட்டுப்போன்றது' என்று கூறினுர்.

872. கடவுள் உருவமற்றவரும் உருவமுள்ளவருமாவர். உருவம், அருவம் இவ்விரண்டையும் கடந்தவருமாகிருர். அவர் எப்படிப்பட்டவரென்பதை அவரே தான் முற்றிலும் அறிவார்.

873. பகவானது சாகாரநிலை—ரூபத்தோடு கூடிய நிலை யென்ருல் என்ன என்பது உனக்குத் தெரியுமா? நீர்ப்பரப்பின்மேல் தோன்றும் குமிழிகள் போன்றது அந்நிலை. சிதாகாசத்தில் பலவித ரூபங்கள் எழுவதை உண்மையாகக் காணலாம். பகவத் அவதாரமும் அவ்வித ரூபங்களில் ஒன்று.

874. ஈசுவரனைக் காணுமற்போனுல் இதையெல்லாம் ஒருவன் அறியமாட்டான். தனது பக்தர்களுக்காக ஈசுவரன் வேறு வேறு விதமாயும் வேறு வேறு உருவமாயும் தோன்றுகிருன்.

ஒரு சாயக்காரன் வஸ்திரங்களுக்குச் சாயமேற்றுவதில் பிறருக்குத் தெரியாத ஒரு முறையைக் கைப்பற்றி வந்தான். "உனது வஸ்தி

ரத்துக்கு எந்த நிறமான சாயம் ஏற்றவேண்டும்?'' என்று அவன் தனது வாடிக்கைக்காரனைக் கேட்பான். 'சிவப்பு வர்ணம்' என்று அவன் சொல்வானுனல், சாயக்காரன் தனது தொட்டியில் அவ் வஸ்திரத்தைத் தோய்த்து எடுத்து "இதோ உன் வஸ்திரத்துக்குச் சிவப்புச் சாயம் போட்டாயிற்று'' என்று கொடுப்பான். மஞ்சள் சாயம் வேண்டுமென்று இன்னெருவன் கேட்பான். அதே தொட்டியில் சாயக் காரன் அவனுடைய வஸ்திரத்தையும் தோய்ப்பான்; வெளியில் எடுத்த போது அது மஞ்சள் நிறமாக இருக்கும். நீலம், ஊதா, பச்சை முத லிய எந்த நிறம் வேண்டியிருந்தாலும் சரியே, ஒரே தொட்டியில்தான் சாயக்காரன் வேஷ்டியை நனைப்பான். வேண்டப்பட்ட சாயம் வஸ்தி ரத்தில் ஏற்றப்பட்டிருக்கும்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த வாடிக்கைக்காரன் ஒரு வன் சாயக்காரனிடம் வந்து "நண்பா! எனக்கு ஒருவிதமான நிறத்தி லும் பிரியமில்லை. உனது விருப்பத்தைக் கேட்டு அதன்படியே என் வஸ்திரத்துக்குச் சாயமேற்றிக்கொள்ள விரும்புகிறேன். நீ எந்தச் சாயத்தில் தோய்த்துக்கொண்டிருக்கிருயோ அந்தச் சாயந்தான் எனக் கும் தேவை'' என்றுன். பக்தனுடைய தேவைக்குத் தக்கபடி ஈசு வரன் ரூபியாகவோ அரூபியாகவோ தோன்றுகிருன். அப்படித் தோன் றும் திவ்ய ரூபம் ஒவ்வொருவருடைய நிலைமைக்கும் காலதேச வர்த்த மானங்களுக்கும் ஏற்ப வாஸ்தவமாக இருக்கும். ஈசுவரனுகிய சாயக் காரன் மட்டுமே, தான் எந்த நிறமான சாயத்தில் தோய்த்திருக்கிரு னென்பதை அறிவான். வாஸ்தவத்தில் எந்த ரூபத்தில் தோன்ற வேண்டும், எந்த ரூபத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற நிபந்தனை களுக்கு ஈசுவரன் கட்டுப்பட்டவனே யல்லன்.

நீ பாரமார்த்திக நிலை என்னும்போது வியவகாரிக நிலையும், நித்யம் என்னும்போது லீலையும், வஸ்து என்னும்போது குணங்களும், உருவம் என்னும்போது அருவமும், ஒன்று என்னும்போது பலவும் உனக்கு உண்டென ஏற்படுகின்றது.

875. ஒரு சாது பூரியிலுள்ள ஜகந்நாதன் ஆலயத்துக்குச் சென் ருர். ஈசுவரன் ரூபியோ அரூபியோ என்ற சந்தேகம் அவருக்கு உண் டாயிற்று. திவ்விய மங்கள விக்ரகத்தைத் தரிசித்ததும் அந்த சாது தமது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள விரும்பினர். தமது கையிலிருந்த தடியானது விக்ரகத்தின்மீது படுகிறதா இல்லையா என்று அறியும்பொருட்டு அதை இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்குக் கொண்டுபோனர். அப்பொழுது அவரது திருஷ்டிக்கு ஒன்றும் புலப் படவில்லை. தடி ஒன்றன்மீதும் படவில்லை. ஆகவே அவர், ஈசுவரன் உருவமற்றவர் என நினைத்தனர். மீண்டும் தடியை வலது பக்கத்தினின்று இடது பக்கம்கொண்டு போகும்போது அது விக்ரகத் தின்மீது பட்டது! ஆதலால் கடவுள் ரூபியும் அரூபியும் ஆவார் என்ப தைத் தெரிந்துகொண்டார்.

876. மணியை அடிக்கும்போது, அடுத்தடுத்து வரும் அதன் ஒவ்வொரு ஓசையும் தனித்தனி உருவத்தையுடையதுபோலத் தோன் றும். ஆனால் அடிப்பதை நிறுத்தினால், சிறிது நேரம்வரையில் கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தொழியும். தெளிவற்ற சப்தமோ உருவமில்லாததுபோலத் தோன்றுகிறது. மணியின் ஓசையைப்போலக் கடவுள் உருவமுள்ளவனும் உருவமில்லாதவனு மிருக்கிறான்.

877. உருவத்தோடு கூடிய ஈசுவரனை நாம் பார்க்கலாம். அது மட்டுமோ? நம்முடைய பிரிய நண்பன் ஒருவனுடன் உறவாடுவதைப் போல நாம் அவனைத் தொடலாம்; அவனோடு நேர் நின்றும் பேசலாம்.

878. கடவுளை அரூபியெனத் தியானிப்பது முற்றிலும் சரியா னதே. ஆனால் அதுதான் உண்மை, மற்றக்கொள்கைகளெல்லாம் பொய் என்று எண்ணிவிடாதே. அவனை 'ரூபி' யெனத் தியானிப்பதும் சரி யானதே. ஆனால் அவனை நீ காணும்வரையில் உனது பிரத்யேகமான கொள்கையைக் கைவிடாதே. அப்பால் எல்லாம் தெளிவாகும்.

879. கடவுள் நித்தியப் பரம்பொருளாகிய பிரம்மமும் ஜகத் பிதாவாகிய ஈசுவரனும் ஆவர். ஆனால் அகண்ட சச்சிதானந்தப் பொரு ளாகிய பிரம்மமோ நம்மைத் தத்தளித்து மூழ்கச் செய்யும் கரைகாண முடியாத பிரம்மாண்ட சமுத்திரத்தைப்போல மனோவாக்குக் கெட் டாததாம். திருவிளையாடல்களைச் செய்யும் ஈசுவரனுடைய அருட்கட லில் நாம் புகுந்துவிட்டாலோ, தண்ணீரில் மூழ்குபவன் மெதுவாகக் கரையோரத்தில் ஒதுக்கப்படுவதைப்போல, வெகு சுலபமாகச் சாந்தி யைப் பெறுகிறோம்.

880. பக்தி மார்க்கத்தின் ஒரு நிலையில், பக்தன் ஈசுவரனுக்கு உருவமுள்ளதென்று தெரிந்து திருப்தியடைகிறான். இன்னொரு நிலை யில் உருவம் இல்லையென்றும் தெளிந்து திருப்தியடைகிறான்.

881. பக்தனுக்கு ஈசுவரன் பல்வேறு உருவங்களில் தோன்று கின்றான். ஆனால் சமாதியில் பிரம்ம ஞானத்தை அடைந்தவனுக்கு அவன் அகண்ட நிராகார நிர்க்குணப் பிரம்மமாக இருக்கின்றான். இதில்தான் ஞானமும் பக்தியும் சமரசப்படுகின்றன.

882. ஜலமானது உறையும்போது பனிக்கட்டியாவதுபோல, சர்வேசுவரனின் நிதர்சன ரூபமானது, உருவமற்று எங்கும் நிறைந் துள்ள பிரம்மத்தின் தோற்றமாகி உருவமாகும். அதை உருவெடுத்து வந்த சச்சிதானந்த மென்னலாம். ஜலத்தில் உண்டாகும் பனிக்கட்டி யானது ஜலத்தைத் தவிர வேறல்ல; அது ஜலத்திலேயே இருந்து பின் னர் உருகி ஜலமாகவே ஆகிறது. அதுபோல ஈசுவரன் பிரம்மத்தைத் தவிர வேறல்ல. அவன் பிரம்மத்திலிருந்து தோன்றி அதிலேயே நிலைத்திருந்து கடைசியில் அதிலேயே கலந்து மறைகிறான்.

883. நெருப்புக்கு அதற்கென்றே ஒரு ஸ்திரமான உருவமில்லை. ஆனால் தணல்விட்டு எரியும்போது அதற்கு வெவ்வேறு ரூபங்கள் உண்

டாகின்றனவாதலால், ரூபமில்லாத நெருப்புக்கு ரூபங்கள் தோன்று கின்றன. அதைப்போலவே, அரூபியான கடவுள் சிற்சில வேளைகளில் ரூபங்களை எடுக்கிறார்.

கடவுளின் உருவங்களிற் சில

884. சில சமயம் மானிட வடிவத்திலும், சில சமயம் சின்மய ரூபமாகவும் பலவிதங்களில் ஈசுவரன் பிரத்யக்ஷமாகிறான். ஆனால் திவ்ய ரூபங்களில் ஒருவனுக்கு நம்பிக்கை வேண்டும்.

885. சச்சிதாநந்த பிரம்மம் இப்படிப்பட்டது என்று ஒருவரா லும் அறிய முடியாது. அதனால்தான் இறைவன் பாதி புருஷனாகவும் பாதி பெண்ணாகவும் அர்த்த நாரீசவடிவம் எடுத்தான். பிரகிருதியும் புருஷனும் தானே என்பதைக் காட்டவே அவ்வித வடிவம் தாங்கினான். அதே சச்சிதாநந்தக் கடவுள் இன்னும் சிறிது கீழ் நிலைக்குவந்து பல புருஷர்களாகவும், பல பிரகிருதிகளாகவும் விளங்குகின்றான்.

886. தூரத்திலிருந்து பார்க்கும்போது சமுத்திர ஜலம் நல்ல நீல நிறமாகத் தோன்றுகிறது. ஆனால் அதில் கொஞ்சம் கையிலெடுத் தால் அசுத்தமாயும் தெளிவாயும் காணப்படுகிறது. அதுபோல, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தூர திருஷ்டிக்கு நீலமேகனாகக் காணப்படு கிறாராயினும், உண்மையில் அப்படிப்பட்டவ ரல்லர். அவர் மாசுமறு வற்ற பரம்பொருள்.

887. ஸ்ரீகிருஷ்ணனுக்குத் "திரிபங்கி," அதாவது, மூன்று கோணலாக வளைந்தவன் என்று பெயர். மிருதுவான வஸ்துக்களைத் தான் வளைக்க முடியும். ஆகவே ஸ்ரீ கிருஷ்ணனுடைய திரிபங்கி ரூபம், ஏதோ ஒரு விதத்தினால் அவர் மிருதுவாக்கப்பட்டிருப்பதைக் குறிக் கின்றது. இப்படி அவர் மிருதுவானதற்குக் காரணம் பிரேமை என்று சொல்லப்படுகின்றது.

888. ஒரு பக்தன் :—திவ்ய மாதாவுக்கு யோகமாயை எனப் பெயர் வந்ததன் காரணமென்ன ?

பரமஹம்ஸர் :—யோகமாயை என்றால் புருஷப் பிரகிருதியின் சேர்க்கை என்று அர்த்தம். நீ பார்க்கும் ஒவ்வொரு பொருளும் இச்சேர்க்கையைத் தவிர வேறில்லை. சிவபிரான்மீது காளிதேவி நர்த் தனம் செய்யும் 'சிவகாளி' ரூபத்தை நீ பார்த்ததில்லையா? சிவபிரான் பிணம்போலக் கீழே கிடக்க, காளிதேவி அவரை உற்றுப்பார்த்த வண்ணமாக மேலே நிற்கிறாள். இதெல்லாம் மேலே கூறிய புருஷப் பிரகிருதியின் சேர்க்கையே. புருஷர் நிஷ்கிரியர். ஆதலால்தான் சிவ பிரான் பிணம்போல அசைவற்றுக் கிடக்கிறார். ஆனால் அவருடைய சேர்க்கையால்தான் பிரகிருதிக்குச் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்ற தொழில்களைச் செய்யும் சக்தி உண்டாகிறது. ராதாகிருஷ்ணனாகிய இரண்டும் ஒன்றாயிருக்கும் விக்கிரகத்தின் அர்த்தமும் இதுவே.

889. இறைவனை நீ நெருங்கும் அளவுக்கு அவனது அபார மகிமைகள் உன் மனத்தைக் கவராமற்போய்விடும். சாதகன் முதலாவதாகக் காணுவது பத்துக்கரங்களோடு கூடிய துர்க்காதேவியை. இந்த மகிமை, இறைவனை அகிலாண்டநாயகியாகவும் அபார சக்தியை யுடையவளாகவும் காட்டுகின்றது. பிறகு இரு கைகளுள்ள இறைவனது தரிசனம் கிடைக்கிறது; இப்போது பல ஆயுதங்கள் தரித்த பத்துக்கைகளும் மறைந்து விடுகின்றன. அதன் பிறகு சக்தியும் மகிமையும் காட்டாமல் மிருதுவும் அன்புமயமான கோபால வடிவத்தில் சாதகன் பகவானைத் தரிசிக்கின்றான். இதனைக் காட்டிலும் மேலான ஜோதிமயமான தரிசனங்களும் உண்டு.

அவனன்றி ஓரணுவும் அசையாது

890. எல்லா மனிதர்களிடத்திலும் ஈசுவரன் இருக்கிறான். ஆனால் ஈசுவரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்.

891. ஒவ்வொரு வஸ்துவும் நாராயணன் என்றே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறுவதுண்டு. மனிதன் நாராயணன்; ஜீவப்பிராணி நாராயணன்; ரிஷியும் நாராயணன்; போக்கிரியும் நாராயணனே. உலகில் உள்ளன வெல்லாம் நாராயணனே. நாராயணன் பலவிதமான திருவிளையாடல்களைச் செய்தருள்கின்றார். எல்லாப் பொருள்களும் அவருடைய பல்வேறு உருவங்களாகவும் அவரது பிரபாவத்தின் தோற்றங்களாகவுமே இருக்கின்றன.

892. "கடிக்கும் பாம்பும் அக்கடியைக் குணப்படுத்தும் வைத்தியனும் நானே; தண்டனை விதிக்கும் நியாயாதிபதியும் அத்தண்டனையை நிறைவேற்றும் வேலைக்காரனும் நானே" என்று ஈசுவரன் சொல்லுகிறான்.

893. இடங்கள் தோறும் சக்தியின் தோற்றம் வேறுபடுகின்றது. ஏனெனில் வேறுபாடுதான் உலகத்தின் இயல்பு. ஒரே தன்மையாயிருப்பதல்ல. ஈசுவரன் எல்லா ஜீவப்பிராணிகளிடத்தும் அந்தர்யாமியாயிருக்கிறான். எறும்பிலும்கூட அவனிருக்கிறான். தோற்றத்தில் மட்டும்தான் வித்தியாசம் காணப்படுகிறது.

894. சிஷ்ய கோடிகளால் கௌரவிக்கப்பட்டு பூஜ்யதையுடன் கொண்டாடப்படும் மஹான்களிடத்தில் உள்ள தெய்விக சக்தி அப்படிப்பட்ட யோக்கியதை இல்லாதவரிடத்தில் உள்ளதைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும்.

895. சரீரத்தில் ஈசுவரன் எவ்வாறு வசிக்கிறான்? பீச்சாங்குழலின் உள்ளே யிருக்கும் கம்பியைப்போல அவன் சரீரத்தில் வாசஞ் செய்கிறான். அதாவது சரீரத்தின் உள்ளேயிருக்கிறானென்றாலும் அச்சரீரத்தோடு சம்பந்தப்பட்டவனல்லன்.

இறைவனருளும் கரும பலனும்

896. ஒருவர் :—ஈசுவரனே எல்லாப் பொருள்களுமாய் இருக்கிறு ரென்ருல் பாபமென்பதும் புண்ணியமென்பதும் இல்லையா ?

பரமஹம்ஸர் :—உண்டு என்றும் இல்லை யென்றும் சொல்லலாம். நம்மிடம் அகங்காரத்தை ஈசுவரன் வைத்திருக்கும் வரையில் புண்ணியம் பாபம் என்ற துவந்த (இரட்டை) மனேபாவத்தையும் வைத்திருக்கிருன். ஆனல், சில சமயங்களில் அவன் சிலரிடம் அவ்வகங்காரத்தை அறவே ஒழித்துவிடுகிருன். அப்போது அவர்கள் பாப புண்ணியங்களைக் கடந்து விடுகின்றனர். ஈசுவர தரிசனம் உண்டாகாத வரையில் நன்மை தீமை என்ற துவந்த மனேபாவம் இருக்கத்தான் செய்யும். நன்மை தீமைகளை நீ சமானமாகக் கருதுவதாகவும், கடவுள் சித்தப்படியே நீ காரியங்களைச் செய்வதாகவும் சொன்னபோதிலும், உனது அந்தரங்கத்தில் இவை யெல்லாம் வெறும் வாய்ப் பேச்சுத்தான் என்பதை நீ அறிவாய். ஏதேனும் ஒரு கெட்ட காரியத்தை நீ செய்தால் உனது மனச்சாட்சி உன்னைக் கண்டிக்கத் தொடங்கும்.

897. அவன் என்னை ஆட்டுவிப்பது உண்மையானல் நான் செய்யும் பாவச்செயல்களுக்குப் பொறுப்பாளி நானல்லவே ? ஏ 'பகவன்! நீ என் உள்ளத்தில் உறைகின்ருய்; நீ செய்விக்கிறபடி நான் செய்கின்றேன்' என்று இப்படித்தான் துரியோதனனும் சொன்னன். ஆனல் 'பகவானே எல்லாவற்றையும் செய்விக்கின்ருர்;தான் கருவி மாத்திரமே' என்று கருதுபவர் ஒருக்காலும் பாவச் செயல்களைச் செய்யமாட்டார். திறமைவாய்ந்த நடிகன் சிறிதும் பிழைபட நடிக்கமாட்டான். உள்ளத் தூய்மை அடையும் வரையும் ஒருவன் கடவுளின் இருப்பையும் கூட நம்ப மாட்டான்.

898. ஒரு பக்தன் :—சுவாமி ! அடியேனுக்கு ஒரு சந்தேகம். நமது இச்சை சுவேச்சையானதென்று, அதாவது நல்லதோ, கெட்டதோ எதை வேண்டுமானலும் நாம் செய்யக்கூடுமென்று சொல்லுகிருர்களே, அது வாஸ்தவந்தான ? நமது இச்சை சுவேச்சையானதா ?

பரமஹம்ஸர் :—அப்பா ! எல்லாம் ஈசுவரனுடைய இச்சையைப் பொறுத்துள்ளது ; இவையெல்லாம் அவனுடைய திருவிளையாடல்கள். நல்லது கெட்டது, சிறியது பெரியது, பலமுள்ளது பலமற்றது—இப்படிப் பலவிதங்களில் பல காரியங்களைச் செய்யும்படி தூண்டுபவன் அவனே. நல்லோர், தீயோர்—ஆகிய இவையெல்லாம் அவனுடைய மாயை, அவனுடைய திருவிளையாடல். எதுபோல வென்ருல், தோட்டத்திலுள்ள மரங்கள் எல்லாம் உயரத்திலும் அழகிலும் காம்பீரியத்திலும் சமானமானவையாக இருப்பதில்லை ; அதுபோலவே பேதங்கள் எல்லாம்.

ஈசுவர தரிசனத்தைப் பெருதிருக்கும் வரையில், தான் சுவேச்சாதிகாரி யென்று மனிதன் நினைக்கிருன். ஆனல் இந்த மாயையை

மனிதனிடம் உண்டாக்குபவன் ஈசுவரனே. இல்லாவிட்டால், பாபம் அதிகரித்துவிடும். பாபம் செய்வதற்கு ஜனங்கள் பயப்படமாட்டார்கள். குற்றங்களுக்கும் பாபங்களுக்கும் தண்டனைகூட இராது.

ஆனால் ஈசுவரனைத் தரிசித்தவனுடைய மன நிலைமை எப்படிப் பட்டதென்பது தெரியுமா? "நான் யந்திரம், நீ அதை ஓட்டும் யந்திரி; நான் வீடு, நீ அதில் குடியிருப்பவன்; நான் ரதம், நீ சாரதி; உனது இச்சைப்படி நான் நடக்கிறேன். உனது இச்சைப்படியே நான் பேசுகிறேன்" என்றே அவன் சொல்வான்.

899. திருடப் போகும்படி கள்வனைத் தூண்டுபவன் ஈசுவரன். அதே சமயத்தில் ஜாக்கிரதையாக இருக்கும்படி வீட்டுக்காரனை எச்சரிப்பவனும் ஈசுவரனே. ஒவ்வொரு காரியத்தையும் ஈசுவரனே செய்கிறான்.

அத்தியாயம் 18

கடவுளைக் காணல்

[கடவுளைக் காணும் மனோநிலை—குண்டலினி சக்தியும் ஞான எழுச்சியும்—மெய்போலத் தோன்றும் பொய்யனுபவம்—தெய்வீக ஒலிகளும் சமாதியின் மனோதத்துவமும்—சமாதிக்குப் பின்வரும் விஞ்ஞானம்]

கடவுளைக் காணும் மனோ நிலை

900. பஞ்ச பூதங்களால் ஆன இந்தச் சரீரம் ஸ்தூல சரீரம் எனப்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளாலான சரீரம் ஸூக்ஷ்ம சரீரம் எனப்படும். ஈசுவர தரிசனமாகிய ஆநந்தத்தைப் பெற்று, அவ்வீசுவரனுடன் ஒன்றுபட்டிருக்கும் சம்யோகத்தை அனுபவிக்கும் சரீரம் காரண சரீரம் எனப்படும். தந்திர சாஸ்திரங்களில் இது 'பகவதி தனு' என்று சொல்லப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் அப்பால் மஹா காரணமாகிய முதற்காரணம் இருக்கிறது.

901. வெளியுலக அறிவோடு மனம் சம்பந்தப்பட்டிருக்கும் போது அது ஸ்தூலப் பொருள்களையே காண்பதுடன் அன்னமய கோசத்திலேயே அழுந்திக் கிடக்கின்றது. மனம் உள்முகமாகத் திரும்புமானல், அது வாசற்கதவைச் சாத்திக்கொண்டு உள் அறையை நோக்கிப் போவதை ஒக்கும். அதாவது, ஸ்தூலத்திலிருந்து ஸூக்ஷ்மத்துக்கும், ஸூக்ஷ்மத்திலிருந்து காரணத்துக்கும், அதிலிருந்து மஹா காரணத்துக்கும் போவதாகும். அந்நிலைமையில் மனமானது பரம் பொருளில் லயமாய் விடும். அப்போது அதைப்பற்றிப் பிரத்தியேகமாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

902. சைதன்ய சுவாமிக்கு மூன்று அவஸ்தை நிலைகள் இருந்தன :—அவையாவன : (1) பாஹிய (ஜாக்கிரத) அவஸ்தை—இதில் மனமானது ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரத்தைப்பற்றி நிற்பது. (2) அர்த்த பாஹிய (பாதி வெளியிலும் பாதி உள்ளேயும் உள்ள) அவஸ்தை—இதில் மனமானது காரண சரீரத்தைப்பற்றிச் சிந்தித்து, காரண ஆனந்தத்தை அனுபவிப்பது. (3) அந்தர்முகமான சமாதி அவஸ்தை. இதில் மனமானது மஹா காரணத்தில் இரண்டறக் கலந்திருப்பது.

இதற்கும் வேதாந்திகளால் கூறப்படும் பஞ்சகோசங்களுக்கும் ஒற்றுமை உண்டு. ஸ்தூல சரீரம், அன்னமய பிராணமய கோசமாம்: ஸூக்ஷ்ம சரீரம் மனோமய விஞ்ஞானமய கோசமாம்; காரண சரீரம் ஆனந்தமய கோசமாம். மஹா காரணம் இந்த கோசங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதாம். இந்த மூல காரணத்தில் மனம் இரண்டறக் கலக்கும்போது ஒருவருக்குச் சமாதி நிலை சம்பவிக்கும். இதைத்தான் நிர்விகல்ப சமாதி அல்லது ஜடசமாதி என்கின்றனர்.

குண்டலினி சக்தியும் ஞான எழுச்சியும்

903. குண்டலினி சக்தி எழுந்தாலொழிய ஆத்மீய உணர்ச்சிகள் உண்டாகமாட்டா. மூலாதாரத்தில் குண்டலினி சக்தி செய்கையற்றுக் கிடக்கின்றது. எழுப்பப்பட்டதும், அது சுஷும்ண நாடியில் நுழைந்து, சுவாதிஷ்டானம், மணிபூரகம் முதலிய ஆதாரங்களின் வழியாகச் சென்று கடைசியில் கபால ரந்திரத்தில் அதாவது ஸகஸ்ராரத்தில் சேர்கின்றது. அப்பால் சமாதி சித்தியாகிறது. இவைகளையெல்லாம் நான் நேரில் கண்டிருக்கிறேன்.

904. மஹா வாயு எனப்படும் குண்டலினி சக்தி திடீரென்று கிளம்பித் தலைக்குப் போவது கடவுள் தரிசனத்தின் அடையாளங்களில் ஒன்று. அப்போது சமாதி நிலையுண்டாகி, கடவுள் காட்சி ஏற்படுகின்றது.

905. குண்டலினி சக்தி எழுவதான தனது அநுபவத்தைப்பற்றிப் பகவான் கூறியதாவது: "சரேல் என்ற உணர்ச்சியுடன் ஒரு சக்தி காலிலிருந்து தலைக்கு எழுகின்றது. அந்த சக்தி மூளையை அடையாத வரையில் எனக்கு உணர்ச்சி இருக்கின்றது; ஆனால் மூளைக்கு வந்துவிட்டதும் சரீர உணர்ச்சி இழந்து வெளியுலகுக்கு நான் சவம்போல் கிடக்கின்றேன். அப்போது என்னால் கேட்கவும் பார்க்கவும்கூட முடிகின்றதில்லை; பேசுவதைப்பற்றிச் சொல்லவேண்டுமா? யார் யாருடன் பேசுகிறது? நான் நீ என்ற பேதமெல்லாம் மறைந்துவிடுகின்றன. குண்டலினி சக்தி இவ்விடங்களுக்கு (தம்முடைய ஹ்ருதயத்தையும் தொண்டையையும் தொட்டுக் காண்பித்துக்கொண்டு) வரும்போது உண்டாகும் அதியற்புத அநுபவங்களைப்பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அப்போது எல்லாம் என்னால் பேசமுடிகின்றது; ஆகவே எடுத்துச் சொல்லுகிறேன்; ஆனால் (தொண்டையைச் சுட்டிக்காட்டி) அச்சக்தி இதனைக் கடந்ததும் என்னைப் பேசவிடாமல் எவரோ தடுத்துவிடுவதுபோல் உணர்கின்றேன்; ஏதோ ஒரு சக்தியால் என் நாக்குக் கட்டுண்டுவிடுகின்றது. கண்டத்துக்குமேலெழும்போது ஏற்படும் அனுபவத்தைப்பற்றி உங்களுக்குரைக்க எவ்வளவோ விரும்புகிறேன்; தீர்மானம் செய்துகொள்ளுகிறேன். ஆனால் என்ன செய்வது? அந்த எண்ணம் வந்ததுமே என் மனசு ஒரே ஓட்டமாகத் தொண்டையைக் கடந்து மேலே போய்விடுகின்றது!"

எத்தனையோ முறை ஸ்ரீ குருதேவர் இதனை எடுத்துச் சொல்ல முயன்றும் தோல்வியுற்றிருக்கின்றார். ஒருநாள் தமது சீடர்களுக்கு இதனைக் கூறுவது என்று தீர்மானங்கொண்டார். மூலாதாரத்திலிருந்து படிப்படியாகக் குண்டலினி எழும்போது உண்டாகும் உணர்ச்சிகளையும் அநுபவங்களையும் மிகவும் விரிவாக விவரித்துக்கொண்டே வந்தார். சிஷ்யர்கள் மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். தொண்டை வரையில் எடுத்துச் சொன்னார். தொண்டையைத் தாண்டி ஆறும் நிலையாகிய புருவத்துக்கு வரும்போது, "இந்தப் புருவ மத்திக்கு மனம்

வரும்போது ஒருவன் பரமாத்மாவினுடைய தரிசனம் பெற்றுச் சமாதியில் மூழ்குகிறான். ஜீவனையும் பரமாத்மாவையும் ஒரு மெல்லிய திரை பிரித்து வைக்கின்றது. மேலும் அவன் காண்பதாவது................” என்று சொல்லிக்கொண்டே வந்தவர் மேற்கொண்டு பேசமுடியாதவராய்ச் சமாதியில் ஆழ்ந்துவிட்டார். சமாதி கலைந்து திரும்பவும் அவர் எடுத்துரைக்க எவ்வளவோ முயன்றார் ; ஆனால் முயலும் ஒவ்வொரு முறையும் சமாதியடைந்துவிடுவார் ; பன்முறை இவ்விதம் தோல்வியுற்ற பிறகு பகவான் கண்களில் நீர் ததும்பக் கூறியதாவது : “ஒரு சிறிதும் ஒளிக்காமல் அனைத்தையும் எடுத்துச் சொல்வதென்று நான் பெரிதும் விரும்புகிறேன். ஆனால் எனது அன்னை ஜகதம்பிகை எந்த விதத்திலும் வெளியிடாதவாறு தடுத்துவிடுகின்றாள் ; அவள் என் மென்னியைப் பிடித்துவிடுகிறாள் !”

906. குண்டலினி மூலாதாரத்தை யடையும் மற்ற வழிகளைப் பற்றி மேலும் பகவான் கூறியதாவது : “குருகுருவென்ற உணர்ச்சியுடன் மூளையை நோக்கிப்போவது ஒரே ரீதியாகச் செல்வதில்லை. சாஸ்திரங்களில் அதற்கு ஐந்து கதிகள் கூறப்பட்டுள்ளன. முதலாவது எறும்பின் கதி : வாயில் உணவைக் கௌவிக்கொண்டு எறும்புகள் மெதுவாக ஊர்ந்து செல்வதுபோல் அச்சக்தி அடிமேலடிவைத்துப் படிப் படியாகச் செல்லுகின்றது. தலையை (சகஸ்ராரத்தை) அண்டியதும் சாதகன் சமாதியில் ஆழ்ந்துவிடுகிறான். இரண்டாவது தவளையின் கதி : தவளைகள் இரண்டு மூன்று முறை, சிறிது தாவிக் குதித்துக் கொஞ்சம் நிறுத்தித் திரும்பவும் தாவிச் செல்லும் முறையில், பாதத்திலிருந்து தலைவரையில் ஏறுவதுபோலத் தோன்றுகின்றது. இப்போதும் தலைக்கு வந்ததும் சாதகன் சமாதி எய்துகின்றான். மூன்றாவது பாம்பின் கதி : சுருண்டோ அல்லது நீண்டோ படுத்துக்கொண்டிருக்கும் பாம்பு சத்துருவைக் கண்டதும் திடீரென எழுந்து வளைந்து வளைந்து ஓடுவதுபோல, சுருண்டு கிடக்கும் சக்தியும் தலையை நோக்கி ஓடிச் சென்று சமாதியை உண்டாக்குகின்றது. நான்காவது பறவையின் கதி ; குறிப்பிட்ட இடம் சேருமுன் பறவை சில சமயம் உயர்ந்தும் தாழ்ந்தும் பறந்து செல்வதுபோல் இச்சக்தி சென்று சமாதி எய்துவிக்கின்றது. ஐந்தாவதும் கடைசியுமானதும் குரங்கின் கதி : மரத்துக்கு மரம் தாவும் குரங்கு கிளை கிளையாகத் தாவி இரண்டொரு தாவுகளில் மறு மரத்தை யடைந்துவிடுவதைப்போல் யோகி இரண்டொரு தாவுதலில் குண்டலினி மூளையை அடைவதாக உணர்ந்து சமாதி யடைகின்றான்.”

907. வேறு சில சமயங்களில் வேதாந்தக் கொள்கைப்படி கீழ்க் கண்டவாறு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவைகளைப்பற்றி விளக்குவார்.

“வேதாந்திகள் ஏழு நிலைகளென்று கூறும் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு குறிப்பிட்ட காட்சி ஏற்படுகின்றதென்றும் கூறுவர். சாதாரண மக்களுடைய மனது, முதல் மூன்று நிலைகளிலேயே இருக்கத் திருப்தி கொள்ளும் சுபாவம் வாய்ந்தது. இம் மூன்று நிலைகளிலும்

உயர்ந்தது நாபிக்கு நேருள்ள ஸ்தலமாகும். ஆகவேதான் சாதாரண மனிதன் உண்ணுவது போன்ற விஷயங்களில் பிரீதிகொள்ளுகிறான். நான்காம் நிலையாகிய ஹிருதயத்துக்கு நேரான நிலைக்கு வரும்போது சாதகன் தெய்வச் சோதியைக் காணப்பெறுகின்றான். ஆனாலும் மனது இந்நாலாம் நிலையிலிருந்து கீழ்நிலைகளுக்கு அடிக்கடி நழுவிப் போய்விடுவதும் உண்டு. கண்டத்துக் கருகிலுள்ள ஐந்தாம் நிலைக்கு வரும்போது சாதகன் கடவுளைத் தவிர்த்து வேறு ஒன்றும் பேச இயலாதவனாகி விடுகிறான். நான் இந்த நிலையில் இருந்தபோது எவராவது உலக விஷயங்களைப்பற்றிப் பேசினார்களானால் தடிகொண்டு என் தலைமீது தாக்குவதைப்போல் உணர்வேன். இந்த வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மறைவிடமான பஞ்சவடிக்குள்போய் ஒளித்துக்கொள்வேன். லௌகிகர்களும், உறவினர்களும், விழுந்தால் எழுந்திருக்கமுடியாமல் மரணம் விளைக்கும் படுகுழிகள் போல் தோன்றுவர். அவர்களைக் கண்டதும் அஞ்சி ஓடிவிடுவேன். அவர்கள் முன்னிலையில் இருப்பேனானால் எனக்கு மூச்சுத் திணறிவிடும். எமன் வாயில் சிக்கிக்கொண்டதாகவே எனக்குத் தோன்றும். அவ்விடத்தைவிட்டு அப்புறம் சென்ற பிறகுதான் நான் விடுபட்டதாக உணர்வேன். இந்த நிலையிலிருந்துங்கூட சில வேளை மனது கீழ் மூன்று நிலைகளுக்கும் இறங்கிவிடுவது உண்டு. ஆகையால் சாதகன் தன் மனது இறங்கவொட்டாது காத்துக்கொள்ள வேண்டும். ஆனால் புருவத்துக்கு நேராகவுள்ள ஆறும் நிலைக்கு வந்ததும் சாதகன் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. எப்போதும் சமாதியிலிருந்துகொண்டு பரமாத்மனைத் தரிசித்துக் கொண்டிருக்கிறான். உச்ச நிலையான சகஸ்ராரத்திற்கும் இந்நிலைக்கும் இடையில் மலினமற்ற கண்ணாடி போன்ற மெல்லிய திரை யொன்றுள்ளது. பரமாத்மனுக்கு அவ்வளவு அருகிலிருப்பதால் பரமாத்மனோடு தான் லயித்துவிட்டதாகச் சாதகன் நினைத்துக் கொள்ளுகிறானே அல்லாது உண்மையில் அங்ஙனமில்லை. இந்நிலையிலிருந்து மனம் ஐந்தாவது நிலைக்கும் ஏதோ சில நேரங்களில் நாலாவது நிலைக்கும் கூட இறங்கி வரலாம். அதற்குக் கீழ் இறங்கவே மாட்டாது. சாதாரண ஜீவகோடி வகுப்பைச் சார்ந்த சாதகர்கள், மனம் ஆறும் நிலையை அடைந்ததும் திரும்பார். இருபத்தோரு நாட்கள் சமாதியில் இருந்து அந்த மெல்லிய திரையைக் கிழித்தெறிந்துவிட்டு, பரமாத்மாவோடு இரண்டறக் கலந்துவிடுகின்றனர். ஏழாம் நிலையை அடையப் பெற்றதும் ‘கடவுளோடு ஒன்றித்து விடுகின்றான்’ என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.”

மெய்போலத் தோன்றும் பொய்யனுபவம்

908. நரம்புத் தளர்ச்சியினால் வெளிப் பார்வைக்குச் சமாதி போன்று மெய்ம் மறந்த ஆவேச நிலையை அடையும் ஒருவனைக் குறிப்பிட்டு ஸ்ரீ குருதேவர் இங்ஙனம் கூறினார்: ‘உண்மையான சமாதியடையும்போது ஒருவன் தன் இயல்பான சச்சிதானந்த சாகரத்தில் ஆழ மூழ்குகிறான். அவன் கருவி கரணங்கள் ஒடுங்குகின்றன. ஆனால்

இங்கே என்ன காண்கிறோம்! இந்தவிதமான ஆவேசத்தின் உண்மை தெரியுமா? வீசம்படி பாலைப் பத்துப்படி வடிக்கும் பாத்திரத்தில் காய்ச்சுவதற்கு ஒப்பாகும். சூடுபட்டதும் பால் பொங்கிப் பாத்திரம் விளிம்பிற்குவரும்; அப்போது பார்த்தால் பாத்திரம் நிறைய பால் இருப்பதாகத் தோன்றும். ஆனால் அடுப்பிலிருந்து பாத்திரத்தை இறக்கியவுடன் ஒரு துளி பாலும் தென்படாது. எல்லாம் அடியில் ஒட்டிக்கொண்டிருக்கும்.'

தெய்வீக ஒலிகளும் சமாதியின் மனோதத்துவமும்

909. ஈசுவரானுபவம் இரண்டு வகைப்படும்: ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஐக்கியமாவது ஒருவகை; ஈசுவரனுடைய திவ்ய ரூபத்தை நேரில் தரிசிப்பது மற்றொருவகை. முன்னதற்கு ஞானம் என்றும் பின்னதற்குப் பக்தி என்றும் பெயர்.

910. என் அருமைக் குழந்தைகளே! உண்மையாகவே பகவத் தரிசனம் பெற முடியும். நாம் எப்படி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறோமோ, அதுபோலவே கடவுளைக் கண்டு அவரோடு பேச முடியும். நாம் இப்படிச் சொல்வது வெறும் வார்த்தையல்ல; சத்தியமான வார்த்தைகளேயாகும்.

911. ஈசுவரனது பிரத்யக்ஷ ரூபம், சுத்தாத்மாக்களால் மட்டும் காணக்கூடிய ஆத்மிக உருவமாக விருக்கும். அதாவது, ஈசுவரனிடமிருந்து பெற்ற திவ்விய சரீரத்தை (பகவதி தனுவை)ச் சேர்ந்த ஞானக் கண்களால்தான் இவ்வுருவங்களைக் காணமுடியும். ஆதலால், பரிபூர்ணமடைந்த மனிதனுக்குத்தான் இந்தத் திவ்விய ரூபங்கள் கட்புலனாகும்.

912. ஊனக் கண்கொண்டு கடவுளைக் காணமுடியுமா என்ற பேச்செழுந்தபோது பகவான் பதில் சொன்னதாவது: 'இல்லை ஊனக் கண்களால் காண முடியாது. சாதனை செய்யும்போது அன்புமயமான சரீரம் ஒன்று நமக்குள் உண்டாகின்றது. அச்சரீரத்திற்கு அன்புமயமான கண்களும் காதுகளும் உண்டு. அவற்றால் நீ இறைவனைக் காணவும் கேட்கவும் முடியும்.'

913. அநாஹத த்வனியான பிரணவ சப்தம் சதா ஸர்வ காலமும் தானே ஒலித்துக்கொண்டிருக்கிறது. பரப்பிரமத்தினிடமிருந்து வரும் இந்தச் சப்தம் யோகிகளுக்கு மட்டுந்தான் கேட்கும்; சாதாரண மனிதர்களுக்குக் கேட்காது. அது ஒரு புறத்தில் நாபிப்பக்கத்திலிருந்தும், மற்றொரு புறத்தில் பரப்பிரம்மத்தினிடத்திலிருந்தும் வருகின்றதென்பதை யோகிகள் அறிவார்கள்.

914. சமாதியில் ஒருவனுடைய மனநிலைமை எப்படிப்பட்டதாக விருக்கும்? கொஞ்சநேரம் ஜலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட உயிருள்ள மீனொன்றைப் பழையபடி தண்ணீரில் போட்டால் அது

எவ்வளவு ஆனந்தம் அனுபவிக்குமோ அதற்குச் சமானமான ஆனந்த நிலையில் இருக்கும்.

915. குருவென்றும் சிஷ்யனென்றும் வித்யாஸம் பாராட்டாத தூயநிலைமை அகோசரமானது. பிரம்மக்ஞானத்தை அடைபவனுக்குக் குருவென்றும் சிஷ்யனென்றும் வித்யாஸம் தெரிவதில்லை. ஆகவே, அந்த நிலைமை அகோசரமானதாம்.

916. அனேகமாயிரம் வருஷங்களாக இருட்டாகவிருந்த அறையொன்றுள் ஒரு தீபம் கொண்டு வரப்பட்டவுடனே பிரகாசமடைவது போல, ஞானதீபத்தால் ஜீவன் பிரகாசமடைந்து, அதனுடைய கற்ப கோடி காலத்திய அஞ்ஞானத்தைப் போக்கிக்கொள்கின்றது.

917. சமாதி நிலைமையில் வெளியுலக ஞாபகம் அவருக்கு இருக்கிறதா என்று கேட்கப்பட்டபோது, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பதில் சொன்னதாவது:—"சமுத்திரத்தின் கீழே மலைகள், குன்றுகள், பள்ளத் தாக்குகள், சமதரைகள் முதலியன இருக்கின்றன. என்றாலும் அவைகள் மேற்பரப்பில் காணப்படுவதில்லை. அதுபோல, சமாதி நிலைமையில் சச்சிதானந்தமாகிய பரந்த சாகரந்தான் ஒருவனுக்குத் தோன்றுகிறது. அப்போது, தான் என்ற தனித்தன்மை ஒடுங்கி மறைந்து நிற்கின்றது."

918. உண்மையான ஞானம் உதித்ததும் அகங்காரம் அடியோடு அழிந்துவிடுகின்றது. சமாதியில்லாமல் ஞானம் உதியாது; சூரியன் உச்சிக்கு வரும்போது நம் சாயை நிலத்தில் விழுவதில்லை. அதேபோல, சமாதி அல்லது ஞானம் உண்டாகும்போது அகங்காரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றது. அப்படி ஏதாகிலும் கொஞ்சம் அகங்காரம் இருப்பதாகத் தென்பட்டாலும் அது தெய்விகமான வித்யா அகங்காரமாகும். அறியாமையாகிய அவித்தையால் உண்டாகும் அகங்காரமாகாது அது.

919. ஸ்ரீ புத்த பகவான் நிரீசுவரவாதி என்று ஒருவர் கூறிய போது பகவான் பகர்ந்ததாவது: 'புத்தர் நாஸ்திகர் அல்லர். ஆனால் அவர் தமது சாக்ஷாத்காரத்தை—மெய்ஞ்ஞான அநுபவத்தை—எவருக்கும் சொல்லவில்லை; அவ்வளவுதான். புத்தர் என்பதற்குப் பொருள் என்ன தெரியுமா? அதியுயர்ந்த பரிசுத்த ஞானமடைந்தவர் என்பதாகும். இந்த ஞானம் ஆழ்ந்த தியானத்தால் உண்டாகக் கூடியது.'

ஆத்மானுபூதி, அஸ்தி நாஸ்தி (இருப்பது இல்லாதது) என்ற இரண்டு நிலைகளும் அற்றது. இந்த அஸ்தி நாஸ்தி பிரகிருதியின் மாறுபாடுகளே. உண்மை இவ்விரண்டையும் கடந்ததாகும்.

920. ஞானம் அஞ்ஞானம் ஆகிய இரண்டினையும் கடந்து செல்ல வேண்டும். ஒன்று என்பது ஞானம், பல என்பது அஞ்ஞானம்; கடவுளே சகலத்துக்கும் ஆதார புருஷன் என்பதை அறிவது ஞானம்; அவ்வறிவைப் பெறாதது அஞ்ஞானம். கல்விச் செருக்கால் உண்டாகும் அகங்காரமும் அஞ்ஞானமாகும்; பலவாகத்தோன்றும் உலகப்பொருள்கள்

அனைத்தும், ஒன்றாகிய கடவுளால் இணைக்கப்பட்டிருக்கின்றன வென்றுணர்வது ஞானமாகும். அந்தக் கடவுளை அறிவது விஞ்ஞானம் எனப்படும்.

உன் காலில் முள் ஒன்று தைத்துவிட்டதாக வைத்துக்கொள், மற்றொரு முள்ளால் காலில் தைக்கப்பட்டுள்ளதை அகற்றிவிடுகின்றாய். பிறகு இரண்டினையும் எறிந்து விடுகின்றாய். அதேபோல அஞ்ஞான முள்ளை அகற்ற ஞானமாகிய மற்றொரு முள்ளைத் தேடுகின்றாய். பிறகு பிரம்ம சாக்ஷாத்காரம் அடைவதற்கு, அஞ்ஞானம் ஞானம் இரண்டையும் தாண்டிச் செல்லுகின்றாய். ஏனெனில் பிரம்மம், ஞான அஞ்ஞானங்கள் இரண்டுக்கும் அப்பாற்பட்டதாகும்.

ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபுவைப் பார்த்து, தம்பி லக்ஷ்மணன், "அண்ணா! பிரம்மசாக்ஷாத்காரம் பெற்ற முனிபுங்கவரான வசிஷ்டர், இறந்துபோன தமது குமாரர்களுக்காக, பிறர் எவ்வளவு தேற்றியும் கேளாது, அழுதது வெகு ஆச்சர்யமாகவல்லவோ இருக்கிறது?" என்றார்.

அதற்கு ஸ்ரீ ராமபிரான் 'தம்பி! வியவகாரிக நிலைமையில் மாத்திரம், கடவுள் அறிவு வாய்க்கப்பெற்றவர்கள், அந்த வியவகார நிலையிலுள்ள அறியாமையினாலும் பாதிக்கப்படுவார்கள் என்பதைஅறிவாயாக' என்று பதிலளித்தார்.

இந்த நிலைமையிலுள்ள மனிதர்கள் கடவுளாகிய பேரறிவு பெற்றவர்களல்லர்; அறியாமையோடு கலந்துள்ள வியவகாரிக அறிவுவாய்க்கப் பெற்றவராவர். இப்பிரபஞ்சத்தில் ஒன்றென்று கூறப்படும் அறிவு, பலவற்றைத் தன்னுள்ளடக்கிக் கொண்டுள்ளது; வெளிச்சம் இருக்கிறது என்று உணருபவனுக்கு இருட்டும் தெரிந்திருக்கிறது.

அற்ப அறிவும், அற்ப சக்தியுமுள்ள மனிதனால் அறிந்து கொள்ளப்படும் அறியாமைக்கும், பாவ புண்ணியங்கட்கும், நல்ல காரியம் தீய காரியங்கட்கும், சுத்த அசுத்தங்களுக்கும் அப்பாற்பட்டது பிரம்மம்.

கேள்வி:—சுவாமி, தாங்கள் குறிப்பிடும் அறிவு அறியாமையாகிய இரண்டு முட்களையும் எறிந்துவிட்டால் எஞ்சியிருப்பது யாதோ?

பதில்:—நித்ய, சுத்த, புத்த ரூபமான பரப்பிரம்மமே எஞ்சியிருப்பது. ஆனால் அந்தப் பிரம்மனைப்பற்றி நான் உமக்கு எங்ஙனம் விளங்க உரைக்க முடியும்? நெய்யின் ருசி எப்படி இருக்கும் என்று ஒருவர் கேட்கிறார். அந்த ருசியைப் பற்றியே எடுத்துரைக்க முடியுமோ? 'வெண்ணெய் போலவே நெய்யும் ருசிக்கும்' என்று ஒருவாறு சொல்ல முடியும். அதற்குமேல் எப்படிச் சொல்ல முடியும்? விவாகமாகாத கன்னிகை யொருத்தி, தன் தோழியைப் பார்த்து, 'இப்போது உன்னுடைய கணவன் வந்திருக்கிறான். அவனைச் சந்திக்கும்போது உனக்கு எத்தகைய இன்பம் உண்டாகிறது? சொல்' என்று கேட்டாள். அதற்கு அத்தோழி 'என் அன்பே, உனக்கு விவாகமாகி உன்புருஷன் வரும்போது அதனை நேரில் அறிந்து கொள்வாய், அதனைப்பற்றி எப்படி நான் விளக்கிக் கூற முடியும்?' என்று பதில் சொன்னாள்.

921. குருவியின் கூண்டு அழிந்துபோனால், அக்குருவி, ஆகாயத்தில் பறந்துபோய் விடுகிறது. அதுபோல, சரீர ஞானமும் உலகஞானமும் மனத்தைவிட்டு நீங்கினால், ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய ஆகாயத்தில் பறந்து சென்று சமாதி நிலையில் ஐக்கியமாகிறது.

922. தெய்வீகம் தோன்றுவதற்கு முன்னால் மானுஷ்யம் நசிக்க வேண்டும். ஆனால், இந்தத் தெய்வீகமும், காலக்ரமத்தில் "பிரம்மமயி" யாகிய இன்னும் உயர்ந்த நிலை தோன்றுவதற்கு முன் தொலைய வேண்டும். இப்படி நசித்த தெய்வீகத்தின் (சிவபிரான்) மார்புமீது தான் ஆனந்த மாதா, தனது திவ்ய நர்த்தனம் செய்தருளுகின்றனள்.

923. கற்பூரத்தைக் கொளுத்தி வைத்தால் மிகுதியொன்று மிருப்பதில்லை. பகுத்தறிவு (விவேகம்) ஒழிந்து, மகோன்னதமான சமாதி நிலையைப் பெற்றால் அப்போது 'நான்' என்பதும், 'நீ' என்பதும், உலகமென்பதும் இரா. ஏனெனில் இந்த மனமும் மமகாரமும் விசுத்தப் பிரம்மத்தில் ஒன்றாய்க் கலந்துவிடுகின்றன.

924. அகங்காரம் அழியும்போது ஜீவனும் இறக்கும். அப்போது சமாதியில் பிரம்மஞான முண்டாகிறது. அங்கு பிரம்மத்தை யனுபவிப்பது பிரம்மமே யன்றி ஜீவனல்ல.

925. பந்தப்பட்ட மனம் ஈசுவரனை அறியாது என்பது உண்மையே. ஆனால் அவரைச் சுத்தமான மனத்தால் அறியலாம். சுத்தமான மனமென்பது கலப்பற்ற விவேகமாகும். அவ்விவேக மனம் நற்பழக்கத்தினால் பரிசுத்தமாக வேண்டும். உலக பாசங்களினின்றும் ஆசாபாசங்களினின்றும் திரும்பவும் அது விடுபடவேண்டும். அப்போதுதான் அது பந்தமற்ற பரமாத்மாவுடன் ஒன்றாகக் கூடும். பழைய ரிஷிகள் ஈசுவரனைக் கண்டறிந்தது இவ்விதமாக வல்லவா? பரிசுத்தமான மனமுடையவர்களாக இருந்ததனால் அவர்களுக்கு ஈசுவர தரிசனம் நேர்ந்தது. அந்த மனமும் உள்ளே யிருக்கும் எல்லையற்ற ஜீவனாகிய ஆத்மனும் ஒன்றென்று அவர்கள் கண்டுகொண்டனர்.

926. மனமும் புத்தியும் விஷய சம்பந்தத்தில் உட்பட்டிருக்கும் வரையில், ஈசுவரன் அவைகளுக்குப் புறம்பேதானிருப்பான். அவைகள் பரிசுத்தமடையும்போது அவன் தோன்றுவான். காமமும் பொன்னாசையும்தான் மனத்தை அசுத்தமாக்குகின்றன. ஹ்ருதயத்தில் அவித்தை குடிகொண்டிருக்கும் வரையில் மனமும் புத்தியும் பரிசுத்தமாகா. அவைகள் ஒன்றுக்கொன்று வேறு பட்டனவாக விருந்தபோதிலும், பரிசுத்தமடையும்போது ஒன்றேயாகி, சைதன்யத்துடன் கலக்கின்றன. அப்போது சைதன்யமாகிய ஈசுவரன் சைதன்யத்துக்குக் கட்புலனாகிறான்.

சமாதிக்குப் பின் வரும் விஞ்ஞானம்

927. தோற்றத்தை அகற்றி ஆத்மனை சாக்ஷாத்கரிப்பதே ஞானமெனப்படும். விசார மார்க்கத்தின் மூலம் நாமரூபங்களாகிற தோற்றங்களை நீக்குவதால் ஒருவன் சமாதி எய்தி ஆத்மனை சாக்ஷாத்கரிக்கின்றான்.

விஞ்ஞானம் என்பது பூரணமாக அறிந்துகொள்வது என்று பொருள்படும். சிலர் பாலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றார்கள் ; சிலர் அதனைப் பார்த்திருக்கின்றனர் ; ஆனால் சிலரோ ருசியும் பார்த்திருக்கிறார்கள். பாலைக் கேள்வியின் மூலமாக அறிந்தவன் அஞ்ஞானி ; பார்த்திருப்பவன் ஞானி ; ருசித்திருப்பவனே விஞ்ஞானம் அடைந்தவனாவான் ; அதாவது இம்மூன்றாமவன் பாலின் முழுத்தன்மையையும் தெரிந்துகொண்டவனாவான். கடவுளைக் கண்டு அவனிடம் உறவினரைப் போன்று நெருங்கி உறவாடலே விஞ்ஞான மெனப்படும்.

முதலில் நீ 'இதுவல்ல,' 'இதுவல்ல' என்னும் நேதி மார்க்கத்தைப் பின்பற்றவேண்டும். அவன் ஐந்து பூதங்களல்ல, பஞ்சேந்திரியங்களல்ல, மனமுமல்ல; புத்தியுமல்ல, 'நான்' என்னும் சாதாரண அகமுமல்ல. இந்த தத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். வீட்டின் மேல்தளத்துக்குச் செல்லவேண்டுமானால் கீழிருக்கும் மாடிப்படிகளை ஒவ்வொன்றாகக் கடந்துகொண்டு போகவேண்டும். மாடிப் படிகளே வீட்டின் தளமாகிவிடாவல்லவா ? மேல்தளத்துக்குப் போனதும் அங்கு நீ என்ன காண்கிறாய்? அந்தத் தளமும் அதே செங்கல், சுண்ணும்பு, மணல் இவைகளாலேயே கட்டப்பட்டிருப்பது தெரியவருகின்றது. அதே போல பரப்பிரம்மனே ஜீவனாகவும், ஜகத்தாகவும், தத்துவ சாஸ்திரங்களின் இருபத்து நான்கு தத்துவங்களாகவும் ஆகியிருக்கிறான். ஆத்மன் என்று சொல்லப்படுவதே பஞ்ச பூதங்களாகப் பரிணமித்திருக்கின்றது. இந்தப் பூமி ஆத்மனிடமிருந்து உண்டாயிற்றென்றால் ஏன் இவ்வளவு கடினமாகவிருக்கின்றது என்று கேட்கலாம். பகவானுடைய சங்கற்பத்தால் சகலமும் சாத்தியமாகின்றன. சதையும் எலும்பும், இரத்தம் விந்து இவைகளிலிருந்து தானே உண்டாயின ? சமுத்திர ஜலத்தால் உண்டாகும் நுரை, தண்ணீரைக் காட்டிலும் எவ்வளவு கடினமாக இருக்கிறது ?

விஞ்ஞானமடைந்தவன் உலகத்திலும் வாழலாம். உலத்திலுள்ள சராசரப் பொருள்கள் எல்லாம் தன்மயமே என்றும், தான் உலகத்துக்குப் புறம்பானவன் அல்லன் என்றும் அவன் தெளிவாக அறிகின்றான்.

ஸ்ரீ ராமச்சந்திரர் ஞானம் அடைந்ததும் உலகத்தில் வாழ மறுத்துவிட்டார். அப்போது தசரத சக்ரவர்த்தி அவருக்கு உபதேசம் செய்ய வசிஷ்ட மகரிஷியை அனுப்பி வைத்தார். வசிஷ்டர் போய் 'இராமா ! இந்த உலகம் பரப்பிரம்மத்துக்கு வெளியே இருக்கிறதென்றால் அதனைத் துறந்துவிடு' என்று சொன்னார். பிரம்மத்தையன்றி வேறொன்றும் இல்லை யென்றறிந்திருந்த ஸ்ரீராமச்சந்திரப் பிரபு ஒன்றுமே பேசாமல் மௌனமாக விருந்தார்.

928. சங்கீதம் தாழ்ந்த ஸ்வரத்தில் ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக உச்சத்துக்குக் கொண்டுபோகப்படுகிறது ; பிறகு முடிவில் திரும்பவும் தாழ்ந்த சுரத்துக்கே கொண்டுவந்து முடிக்கப்படுகின்றது. அதுபோலவே ஒருவன் இரண்டற்ற ஒன்றைச் சமாதியில் சாக்ஷாத்கரித்த பிறகு, தாழ்ந்தநிலைக்கு இறங்கிவந்து கடவுளுக்குப் புறம்பான ஜீவன்

போல் வசித்து வருகின்றான். ஒருவன் வாழை மரத்தின் பட்டைகளை ஒவ்வொன்றாக அகற்றிவிட்டுக் கடைசியில் தண்டையடைகிறான். இத் தண்டுதான் மிக முக்கியமானது என்று நினைக்கிறான். ஆனால் கொஞ்சம் யோசித்த பிறகு பட்டைகளும் மரத்தின் பாகம் என்பதை அறிய வருகிறான். பட்டையும் தண்டுமாகிய இரண்டும் முழு மரத்திற்கு முக்கியமாகும் என்பதுபோல இரண்டு நிலைகளும் அவசியமாக வேண்டப்படுவனவாம்.

929. வில்வப் பழத்தில் ஓடு, விதைகள், சதை இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவைகளில் எது ஒன்று மாத்திரம் வில்வப் பழத்தைக் குறிக்கும்? 'ஓடு பழமல்ல; அது முக்கியமன்று' என்று ஒருவன் தள்ளிவிடுகிறான்; பிறகு விதைகளையும் அப்படியே அகற்றி விடுகிறான். கடைசியில் சதையைத் தனியாக எடுத்து அதுதான் வில்வப் பழமென்று கருதுகின்றான். சிறிது சிந்தித்த பிறகு அவன் தெளிவு கொள்கிறான். சதை, விதை, ஓடு இம்மூன்றும் சேர்ந்ததே முழுப் பழம் என்று அறியவருகிறான். அதேபோல ஒருவன் குணங்குறியற்ற நிராகாரக் கடவுளைச் சாக்ஷாத்கரித்தபிறகு நித்தியமாகிய அதே பரப்ரம்மம் லீலாரூபமாய் இந்த உலகமாகவும் பரிணமித்திருக்கிறது என்று அறிய வருகிறான்.

930. ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பார்த்து, 'உன்னுடைய வாழ்க்கையின் இலக்ஷியம் என்ன?' என்று கேட்டார். 'சமாதியில் மூழ்கிக் கிடப்பதே என் விருப்பம்' என்று நரேந்திரர் பதில் சொன்னார். அவ்வளவு குறுகிய மனமுடையவனாக உன்னால் இருக்க முடியுமா? சமாதிக்கும் அப்பால் போ. உனக்குச் சமாதி ஓர் அற்ப விஷயம்' என்று பகவான் கூறினார்.

மற்றொருவரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியதாவது :—'சமாதி, பக்தி—இவைகளே முடிவல்ல.'

931. மற்றொரு முறையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்ட இதே கேள்விக்கு நரேந்திரர் மேற்கூறியவாறே பதில் சொன்னார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விதம் கூறினார்: "என்ன உன்னைப் பெரிய குணவான் என்றல்லவோ நினைத்திருந்தேன். குறுகிய இலக்ஷியத்தோடு நீ எப்படித் திருப்தி யடைய முடியும்? பரந்த நோக்கே எனக்குப் பலந் தருவது. நான் மீன் சாப்பிட விரும்பினால், வறுத்தும், சூப் செய்தும், மசாலா இட்டு வேகவைத்தும் பலவிதமாகச் சமைத்துச் சாப்பிடுவேன். அதேபோல குணங்குறியற்ற தனிமுதலாகக் கடவுளை நான் சமாதியில் கண்டு களிகொள்வது போலவே, எனக்கு நெருங்கிய இன்பமான உறவினன் போலவும் வேறு பலவகையிலும் அவனுடைய பலவேறு ரூபங்களையும் அனுபவித்து ஆநந்திக்கிறேன். இதே போல் நீயும் செய்வாய். ஞானியாகவும் அதேசமயத்தில் பக்தனாகவும் இருப்பாய்."

அத்தியாயம் 19

கடவுளைக்கண்ட ஞானி

சித்த புருஷர்களின் வகை

932. பௌதிக சாஸ்திரம், அளவுக்குட்பட்ட விஷயங்களைப் பற்றிமட்டுமே கூறுகின்றது. அளவுக்கு அப்பாற்பட்ட இடத்திலிருந்து அது யாதொரு செய்தியையும் கொண்டுவருகிறதில்லை. ஈசுவரனைத் தரிசித்த ரிஷிகளால்தான் அளவுக்கு அப்பாற்பட்ட செய்தியைக் கொணரமுடியும்.

933. சித்தர்கள் ஐவகையினர். 1. ஸ்வப்ன ஸித்தர்: கனவு மூலமாகத் தெய்வ அருளைப் பெற்றுப் பூரண மடைபவர்கள். 2. மந்திர ஸித்தர்: மந்திரோபதேசம் மூலமாகப் பரிபூரண மடைபவர்கள். 3. ஹடாத் ஸித்தர்: புதையல் கிடைப்பதினால் அல்லது ஒரு தனவான் மகளை மணப்பதால் திடீரென்று பணக்காரனாவது போல, திடீரென பரிபூரண மடைபவர்கள் இவ்வகுப்பினர். பாபிகள் அநேகர், திடீரென்று எப்படியோ தூயர்களாகி ஈசுவரனை அடைகின்றனர். 4. கிருபா ஸித்தர்: ஈசுவர கிருபை மூலமாகப் பக்குவ மடைபவர்கள். காட்டை வெட்டித் திருத்துகிறவன் பழைய கிணற்றையோ கட்டடத்தையோ கண்டு பிடித்தால், அவைகளையே சீர்ப்படுத்திக்கொள்கின்றனன். அது போல, சிலர் சிரமப்படாமலேயே பரிபூரண மடையும் பாக்கியசாலிகளாக இருக்கின்றனர். 5. நித்ய ஸித்தர்: புடல் பூசணி முதலிய கொடிகளில், காய் தோன்றிய பிறகு பூவின் இதழ்கள் வெளி வருவதைப் போல, நித்ய ஸித்தர் பிறக்கும்போதே பரிபூரணராய்ப் பிறப்பவர். முக்தியடைய அவர்கள் செய்வதாகத்தோன்றும் பிரயத்தனங்கள்யாவும் மனிதற்கு வழி காட்டுவதற்கேயாம்.

934. பரிபூரணமானவர்களை, சாக்தர்கள் கௌல ரென்றும், வேதாந்திகள் பரமஹம்ஸரென்றும், பௌல வைஷ்ணவர்கள் ஸான்பி யென்றும் கூறுகின்றனர்.

935. தாம் மாம்பழம் தின்றது பிறருக்குத் தெரியாதிருக்க வேண்டுமென்று, தின்றவுடன் வாயைத் துடைத்துக் கொள்ளுகிறார்கள் சிலர். ஆனால் சிலர் பழம் கிடைத்ததும் அதைப் பங்கிட்டுக்கொடுக்கப் பிறரைக் கூப்பிடுகின்றனர். அதுபோல, தெய்வீக இன்பத்தை அனுபவிப்பவர்களிலே, தாம் மட்டும் அனுபவிப்பவர்களும், பிறரையும் அனுபவிக்கச் செய்பவர்களும் இருக்கின்றனர்.

ஹிருதயத்தில் இறைவன் எழுந்தருளும் நிலை

936. பகவத் தரிசனம் பெற்ற பிறகு, ஒருவன் மாறுபட்ட மனிதனாகி விடுகிறான்.

937. சிலர் ஏற்கனவே விழித்துக்கொண்டிருக்கின்றார்கள்; அவர்களை அறிந்துகொள்ளுவதற்கு அவர்களிடம் சில அடையாளங்கள் இருக்கக் காண்போம். சக்ரவாகம் என்னும் பக்ஷி எப்போதும் ஆகாயத்தில் பறந்துகொண்டே இருக்கும். ஏழு சமுத்திரங்களிலும் தண்ணீர் இருக்கின்றது. கங்கை, யமுனை முதலிய அநேக ஆறுகளிலும் தண்ணீர் நிறைந்துள்ளது. என்றாலும் அப்பறவை மழை நீரையன்றி இவை யொன்றினின்றும் தண்ணீர் அருந்தாது. எவ்வளவுதான் தாகத்தால் தொண்டை வரண்டு போயினும் மழை நீரைத் தவிர்த்து வேறு எந்த நீரையும் அது அருந்தவே அருந்தாது. அதேபோல இவர்களும் கடவுளைப் பற்றியும், கடவுள் சம்பந்தப்பட்டவற்றைப் பற்றியு மன்றி வேறு எந்த விஷயங்களைப் பற்றியும் கேட்கவும் பேசவும் மாட்டார்கள்.

938. மனிதனுடைய ஹிருதயத்தில் ஈசுவரன் தோற்றமடைவதின் அடையாளங்கள் யாவை? அருணோதயத்தின்போது தோன்றும் பிரகாசம் சூரியனுடைய உதயத்தைத் தெரிவிக்கின்றது. அதுபோல, ஈசுவரன் உள்ளத்தில் உதயமாவதற்கு முன்னால், சுயநலம் கருதாத் தன்மை, பரிசுத்தம், சன்மார்க்கம் ஆகிய குணங்கள் உண்டாகின்றன.

939. தனது வேலைக்காரன் வீட்டுக்கு அதிதியாகப் போவதற்கு முன்னால், அவ்வேலைக்காரன் தன்னைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரிக்க வேண்டியதற்காக, அரசன் ஒருவன் தன்னுடைய பண்டசாலையிலிருந்தே வேண்டிய ஆசனங்கள், ஆபரணங்கள், ஆகாராதிகள் இவைகளை அவ்வேலைக்காரனுக்கு அனுப்புகிறான். அதுபோல ஈசுவரன் பக்தனிடம் செல்லுமுன்னால், ப்ரேமை, பக்தி, சிரத்தை ஆகிய இவைகளை அந்த பக்தனுடைய அவாவுற்ற ஹிருதயத்தில் புகும்படி அனுப்பியருள்கிறான்.

940. தனக்குள் தானே பூர்ணானந்தத்தை அனுபவிப்பது ஈசுவர தரிசனத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். சமுத்திரத்தின் மேற்பரப்பில் அலைகள் சுருண்டோடுகின்றன. ஆனால் அதன் கீழுள்ள அகாதமான நீர்த்தொகுதியோ அசைவற்றிருக்கின்றது.

941. ஒருவனுக்கு தெய்வீக இன்பம் உண்டாகுமானால், அவன் அதிலேயே ஆழ்ந்து உன்மத்தனைப் போலாவான். அவன் கட் குடியனைப்போலத் தோன்றுவானாயினும் கள்குடிக்க வேண்டிய அவசியமில்லை. எனது திவ்யமாதாவின் சரணாரவிந்தங்களைக் காணும்போது,நான் ஐந்து புட்டி சாராயம் குடித்தவனைப்போலாகிறேன். இந்த நிலைமையில் ஒருவனுக்கு எப்போதும் உணவு வேண்டியிருப்பதில்லை.

942. சித்தி அடைந்தவனுடைய நிலைமை எப்படிப்பட்டது?

(பரிபூரண நிலையை அடைந்தவனைச் சித்தி யடைந்தவன் என்றும், நன்றாய் வெந்து பக்குவமான பதார்த்தங்களைச் சித்தியடைந்தவை யென்றும் வங்காளத்தில் சொல்வது வழக்கம்) சித்தி அடைந்த உருளைக்கிழங்கோ, கத்தரிக்காயோ மிருதுவாயும் சதைப்பற்றுள்ளதாயும் ஆவ

தைப்போல, சித்தி அடைந்த மனிதன் வெகு பணிவுள்ளவனும் இனிய தன்மை உடையவனுமாகிறான்.

ஞானிகளின் இலக்ஷணம்

943. உயிருடனிருக்கும்போதே எவனொருவன் இறந்தவன் போலாகிறானோ, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தினிடத்திற்போல் நசித்திருக்கின்றனவோ, அவன்தான் உண்மையான ஆத்ம ஞானியாவான்.

944. ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவ சந்திரசேனரிடம் இவ்விதம் புகன்றார்: 'நீர் இன்னும் மேனிலைக்குப்போய் உயர்ந்த விஷயங்களைப்பற்றிப் பிரசாரம் செய்துகொண்டே போவீரானால் உம்முடைய சபை, பிரம்ம சமாஜம் இவையாவும் சிதறுண்டுபோகும். ஞானநிலையில் சபைகள் சங்கங்கள் என்பனவெல்லாம் பொருளற்றுவிடுகின்றன; கனவு போன்று பொய்யாகிவிடுகின்றன.

945. வாஸ்தவமான ஞானம் உண்டானவன் ஈசுவரன் வெகு தூரத்திலிருப்பதாகக் காண்பதில்லை. 'அவன்' என்று, எட்ட இருப்பது போல் இல்லாமல் 'இது' என்று இங்கே, அவனுடைய உள்ளத்திலேயே இருப்பதாக அவன் உணர்கிறான். ஈசுவரன் எல்லாரிடத்தும் இருக்கிறான். ஆகவே தேடுபவர்களுடைய காட்சிக்கு அவர்களிடமே தென்படுகிறான்.

946. ஜலத்தில் அமிழ்த்திவைத்த பாத்திரத்தின் உள்ளேயும் வெளியிலும் ஜலம் நிரம்பியிருக்கும். அதுபோல, ஈசுவரனிடம் ஆழ்ந்துள்ள ஆத்மாவானது உள்ளும் புறமும் சர்வ வியாபகமான சைதன்யத்தைத்தான் காணும்.

947. ஈசுவர தரிசனத்தைப் பெற்ற பிறகு, ஈசுவரன் எங்கும், எல்லாவற்றிலும் இருப்பதாகவே பக்தனுக்குத் தோன்றும். ஆனால், ஈசுவரனுடைய மேலான தோற்றம் மனிதனிடம் காணப்படுகிறது. இன்னும் அதைவிட மேலான தோற்றமோ, காமமும் காசாசையும் கொஞ்சமேனும் இல்லாத சுத்த சாத்விக பக்தர்களிடம் இருக்கும்.

948. பகவத்தரிசனம் கிடைக்கப் பெற்ற பக்தன் பகவானுடைய லீலைகளையும் காண்பதற்கு ஆசைப்படுவது உண்மையே. இராவணனைக் கொன்றுவிட்டு ஸ்ரீ ராமச்சந்திரப்பிரபு இராக்ஷசர்களது ஊராகிய இலங்கைக்குள் நுழைந்தபோது, அவரைக்கண்டு இராவணனது வயது முதிர்ந்த தாயார் ஓட ஆரம்பித்தாள். அப்போது இலக்ஷ்மணன் ஆச்சரியப்பட்டு, 'என்ன அண்ணா இது? இக்கிழவி நிக்ஷா, தன் மைந்தர்களையெல்லாம் பறிகொடுத்து மிகுந்த கஷ்டத்தை யனுபவித்தாள்; என்றாலும் இப்போது தன் உயிருக்குப் பயந்து ஓடுகின்றாளே! என்ன காரணம்?' என்று கேட்டான். ஸ்ரீராமபிரான், கொல்லமாட்டேன் என்று

அக்கிழவிக்குத் தைரியங்கூறி அருகிலழைத்து, முதிர்ந்த தசையில், மரணத்துக்குப் பயந்து ஓடின காரணத்தை வினவினர். அதற்கு நிக்ஷா என்ன சொன்னள் தெரியுமா? "ஓ ராமா, இத்தனை காலமாக உயிரோடிருந்ததால்தான் நான் உம்முடைய லீலாவிநோதங்களைக் காணமுடிந்தது. மேலும் உமது லீலைகளைக் காண்பதற்கே நான் இன்னும் உயிர்வாழ விரும்புகிறேன்" என்றது, அந்தத் தொண்டுகிழம்.

949. முக்தியடைந்த ஆத்மாவினிடம் மாயை இருக்குமா? சுயம் பொன்னல் நகைகளைச் செய்யமுடியாது. ஏதாவது ஒரு தாழ்ந்த உலோகத்தை அதனுடன் கொஞ்சம் கலக்கவேண்டி யிருக்கிறது. மனிதனுக்குச் சரீரம் இருக்கும் வரையில் அச் சரீராவஸ்தைகளை நடத்துவதற்குக் கொஞ்சம் மாயை வேண்டியது அவசியம். மாயையினின்றும் முற்றிலும் நீங்கிய மனிதன் இருபத்தொரு நாட்களுக்குமேல் ஜீவித்திருக்க மாட்டான்.

950. உடம்பிலிருந்து தலை வெட்டப்பட்ட பிறகு, சிறிதுநேரம் வரை உயிர் இருப்பதைக் காண்பிக்க ஆட்டின் உடல் அசைந்து கொண்டிருக்கின்றது. அதுபோல பரிபூரண நிலையையடைந்த ஞானியின் அகங்காரம் அழிவுண்டபோதிலும் சரீர சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்க அவ்வகங்காரத்தின் சக்தி கொஞ்சம் எஞ்சியிருக்கின்றது. ஆனல் அவனைத் திரும்பவும் உலகத்தோடு பிணைக்கக்கூடிய பலம் அதனிடம் இல்லை.

951. சரீரம் தோன்றியிருக்கிறது. அது மறுபடியும் நசித்துப் போகும். ஆனல் ஆத்மாவுக்கு மட்டும் நாசமே இல்லை. கொட்டைப் பாக்கைப்போல—பாக்கு முற்றினல் கொட்டை வேறு, மேல்தோல் வேறாகி விடும்; முற்றாமல் காயாக இருக்கும் போது அப்படிப் பிரித்தெடுப்பது மிகவும் கடினம். ஈசுவர தரிசனம் உண்டான பிறகு, ஆத்மா வேறு, சரீரம் வேறு என்ற ஞானம் உதிக்கும்.

952. யூதர்கள் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த போது, தாம் அவ்வளவு துயரங்களை யனுபவிக்கையிலும், என் அம்மகான் அவர்கள் மன்னிக்கப்படட்டுமென்று பிரார்த்தித்தார்?

பச்சைத் தேங்காயை வெட்டினல் கத்தியானது ஓட்டினைப் பிளந்து கொண்டு உள் பருப்பில் பாயும். ஆனல் முற்றின நெற்றுக்காயில் ஓடு வேறு, பருப்பு வேருகப் பிரிந்திருக்கும். ஓட்டினைப் பிளந்தாலும் கத்தி பருப்பில் படாது. இயேசு கிறிஸ்து நெற்றுத் தேங்காய்க்குச் சமானம். அவரது அந்தராத்மா அவருடைய சரீரத்தைவிட்டு வேருகப் பிரிந்திருந்தது. ஆதலால்தான் சரீர வேதனைகள் அவரைத் துன்புறுத்தவில்லை. தேகத்தி லனேக ஆணிகளை அறைந்த போதிலும் அவர் மிகுந்த சாந்த முடையராய், தம்முடைய சத்துருக்களின் நன்மைக்காகப் பிரார்த்தனை செய்ய வல்லவராக இருந்தார்.

ஞானியின் பற்றின்மை

953. தென்னைமட்டை கீழே விழுந்த பிறகு, மரத்தில் அது முன்னால் இருந்த இடத்தில் ஒரு வடு காணப்படும். அதுபோல ஈசுவரனை அடைந்தவனுக்கும் அகங்காரத்தின் அடையாளம் இருக்கும். அவனுடைய சுபாவம் குழந்தையின் சுபாவத்தைப்போலிருக்கும். ஸத்வ, ரஜோ, தமோ குணங்களில் எதுவும் மேம்பட்டிருப்பதில்லை. ஆதலால் ஏதாவதொன்றை எளிதில் பற்றவும் விடவும் கூடும். ஒரு தம்படி பெறுமான விளையாட்டுப் பொருளை ஒரு குழந்தையிடம் கொடுத்துவிட்டு அதனிடமிருந்து ஐந்து ரூபாய் பெறுமான வஸ்திரத்தை வாங்கிவிடலாம். முதலில் அக்குழந்தை "தரமாட்டேன்; இதை எனக்கு அப்பா வாங்கிக் கொடுத்தார்" என்னுமாயினும், அதை எளிதில் வாங்கிவிடலாம். குழந்தைக்கு எல்லாரும் சமம். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசம் அதற்குக் கிடையாது. ஆதலால் ஜாதி பேதமும் இல்லை. "அவன் உன் தம்பி," என்று தாயார் சொல்வாளானால், அப்படிப்பட்டவன் எவ்வளவு தாழ்ந்தவனாகவிருந்தபோதிலும் அவனிடமிருந்து அக்குழந்தை சோறுபெற்று உண்ணும். அதற்குத் துவேஷம், சுசி, அசுசி, என்பனவும் கிடையா.

954. ஜீவன் முக்தர்கள் உலகத்தில் வாழ்வது எங்ஙனம்? மீன் குத்திப் பறவைகள்போல் அவர்கள் உலகில் வாழுகின்றார்கள். அப்பறவை நீரில் ஆழ முழுகுகிறது. என்றாலும் அதன் சிறகுகள் தண்ணீரால் நனைவதில்லை. இரண்டொரு துளி நீர் ஒட்டிக்கொண்டிருக்குமானால், சரீரத்தை அசைத்துச் சுலபமாக அதனை நீக்கிவிடுகின்றது.

955. பாம்பு கொடிய விஷமுள்ள ஜந்து. யரேனுமொருவன் அதைப் பிடிக்கப்போனால் அது அவனைக் கடிக்கிறது. ஆனால் பாம்பை எடுத்து ஆட்டும் வித்தையைக் கற்றுக்கொண்டவன், ஒரு பாம்பைப் பிடிப்பதன்றி, ஆபரணங்களைப்போல, கையிலும் கழுத்திலும் அநேகம் பாம்புகளைச் சுற்றிக்கொண்டு போகவும் கூடும். அதுபோல ஆத்ம ஞானத்தைப் பெற்றவனுக்குப் பெண்ணாசை பொன்னாசைகளாகிய விஷத்தால் யாதொரு தீங்கும் உண்டாகாது.

956. தவளைக் குட்டியினுடைய வால்விழுந்ததும் அது தண்ணீரிலும் தரையிலும் வாழக்கூடும். அஞ்ஞானமாகிய வால் மனிதனிடமிருந்து விழுந்துவிட்டால் அவனுக்கு முக்தியுண்டாகின்றது. அப்போது அவன் கடவுளினிடத்தும் அதுபோலவே உலகத்தினிடத்தும் நன்கு வாழக்கூடியவனாகிறான்.

957. சந்தனத்தின் ஸுகந்தத்தையும் அழுகிய பிணத்தின் துர்நாற்றத்தையும் காற்று ஒருங்கே கொண்டு வீசுமாயினும், அவைகளுடன் அது கலந்து விடுவதில்லை. அம்மாதிரியாகவே முக்தி யடைந்த ஜீவனும் உலகத்தில் வாழ்ந்தபோதினும் அதனுடன் கலந்திருப்பதில்லை.

958. சுவர்ண குளிகையால் பொன்னாக மாற்றப்பட்ட இரும்பைத் தரையில் புதைத்தாலும் குப்பைமேட்டில் எறிந்தாலும் அது எப்

போதும் பொன்னுகவே இருக்குமேயன்றிப் பழைய நிலைமையை அடையாது. ஒருவன் ஈசுவர சரணரவிந்தத்தை ஒருதரம் ஸ்பரிசித்தபோதிலும் அவனுடைய நிலைமையும் அதுபோன்றதே. உலகச் சந்தடியில் வசித்தாலும் சரியே, காட்டில் தன்னந்தனியே வாழ்ந்தாலும் சரியே; அப்படிப்பட்டவன் ஒருக்காலும் எவ்வித அழுக்கும் அடையமாட்டான்.

959. பாலையும் ஜலத்தையும் சேர்த்தால் அவை சீக்கிரம் ஒன்ருய்க் கலந்து விடுகின்றன. ஆனல் பாலை வெண்ணெயாகப் பண்ணி அவ்வெண்ணெயை ஜலத்தோடு சேர்த்தால், அது தண்ணீருடன் கலக்காமல் அதன் மீது மிதக்கின்றது. அதுபோல, ஜீவனுனது ஒரு தரம் கடவுள் நிலையை அடைந்துவிட்டால் பக்குவமடையாத கணக்கற்ற ஜீவர்களுடன் சதா பழகினுலும், அவைகளின் கெட்ட சகவாசத்துக்கு ஒரு போதும் உட்படாது.

960. பிரகிருதியும் ஆத்மாவும் பிரம்மத்தோடு ஒற்றுமைப்பட்டவை யென்று தெரிந்து கொண்டவனை நன்மை தீமைகள் கட்டுப்படுத்த மாட்டா.

ஞானியின் நிலை நன்மை தீமைகளைக் கடந்ததேனினும் ஞானி தீமை செய்யான்

961. ஒருவன் பூமியிலிருக்கையில் புல்லையும், வானுற ஓங்கி வளர்ந்த தேவதாரு மரத்தையும் கண்டு, "இந்த மரம் எவ்வளவு பெரியது, புல் எவ்வளவு சிறியது" என்கிருன். ஆனல் அவன் ஒரு மலை மீதேறி உச்சியிலிருந்து கீழே நோக்கும்போது, பெரிய தேவதாரு மரமும் சிறிய புல்லும் ஒருங்கே உருத்தெரியாத பச்சைப் பொட்டாகத் தோன்றுவதைக் காண்கிருன். அது போல, உலகப் பற்றுள்ளவர்களுடைய பார்வைக்கு ஒருவன் அரசனென்றும் மற்ருெருவன் தெருப் பெருக்கும் தோட்டி யென்றும், ஒருவன் தகப்பனென்றும் மற்ருெருவன் மகனென்றும், இம்மாதிரியான ஸ்தான பேதங்களும் அந்தஸ்து வித்யாசங்களும் தோன்றும். ஆனல் தெய்வ தரிசனம் பெற்ற பிற்பாடு எல்லாம் ஒரேவிதமாய்த் தோன்றும். அப்போது, நல்லது கெட்டது, உயர்ந்தது தாழ்ந்தது என்ற வித்தியாசங்களே இருப்பதில்லை.

962. ஒரு சமயம் பகவத் ப்ரேமையில் ஈடுபட்ட ஸாது ஒருவர் பரமஹம்ஸர் தங்கியிருந்த ராணி ராஷ்மணியின் காளி கோயிலுக்கு வந்தார். அவருக்கு ஒரு தினம் ஆகாரமே கிடைக்கவில்லை. பசியோடிருந்த போதிலும் தமக்குச் சாதம் வேண்டும் என்று அவர் ஒருவரையும் கேட்கவில்லை. ஆனல் ஒரு மூலையில் எறியப்பட்ட எச்சில் சோற்றை ஒரு நாய் தின்பதைக் கண்டு அங்கே சென்று அந்நாயைத் தழுவிக்கொண்டு, "தம்பீ! எனக்குப் பங்கிட்டுக் கொடுக்காமல் நீ மட்டும் தின்பதெப்படி?" என்று சொல்லி, அந் நாயுடன் கூடச் சாப்பிட ஆரம்பித்தார். இப்படிச் சாப்பிட்ட பிறகு அவர் காளி கோயிலுக்குள் நுழைந்து, மிகுந்த பக்தி பரவசத்துடன் கோயில் முழுவதும் ஆனந்த

உணர்ச்சி நிரம்பும்படியாக ஸ்தோத்திரம் பண்ணினார். பிறகு அவர் வெளியே செல்லும்போது, பரமஹம்ஸர், தமது உறவினரான ஹிருதய முகர்ஜியை அந்தச் சாதுவின் பின் போகும்படியும், அவர் சொல்வது செய்வது எல்லாம் தம்மிடம் வந்து சொல்லும்படியும் சொல்லி அனுப்பினார். ஹிருதயர் அப்படியே அவர் பின்னே சிறிது தூரம் சென்றார். அந்த ஸாது திரும்பிப் பார்த்து, "ஏன் அப்பா, நீ என் பின்னால் வருகிறாய்?,' என்று கேட்டார். "சுவாமி! எனக்கு ஒரு ஹிதோபதேசம் செய்தருளவேண்டும்" என்றார் ஹிருதயர். அதற்கு அவர், "அப்பா! இந்த அழுக்குப் படிந்த குட்டைத் தண்ணீரும் அதோ பெருக்கெடுத்தோடும் ஸர்வ பாபநாசினியான கங்கையின் தீர்த்தமும் ஒன்றென உனக்குத் தோன்றும்போதும், வீணாகானமும் அதோ கேட்கும் ஜனக் கூட்டத்தின் சந்தடியும் உனது காதுகளுக்கு வித்தியாசமில்லாமல் கேட்கப்படும்போதும்தான் உண்மையான ஞானோதயம் உனக்கு உண்டாகும்" என்றார். இதைக் கேட்டு வந்த ஹிருதயர் பகவானிடம் சொன்னபோது அவர், "அந்த ஸாது உண்மை ஞானத்தையும் ப்ரேமையையும் பெற்றிருக்கிறார்; ஸித்தர்கள், குழந்தைகளைப் போலவும் பேய்களைப் போலவும் அல்லது பைத்தியக்காரர்களைப் போலவும், இன்னும் பலவிதமான வேஷங்களோடும் அங்கு மிங்கும் அலைந்து திரிவார்கள்" என்றார்.

963. பரமஹம்ஸர்களுடைய சுபாவமும் குழந்தையின் சுபாவமும் ஒரே தன்மையானவை. ஐந்து வயதுக் குழந்தைக்கு ஸ்திரீ புருஷருடைய வித்தியாசம் தெரியாததைப்போல அவர்களும் ஸ்திரீ புருஷர்களுடைய வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்; என்றாலும் உலகத்தவருக்குத் திருஷ்டாந்தம் காட்டுவதற்காக அவர்கள் ஸ்திரீகளினின்றும் விலகி இருக்கவேண்டும்.

964. ஒரு சமயம் சன்னியாசினி ஒருத்தி சனகருடைய அரச சபைக்கு வந்தாள். அவள் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்காமலேயே ஜனகர் அவரை வணங்கினார். இதனைக் கண்டு சன்னியாசினி "ஓ ஜனகா! என்ன ஆச்சர்யம்; இன்னுமா நீர் பெண்களைக் கண்டு அஞ்சுகின்றீர்" என்றாள். பூரண ஞானமடைந்தவன் குழந்தையின் சுபாவத்தைப் பெறுகின்றான். அவனுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசம் தோன்றுகிறதில்லை. ஆயினும், உலக நடைக்காக ஜனகர் அவ்வாறு செய்தார்.

965. ஞானிகளிடமிருக்கும் இவ்வித அற்ப விஷயங்கள் அவர்களை ஒன்றுஞ் செய்யா. சந்திரனிடம் களங்கமிருப்பதாகத் தோன்றினும், அது, சந்திரன் வெளிச்சம் தருவதைத் தடுக்கிறதில்லை.

966. பொற் குளிகையின் ஸ்பரிச மாத்திரத்தால் இரும்பினாலான கத்தி பொன்மயமாக மாறுகிறது. அதற்குப் பழைய உருவம் இருப்பினும், இரும்புக் கத்தியைப் போலத் தீங்கு செய்யும் சக்தி இப்போது அதற்கில்லை. அதுபோல, ஈசுவரனுடைய சரணாரவிந்தங்களை

ஸ்பர்சிப்பவனுடைய ரூபம் மாறுமலிருந்தபோதிலும் அவன் பிறருக்குத் தீமைசெய்யவல்ல னல்லனுகிருன்.

967. அத்வைதமாகிய திவ்யஞானத்தைப் பெற்ற பிறகு எதை வேண்டுமானுலும் நீ செய்யலாம். ஏனெனில், அப்போது உன்னிட மிருந்து யாதொரு தீமையும் வெளிக் கிளம்பாது.

968. ஒரு ஸாதுவானவர் ஜன நெருக்கமுள்ள ஒரு தெருவழியே போகும்போது, ஏதோ தற்செயலாய் ஒரு துஷ்டனுடைய காலை மிதித்துவிட்டார். உடனே அந்தப் பொல்லாதவன் மிக்க கோபங் கொண்டு கொஞ்சமேனும் இரக்கங்காட்டாமல் ஸாதுவை அடித்தான். அவர் அதனைப் பொறுக்கமாட்டாது பிரக்ஞையற்றுத் தரையில் விழுந்து விட்டார். அவருடைய சிஷ்யர்கள் வெகுபாடுபட்டுப் பலவித சைத் யோபசாரங்களைச் செய்து அவருக்குத் தம் நினைவை உண்டுபண்ண முயன்றனர். கொஞ்சம் பிரக்ஞை வந்ததும், சிஷ்யர்களில் ஒருவர் அவரைப் பார்த்து, "ஸ்வாமி! இப்போது தங்களுக்கு உபசாரம் செய் கிறது யார் என்று தெரிகிறதா!" என்று கேட்டார். "என்னை அடித்த வன்தான்" என்று ஸாது பதில் சொன்னுர். உண்மையான ஸாதுவுக்கு மித்ரனென்றும் சத்ருவென்றும் வித்தியாசமே கிடையாது.

ஞானியும் கருமமும்

969. கடவுளைத் தரிசித்த சிலர், பித்தர்போலவும் பேயர்போல வும் சுத்தம் அசுத்தம் என்று பாராமல் சில சமயம் அலைந்து திரிகின் றனர். சில நேரம் உள்ளும் புறமும் இறைவனைக் கண்டு ஊமையராகி, அசைவற்ற மரம்போல இருந்த இடத்தைவிட்டு நகராது கிடக்கின் றனர். சிறு குழந்தைபோலச் சிலவேளை அரைத் துணியைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு எதிலும் பற்றில்லாதவராய் ஓடித்திரிகின்றனர். ஆனுல் கடவுள் தரிசனம் பெற்ற அவர்கள் பிறர்க்குத் தொண்டுசெய்கிற காலத்தில் சிங்கம் போன்று தைரியமிகுந்தவர்களாக இருக்கின்றனர்.

970. சமாதி ஸித்தியானதும் ஜபம், பூஜை, உலக வியவகாரங்கள் ஆகிய கருமங்களெல்லாம் ஒழிந்துபோகின்றன. ஆரம்பத்தில் இந்தக் காரியங்களைச் செய்வதில் ஒருவனுக்கு அதிக ஆடம்பரமும் சுறுசுறுப் பும் இருக்கிறது. ஆனுல் ஈசுவரனிடம் நெருங்க நெருங்க இவை குறை கின்றன. கடைசியாக பகவத் பிரார்த்தனையும், பகவந்நாம ஸங்கீர்த்தன மும் கூட நின்று போகின்றன. (ஸாதாரண பிரம்ம ஸமாஜத்தவரான சிவநாத சாஸ்திரியாரை நோக்கி) நீர் ஸபைக்கு வாராமலிருக்கும் வரையில், உம்முடைய குண விசேஷங்களைப்பற்றி ஜனங்கள் பேசிக்கொண்டிருக் கின்றனர். நீர் உள்ளே நுழைந்ததும் அப்படிப்பட்ட பேச்செல்லாம் நின்று விடுகின்றது. உம்மைக் கண்டவுடன் எல்லாரும் சந்தோஷ மடைந்து, "இதோ சிவநாத பாபு வந்துவிட்டார்," என்று சொல்லு கிருர்கள். அப்பால், உம்மைப் பற்றிய பேச்செல்லாம் நின்று விடு கின்றது.

971. புதிதாகக் கல்யாணம் செய்துகொண்ட மங்கை யொருத்திக்குக் குழந்தை பிறக்காமலிருக்கும் வரையில், அவள் எப்போதும் வீட்டு வேலைகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்வாள். ஆனால் அவளுக்கு ஒரு மகன் பிறந்தவுடன், அவள் சில்லரை வேலைகளைக் கவனிப்பதில்லை. தன் குழந்தையிடம் கொஞ்சிக் குலாவுவதிலேயே அவளுக்குப் பொழுது போகின்றது. அது போல, அக்ஞானி கண்ட கண்ட வேலைகளை யெல்லாம் செய்து கொண்டிருப்பான். ஆனால் தன்னுள்ளத்திலே கடவுள் இருப்பதை உணர்ந்ததும் பழைய வேலைகளில் அவனுக்குப் பிரியமேற்படுவதில்லை. ஈசுவர சேவையிலேயே ஈடுபடுகிறான். வேறெதுவும் அவனுக்கு இன்பந் தருவதில்லை. ஈசுவரானுபவத்தினால் உண்டாகும் ஆனந்தத்திலிருந்து அவனால் விலகியிருக்கவும் முடியாது.

972. ஒருவனுக்கு ஈசுவர தரிசனம் உண்டானபிறகு, அவ்வீசுவரனே ஜீவனாகவும் ஜகத்தாகவும் ஆகிறானென்பது விளங்கும். அவனுக்குத் தனது குழந்தைகள் ஸ்ரீ கோபாலனாகத் தோன்றும். அவன் தனது தாய்தந்தையரிடம் கடவுளைக் கண்டு வழிபாடுகள் செய்வான். அந்த நரனுக்கு மனைவியிருப்பின் அவளுடன் சரீர சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது. மனைவியும் அவனும் பிரார்த்தனையிலும் பக்தியிலுமே காலத்தைக் கழிப்பார்கள். ஈசுவரனை எல்லா ஜீவன்களிடத்திலும் கண்டு அவர்களுக்குத் தொண்டு பூண்டு, வழிபாடு செய்வார்கள்.

அத்தியாயம் 20

குருதேவர் அனுபவங்கள்—அவர் அருளியவாறு

இளமை அனுபவங்கள்

973. தமது சிறு வயதிலே தாம் கல்வியில் கருத்துச் செலுத்தா திருந்த காரணத்தால், தமையனார் கண்டித்தபோது பகவான் கூறிய தாவது: "அண்ணா! வயிறு வளர்க்க மாத்திரம் பிரயோசனப்படும் கல்வியைக் கற்று நான் என்ன செய்யப்போகிறேன்? என்னுடைய ஹிருதயத்தைப் பிரகாசிக்கச் செய்து, நிரந்தரமாக மகிழ்ச்சியைக் கொடுக்கும் அறிவையே நான் விரும்புகிறேன்" என்றார்.

974. சாதன வாழ்க்கையின் ஆரம்பத்திலே, பகவான் அடவி யொன்றிற்குச் சென்று ஏகாந்தமாக நிர்வாணத்துடன், பூணூலும் இல் லாதவராய்த் தியானம் செய்துவருவதைக் கண்ட ஹிருதயர், தியானத் திற்கும் ஆடையின்றி நிர்வாணத்துடனிருப்பதற்கும் உள்ள சம்பந்தத் தைப்பற்றி விசாரித்தபோது, பகவான் இவ்விதம் கூறினார்: "பந்த பாசம் எல்லாம் அற்றவனாக விருந்து ஒருவன் தியானம் புரியவேண் டும்; பிறந்த நாளிலிருந்தே மனிதன் துவேஷம், வெட்கம், குலப் பெருமை, சமூக ஆசாரம், பயம், கௌரவம், சாதி அபிமானம், அகங் காரம் ஆகிய எட்டுத் தளைகளால் கட்டுண்டவனாக விருக்கின்றான். பூணூலுங்கூட ஒரு பந்தமே. தான் பிராம்மணன், எல்லோரைக் காட்டிலும் உயர்ந்த சாதியான் என்று எண்ணும் அகங்காரத்துக்கு அது அறிகுறியாக இருக்கின்றது. ஆகையால் ஜகன்மாதாவைக் குறித் துத் தியானம் செய்கையில், ஒருவன் இத்தகைய பந்தங்கள் யாவற்றை யும் தூர எறிந்துவிட்டுப் பாசத் தொடர்பில்லாதவனாக விருக்க வேண்டும்."

975. கடவுள் காட்சிக்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் பொறுக்கமுடியாத வேதனைப்பட்டார். கடவுள் காட்சியின்றிக் கணநேரமும் உயிர்தரித் திருக்கச் சகியாதவராய், தம் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற போது, திடீரென்று அவருக்குக் கடவுள் காட்சி தென்பட்டது. அத் திவ்யக் காட்சியினை அவர் இங்ஙனம் எடுத்துக்கூறினார்: "நான் வசித் திருந்த அறையும், அதன் கதவுகளும், ஜன்னல்களும், கோவிலும், என்னைச் சுற்றிலுமிருந்த அனைத்தும் திடீரென மறைந்துபோயின. யாதொன்றுமில்லாத சூன்யம்போல் ஆகிவிட்டது. இவைகள் எல்லாம் இருந்த இடத்தில்—இவைகளுக்குப் பதிலாகப்—பிரகாசம் பொருந்திய சின்மயமான அகண்டப் பரப்பு என் கண்முன் தோன்றியது. நான் எப்பக்கம் திரும்பினாலும் அங்கெல்லாம் அந்த அகண்ட ஜோதியின் அலைகள் என்னை வந்து மோதி என்னையும் அடியோடு மூழ்கடித்து விட்டன. அதனால் மூச்சுத்திணறிக் கீழே விழுந்துவிட்டேன். என்

னைச் சுற்றிலும் என்ன நடந்தது என்பது எனக்குக் கொஞ்சமும் தெரியாது. அன்றும் மறுநாளும் கழிந்தவாறும் நான் உணரேன். நான் முன்னெப்போதுமே அநுபவித்தறியாத சொல்லவொண்ணுப் பேரின்ப வெள்ளமொன்று என்னுள்ளத்தினுள்ளே புரண்டோடிக்கொண்டிருந்த உணர்ச்சியைப் பெற்றேன். என் திவ்வியமாதா பிரசன்னமாயிருந்த புனிதக் காட்சி என் உள்ளத்தினைவிட்டுச் சிறிதும் அகலாது உறைந்து கிடந்தது.”

976. இந்தத் திருக்காட்சியினுல் பகவானது மனம் பூரணமாகத் திருப்தியடையவில்லை. தேவியின் தரிசனம் ஒருபோது கிடைப்பதும் மறுசமயம் மறைவதுமாயிருந்தது. இது இவருக்குப் பிடிக்கவில்லை. இடைவிடாமல் அவளது புனிதக்காட்சியைக் கண்டவண்ணமாகவே இருக்கவேண்டுமென்ற பேரவாக்கொண்டார். அதன் பொருட்டுச் சகிக்கவொண்ணுத வேதனையும்பட்டார். தாரைதாரையாகக் கண்ணீர் உகுத்தார். கோவென்று கதறிப் புலம்பினுர். இந்தச் சமயத்தில் தமக்கிருந்த மன நிலைமையைப்பற்றி பகவான் இங்ஙனம் கூறினுர்: “நான் கதறியழும் சத்தத்தினைக் கேட்டுப் போவோர் வருவோர் எனக்கு ஏதோ கெடுதி ஏற்பட்டுவிட்டதென்று எண்ணி என்னைச் சூழ்ந்து கொள்வார். அவர்கள் அனைவரும் வெறும் சாயையாகவே என் கண்களுக்குப் புலப்பட்டனர்; அல்லது சுவரில் தீட்டப்பட்ட சித்திரங்கள் போல எனக்குத் தோன்றினர். நிலையில்லா நிழல்போல் தோன்றியதால் அவர்கள்முன் எனக்கு அவமானமோ கூச்சமோ சிறிதும் ஏற்படவில்லை. பொறுக்கமுடியாத வேதனையால் என்னையே மறந்த காலங்களிலெல்லாம் தேவியின் ஜோதிமயமான காட்சி என்கண்கள் முன்வந்து நிற்கும். சில வேளைகளில் தேவி என்னை நோக்கிப் புன்முறுவல் கொண்டும், சில நேரங்களில் என்னேடு பேசிக்கொண்டும், சிலபோது எனக்கு ஆறுதலும் உபதேசமும் அளித்தவண்ணமாகவும் காட்சிகொடுத்து வந்தாள்.”

977. தேவிதரிசனம் வேண்டிப் பைத்தியங்கொண்டலைந்த நாட்களைப்பற்றிப் பகவான் இவ்வாறு எடுத்துரைத்தார்: “அப்போதெல்லாம் எனக்குச் சரீரத்தைப் பற்றிய எண்ணமே எழுவதில்லை? நீராடமாட்டேன்; தலைமயிர் வளர்ந்து, தூசும் தும்பும் படிந்து, சடைபிடித்துத் தொங்க ஆரம்பித்துவிட்டது. தியானத்திலமர்வேனுனல் சரீரம் உணர்ச்சியற்றுக் கல்லைப் போன்று ஆகிவிடும். சடம்போன்று கிடந்த என் சரீரத்தின்மீது பட்சிகளும் அணில்களும் ஓடிவிளையாடும். தமக்குத் தீனி கிடைக்குமாவெனச் சில பட்சிகள் என் தலைமீது உட்கார்ந்து கொத்தி என் சடைமயிரைக் களைந்துபார்க்கும். தேவிதரிசனம் வேண்டிச் சிலசமயம் நான் பொறுக்கமுடியாத வேதனை அடைவேன். தலையைத் தரையில் மோதிக்கொள்வேன்; அதனுல் படுகாயமேற்படும்; இரத்தம் பீறிட்டு வழியும்; கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து வீங்கிவிடும். என்னுடைய தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருக்கும்போது நாள்போவதே தெரியாது; ஒவ்வொருநாளும் நொடியில் பறந்துவிட்டதாகத் தோன்றும்; மாலைவேளையில் தேவியின் ஆலயத்தில் பூசை மணி அடிக்கும் சப்தம் என் செவியில் விழும்போது

தான் அன்றுபகல் எல்லாம் கழிந்து இரவு வந்துவிட்டதென்று எனக்குத் தெரியவரும். தேவி தரிசனம் கிடைக்கவில்லையே என்னும் எண்ணம் தீவிரமடைந்து பித்துண்டவனாய், தரைமீது விழுந்து புரண்டு, 'அம்பிகே! மற்றொருநாளும் வீணில் கழிந்துவிட்டதே! உன்னுடைய திவ்விய தரிசனத்தை இன்னும் காணவில்லையே! கருணைபுரிந்து உன்றன் தரிசனத்தை எனக்குக் கடாக்ஷித்தருளமாட்டாயா ?' என்று உரக்கக் கூவிக் கதறிப் பதறி யழுவேன். சித்திரவதை செய்யப்பட்டதைப்போலச் சொல்லொணாத வேதனைப்பட்டேன். சகிக்கமுடியாத என் வேதனையைக் கண்ட மக்கள் நான் தீராத நோயினால் பாதைப்படுவதாகக் கருதினர்."

978. காமர்புகூர் என்னும் தமது கிராமத்தில் பகவானுக்குத் திருமணம் நடந்தது; அதன்பின் உடனே தக்ஷிணேசுவரம் திரும்பிவிட்டார். திரும்பவும் அவர் கடவுட் பித்து உடையவரானார். அப்போதிருந்த தமது மனநிலையைக் குறித்துப் பகவான் இங்ஙனம் பகர்ந்தார்: "கடவுட்காட்சிக்காக எனது மனமும் சரீரமும் பட்ட கஷ்டத்தில் நான்கில் ஒரு பாகத்தினைத்தானும் பொறுக்கமுடியாமல் சாதாரண மனிதன் இறந்துபட்டிருப்பான். இச்சரீரமும் (தம்மைச் சுட்டிக்காட்டி) அதே கதியைத்தான் அடைந்திருக்கும். ஆனால் எனது வாழ்க்கையின் பெரும் பகுதி ஆநந்த சொரூபிணியான என் அன்னையின் தரிசனம் கிடைக்கப்பெற்று அந்த ஆநந்த வெள்ளத்தில் உழன்று கிடந்ததால் பலம் கொண்டு உயிர் பிழைத்தேன். நெடுங்காலம் நான் தூக்கமென்பதைக் கொஞ்சமும் அறியாதிருந்தேன். நான் எவ்வளவு முயன்றும் கண்ணிமைகள் ஒன்று சேரா. இப்படி ஒருநாள் இரண்டு நாட்களன்று; ஆறு வருஷங்கள் இப்படிக் கழிந்தன! அப்போது இது காலை, இது பகல், இது இரவு என்று என்னால் அறிந்துகொள்ளமுடியாதிருந்தது. ஏன்? சரீர உணர்ச்சி சிறிதும் எனக்கில்லாமற் போய்விட்டது. தேவி தரிசனத்திலிருந்து எப்போதேனும் மனம் கீழ் இறங்குமானால் அந்த நேரத்தில் என் மனத்தில் ஒரு பெரிய அதிர்ச்சி தோன்றும். எனது உள்ளம் பீதியினால் நிறைந்துவிடும். என்ன! 'உண்மையிலே எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா?' என்று நான் பெரிதும் அஞ்சுவேன். நிலைக்கண்ணாடி முன்நின்று என் சரீர நிலையைக் கவனிப்பேன். எப்போதுமே திறந்துகிடக்கும் என் கண்கள்முன் கைவிரல்களைக் கொண்டு போவேன். அவைகள் உணர்ச்சியற்று திறந்தபடியே கிடக்கும். பொறுக்கமுடியாத துக்கமும் பீதியும் கொண்டவனாய்த் தாரைதாரையாகக் கண்ணீர்கொட்டி 'எனதாருயிர் அன்னையே! நின்மாட்டு நான் காட்டிய அளவிலா அன்புக்கும், செய்த ஆழ்ந்த பிரார்த்தனைக்கும், கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் நீக்கமுடியாத நோய்தானா பலன்?' என்று தேவியைக் குறித்து மனமுருகிப் பிரார்த்திப்பேன். மறு கணத்தில் மனம் மாறிவிடும். பிறகு இவ்விதம் எண்ணுவேன்: 'என் தாயே! என் சரீரம் எக்கேடுறினும் நான் கவலை கொள்ளமாட்டேன். ஆனால் நீ மாத்திரம் ஒருபோதும் என்னைக் கைவிடாதே. உனது கருணையையும், உனது காட்சியையும் மாத்திரம் என்றும் எனக்-

குக் கடாக்ஷித்தருள்வாய். ஓ! என் ஆருயிர் அன்னாய்! உன்னுடைய பாதாரவிந்தங்களில் நான் முற்றும் சரணடைந்துவிடவில்லையா? என் தாயே, நின்னையன்றி எனக்கு வேறு தஞ்சமில்லை' என்று இவ்விதம் கண்ணீருகுத்துப் பிரார்த்திப்பேன். உடனே எனக்குப் புதிய உற்சாக மொன்று உண்டாகும்; என் சரீரத்தின்மீது மிகுந்த அருவருப்பு ஏற்படும்; தேவி தரிசனத்திலும் அவளோடு உரையாடுவதிலும் மனம் ஈடுபட்டுவிடும்."

979. பகவானது கள்ளங்கபடமற்ற பரிசுத்த உள்ளமே அவருக்குச் சிறந்த குருவாய் அமைந்தது. அதனைப்பற்றிப் பகவான் இயம்புவதாவது: "அவசியம் ஏற்படும்போதெல்லாம் என் சரீரத்தினுள்ளிருந்து என்னைப் போன்ற தோற்றத்துடன் ஒரு வாலிப சன்னியாசி வெளிவருவான். எனக்கு வேண்டியதை உபதேசிப்பான். இவ்விதம் என்னுள்ளிருந்து அச்சந்நியாசி வெளிவரும் சில சமயங்களில், என்னிடம் உலக உணர்ச்சியிருக்கும்; உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் என் கண்களுக்குப் புலனாகும். சில நேரங்களிலோ இவன் ஒருவனை யன்றி வேறொன்றினையும் காண இயலாது. உடலுணர்ச்சியற்றவனாகக் கிடப்பேன். ஆனால் அவன் திரும்பவும் என்னுள்ளே புகுந்துவிட்டதும் சாதாரண நிலைமை ஏற்பட்டுவிடும்; உடலுணர்ச்சி யுண்டாகிவிடும். அந்த விசித்ர சன்யாசியிடமிருந்து கேட்ட உபதேசங்களையே பின் காலத்தில் பைரவி பிராம்மணியார், தோத்தாபுரியார் முதலியவர்களால் சொல்லக் கேட்டேன்."

தந்திர சாதனங்களும் பிறவும்

980. பைரவி பிராம்மணியிடம் தாம் அப்பியசித்த தாந்த்ரீக சாதனத்தைப்பற்றிப் பகவான் இவ்விதம் எடுத்துரைத்தார்: "பைரவி பிராம்மணி பகற்காலங்களில் தக்ஷிணேசுவரத்திலிருந்து வெகுதூரம் போய்த் தாந்த்ரீக சாஸ்திரங்களில் கூறப்பட்டபடி சில கிடைத்தற்கரிய சாமான்களைத் தேடிக்கொண்டு வருவார். இரவுகாலத்தில் ஓர் ஆசனத்தில் என்னை உட்காரும்படி சொல்வார். உட்கார்ந்து காளிதேவிக்குப் பூசனை புரிந்துவிட்டு அந்த அம்மையார் கூறுகிற முறைப்படித் தியானம் செய்ய ஆரம்பிப்பேன். ஜபம் செய்ய ஆரம்பிப்பேனோ இல்லையோ உடனே ஆழ்ந்த சமாதியில் மூழ்கிவிடுவேன். அச்சமயங்களில் நான் கண்ட அற்புதக் காட்சிகளைப்பற்றி என்னால் இப்போது எடுத்துரைக்க முடிகிறதில்லை. பலவித அற்புதக் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துவரும். அவைகளை நான் பிரத்யக்ஷமாகக் காண்பதுண்டு. அவ்வம்மையார் தாந்த்ரீக சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ள அறுபத்து நான்கு சாதனங்களிலும் என்னை ஈடுபடுத்தினார். அவைகளிற் பல மிகவும் கடின சாதனங்களாகும். இவைகளை அனுஷ்டிக்கும்போது பலர் இடறி விழுந்து இழுக்குப்படுவர்; பலர் பயித்தியம் பிடித்தலைவர். ஆனால் எனது ஜகதம்பிகை, எனக்கு யாதொரு இடையூறும் உண்டாக்காது, இந்தச் சாதனங்கள் அனைத்தினையும் சுலபமாக அநுஷ்டிக்கக் கிருபை செய்தனள்."

981. தமது குண்டலினி எழுச்சியைப்பற்றிப் பகவான் இங்ஙனம் விவரித்தருளினர்: "இந்த திவ்விய பாவமாகிய கடவுட்காட்சியை எய்திய பிறகு, பார்வைக்கு என்னைப்போன்றே தோன்றிய ஒருவர் வந்து எனது இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகளைப் பலமுடன் அசைத்துக் குலுக்கினர். ஆறுதாரத்திலுள்ள தாமரை அரும்புகளைத் தமது நாவினல் நக்கினர். உடனே தலைசாய்த்துக்கொண்டிருந்த அவ்வரும்புகள் அனைத்தும் நிமிர்ந்து நின்றன. இறுதியில் சஹஸ்ராரத்திலுள்ள தாமரை பூரணமாக விரிந்து மலர்ந்தது."

982. மகம்மதிய மார்க்கத்திலுள்ள சாதனைகளை அநுஷ்டிக்கும்போது தமக்கிருந்த மனோ நிலைமையினைப்பற்றிப் பகவான் இவ்வாறு எடுத்துரைத்தார்: "அப்போதெல்லாம் அல்லாவின் திருநாமத்தையே உச்சரித்துக்கொண்டிருப்பேன்; மகம்மதியர்களைப்போலவே உடை உடுப்பேன்; தவறாது நமாஸ் படிப்பேன். ஹிந்து சம்பிரதாயங்களெல்லாம் என் மனத்தைவிட்டு அகன்றுவிட்டன? ஹிந்து மதக் கடவுளைக் கையெடுத்துக் கும்பிடமாட்டேன்; அவ் ஆலயங்கட்குச் செல்லவும் எனக்கு விருப்பம் எழாது. இவ்விதம் மூன்று நாட்கள் கழித்தேன். பிறகு அம்மார்க்கத்தின் முடிபினைக் காணும் பேறு பெற்றேன்."

983. ஹிந்து மதம், மகம்மதிய மதம், கிருஸ்தவ மதம் முதலிய ஒவ்வொரு மதத்தின் மார்க்கத்தையும் அநுஷ்டித்தேன்; ஹிந்து மதத்தின் பல வேறு பிரிவினையாகிய சாக்தம் வைஷ்ணவம் ஸ்மார்த்தம் முதலியவற்றினையும் அனுஷ்டித்தேன். இறுதியில் நான் கண்டது என்ன? அந்த ஒரே இறைவனிடத்துக்கே இவர்கள் ஒவ்வொருவரும் போய்க்கொண்டிருக்கக் கண்டேன். ஆனல் ஒவ்வொருவரும் வெவ்வேறான வழிகளிலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். அவ்வளவே வித்தியாசம்.

984. அக்ஷயன் என்னும் தமது சகோதரர் புத்திரன் இறக்கும் சமயத்தில் பகவான் அருகில் இருந்தார். அதன்பின் மரண நிலைமையினைக் குறித்து இவ்வாறு விளம்பினர்: "என்னுடைய கண்கள் எதிரேயே அக்ஷயன் உயிர் துறந்தான். ஆனல் அவனது மரணம் எனது மனத்தைச் சிறிதும் பாதிக்கவில்லை. மனிதன் எப்படி உயிர் விடுகிறான் என்பதை அவன் அருகில் இருந்துகொண்டு சாவதானமாகக் கவனித்துக்கொண்டிருந்தேன். உறைக்குள்ளிருந்து வாளினை எடுப்பது போன்றிருந்தது அக்காட்சி. வாள் சிறிதும் பழுதுபடாது முன்னிருந்தபடியேதான் இருந்தது; ஆனல் உறை மாத்திரம் கீழே எறியப்பட்டுவிட்டது. அக்காட்சியினைக் கண்டு களிமிகக் கொண்டேன்; நகைத்தேன்; பாடினேன்; ஆனந்தக்கூத்தாடினேன். சுற்றத்தவர் சரீரத்தைக் கொண்டுபோய்த் தகனம் செய்துவிட்டனர். ஆனல் மறு நாள், (அறையில் அக்ஷயன் இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டி) அந்த இடத்தில் நின்றதும், அக்ஷயனது பிரிவினல் எனது மனம் பொறுக்க முடியாத வேதனைப்பட்டது; ஈரத்துணியை முறுக்கிப் பிழிவதுபோல என் ஹிருதயத்தை ஒருவர் பிழிவதாகத் தோன்றியது. நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்; தேவி எனக்குக் கற்பிப்பதற்கே இங்ஙனம் நடை

பெறச் செய்கின்றாள் என நினைத்தேன். சரீரத்தைப்பற்றியோ அல்லது எனது சகோதரன் மகன் என்பது பற்றியோ நான் அவ்வளவு கவலை கொள்ளவில்லை. என்றாலும் என்னைப் போன்றவருக்கே அவனது பிரிவினால் இவ்வளவு மனவருத்தம் உண்டாகுமானால் இல்லறவாசிகள் தமது நெருங்கிய அன்பிற் சிறந்த உற்றார்களை இழக்கும்போது எவ்வளவு வருத்தப்படமாட்டார்கள் என்ற எண்ணம் என் மனக்கண் முன் வந்து நின்றது.'

நிர்விகல்ப நிலை

985. நிர்விகல்ப சமாதியினைப்பற்றிப் பகவான் தமது அநுபவத்தைப் பகர்ந்தருளினர்: "சந்நியாச தீக்ஷையளித்த பிறகு நேங்க்டா (ஆடையின்றி நிர்வாணமாக விருந்த தமது குரு தோதாபுரியைப் பகவான் இப்பெயராலேயே எப்போதும் குறிப்பிட்டுப் பேசுவது வழக்கம்) அத்வைத நிலையின் பலவேறு முடிவுகளைப்பற்றி எனக்குப் போதித்தார். அப்பொழுது எல்லாப் பொருள்களிடமிருந்தும் மனத்தை முற்றிலும் உள்ளிழுத்து ஆத்மனில் ஆழ மூழ்கும்படிச் சொல்லுவார். எவ்வளவு முயன்றாலும் நாம ரூபங்களைக் கடந்து அதற்கப்பாலுள்ள அகண்ட சொரூபத்தில் என் மனத்தைச் செலுத்தமுடியாது கஷ்டப்பட்டேன். எல்லாவற்றிலிருந்தும் என் மனத்தை விடுபடுத்திவிட்டேன். ஆனால் என்னை என்றும் விட்டகலாத தாய்மையே வடிவெடுத்துவந்த ஜகஜ்ஜோதி சொரூபிணியான எனது அன்னையின் திருவுருவம் மாத்திரம், புன்சிரிப்புடன் என் மனக்கண்முன் ஒளிர்வதால், நாமரூபங்களாகிய தடைகளைத் தாண்டிச் செல்ல என்னால் முடியாது போயிற்று. அத்வைத நிலையில் மனத்தை நிறுத்துவதற்கு மேலும் மேலும் முயன்றேன். ஆனால் ஒவ்வொரு முறையும் தேவியின் திவ்விய வடிவம் தடங்கலாக என் வழியில் குறுக்கே நின்றுவந்தது. நம்பிக்கை யிழந்தவனாய் நான் நேங்க்டாவைப் பார்த்து, 'இனிமேல் ஒன்றும் பிரயோசனமில்லை; என் மனத்தை அகண்டத்துக்கு உயர்த்தி ஆத்மனில் லயிக்கச் செய்ய என்னால் முடியாது' என்று கூறினேன். நான் கூறியதைக்கேட்டு மிகுந்த மனவெழுச்சி கொண்டு, 'என்ன! உம்மால் முடியாதா? நீர் செய்தே ஆகவேண்டும்' என்று மிகவும் கடுமையுடன் பதில் சொல்லிவிட்டு, அந்த நேங்க்டா சாது தமது பார்வையை எதனையோ தேடிச் சுற்று முற்றும் செலுத்தினர். அங்கே உடைந்த கண்ணாடித் துண்டொன்று கிடந்தது. அதனை யெடுத்து அதன் கூர்மையான விளிம்பின்மூலம் எனது புருவ மத்தியில் குத்தி 'இந்தக் குறியில் மனத்தை நிறுத்து' என்று கூறினர். நான் திடசங்கல்பங்கொண்டு திரும்பவும் தியானத்தில் அமர்ந்ததும் முன்போலவே தேவியின் திவ்விய வடிவம் என் மனக்கண்முன் வந்து நின்றது. உடனே எனது விவேகத்தை வாளாகக் கொண்டு தேவியின் திருவுருவத்தினை வெட்டி இரு கூறாக்கிவிட்டேன். தக்ஷணமே எல்லா இடையூறுகளும் அகன்றொழிந்தன. உடனே மனம் விவகாரநிலையினை விட்டு உயரப் பறந்தோடிவிட்டது; சமாதியில் முற்றிலும் மூழ்கிவிட்டேன்."

986. ஆறுமாதகாலம் நான் இந்நிர்விகல்ப சமாதியிலே இருந்தேன். சாதாரண மனிதர் இந்த நிலைமையிலிருந்து உலக ஸ்மரணை பெறுமல் சடசமாதி யெய்திவிடுவார்கள். இருபத்தொரு நாட்களுக்குப்பிறகு மரத்தினின்றும் சருகு விழுவதுபோலச் சரீரமும் விழுந்துவிடுகின்றது. நாட்கள் ஒவ்வொன்ருகச் சென்றுகொண்டிருந்தன. எனக்கு ஒன்றுமே தெரியாது. பிணத்தின் வாய் மூக்குகளினுள் ஈக்கள் மொய்ப்பதுபோல் என் வாய் மூக்குகளினுள் ஈக்கள் செல்லும்; அதனுல் எனக்கு எந்த உணர்ச்சியும் ஏற்படாது. தூசி நிறைந்து தலைமயிர் சடை பிடித்துவிட்டது. சில சமயம் என்னையும் அறியாமலே மலஜலாதிகள் கழித்துவிடுவேன். அந்தச் சமயத்தில் ஒரு சந்நியாசி அவ்விடம் வந்தார். அவர் இல்லையானுல் இந்தச் சரீரம் எப்பவோ அழிந்திருக்கும். அவர் உடனே என் நிலைமையை அறிந்துகொண்டார்; அதனுடன், ஜகதம்பிகை இச்சரீரத்தின்மூலம் அரிய பெரிய காரியங்களைச் செய்விக்கிருள் என்பதையும், இச்சரீரம் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்படுமானுல் அதன்மூலம் அநேகம்பேர் கடைத்தேறுவார்கள் என்பதனையும் அவர் அறிந்துகொண்டார். உணவு நேரத்தில் உணவு கொண்டுவருவார். ஆனுல் எனக்குப் புறவுணர்ச்சி இருந்தால்தானே உணவினை ஏற்றுக்கொள்ள முடியும்? அதற்கு அவர் ஒரு வழி செய்தார். ஒரு தடியினைக்கொண்டு என்னை ஓங்கி அடிப்பார். சரீரம் வலிதாங்காது மனத்தினைத் தன்மாட்டு இழுக்கும். இவ்விதம் மனது சரீர ஞாபகம் அடைந்தவுடனே சிறிது உணவினை என் வாயினில் திணிப்பார். இவ்விதம் சில நாட்களில் இரண்டொரு கவளம் அன்னம் என் உடலினுட் செல்லும். சில நாட்களில் அதுவும் உட்செல்லாதுபோம். இந்தநிலையில் நான் ஆறுமாதங்கள் கழித்தேன். அதற்கப்புறம் தேவி திருவுளங்கொண்டு ‘வியவகாரநிலையின் வாயிற்படியின்மேலேயே (பாவமுகம்) இருந்துகொண்டு மனிதவர்க்கத்துக்கு நன்மை செய்துகொண்டிருப்பாயாக’ என்று கூறியது என் காதிற்பட்டது. அதன்பிறகு கடும்விஷபேதி உண்டாயிற்று. குடலில் பொறுக்க முடியாத நோய் ஏற்பட்டது. இந்நோயின் காரணமாக மனம் சரீரத்தினிடம் அடிக்கடி இழுக்கப்பட்டது. இவ்விதம் நாளடைவில் சரீர உணர்ச்சி ஒருவாறு திரும்பவும் ஏற்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் சமயம் கிடைத்தபோதெல்லாம் மனம் திடீரெனப் பறந்தோடி நிர்விகல்ப சமாதியில் மூழ்கி விடுவதுண்டு. திரும்பவும் புறவுணர்ச்சியினை அது எய்துவதற்கு இடமேற்படுகிறதில்லை.

987. மேனுேக்கி நிர்விகல்ப சமாதிக்குச் செல்வதே எனது மனத்தின் இயல்பாகிவிட்டது. ஒருமுறை அந்த நிலையை அது அடைந்துவிட்டால் மறுபடியும் கீழ்நிலைக்கு இறங்க விரும்புவது கிடையாது. உங்கள் பொருட்டாகவே அதனை நான் கீழ்நிலைக்குக் கொண்டுவருகிறேன். சாதாரண அற்ப ஆசைகளில்லாமல் அது சுலபமாகக் கீழே இறங்காது. ஆகையினுல்தான் ஏதேனும் ஓர் அற்ப ஆசையை, உதாரணமாக ஒன்றினைச் சாப்பிட அல்லது புகைகுடிக்க, அல்லது எவரையேனும் காணவேண்டும் என்ற ஏதாவது ஒரு விருப்பத்தினை

எழுப்பிக்கொள்வது வழக்கம். அப்பொழுது என் மனம் நிர்விகல்ப சமாதியிலிருந்து கீழிறங்கிச் சரீர உணர்ச்சியை அடையப்பெறும். கீழே இறங்கியதும் திரும்பவும் அது உயரப் பறந்துபோய்விடும். மறு படியும் இவ்வித ஆசைகளின் மூலமாக அதனைக் கீழே இழுத்து வர வேண்டும்.

988. “ஓம் தத் சத்” என்னும் வாக்கியத்திலுள்ள ‘ஓம், சத்’ என்னும் வார்த்தைகளை உச்சரித்த அளவிலே என்னுடைய மனத்தில் அதியுன்னத எண்ணங்கள் எழும். ஆனால் ‘தத்’ என்ற பதமோ உடனே என்னை நிர்விகல்ப சமாதியில் அமிழ்த்திவிடும். எல்லா வியவகார நிலைமையும், சத் அசத் என்ற பாகுபாடும் என் மனத்திலிருந்து முற்றி லும் அகன்றொழியும். குணங்குறிகளுக்கப்பாற்பட்ட வரம்புகடந்த பரப்பிரம்மத்தில் என்மனது ஒன்றாகக் கலந்துவிடுவதுண்டு.

989. சுவாமி! தாங்கள் சமாதியிலிருக்கையில் அகங்காரம் கொஞ்சமாவது இருக்கிறதா?

ஆம்; பொதுவாய்க் கொஞ்சம் இருக்கிறது. அது பொன் கட்டி யின்மீது உரைக்கப்பட்டாலும் முற்றிலும் தேய்வடையாத பொற் பொடியைப் போன்றதாகும். வெளி ஞாபகமெல்லாம் போய்விடுகின் றது. ஆனாலும், ஈசுவரனை அனுபவித்து ஆனந்தமடைவதற்காகவே ஒரு சிறிது அகங்காரம் அவனால் வைக்கப்பட்டிருக்கிறது. சிற்சில வேளை களில் இந்த அற்ப அகங்காரத்தையும் அவன் அழித்துவிடுகிறான். இதுதான் மகா மேலான சமாதி நிலையாம். அந்நிலை எப்படிப்பட்ட தென்பதை ஒருவராலும் வர்ணித்துச் சொல்லமுடியாது. மனிதன் கடவுளாகவே முற்றிலும் மாறிய நிலைதான் அது. உப்பினால் செய்யப் பட்ட பிரதிமை யொன்று சமுத்திரத்தின் ஆழத்தை அளந்தறிவதற் குத் தண்ணீரில் இறங்கிற்று. இறங்கியதும், உப்பெல்லாம் ஜலத்தில் கரைந்துபோயிற்று. சமுத்திரத்தின் ஆழம் இவ்வள வென்பதைச் சொல்வதற்கு மேலே வருபவர் யாவர்?

இடைவிடாது இறைவனிடம் ஒன்றுபட்டு நிற்றல்

990. ‘தாங்கள் கடவுளிடம் நம்பிக்கை கொள்கின்றீர்களா?’ என்ற கேள்வி பகவானிடம் கேட்கப்பட்டபோது ‘ஆம்’ என்று பதில் கூறினார்.

‘அவனை எங்களுக்குக் காட்ட முடியுமா?’

‘ஆம்; காட்ட முடியும்.’

‘எப்படிக் காட்டுவீர்கள்?’

‘ஏன், உங்களை எங்ஙனம் நான் காண்கிறேனோ அதனினும் பார்க் கப் பன்மடங்கு மிகமிகத் தெளிவாகக் காண்கின்றேன்.’

991. காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்பன எவை யென்று ஒரு தார்க்கிகன் பரமஹம்ஸரைக் கேட்டான். அதற்கு அவர்,

"அப்பா, இந்த சாஸ்திர ஆராய்ச்சி ரகஸியங்களெல்லாம் எனக்குத் தெரியாது; எனக்குத் தெரிந்தனவெல்லாம் என்னுள்ளிருக்கும் பரமாத்மாவும் எனது திவ்யமாதாவுமே" என்று பதில் சொன்னார்.

992. எனது சரீராவஸ்தையைக் கண்டு, "இவ்வளவு துர்ப்பலமான சரீரத்தில் ஆத்மீயமும் ஞான ஒளியும், இவ்வளவு அதிகமாகத் தோன்றுவதைப்போல வேறெங்கும் நான் கண்டதில்லை," என்று ஹிருதயன் சொல்வதுண்டு. எனது சரீரம் துர்ப்பலமாக விருந்தாலும் மற்றவர்களுடன் கடவுள் விஷயமாகப் பேசிக்கொண்டிருப்பதை நான் ஒருபோதும் நிறுத்தினதில்லை. எனக்கு ஞாபகமிருக்கிறது: ஒருதரம் என் சரீரம் எலும்பளவினதாய்ப் போய்விட்டது. அப்போதும்கூட நான், எனக்கு ஒரு சரீரம் இருக்கிறதென்ற ஞாபகமே இல்லாமல் நெடு நேரம்வரைக்கும் ஆத்ம விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பேன்.

கடவுளிடம் குருதேவரின் முறையீடு

993. "ஆனந்த சொரூபிணியாகிய எனது ஆருயிர் அன்னாய்! எனக்கு உன் திவ்ய தரிசனம் தந்தருளுவாயாக" என்றும், இன்னும் சில வேளைகளில் "ஏ! தீனதயாளு! பதித பாவனா! நான் உனது சிருஷ்டிக்குப் புறம்பானவனா? என்னிடம் ஞானமில்லை; பக்தியில்லை; தபசுக்கேற்ற தன்மையும் என்மாட்டுக் கிடையாது. யான் ஒன்றும் அறியேன். ஏ தயாநிதி! உனது கருணையாலேயே உனது காட்சியை எனக்குக் காட்டி யருள்வாய்" என்றும் பிரார்த்தனை செய்வது வழக்கம்.

994. "ஜகன் மாதாவே! மனிதர்களிடமிருந்து நான் யாதொரு கௌரவத்தையும் விரும்பவில்லை. இந்திரிய சுகங்கள் ஒன்றும் எனக்கு வேண்டாம். கங்கையும் யமுனையும் இரண்டறக் கலப்பதுபோல எனது ஆத்மாவானது உன்னிடம் வந்து புகும்படி மட்டும் கிருபை புரிவாயாக. தாயே! என்னிடம் பக்தியுமில்லை; யோகமுமில்லை எனக்குச் செல்வமுமில்லை. துணைவருமில்லை. ஒருவரிடமிருந்தும் நான் புகழ்ச்சியை விரும்புவதுமில்லை. எனது மனம் எப்போதும் உன் பாத கமலங்களில் நித்யவாசம் பண்ணும்படி மட்டும் கிருபை புரிவாய்."

995. "தாயே! நான் ஒரு யந்திரம், நீ யந்திரி; நான் ஓர் அறை, நீ அதில் குடியிருப்பவள்; நான் உறை, நீ அதனுள் போடப்படும் வாள்; நான் ரதம், நீ ஸாரதி. நீ ஆட்டிவைக்கிறபடி நான் ஆடுகிறேன். நீ பேசுவிக்கிறபடி நான் பேசுகிறேன். என்செயலாவது என்னுள்ளிருக்கும் உன் செயலே. நான் அல்லேன், நான் அல்லேன்; எல்லாம் நீ தான்."

996. உண்மையினிடத்துப் பூரண விசுவாசம் இருந்தால் ஈசுவரனை நிச்சயமாகக் காணலாம். இதற்கு மாறாக, உண்மையினிடம் ஒருவனுக்கு மதிப்பு இல்லாவிட்டால், காலக்கிரமத்தில் அவனுடைய நன்மைக் குணம் எல்லாம் நாசமடைந்துபோம். ஈசுவர தரிசனம் பெற்ற பிறகு ஒருநாள் நான் சில புஷ்பங்களைக் கையில் எடுத்துக்கொண்டு தேவி முன்னர் நின்று, "தாயே! உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட

ஞானம் அஞ்ஞானம், சுத்தம் அசுத்தம், நன்மை தீமை, புண்ணியம் பாவம் எல்லாவற்றையும் திரும்ப எடுத்துக்கொள். நிஜமான பக்தியை மட்டும் எனக்குக்கொடு" என்றேன். ஆனால் இவற்றை யெல்லாம் சொன்னபோது, "உனது உண்மையையும் பொய்யையும் எடுத்துக் கொள்," என்று என்னால் சொல்லமுடியவில்லை. தேவியிடம் உண்மை யைத் தவிர மற்றெல்லாவற்றையும் என்னால் கொடுத்துவிட முடிந்தது.

நன்றிலும் தீதிலும் ஒரே படியாய்க் கடவுளைக் காணல்

997. கடவுள் தரிசனத்துக்குப் பிறகு சகல கர்மங்களும் அகன் றொழிகின்றன. இப்படித்தான் என்னுடைய சடங்குகளுக் கெல்லாம் முடிவேற்பட்டது. காளிகோயிலில் நான் பூசை செய்துவந்தேன். ஒருநாள் திடீரென்று யாவும் பரிசுத்தம் பொருந்திய சின்மயமாகத் தென்பட்டன. பூசைப் பாத்திரங்கள், கூடம், கதவுகள், வாயிற்படிகள் யாவும் சின்மயமாகத் தோன்றின. மனிதர்கள் மிருகங்கள் பக்ஷிகள் ஒவ்வொன்றும் சின்மயமாக விளங்கக் கண்டேன். பைத்தியம் பிடித்த வனைப்போல் புஷ்பங்களை நாலுபக்கங்களிலும் வாரி இறைத்தேன். நான் கண்ட அனைத்தினையும் பூசித்தேன்.

ஒருநாள் சிவபூஜையின்போது வில்வதளங்களைச் சிவலிங்கத்தின் மீது போட்டுக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் ஜகத் முழுதும் சிவ சொரூபமாகத் தோன்றிற்று. அவ்விதம் காண்பதற்கு நான் எந்தப் பிரயத்தனமும் செய்யாதிருந்தபோதே அத்தோற்றம் என் கண்முன் உண்டாயிற்று. அன்றிருந்து, சிவலிங்கத்தின் மூலமாகச் சிவபிரானை நான் வழிபடுவது முடிவுற்றது. ஒருநாள் புஷ்பம் கொய்துகொண் டிருந்தேன் ; திடீரென்று புஷ்பங்கள், செடிகள் சகலமும் தெய்வ சொரூபங்களாகத் தென்பட்டன. அதிலிருந்து நான் புஷ்பம் பறிப்பது நின்றுவிட்டது.

998. எனக்கு ஒரு சமயத்தில் ஒரு தோற்ற முண்டாயிற்று. ஸர்வ ஜீவப்பிராணிகளோடும் கூடிய உலகத்தின் உருவத்தை ஒரே ஒரு வஸ்து தாங்கிக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. அவ்வுருவம் மெழுகி னால் ஆனதோர் வீட்டைப்போலவும், அதனுள்ளிருக்கும் மனிதர்கள், மற்றைய ஜீவப்பிராணிகள், தோட்டங்கள், ரஸ்தாக்கள் முதலியவை யெல்லாம் முழுவதும் மெழுகினாலேயே செய்யப்பட்டிருந்தன போலவும் தோன்றியது.

999. நான் எதைக் காண்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? ஸர்வமும் அவனே என்று காண்கிறேன்! மனிதனும் மற்றப் பிராணி களும் தோல்மூடிய உருவங்களோடு தலையை யசைப்பதாகவும், கை கால்களை ஆட்டுவதாகவும் காணப்படுகின்றனர். ஆனால் உள்ளே ஈசு வரன் இருக்கிறான்.

1000. விஞ்ஞானியின் பக்திநிலையிலே என்னை அம்பிகை வைத் திருக்கின்றாள். அதனால்தான் ராக்கால் (சுவாமி பிரம்மானந்தர்) முதலிய வர்களுடன் என்னால் வேடிக்கையாகப் பேசமுடிகின்றது. ஞானியின்

நிலையில் இருந்துகொண்டு நான் இவ்விதம் பழகமுடியாது. இந்த விஞ்ஞான நிலையில் சகலமும் தேவியின் மயமாகவே எனக்குத் தோன்றுகின்றது. எனது அன்னை ஜகதம்பிகையை நான் எங்கும் காண்கிறேன். மூர்க்கர்களிடத்தும்கூட நான் அவளைக் கண்டேன். இராமலாலாவின் தாயை, எவ்வளவு முயன்றும் என்னால் கண்டிக்க முடியவில்லை. தேவியின் மற்றொரு வடிவமாகவே அவள் எனக்குப் புலப்பட்டாள். ஸ்திரீகளிடம் நான் சாக்ஷாத் தேவியைக் காண்பதாலேயே நான் அவர்களை வணங்குகிறேன். என் மனைவி என் கால்களை வருடுகின்றாள்; ஆனால் பிறகு அவளை நான் விழுந்து நமஸ்கரிக்கிறேன். அந்த நிலைமையில் இருப்பதனால்தான் நீங்கள் என்னை வணங்கும்போது திரும்ப உங்களுக்கு வணக்கம் செலுத்த முடிகின்றது. நெறிகெட்டவனையும் நான் விலக்காம விருப்பதை நீங்கள் காண்கிறதில்லையா? ஒரு துளசி இலை சிறிதாகவும், உலர்ந்து இருந்தாலும் அதனையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்யலாம்.

1001. நான் எவ்விதம் காண்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த மரங்கள், செடிகள், மனிதர்கள், மிருகங்கள் புல் பூண்டுகள் முதலிய எல்லா வஸ்துக்களும் தலையணை யுறைகள்போல் எனக்குத் தோன்றுகின்றன. சில மிருதுவாகவும் சில கடினமானதாகவும், சில உருண்டை வடிவமாகவும் சில தட்டை வடிவமாகவும் இருக்கின்றன. என்றாலும் அவைகள் எல்லாவற்றினுள்ளும் அந்த ஒரே பஞ்சுதான் இருக்கின்றது. அதேபோல உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றினுள்ளும் அகண்ட சச்சிதாநந்தப் பொருளே நிறைக்கப் பெற்றுள்ளது. ஜகதம்பிகையே, பல போர்வைகளால் தன்னை மூடிக்கொண்டு அதனுள்ளிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றுகின்றது. எனக்கு ஒருசமயம் ஒரு மன நிலை ஏற்பட்டது. அம் மனநிலையில் ஒவ்வொரு க்ஷணமும் இவ்வித காட்சி தென்பட்டுக் கொண்டிருந்தது. என்னுடைய மன நிலையை அறியாத மக்கள், என்னிடம் எனக்கு ஆறுதல் கூற முன் வந்தனர்; இராமலாலாவின் தாயார் அழுதாள். அவளைப் பார்த்ததும் ஆலயத்திலுள்ள தேவியே அவ்விதம் உடுத்து வந்திருப்பதாக நான் உணர்ந்தேன். 'என் அம்பிகே! எவ்வளவு அழகாக உடுத்திக்கொண்டு வந்திருக்கிறாய்' என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தேன். காளி கோவிலிலுள்ள தேவியின் விக்ரகத்துக்கு முன் ஒருநாள் நான் தியானம் செய்துகொண்டிருந்தேன். தேவியின் திருவுருவத்தை என்னால் வெகுநேரம் காணமுடியாது கஷ்டப்பட்டேன். கடைசியில் பூசைப் பாத்திரத்துக் கருகிலே, தக்ஷிணேசுர கங்கைத் துறையில் நீராடவரும் வேசி ரமணியின் உருத்தாங்கி தேவி எனக்குத் தோற்றமளித்தாள். நான் ஆச்சர்யத்துடன் நகைத்து 'மிகவும் நல்லது? இன்று நீ ரமணியைப்போல் இருக்க விழைகின்றனையா? அப்படியானால் அவ்வுருவத்தின் மூலமாக என் ஆராதனையை ஏற்றுக்கொள்வாய்' என்று கூறினேன். 'நெறிகெட்ட வேசியும் நானே. என்னையன்றி உலகில் வேறு

ஒன்றுமில்லை' என்று இவ்விதம் தேவி எனக்குப் போதித்தாள். மற்றொருநாள் கல்கத்தா தெருவொன்றின் வழியாக வண்டியில் போய்க் கொண்டிருந்தபோது, வருவோர் போவோரை மயக்கி வசமாக்குவதற்காகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு கண் சமிக்ஞை செய்தவண்ணமாக ஒரு வீட்டு வாயிற்படியண்டை நின்றுகொண்டிருந்த வேசி வடிவமாகத் தேவி எனக்குத் தரிசனமளித்தாள். தேவி இவ்வித கோலங் கூடக் கொண்டதுகண்டு நான் பேராச்சர்யமுற்றவனாய், அவள்முன் விழுந்து பணிந்து எழுந்தேன்.

1002. ஈசுவரன் பிரத்யக்ஷ ஸ்ரூபியாக இருப்பதை நான் எனது கண்களாலேயே பார்க்கிறேன். ஆகவே, நான் ஏன் விசாரணை செய்ய வேண்டும்? பிரம்மமே நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களாக இருக்கின்றதென்பதை நான் கண்கூடாகக் காண்கிறேன். அந்தப் பிரம்மமே ஜீவனும் பிரத்யக்ஷ உலகமுமாகத் தோன்றுகின்றது. இந்த உண்மையைக் காணவேண்டுமானால் ஒருவனுக்கு ஞானக்கண் திறக்கவேண்டும். ஈசுவரன் ஒருவன்தான் வாஸ்தவத்தில் உள்ளவன் என்ற உண்மையைத் தெரிந்துகொள்ளாதவரையில் ஒருவன் "இதன்று இதன்று" என்று சொல்லிக்கொண்டு சர்ச்சை செய்யவேண்டும். "எல்லாம் அவனே என்பதைச் சந்தேகமறத் தெரிந்துகொண்டேன்" என்று ஒருவன் சொல்வது மட்டும் போதாது. வெறும் வார்த்தைகளால் பயன் இல்லை. ஈசுவர கடாக்ஷத்தினால் ஆத்மபோதம் ஏற்படவேண்டும். அதன்பிறகு சமாதி நிலை வரும்; இந்நிலையில் ஒருவன் தனக்கு ஒரு தேகம் இருக்கிறதென்பதை மறக்கிறான். காமமும் பண ஆசையுமாகிற இவ்வுலகப் பற்றுக்களையெல்லாம் கைவிடுகிறான். ஈசுவரனைப்பற்றிய வார்த்தைகளைத் தவிர மற்ற வார்த்தைகளில் அவனுடைய மனம் செல்வதில்லை. உலக விஷயங்களைக் கேட்கும்படி சொன்னால் அவனுக்கு அதிக கஷ்டமுண்டாகிறது. ஆத்மபோதம் உண்டானால் அடுத்தபடி பரமாத்மானுபவமே; ஆத்மாவை ஆத்மாவே அறிந்தனுபவிக்கும்.

1003. பகவானை மனிதரிடமும் காணும்போதுதான் ஒருவன் பரிபூரண ஞானமடைந்தவனாவான் என்று வைஷ்ணவ சரணர் அனேக வருஷங்களுக்குமுன் எனக்குச் சொல்லியிருந்தார். இப்போது அவ்வுண்மை எனக்குத் தெரியவருகிறது. பகவானே பலவேறு ரூபத்துடன், ஒரு சமயம் யோக்யனாயும், ஒருசமயம் வஞ்சகனாகவும், மற்றொரு சமயம் கொடும் பாதகனாகவும் வடிவெடுத்து வருகிறான் என்பது நன்கு தெரியவருகிறது. ஆகையால்தான் நான் 'ஒழுக்கமுள்ள நாராயணன், துராசார நாராயணன், துஷ்ட நாராயணன் என்று கூறுகின்றேன். இவ்வித நாராயண சொரூபத்திலேயே சகலரையும் நான் இப்போது காண்கின்றேன். இவர்கள் அனைவர்க்கும் உணவூட்ட விரும்புகிறேன். அதுதான் அவர்களுள் எவரையாவது ஒருவரை என்னுடன் வைத்துக்கொண்டு பராமரித்துக்கொண்டு வருவதன் காரணமாகும்.

1004. உயர் குடும்பத்தில் உதித்த பதிவிரதா ஸ்திரீகளைக் காணும்போது, லோகமாதாவே அப்படி நாணம் முதலான நற்குணங்

ளுடைய கற்புள்ள ஸ்திரீயின் உருவத்துடன் வந்திருப்பதாகக் காண்கிறேன். வெட்கம் மானம் இவைகளை முற்றிலும் தவிர்த்து, வாசற்றிண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் வேசிகளைப் பார்க்கும் போதும் அதே லோகமாதாவானவள் வேறொரு விதத்தில் விளையாடுவதாகவே யான் காண்கிறேன்.

1005. ஈசுவரனிடம் வித்யை அவித்யை என்ற இரண்டும் உள்ளன. வித்யா மாயையானது மனிதனை ஈசுவரனிடம் சேர்க்கும். அவித்யா மாயையோ அவனை ஈசுவரனிடமிருந்து புறம்பேபோகச் செய்யும். ஞானம் பக்தி வைராக்கியம் பூததயை இவையெல்லாம் வித்யா மாயையின் தோற்றங்களாம். இவைகளின் உதவியைக் கொண்டுதான் ஒருவன் கடவுளை அடைய முடியும்.

ஆனால் இன்னும் ஒருபடி உயர்ந்தால் பிரம்ம ஞானத்தை அடையலாம். அந்நிலையில் அவனே எல்லாமாக விருப்பதை நான் உணர்கிறேன்; உண்மையாகக் காண்கிறேன். விரும்பத் தகுந்ததும் வெறுக்கத் தகுந்ததும் அங்கு இல்லை. எவருடனேயுங் கோபங்கொள்வது எனக்கு முடியாத காரியமாகின்றது.

ஒருநாள் நான் வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் ஒரு வீட்டு மேல்மெத்தையில் இரண்டு தாஸிகள் நிற்பதைக் கண்டேன். ஆனால் அவர்களிடத்து உண்மையில் திவ்ய மாதாவையே நான் கண்டேனாதலால், அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணிப்போனேன்.

இந்த நிலைமையை நான் அடைந்ததும் என்னால் தக்ஷிணேசுவர ஆலயத்தில் காளிதேவிக்குப் பூஜை நைவேத்யம் முதலியன எதுவும் செய்ய முடியவில்லை. அதைக்கண்டு, கோவிலதிகாரிகள் என்னை வையத் தொடங்கினர். ஆனால் நான் அவர்களுடைய வசைக்குக் கொஞ்சங்கூட வருந்தாமல் சிரித்தேன்.

1006. உலகத்தின் உண்மை இயல்பினைக் காணப்பெற்ற பிறகு பகவான் இங்ஙனம் கூறினார்: 'நான் இப்போது எதனைக் கண்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? திவ்விய காட்சியை—ஜகதம்பிகையின் திவ்விய காட்சியை! தேவி கர்ப்பம் உள்ளவளாகத் தோன்றினாள்; சிறு குழந்தையொன்றினைப் பெற்றெடுத்தாள்; அவளே அதனை உடனே விழுங்கிவிட்டாள்! அவள் வாயினுள்போன அளவில் அக்குழந்தை ஒன்றுமில்லாமற் போயிற்று! எல்லாம் சூனியமே என்று அவள் எனக்குக் காண்பித்தாள். 'குழப்பமே வா!, மயக்கமே வா!' என்று அவள் கூறுவதுபோல் தென்பட்டது.

தம் நோயைப்பற்றிக் குருதேவர் கூறியது

1007. பரமஹம்ஸர் நோய்வாய்ப்பட்டிருந்ததைச் சசாதர பண்டிதர் பார்த்து, "சுவாமி! சரீரத்தில் நோயுள்ள பாகத்தின்மீது உமது மனத்தைச் செலுத்தி, அந்நோயை ஏன் குணப்படுத்திக் கொள்ளக் கூடாது?" என்று கேட்டார்.

பரமஹம்ஸர் :—" ஈசுவரனுக்கென்றே அர்ப்பணம் பண்ணிவிட்ட மனத்தை, எலும்பு தோல்களால் ஆக்கப்பட்டிருக்கும் இந்த அற்ப உடலின் பொருட்டு, எப்படி நான் திருப்பக்கூடும் ?"

சகாதரர் :—அப்படியானல், உமது வியாதியைத் தீர்த்தருள வேண்டுமென்று தாங்கள் ஏன் ஸர்வேசுவரியைப் பிரார்த்தித்துக் கேட்கக்கூடாது ?"

பரமஹம்ஸர் :—"ஸர்வேசுவரியை நினைக்கும்போது எனது ஸ்தூல சரீர ஞாபகமே இராது போகின்றது. அப்போது சரீரமே எனக்கில்லை. ஆதலால் சரீரத்தைப்பற்றி ஒன்றையும் பிரார்த்தித்துக் கேட்க இயலாதவனாக இருக்கிறேன்."

1008. பரமஹம்ஸருக்கு நோய் வலுத்துப் பேசமுடியாமலும் ஆகாரம் உட்கொள்ள முடியாமலும் இருந்தபோது அவர் சொன்னதாவது :—" நான் இப்போது அநேகம் வாய்களால் பேசுகிறேன். அநேகம் வாய்களால் ஆகாரம் உட்கொள்ளுகிறேன். எல்லா ஜீவன்களினுடைய ஆத்மாவும் நான் ஆனபடியால் எனக்கு அளவற்ற வாய்கள் உள்ளன. தொண்டையில் எங்கேயோ ஓரிடத்தில் புண்ணையுடைய மானிட சர்மத்தால் மூடப்பட்ட அளவிலடங்காத சைதன்யமாய் இருக்கிறேன் நான். சரீரத்தில் நோயுண்டானல் அந்நோய் மனத்தையும் பீடிக்கிறது. ஒருவனை வெந்நீர் சுடுமானல் அவன் 'இந்த ஜலம் என்னைச் சுட்டுவிட்டது,' என்கிறான். வாஸ்தவத்தில் அவனைச் சுட்டது உஷ்ணமேயொழிய ஜலமன்று. எல்லாவித நோயும் எல்லாவித வேதனையும் சரீரத்திலேயே உள்ளன. ஆனல் ஆத்மாவோ வேதனைக்கு அப்பாலும் நோய்களுக்குப் புறம்பாயும் உளது.

1009. என் தொண்டையினால் ஒன்றும் சாப்பிட முடியவில்லையென்றும், சாப்பிடுவதற்கான சக்தியளிக்கும்படிக்கும் நான் தேவியைப் பிரார்த்தித்தேன். ஆனல் தேவி உங்கள் அனைவரையும் சுட்டிக்காண்பித்து 'ஏன்! இவர்கள் இத்தனைபேர் வாயின் மூலமாக உணவருந்தவில்லையா ?' என்று கேட்டாள். வெட்கம் மிகுந்தவனாய் மேற்கொண்டு எதுவும் பேசாது தலை குனிந்துகொண்டேன்.

1010. சரீரத்தில் கொடிய வேதனை யிருக்கும்போது கூட எப்படி ஆத்மாவைப்பற்றி நினைக்கமுடியும்? எப்படி ஈசுவர ஞாபகத்தோடு இருக்க முடியும் என்பதை மனிதனுக்கு உபதேசிக்கிறதற்காக இந்த நோயைத் தேவி எனக்கு அருளியிருக்கின்றனள். பசியினாலும் கொடிய வேதனையாலும் சரீரம் கஷ்டப்படும் போதும், மனுஷ்ய சகாயத்தால் சிகித்சை செய்ய முடியாமலிருக்கிற காலத்திலும் சரீரத்தை ஆள்வது ஆத்மாவே என்பதைத் தேவியானவள் எனக்குக் காட்டுகிறாள். ஆத்மா தெய்விகம் வாய்ந்த தென்பதையும், கடவுள் ஞானம் உண்மையான தென்பதையும் ஒருவன் பரிபூரணமடையும்போது எல்லாவித பந்தங்களினின்றும் விடுபடுகிறானென்பதையும் சந்தேகாத்மாக்களுக்குத் தெளிவிப்பதற்காகவே இந்த நோயைத் தேவி எனக்குத் தந்திருக்கின்றனள்.

1011. பகவான் நோயினல் பீடிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்த போது, சிஷ்யர்கள், தமது நன்மைக்காகவேனும் இன்னும் சில நாட்கள் உலகத்தில் நிறுத்தி வைக்கும்படி தேவியைக் குறித்துப் பிரார்த்திக்கு மாறு பகவானைப் பலமுறை வற்புறுத்தி வேண்டிக்கொண்டனர். அதற்குப் பகவான் மறுமொழி பகர்ந்ததாவது: "நான் அதைக் குறித்துத் தேவியைப் பிரார்த்திப்பதில் எந்த நன்மையும் உண்டாகாது. அவளருளின்படியே யாவும் நடைபெறும். நானும் என் தேவியும் முடிவாக ஒன்று பட்டுவிட்டோம் என்பதனை நான் இப்போது காண்கின்றேன்." 'எனது அன்பே! என் ஹிருதயத்தில் நீ வீற்றிருப்பாயாக. இனி யொருமுறையும் மனிதவடிவத்தில் நீ வெளி வரவேண்டும்' என்று ஸ்ரீ ராதை ஒரு முறை கிருஷ்ணனிடம் கூறினள். ஆனல் அடுத்த கணத்திலேயே ஸ்ரீ கிருஷ்ணனை மனிதவடிவத்தில் காண மன முருகிப் பிரார்த்தித்தாள். ஆனல் இறைவன் எண்ணமே ஈடேறும்; கிருஷ்ணன் வெகு நாட்கள் மனிதவடிவத்தில் அவள் முன் வரவில்லை."

மனிதத்தன்மையும் தெய்வத் தன்மையும் ஒன்றுபட்டது குருதேவர் நிலை

1012. குரு, கர்த்தா, தகப்பன் என்ற இம்மூன்று வார்த்தைகளும் எனக்குப் பெரு வேதனையைத்தருகின்றன. கடவுள் ஒருவரே யாவர்க்கும் குரு. எனது ஜகதம்பிகையே சகல காரியங்கட்கும் கர்த்தாவாவார்; நான் அவள் கரங்களிலுள்ள ஒரு கருவிமாத்திரமே. நான் அவளது மதலையெனவே என்னைக் கருதிக் கொள்ளுகின்றேன்.

1013. புகழ்பெற்ற பண்டிதர் ஒருவரைச் சந்தித்த வரலாறு பற்றிப் பகவான் இவ்வாறு பகர்ந்தார்: "அந்தப் பண்டிதர் என்னைக் காண வருகின்றார் என்று கேட்டபோதே நான் மிகவும் பயந்து போனேன். ஏன் எனில் நான் வஸ்திரம் உடுத்திக்கொண்டிருக்கிறேனே இல்லையோ என்னும் உணர்ச்சிகூட எனக்குச் சில நேரங்களில் இருப்பது கிடையாது. அவருடன் என்ன பேசுவதென்பது எனக்கு விளங்கவில்லை. நான் தேவியைக் குறித்து 'எனது அம்பிகே! உன்னை யன்றி வேறென்றினையும் நான் அறிகிலேன்; சாஸ்திரங்கள் எதுவும்படித்திலேன்' என்று குறையிரந்தேன். என்முன் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, 'நீங்கள் எல்லோரும் இங்கு இருக்கின்றீர்கள். ஆகையால் தான் நான் சிறிது தைரியமாயிருக்கிறேன்' என்று கூறினேன். பண்டிதர் நேரே வந்துவிட்டார். அப்போதும் கூட என்னிடம் அச்சம் சிறிது இருந்தது. நான் அமைதியாக உட்கார்ந்து அவரை உற்று நோக்கிய வண்ணம் அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது தேவி, அப்பண்டிதருடைய மன இயல்பு முழுவதையும் எனக்குத் தெளிவாகக் காட்டியருளினள். விவேக வைராக்கியங்கள் இல்லாமல் எத்தனை சாஸ்திரங்கள் வாசித்தாலும் என்ன பிரயோசனம்? (தம்முடைய சரீரத்தைச் சுட்டிக் காண்பித்து) இதனுள் ஏதோ சிரஸை நோக்கி நகர்ந்து செல்வதுபோன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. என்னுடைய அச்ச

மெல்லாம் பறந்தோடிவிட்டன. என் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. என் தலையை நிமிர்த்தினேன்; வாயிலிருந்து வார்த்தைகள் பொங்கி வந்தன; நான் பேசப் பேச என் உள்ளத்தினுள் எவரோ எண்ணங்களை நிரப்பிக்கொண்டே இருந்ததுபோல் நான் உணர்ந்தேன். காமர்ப்புகூரில் தானியங்களை ஒருவன் அளந்து கொண்டிருந்தால் மற்றொருவன் அளப்பவனுக்கு அருகில் தானியங்களைத் தள்ளிச்சேகரித்துக்கொண்டே இருப்பான். அதுபோல இருந்தது என் மன நிலை. நான் என்ன பேசினேன் என்பது எனக்கே தெரியாது. எனக்குப் புற உணர்ச்சியேற்பட்டதும், பண்டிதர் தமது வஸ்திரம் நனையக் கண்ணீர் உகுத்து அழுது கொண்டிருப்பதைக் கண்ணுற்றேன். இவ்வித நிலைமையை நான் அடிக்கடி பெறுவது வழக்கம். ஐரோப்பிய யாத்திரிகர் ஸ்ரீமான் குக் என்பவருடன் என்னை ஒரு கப்பலில் ஏற்றிக்கொண்டு கங்கையில் சிறிது தூரம் போகவிருப்பதாக கேசவ சந்திரசேனர் எனக்குச் செய்தி அனுப்பினார். இதனைக் கேட்டதும் நான் பயந்து பலமுறை (மன நடுக்கத்தால் மல ஜலம் கழிப்பதற்காக) சவுக்குக் காட்டுக்குப் போய்வந்தேன். கடைசியில் அவர்கள் வந்தார்கள்; நானும் கப்பலில் ஏறிக்கொண்டேன். உடனே என்னிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அப்போது நான் என்னென்ன சொன்னேனோ! இவர்கள் எல்லோரும் (தமது சிஷ்யர்களைச் சுட்டிக் காட்டி) நான் வெகு உயர்ந்த உபதேசங்களை எடுத்துரைத்ததாகக் கூறினார்கள். ஆனால் நானோ அவை யொன்றினையும் உணர்ந்திலேன்.''

1014. என்னுள்ளிருக்கும் எம்பிரானே என் மூலமாக இவையனைத்தினையும் செய்து வருகின்றான். சில சமயம் என்னிடம் கடவுள் தன்மை ஏற்பட்டுவிடும்; அப்போது பிறர் என்னைப் பூசித்து வணங்கினா லல்லாமல் எனக்குச் சாந்தி ஏற்படாது. நான் கடவுள் கரங்களிலுள்ள ஒரு கருவி மாத்திரமே. அவர் என்னைச் செய்விக்கிறபடி நான் செய்கிறேன்; பேசுவிக்கிறபடி நான் பேசுகின்றேன்.

1015. கிரீஷ் சந்திரகோஷ் தம்மை முழுதும் பகவானிடம் ஒப்படைத்துவிட்ட பிறகும், தம்முடைய பழைய தீயகர்மங்களால் ஏற்பட்டிருக்கும் கெட்ட வாசனைகளைக் குறித்து மனம் நொந்து அதே கவலையுடன் இருக்கக்கண்ட குருதேவர், 'ஏ அற்பனே! உன்னைப் பிடித்திருப்பது நீர்ப்பாம்பென்று நினைக்கின்றாய்; அன்று, கொடிய விஷப்பாம்பு. நீ வீட்டுக்கு ஓடினாலும், நீ சாகவேண்டியது நிச்சயமே. அது உனக்குத் தெரியாதா? நீர்ப்பாம்பு தவளையைப் பிடித்துக்கொண்டால் தவளை வெகு நேரம் கத்திக் கஷ்டப்பட்ட பிறகே சாகிறது. சில சமயங்களில் அத்தவளை பாம்பினிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடியும்விடும். ஆனால் அது விஷமுள்ள பாம்பாயிருப்பின் இரண்டொரு கத்தலிலேயே தவளை இறந்துவிடுகின்றது. தப்பி ஓடினாலும் சிறிதுதூரம் செல்வதற்குள் மரித்து விடுகின்றது. இவ்விடம் வந்தவர்கள் கதிகளும் இம்மாதிரியே யாகும்' என்று கூறினார்.

1016. ஒருநாள் சிஷ்யர் ஒருவர் குருதேவருடைய கால்களை வருடிக்கொண்டிருந்தார். இதைக் குறித்து பகவான் "இவ்வித சேவை

ஆழ்ந்த கருத் தமைந்ததாகும்" என்று கூறிப் பிறகு தம் கரங்களைத் தமது ஹிருதயத்தின்மேல் வைத்துக்கொண்டு மேலும் "இதனிடம் (தெய்விகம்) ஏதேனும் இருக்குமானால் அப்போது இவ்வித சேவை யால்) அறியாமையும் அவித்தையும் முற்றிலும் அகன்றொழியும்" என் றார். ஆழ்ந்த நோக்குடன் அவர் திரும்பவும் உரைத்ததாவது: "இங்கே எவரும் வெளிமனிதரில்லை. அன்றொருநாள் நான் ஒரு காட்சி கண் டேன். ஹரிஷ் என் அருகே இருந்தான். சச்சிதாநந்த சொரூபியாகிய இறைவனே இவ்வுறையிலிருந்து (அதாவது தமது சரீரத்திலிருந்து) வெளிவருவதைக் கண்டேன். வெளியே வந்து 'ஒவ்வொரு யுகத்திலும், நான் உலகில் அவதாரம் செய்கின்றேன்' என்று கூறினர். எனக்கு என்ன புத்தி தடுமாறிவிட்டதோ என்று நான் எண்ணினேன்; ஆகை யால் நான் ஒன்றும் பேசாது இருந்தேன். மேலும் அச் சச்சிதாநந்த சொரூபி 'சைதன்யரும் கூட அந்தச் சக்தியை உபாசித்தார்' என்று கூறினர்."

1017. நோய்வாய்ப்பட்டிருந்தபோது குருதேவர் தமது சிஷ்யர் களைப் பார்த்துச் சொன்னதாவது: "இங்கு (அதாவது தமக்குள்ளே) இரண்டுபேர் இருக்கின்றனர். ஒருவர், தேவியார்; மற்றவர் அவரது அடியார்; இரண்டாம் மனிதரே இப்போது நோய்வாய்ப்பட்டிருப் பது........பகவான் தமது சிஷ்யர்களுடன், மனிதசரீரம் தாங்கி திவ்விய அவதாரம் செய்தருளுகின்றார். அவர் சிஷ்யர்களும் அவருடன் கூடத் தேவியிடம் திரும்பச் சென்று விடுகின்றனர். சாதுக்கள் கூட்டமாகப் பாடிக்கொண்டு திடீரென்று ஒரு வீட்டுக்கு வருகின்றனர். பகவந்நாமத் தைப் பாடி ஆனந்தக் கூத்தாடுகின்றனர். அது முடிந்ததும் உடனே வீட்டை விட்டு வெளிக்கிளம்பி விடுகின்றனர். எவ்வளவு சடிதியில் வந் தார்களோ அவ்வளவு சடிதியில் சென்றுவிடுகின்றனர்! மக்கள் அவர்களை அறிகின்றதில்லை!"

1018. பலிபீடம், பலியிடப்படும் உயிர், பலியிடுவோன் ஆகிய மூன்றும் ஒன்றெனவே நான் அறிகிறேன்.

1019. தமது அந்திய காலத்தில் நோயினால் படுக்கையில் கிடந்த போது குருதேவர் நரேந்திரரைப் பார்த்து, 'என்னுடைய சுபாவம் எத்தகையது என்று நீ எண்ணங்கொண்டுள்ளாய், அதனைக் கூறுவாயாக' என்று கேட்டருளினர்.

அதற்கு நரேந்திரர் "என் சுவாமி! தாங்களே யாவும்! உலகத் தின் மூலமாகக் கிடைத்தற்கரிய விவேக வாளின் துணைக்கொண்டு நித் யத்துக்கு வழி கோலிய சத்திபொருந்திய தீரரன்றோ நீர்! உம்மிடம் இயம்புதற்கரிய அன்பும் உள்ளது. நீர் தெய்விக சக்தி மயமானவர். நீரே சக்தியும் வீரருமாவீர்" என்று பதிலிறுத்தார்.

குருதேவர் உணர்ச்சி மிகுந்தவராய் ஹிருதயத்தின் மீது கைகளை வைத்துக்கொண்டு, நரேந்திரர் முதலிய சீடர்களைப் பார்த்து, 'நான் காண்கிறேன்—நான் சாக்ஷாத்கரிக்கிறேன்—அனைத்தும்—மனத்தினல்

கருதக்கூடிய அனைத்தும்—இதிலிருந்தே வெளிவருகின்றன' என்று கூறினர்.

1020. குருதேவர் மஹா சமாதியடையச் சில தினங்களே இருக்கின்றன. ஆறுமாதகாலமாய்த் தொண்டைப்புண் நோயினால் எலும்பளவாக மெலிந்து எழுந்திருக்க வியலாது படுக்கையிலே கிடக்கின்றார். இந்தச் சமயத்தில், பிற்காலத்தில் ஸ்ரீ விவேகாநந்தசுவாமிகள் எனப்புகழ் வாய்ந்த நரேந்திரர் என்னும் சிஷ்யருக்குக் குருதேவரைப் பரீக்ஷித்துப் பார்க்க விசித்திரமான எண்ணம் எழுந்தது. 'குருதேவர் தம்மை அவதார புருஷர் என்று அடிக்கடி கூறக்கேட்கிறோம். உண்மையில் இவர் அவதார புருஷர்தாம் எனில், இந்தக் கொடிய நோயினையும் பொருட்படுத்தாது படுக்கையின்மீது எழுந்து அமர்ந்து தமது கடவுட்டன்மையினை விளக்குவாரானால் அப்போது அதன் உண்மையை நான் நம்புவேன்' என்று தமக்குள்ளே எண்ணினர். என்ன ஆச்சர்யம்! இவ்வித எண்ணம் நரேந்திரரது மனத்தகத்து எழுந்த அக்கணமே பகவான் எழுந்து உட்கார்ந்து கம்பீரத் தொனியில் தெளிவாக "ராமனும் கிருஷ்ணனுமாக இருந்தவர்களே இன்று இந்தச் சரீரத்தில் ராமகிருஷ்ணராக இருக்கின்றார்கள். ஆனால் உனது வேதாந்தக் கொள்கைப்படியன்று, (அதாவது நானே பிரம்மம் என்னும் அத்வைத கொள்கைப்படியன்று)" என்று கூறினர்.

நான்காம் பகுதி

முதுமொழிகளும் உவமைக் கதைகளும்

நம்மையும், ஏனைப் பொருள் எல்லாவற்றினையும் படைத்துக் காத்து அளிப்பவன், ஜகந்தனிலுள்ள வடிவங்களையெல்லாம் தனது உறைவிடமாகக் கொண்டவன், தெய்வங்களைச் சிருஷ்டித்து அவரவர்க் கேற்ற கடமைகளை நியமித்தவன், ஒரு தனி முதல்வனே ஆவன். இவனையே, 'அந்த உயர் தனிப் புருஷன் யாவன்?' என்று எல்லா உயிர்களும் இங்குமங்கும் ஓடிக் கேட்கின்றன.

மனிதர்களே! இவை யனைத்தினையும் ஆக்கி, அருளிய அண்ணலை நீவிர் அறியீரோ? உமது அகங்காரத்துக்கு அப்பாற்பட்டு உம்முள்ளே அவன் ஒளிந்துள்ளான். உமது உள்ளொளி பனித்திரைபோன்ற அறியாமையால் மறைபட்டுளது. நீவிர் அவனை உணராது இகபர சீர சுகத்தின் பொருட்டுச் சடங்குகள் பல இயற்றுகின்றீர்; மமதையை மெய்யெனக் கொண்டு வீணே அலைந்து திரிகின்றீர்.

—வேதங்கள்.

அத்தியாயம் 21

சில முது மொழிகள்

[நீதி மொழிகள்—ஞான மொழிகள்]

நீதி மொழிகள்

1021. வண்ணன் வீட்டில் அழுக்கு வேஷ்டிகள் ஏராளமாகக் கிடக்கின்றன. ஆனல் அவைகள் அவனுடையன அல்ல. அவைகள் வெளுக்கப்பட்டதும், அவன் வீடு காலியாய் விடுகிறது. தமக்கென்ற சுய சிந்தனை யில்லாதவர்கள் வண்ணனைப்போன்றவர்களாவர். ஆதலால், சிந்தனையில் வண்ணனைப்போல இராதே.

1022. பிறர் எதைச் செய்யவேண்டுமென்று நீ விரும்புகிருயோ அதை நீயே செய்.

1023. யாசகங் கேட்கும் மனிதன் சின்னவனுகிருன். மஹாபலியிடம் யாசகம் கேட்கப்போன மஹாவிஷ்ணுவானவர் குறுகிய வாமன ரூபத்துடனேயே செல்லவேண்டி யிருந்தது. பிறரிடமிருந்து ஏதேனுமொன்றை யாசிக்கும்போது நீ உன்னைத் தாழ்மைப்படுத்திக் கொள்கிருய் என அவர் கற்பிக்கிருர்.

1024. மனிதர்கள் புகழ்வதும் சீக்கிரம், இகழ்வதும் சீக்கிரம். ஆதலால் மற்றையோர் உன்னைப் பற்றிச் சொல்லும் வார்த்தைகளைக் கவனியாதே.

1025. தர்ம மார்க்கத்தில் நிம்மதியாய் நீ வாழுங் காலத்தில் லோக ஜனங்களுடைய புகழையும் இகழையும் பொருட்படுத்தாதே.

1026. எப்போதும் மிக ஜாக்கிரதையாகப் பழகுதற்குரியவர் சிலர் இருக்கின்ருர்கள். முதலாவது செல்வவான்கள். அவர்களுக்குப் பணம் பணியாட்கள் செல்வாக்கு முதலியன இருக்கின்றன. இஷ்டப்பட்டால் அவர்கள் உனக்குத் தீமை செய்து விடுவார்கள். ஆதலால் அவர்களுடன் நீ வெகு ஜாக்கிரதையாகப் பழகவேண்டும். அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு, "சரி, சரி" "ஆமாம், ஆமாம்" என்று நீ சொல்லவேண்டி வரலாம். இரண்டாவது நாய். அது உன்னைக் கண்டு குலைக்கவோ கடிக்கவோ வரும்போது நீ ஓடாமல் நின்று, சீட்டியடித்து அதைச் சமாதானம் செய்ய முயலவேண்டும். மூன்ருவது காளை மாடு. அது உன்னை முட்ட வரும்போது அதையும் ஏதாவதொரு சப்தம் செய்து சமாதானப்படுத்த வேண்டும். நான்காவது குடிகாரன். நீ அவனைத் தொந்தரவு செய்தால் அவன் காதால் கேட்கச் சகிக்காதபடியெல்லாம் உன்னை வைவான்; அதை விட்டு, 'மாமா, சௌக்கியமா?' என்று அவனேடு நீ சல்லாபம் செய்வாயானல் அவன் உன்னிடம்

சந்தோஷம் கொண்டு உன்னண்டை வந்து உட்கார்ந்து புகைச் சுருட்டுப் பிடிக்கத் தொடங்குவான்.

1027. முள்ளங்கி தின்றவனுக்கு முள்ளங்கி ஏப்பமும், கக்கரிக்காய் தின்றவனுக்கு அந்த ஏப்பமும்தான் வரும். அதுபோல, சில சமயங்களில் உள்ளத்தில் உள்ளதை வாய் வெளி விட்டு விடும்.

1028. ஒருவனுடைய குணதோஷங்கள் அவனுடைய ஸஹவாசத்தைப் பொறுத்திருக்கின்றன; நிற்க, ஒருவன் தன்னுடைய குணதோஷங்களுக்கு ஏற்ற ஸஹவாசத்தையே நாடுகிறான்.

1029. சிலருக்குப் பாம்பின் சுபாவ மிருக்கிறது. அவர்கள் எப்போது உன்னைக் கடிப்பார்களென்பது உனக்குத் தெரியமாட்டாது. அவர்களுடைய விஷத்தை முறிக்க வெகுவாகப் பாடுபடவேண்டும். இல்லாவிட்டால், அவர்கள்மீது பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற கோபம் உனக்கு வந்துவிடும்.

1030. கோபம் தாமஸகுணத்தின் அடையாளம்; கோபத்தில் மனிதனுக்குப் பகுத்தறிவு போய்விடுகிறது. ஹனுமார் லங்கையைக் கொளுத்தினார். ஆனால் ஸீதாதேவி இருக்குமிடத்தையும் அந்நெருப்பு எரித்துவிடுமே என்ற எண்ணம் அவருக்கு அப்போது இராமல் போயிற்று.

ஞானமொழிகள்

1031. 'நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் குருக்களைப் பெறலாம். ஆனால் உண்மையான சிஷ்யன் ஒருவனைப் பெறுவது அரிது' என்பது பழமொழி. இதன் பொருள் என்னவெனில், ஸத் உபதேசம் செய்யக்கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் அவ் வுபதேசத்தைப் பின்பற்றி ஒழுகுவோர் வெகு சிலர் என்பதாம்.

1032. மதங்கள் ஏன் மலின மடைகின்றன? மழைத் தண்ணீர் சுத்தமானதே. ஆனால் அது பூமியில் வந்து சேர்வதற்குள், வழியிலுள்ள அசுத்தத்தால் கெட்டுப்போகின்றது. வீட்டின் கூரை, குழாய்கள், சாக்கடைக் கால் ஆகிய எல்லாம் அழுக்கடைந்திருந்தால் அவைகளின் வழியாக வரும் தண்ணீரும் அழுக்காகத்தானிருக்கும். அதுபோல, மதம் மலின மடைவதன் காரணம் அதைப் பிரசாரம் பண்ணுபவர்களுடைய காரியமே.

1033. பாபமும் பாதரஸமும் எளிதில் ஜீரணமாகா.

1034. பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும்போதும் ஆலயத்துக்குப் போகும்போதும், வெறுங் கையனாய் ஒருபோதும் போகக்கூடாது. பெரியோர்களுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு மிகக் குறைந்த அளவினதாக விருந்தாலுங்கூட ஏதேனு மொன்றைக் கொண்டு செல்லவேண்டும்.

1035. ஜனங்கள் விழித்துக்கொண்டிருக்கும் வீட்டில் திருடர் நுழைவதில்லை. அதுபோல, நீ எப்போதும் ஜாக்கிரதையுள்ளவனாக

விருந்தால், உனது தூய்மையைக் கொள்ளை கொள்ளக்கூடிய கெட்ட எண்ணங்கள் உன் மனத்தில் நுழையமாட்டா.

1036. மாயை யென்பது தாய் தகப்பன், சகோதர சகோதரிகள், மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியோரிடத்து ஒருவனுக்கு உண்டாகும் வாஞ்சையாகும். எல்லா ஜீவப்பிராணிகளிடத்தும் ஒருங்கே உண்டாகும் வாஞ்சைக்குத் தயை என்று பெயர்.

1037. தோழனே! எனது ஆயுட்காலம் நீடிக்க நீடிக்க நான் பிரேமை, பக்தி யாதி விஷயங்களைப் பற்றிய ரகஸியங்களை, மேன் மேலும் தெரிந்துகொண்டு வருகிறேன்.

1038. பக்தியையும் பிரேமையையும்பற்றிய ரகஸியங்களைத் தினந்தோறும் உன் ஆயுள் உள்ளளவும் கற்றுக்கொள். அது உனக்கு எப்போதும் பலனைத் தரும்.

1039. மற்றவர்கள் தலை வணங்குமிடத்தில் நீயும் தலை வணங்கு. பூஜ்யதை ஒருநாளும் பயன்படாமல் போவதில்லை.

1040. உன்னுடைய மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றும் திட நம்பிக்கையும் உடையவனுய் இரு. ஆனல் மதவெறியும் பிறமதத்தின் மீதுள்ள துவேஷமும் அகன்றவனுயிரு.

1041. ஈசுவரனுக்காகப் பின்கண்டவர்கள் தங்கள் தங்களுடைய பெரியோர்களின் வார்த்தைகளைத் தட்டினர். அவர்களாவார்: பரதன், பிரஹ்லாதன், சுகதேவர், விபீஷணர், பரசுராமன், மஹாபலி, கோப ஸ்திரீகள்.

1042. ஆசையை அகற்றிப் பற்றுத லற்று கர்மம் புரிவதே உனக்கேற்ற சிறந்த மார்க்கமாகும்.

1043. உன்மத்தர்கள், குடிக்காரர்கள், குழந்தைகள் இவர்கள் வாய் மூலமாகவும் சிற்சில வேளைகளில் தெய்வீக விஷயங்கள் வெளி வருவதுண்டு.

1044. ஸதா ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யப்படுகிற வீட்டில் பேய் பிசாசுகள் அணுகமாட்டா.

1045. கங்கைக் கரையில் வாழ்பவர்கள் பரிசுத்தர்கள்.

1046. கங்கை நீர், பிருந்தாவனத்துத் தூசி, பூரி ஜகன்னாத க்ஷேத்திரத்தின் மஹா பிரசாதம் இவை மூன்றையும் சாதாரணமாகக் கருதாதே. இம் மூன்றும் பரப்பிரம்மத்தின் சொரூபங்களேயாம்.

1047. ஈசுவரனுக்கு இச்சை உண்டானல், அவன் ஓர் ஊசிக் காதின் வழியாக ஒரு யானையைப் போகவும் செய்வான். அவனுடைய இஷ்டப்படி யெல்லாம் அவன் செய்யச் சக்தி யுள்ளவன்.

1048. ஈசுவரனிடம் சரணடைந்தவனுக்கு ஒருபோதும் தளர் நடை யுண்டாவதில்லை.

1049. ‘ஹரி’ என்றால் நமது ஹிருதயத்தைக் கவர்பவன் என்று பொருள். ‘ஹரிபல்’ என்றால் ஹரிதான் நமக்குப் பலம் என்று அர்த்தம்.

1050. மனிதனிடம் இருக்கும் சைதன்யம் விழித்தெழுந்தா லொழிய ஈசுவரனை அறிய முடியாது.

1051. அச்சம், வெட்கம் இவற்றினையகற்றி எம்பெருமானிடம் அடைக்கலம் புகுவாய். ‘பகவந்நாமத்தை உச்சரித்துக்கொண்டு நான் கீர்த்தனம் செய்தால் பிறர் என்னை ஏளனம் செய்யமாட்டார்களா ?’ என்ற இத்தகைய எண்ணங்களை அகற்றி விடுவாயாக.

1052. ‘வாழ்வின் பெரும்பகுதியை நீர் வீணே கழித்துவிட்டுக் கடவுளைக் காண இப்போது வந்திருக்கிறீர். முதலில் கடவுளைக் கண்டு அதன் பிறகு நீர் உலகவாழ்க்கையில் இறங்கி யிருந்தால் எவ்வளவு அமைதியும் ஆனந்தமும் அடைந்திருப்பீர்’ என்று குருதேவர் ஒருவரைப் பார்த்துக் கூறினார்.

1053. உம்மிடம் தீவிர நம்பிக்கை யிருக்குமானால் நீர் மன முருகித் தேடும் பொருள் உமக்குக் கிடைக்கும்.

1054. முதலில் ஈசுவரனை அறிந்து, பிறகு அவனுடைய சிருஷ்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். “ராம” என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருக்கும்படி வால்மீகி உபதேசம் பெற்றார். ஆனால் அவ்வார்த்தையை முன் பின்னாக்கி “மரா, மரா” என்று சொல்லிக்கொண்டிருக்கும்படி போதிக்கப்பட்டது. ‘ம’ என்றால் ஈசுவரன், ‘ரா’ என்றால் ‘ஜகத்’. அதாவது முதலில் ஈசுவரன், பின்னர் உலகம் என்பதாம்.

1055. ஈசுவர தியானத்தில் மிதமிஞ்சிப்போவதும், அதனால் துன்ப மடைவதும் இல்லை. வைரத்தினுடைய ஜோதி பிரகாசித்துக் குளிர்ச்சியைத் தருமே ஒழிய ஒருபோதும் சுட்டெரிக்காது.

1056. லீலையின் மூலமாக நித்யத்தை அறிய முயல்.

1057. ஸத்தை அடைவதற்குச் சித்துக்குப் போ.

1058. அநித்தியத்தின் மூலமாய் நித்தியத்தையும், மாயையின் உதவியால் உண்மையையும், ரூபத்தின் உதவியால் அரூபத்தையும் அடையவேண்டும்.

1059. அவனுடைய நாமம் சின்மயமானது; அவனது வாஸஸ்தானம் சின்மயமே. ஸர்வேசுவரனான அவனும் சித்ஸொரூபியே.

அத்தியாயம் 22

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியருளிய உப கதைகள்

[உலக ஆசாபாசங்களால் விளையும் அபாயம்—பெண்ணாசைப் பிணிப்பு—புண்ணிய பாவத்தின் உயர்வு தாழ்வு மனத்தின் நிலையைப் பொறுத்தது—அறிவிலிகளின் அபாய வேதாந்தம்—அறிவிலிகளின் மதப்பித்து—நன்னம்பிக்கை, பக்தி, சாத்விகத் தியாகம்—சன்யாசமும் வைராக்கியமும்—மாயையின் இயல்பு—கடவுளைக் காணல்]

உலக ஆசாபாசங்களால் விளையும் அபாயம்

1060. தேசாந்தரமாய்த் திரிந்துகொண்டுவந்த ஒருவன் ஒருநாள் ஒரு பெரிய மைதானத்தை அடைந்தான். அன்று அவன் நெடுந்தூரம் வெயிலில் அலைய வேண்டியதாயிற்று. மேலும் உடம்பெல்லாம் வியர்வை ஆருய் ஓட அதிகம் களைப்படைந்தான். தூரத்தில் மரம் ஒன்று நிற்பதைக் கண்டு அதன் நிழலை அடைந்து சிறிது சிரமப் பரிகாரம் செய்வதற்காக உட்கார்ந்தான். ‘ஆகா! இப்போது நல்ல மிருதுவான படுக்கை இருந்தால் எவ்வளவு சுகமாய் நான் தூங்குவேன்’ என்று எண்ணினன். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாக, ஒரு நல்ல படுக்கை பக்கத்தில் இருக்கக் கண்டான். அது எப்படி அங்கு வந்தது என்பதை அறியாதவனுய்த் திகைத்தான். தான் கல்பதருவின் அடியில் இருக்கிறுன் என்பதை அவன் எப்படி அறிவான்? அவன் அடைந்த அதிகக் களைப்பினுல் அதனை விசாரித்து அறியாது அதன்மீது ஆனந்தமாய்ப் படுத்துக்கொண்டான். ‘உடம்பெல்லாம் வலியிருக்கின்றதே! கைகால்களைப் பிடிக்க இளமங்கையர் இப்போதிருந்தால் எவ்வளவு சுகமாகவிருக்கும்’ என்று நினைத்துக்கொண்டிருக்கையில் இரு இளமங்கையர் தனது காலடியில் உட்கார்ந்து பிடித்துக்கொண்டு இருக்கக் கண்டான். அவன் அடைந்த ஆனந்தத்துக்கோர் அளவில்லை. ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சிறிது குறையவும் பசி உண்டாவதைக் கண்டான். ‘என்ன! படுக்கை வேண்டுமென விரும்பினேன்; படுக்கை வந்தது. கைகால்களைப் பிடித்து வலி நீக்க இளங் கன்னிகளை விரும்பினேன். அவர்களும் கூட இதோ வந்து பிடித்துக்கொண்டு இருக்கிருர்கள். இவையெல்லாம் கிடைத்தபோது பசியாற்றப் பக்ஷணம் வராதா?’ என்று அவன் யோசிக்குமுன் அறுசுவையோடு கூடிய அன்ன பதார்த்தங்கள் தனக்கு முன்னுல் இருக்கக் கண்டான். என்ன மாயமாய் இது வந்தது என்பதைக் கருதாது தனது பசியாற அறுசுவை உண்டியை உண்டு, பிறகும் அப்படுக்கையின்மீது சாய்ந்தான். அவனுக்கு வேண்டியது இனி ஒன்று மில்லாமையால்

போலும் அன்று தனக் குண்டாகிய அதிசயச் செயல்களைப் பற்றிச் சிந்தித்து மகிழ்ந்து இருக்கும்போது ஏதோ பயத்தினால், 'தற்செயலாய் ஒரு புலி இப்போது வந்தால்......' என்ற உடனேயே ஒரு பெரிய காட்டுப்புலி அவன் கழுத்தில் பாய்ந்து கடித்து அவனைக் கொன்று விட்டது.

இம்மாதிரிதான் உலகவர் எல்லாரும் ஆசா பாசத்தினால் கெடுகின்றார்கள். நீயும் உன்னுடைய தியான காலத்தில் பொருளுக்கும் புகழுக்கும் பிறவற்றிற்கும் விரும்புவாயானால் அவற்றிற் சிலவற்றைப் பெறக் கூடும். ஏன்? கடவுள் விரும்பியதை விரும்பியபடி கொடுக்கும் கல்ப தரு போன்றவர். எதை அடைய ஒருவன் விரும்புவானோ அத் தேவதரு அதனைக் கொடுக்கும். நீ விரும்பியதைப் பெற்று இன்புற்றிருக்கும்போது 'புலி வந்துவிட்டால்' என்ற மாதிரி, ஒரு பெரிய பயம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும். அந்தப் புலி—நோய், பிணி, சாக்காடு, பொருள், புகழ்போன்ற குறைவுபாடாய், புலியினால் வரும் துன்பத்தினும் பார்க்கப் பன்மடங்கு பெரும் பயங்கரமானதாய் இருக்கும்.

'ஆகவே தியானம், பக்தி, ஜபம், சமயாசார ஒழுக்கம் முதலியவற்றால் ஒருவன் மனதினைத் தூய்மைப்படுத்திக் கொண்டு வரும்போது சிறிதுசிறிதாக உலக ஆசா பாசங்களை எல்லாம் விடவேண்டும்.'

1061. ஒருநாள் ஓரூரில் சாயங்காலச் சந்தை யொன்று கூடிற்று. சில செம்படவப் பெண்கள், தாம் கொண்டுவந்த மீனை அங்கு விற்று விட்டு வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர். முன்னிருட்டு வந்துவிட்டது. மழையோ பாட்டம் பாட்டமாகப் பெய்யத் தொடங்கியது. பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்! பக்கத்தில் பூக்கடைக்காரனுடைய குடிசை இருப்பதைப் பார்த்து அங்கு ஓடினர். அந்தப் பூக்கடைக்காரன் மிகவும் நல்லவன். அவன் அங்குவந்த அப்பெண்களின் பரிதாபகரமான நிலையினைக் கண்டு தனது வீட்டின் ஓர் அறையைக் காட்டி, வேண்டுமானால் அன்று தங்கவும் அதனை உதவினான். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏற்று அவ்வறைக்குள் சென்றனர். அந்த அறை கமகம வென்று நறுமணம் வீசியதைக் கண்டு, நாலு பக்கமும் பார்த்தார்கள். ஒரு மூலையில் சில பூக்கூடைகள் வைக்கப்பட்டு இருந்தன. அவை, வாடிக்கையாகக் கொடுக்கும் சிலருக்கு மறுநாள் காலையில் கொடுப்பதற்காகவே அங்கு வைக்கப்பட்டன. ஆனால் மீன் வாசனையோடு பழகியவர்களுக்கு நறுமணம் வீசும் வாசனை எப்படிப் பிடிக்கும்? அதுமட்டு மல்லாமல் ஒருகால் கண்மூடி முழிக்கவும் முடியாததாயிருந்தது. அவர்களுள் ஒரு புத்திசாலிப் பெண் மற்றவர்களைப் பார்த்து ஒரு யுக்தி சொன்னாள். 'நமக்குத் தூக்கமோ வருவதாய் இல்லை. இந்தப் பூக் கூடைகளை எடுத்து வேறிடத்து வைக்கவோ முடியாது. நம்மிடத்திலுள்ள மீன் கூடைகளைக் கொஞ்சம் நனைத்துப் பக்கத்தில் வைத்தால் அப்பூக் கூடைகளால் உண்டாகும் கஷ்டம் நீங்

கும்' என்றாள். யாவரும் அந்த யோசனையை ஏற்று அப்படிச் செய்தனர். உடனே எல்லாப் பெண்களும் குறட்டைவிட்டுத் தூங்கிவிட்டனர்.

பழக்க வாசனையின் பரம சக்தி இப்படிப்பட்டதுதான்! உலக ஆசாபாச எண்ணத்தோடும் வாழ்வோடும் கூடியவர் பரிசுத்த, பற்றற்ற தன்மைகளேயோ தலங்களேயோ நாடினால் அமைதிக்குறைவு சுகக் குறைவு முதலியவற்றோடு கூடியவர்களாய்த்தானே இருப்பார்கள்.

1062. வழியோரத்தில் ஒரு சாது ஒருமுறை சமாதியில் ஆழ்ந்து கிடந்தார். ஒரு திருடன் அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும் போது அந்தச் சாதுவைக் கண்டான். 'ஓகோ! இங்கு படுத்துக் கிடப்பவனும் திருடன்போலக் காணப்படுகிறான். இன்று இரவு அவன் சில வீடுகளில் திருடிவிட்டு வந்து, களைப்பினால் இங்கு தூங்குகின்றான் போலும். போலீசார் இவனைக் கைது செய்ய இதோ வந்துவிடுவார்கள். காலந் தாழ்க்காது நான் ஓடி மறைவேன்' என்று நினைத்துக் கொண்டு ஓடிப்போய்விட்டான். சில நேரத்துக்குள்ளாக ஒரு குடிகாரன் அங்கு வந்து சேர்ந்தான். சாதுவைப் பார்த்தான். 'ஓகோ! மூக்கு முட்டக் குடித்துவிட்டு இப்பள்ளத்துள் விழுந்து கிடக்கின்றாயோ? உன்னிலும் பார்க்க எனக்குச் சுயபுத்தி நிதானமாய் இருக்கிறது. நான் தள்ளாடி விழமாட்டேன்' என்று பிதற்றிக்கொண்டு போய்விட்டான். கடைசியாக ஒரு சாது அங்குவந்து அவரைப் பார்த்தார். யாரோ ஒரு பெரிய மகான் சமாதியில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டு, அவர் பக்கத்தில் உட்கார்ந்து மிருதுவாக அவர் மலரடிகளை வருடத் தொடங்கினார். (நமது உலக வாசனைகள் அல்லவோ உண்மையான பய பக்தி தூய்மைகளைத் தெரிய விடாது மூடுகின்றன.)

1063. கௌரங்க சுவாமியின் ஜீவிய சரித்திரத்திலிருந்து புரோகிதர்களைப் பற்றிய கதை யொன்று குருதேவர் சொல்வதுண்டு. சமாதியிலிருந்த காலத்தில் கௌரங்க சுவாமி ஒரு சமயம் சமுத்திரத்தில் விழுந்துவிட்டார். செம்படவர்கள் அவரை வலைபோட்டு இழுத்துக் கரையேற்றினர். வலையின் மூலமாக கௌரங்க சுவாமியின் சரீரசம்பந்தத்தை இந்தச் செம்படவர்களும் பெற்றார்களாதலால், இவர்களுக்கும் ஒருவிதமான பரவசம் உண்டாயிற்று. ஆகவே அவர்கள் வேலைகளை அப்பாற் போட்டுவிட்டு ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு உன்மத்தர்களைப்போல அங்குமிங்கும் ஓடத் தலைப்பட்டனர். இவர்களைக் குணப்படுத்த முயன்ற பந்துவர்க்கங்கள் தங்களுடைய முயற்சிகள் பயனற்றுப் போனதைக் கண்டு கடைசியில் கௌரங்க சுவாமியிடம் வந்து தங்கள் துக்கத்தைச் சொல்லிக்கொண்டனர். 'ஒரு புரோகிதர் வீட்டிலிருந்து கொஞ்சம் சோறு கொணர்ந்து இவர்களுடைய வாயில் போடுங்கள்; இந்தப் பரவச நிலை போய்விடும்' என்று கௌரங்க சுவாமிகள் உபாயம் சொல்லித் தந்தார். சுற்றத்தார் அப்படியே செய்யச் செம்படவர்களுக்கிருந்த பக்தி பரவசம் நீங்கிவிட்டது.

1064. ஒரு பணக்காரன் தன்னுடைய சொத்துக்களை யெல்லாம் ஒரு காரியஸ்தனிடம் ஒப்புவித்திருந்தான். இந்தச் சொத்துக்கள் யாருடையவை என்று வேறு யாரேனும் கேட்டால் அந்தக் காரியஸ்தன், “இவையெல்லாம் என்னுடையவை. இந்தத் தோட்டம் வீடு முதலியவை எல்லாம் என்னைச் சேர்ந்தவை,” என்று வீண் கர்வம் பேசிக்கொண்டு திரிவது வழக்கம். அந்தப் பணக்காரன் ஒரு குளத்தில் யாரும் மீன் பிடிக்கக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவிட்டிருந்தான். இந்த உத்தரவை மீறிக் காரியஸ்தன் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது எஜமானனே நேரில்வந்து பார்த்துவிட்டான். தனது காரியஸ்தனுடைய அயோக்கியத்தனத்தைக் கண்ட எஜமானன், அவனை வீட்டைவிட்டுத் துரத்தியதன்றி, அவமானப்படுத்தி, அவன் சேர்த்துவைத்திருந்த பணத்தையும் எடுத்துக்கொண்டுவிட்டான். சொத்து முழுமையும் தன்னுடையதென்று பெருமை பேசிக்கொண்ட காரியஸ்தனுக்குத் தனக்குச் சொந்தமான சொம்பு தவலைகள் அடங்கியிருந்த ஓரே ஓட்டைப்பெட்டியைக்கூட எடுத்துப்போக வழியில்லாது போயிற்று. வீண் கர்வத்தினால் வரும் பயன் இதுதான்.

1065. ஒரு யக்ஷன் வாழ்ந்துவந்த மரத்தின்கீழ் ஓர் அம்பட்டன் செல்லும்போது, “உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா?” என்ற ஒரு குரலைக் கேட்டான். அம்பட்டன் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. என்றாலும், ‘ஏழு ஜாடி தங்கம்’ என்றதனால் பேராசை கொண்ட அம்பட்டன், “எனக்கு வேண்டும்,” என்று பதில் சொன்னான். “நீ வீட்டுக்குப்போ; நான் ஜாடிகளை அங்குக் கொண்டுபோய் வைத்துவிட்டேன்” என்ற பதில் குரல் உடனே தொனித்தது. இதைப் பரிசோதிக்க எண்ணிய அம்பட்டன் குடல் தெறிக்க வீட்டுக்கு ஓடினான். உள் நுழைந்ததும் அவன் முன்னர் ஏழு ஜாடிகள் இருக்கக் கண்டான். அவைகளைத் திறந்து பார்க்க, ஆறு ஜாடிகளில் தங்கம் நிறைந்தும் ஏழாவது ஜாடியில் தங்கம் பாதியளவுமாக இருக்கக்கண்டான். குறைவாக விருக்கும் இந்த ஜாடியையும் நிரப்பிவிடவேண்டுமென்ற ஆசை அம்பட்டனுக்கு உண்டாயிற்று. இல்லாவிட்டால் அவன் அடையும் சுகம் பூரணமானதாகாது என்று எண்ணினான். ஆகவே தன்னிடமிருந்த பொன் வெள்ளி நகைகளையெல்லாம் விற்றுப் பவுனாக்கி அந்த ஜாடியில் போட்டான். என்றாலும் அந்த மாய ஜாடி முன்போலவே அரைகுறையாக இருந்தது. பிறகு அவன் தன்னையும் குடும்பத்தையும் பட்டினி போட்டுச் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் ஜாடியிலேயே போட்டான். அப்படிச் செய்தும் ஜாடி நிறையவில்லை. அப்பால் அவன் தான் சேவித்துவந்த அரசனிடம் சென்று, தன் சம்பளம் காலக்ஷேபத்துக்குப் போதாமலிருக்கிறபடியால் அதை இருமடங்கு அதிகமாக்கும்படிக் கேட்டுக்கொண்டான். அரசனுக்கு இவனிடம் தயவு இருந்தபடியால் கோரிய எண்ணம் நிறைவேறிற்று. அம்பட்டன் இந்த அதிகச் சம்பளத்தையும் செலவு செய்யாமல் ஜாடியில் போட்டுவந்தான். அப்போதும் ஜாடி பூர்த்தியாகவில்லை. பிறகு, அவன் வேலை

யில்லாத காலத்தில், பிச்சை யெடுத்து, அதனாற் கிடைத்த பொருளையும், வேலையினாற் கிடைத்த சம்பளத்தையும் பொன்னாக்கி ஜாடியில் போட்டான். என்றாலும் மாய ஜாடி நிரம்பவில்லை! இப்படி அநேக மாதங்கள் கழிந்தன. அம்பட்டனுடைய நிலைமை வரவரப் பரிதாபகரமாயிற்று. ஒருநாள் அரசன் அம்பட்டனுடைய ஸ்திதியைக் கண்டு, "அடே, இப்போது உனக்குக் கிடைக்கிற சம்பளத்தில் பாதி கிடைத்த போது நீ சந்தோஷமாயும் திருப்தியாயும் இருந்தாய். இப்போது அதை விட இருமடங்கு அதிகமான சம்பளம் வரும்போது நீ ஏன் மங்கிய முகத்துடன் கவலையும் விசாரமும் கொண்டவனாக இருக்கிறாய்! ஏழு ஜாடித் தங்கத்தை வாங்கிக்கொண்டாயோ ?" என்று கேட்டான். அம்பட்டன் ஆச்சரியப்பட்டு, "மகாராஜாவே! சந்நிதானத்துக்கு இந்தச் சங்கதியை யார் தெரிவித்தார்கள் ?" என்றான். அதற்கு அரசன், "எவனிடம் யக்ஷனுடைய செல்வம் வந்திருக்கிறதோ அவன் இப்படிப் பட்ட நிலைமைக்கு வருவான் என்று தெரியாதா? அவன் இந்த ஏழு ஜாடிகளையும் எனக்குக் கொடுப்பதாகச் சொன்னான். அது 'வரவுப் பணமா, செலவுப் பணமா ?' அதாவது அந்தப் பணத்தைச் செலவு செய்யவேண்டியதா, புதைத்து வைக்கவேண்டியதா என்று அவனைக் கேட்டேன் ; கேட்டதும் யக்ஷன் பதில் சொல்லாமல் ஓடிவிட்டான் ; அந்தப் பணத்தை ஒருவராலும் செலவழிக்க முடியாதென்பதை நீ அறியாயோ ? அது இன்னும் சேர்த்துவைக்க வேண்டுமென்னும் ஆசையைத்தான் தரும். உடனே போய்ப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடு," என்றான். அம்பட்டனுக்குப் புத்தி வந்தது. அவன் யக்ஷன் வாழும் மரத்தடிக்குச் சென்று, 'உன் பணத்தை வாங்கிக்கொள்' என்றான். 'நல்லது' என்று யக்ஷன் பதில் சொன்னான். அம்பட்டன் வீட்டுக்குத் திரும்பி வந்ததும், மாயமாய் வந்த ஜாடிகள் ஏழும் மாயமாகவே போய்விட்டதையும் அவைகளுடன் அவன் ஆயுளளவும் கஷ்டப்பட்டுத் தேடிய செல்வமுழுதும் போய்விட்டதையும் கண்டான். ஈசுவர ராஜ்யத்திலும் சிலருடைய நிலைமை இப்படிப்பட்டதாகவே இருக்கிறது. உண்மையான வரவுக்கும் உண்மையான செலவுக்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ளாதவர்கள் தாங்கள் பெற்றுள்ளனவற்றை யெல்லாம் இழந்துவிடுகின்றனர்.

1066. ஒரு வெள்ளாடு தன் தாயுடன் ஆனி மாதத்தில் வெகு உல்லாசமாகத் துள்ளி விளையாடிக்கொண் டிருக்கையில், தாயைப் பார்த்து, "ராஸலீலை என்னும் பண்டிகை காலத்தில் விசேஷமாய்ப் புஷ்பிக்கும் ராஸப் புஷ்பத்தை ஏராளமாகத் தின்று பண்டிகை கொண்டாடப் போகிறேன்," என்றது. அதற்கு அந்தத் தாய் ஆடு, "குழந்தாய்! நீ நினைக்கிறபடி அது அவ்வளவு சுலபமான காரியமன்று. ராஸப் புஷ்பத்தினால் பண்டிகை கொண்டாடுவதற்கு முன்னால் நீ அனேகம் கண்டங்களினின்றும் தப்பிப் பிழைக்கவேண்டி யிருக்கிறது. வருகிற புரட்டாசி ஐப்பசி மாதங்கள் உனக்குப் பொல்லாத காலம். துர்க்கா பூஜைக்கு உன்னை யாராவது பலி கொடுத்துவிடுவார்கள். அடுத்துக் காளி பூஜை வருகிறது. அதையும் தப்பினால், ஜகதாத்ரி பூஜை வரும். அப்போது

உயிர் தப்பியிருக்கும் எல்லா ஆடுகளையும் பலியிட்டுவிடுவார்கள். இந்தக் கண்டங்களுக்கெல்லாம் நீ தப்பிப் பிழைப்பாயானால், கார்த்திகை மாதத்தில் ராஸப் புஷ்பப் பண்டிகையை நீ கொண்டாடலாம்" என்று சொல்லிற்று. தாய் ஆடு சொன்னதைப்போல, நமது வாழ்வில் நேரிடக்கூடிய கண்டங்களை உணரவேண்டும்; இளமையில் மனத்தில் தோன்றும் எல்லாவித ஆசாபாசங்களும் பூர்த்தியாகக் கூடியவையென நினைத்திருக்கக் கூடாது.

பெண்ணாசைப் பிணிப்பு

1067. கிருகஸ்தாசிரமத்தில் இருந்தபோதிலும் உலகப் பற்றுக்குள் அகப்பட்டுக்கொள்ளாமல் இருக்கக்கூடும் என்று நவீன கல்வி கற்ற ஒரு கனவான் பரமஹம்ஸருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது பகவான் அந்தக் கனவானைப் பார்த்து, "உலகப் பற்றில் அகப்பட்டுக் கொள்ளாத கிருஹஸ்தன் எப்படிப்பட்டவன் என்பது உனக்குத் தெரியுமா? யாசகத்தை விரும்பிய ஓர் ஏழையானவன் அவனிடம் வந்து ஏதாவது கேட்டால், 'அப்பா, நான் பணத்தைத் தொடுகிறதில்லை. என்னிடத்தில் யாசகங் கேட்டுக்கொண்டு நீ காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம்' என்பான்! ஏனெனில், பண வியாபாரங்களில் அவனுக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது. எல்லாம் எஜமானியம்மாள் கையை எதிர்பார்த்தே ஆகவேண்டியிருக்கும். யாசகத்துக்கு வந்த பிராம்மணன் பிடிவாதமாக நின்றுகொண்டிருந்தால், அதைக் கண்டு இரக்கங் கொண்ட கிருஹஸ்தன், அவனுக்கு ஏதாவது கொடுத்துப் போகச் சொல்லலாமென நிச்சயித்துக்கொண்டு, 'நல்லது, அப்பா! நாளைக்கு வா. ஏதாவது தருகிறேன்,' என்கிறான். அப்பால் அவன் உள்ளே சென்று தன் மனைவியை நோக்கி, 'ப்ரியே! ஓர் ஏழைப் பிராம்மணன் மிகவும் கஷ்டப்படுகிறான். அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாம்,' என்கிறான். ரூபாய் என்ற வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் கோபங்கொண்ட அவன் மனைவி, 'நீங்கள் வெகு தர்மவான்தான்! கல்லையும் மண்ணையும் போல யோசனையில்லாமல் எடுத்தெறியப்படும் வஸ்துவா ரூபாயும்?' என்கிறாள். கிருஹஸ்தன் மறுபடியும் சற்று மன்றாடி, 'ப்ரியே! அவன் பரம ஏழை; ஒரு ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்கக்கூடாது,' என்று சொன்னவளவில், அவன் மனைவி, 'அவ்வளவு என் கையிலில்லை; இதோ இரண்டணா இருக்கிறது. வேண்டுமானால் கொண்டுபோய்க் கொடுங்கள்,' என்கிறாள். கிருஹஸ்தனுக்கு உலகப்பற்றே இல்லாதபடியால் தன்னிஷ்டப்படி செய்யமுடியாமல், தன் மனைவி சொற்படி நடக்கவேண்டியவனாகிறான்! ஆகவே அடுத்தநாள் ஏழைப் பிராம்மணனுக்கு இரண்டணாத்தான் கிடைக்கிறது. உலகப் பற்றற்றவர்களெனச் சொல்லப்படும் கிருஹஸ்தர்கள் கேவலம் பெண்டாட்டிகள் சொல்கிறபடி கூத்தாடுகிறவர்களேயாவர். குடும்ப விஷயத்தில் அவர்களுக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது. இருந்தபோதிலும் அவர்கள் மகான்களென்றும் மிக நல்லவர்களெனவும் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். வாஸ்தவத்தில் இந்த இரண்டு தன்மைகளும் அவர்களிடம் இல்லை," என்றார்.

1068. முற்காலத்தில், ஜயபுரியி லிருக்கும் கோவிந்தஜீயின் கோவிலிலுள்ள அர்ச்சகர்கள் கல்யாணம் பண்ணிக்கொள்வதில்லை. ஆகவே அவர்கள் ஆத்ம சக்தியால் வெகு பலம் படைத்தவர்களாக இருந்தனர். ஒரு சமயம் அவ்வூர் அரசன் அவர்களைத் தன்னிடம் வரும்படிச் சொல்லி யனுப்பினன். அவர்கள் போகாமல், 'அரசனைத் தான் எங்களிடம் வரச்சொல்லுங்கள்,' என்று பதில் அனுப்பினர். அப்பால், அவர்கள் கல்யாணம் பண்ணிக்கொண்டனர். அதன்பின் அர்ச்சகர்களை அரண்மனைக்கு வரவழைக்கவேண்டிய அவசியம் அரசனுக்கு இல்லாதுபோயிற்று. ஏனெனில், அவர்கள் தாமாகவே அரசனிடம் வந்து, "மகாராஜ்! நாங்கள் ஆசிர்வாதம் செய்ய வந்திருக்கிறோம். சுவாமிக்குச் சாத்திய புஷ்பங்களைக் கொணர்ந்திருக்கிறோம். அங்கீகரிக்கவேண்டும்," என்று சொல்லவாரம்பித்தனர். இவர்களுக்கு அப்படிப்பட்ட அவசியம் நேர்ந்துவிட்டது, பாவம்! அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்? ஒருநாளைக்கு வீடுகட்ட வேண்டியிருந்தது; இன்னொருநாள் குழந்தைக்கு அன்னப் பிராசனம் செய்யவேண்டியிருந்தது; வேறொருநாள் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணவேண்டியிருந்தது. இப்படியாக அவர்களுக்கு இடைவிடாத பண முட்டுப்பாடு உண்டாயிற்று. இதனல் ராஜஸபைக்குப் போகவேண்டிய அவசியம் நேர்ந்தது.

பிறர்க்கு அடிமையாக வேலை செய்வதன் பயனை நீங்களே நன்கு உணர்வீர்கள். ஆங்கிலமும் மேனாட்டுப் பயிற்சியும் பெற்ற வாலிபர்களில் அநேகர் பிறர்க்கு அடிமைவேலைசெய்து தங்கள் எஜமானர்கள் கொடுக்கும் உதைகளை வாய்பேசாது பெற்று அநுபவிக்கின்றார்கள். என் இவ்வளவு அவமதிப்புக்கெல்லாம் அவர்கள் உட்பட்டிருக்கின்றார்கள் என்பது தெரியுமா? இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது பொதுப்படப் பெண்ணாசையே யாகும்.

1069. ஓர் ஏழைப் பிராம்மணன் வேலை கிடைக்காமல் மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் அடிக்கடி ஒரு கச்சேரி மானேஜரிடம் சென்று வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டான். "இன்றைக்கு இல்லை, நாளைக்கு வா," "பின்பொரு சமயம் வா," என்ற பதில்கள்தான் இவனுக்குக் கிடைத்தன. இப்படி நெடுநாள் சென்றது. ஒருநாள் இவன் தன்னுடைய கஷ்டங்களைத் தன் துணைவன் ஒருவனிடம் சொன்னன். அந்த நண்பன், 'என்ன அசட்டுத்தனமான காரியம் செய்துவிட்டாய்? அவனிடம் அடிக்கடி சென்று உன் கால் தேய்ந்துபோகும்படி செய்துகொள்வானேன்? ரோஜாமணியிடம் போ. அவளை நயந்து கேள். உனக்கு நாளைக் காலையிலேயே வேலை கிடைக்கும் பார்,' என்றான். ஏழைப் பிராம்மணனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. 'வாஸ்தவந்தானா? இப்போதே அவளிடம் செல்கிறேன்,' என்று சொல்லிக்கொண்டு அவளிடம் போனன். இந்த ரோஜாமணி முன் கூறிய கச்சேரி மானேஜரின் வைப்பாட்டி. ஏழைப் பிராம்மணன் அவளிடம் சென்று, "தாயே! நான் மிகுந்த கஷ்டப்படுகிறேன். உன்னைத் தவிர வேறு கதி எனக்குக் கிடையாது. நான் பிராம்மணன்; சம்பாதிக்க வேறு வழி இல்லை. அம்மணி! வேலை இல்லாமல் நெடுநாளாகக் கஷ்டப்

படுகிறேன். மனைவி மக்கள் பட்டினியாய்க் கிடக்கிறார்கள். நீ ஒரு வார்த்தை சொன்னால் எனக்கு உத்தியோகம் கிடைக்காமல் போகுமோ," என்றான். பிராம்மணன் கஷ்டப்படுவதைக் கண்டு அவளுக்கு இரக்கம் உண்டாயிற்று. ஆகவே "யாரிடம் சிபார்சு செய்ய வேண்டும்?" என்று அவள் கேட்டாள். "தாயே! கச்சேரி மானேஜரிடம் ஒரு வார்த்தை சொன்னால் எனக்கு உத்யோகம் கிடைப்பது நிச்சயம்," என்றான் பிராம்மணன். ரோஜாமணி அன்றைய இரவே கச்சேரி மானேஜரிடம் சொல்லி வாங்கித் தருவதாக வாக்களித்தாள். ஆச்சரியம்! மறுநாட் காலையில் மானேஜருடைய சேவகன், பிராம்மணனைக் கச்சேரிக்குக் கூட்டிப்போக வந்தான். "இவன் தகுந்த யோக்யதை உடையவன். இவனை வேலைக்கு வைத்துக்கொள்வதால், நமது கச்சேரிக்கு நன்மையுண்டாகுமென்று எண்ணி இவனுக்கு ஓர் உத்தியோகம் கொடுத்திருக்கிறேன்" என்று மானேஜர் தன் மேலதிகாரிக்குச் சிபார்சு செய்து எழுதினான். புருஷர்களுக்கு ஸ்திரீகள்மீது உண்டாகும் பாசத்தின் மகிமை இப்படிப்பட்டது! உலக முழுவதும் பெண்ணாசையிலேயே மயங்கிக் கிடக்கின்றது.

1070. ஓர் ஏழைப் பிராம்மணனுக்குச் செல்வவானான ஜவுளி வர்த்தகன் ஒருவன் சிஷ்யனாக இருந்தான். அவ் வர்த்தகன் பரம லோபி. ஒருநாள் அந்தப் பிராம்மணன் தனது பாகவத புஸ்தகத்துக்கு உறைபோடுவதற்காக, ஒருசிறு வஸ்திரத்துண்டு வேண்டுமென்று தனது சிஷ்யனிடம் சென்று கேட்டான். வர்த்தகனோ "ஸ்வாமி! தங்களுக்கு இல்லை யென்று சொல்வதற்கு மனம் வருந்துகிறேன். சற்று முன்னால் சொல்லியிருந்தீர்களே யானால் தாங்கள் கேட்டதைக் கொடுத்திருப்பேன். இப்போது என் கைவசம் சிறிய துண்டு ஒன்றும் இல்லையே. என்றாலும், தாங்கள் கேட்டது எனக்கு ஞாபகமிருக்கும். ஆனால், அடிக்கடி மாத்திரம் நினைப்பூட்டுங்கள்" என்று பதில் சொல்லியனுப்பினான். பிராம்மணன் வெறுங் கையனாக வீட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த இச் சம்பாஷணையை அச்சிஷ்யனுடைய மனைவி பின்னால் இருந்து கேட்டாள். அவள் உடனே ஒரு மனிதனைப் பின்பக்கமாக அனுப்பி பிராம்மணனை அழைத்துவரச் செய்து, அவருடன் உள்ளே சென்று, "சுவாமி! என் கணவரிடம் தாங்கள் கேட்டது என்னவோ?" என்று கேட்டாள். நடந்ததைச் சொன்னான் பிராம்மணன். வர்த்தகனுடைய மனைவி, "சுவாமி! தாங்கள் வீட்டுக்குச் செல்லலாம். நாளைக் காலையில் விரும்பிய வஸ்திரம் அங்குவந்து சேரும்" என்று சொல்லி யனுப்பினாள். அன்றிரவு வியாபாரி வீட்டுக்கு வந்ததும், அவன் மனைவி 'இன்றைக்குக் கடை மூடியாய்விட்டதா?' என்று கேட்டாள். "மூடியாய்விட்டது, விசேஷம் என்ன?" என்றான் வர்த்தகன். அதற்கு அவள், "உடனே கடைக்குப்போய் அங்கிருக்கும் விலையுயர்ந்த வஸ்திரங்களில் இரண்டை எடுத்து வாருங்கள்" என்றாள். "என்ன அவசரம்? நாளைக் காலையில் எடுத்துவந்து தருகிறேன்" என்றான் வர்த்தகன். "இல்லை, எனக்கு இப்போதே வேண்டும். இல்லாவிட்டால் வேண்டவே வேண்

டாம்" என்றாள் அவன் மனைவி. வர்த்தகன் என்ன செய்வான்? பாவம்! வீண் சாக்குப்போக்குகளைச் சொல்லிப் போகச்சொல்லக்கூடிய ஆத்ம குரு அல்லள் இவள். உடனே கீழ்ப்படியவேண்டிய 'தலையணை மந்திர குரு' ஆவாள். சொன்னதைக் கேட்காவிட்டால், அன்றை இராப்போது பெரும்பாடாக முடியும் என்பதை யுணர்ந்த வர்த்தகன், அந்த நிசியில், மறுபடியும் கடைக்குப்போய், திறந்து, மனைவி கேட்ட வஸ்திரங்களுடன் திரும்பிவந்தான். மறுநாட்காலையில் அவள் அவ் வஸ்திரங்களைக் குருவுக்கு அனுப்பும்போது, "இனிமேல் தங்களுக்கு ஏதேனும் தேவையாக இருந்தால், எனக்குத் தெரிவித்தால், நான் கொடுத்தனுப்புவேன்," என்று சொல்லும்படிக்குச் சொல்லியனுப்பினாள். ஆதலால், ஜகத் பிதாவான ஸர்வேசுவரனைப் பிரார்த்தித்துக் கேட்ப தைக் காட்டிலும் தயாள தன்மையுடைய ஜகன்மாதாவைப் பிரார்த்தித் துக் கேட்டால் விரும்பியதைப் பெறுவது எளிது.

1071. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது பத்னியுடன் கிருகஸ்தாசிரமத்தில் இருந்து குடும்ப வாழ்க்கையைக் கைக்கொள்ளாத தற்குக் காரணமென்ன என்பதை ஒருவர் கேட்டார். அதற்குப் பக வான் பின்வருமாறு பதில் சொன்னார் :—

ஒரு நாள் கார்த்திகேய பகவான் தம் நகத்தால் ஒரு பூனையைக் கீறிவிட்டு அன்னையிடம் திரும்பினார். தமது அன்னையின் கன்னத்தில் விரலாற் கீறிய அடையாளம் ஒன்று இருப்பதைக் கண்டார். கண்டதும், 'தாயே! உனது கன்னத்தில் இந்த வடு எப்படி உண்டாயிற்று?' என்று கேட்டார். ஜகன்மாதாவானவள், 'குழந்தாய்! இது உன் கைங்கரியம் தான்; உனது கைநகத்தின் வேலையே' என்றாள். கார்த்திகேயர் திடுக் கிட்டு 'எப்படி யம்மா! நான் உன்னை ஒருபோதும் கீறியதில்லையே' என்றார்.

"குழந்தாய்! இன்று காலையில் நீ ஒரு பூனையைக் கீறியதை மறந்து போய்விட்டனையா?"

"ஆமாம்; கீறினேன். ஆனால் உன்னுடைய கன்னத்தில் வடு ஏற் பட்டதன் காரணமென்ன?"

"குழந்தாய்! உலகத்தில் உள்ள ஸர்வ ஜீவராசிகளிலும் நான் இருக்கிறேன். ஸகல சிருஷ்டியும் நான்தான். ஆதலால், நீ யாரை வருத்தினாலும் அது என்னை வருத்துவதாக விருக்கும்."

இதைக் கேட்டதும் கார்த்திகேயருக்கு அதிக ஆச்சரியமுண்டா யிற்று. மேலும், அவர் ஒருவரையும் கல்யாணம் பண்ணிக்கொள்வ தில்லையென நிச்சயித்தார். ஏனெனில், அவர் யாரைக் கல்யாணம் செய்துகொள்வது? ஒவ்வொரு ஸ்திரீயும் அவருக்குத் தாய் அல்லவா? ஆதலால், அவர் கல்யாணம் செய்துகொள்ளவில்லை. *நான் கார்த்திகேய

*வடநாட்டில் கார்த்திகேயர் எப்போதும் பிரம்மசாரியாகவே இருக்கின்றார் என்ற கொள்கையை மக்கள் கொண்டிருக்கின்றார்கள்.

ரைப் போன்றிருக்கிறேன். ஒவ்வொரு ஸ்திரீயும் எனக்குத் திவ்ய மாதாவாகவே தோன்றுகின்றனர்.

புண்ணிய பாவத்தின் உயர்வு தாழ்வு மனத்தின் நிலையைப் பொறுத்தது

1072. மனிதனுடைய புண்ணிய பாவங்கள் அவனது மனோ நிலைமையினையும் எண்ணங்களையும் அண்டி இருக்கின்றன. அவை அவன் உள்ளத்திலிருந்து உண்டாவனவேயன்றி வெளிக் கருமங்களால் அல்ல. இரண்டு நண்பர்கள் கூடிப்போகையில் ஸ்ரீமத் பாகவதம் வாசிக்கப்படும் இடத்தை யடைந்தனர். அவர்களில் ஒருவன், "நண்பா! இங்கே சற்றுத் தாமதித்து இந்த ஸத் விஷயத்தைக் கேட்கலாமே!" என்றான். மற்றவன், "பாகவதத்தைக் கேட்பதினால் என்ன சுகம்? தாஸி வீட்டில் போய் இன்பமாகக் காலம் கழிக்கலாம் வா" என்றான். முன்னவன் இதற்கு இணங்கவில்லை. ஆதலால் அவன் பாகவதம் படிக்கப்படும் இடத்தில் உட்கார்ந்து கதை கேட்டுக்கொண்டிருந்தான். மற்றவனோ, தாஸி வீட்டுக்குப் போனான். என்றாலும் அவனுக்கு அங்கு இன்பமோ ஏற்படவில்லை. "அடா! என்ன செய்துவிட்டேன்! இங்கு வந்தது எதற்காக? எனது நண்பனோ ஹரியின் திவ்ய சரித்திரத்தைக் கேட்டுக்கொண்டல்லவோ, மகிழ்ந்திருப்பான்" என்று நினைத்துக் கொண்டு, அத்தாஸி வீட்டிலிருந்தபோதிலும் ஹரியைப்பற்றியே நினைத்திருந்தான். பாகவதத்தைக் கேட்க உட்கார்ந்தவனுக்கும் இன்பம் உண்டாகவில்லை. "என் நண்பனோடு தாஸி வீட்டிற்குப் போயிருந்தால் அவனைப்போல நானும் இன்ப நுகர்ச்சி பெற்றிருக்கலாமே" என்று நினைத்துக்கொண்டிருந்தான். ஆகவே, இவன் பாகவத படனம் செய்யும் இடத்தில் இருந்தபோதிலும், அதைக் கேட்காமல் தாஸி வீட்டைப் பற்றிய சிந்தனை யுள்ளவனாக இருந்தபடியால், அங்கு நேரில் போகாது போனாலும், வாஸ்தவத்தில் போவதால் பெறக்கூடிய பாபத்தை அடைந்தான். தாஸி வீட்டிற்குச் சென்றவன் பாகவத படனத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபடியால், அவனுக்கு அந்தக் கெட்ட இடத்திலும்கூடப் புண்ணியமே கூடிற்று.

1073. ஒரு ஸந்யாஸி ஒரு கோவிலுக்குப் பக்கத்தில் வசித்து வந்தார். அவருடைய இருப்பிடத்துக்கு எதிரில் ஒரு தாஸியின் வீடு இருந்தது. அந்த வேசியின் வீட்டில், சதா சர்வ காலமும் புருஷர்கள் கூடியிருப்பதைக் கண்ட அந்த ஸந்யாஸி, ஒருநாள் அவளைக் கூப்பிட்டு, "நீ ஒரு பெரும் பாவியாகி விட்டாய். இரவும் பகலும் நீ பாவம் செய்துகொண்டே இருக்கிறாய். உன் கதி என்னவாகுமோ!" என்று கண்டித்தார். தான் செய்த பாவத் தொழில்களுக்குப் பெரிதும் வருந்தி தாஸி, வெகுவாக வருத்தப்பட்டுத் தன்னை மன்னித்தருள வேண்டுமென்று உள்ளன்போடு ஈசுவரனை நோக்கிப் பிரார்த்தித்தாள். வேசைத்தனமே அவளுடைய குலத் தொழிலாகையால் வேறுவகையால் அவளுக்

குக் காலக்ஷேபம் செய்ய முடியவில்லை. ஆயினும், வயிற்றுப் பிழைப்புக்காக சரீரத்தை விற்றபோதெல்லாம் அவள் உள்ளங் குழைந்து மன்னிப்பு வேண்டி ஈசுவர ஸ்துதி செய்வது வழக்கம். ஸந்யாஸியோ, தான் சொன்னதைத் தாசி கேட்கவில்லையென்று எண்ணி, இவளுடைய ஆயுட் காலத்துக்குள் எத்தனை பேர் இவளிடம் வருகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டு, அன்றுமுதல் அவளைக் கவனிப்பதிலேயே கருத்தாயிருந்தார். யாரேனும் ஒருவர் அந்த வேசியின் வீட்டுக்குள் நுழைந்தால், உடனே அந்த ஸந்யாஸி ஒரு கூழாங்கல்லை எடுத்துப்போட்டு எண்ணிக்கொள்வார். இப்படிப் போட்ட கற்கள் பெரிய குவியலாகக் குவிந்தன. ஒருநாள் அந்த ஸந்யாஸி, இந்தக் கற்குவியலைத் தாசிக்குக் காட்டி, "பெண்ணே! இந்தக் குவியலைப் பார்த்தாயா? நான் எந்தக் காரியத்தைச் செய்யவேண்டாமென்று சொன்னேனோ, அந்தக் காரியத்தை நீ எத்தனைதரம் செய்திருக்கிறாய் என்பதை இந்தக் குவியலில் உள்ள கற்கள் ஒவ்வொன்றும் தெரிவிக்கும். இன்னும் சொல்லுகிறேன்; வீணாகக் கெட்டுப் போகாதே" என்றார். தனது பாபக் குவியலைக் கண்ட தாஸிக்கு நடுக்கமுண்டாயிற்று. ஆகவே அவள் கண்ணுங் கண்ணீருமாய் நின்று உள்ளம் வருந்தி, "ஈசுவரா! இந்தத் தீய செய்கையை இனி நான் செய்யாவண்ணம் என் உயிரைக் கொண்டுபோக மாட்டாயா?" என்று பிரார்த்தித்தாள். அந்தப் பிரார்த்தனையின்படியே அவள் உயிரை எமன் அன்றிரவே கொண்டுபோனான். ஈசுவரனுடைய இச்சையை என்னென்று சொல்வது! அதே நாளில் அந்த ஸந்யாஸியும் இறந்து போனார். வைகுண்டத்திலிருந்து விஷ்ணு தூதர்கள் வந்து அந்தத் தாஸியின் உயிரைச் சுவர்க்கத்துக்குக் கொண்டுபோக, எம படர்கள் வந்து நரகத்துக்குக் கொண்டுபோவதற்காக, அந்த ஸந்யாஸியின் உயிரைக் கட்டிப் பிடித்தனர். தாஸியின் நற்கதியை நோக்கிய ஸந்யாஸி, "இதுதானா ஈசுவரனுடைய நீதி? ஆயுள் முழுவதும் தவம் செய்த என்னை நரகத்துக்கும், தினந்தோறும் பாபம் செய்த தாஸியை மோக்ஷத்துக்கும் கொண்டுபோவது நியாயமா?" என்று கூறினார். விஷ்ணு தூதர்கள் இதைக் கேட்டு, "ஈசுவரனுடைய ஆக்ஞை எப்போதும் நியாயமானதாகவே இருக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதையே அனுபவிப்பாய். கௌரவத்தையும் புகழையும் பெறவேண்டி நீ வீண் படாடோபத்துடன் காலங் கழித்தாய். ஈசுவரன் உனக்கு அவற்றைக் கொடுத்தான். உனது மனம் ஒருபோதும் அந்தரங்கத்துடன் அவனை நாடினதில்லை. இந்த வேசையோ சரீரத்தால் பாபம் செய்தனள் என்றாலும், இரவும் பகலும் மனமார ஈசுவரனைத் துதித்து வந்தாள். பூலோகத்தில் உன் சரீரமும் அவள் சரீரமும் அடையும் மரியாதையைப் பார். நீ சரீரத்தால் பாபம் செய்ததில்லை. ஆகவே உனது சரீரத்தைப் புஷ்பங்களால் அலங்கரித்து ஆற்றில் இடுவதற்காக மேளதாளத்துடன் ஊர்கோலம் கொண்டு போகின்றனர். பாபம் செய்த இந்த வேசையின் உடலை இந்த க்ஷணத்தில் நாயும் நரியும் பிடுங்கித் தின்கின்றன. என்றாலும் அவள் சுத்தமான மனமுடையவளாதலால் சுவர்க்கத்திற்குப் போகிறாள். உன் மனம் எப்போதும் அவளுடைய பாபச்

செயல்களைப் பற்றியே சிந்தித்திருந்தபடியால் அசுத்தமாயிற்று ; ஆதலால் நீ அசுத்தாத்மாக்களிடம் போகிறாய். வாஸ்தவத்தில் நீதான் பதிதன். அவள் வேசையல்ல" என்று பதில் கூறினர்.

அறிவிலிகளின் அபாய வேதாந்தம்

1074. "உலகம் பிரம்ம மயம்" என்ற திவ்யமான அத்வைதக் கொள்கையை ஓர் அரசனுக்கு அவனுடைய குரு உபதேசம் செய்தார். இதனால் அரசன் வெகு சந்தோஷம் அடைந்தவனாகி, அரண்மனைக்குள்ளே சென்று தனது பட்ட மகிஷியை நோக்கி, "ராணிக்கும் ராணியின் வேலைக்காரிக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை, ஆதலால் இது முதல் வேலைக்காரியே ராணியாக இருக்க வேண்டியது" என்றான். இப்படி மதியீனமாகத் தனது நாயகன் சொன்னதைக் கேட்ட ராணி இடிவிழுந்தாற்போலப் பிரமித்துப் போனாள். உடனே அவள் குருவை வரவழைத்து, "ஸ்வாமி, தங்களுடைய உபதேசத்தினால் வந்த கெடுதியைப் பாருங்கள்" என்று நடந்த சமாசாரத்தைச் சொல்லி அழுதாள். குரு அவளைத் தேற்றி, "இன்றைய தினம் கலத்தில் அன்னம் பரிமாறும்போது ஒரு சட்டிச் சாணியையும் கூட வை" என்று சொல்லிப் போனார். போஜன சமயம் வந்ததும், அரசனும் குருவும் சாப்பிட உட்கார்ந்தனர்! அன்னத்தின் அருகில் சாணமும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட அரசனுக்கு அளவு கடந்த கோபம் வந்தது. இதைப் பார்த்த குரு வெகு சாந்தமாக, "ராஜனே! உனக்கு அத்வைத ஞானம் வெகுவாக உண்டே, சாணி வேறு அன்னம் வேறு என்ற வித்தியாசம் எப்படி உனக்கு வந்தது?" என்று கேட்டார். அரசனுக்கு இன்னும் கோபம் அதிகரித்தது. ஆகவே அவன், "அத்வைதி என்று பெருமை பேசிக்கொள்ளுகிற நீர்தாம் இந்தச் சாணியைச் சாப்பிடும் பார்ப்போம்!" என்றான். "நல்லது" என்று சொல்லிக்கொண்டு, குரு உடனே பன்றியாக மாறி, அத்யந்த சந்தோஷத்துடன் சாணியை விழுங்கிவிட்டு, மறுபடியும் மனித ரூபத்தை எடுத்துக்கொண்டார். அரசன் வெட்கப்பட்டுப் போனான். மறுபடியும் அவன் அதைப்போன்ற மதியீனமான பேச்சைத் தன் மனைவியிடம் பேசினதே இல்லை.

1075. ஒரு பிராம்மணன் புதிதாக ஒரு தோட்டம் உண்டாக்கி அதை இரவு பகலாய்க் காப்பாற்றி வந்தான். ஒருநாள் ஒரு பசு, அத்தோட்டத்துக்குள் நுழைந்து, அப்பிராம்மணன் வெகு அருமையாக வளர்த்துவந்த மாஞ்செடியை மேய்ந்தது. இதனால் கோபங்கொண்ட அப்பிராம்மணன், பசுவை வெகு பலமாய் அடிக்க, அது அடி பொறுக்க மாட்டாமல் இறந்து போய்விட்டது. பிராம்மணன் பசுவைக் கொன்றுவிட்டான் என்ற சமாசாரம் ஒரு நொடியில் ஊரெங்கும் பரவியது. பிராம்மணனோ, வேதாந்தியென்று வேஷம் போட்டவனாதலால், பசுவைக் கொன்ற குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல், "நான் பசுவைக் கொல்லவில்லை; என் கை கொன்றது. இந்திரன் கைக்கு அதிதேவதை. ஆகவே

பசுவைக் கொன்ற தோஷம் இந்திரனைச் சேர்ந்தது. என்னைச் சேர்ந்த தல்ல " என்று சொன்னான்.

தேவலோகத்திலுள்ள இந்திரன் இதைக் கேட்டு, ஒரு கிழப் பிராம்மண உருவத்துடன் அந்தத் தோட்டத்துச் சொந்தக்காரனிடம் வந்து, " சுவாமி இந்தத் தோட்டம் யாருடையது ? " என்று கேட்டான்.

பிராம்மணன் :—என்னுடையது.

இந்திரன் :—இது வெகு நேர்த்தியாக இருக்கிறது. உமது தோட்டக்காரன் கெட்டிக்காரன்போலும். இந்த மரங்கள் வெகு அழகாயும் வரிசையாயும் நடப்பட்டிருக்கின்றன.

பிராம்மணன் :—இதுவும் நான் செய்ததுதான். மரங்களெல்லாம் என்னுடைய ஏற்பாட்டின்படியேதான், எனது மேற்பார்வையில் என் உத்தரவின்பேரில் நடப்பட்டன.

இந்திரன் :—சரிதான் ; நிரம்பவும் அழகாக இருக்கிறது. இந்தப் பாதை யார் போட்டது ? வெகு நேர்த்தியாய்ப் போட்டு முடிக்கப்பட்டிருக்கிறது !

பிராம்மணன் :—இதுவும் என் வேலைதான்.

இதைக் கேட்ட இந்திரன், கூப்பிய கையினனாய், " சுவாமி ! இவையெல்லாம் உம்முடையன என்கிறீர் ; இந்தத் தோட்டத்தில் செய்யப்பட்டிருக்கும் வேலைகளுக்கெல்லாம் கீர்த்தி உமக்கு வரவேண்டுமென்கிறீர். ஆனால், பசுவைக் கொன்ற தோஷத்துக்கு மட்டும் ஏழை இந்திரனை உட்படுத்துவது நியாயமா ? " என்றான்.

1076. ஒரு பொந்தில் ஒரு பாம்பு வசித்து வந்தது. அவ்வழியாக யார் சென்றபோதிலும் அவர்களை அது கடித்து வந்ததாதலால் அப்பக்கம் ஒருவரும் போவதில்லை. ஒருநாள் சாது ஒருவர் அவ்வழியே போகும்போது, அவரைக் கடிக்க வேண்டுமென்று அப்பாம்பு அவரைப் பின்தொடர்ந்து ஓடிற்று. ஆனால் அவரைச் சமீபித்ததும் அவருடைய மஹிமையால் பாம்புக்கிருந்த மூர்க்கம் முழுவதும் போய்விட்டது. அந்த மஹான் பாம்பைப் பார்த்து " நண்பா ! என்னைக் கடிக்க நினைக்கிறாயா ? " என்று கேட்டார். பாம்பு வெட்கப்பட்டுப் பதில் சொல்லாமலிருந்தது. அதன்மேல் அந்த யோகி, " நண்பா, கேள். இனிமேல் ஒருவருக்கும் தீங்கு செய்யாதே " என்று சொல்லிப் போனார். அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகப் பாம்பு தலையை அசைத்தது. மஹான் போன பிறகு பாம்பு தன் புற்றில்புகுந்துகொண்டு அந்த க்ஷண முதல் யாருக்கும் தீங்கு செய்ய நினைக்காமல் வாழத் தொடங்கியது. இப்படியாகச் சில நாட்கள் கழிந்ததும் அவ்வூர் ஜனங்கள், இந்தப் பாம்புக்கு விஷமெல்லாம் போய்விட்டது ; இனி ஒருவரையும் கடிக்காது என்று நினைத்து அதைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். சிலர் அதன்மீது கற்களை எறிந்தார்கள் ; வேறு சிலர் இரக்கமின்றி அதன் வாலைப் பிடித்து இழுத்தார்கள். இவ்விதமாக அதற்கு நேர்ந்த உபத்திர

வத்துக்கு அளவேயில்லை. அதிருஷ்ட வசமாய் முன் வந்துபோன சாது அவ்வழியாய் மறுபடியும் வந்தார். அதன் உடம்பெல்லாம் புண்ணாகி மெலிந்திருப்பதைப் பார்த்தார். அப்படியானதன் காரணத்தை அறிய வேண்டி, "நடந்த சங்கதி என்ன?" என்று கேட்டார். "சுவாமி, தங்கள் உபதேசப்படி நான் இப்போது ஒருவருக்கும் தீங்கு செய்வதில்லை. அதன் பயன் இது. ஜனங்கள் இரக்கமில்லாமல் என்னைத் தொந்தரவு செய்கிறார்கள்" என்றது பாம்பு. யோகி இதைக் கேட்டு, புன்சிரிப்புக்கொண்டு, "நண்பா, யாரையும் கடிக்க வேண்டாம் என்று மட்டும் உனக்குச் சொன்னேன். ஒருவரையும் பயமுறுத்த வேண்டாம் என்று நான் சொல்லவில்லையே. நீ ஒருவரையும் கடிக்கவேண்டாம். ஆனால் பிறர் உன்னிடம் வந்து தொந்தரவு செய்யாதிருக்கும்படி நீ சீறிச் சப்தமிட்டுப் பயமுறுத்தி அவர்களை உன்னருகில் வராமலிருக்கும்படி செய்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார். அதுபோல, நீ உலகத்தில் வாழ்ந்திருக்கும் வரையில் பிறர் உன்னிடம் அச்சமும் மரியாதையும் கொள்ளும்படி நட. ஆனால், ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. பிறரால் உனக்குத் தீங்கு வராதபடியும் காத்துக்கொள்.

1077. "உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஈசுவர சொரூபங்களே" என்று ஒரு குரு தனது சீடனுக்கு உபதேசித்தார். சிஷ்யனோ இதன் வாஸ்தவமான அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமல் சொல்லர்த்தத்தை மட்டும் தெரிந்துகொண்டிருந்தான். ஒருநாள் அவன் தெருவழியாகப் போய்க்கொண்டிருக்கையில் எதிரே வந்த ஒரு யானையைக் கண்டான். யானையின் மீதிருந்த பாகன், "விலகு, விலகு" என்று கூவிக்கொண்டிருந்தான். 'நான் ஏன் விலகவேண்டும்? நானும் ஈசுவரன், இந்த யானையும் ஈசுவரன்; ஈசுவரன் ஈசுவரனுக்கு ஏன் பயப்படவேண்டும்?' என்று நினைத்துக்கொண்டு சிஷ்யன் விலகாமலிருந்துவிட்டான். பிறகு யானை சமீபித்து இந்தச் சிஷ்யனைத் துதிக்கையால் தூக்கி அப்பால் போட்டுச் சென்றது. அதனால் நேர்ந்த காயங்களுடன் அவன் குருவை அணுகி நடந்த சங்கதிகளைச் சொன்னான்: "எல்லாம் சரிதான்; நீயும் ஈசுவரன், அந்த யானையும் ஈசுவரனே. ஆனால் மேலேயிருந்த பாகனான ஈசுவரன் உன்னை எச்சரித்து வந்தானே. அதை ஏன் நீ கவனிக்கவில்லை?" என்று குரு கேட்டார்.

அறிவிலிகளின் மதப்பித்து

1078. மத வைராக்கியத்தில் கண்டாகர்ணனைப் போல இராதே. ஒருவன் சிவனை மட்டும் ஆராதித்து மற்றத் தெய்வங்களையெல்லாம் தூஷித்து வந்தான். ஒருநாள் அவனுக்குப் பரமசிவன் பிரத்யக்ஷமாய், "நீ மற்றத் தெய்வங்களைத் தூஷிக்கிற வரையில் உன்மீது எனக்குப் பிரியம் உண்டாகாது" என்றனர். ஆகவே அவன் மௌனமாக இருந்தான். சில நாட்களுக்குப் பிறகு மறுபடியும் ஒரு தினம் அவனுக்குப் பரமசிவன் பிரத்யக்ஷமானார். இப்போது அவர் ஹரிஹர ரூபத்தில் அதாவது ஒரு பாதி விஷ்ணுவாகவும் மற்றொரு பாதி சிவனாகவும்

தோன்றினர். இதைக் கண்டதும் அவனுக்குப் பாதி விருப்பும் பாதி வெறுப்பும் உண்டாயிற்று. சிவ ரூபமுள்ள பாகத்தில் நைவேத்தியங்களைச் சமர்ப்பித்து விஷ்ணு ரூபமுள்ள பாகத்துக்கு ஒன்றும் செய்யாதிருந்தான். அப்பால் பரமசிவன், "அடே, உனது வைராக்கியம் அசாத்தியமானது! எல்லாத் தேவ தேவிகளும் ஒரே பரம்பொருளின் தோற்றங்கள் என்பதை உனக்குத் தெளிவிக்கவேண்டியே நான் இந்த இரட்டை உருவத்தோடு தோன்றினேன். இதை நீ அறிந்துகொள்ளவில்லை. இந்தக் குற்றத்துக்காக நீ நெடுங்காலம் துன்பப்படக் கடவாய்" என்று சொல்லி மறைந்தனர். அம் மனிதன், அப்பால் ஒரு கிராமத்துக்குச் சென்று காலங்கழிக்கத் தொடங்கினன். அவன் பரம விஷ்ணுத் துவேஷியா யிருந்ததைக்கண்ட அக்கிராமத்துப் பிள்ளைகள் அவன் காதுகளில் விஷ்ணு நாமமே விழும்படிக் கூறி அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர். ஆகவே அவன் விஷ்ணு நாமங்கள் தன் காதில் விழாமலிருப்பதற்காக இரண்டு காதுகளிலும் இரண்டு மணிகளைத் தொங்கவிட்டுக்கொண்டு பையன்கள் விஷ்ணு நாமத்தைச் சொல்லும்போதெல்லாம் அந்தச் சத்தம் கேட்காமலிருக்கும்படி அம்மணிகளை ஆட்டிக்கொள்வான். இதனால் அவனுக்கு "கண்டா கர்ணன்" (மணி தொங்கும் காதுகள் உள்ளவன்) என்ற பெயர் வந்தது.

1079, நான்கு குருடர்கள் சேர்ந்து யானையொன்றைப் பார்க்கப் போனார்கள். அவர்களில் ஒருவன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்து, "யானை தூணைப்போ லிருக்கிறது" என்றான். இன்னொருவன் துதிக்கையைத் தொட்டுப் பார்த்து, "யானை உலக்கையைப்போ லிருக்கிறது" என்றான். மூன்றாமவன் யானையின் வயிற்றைத் தொட்டுப் பார்த்து, "யானை பெரிய ஜாடியைப்போ லிருக்கிறது" என்றான். நான்காமவன் அதன் காதைத் தொட்டுப் பார்த்து "யானை முறத்தைப் போலிருக்கிறது" என்றான். இப்படி இவர்கள் யானையின் உருவத்தைப் பற்றி வழக்காடிக்கொண்டிருக்கையில், அங்கு வந்த பிரயாணி ஒருவன், "நீங்கள் ஏன் சச்சரவு போடுகிறீர்கள்?" என்று கேட்டான். இவர்கள் அவனிடம் சங்கதிகளைச் சொல்லி, அப்பிரச்சனையைத் தீர்க்கும்படி கேட்டார்கள். அதற்கு அவன், "உங்களில் யாரும் யானையைப் பார்க்கவில்லை. யானை தூணைப்போல் இல்லை; அதன் கால்தான் தூணைப்போலிருக்கிறது. அது ஒரு ஜாடியைப்போலில்லை; அதன் வயிறே அப்படியிருக்கிறது. யானை ஒரு முறத்தைப்போலில்லை; அதன் காதுதான் அப்படி யிருக்கிறது. யானை ஓர் உலக்கையைப்போலில்லை; அதன் துதிக்கையே அப்படி யிருக்கிறது. இவைகள் எல்லாம் சேர்ந்ததோர் உருவமே யானை" என்று சொல்லிப்போனான். ஈசுவரனுடைய ஏதோ ஒரு வடிவத்தை மட்டும் கண்டவர்களும் இப்படியே சச்சரவு போடுகிறார்கள்.

1080. ஒரு கிணற்றில் ஒரு தவளை வெகு காலமாக வசித்து வந்தது. அது அங்கேயே பிறந்து வளர்ந்தபோதிலும் சின்னஞ்சிறு தவளையாகவே இருந்தது. ஒருநாள் சமுத்திரத்தில் வசித்த வேறொரு தவளை வந்து அந்தக் கிணற்றில் குதித்தது.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கிணற்றுத் தவளை கேட்டது.

"நான் சமுத்திரத்திலிருந்து வருகிறேன்" என்றது கடல் தவளை.

"சமுத்திரமா! அது எவ்வளவு பெரியது?" என்று கேட்டது கிணற்றுத் தவளை.

"அது வெகு பெரியது" என்று வந்த தவளை கூறிற்று.

கிணற்றுத் தவளை தன் காலை நீட்டி, "உன் சமுத்திரம் இவ்வளவு பெரியதாக இருக்குமா?" என்றது.

"அது இன்னும் பெரியது" என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளை அப்பால் கிணற்றின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குத் தாண்டிக் குதித்து, "உனது கடல் இவ்வளவு பெரியதாக இருக்குமா?" என்று கேட்டது.

"நண்பா, கிணற்றைக் கடலுக்கு எப்படி ஒப்பிட முடியும்?" என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளை, "எனது கிணற்றைக் காட்டிலும் பெரியது ஒன்றும் இருக்கமுடியாது. இதைக் காட்டிலும் பெரியது ஒன்று ஏது? இவன் பொய்யன்; இவனை வெருட்டிவிடவேண்டும்" என்று சொல்லிக் கொண்டது.

விரிந்த நோக்கம் இல்லாதவன் விஷயமும் இப்படிப் பட்டதே. அவன் தனது சிறிய கிணற்றில் உட்கார்ந்துகொண்டு முழு உலகமும் தனது கிணற்றினைக் காட்டிலும் பெரியதன்றென்று நினைக்கிறான்.

நன்னம்பிக்கை, பக்தி, சரணாகதி

1081. ஒரு வண்ணான், ஒரு பக்தனை வெகு கடுமையாக அடிக்கும்போது, பக்தன் "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தான். அப்போது, வைகுண்டத்தில் லக்ஷ்மி ஸமேதராய் வீற்றிருந்த ஸ்ரீமந் நாராயணனுடைய காதுகளில் இந்தச் சப்தம் விழுந்தது. அவர் எழுந்திருந்து பக்தனைக் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டு வந்தார். ஆனால் அவர் இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் திரும்பிவந்து ஆஸனத்தில் அமர்ந்தார். இதைக் கண்ட லக்ஷ்மிதேவி, "இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவரக் காரணம் என்ன?" என்று கேட்டாள். "நான் போகவேண்டிய அவசியம் இராது போயிற்று. பக்தனும் வண்ணானாகிவிட்டான். அவன் தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணித் தன்னை அடித்தவனைத் திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறான். ஆதலால் அங்கு நான் போகவேண்டிய அவசியம் இல்லை" என்று பதில் சொன்னார். முற்றிலும் சரணாகதி செய்தாலொழிய ஈசுவரன் உன்னைக் காப்பாற்றமாட்டான்.

1082. தனது கோபாலனைப்பற்றிய செய்தி ஒன்றும் அறியாது இருந்த யசோதை ஒருசமயம் ராதையினிடம் வந்து, "கோபால

னுடைய சமாசாரம் ஏதாவது தெரியுமா ?" என்று கேட்டாள். அத்தருணத்தில் ராதை பக்திபரவசப்பட் டிருந்தபடியால் யசோதை சொன்னது கேட்கவில்லை. தன் நினைவு வந்ததும், தனக்கு முன்னால் நந்தன் மனைவி உட்கார்ந்திருப்பதைக் கண்டு, ராதை அவளுக்குத் தெண்டனிட்டாள். பிறகு, அவள் அங்குவந்த காரியத்தை ராதை வினவ, கோபாலனைத் தேடி வந்ததாகச் சொன்ன யசோதையை நோக்கி, "அம்மா! உமது கண்களை மூடிக்கொண்டு கோபாலனுடைய உருவத்தைத் தியானித்தால் அவனைக் காண்பீர்" என்றாள். உடனே யசோதை கண்களை மூடிக்கொண்டாள். பிரேமஸ்வரூபியான ராதை தனது திவ்ய சக்தியை யசோதையினிடத்தில் செலுத்தியமாத்திரத்தில், யசோதை கோபாலனைப் பார்க்கக்கூடியவளானாள். அப்பால் அவள் ராதையைப் பார்த்து, "அம்மணி! நான் கண்ணை மூடிக்கொள்ளும்போதெல்லாம் எனது பிரியனான கோபாலனைக் காணும்படியான வரம் எனக்கு நீ தரவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

1083. ஸ்ரீ ராமச்சந்திரர் வனவாசம் பண்ணுகையில், ஒருநாள் தமது அம்பையும் வில்லையும் தரையில் நிறுத்திவிட்டு, தாகசாந்தி செய்துகொள்வதற்காகப் பம்பா ஸரஸ் என்ற தடாகத்தில் இறங்கினார். மேலே ஏறிவந்து பார்க்கையில் தமது வில், ஒரு தவளையை ஊடுருவிச் சென்றதன் காரணமாக அத்தவளை இரத்தத்தால் நனைந்திருப்பதைக் கண்டார். ஸ்ரீ ராமபிரான் இதற்குப் பெரிதும் வருந்தி, தவளையைப் பார்த்து, "ஏ தவளையே! நீ ஏதாவது சப்தம் செய்திருக்கக் கூடாதா? அப்போது நீ இருப்பதை நான் தெரிந்துகொண்டிருப்பேன். உனக்கு இந்த கதியும் நேர்ந்திராதே" என்றார். "ராமா! எனக்கு ஏதாவது ஆபத்து நேரும்போது, 'ராமா! என்னைக் காப்பாற்று' என்று நான் சொல்வேன். ஆனால் நீயே என்னைக் கொல்லும்போது, நான் யாரிடம் எனது குறையை முறையிட்டுப் பிரார்த்திக்கிறது?" என்று தவளை பதில் சொல்லிற்று.

1084. ஒரு கனவானுடைய வேலைக்காரன் ஒருசமயம் தன் எஜமானனுடைய வீட்டுக்கு வந்து ஒரு மூலையில் மிகுந்த பயபக்தியுடன் நின்றான். அவன் தன் கையில் எதையோ வஸ்திரத்தால் மூடி வைத்திருந்தான். எஜமானன் அவனைப் பார்த்து, "என்ன சமாசாரம்? கையில் என்ன வைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். வேலைக்காரன் துணி முடிப்பிலிருந்து ஓர் இலந்தைப் பழத்தை எடுத்து, எஜமானன் முன்னால் பணிவுடன் வைத்து அதை எஜமானர் சாப்பிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். வேலைக்காரனுடைய பக்தியைக் கண்டு சந்தோஷித்த எஜமானன் அந்த அற்புதமான வஸ்துவை அத்யந்தப் பிரியத்துடன் ஏற்று, "அடே! என்ன அழகான பழம்; எங்கிருந்து உனக்குக் கிடைத்தது?" என்று கேட்டான். இதுபோல, ஈசுவரனும் பக்தனுடைய ஹிருதயத்தைத்தான் பார்க்கிறான். அவனுடைய மஹிமைகள் அளவற்றன என்றாலும் அவன் பக்திக்கு வசப்படுகிறான்.

1085. பரமஹம்ஸர் (பிரதாப சந்திர முஜூம்தாரை நோக்கி) :— நீர் நன்ருகப் படித்துத் தேர்ந்த சாமர்த்தியசாலி ; நல்ல ஞானி. கேசவ சந்திரஸேனரும் நீரும், கௌரங்கரையும் நித்தியானந்தரையும் போல சகோதரபாவம் கொண்டவர்கள். உலக வியவகாரங்களாகிய உபந்யாஸங்கள், தர்க்கங்கள், கட்சிப் பிரதிகட்சிகள் இவைகளை வேண்டுமளவும் நீர் பார்த்தாய்விட்டது. இன்னும் இவைகளில் உமக்கு விருப்பமிருக்கிறதா? சிதறியோடும் மனதை ஒன்ருக்கி ஈசுவரனிடம் செலுத்த வேண்டிய காலம் உமக்கு வந்துவிட்டது. திவ்யசாகரத்தில் ஆழ்ந்து முழுகும்.

முஜூம்தார் :—" நான் அதைச் செய்யவேண்டியதுதான் ; சந்தேகமில்லை. ஆனுலும் கேசவ சந்திரஸேனருடைய பெயரையும் புகழையும் நிலைநிறுத்துவதற்காகவே, நான் இவைகளையெல்லாம் செய்கிறேன்.

பரமஹம்ஸர் (புன்சிரிப்புடன்) :—உமக்கு ஒரு கதை சொல்லுகிறேன் : ஒரு மனிதன் மலைபுச்சியில் ஒரு குடிசையைக் கட்டினுன். அதைக் கட்டிமுடிப்பதற்குப் பணச்செலவும் பிரயாசையும் அதிகமாக வேண்டியிருந்தது. கொஞ்ச நாட்களுக்கெல்லாம் புயற்காற்று அடிக்கத் தொடங்கியது. அப்போது அக்குடிசை முன்னும் பின்னுமாக அசைந்து ஆடிற்று. அது கீழே விழுந்துவிடாமல் இருக்கும்பொருட்டு, அம் மனிதன் வாயு பகவானை நினைத்து, "சுவாமி! எனது குடிசையை நாசமாக்காம லிருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஆனுல் வாயு பகவான் இதைக் கேட்கவில்லை. அவன் மறுபடியும் பிரார்த்தித்தான். அப்போதும் குடிசை காற்றில் அசைந்துகொண்டே யிருந்தது. அப்போது அவனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. ஹனுமானுனவர் வாயுவின் புத்திரன் என்பது அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவன், " பிரபோ ! இந்தக் குடிசையைக் காப்பாற்றவேண்டும். இது உங்களுடைய குமாரனுன ஹநுமாருடையது" என்று கூவினுன். அப்போதும் வாயு பகவான் கவனிக்கவில்லை. ஆகவே, அம்மனிதன், " சுவாமி ! இந்தக் குடிசையைக் காப்பாற்றவேண்டும். இது ஹனுமானுடைய பிரபுவான ராமபிரானுடையது" என்று கத்தினுன். இதையும் வாயு பகவான் லட்சியம் பண்ணவில்லை. அப்பால் அந்தக் குடிசை கீழே விழுந்துவிடும்போவிருந்த தருணத்தில், அவன் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதற்காக வெளியே ஓடிவந்து, " இந்தக் குடிசை நாசமாகத்தான் போகட்டும், எனக்கென்ன ?" என்று சொல்லத் தொடங்கினுன்.

கேசவ சந்திரஸேனருடைய பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்ற கவலை உமக்கு இப்போது இருக்கலாம். ஆனுல் அவருடைய பெயரைப்பற்றி யெழுந்த தர்மஸ்தாபனம் ஈசுவரனுடைய சித்தத்தால்தான் உண்டாயிற் றென்பதையும், அத்தர்ம ஸ்தாபனம் நிலைத்து நிற்கக்கூடியதும் அதே ஈசுவர சித்தத்தால்தான் என்பதையும் நீர் தெரிந்துகொண்டு சாந்தமடைய வேண்டும். ஆதலால், நித்யாநந்த சாகரத்தில் ஆழ்ந்து முழுகும்.

1086. ஒரு மனிதன் ஒரு சாதுவிடம் போய், தன்னை மிகவும் பணிவுடையவனுகக் காட்டிக்கொண்டு நின்று, சுவாமி! நான் மிகவும் தாழ்ந்தவன்; நான் கடைத்தேறும் வழி இன்னதென்பதைச் சொல்லி யருளவேண்டும்" என்றான். இவனுடைய உள்ளக் கருத்தை யறிந்த சாதுவானவர், "நல்லது; முதலில் உன்னைக் காட்டிலும் தாழ்ந்ததான பொருளைக் கொண்டுவா" என்றார். அம்மனிதன் அவ்வாறே சென்று எங்கும் தேடிப் பார்த்தான்; அவனைக் காட்டிலும் தாழ்ந்ததொன்றையும் காணவில்லை. கடைசியாக அவன் தன்னுடைய மலத்தைக் கண்டு, "இதோ ஒன்று என்னைக் காட்டிலும் தாழ்ந்ததாகக் கிடைத்தது" என்று எண்ணிக்கொண்டு, அதை எடுத்துச் சாதுவிடம் கொண்டு போவதற்காகக் கையை நீட்டினான். அத்தருணத்தில் அம்மலத்தின் உள்ளிருந்து, "ஏ பாவியே! என்னைத் தொடாதே; நான் இனிமையான பணியாரமாக இருந்தேன். தேவர்களுக்கு நிவேதனம் பண்ணக் கூடியதாயும், பார்ப்போருடைய கண்ணுக்கு இன்பம் தரக்கூடியதாயும் இருந்த என்னை எனது துரதிர்ஷ்டம் உன்னிடம் கொண்டு சேர்த்தது; உனது சகவாஸத்தினால் நான் இந்தக் கேவலமான நிலைமையை அடைந்தேன்; என்னைக் கண்டவர்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டும் மூக்கைப் பிடித்துக்கொண்டும் அப்பால் போய்விடுகின்றனர். உன்னோடு ஒருதரம் சகவாஸம் செய்ததனாலேயே எனக்கு இந்தத் தூர்த்தசை உண்டாயிற்று. இன்னுமொருதரம் என்னை நீ தொடுவாயானால், எனக்கு இன்னும் தாழ்ந்த நிலைமை யுண்டாகாதா" என்ற வார்த்தைகள் கிளம்பின. இதனால் அம்மனிதன் வாஸ்தவமான பணிவு இன்னதென்பதைத் தெரிந்து கொண்டான். அது காரணமாக அவன் பூரண ஞானத்தை யடைந்தான்.

1087. தேவ ரிஷியான நாரதர் ஒரு காலத்தில் மமதைகொண்டு பக்தியில் தன்னை மிஞ்சியவர் எவருமில்லை என்று நினைத்தார். சர்வேசுவரனான பகவான் இவருடைய மனக்கருத்தை அறிந்து இவரைப் பார்த்து, "நாரதரே! இன்ன இடத்தில் என்னுடைய பரம பக்தன் ஒருவன் இருக்கிறான்? அங்குச் சென்று அவனோடு நட்புக்கொண்டு உறவாடி வாரும்" என்றார். நாரதர் அப்படியே அங்கே சென்று ஒரு குடியானவனைக் கண்டார். அவன் அதிகாலையில் எழுந்திருந்து, "ஸ்ரீ ஹரி" என்று ஒருதரம் சொல்லிவிட்டுக் கலப்பையை எடுத்துக்கொண்டு போய், நாள் முழுவதும் வயலில் உழுதுவிட்டு, இரவில் படுக்கைக்குச் செல்லும் போது, இன்னொரு தரம் ஹரி நாமஸ்கரணம் பண்ணினான். "இந்தப் பட்டிக்காட்டானை எப்படிப் பக்தன் என்று சொல்வது? நாள் முழுவதும் தன் காரியத்தையே செய்கிறான். பக்திமானாகத் தோற்றவில்லை" என்று நாரதர் தமக்குள் நினைத்துக்கொண்டு பரந்தாமனிடம் சென்று, தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். பகவான் நாரதரைப் பார்த்து, "எண்ணெய் நிரம்பிய இந்தக் கிண்ணத்தை எடுத்துக்கொண்டு இந்தப் பட்டணத்தை ஒரு தரம் சுற்றி வாரும். ஆனால் ஒரு துளி எண்ணெய் கூடக் கீழே சிந்தாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்றார். நாரதர் அவ்விதமே செய்து பகவானிடம் திரும்பி வந்தபோது, "ஊரைச்

சுற்றி வரும்போது எத்தனை தடவை என்னை நினைத்தீர்?" என்று பகவான் கேட்டார். "பிரபோ! ஒருதரம்கூட நினைக்கவில்லை. எண்ணெய் நிரம்பிய கிண்ணத்தின்மீது கவனமாக இருக்கையில் வேறு ஒரு ஞாபகமும் வரவில்லை" என்று நாரதர் பதில் சொன்னார். "நல்லது, நாரதரே! இந்த ஒரு கிண்ண எண்ணெயினால் நீர் என்னை முற்றிலும் மறந்து போய்விட்டீர்; ஆனால் அந்தக் குடியானவனைப் பாரும்; பாரமான சம்ஸாரச் சுமையைத் தாங்கிக்கொண்டிருந்த போதிலும், தினந்தோறும் தவறாமல் இரண்டு தரம் என்னை ஸ்மரிக்கிறான்," என்று பகவான் கூறியருளினார்.

1088. ஓரிடத்தில் இரண்டு யோகிகள் ஈசுவரனைக் காணும் பொருட்டுத் தவம் புரிந்துகொண்டிருந்தனர். ஒருநாள் அவர்களுடைய ஆசிரமம் வழியாகத் தேவ ரிஷியான நாரதர் போய்க்கொண்டிருந்தார். யோகிகளில் ஒருவர், "நாரதரே! இப்போது வைகுண்டத்திலிருந்து தான் வருகிறீரோ?" என்று கேட்டார். "ஆமாம்" என்றனர் நாரதர். இரண்டு யோகிகளும், "அப்படியானால் இப்போது சர்வேசுவரன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதைச் சொல்லும்" என்றனர். "ஓர் ஊசிக் காதின் வழியாக ஈசுவரன் யானைகளையும் ஒட்டகங்களையும் போகச்செய்து விளையாடுவதை நான் கண்டேன்" என்று நாரதர் பதில் சொன்னார். யோகிகளில் ஒருவர், "அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஈசுவரனால் ஆகாத காரியம் ஒன்றுமே கிடையாது" என்றார். மற்றொரு யோகியோ, "ஓ! இது அசட்டு வார்த்தை. நீர் சொல்வது அசம்பாவிதம். இது நீர் வைகுண்டத்துக்குப் போகவே இல்லை என்பதைக் காட்டுகின்றது" என்றார்.

முன்னவர் பக்தர். அவருக்குக் குழந்தைகளின் நம்பிக்கையைப் போன்ற விசுவாசம் இருந்தது. ஈசுவரனால் முடியாத காரியம் ஒன்றுமே கிடையாது. அவருடைய சுபாவத்தை ஒருவராலும் முற்றிலும் தெரிந்துகொள்ள முடியாது. அவரைப்பற்றி எதைச் சொன்னாலும் பொருந்தும்.

1089. ஒரு மனிதனுடைய மகன் மரணத் தறுவாயிலிருந்தான். ஒருவாற்றாலும் குணமடைய ஏதுவில்லாமலிருந்தது. அத்தருணத்தில் அங்கு வந்த ஒரு சாது "ஓரே ஓர் உபாயம் இருக்கிறது. ஒரு மனிதனுடைய மண்டையோட்டில் சுவாதி நட்சத்திரம் உச்சமாகும் சமயத்தில் பெய்யும் மழைத் துளியுடன் நல்ல பாம்பின் விஷத்தைக் கலந்துகொண்டு வந்தால், அது உன் மகனைப் பிழைக்கச் செய்யும்" என்றார். உடனே அம்மனிதன் காலத்தைக் கவனித்தும் பார்த்தான். சுவாதி நட்சத்திரம் மறுநாட் காலையில் உச்சமாகுமென்பதை அறிந்து ஈசுவரனை நோக்கி, "பிரபோ! இந்த நிபந்தனைகளையெல்லாம் முற்றச்செய்து என் மகனைக் காப்பாற்றும்" என்று பிரார்த்தித்தான். பின்னர், அவன் அதிக சிரத்தையுடனும் ஆவலுடனும் மனிதனுடைய மண்டை யோட்டைத் தேடிச் சென்றான். கடைசியில், ஒரு மரத்தினடியில் ஒரு மண்டை

யோடு கிடந்தது. இதை எடுத்து, ஒரு பக்கம் வைத்து, மேலும் பிரார்த்திக்கையில், மழை பெய்யத் தொடங்கி, அவன் வைத்திருந்த மண்டையோட்டில் சில துளிகள் விழுந்தன. பின்னர், அவன், "ஈசுவரனே இரண்டு காரியங்கள் பூர்த்தியாயின. இன்னென்றையும் பூர்த்தியாக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்த மண்டையோடு இருந்த இடத்தின் அருகாமையில் ஒரு தவளை தென்பட்டதைக் கண்டு, மறுபடியும் பிரார்த்தித்தான். அப்போது அந்தத் தவளையைப் பிடிக்க வேண்டுமென்று கருதிய நல்ல பாம்பு ஒன்று புல்லிலிருந்து பாய்ந்தெழுந்தது. ஆனல் அந்த க்ஷணத்தில் அத்தவளை தப்பித்துக் கொள்ளுவதற்கு மண்டையோட்டைத் தாண்டி அப்புறம் தாவிக் குதிக்க, பாம்பின் விஷம் அவ்வோட்டுக்குள் விழுந்தது. உடனே ஆனந்தமடைந்து, பூரண நன்றி யறிதலுடையவனுகி, அம்மனிதன், "ஈசுவரா! உனது அருளால் முடியாத காரியங்களும் முடிகின்றன. இனி என் மகன் உயிர் பிழைத்து எழுந்திருப்பானென்பது நிச்சயம்" என்று கூறினுன். ஆதலால்தான், உண்மையான நம்பிக்கையும் தீவிரமான ஆவலும் இருந்தால் ஈசுவர கிருபையால் உனக்கு எல்லாம் உண்டாகும் என்கிறேன்.

1090. ஆத்ம ஞானத்துக்கு ஞான சாதனைகள் மிகவும் அவசியம். ஆனல், விசுவாசம் பூரணமாக இருந்தால், கொஞ்ச அப்பியாசமே போதுமானதாக இருக்கும்.

ஒரு சமயத்தில் வியாஸர் யமுனை நதியைக் கடந்துபோக இருந்தனர். அதே தருணத்தில் கோபிகா ஸ்திரீகளும் அங்கு வந்தனர். ஆனல் ஓடக்காரன் ஒருவனுமில்லை. ஆதலால் அவர்கள் வியாஸரை நோக்கி, "சுவாமி! இப்போது என்ன செய்கிறது?" என்று கேட்டனர். அதற்கு வியாஸர், "விசாரப்பட வேண்டாம். நான் உங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்கின்றேன். ஆனல், எனக்குப் பசியாக இருக்கிறது. உங்களிடம் ஏதாவது தின்பண்டம் இருக்கிறதா?" என்றனர். கோபிகா ஸ்திரீகள், தாங்கள் வைத்திருந்த பால், ஏடு, வெண்ணெய் எல்லாவற்றையும் கொடுக்க, வியாஸர் அவைகளை வாங்கிப் புசித்தார். பிறகு கோபிகள், "ஆற்றைக் கடப்பது எப்படி?" என்று கேட்க, வியாஸர் ஆற்றங் கரையில் நின்றுகொண்டு, "யமுனு தேவீ! நான் இன்று உபவாஸமிருப்பது மெய்யானல் நீ எங்களுக்கு வழி விட வேண்டும்; நாங்கள் ஆற்றைக் கடந்து அக்கரை போய்ச் சேருகிறோம்" என்று பிரார்த்தித்தார். அப்படிப் பிரார்த்தித்தவுடன், யமுனை நதியின் ஜலத்தில் ஒரு பிளவு உண்டாகியது; தரை தெரிந்தது. கோபிகளுக்கு அதியாச்சரியமுண்டாயிற்று. அவர்கள் கொடுத்த பால் முதலியவற்றை வியாஸர் வாங்கிப் புசித்திருக்க, அவர், "இன்று உபவாஸமிருப்பது மெய்யானல்" என எப்படிச் சொல்லக் கூடும் என்று அவர்கள் நினைத்தனர். அந்தப் பண்டங்களைப் புசித்தது அந்தர்யாமியான ஈசுவரனே தவிர வியாஸரல்லர். இந்த விஷயத்தில் வியாஸருக்கு

இருந்த விசுவாஸத்தின் பலத்தினுல் அவர் அப்படிச் சபதம் பண்ணினுர் என்பதைக் கோபிகா ஸ்திரீகள் தெரிந்துகொள்ளவில்லை.

1091. ஒரு கனவான் வீட்டில் ஒரு பிராம்மணர் பூஜைசெய்து வந்தார். ஒரு சமயம் அப்பிராம்மணர் வெளியூருக்குப் போக நேர்ந்தபோது, தம் சிறு மகனிடம் பூஜையை ஒப்புவித்து, "தினந்தோறும் நிவேதனத்தை சுவாமி முன்னுல் வைத்து, அவருக்கு அமுது செய்துவை" என்று சொல்லிப்போனுர். பிதாவின் கட்டளைப்படி நடந்த பையன், நைவேத்தியத்தை சுவாமி முன்னுல் வைத்து, மௌனமாகக் காத்திருந்தான். ஆனுல் சுவாமி பேசவுமில்லை; நைவேத்தியத்தை அமுது செய்யவுமில்லை. பையன் நெடுநேரம் வரையில் பொறுத்துப் பார்த்தான். பூஜா கிருகத்திலிருந்து சுவாமி கீழே இறங்கி வந்து, நைவேத்தியத்தின் முன்னர் உட்கார்ந்து அதனைப் புசிப்பார் என்று அப்பையன் திடமாக நம்பியிருந்தான். ஆதலால், அவன், "சுவாமி! சீக்கிரம் வந்து சாப்பிடும். எனக்கு நாழிகையாகிறது. என்னுல் இனிமேல் காத்துக்கொண்டிருக்க முடியாது" என்றுன். இதற்கும் சுவாமி பதில் சொல்லவில்லை. ஆதலால், பையன், "சுவாமி உமக்கு அமுது செய்விக்க வேண்டுமென்று என் பிதா சொல்லிப்போயிருக்கிறுர். அப்படியிருக்க, நீர் ஏன் இன்னும் உண்ணவராம லிருக்கிறீர்? என் பிதா கூப்பிட்டால் வந்து அமுதுசெய்து போகும் நீர், என்னுல் நிவேதனம் செய்யப்பட்டதைப் புஜிக்காமலிருப்பதற்கு நான் என்ன அபராதம் செய்திருக்கிறேன்" என்று சொல்லி நெடுநேரம் அழுதான். பின்னர் தலையை நிமிர்த்திப் பார்க்கையில், சுவாமி மனித ரூபத்தை எடுத்துக்கொண்டு நைவேத்தியத்தைச் சாப்பிடுவதைக் கண்டான்! பூஜை முடிந்ததும் பையன் வெளியில் வந்தான். வீட்டுக்காரர்கள், "பூஜை ஆகிவிட்டால் நைவேத்தியத்தைக் கொண்டு வருகிறது தானே" என்றனர். "எல்லாவற்றையும் சுவாமி சாப்பிட்டு விட்டாரே" என்று பையன் பதில் சொன்னுன். அவர்கள் ஆச்சரியப்பட்டு "என்ன சொல்கிறுய்?" என்றனர். "நான் நிவேதனம் செய்தவற்றை யெல்லாம் சுவாமி சாப்பிட்டுவிட்டார்" என்றுன் பையன். அப்பால், அவர்கள் பூஜாகிருகத்தினுள் நுழைந்து பார்க்க, நைவேத்தியம் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் வெறும் பாத்திரங்களாக இருக்கக் கண்டு, பிரமித்து நின்றனர். உண்மையான நம்பிக்கையும் தீவிரமான அவாவும் இப்படிப்பட்ட மகிமையை உடையன.

1092. தீவிரமான ஆசை இருந்தால் ஈசுவரனை நிச்சயமாகக் காண முடியும். தாயைக் காணவேண்டுமென்று குழந்தை எவ்வாறு உருகுமோ, அப்படிப்பட்ட சிசுவைப்போன்ற ஆவலும் விசுவாசமும் ஒருவனுக்கு இருக்கவேண்டும்.

ஜடிலன் என்ற ஒரு சிறுவன் இருந்தான். அவன் தன்னந்தனியாகக் காட்டுவழியே பள்ளிக்கூடத்துக்குப் போவான். அடிக்கடி அவனுக்குத் தனியாகப்போக விருப்பதினுல் பயமுண்டாவதுண்டு. ஆகவே அவன், அதைப்பற்றித் தன் தாயாரிடம் சொல்ல, அவள் "குழந்தாய்!

நீ ஏன் பயப்படவேண்டும்? பயமுண்டானால் 'கிருஷ்ணா' என்று கூப்பிடு" என்றாள். "கிருஷ்ணன் யார் அம்மா?" என்று பையன் கேட்டான். "அவன் உன்னுடைய அண்ணன்" என்று அவன் தாய் பதில் சொன்னாள். அப்பால் ஜடிலன் ஒருநாள் காட்டுவழியே போகையில் பயப்பட்டு, "அண்ணா?" என்று உரக்கக் கூப்பிட்டான். ஒருவரும் வரவில்லை. ஆதலால் பையன், "அண்ணா! கிருஷ்ணா! நீ எங்கிருக்கிறாய்? எனக்குப் பயமாகவிருக்கிறது. வந்து காப்பாற்று" என்று மறுபடியும் கூவினான். இந்தக் குழந்தையின் விசுவாசத்தைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான், உடனே ஒரு சிறுவனைப்போல உருவந் தரித்து வந்து, "தம்பி! இதோ இருக்கிறேனே! நீ ஏன் பயப்படுகிறாய்? என்னுடன் கூட வா; நான் உன்னைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்று சொல்லிஅழைத்துக்கொண்டு போனார். அங்கே போனதும், "தம்பி! நீ கூப்பிடும்போதெல்லாம் வருகிறேன். பயப்படாமலிரு" என்று சொல்லியருளினர். உண்மையான விசுவாசமும் ஆசையும் இப்படிப்பட்ட மஹிமையை உடையன.

1093. ஓர் இடைச்சி, ஆற்றுக்கு அக்கரையில் வசித்துவந்த பிராம்மண குரு ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டுபோய்க் கொடுத்து வருவது வழக்கம். ஒருசமயம் படகு சரிவரப் போகாதபடியால், தினந்தோறும் பால் கொண்டுபோய்க் கொடுப்பதில் சுணக்கம் ஏற்பட்டது. இப்படிச் சுணக்கம் ஏற்பட்டதற்காக ஒருநாள் குரு கடிந்து கொள்ளவே, இடைச்சி, "சுவாமி! நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டைவிட்டுப் புறப்படுகிறேன். ஆற்றங் கரைக்கு வந்ததும் ஓடக்காரனுக்கும் ஜனங்களுக்குமாக நெடுநேரம் காத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது" என்றாள். "ஏ பெண்ணே! பகவந் நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஜனங்கள் சம்ஸாரமாகிய சாகரத்தையே கடந்து விடுகிறார்கள்; உன்னால் இந்தச் சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?" என்றார் குரு. ஆற்றைக் கடக்கிறதற்குச் சுலபமான வழியைத் தெரிந்துகொண்ட கள்ளம் கபடமற்ற இடைச்சிக்கு வெகு சந்தோஷ முண்டாய்விட்டது. மறுநாள் முதற்கொண்டு குருவுக்கு அதிகாலையிலேயே பால் கிடைத்து வந்தது. ஒருநாள், அவர் இடைச்சியைப் பார்த்து, "நீ இப்போது தாமதமாக வருவதில்லையே? எப்படிச் சீக்கிரம் வர முடிகிறது?" என்று கேட்டார். "சுவாமி, தேவரீர் சொல்லியபடி நான் பகவந் நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஆற்றைத் தாண்டி வருகிறேன். ஓடக்காரனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறதில்லை" என்றாள். இடைச்சியின் வார்த்தையில் நம்பிக்கையற்ற குரு, "நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாயென்பதை எனக்குக் காட்டுவாயா?" என்றார். இடைச்சி சம்மதப்பட்டு, குருவை அழைத்துக் கொண்டுவந்து, ஆற்று ஜலத்தின்மீது நடக்கத் தொடங்கினாள். அப்படிக் கொஞ்சம் நடந்ததும் பின்னால் திரும்பிப் பார்த்து, குரு நடக்க முடியாமல் கஷ்டப்படுவதைக் கண்டு, "சுவாமி! இது என்ன! பகவந் நாமத்தை வாயால் சொல்லிக்கொண்டு, வஸ்திரம் எங்கே நனைந்துவிடப் போகிறதோ என்று கைகளினால் அதைத் தூக்கிக்

கொள்ளுகிறீர்களே! தங்களுக்கு ஈசுவரனிடத்தில் பூரணமான நம்பிக்கை இல்லை" என்றாள். உலகில் ஒரு மனிதனாலேயோ ஸ்திரீயாலேயோ காட்டப்பட்டுள்ள அபூர்வ ஸித்திகள் எல்லாவற்றினுடைய ரகஸியம் யாதெனில், ஈசுவரனே கதி என்று அவனிடம் முழு நம்பிக்கையுடன் தன்னை ஒப்படைத்து விடுவதாலேயாம்.

1094. ஒன்றுக்கொன்று விரோதமாய்க் காணும் மனிதனின் சுயேச்சை, இறைவனின் அருள் ஆகிய இவையிரண்டிலும் எது முக்கியமானது என்பதை அறியக்கூடாத இரண்டு சிஷ்யர்கள் ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்றனர். அவர் "சுயேச்சையைப்பற்றி மிகவும் பிரமாதமாகப் பேசுகிறீர்கள்! எல்லாம் இறைவனின் இச்சையை ஒட்டியே நடக்கின்றன. ஒரு மூலையிற் கட்டப்பட்ட ஒரு பசுவைப் போல் நமது இச்சைகள் எல்லாம் இறைவனுடைய இச்சையுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அப்பசுவின் கயிற்றின் அளவுக்குச் சுயேச்சை அதற்கிருப்பது போலவே நமக்கும் சிறிதளவு சுயேச்சை இருப்பது வாஸ்தவம். அதனால் மனிதன் எல்லாம் தனதிஷ்டமென்று நினைத்துவிடுகிறான். ஆனால் அம்மனிதனின் இச்சைகளெல்லாம் இறைவனின் விருப்பத்தைப் பொறுத்தனவே யென்பதை நிச்சயமாய் உணருங்கள்" என்று அவர்களுக்குபதேசித்தார்.

"அப்படியானால் தியானம், தவம், பிரார்த்தனை முதலியவைகள் அநாவசியமா? எல்லாம் கடவுளின் இச்சை. அவன் இஷ்டப்படியே தான் எல்லாம் நடக்கும் என்று சும்மாவிருந்துவிடலாமே?"

"ஓ! வெறும் வாயால் மாத்திரம் அவ்வார்த்தைகளைச் சொல்லிவிட்டால் போதுமா? முட்செடியில் கைப்பட்டதும் முட்கள் தைப்பதால் உண்டாகும் வேதனை இல்லையென்று வாயினால் மாத்திரம் எத்தனை தரம் சொன்னாலும் நீங்கிவிடாது. தெய்வ வழிபாடுகள் முழுதும் மனிதனின் செய்கைக்குள் அடங்குவதானால் பிறகு ஒவ்வொருவரும் அம்மாதிரி செய்துவிடமாட்டார்களா? ஒவ்வொருவரும் அதைச் செய்ய முடியாது. ஆனால் ஒன்றுண்டு. அவனால் உனக்களிக்கப்பட்ட பலத்தை நீ சரியான முறையில் உபயோகிக்காவிட்டால் உனக்கு அதிகம் கொடுக்கமாட்டான். அதனால்தான் சுயம்பிரயாசை மிகவும் அவசியம். ஆகையால் இறைவனின் அருளைப் பெறுவதற்குத் தகுதியாவதற்குக்கூட ஒவ்வொருவரும் சிரமப்படுதல் அவசியம். இவ்வித சுயப்பிரயாசையும், இறைவனின் அருளும் சேருமானால், பல ஜன்மாந்திர வினைகள் இவ்வொரே ஜன்மத்தில் ஒழிந்துவிடும். சிறிதளவேனும் சுயப்பிரயாசை மிகவும் அவசியமாகும். இதனை விளக்க கதையொன்று சொல்லுகிறேன் கேட்பாய். ஒரு முறை ஸ்ரீமன் நாராயணன் நாரதரை நோக்கி 'நீ நரகத்திற்குப் போகக் கடவாய்' என்று சாபமிட்டார். நாரதர் இதனைக் கேட்டு மிகவும் மனக் கிலேசப்பட்டார். பகவானை மனமுருகிப் பிரார்த்தித்து 'சுவாமி! நரகலோகம் எங்குளது?' என்று வேண்டிக்கொண்டார். விஷ்ணுவானவர் தரையிலே பிரபஞ்சத்தின் படமொன்று வரைந்து தேவலோகம் இருக்குமிடத்தையும் நரக

மேலோகம் இருக்குமிடத்தையும் அப்படத்தின் மூலம் சுட்டிக் காட்டினார். நாரதர் "நரகம்" என்று எழுதப்பட்ட இடத்தைக் காட்டி 'நரகம் அப்படித்தானிருக்குமா? இதுதான் நரகம்' என்று சொல்லிக் கொண்டே அந்த நரகம் என்று எழுதப்பட்ட இடத்தின்மீது விழுந்து புரண்டு, "நான் நரகதண்டனையை அனுபவித்து விட்டேன்" என்று கூறினார். புன்சிரிப்புடன் விஷ்ணுவானவர் 'அஃதெப்படியாகும்' என்றார்? அதற்கு நாரதர், "ஏன் சுவாமி! வைகுண்டமும் நரகமும் உம்முடைய சிருஷ்டியேயல்லவா? படத்தை நீரே வரைந்தீர். நரகம் இருக்குமிடத்தையும் நீரேயன்றோ 'நரகம்' என்று சொன்னீர். ஆகையால் அது உண்மையான நரகம் ஆய்விட்டது. நானும் அதன்மீது புரண்டு எழுந்து விட்டேன். தண்டனை தீர்ந்து விட்டது" என்று மறுமொழி கூறினார். நாரதர் பூரண நம்பிக்கையோடு சொன்னதால் பகவானும் அவ்வார்த்தைகளைக் கேட்டுத் திருப்தி அடைந்தார்.

1095. ஒரு சமயம் கிருஷ்ண பரமாத்மாவின் ஸகாவான அர்ஜுனனுடைய மனத்தில் கர்வம் உதித்தது. தான் கிருஷ்ணனிடத்தில் வைத்திருக்கும் பிரேமையையும் பிரியத்தையும் காட்டிலும் அதிகமாக வேறொருவரும் வைத்திருக்கமாட்டாரென அவன் கருதியிருந்தான். சர்வக்ஞரான கிருஷ்ணன் இதையறிந்து அர்ஜுனனுடன் ஒரு நாள் உலாவப் புறப்பட்டுப் போனார். கொஞ்ச தூரம் போனதும், உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டிருந்த பிராம்மணன் ஒருவனை இருவரும் கண்டனர். அவன் இடுப்பில் கூரிய கத்தியொன்று தொங்கிக்கொண்டிருந்தது. அவன் வைஷ்ணவன் என்பதை அர்ஜுனன் தெரிந்து கொண்டான். வைஷ்ணவர்கள் ஜீவஹிம்சை செய்யார்கள். பச்சைப் புல்லுக்கும் உயிர் இருக்குமாதலால் இந்தப் பிராம்மணன் உயிரற்ற உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டிருந்தான். ஆனால் அவன் பக்கத்தில் ஒரு கத்தி தொங்கினதன் பொருள் மட்டும் அர்ஜுனனுக்கு விளங்கவில்லை. ஆகவே அவன் கிருஷ்ண பரமாத்மாவை நோக்கி, "பிரபோ? இதென்ன விந்தை! அவன் புல்லுக்குக்கூட ஹிம்சை செய்யாத விரதமுடையவன்போலத் தோன்றுகிறான்; என்றாலும் ஹிம்ஸை செய்யக் கூடிய கத்தியை வைத்துக்கொண்டிருக்கிறானே, அது ஏன்?" என்று கேட்டான். "அவனையே கேட்டுத் தெரிந்துகொள்" என்று பகவான் பதில் சொல்லி அருளினார். உடனே அர்ஜுனன் அந்தப் பிராம்மணனிடம் சென்று, 'சுவாமி! நீர் ஜீவஹிம்சை செய்வதில்லை; உலர்ந்த புல்லைத் தின்கிறீர். அப்படியிருக்க இந்தக் கூரிய கத்தியை ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்!" என்று கேட்டான்.

பிராம்மணன் :—"நான்கு துஷ்டரைத் தண்டிக்கிறதற்காக இந்தக் கத்தியை வைத்திருக்கிறேன். அவர்களைச் சந்திக்கும் காலத்தைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

அர்ஜுனன் ;—அவர்கள் யாவர்?

பிராம்மணன் :—பாபி நாரதன்.

அர்ஜுனன் :—நாரதரா ! அவர் என்ன செய்திருக்கிறார் அப்பா ?

பிராம்மணன் :—அவனுடைய அகம்பாவத்தைப் பார் ? எப்போது பார்த்தாலும் பாட்டும் சங்கீதமும்தான் அவனுக்கு. அவைகளினால் பகவானுக்கு ஒரு நிமிஷ நித்திரை கூடக் கிடையாது. சுவாமியினுடைய சௌகரியத்தை அவன் கொஞ்சமேனும் கவனிக்காமல் இரவு பகலாக பகவந் நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு அவருடைய நிம்மதியைக் குலைத்துக்கொண்டிருக்கிறான்.

அர்ஜுனன் :—இரண்டாமவன் யாவன் ?

பிராம்மணன் :—கர்வம் படைத்த திரௌபதி.

அர்ஜுனன் :—அவளுடைய பிழை என்ன ?

பிராம்மணன் :—அவளுடைய அக்கிரமத்தைத்தான் பார். பகவான் போஜனம் செய்யப்போகும் சமயத்தில் அவரைக் கூப்பிட்டாள். ஆதலால் அவர் துர்வாஸ ரிஷியின் சாபத்திலிருந்து பாண்டவர்களைக் காப்பாற்றுவதற்காகக் காம்ய வனத்துக்குப் பட்டினியாய்ச் செல்ல வேண்டியிருந்தது. இன்னும் கேள். தான் சாப்பிட்டபின் மிகுந்திருந்த அன்னத்தை என் பகவானுக்குப் போடவந்த அவளுடைய வன்னெஞ்சத்தைப்பற்றி என்ன சொல்கிறது !

அர்ஜுனன் :—மூன்றாவது யார் ?

பிராம்மணன் :—கல் நெஞ்சனான பிரஹ்லாதன். கொஞ்சம் கூடத் தயங்காமல் அவன் எனது சுவாமியைப் பொங்கும் எண்ணெய்க் கொப்பரையில் இறங்கும்படியாகவும் யானைகளின் கால்களால் இடறப் படும்படியாகவும் வஜ்ரம் போன்ற தூணைப் பிளந்துகொண்டு வரும்படியும் செய்தானே !

அர்ஜுனன் :—நான்காமவன் யாவன் ?

பிராம்மணன் :—அதமனான அர்ஜுனன்.

அர்ஜுனன் :—அர்ஜுனனா ? அவன் என்ன பிழை செய்திருக்கிறான் ?

பிராம்மணன் :—அவனுடைய துஷ்டத் தனத்தைப் பார். எனது சுவாமியைத் தன்னுடைய தேர்ப்பாகனாக்கிக்கொண்டு அவன் குரு க்ஷேத்திரத்தில் சண்டை செய்தான்.

இதைக் கேட்ட அர்ஜுனன் பிராம்மணனுடைய பக்திப் பிரேமையின் தீவிரத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து, அந்த க்ஷணமுதல் தன்னைக் காட்டிலும் பகவத் பக்தியில் ஈடுபட்டவர் ஒருவருமில்லை யென்ற அகங்காரத்தை விட்டுவிட்டான்.

1096. ஒரு கிராமத்தில் ஒரு சேணியன் (நெசவுக்காரன்) இருந்தான். அவன் பரமபக்தன். ஆதலால் ஜனங்கள் எல்லாருக்கும் அவனிடம் நம்பிக்கையும் அன்புமுண்டு. அச்சேணியன் தான் நெய்த

வஸ்திரத்தை விற்பதற்குக் கடைத்தெருவுக்குக் கொண்டு போவான். யாரேனும் அந்த வஸ்திரத்தின் விலையைக் கேட்டால், அவன், "ராமனுடைய சித்தத்தின்படி, நூல் விலை ஒரு ரூபாவாகிறது. ராமனுடைய சித்தத்தின்படி கூலி நாலணுவாகிறது. ராமனுடைய சித்தத்தின்படி லாபம் இரண்டணு. ஆகவே ராமனுடைய சித்தத்தின்படி இந்த வஸ்திரத்தின் விலை ஒரு ரூபாயும் ஆறணுவுமாகும்" என்பான். ஜனங்களுக்கு இவனிடம் பூரணநம்பிக்கை இருந்தபடியால், அவர்கள், இவன் சொன்ன விலையைக் கொடுத்து வஸ்திரத்தை வாங்கிக் கொள்வார்கள். இவன் பக்தனுகையால், இரவு வேளையில், சாப்பிட்ட பிறகு நெடுநேரம் உட்கார்ந்து பகவத்தியானத்திலும் ஜபத்திலும் காலங்கழிப்பான்.

ஒரு நாள் இரவில் நெடு நேரமாகியது. அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஆகவே, திண்ணையில் தனியாக உட்கார்ந்து தியானமும் ஜபமும் செய்துகொண்டிருந்தான். அப்போது கூட்டமாகத் திருடர்கள் அவ்வழியே போய்க்கொண்டிருந்தனர். அவர்களுடைய பொருள்களைச் சுமந்து கொண்டுவர ஆள் எவனும் அகப்படாமையால், அவர்கள் இந்தச் சேணியனை இழுத்துக்கொண்டு சென்றனர். அப்பால், அவர்கள் ஒரு வீட்டுக்குள் நுழைந்து, அநேக சாமான்களைக் கொள்ளையடித்து, அவைகளில் சிலவற்றைச் சேணியன் தலையின்மீது ஏற்றிவைத்து அழைத்துக்கொண்டு போயினர். ஆனல் அந்தச் சமயத்தில் காவற்காரர்கள் அங்கு வந்தபடியால் திருடர்கள் ஓடிப்போய் விட்டனர். மூட்டையைத் தாங்கிய சேணியன் அகப்பட்டுக்கொண்டான். அன்றை இரவு அவனைக் காவலில் வைத்திருந்து மறுநாள் காலையில் நியாயாதிபதி முன்னர்க் கொண்டு போய் நிறுத்தினர். இந்த விஷயம் ஊராருக்குத் தெரியவர, அவர்கள் ஓடிவந்து சேணியனைக் கண்டு வருந்தி, நியாயாதிபதியைப் பார்த்து "பிரபோ! இவன் களவு செய்திருக்கமாட்டான்" என்று ஏகோபித்துச் சொல்லினர். அதன்மேல், நியாயாதிபதி நடந்த சமாசாரத்தைச் சொல்லும்படி சேணியனைக் கேட்டார். சேணியன், "பிரபோ! ராமனுடைய சித்தத்தின்படி நான் என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். ராமனுடைய சித்தத்தின்படி அன்றிரவு நெடுநேரமாயிற்று; ராமனுடைய சித்தத்தின்படி நான் பகவத்தியானமும் ஜபமும் செய்து கொண்டிருந்தேன்; அப்போது ராமனுடைய சித்தத்தின்படி திருடர்கள் கூட்டமாய் அவ்வழியே போய்க்கொண்டிருந்தனர்; ராமனுடைய சித்தத்தின்படி அவர்கள் என்னையும் கூட இழுத்துச் சென்றனர்; ராமனுடைய சித்தத்தின்படி அவர்கள் ஒரு வீட்டுக்குள் நுழைந்து கொள்ளையடித்தார்கள். ராமனுடைய சித்தத்தின்படி என் தலையிலும் ஒரு சுமையை வைத்தார்கள்; அப்போது ராமனுடைய சித்தத்தின்படி காவற்காரர்கள் வந்தனர்; ராமனுடைய சித்தத்தின்படி நான் அகப்பட்டுக்கொண்டேன். ராமனுடைய சித்தத்தின்படி நான் காவலில் வைக்கப்பட்டு, ராமனுடைய சித்தத்தின்படியே இன்று காலையில் தங்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட்டிருக்கிறேன்" என்றுன். இவனுடைய பக்தியையும் உண்மையையும் நிரபராதத் தன்மையையும் கண்ட நியாயாதிபதி, இவனை உடனே விடுதலை செய்துவிட்டனர்.

வெளியே வந்த சேணியன், தனது நண்பர்களைப் பார்த்து, "ராமனுடைய சித்தமே என்னை விடுதலை செய்தது" என்று சொன்னான்.

நீ உலக வாழ்க்கையில் இருப்பதும், உலகத்தைத் துறப்பதும் ராமனுடைய சித்தத்தையே பொறுத்துள்ளது. எல்லாப் பாரத்தையும் இறைவன்மீது போட்டுவிட்டு, உலகத்தில் உனக்கேற்பட்ட கடமைகளைச் செய்.

1097. ஒரு திருடன் ஒருநாள் நடுராத்திரியில் அரசனுடைய அரண்மனைக்குள் நுழைந்து ஒளிந்திருக்கையில், அவ்வரசன் தனது மனைவியுடன், "ஆற்றங்கரையில் இருக்கும் ஸாதுக்களில் ஒருவருக்கு நமது குமாரத்தியைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறேன்" என்று சொன்ன வார்த்தையைக் கேட்டான். உடனே அந்தத் திருடன், "பேஷ்! இதில் எனக்கு அதிருஷ்டம் இருக்கிறது போலும்! நாளைய தினம் நான் ஸாது வேஷம் போட்டுக்கொண்டு, ஆற்றங்கரையிலுள்ள ஸாதுக்களிடையே உட்காருகிறேன். ஒரு வேளை அரசனுடைய மகள் எனக்கு மனைவியானாலு மாகலாம்," என்று எண்ணி வெளியே போய்விட்டான். மறுநாட் காலையில் அவன் அவ்வாறே ஸாதுக்களின் கோஷ்டியி லிருக்கையில், அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் அங்கு வந்து, அரசனுடைய குமாரத்தியைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு ஸாதுவாகப் பிரார்த்தித்துக் கேட்டனர். ஒருவரும் சம்மதிக்கவில்லை. கடைசியாக அரசனின் உத்தியோகஸ்தர்கள் ஸாது வேஷம் பூண்டிருந்த திருடனிடம் வந்து பிரார்த்தித்தனர். திருடன் மௌனமாக இருந்தான். உத்தியோகஸ்தர்கள் திரும்பிப்போய், "அங்குள்ள ஸாதுக்களில் ஒருவரேனும் நமது கருத்துக்கு இணங்கவில்லை. ஆயினும் ஒரு வாலிப ஸாது இருக்கிறார். அவரை இணங்கச் செய்யலாம் என்று தோன்றுகிறது" என அரசனிடம் தெரிவித்தனர். ஆகவே, அரசன் நேரில் இந்தக் கபட ஸாதுவிடம் சென்று தனது குமாரத்தியை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று விநயமாய்க் கேட்டான். ஆனால் அரசனே நேரில் வந்ததைக் கண்டதும் திருடனுடைய மனம் மாறிவிட்டது. "நான் ஸாது வேஷத்தைப் பூண்டிருக்கிறேன். இதனாலேயே அரசன் என்னிடம் வந்து நயந்து பிரார்த்திக்கிறான்? நான் வாஸ்தவத்திலேயே ஸாதுவாகிவிட்டால் எனக்கு என்னென்ன பெருமைகளெல்லாம் உண்டாகா?" என்று நினைத்தான். நினைத்ததும் பொய் வேஷம் பூண்டு ராஜ குமாரத்தியைக் கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணம் மனத்தைவிட் டகன்றது. அந்தக்ஷணம் முதற்கொண்டு அவன் தனது பழைய நடத்தைகளை அடியோடு விட்டுவிட்டு, உண்மையான ஸாதுவாவதற்குப் பிரயத்தனப் பட்டான். அப்பால் அவன் கலியாணமே பண்ணிக்கொள்ளவில்லை. அக்காலத்திலிருந்த பிரபல ஸாதுக்களில் ஒருவனாக அவன் விளங்கினான். போலி வேஷம் சிற்சில சமயங்களில் எதிர்பாராத நன்மையைத் தருகிறது.

சந்நியாசமும் வைராக்கியமும்

1098. வேலையில்லாதிருந்த ஒரு மனிதனை ஏதாவதொரு வேலையில் அமரும்படி அவனுடைய மனைவி எப்போதும் தூண்டிக்கொண்டிருந்தாள். ஒருநாள் அவன், தன்னுடைய மகன் பிழைக்க ஏதுவில்லாதபடி நோயுற்றிருக்கையில், வேலை தேடுவதற்குப் புறப்பட்டுப் போனான். இதன் மத்தியில் குழந்தை இறந்துவிட்டது. வெகுவாகத் தேடியும் அம்மனிதன் தென்படவில்லை. கடைசியில், பொழுதுபோகும் வேளையில் அவன் திரும்பி வரவே, இப்படி மகன் மரணத்தருவாயில் இருந்தபோது வெளியே சென்ற கடின சித்தத்துக்காக, அவனுடைய மனைவி அவனை வெகுவாகக் கடிந்துகொண்டாள். புருஷன், மந்தஹாஸத்துடன், "இதோ பார்! நான் அரசனாகி, ஏழு குழந்தைகளைப் பெற்று, அவர்களுடன் உல்லாசமாகக் காலங்கழித்ததாகக் கனவு கண்டேன். விழித்துக்கொண்டதும், அக்குழந்தைகளில் ஒருவரையாவது காணவில்லை. நான் கண்டது கனவென்பதை உணர்ந்தேன்: அந்த ஏழு குழந்தைகளை இழந்ததற்கு நான் அழுகிறதா, இப்போது பறிகொடுத்த குழந்தைக்கு விசனப்படுகிறதா? சொல்லு," என்றான். இவ்வுலகத்தைக் கனவெனக் கருதுபவனுக்கு, உலக பாசங்களில் சாதாரண மனிதர்களுக்கு இருக்கும் சுக துக்கங்கள் இருப்பது இல்லை.

1099. ஒரு வாலிப சந்யாஸி பிக்ஷைக்காக ஒரு வீட்டுக்குச் சென்றார். இளம்பிராயத்திலேயே அவர் சந்யாஸத்தைக் கைக்கொண்டபடியால் உலக அநுபவம் அவருக்கு அதிகமில்லாதிருந்தது. வீட்டுக்குள்ளிருந்து ஒரு யௌவன ஸ்திரீ அவருக்குப் பிக்ஷை போடுவதற்காக வெளியே வந்தாள். அவளுடைய ஸ்தனங்களைப் பார்த்த இந்த ஸந்யாஸி அவளுடைய மார்பில் சிரங்கு புறப்பட்டிருக்கிறதா எனக் கேட்டார். அவளுடைய தாயார் அங்கு வந்து, "இல்லையப்பா! சிரங்கு ஒன்றுமில்லை; இவளுக்குக் கூடிய சீக்கிரத்தில் குழந்தை பிறக்கும். அக்குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக ஈசுவரன் முன்கூட்டியே அந்த இரண்டு ஸ்தனங்களைப் படைத்திருக்கிறான். குழந்தை பிறந்ததும், இந்த ஸ்தனங்களிலிருந்து பால் குடிக்கும்," என்றாள். இதைக் கேட்டவுடன், அந்த இளஞ் சந்யாஸி, "இனிமேல் நான் பிக்ஷைக்குப் போக மாட்டேன்; என்னை உண்டாக்கியவன், எனக்கு அன்ன ஆகாரங்களை அளிப்பான்," என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

1100. ஒரு புருஷனும் அவன் மனைவியும் சந்யாஸம் பெற்றுக்கொண்டு, தீர்த்த யாத்திரைக்காக ஒன்று சேர்ந்து சென்றனர். ஒரு சமயம் அவர்கள் ஒரு வழியே சென்றுகொண்டிருக்கையில், சற்று முன்னே போன அம்மனிதன் பாதையில் ஒரு வைரக்கல் கிடப்பதைக் கண்டான். அதைத் தன் மனைவி கண்டால் எங்கே ஒருவேளை அதன் மீது ஆசைப்பட்டு சந்யாஸ பலத்தை இழந்துவிடப் போகிறாளோ என்று கருதிய அம்மனிதன், அதைப் புதைத்துவிட எண்ணித் தரையைத் தோண்டினான். தோண்டிக்கொண்டிருக்கையில் அவன் மனைவி

நெருங்கிவந்து விசேஷம் என்னவென்று கேட்டாள். அவன் ஏதோ மறைமுகமாகப் பதில் சொன்னான். ஆயினும், அவள் வைரத்தைக் கண்டு தன் புருஷனுடைய மனக்கருத்தை யறிந்து, "சுவாமி! வைரத்துக்கும் மண்ணாங்கட்டிக்குமுள்ள வித்தியாசம் தங்களுக்கு இன்னம் தெரிகிறதானால் தாங்கள் ஏன் உலகத்தைத் துறந்து வந்தீர்கள்?" என்று அவன் மனத்திற்படும்படி கேட்டாள்.

1101. மனிதனுக்கு எப்படி வைராக்கியம் வரும்? ஒருவனிடம் அவனுடைய மனைவி வந்து, "நாதா' எனக்கு என் சகோதரனைப் பற்றி அதிகக் கவலையாக இருக்கிறது. சென்ற ஒரு வாரமாக அவன் சந்நியாஸம் வாங்கிக்கொள்ளப் போவதாகச் சொல்லிக்கொண்டு அதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்துகொண்டிருக்கிறான். அவன் தனது ஆசைகளையும் தேவைகளையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டிருக்கிறான்" என்றாள். இதைக் கேட்ட அம்மனிதன், "அன்புடையாய்! உன் சகோதரனைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். அவன் ஒருநாளும் சந்நியாஸி யாகமாட்டான். அப்படி ஒருவரும் சந்நியாஸம் பெற்றதில்லை," என்றான்.

மனைவி, 'ஆனால் எப்படித்தான் ஒருவர் சந்நியாஸி யாவார்?' என்றாள்.

புருஷன் 'இப்படித்தான்!' என்று சொல்லிக்கொண்டே தான் கட்டியிருந்த வஸ்திரத்தைத் துண்டுகளாய்க் கிழித்து, அவற்றில் ஒன்றை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, தன் மனைவியைப் பார்த்து, அந்த க்ஷணமுதற்கொண்டு அவளும் அவளைப்போன்ற பெண்பாலார் அனைவரும் தனக்குத் தாய்மாருக்குச் சமானம் என்று கூறி வெளியே போய்விட்டான். அப்பால் அவன் வீட்டுக்குத் திரும்பவே இல்லை.

1102. "செய்யலாமென்றிருக்கிறேன்," "இதோ செய்யப் போகிறேன்," "இப்போது தொடங்கப் போகிறேன்" என்று காலதாமதம் செய்வது தீவிர வைராக்கியத்தைக் காட்டுவதன்று. தீவிர வைராக்கியம் எவனிடம் இருக்குமோ அவன் தாயை நினைந்து அழும் குழந்தையைப்போல ஈசுவரனை அடையத் தவித்துக்கொண்டிருப்பான். அவனுக்கு ஈசுவரனைத் தவிர வேறொன்றும் வேண்டியிருப்பதில்லை. இவ்வுலகத்தை அவன் சுற்றுச் சுவர் இல்லாத கிணற்றுக்குச் சமானமாகக் கருதுவான். ஆகவே, அதில் விழாமலிருப்பதற்கான முன் ஜாக்கிரதையுடன் இருப்பான். மற்றவர்களைப்போல், "முதலில் குடும்ப விவகாரங்களை ஒழுங்குப்படுத்தி விடுகிறேன். அப்பால் ஈசுவரத் தியானம் செய்கிறேன்," என்று அவன் சொல்லமாட்டான். அவன் உறுதியான தீர்மானங்கொண்டவனாகவே யிருப்பான்.

ஒரு தேசத்தில் ஒரு சமயம் மழையில்லாமல் பஞ்சம் நேரிட்டது. வாய்க்கால்களை வெட்டி அவைகளின் வழியாக விளை நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருவதில் குடியானவர்கள் கருத்தூன்றி யிருந்தார்கள். அவர்களில் உறுதியான தீர்மானம் கொண்டவன் ஒருவன் இருந்

தான். தனது வாய்க்காலை ஆற்றுடன் சேர்க்கும் வரையில் வெட்டிக் கொண்டு போகவேண்டுமென்று அவன் நிச்சயித்துவிட்டான். ஸ்நானத்துக்கு நேரம் ஆனபடியால், அவனுடைய மனைவி, கொஞ்சம் எண்ணெயைத் தன் மகளிடம் கொடுத்தனுப்பினாள். அம்மகள் வந்து, "அப்பா! உச்சிப்போதாகி விட்டது; இந்த எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்யுங்கள்," என்றாள். "இன்னும் வேலை யிருக்கிறது. ஆதலால் பொறு" என்றான் குடியானவன். மாலை இருபது நாழிகை ஆகியும் அவன் சாப்பாட்டைப் பற்றியாவது ஸ்நானத்தைப் பற்றியாவது நினைக்கவே யில்லை. கடைசியாக அவனுடைய மனைவி, வயலுக்கு வந்து, "இன்னும் ஏன் நீங்கள் ஸ்நானம் செய்யவில்லை; சோறு ஆறிப்போய்க் குளிர்ந்துவிட்டது; எப்போதும் நீங்கள் இப்படித்தான் பிடிவாதம் செய்கிறீர்கள். இப்போதாவது வாருங்கள்; பாக்கி வேலையை நாளைக்குச் செய்யலாம்; அல்லது சாப்பாட்டுக்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்," என்றாள். குடியானவனுக்குக் கோபம் வந்தது. உடனே அவன் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து அவளைக் கண்டபடி வைது துரத்தி, "புத்தி கெட்டவளே! கதிர்கள் வாடுவதைப் பார்க்கவில்லையா நீ? நாளைக்கு நீங்கள் எல்லாரும் பட்டினி கிடந்து சாகவேண்டியதல்லவா? இன்றைய தினம் வயலுக்கு ஜலம் கொண்டு வருவதென்று தீர்மானம் செய்திருக்கிறேன். பிறகுதான் மற்ற விஷயங்களைக் கவனிக்கப் போகிறேன்" என்றான். சங்கதிகளைத் தெரிந்துகொண்ட அந்த ஸ்திரீ ஓடிப்போனாள். பிறகு அவன் நடுநிசி வரையில் பகீரதப் பிரயத்தனம் செய்து கருதிய காரியத்தை முடித்தான். வயலுக்குள் ஜலம் சப்தமிட்டுக் கொண்டு பாய்ந்ததைக் கண்டபோது அவனுக்கு அளவற்ற ஆநந்தமுண்டாயிற்று. அப்பால் அவன் வீட்டுக்கு வந்து மனைவியைப் பார்த்துக் கொஞ்சம் எண்ணெய் கொண்டுவரும்படியும் *ஹுக்கா பிடிக்க புகையிலை தயராக்கும்படியும் சொன்னான். ஸ்நானம் செய்து உண்ட பிறகு, அவன் நெடுநேரம் அயர்ந்து தூங்கினான். இப்படிப்பட்ட உறுதியான மனம்தான் தீவிர வைராக்கியத்திற்கு நல்ல உதாரணம்.

இன்னொரு குடியானவனும் இதே வேலையைச் செய்துகொண்டிருந்தான். ஆனால் அவனுடைய மனைவி வந்து அவனை வீட்டுக்குக் கூப்பிடும்போது, அவன் யாதொரு தடையும் சொல்லாமல், மண் வெட்டியைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு 'நீ வந்து கூப்பிடுகிறபடியால் நான் வரத்தான் வேண்டும்' என்று சொல்லிக்கொண்டு பின் தொடர்ந்தான். காலத்தில் அவன் வயலுக்கு ஜலம் கொண்டுவரவில்லை. இதுதான் தாமதமும் சோம்பலுமான வைராக்கியத்துக்கு உதாரணம். திடமான தீர்மானம் இல்லாதுபோனால் குடியானவனுடைய விளை நிலத்துக்கு ஜலம் பாய்வதில்லை. அதுபோல தீவிர வைராக்கியம் இல்லாவிட்டால் ஈசுவர தரிசனமாகிய மகோன்னதநிலை ஸித்தியாகாது.

---

* புகையிலை பிடிப்பதற்கான கருவி.

1103. ஒரு செம்படவன், ஒரு கனவானுடைய தோட்டத்துக்குள் ஒருவருமறியாதபடி இரவில் நுழைந்து, அங்குள்ள குளத்தில் வலை வீசித் திருட்டுத்தனமாக மீன் பிடித்துக்கொண்டிருந்தான். இந்தச் சங்கதி அக்கனவானுக்கு எட்ட, அவன் தன் வேலைக்காரர்களுடன் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு திருடனைப் பிடிக்கிறதற்காகத் தோட்டத்தை வளைத்துக்கொண்டான். தப்பித்துக் கொள்வதற்கு வழியொன்றையுங் காணாத அச்செம்படவன், தன் சரீரம் முழுவதிலும் சாம்பலைப் பூசிக்கொண்டு, ஒரு மரத்தின் கீழே ஸாதுவைப்போல உட்கார்ந்தான். ஆகவே ஜனங்கள் நெருங்கி வந்தபோது தோட்டத்தில் திருடனைக் காணவில்லை. மரத்தின் கீழே சாம்பல் பூசிய சரீரத்துடன் ஒரு ஸாது தியானத்திலிருப்பதைத்தான் கண்டனர். மறுநாட் காலையில் அந்தக் கனவானுடைய தோட்டத்தில் ஒரு மஹாஞன ஸாது வந்திருக்கும் சமாசாரம் ஊரெங்கும் பரவியது. ஆகவே நூற்றுக்கணக்கான ஜனங்கள் பல பக்ஷணாதிகளைக் காணிக்கையாகக் கொண்டு, அவரைத் தரிசிக்க வந்தனர். ஸாதுவின் முன்னால், பொன் வெள்ளி நாணயங்கள் குவியத்தொடங்கின. அப்போது அந்தச் செம்படவன் "என்ன ஆச்சரியம்! நான் உண்மையான ஸாது அல்லன்; என்றாலும் ஜனங்கள் எனக்கு இவ்வளவு மரியாதை காட்டுகிறார்கள். வாஸ்தவமான ஸாதுவாக நான் இருந்தால் எனக்கு ஈசுவர தரிசனம் கிடைப்பது நிச்சயம்" என்று தன்னுள்ளேயே நினைத்துக்கொண்டான். இவ்விதம் அச்செம்படவன், கபட வேஷம் காரணமாக நற்போத முண்டாகக் கூடிய மன நிலைமையைப் பெற்றான்.

1104. அனேக ஸித்திகளை அடைந்த ஒரு ஸாது, அது காரணமாகத் தற்பெருமை கொண்டவராக இருந்தார். என்றாலும் அவர் நல்ல குணமுடையவராயும் தபஸ்வியாயும் இருந்தபடியால், அவரை நல்வழிப்படுத்தக் கருதிய ஈசுவரன், ஸந்யாஸி வேஷத்துடன் அவர் முன் வந்து, "சுவாமி! தாங்கள் அனேகம் ஸித்திகளை அடைந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்" என்றார். ஸாது, வந்த ஸந்யாஸியை மரியாதையுடன் வரவேற்று, உட்காரும்படி சொன்னார். அத்தருணத்தில் அங்கு ஒரு யானை வந்தது. சந்யாஸி சாதுவைப் பார்த்து, "சுவாமி! அந்த யானையைக் கொல்ல முடியுமா?" என்று கேட்டார். "முடியும்" என்று சாது சொல்லி, ஒரு பிடி மண்ணை எடுத்து மந்திரித்து யானையின்மேல் எறிந்தார். உடனே அந்த யானை வேதனைப்பட்டு விழுந்து உயிரிழந்தது. இதைப் பார்த்த சந்யாஸி; "தங்களுடைய சக்தி எவ்வளவு அபாரமானது! தாங்கள் எவ்வளவு சுலபமாக யானையைக் கொன்றுவிட்டீர்கள்?" என்றார். இந்தப் புகழ்ச்சியைக் கேட்ட ஸாதுவுக்குச் சந்தோஷ முண்டாயிற்று. அப்பால் சந்யாஸி, "ஆமாம் இந்த யானையைப் பிழைக்கச்செய்ய முடியுமா?" என்று கேட்டார். அதற்கும் நமது சாது "முடியும்" என்று சொல்லி, ஒரு பிடி மண்ணை எடுத்து முன்போலவே யானையின்மேல் எறிந்தார். உடனே அது உயிர்பெற்று எழுந்தது. பின்னர் சந்யாஸியானவர், "சுவாமி! தங்களுடைய சக்தி அபாரமானதுதான். ஆனால் தங்களை

ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இப்போது தாங்கள் யானையைக் கொன்று, மறுபடியும் அதைப் பிழைப்பூட்டினீர்கள். ஆயினும் அதனால் தங்களுக்கு உண்டான பயன் யாது? அது தங்களுக்கு எப்படிப்பட்ட அபிவிருத்தியைக் கொடுத்தது? தாங்கள் ஈசுவரனை அடைவதற்கு அது உதவி செய்ததா?'' என்று சொல்லிவிட்டு அந்தர்த்தியான மாயினர்.

1105. விறகு வெட்டி ஒருவன் தான் தினந்தோறும் அருகிலுள்ள காட்டிலிருந்து வெட்டிக்கொண்டு வரும் விறகுச் சுமையை விற்று, அதனால் வரும் சொற்பப் பணத்தைக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்துவந்தான். ஒருநாள் அவன் காட்டில் விறகு வெட்டிக்கொண்டிருக்கையில் அவ்வழியாய்ச் சென்ற சாது ஒருவர், அவன் வேலை செய்வதைப் பார்த்து, இன்னும் காட்டுக்குள்ளே சென்று வேலை செய்தால் அவனுக்கு லாபம் கிடைக்குமென்று சொன்னார். அவன் அவருடைய வார்த்தையைக் கேட்டுக் காட்டினுள் போகையில், ஒரு சந்தனமரம் தென்பட்டது. அதை வெட்டித் தான் சுமக்கக்கூடிய அளவு சந்தனக் கட்டைகளைத் தூக்கிக்கொண்டு கடைக்குச் சென்று விற்று அதிக லாபம் அடைந்தான். பிறகு அவன், "சந்நியாஸி என்னைப் பார்த்து, இன்னும் கொஞ்சம் தூரம் சென்றால் சந்தனமரம் கிடைக்கும் என்று சொல்லவில்லையே; காட்டுக்குள்ளே போனால் லாபம் கிடைக்குமென்று தானே சொன்னார்" என்று அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கினான். மறுநாள் அவன் சந்தனமரம் அகப்பட்ட இடத்தையும் தாண்டி இன்னும் அப்பால் போக, அங்கு ஒரு தாமிரச் சுரங்கமிருக்கக் கண்டான். அதிலிருந்து தன்னால் தூக்கக்கூடிய அளவு தாமிரத்தை எடுத்துச்சென்று கடையில் விற்று மிகவும் லாபத்தை அடைந்தான். அடுத்தநாள் தாமிரச் சுரங்கத்தினிடம் நிற்காமல் சாதுசொன்னபடி இன்னும் கொஞ்சதூரம் உள்ளேபோக, அங்குத் தென்பட்ட வெள்ளிச் சுரங்கத்திலிருந்து தூக்கக்கூடிய வெள்ளியை எடுத்துவந்து விற்று இன்னும் அதிகமாகப் பணத்தைச் சம்பாதித்தான். நாளுக்குநாள் அவன் காட்டினுள்ளே அதிக தூரம் செல்லச் செல்ல பொன் சுரங்கமும், வைரச் சுரங்கமும் தென்பட, அவைகளினால் அளவற்ற செல்வனாகிவிட்டான். ஞானமார்க்கத்தில் செல்லுபவனுடைய விஷயமும் இப்படிப்பட்டதுதான். ஏதோ கொஞ்சம் அபூர்வமான சித்திகளைப் பெற்றதும் அவைகளுடன் நின்றுவிடாமல், ஒருவன் மேன்மேலும் முன்னேறிச் செல்வானால், முடிவில் மேலான பரம்பொருளை யடைந்து உண்மையான ஞானச் செல்வத்தை உடையவனாவான்.

1106. அக்பர் சக்கரவர்த்தி அரசாண்ட காலத்தில், டில்லிக்குச் சமீபமான காடொன்றில் ஒரு பக்கிரி (சாது) குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார். அனேக ஜனங்கள் அந்த சாதுவிடம் போவதுண்டு. ஆனால் அவரிடம் பொருள் ஒன்றும் இல்லையாதலால், வந்தவர்களை உபசரிப்பது சாத்தியமில்லாதிருந்தது. அதை நிவர்த்திக்கும்பொருட்டுக் கொஞ்சம் பணத்தைப் பெறவேண்டுமென்று நினைத்த அந்தப் பக்கிரி,

சாதுக்களை அபிமானிக்கும் அக்பரிடம் சென்றனர். அவ்வேளையில் அக்பர் தொழுதுகொண்டிருந்தனர். சாதுவும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து தொழுதனர். அந்தச் சந்தர்ப்பத்தில், “ஈசனே! எனக்கு இன்னும் செல்வம், செல்வாக்கு, ராஜ்யம் இவைகளைக் கொடுத்தருள வேண்டும்” என்று அக்பர் பிரார்த்தித்ததை இந்த சாது கேட்டு, உடனே அவ்விடம் விட்டு எழுந்துபோகத் தொடங்கினர். ஆனால் அக்பர் அவரைக் கூப்பிட்டுத் திரும்பவும் உட்காரும்படி சொன்னார்.

தொழுகை முடிந்ததும் அக்பர் அந்தப் பக்கிரியைப் பார்த்து, “தாங்கள் என்னைக் காண வந்தீர்கள். ஆனால் என்னிடம் எதையும் சொல்லாமல் திரும்பிப்போக எண்ணிய காரணம் என்ன?” என்று கேட்டார்.

பக்கிரி, “சக்கரவர்த்தியாகிய தங்கள் ஸமூகத்துக்கு ஒரு காரியத்தை உத்தேசித்து வந்தேன்; ஆனால் அதை இப்போது சொல்லித் தங்களை சிரமப்படுத்த வேண்டாமென்று நினைக்கிறேன்” என்றார்.

வந்த காரியத்தைச் சொல்லும்படி அக்பர் பன்முறை வற்புறுத்திய தன் மேல், “ராஜனே! அனேக ஜனங்கள் உபதேசம் பெறும்பொருட்டு என்னிடம் வருகின்றனர். ஆனால் என்னிடம் பொருளில்லாமையால், அவர்களுடைய சௌகரியங்களைக் கவனிக்க ஏதுவில்லாமல் சிரமப்படுகிறேன். தங்களைக் கேட்டுக் கொஞ்சம் பணம் பெறலாமென்று வந்தேன்” என்றார் பக்கிரி.

“அப்படியானால் ஏன் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்காமல் போகிறீர்கள்?”

“ராஜனே! நீங்களே செல்வம், செல்வாக்கு, ராஜ்யம் இவைகளை வேண்டி ஈசுவரனிடம் யாசித்தீர்கள்! ஆதலால் ஒரு யாசகனிடம் இன்னொரு யாசகன் ஏன் யாசிக்க வேண்டும்? யாசகம் வாங்காமல் காரியத்தை முடிக்க முடியாதென்று கண்டால், ஈசுவரனிடத்திலேயே யாசித்துக்கொள்ளலாம் என்று நினைத்துப் புறப்பட்டேன்” என்றார் பக்கிரி.

1107. ஒரு பிராம்மணனும் ஒரு சந்யாஸியும் சந்தித்து வெகு நேரம் லௌகிக வைதீக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியாக, சந்யாசி பிராம்மணனை நோக்கி, “பாரப்பா, இவ்வுலகத்தில் ஒருவரை யொருவர் சார்ந்திருப்பதென்பதே இல்லை” என்றார். பிராம்மணனுக்கு இதில் நம்பிக்கை உண்டாகவில்லை. இரவும் பகலும் அவனுடைய குடும்பத்தாருக்காக அவன் வருந்திப் பாடுபடவில்லையா? அப்படி யாருக்காகப் பாடுபடுகிறானோ அவர்கள் அவனுக்குத் துணை செய்யமாட்டார்களா? ஆகவே, பிராம்மணன் சந்யாஸியைப் பார்த்து, “சுவாமி! எனக்குச் சற்றுத் தலைவலியுண்டானாலும், எனக்காக உயிரைக்கூட விடக்கூடிய என் தாயார் பெரிதும் வருந்துகிறாள்; அப்படிப் பட்டவள் எனக்குத் துணையாகமாட்டாள் என்பதை நான் நம்பவில்லை”

என்றான். சந்யாஸியானவர், " அப்பா ! நீ சொல்வது வாஸ்தவமானால் அவள் உனது துணைவிதான். ஆனால் உண்மையைச் சொல்லுமிடத்து உனது அபிப்பிராயம் தப்பென்றே சொல்லுவேன். உனது தாய், மனைவி, மக்கள் இவர்கள் உனக்காக ஒருபோதும் தங்களுடைய உயிரை விடமாட்டார்கள் என்பதை நம்பு. வேண்டுமானால் இதை நீ சோதிக்கலாம். வீட்டுக்குப் போனதும், உனக்குப் பொறுக்க முடியாத வயிற்று வலி இருப்பதாகச் சொல்லி ஓலமிடு. நான் வந்து வேடிக்கை காட்டுகிறேன் " என்றார்.

பிராம்மணன் அப்படியே செய்தான்.வைத்தியர்கள் பலர் வந்தனர். ஆயினும் அவனது நோய்க்குக் குணம் ஏற்படவில்லை. நோயாளியின் தாயார் பெருமூச்சு விட்ட வண்ணமாகவே இருந்தனள். அவனுடைய மனைவி மக்கள் கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தனர். அத்தருணத்தில் மேற்கூறிய சந்யாஸி உள் நுழைந்தார். நோயாளியைப் பார்த்துவிட்டு அவர், " இந்த வியாதி வெகு கடுமையானது ; இதற்குச் சிகிச்சை ஒன்றுமில்லை. ஆனால், யாராவது ஒருவர், இவனுக்காகத் தமது உயிரை விடுவதாக விருந்தால் குணம் உண்டாகலாம் " என்றார். இதைக் கேட்டதும் எல்லாரும் திடுக்கிட்டுப் போயினர். சந்யாஸி நோயாளியின் தாயைப் பார்த்து, ' அம்மா, உன் தள்ளாத வயதில், உங்களை யெல்லாம் காப்பாற்றுகிற மகனை இழக்கும்படி நேருமானால், நீ இருப்பதும் இறப்பதும் ஒன்றுதான். உன் மகனுக்காக நீ உயிரை விடத் துணிவாயானால், நான் உன் மகனைக் காப்பாற்றக்கூடும். தாயாகிய நீயே இந்தப் பிரகாரம் செய்யாமல் போனால் வேறு யார் செய்வார்?" என்றார்.

கிழவி கண்ணுங் கண்ணீருமாய் நின்று தழுதழுத்த குரலில், " சுவாமி ! எனது மகனுக்காகத் தேவரீர் சொல்வதை யெல்லாம் செய்யத் தயாராக விருக்கிறேன் ; ஆயினும் என் உயிர்—இல்லை இல்லை, என் மகன் உயிரைக் காட்டிலும் என் உயிர் மேலானதா ?—என் மற்றக் குஞ்சு குழந்தைகளின் கதி என்னவாகுமென்பதுதான் என்னை வருத்துகின்றது. இவைகள் எனக்குக் குறுக்காக விருந்து தடுக்கின்றன " என்றாள்.

இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த நோயாளியின் மனைவி பிரமாதமாக அழுது, தனது பெற்றோர்களை விளித்து, " ஐயோ, உங்கள் பொருட்டல்லவா நான் இப்பொழுது உயிரை விடமுடியாதவளாய் இருக்கிறேன் " என்று புலம்பினாள். சந்யாசி அவளைப் பார்த்து, " அம்மா ! உனது மாமியார் உன் புருஷனுக்காக உயிரை விடத் துணியவில்லை. நீயாவது துணிவாயா ?" என்று கேட்டார். " ஐயோ ! நான் கொடிய பாவி ! நான் தாலி அறுத்துப் போகவேண்டுமென்பது விதியானால் போகிறேன். என் உயிர் போனால் என் பெற்றோர்கள் தவிப்பார்கள் !" என்றாள். இவ்விதம் ஒவ்வொருவராக மறுத்துவிட்டனர். அப்பால், சந்யாஸி நோயாளியைப்

பார்த்து, "பார்த்தாயா! ஒருவராவது உனக்காகத் தமது உயிரை விடத் துணியவில்லை. உலகத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருப்ப தில்லை என்று நான் சொன்னதை இப்போதாவது தெரிந்துகொண் டாயா?" என்றார். அதை யெல்லாம் கண்ட பிராம்மணன், கிருகஸ் தாசிரமத்தை விட்டுவிட்டு சந்யாஸியைத் தொடர்ந்து போனான்.

1108. தன் மனைவி தன்னை அத்யந்தம் நேசிக்கிற காரணத் தாலேதான் சந்நியாசம் பெறவில்லை யென்று ஒரு சிஷ்யன் தன் குருவி னிடம் சொன்னான். அந்தச் சிஷ்யன் ஒரு ஹடயோகி; அவனுக்கு ஏதோ ஒரு ரகஸியத்தை குரு சொல்லிக்கொடுத்தார். ஒருநாள் திடீ ரென்று, இந்தச் சிஷ்யனுடைய வீட்டில் அமளிகுமளியும் அழுகைக் குரலும் கேட்டன. அண்டை அயலார்கள் வந்து பார்க்க, இந்த ஹட யோகி அசைவற்று ஓர் அறையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டனர். அவனது அவயவங்கள் கோணிப்போன நிலைமையில் இருந்தன. இவ னுக்கு உயிர் போய்விட்டதென்று எல்லோரும் நினைத்தனர். அவ னுடைய மனைவி, "பிராணநாதா! ஐயோ! நீர் எங்களை யெல்லாம் கைவிட்டு விட்டு, எங்கே போய்விட்டீர்! இப்படிப்பட்ட துக்கம் எங்க ளுக்கு வருமென்று நாங்கள் நினைக்கவுமில்லையே!" என்று பிரலாபிக்கத் தொடங்கினாள். இதன் மத்தியில், பந்துக்கள், பிணத்தைத் தகனம் செய்ய எடுத்துப் போவதற்காக, ஒரு பாடையைக் கட்டிக் கொணர்ந்த னர். அப்போது சில சங்கடங்கள் உண்டாயின. ஹடயோகியின் சரீரம் கோணலான நிலைமையில் இருந்தபடியால் வாசற்படி வழியாக அது வருவதற்கில்லாதிருந்தது. உடனே, ஒருவன் கோடரியைக் கொணர்ந்து நிலைப்படியை இடிக்கத் தொடங்கினான். அது வரையில் துக்கமேலீட்டால் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்த ஹடயோகி யின் மனைவி, கோடரிச் சப்தத்தைக் கேட்டதும் ஓடிவந்து, சங்கதி என்னவென்று கேட்டாள். அவளுடைய கணவனின் சரீரம் வாசற்படி வழியாக வருவதற்கில்லாதபடியால், நிலைப்படியைப் பெயர்க்கவேண்டி யிருப்பதாக ஒருவன் பதில் சொன்னான். அப்பால் அவள், "கூடாது, கூடாது. இடிக்காதேயுங்கள். நான்தான் விதவையாய்ப் போய்விட் டேன். என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லை. எனது அநாதைக் குழந்தைகளை நான் காப்பாற்றவேண்டி யிருக்கிறது. நிலைப்படியை இப் போது இடித்துவிட்டால், அதை மறுபடியும் பழுது பார்க்கமுடியாது. என் கணவனுக்கு நேரவேண்டியது நேர்ந்துவிட்டது. வேண்டுமானால் பிணத்தின் கைகால்களை வெட்டி வெளியே கொண்டுவாருங்கள்" என்றாள். இவள் இவ்வார்த்தைகளைச் சொன்னதும், ஹடயோகி சாப் பிட்ட மருந்தின் வேகம் மறைந்ததும் ஏககாலத்தில் நிகழ்ந்தன. ஆகவே, அவன் இவள் வார்த்தையைக் கேட்டு எழுந்து நின்று, "துஷ்டை! எனது கைகால்களை வெட்ட வேண்டுமென்றா சொன்னாய்!" என்று கூவிக்கொண்டு, வீடுவாசல்களைத் துறந்துவிட்டுக் குருவுடன் கூடப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மாயையின் இயல்பு

1109. ஒரு மனிதன் ஒரு காட்டுவழியே போய்க்கொண்டிருந்தான். வழியில் மூன்று திருடர்கள் அவனை மடக்கிப் பிடித்துக் கொண்டனர். அவனிடம் இருந்த பொருள்கள் எல்லாவற்றையும் அவர்கள் பிடுங்கிக் கொண்டனர். அப்பால் முதல் திருடன், "இவனை உயிருடன் வைத்திருப்பதில் என்ன லாபம் ?" என்று சொல்லித் தன் கத்தியை உருவி அவனை வெட்டப்போனான். அப்போது இரண்டாவது திருடன், "இவனைக் கொல்வதனால்தான் லாபம் என்ன ? கைகால்களைக் கட்டி ஒரு பக்கத்தில் போட்டுவிட்டுப் போகலாம்" என்றனன். உடனே அவர்கள் அப்படியே செய்து சாலையின் பக்கத்தில் அவனைப் போட்டு விட்டுச் சென்றனர். அவர்கள் கொஞ்சதூரம் சென்றதும், மூன்றுவது திருடன் திரும்பி இவனிடம் வந்து, "அப்பா! உனக்கு நோகிறதா? நான் உன் கட்டுக்களை அவிழ்த்து உன்னை விடுதலை செய்கிறேன் ; இரு" என்று சொல்லிக் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, "என்னுடன் வா ; வழியைக் காட்டுகிறேன்" என்று வெகு தூரம் அழைத்துக்கொண்டு போனான். அப்பால் அவன், "அதோ பார் ; உன் வீடு தெரிகிறது ; இந்த வழியே போவாயானால் சீக்கிரம் வீடுபோய்ச் சேருவாய்" என்றான். இதைக் கேட்டதும் இவன் நன்றியறிவுடன், "அப்பா ! நீ எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்திருக்கிறாய். என்னுடன்கூட எனது வீட்டிற்கு வரக்கூடாதா ?" என்று கேட்டான். அதற்குத் திருடன், "நான் வரக்கூடாது. போலீஸார் வந்து பிடித்துக்கொள்வார்கள்" என்று சொல்லிப் போய்விட்டான்.

இந்த உலகந்தான் அந்தக் காடு. ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் மேற்கூறிய மூன்று திருடர்கள். ஜீவன்தான் காட்டுவழியே போன பிரயாணி. ஆத்மஞானம் அவனிடம் இருந்த பொருள். தமோ குணமும் ரஜோகுணமும் உலக பந்தங்களாகிய சங்கிலியால் அவனைக் கட்டுகின்றன. உலக பந்தங்களிலிருந்து, அவனை ஸத்வகுணம் காப்பாற்றுகின்றது. ஸத்வ குணத்தைச் சரணமடையும் ஜீவன் தமோ ரஜோ குணங்களின் பயன்களாகிய காமக் குரோதாதி மாயைகளினின்றும் விடுதலையடைகின்றது. உலக பந்தங்களினின்றும் ஜீவனைக் கரையேற்றுவது அந்த ஸத்வ குணந்தான். என்றாலும் அந்த ஸத்வகுணமும் ஒரு திருடனே. பரமபதத்துக்குச் செல்லும் வழி வரையில் ஒருவனை அது அழைத்து வந்து, "அதோ உன் வீட்டைப் பார்" என்று சொல்லிவிட்டு மறைந்துவிடுகிறது. ஸத்வ குணமும் பரமபதத்தினருகே செல்லாது.

1110. ஒரு குரு, தன் சிஷ்யனுடைய கிராமத்துக்குப் போய்க் கொண்டிருந்தார். தன்னுடன் கூட வேலைக்காரன் ஒருவனும் வராதபடியால், அவர் வழியில் நின்ற ஒரு சக்கிலியனைப் பார்த்து, "அடே ! நீ எனக்கு வேலையாளாக வருவாயா ? நல்ல சாப்பாடு கிடைக்கும். மற்றும், உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுகிறேன் ; வா" என்றார்.

அதற்குச் சக்கிலியன், "சுவாமி, நான் தாழ்ந்த ஜாதியான். தங்களுடைய வேலையாளாய் எப்படி இருக்கமுடியும் ?" என்றான். "பாதகமில்லை ; நீ இன்னானென்று ஒருவரோடும் சொல்லாதே. நீ ஒருவரோடும் பேசாதே ; ஒருவரோடும் சாகவாசம் செய்யாதே" என்று குரு சொன்னார். சக்கிலியன் இதற்கிணங்கி, அவருடைய வேலையாளாகப் போனான். சாயங்கால வேளையில், குருவானவர் சிஷ்யன் வீட்டில் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருக்கையில், இன்னொரு பிராம்மணன் வந்து குருவின் வேலையாளை நோக்கி, "அடே ! என்னுடைய பாதரக்ஷை அங்கிருக்கிறது. போய் எடுத்துவா" என்றான். குரு சொல்லியிருக்கிற வார்த்தையின்படி, இந்தச் சக்கிலியன் பதில் சொல்லாமலிருந்தான். பிராம்மணன் அடுத்தடுத்துச் சொல்லியும் இவ்வேலைக்காரன் கேட்காமலிருந்தபடியால், அவன் கோபங்கொண்டு, "அடே! நீ சக்கிலியனா ? பிராம்மணன் சொல்லும் வார்த்தையைக் கேட்கக்கூடாத கர்வம் எங்கிருந்து உனக்கு வந்தது ? உன் பெயர் என்ன ?" என்று கேட்டான். இதைக் கேட்டதும், சக்கிலியன் நடுநடுங்கிப் போய், "சுவாமி, என்னைக் கண்டுபிடித்து விட்டீர்கள். நான் இனிமேல் இங்கிருக்கக்கூடாது" என்று சொல்லிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். இதைப்போல், மாயையை இன்னதென்று அறிந்துகொண்டால், அது உடனே விலகிப்போய்விடும்.

1111. மாயையை அறியமுடியாது. ஒரு சமயம், நாரதர் ஸர்வேசுவரனைப் பார்த்து, "சுவாமி ! முடியாத காரியத்தை முடிக்க வல்ல தங்களுடைய மாயையை எனக்குச் சிறிது காட்டியருளவேண்டும்" என்றார். ஆகட்டும் என்று சர்வேசுவரன் சொல்லிச் சில நாள்களுக்குப் பின், நாரதருடன் பிரயாணப்பட்டார். கொஞ்சதூரம் சென்றதும் ஸர்வேசுவரனுக்குத் தாகம் எடுத்தது. சிரமம் அதிகமாகியபடியால் அவர் கீழே உட்கார்ந்து கொண்டு, நாரதரை நோக்கி, "நாரதா ! எனக்குத் தாகம் அதிகமாக இருக்கிறது ; எங்கிருந்தாவது கொஞ்சம் ஜலம் கொண்டுவா" என்றனர். நாரதர் ஜலத்தைத் தேடிக்கொண்டு புறப்பட்டுப் போனார்.

சமீபத்தில் ஓரிடத்திலேயும் ஜலம் அகப்படாதபடியால் நாரதர் வெகுதூரம் சென்றனர். அங்கு ஆறு ஒன்று ஓடுவதுபோலத் தெரிந்தது. அவ்விடத்தை யடைந்தபோது, அங்கு ரூபலாவண்யங்களில் நிகரற்ற ஒரு நங்கை உட்கார்ந்திருப்பதை நாரதர் கண்டு, உடனே அவள் அழகில் ஈடுபட்டுவிட்டார். நாரதர் சமீபத்தில் வந்தவுடன், அவள் இவரை இன்சொல்லால் அழைக்கத் தொடங்கினள். அதிசீக்கிரத்தில் இருவரும் ஒருவர்மீதொருவர் காதல் கொண்டனர். ஆகவே, நாரதர் அவளுடன் கூடி இல்லறவாழ்வை நடத்தத் தொடங்கினார். காலக்கிரமத்தில், அவளுக்கு நாரதர் மூலமாக அனேகம் குழந்தைகள் பிறந்தன. இப்படி நாரதர் மனைவி மக்களுடன் இன்பமாய்க் காலம் கழிக்கையில், தேசத்தில் கொடிய நோய் ஒன்று தலைப்பட்டு, மூலை முடுக்குகளிலெல்லாம் மரணத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அப்போது அவ்விடத்தை விட்டுவிட்டு, வேறிடத்துக்குப் போகலாமென்று நாரதர்

யோசித்தனர். அவருடைய மனைவியும் இதற்கிணங்கி, குழந்தைகளின் கைகளைப் பிடித்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டனள். வழியில் ஓர் ஆற்றுப்பாலத்தின் மீது இவர்கள் சென்றபோது கரைபுரண்டு வந்த வெள்ளத்தில் இவர்களுடைய குழந்தைகள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டன. நாரதருடைய மனைவியும் ஆற்றில் மூழ்கிப் போய் விட்டாள். துக்கத்தில் மூழ்கிய நாரதர், ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு வெகுவாகப் பிரலாபித்து அழத் தொடங்கினர். அந்த ஸந்தர்ப்பத்தில், சர்வேசுவரன் தோன்றி, "நாரதா! ஜலம் எங்கே? நீ ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். ஈசுவரனைக் கண்டதும் நாரதருக்குத் தயக்கம் உண்டாகியது. அப்பால் அவர் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, "பிரபோ! உமக்கு ஒரு நமஸ்காரம்; உமது ஆச்சரியமான மாயைக்கும் ஒரு நமஸ்காரம்" என்று சொல்லி வணங்கினர்.

1112. ஒரு காலத்தில் பெண் புலியொன்று ஓர் ஆட்டுக் கூட்டத்தின்மீது பாய்ந்தது. அப்போது, அப்புலி பூர்ண கர்ப்பமாக இருந்தது. ஆடுகளின்மீது பாய்ந்த வேக அதிர்ச்சியினல் ஒரு குட்டியை ஈன்று உயிரை விட்டது. குட்டித் தப்பிப் பிழைத்து, ஆட்டுக் கூட்டத்தினிடையே வாழத் தலைப்பட்டது. புலங்களில் ஆடுகள் மேயும்போது, புலிக்குட்டியும் அவ்வாறே செய்யும். ஆடுகள் கத்தினல் புலிக்குட்டியும் அப்படியே கத்தும். காலக்கிரமத்தில் இந்தக்குட்டி முதிர்ந்த புலியாகியது. அப்போது ஒருநாள் வேறொரு புலி, இந்த ஆடுகளினிடையே பாய்ந்தபோது, ஆட்டுச் சுபாவத்தையுடைய புலியைக் கண்டது. உடனே அந்தப் புதிய புலி, இதைத் துரத்திச் சென்று கழுத்தைப் பற்றிப் பிடித்தது. பிடிபட்டதும் இது ஆட்டைப் போலக் கத்தியது. அப்பால் அந்தப்புலி இந்தப் புலியை ஒரு குளக் கரைக்கு இழுத்துக்கொண்டு போய், தண்ணீரில் அதன் நிழலைக்காட்டி, "இதோ பார்; என் உருவமும் உன் உருவமும் ஒரே மாதிரியாக உள்ளன. நீயும் என்னைப்போல ஒரு புலிதான். இந்த மாமிசத்தைத் தின்னு" என்று சொல்லி, ஒரு துண்டம் மாமிசத்தை அதன் வாயில் திணித்தது. முதன் முதலில் இந்த ஆட்டுப்புலி அதைத் தின்ன மாட்டேனென்றது. அது ஆட்டைப்போலக் குரலிட்டு, தான் ஓர் ஆடெனவே சொல்லிற்று. அப்பால், அது ரத்தச் சுவையைக் கொஞ்சம் அறிந்ததும், உள்ளே மறைந்துகிடந்த புலிச் சுபாவம் தலையெடுக்க, மாமிசத்தைத் தின்னத் தொடங்கியது. அப்பால் அந்தப் புதுப்புலி, "நீயும் என்னைப் போன்றவன் என்பதை இப்போது தெரிந்துகொண்டாயல்லவா? இனி என்னோடுகூடக் காட்டுக்கு வா" என்று சொல்லி அழைத்துப்போயிற்று. இதுபோல ஒருவனுக்குக் குருவினுடைய அருள் இருக்குமானல் பயமே இல்லை. அந்தக் குரு உன் கண்களைத் திறந்து, நீ யார் என்பதை, வாஸ்தவத்தில் உனது ஆத்மா இன்னதென்பதை சொல்லுவார்.

1113. ஆத்ம விசாரம் செய்வதால் மனம் பரிபூர்ணமான சாந்தியை யடையும் நிலைமையில் பரப்பிரம்மம் தோன்றும்.

ஒரு மனிதன் ராஜாவைக் காண எண்ணினன். ராஜாவோ ஏழு வாசற்படிகளுக்கப்பால் அரண்மனையின் உள்ளே வாழ்ந்தனன். அம் மனிதன் அரண்மனைக்கு வந்து, முதல் வாசலண்டை படாடோபத்துடனும் பரிவாரங்களுடனும் ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். கண்டதும் தன் துணைவனிடம், "இவன்தான் ராஜாவோ ?" என்று கேட்டான். துணைவன் சிரித்துக்கொண்டு "இவன் அல்லன்" என்றான். அப்பால் அவன் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது வாசல்களையும் தாண்டினன். ஒவ்வோரிடத்திலும் படாடோபம் ஜாஸ்தியாகவே இருந்தது. உள்ளே போகப்போக, அழகும் காம்பீர்யமும் அதிகமாகவே விளங்கின. ஒவ்வொரு வாசற்படியிலும் உட்கார்ந்திருந்தவனை அரசன்தானோ என்று இவன் கேட்ட வண்ணமாகவே இருந்தனன். ஆனால், அவன் ஏழாவது வாசற்படியைக் கடந்து சென்று அரசனை நோக்கி நேரில் கண்டபோது, "இவன்தான் அரசனோ?" என்ற கேள்வி கேட்கவேண்டிய அவசியமில்லாதிருந்தது. அரசனுடைய அளவற்ற காம்பீர்யத்தைக் கண்டதும் இவன் ஆச்சரியத்தால் மௌனமுற்றான். பெருமை படைத்த அரசன்முன்னர் தான் நிற்பதாகவே அவன் உடனே தனக்குள் நிச்சயித்துக் கொண்டான்.

கடவுளைக் காணல்

1114. ஈசுவர பக்தியிலும் கற்பிலும் சிறந்த ஒரு ஸ்திரீ இருந்தாள். தன் புருஷனுக்கும் குழந்தைக்கும் அவள் மிகுந்த பிரியத்துடன் பணிவிடை செய்த போதிலும் ஈசுவரனிடத்தில் திடமாகச் செலுத்திய மனமுடையவளாக இருந்தாள். அவளுடைய புருஷன் இறந்து, கர்ம காரியங்கள் முடிந்த பிறகு, அவள் தன் கையில் தரித்திருந்த கண்ணாடி வளையல்களை உடைத்தெறிந்து, அவைகளுக்குப் பதிலாகப் பொன் வளையல்களை அணிந்துகொண்டாள். இவளுடைய விபரீதமான நடத்தையைக் கண்டு ஆச்சரியமடைந்த ஊராருக்கு, "இதுவரையில் எனது கணவரின் சரீரம் கண்ணாடி வளையலைப்போல உடைந்துபோகும் சுபாவத்தைப் பெற்றிருந்தது. அந்த நசிக்கக்கூடிய சரீரம் போய்விட்டது. இப்போது அவர் எல்லா விதத்திலும் பரிபூரணராயும் மாறாத சுபாவமுடையவராயும் இருக்கிறார். அவருடைய சரீரம் இனிமேல் அழியாது. ஆதலால்தான், அழிந்துபோகக்கூடிய கண்ணாடி வளையல்களுக்குப் பதிலாகச் சாசுவதமான சுபாவமுள்ள பொன் வளையல்களைத் தரித்துக்கொண்டேன்" என்று அவள் பதில் சொன்னாள்.

1115. ஒரு சமயம் தக்ஷிணேசுவரத்துக்கு, பிதாவும் மகனுமான சாதுக்கள் இருவர் வந்தனர். மகனுக்கு உண்மையான ஞானம் வந்திருந்தது. பிதாவுக்கு அந்த ஞானம் வரவில்லை. அவ்விருவரும் பரமஹம்ஸர் இருந்த அறையில் உட்கார்ந்து அவருடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தனர். அத்தருணத்தில், ஒரு சிறிய பாம்பு, ஒரு புற்றி

விருந்து கிளம்பி வந்து, மகனைக் கடித்துவிட்டது. அதைக் கண்ட பிதா, வெகுவாகப் பயந்துபோய், பக்கத்திலுள்ளவர்களைக் கூப்பிடத் தொடங்கினார். பையனோ, கொஞ்சங்கூடச் சஞ்சலப்படாமல் உட்கார்ந்திருந்தான். இது பிதாவுக்கு இன்னும் மனக்கலக்கத்தைக் கொடுத்தது. "ஏன் கலங்காமல் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று பிதா கேட்க, பையன் சிரித்துவிட்டு, "பாம்பு எது? அது யாரைக் கடித்தது?" என்று சொன்னான். சர்வமும் ஒன்று என்பதை அவன் அறிந்து கொண்டிருந்தபடியால், பாம்புக்கும் மனிதனுக்கும் யாதொரு வித்தியாசத்தையும் காணவில்லை.

1116. மாட்டிக்குமிடத்திலிருந்து ஒரு பறையன், தன் கழுத்தில் வைத்த காவடியின் இரு பக்கங்களிலும் தொங்கவிட்ட கூடைகளில் மாமிசத்தைக் கொண்டு வந்தான். வரும் வழியில் அவன், ஆற்றுக்குப் போய் ஸ்நானம் செய்து திரும்பிய சங்கராசாரியாரைச் சந்திக்க நேர்ந்தது. தற்செயலாய் அவன் தவறி அந்த மஹான்மேல் பட்டுவிட்டான். உடனே சங்கரர் அவன்மீது கோபங்கொண்டு, "அடே சண்டாளா! நீ என்மேல் பட்டுவிட்டாயே" என்றார். அதற்குப் பறையன், "சுவாமி! நான் தங்கள்மீது படவுமில்லை. தாங்களும் என்மீது படவில்லை. தங்கள் ஆத்மாவானது சரீரமா, மனமா, புத்தியா? இவைகளில் எது? தாங்கள் யார்? எனக்குச் சொல்லுங்கள். இந்த உலகமானது எந்த ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களால் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அவை ஒன்றோடும் உண்மையான ஆத்மா சம்பந்தப்பட்டிருப்பதில்லை என்பதைத் தாங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்களே" என்றான். சங்கரர் வாய் பேசாது நின்று விழிக்கலானார்.

1117. "நான் யார்" என்ற ஞானத்தை உபதேசம் செய்யும் எண்ணத்துடன் ஒரு சாது, தனது சிஷ்யனை ஒரு மனோஹரமான உத்யான வனத்தில் விட்டுச் சென்றார். அவர், சில நாட்கள் சென்ற பின் அங்கு வந்து, "குழந்தாய்! உனக்கு ஏதாவது தேவை யிருக்கிறதா?" என்று கேட்டார். அவன் விரும்பியபடியே, அவர் சியாமா என்ற பெயருள்ள ஒரு கட்டழகியை அவனுடன் இருக்கச்செய்து வேண்டியவளவு மாமிசாதிகளைப் புசிக்கும்படிச் சொல்லிப் போனார். வெகுநாள் சென்ற பின் அவர் மறுபடியும் வந்து, முன்போலவே அவனுக்கு இன்னும் ஏதாவது வேண்டுமா என்று கேட்டார். "சுவாமி! எனக்கு ஒன்றும் வேண்டாம்; தங்கள் கிருபையால் நான் திருப்தி யடைந்தவனாக இருக்கிறேன்" என்றான் சிஷ்யன். அப்பால் அந்த சாது, அவ்விருவரையும் கூப்பிட்டு, சியாமாவின் கைகளைச் சிஷ்யனுக்குக் காட்டி, "இவைகள் என்னவென்று சொல்வாயா?" என்று கேட்டார். "ஏன் அவைகள் சியாமாவின் கைகள்" என்று சிஷ்யன் பதில் சொன்னான்.

"இது என்ன?"

"சியாமாவின் மூக்கு."

"இவை என்ன?"

"சியாமாவின் கண்கள்."

இப்படிச் சொல்லிக்கொண்டே போகையில், "நான் ஒவ்வொன்றையும் சியாமாவினுடையது, சியாமாவினுடையது என்று சொல்லிக்கொண்டே வருகிறேன். ஆனால் இந்த சியாமா யாரோ?" என்ற எண்ணம் சிஷ்யனுடைய மனத்தில் உதித்தது. அவன் தடுமாறிய மனத்தனாய், குருவைப் பார்த்து, "சுவாமி! இந்தக் கண் காதுகளையுடைய சியாமா யார்?" என்று கேட்டான்.

"இந்த சியாமாவைப்பற்றி நீ தெரிந்துகொள்ள விரும்புவாயானால் என் பின்னால் வா, உபதேசிக்கிறேன்" என்று சொல்லி, சாது அவனை அழைத்துக்கொண்டு போய் ரகஸியத்தை உபதேசித்தார்.

1118. ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். தகுந்த வயது வந்ததும் அவன் அவ்விரு குமாரர்க்கும் உபநயனம் செய்துவைத்து, வேதாத்தியயனம் செய்யும்படி ஒரு குருவினிடம் ஒப்புவித்தான். நெடுநாள் கழித்து, அக்குமாரர்கள் அத்தியயனத்தை முடித்த பின் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். தகப்பனார், அவர்களைப் பார்த்து, 'நீங்கள் வேதாந்தம் கற்றிருக்கிறீர்களா?' என்று கேட்டார்.

குமாரர்கள், "படித்திருக்கிறோம்" என்றனர். 'அப்படியானால் பிரம்மம் எப்படிப்பட்டதென்பதைச் சொல்லுங்கள்' என்றார் பிதா. மூத்த குமாரன், வேதங்களினின்றும் வேறு சாஸ்திரங்களினின்றும் அநேகம் மேற்கோள்களை எடுத்துக் கூறி, "அப்பா! அது மனோவாக்குக்கு எட்டாதது. இன்னின்ன மாதிரி இருப்பது. அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று சொல்லி, பின்னும் சில ஆதாரங்களை எடுத்துக் கூறி முடித்தான்.

"குழந்தாய்! நீ பிரம்மத்தை நன்றாகத் தெரிந்து கொண்டவன் போலத்தான் இருக்கிறாய். இனி நீ உன் காரியங்களைக் கவனிக்கலாம்" என்று பிதா சொல்லிவிட்டு, இளையவனைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டார். ஆனால் அவன் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லப் பிரயத்தனப்படவுமில்லை. உடனே அவனுடைய பிதா "அப்பா! நீ அறிவிப்பதுதான் சரியானது. அதீத ஸ்வரூபியைப்பற்றி ஒன்றும் விவரித்துச் சொல்ல முடியாது. சொல்லத் தொடங்கினால் அளவற்றதற்கு அளவையும், நித்யத்துக்கு அநித்யத்தையும், ஸம்பந்தமற்றதற்கு ஸம்பந்தத்தையும் சங்கல்பிக்க வேண்டியிருக்கிறது. நீ ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்ததே அநேகமாயிரம் ஆதாரங்களை எடுத்துக் காட்டியதற்கு மேலாகும்" என்றார்.

1119. வித்வானான பிராம்மணன் ஒருவன் விவேகியான ஓர் அரசனிடம் சென்று, "மகாராஜாவே! நான் வேத சாஸ்திர விற்பன்னன். தங்களுக்குத் திவ்ய கிரந்தமான பாகவதத்தைச் சொல்லலாமென்று வந்திருக்கிறேன்" என்றான். பிராம்மணனைக் காட்டிலும் விவேகமுள்ள அவ்வரசன், பாகவதத்தைச் செம்மையாகப் படித்த ஒருவன் தனது ஆத்மாவைப்பற்றி மென்மேலும் அறிந்து கொள்ள

முயற்சி செய்வானேயொழிய, ராஜ ஸபையில் கண்ணியத்தையும் செல்வத்தையும் பெற விரும்பமாட்டானென்று நினைத்து, பிராம்மணனை நோக்கி, "சுவாமி, தாங்கள் இன்னும் பாகவதத்தை நன்றாகப் படிக்கவில்லையென்று தோன்றுகிறது. மறுபடியும் படித்து நன்றாகத் தெரிந்து கொண்டு வந்தால் நான் தங்களுக்குச் சிஷ்யனாவேன்" என்றான். "இத்தனை வருஷங்களாக நான் பாகவதத்தைப் படித்து வந்திருக்க, இந்த அரசன் மதியீனமாய் என்னைப் படிக்காதவன் என்று சொல்லி விட்டானே" என்று தன்னுள் எண்ணிக்கொண்டு திரும்பிப்போன பிராம்மணன் தன் வீட்டுக்குச் சென்று, மறுபடியும் ஒருதரம் பாகவதத்தைப் படித்துவிட்டு, ராஜஸமூகத்துக்கு வந்தான். மறுபடியும் அரசன் முன் சொன்னபடியே சொல்லிப் பிராம்மணனைத் திருப்பியனுப்பினான். பிராம்மணனுக்கு விசனம் வந்தது. ஆனால் அரசன் இப்படிச் சொன்னதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டுமென்று நினைத்து, மறுபடியும் வீட்டுக்குச் சென்று, மனதை ஒருமிக்கச் செய்து, ஏகாந்தமாய் ஓர் அறையில் உட்கார்ந்துகொண்டு பாகவதத்தை வெகு கவனமாகப் படிக்கத் தொடங்கினான். படிக்கப் படிக்க அதன் ரகஸியமான பொருள்கள் புத்தியில் தெளிவாய்ப் படவே, செல்வம், கண்ணியம், ராஜ ஸன்மானம், கீர்த்தி இவைகளைத் தேடிப் போகும் ஆசை அவனுடைய திருஷ்டியிலிருந்து மறைந்து போய்விட்டது. அந்தத் தினம் முதல் அரசனிடம் போகவேண்டுமென்ற எண்ணம் நீங்கி, திடசித்தனாய், ஈசுவர சேவைசெய்து பரிபூரணனாக வேண்டுமென்று தியானத்தில் அமர்ந்து விட்டான். கொஞ்ச காலத்துக்குப் பிறகு, அரசனுக்கு இந்தப் பிராம்மணனுடைய நினைவு வர, அவன் எப்படி யிருக்கிறான் என்று பார்க்க எண்ணி அவன் வீட்டுக்குச் சென்றான். பிராம்மணன் ஈசுவர கடாக்ஷம் பெற்று விளங்குவதைக் கண்ட அரசன் அவன் பாதங்களில் விழுந்து, "சுவாமி! தாங்கள் சாஸ்திரங்களின் பொருளை இப்போது நன்றாக அறிந்து கொண்டிருக்கிறீர்கள். ஏழையின் பேரில் கிருபை கூர்ந்து அடியேனைச் சிஷ்யனாக அங்கிகரிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

1120. ஒரு கிராமத்தில் ஒரு மடம் இருந்தது. அம்மடத்திலிருந்த சந்யாஸிகள் தினந்தோறும் பிக்ஷா பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியே பிக்ஷைக்காகப் போவதுண்டு. ஒருநாள் ஒரு சந்யாஸி அப்படிப் போகும்போது, ஏழைக் குடியானவன் ஒருவனை ஒரு மிராசுதாரன் கடுமையாக அடிப்பதைக் கண்டார். தயாளுவாகிய அந்த சாது, குடியானவனை அடிப்பதை நிறுத்தவேண்டுமென்று மிராசுதாரனைக் கேட்டுக்கொண்டார். கோபத்தால் தன்னை மறந்த மிராசுதாரன் உடனே, சாதுவின்மேல் பாய்ந்து அவரையும் அடி அடியென்று அடித்துவிட்டான். அதனால் அவர் பிரக்ஞையற்றுத் தரையில் விழுந்து விட்டார். இவருடைய நிலைமையைக் கண்ட மனிதன் ஒருவன் மடத்துக்கு ஓடிப்போய் நடந்த சங்கதிகளைச் சொன்னான். அங்கிருந்த மற்ற சந்யாஸிகள் உடனே அவர் விழுந்துகிடக்குமிடத்துக்கு ஓடிவந்து, அவரைத் தூக்கியெடுத்து மடத்துக்குக் கொண்டுபோயினர்; என்று

லும், அவருக்கு நெடுநேரம் வரையிலும் பிரக்ஞை வரவில்லை. ஆதலால் மற்றைய சாதுக்கள் கவலையும் துக்கமுங்கொண்டு, அவருக்குக் காற்று வரும்படி விசிறி, முகத்தைக் குளிர்ந்த ஜலத்தால் துடைத்து, வாயில் பாலை வார்த்து, பிரக்ஞை வருவதற்கான சைத்தியோபசாரங் களைச் செய்துகொண் டிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குத் தம் நினைவுவரத் தலைப்பட்டது. அவர் கண்ணைத் திறந்து மற்றைய சந்யாஸிகளைப் பார்த்ததும், அவர்களில் ஒருவர் அவருக்குத் தம் சகாக்களை அறிந்துகொள்ளக்கூடிய நல்ல ஞாபகம் வந்துவிட்டதா என்று தெரிந்துகொள்ளவேண்டி, "மகராஜ், இப்போது தங்களுக்குப் பால் வார்த்துக்கொண்டிருப்பது யார் என்று தெரிகின்றதா?" என்று கேட்டார். அதற்கு அந்த சாது, "தம்பி, எவன் என்னை அடித்தானோ அவனேதான் இப்போது பால் கொடுத்துக்கொண் டிருக்கிறான்" என்று பதில் சொன்னார்.

ஈசுவர சைதன்யத்தை அடைந்து நன்மை தீமை, பாப புண்யம் இவைகளைக் கடந்து நின்றாலொழிய இப்படிப்பட்ட ஆத்ம சொரூபம் ஸித்தியாகாது.

1121. முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் பத்மலோசனன் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். கிராமத்தார்கள் அவனை "பொடோ" என்று விளையாட்டுப்பேரிட் டழைப்பது வழக்கம். அக் கிராமத்தில் பழையதாய் இடிந்த கோவில் ஒன்றிருந்தது. அதனுள் பூஜாவிக்ரகம் இல்லை. கோவில் முழுவதிலும் புல் பூண்டுகள் நிறைந்து, பக்ஷிகளுக்கும் வௌவால்களுக்கும் வாசஸ்தானமாக இருந்தது. ஒரு நாள் மாலை, திடீரென்று அந்தப் பாழடைந்த கோவிலிலிருந்து மணியோசையும் சங்கத்வனியும் வருவதை ஜனங்கள் கேட்டு, பக்தர் ஒருவர் புதிதாக விக்ரஹப் பிரதிஷ்டை செய்து ஆராதனம் செய்கிறார் என்று எண்ணி புருஷர்கள், ஸ்த்ரீகள், குழந்தைகள் அனைவருமாக வெகு ஆவலுடன் கோவிலை நோக்கி ஓடினர். அவர்கள் கோவில் வாசலில் கூப்பிய கையினராய் உள்ளிருந்துவரும் ஆராதனைச் சப்தத் தைக் கேட்டுக்கொண்டு மூர்த்தியைத் தரிசிக்க ஆவலுடையவராய் நின்றனர். அப்படி நின்றவர்களுள் ஒருவன் மற்றையோரைக் காட்டிலும் அதிக ஆசையுடையவனாகி, கதவுகளின் இடுக்கு வழியாகக் கோவிலுக் குள்ளே நோக்கினான். மணியை அடித்துச் சங்கநாதம் செய்தவன் 'பொடோ' என்பதை அவன் தெரிந்துகொண்டதும் அவனுக்குண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. கோவில் தரை பழையபடியே அசுத்த மாகவிருந்தது, ஆராதனத்துக்கு மூர்த்தியுமில்லை! "அடே 'பொடோ!' உள்ளே விக்ரஹம் இல்லை. கோயிலைக் கூட்டிப்பெருக்கிச் சுத்தமாக்க வும் நீ சிரமப்படவில்லை. இரவும் பகலும் பதினொரு வௌவால்கள் கூச்சலிடுகின்றன. அடே, சங்கை ஊதி, இப்படி நீ ஆரவாரம் செய்த தெல்லாம் வீணாயிற்றே!" என்று அவன் சொன்னான். அதுபோல, உனது உள்ளமாகிய கோவிலில் ஈசுவரனுடைய திவ்ய விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்ய நீ விரும்புவாயானால்—அதாவது அவ்வீசுவரனை நீ

தெரிந்துகொள்ளப் பிரியப்படுவாயானல்—வீணுகச் சங்கை மட்டும் முழக்குவதில் என்ன பிரயோசனம்? முதலில் உன் உள்ளத்தைத் தூய்மையாக்கிக்கொள். அது தூய்மையடைந்தால் ஈசுவரன் தானே அங்குவந்து வசிப்பான். அசுத்தமானவிடத்தில் ஈசுவர விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்ய முடியாது. மேல் சொன்ன பதினெரு வௌவால்களும் பதினெரு இந்திரியங்களைக் குறிக்கின்றன. (ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, மனம் ஒன்று.) முதன் முதலில் உன்னுள்ளேயே மூழ்கி மணிகளைப் பெறுவாயாக. அப்பால் மற்றவை. முதலில் உன் இருதயத்தில் மாதவனைப் பிரதிஷ்டை செய்துகொள். அப்பால் பிரசங்கம், பிரசாரம் இரண்டையும் வேண்டியமட்டில் நீ கைக்கொள்ளக் கூடும்.

விஷய சூசிகை